# எழுத்திலக்கணக் கோட்பாடு

முனைவர் செ.வை. சண்முகம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

# எழுத்திலக்கணக் கோட்பாடு

முனைவர் செ. வை. சண்முகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | e̲luttilakkaṇak kōṭpāṭu |
| Author | : | Dr. S.V. Shanmugam<br>Visiting Professor<br>International Institute of Tamil Studies |
| Publisher<br>(Revised 2nd edition) | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Tharamani<br>Chennai - 600 113 |
| First Edition | : | 1980 |
| Revised 2nd. edition | : | 2001 |
| Publication No. | : | 404 |
| Language | : | Tamil |
| Paper used | : | 18.6 TNPL Maplitho |
| Size of tbe book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No. of pages | : | xiv+314 |
| Price | : | Rs.70/- (Rupees Seventy Only) |
| No. copies | : | 1200 |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Phonological theories in Tamil Grammars |

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

# பதிப்புரை

தமிழ் மொழி இலக்கிய வளத்தோடு இலக்கண வளமும் நிறைந்தது. தமிழில் கிடைக்கப்பெற்றுள்ள இலக்கண நூல்களுள் முதல் நூலாக அமைவது தொல்காப்பியம். இன்று வரை 40க்கு மேற்பட்ட இலக்கண நூல்கள் இருப்பதாக இலக்கண வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவ் இலக்கண நூல்களுக்குப் பல உரை நூல்களும் தோன்றியுள்ளன. உரை நூல்களும் இலக்கண நூல்களை ஒத்த பெருமை உடையன.

உலகின் பிற பகுதிகளிலும் இலக்கண ஆய்வு பல காலமாக நடந்து வருகிறது. இப்போது கி.மு. 1600இல் சுமேரிய மொழியில் எழுதிய இலக்கணமே மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது.

பொதுவாக 18ஆம் நூற்றாண்டு வரையிலும் தனிமொழிக்கு இலக்கணம் எழுதும் பணியே உலக மொழிகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஐரோப்பியர்களுக்கு வடமொழி பற்றித் தெரிய ஆரம்பித்ததும் ஐரோப்பிய மொழிகளோடு இதற்கு உள்ள ஒற்றுமை பற்றி அறிய ஒப்பிலக்கணம் என்ற ஆய்வுத் துறை 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றியது. அதாவது மொழி ஆய்வில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள், தரவுகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு வரலாற்று ஒப்பிலக்கண ஆய்வு என்ற பொதுத் துறை மலர்ந்தது. அதனால் மொழி பற்றிய தொல் வரலாறு புரிய ஆரம்பித்தது.

அதன் தாக்கத்தால்தான் கால்டுவெல் 1856இல் திராவிட மொழி ஒப்பிலக்கணம் எழுதிப் புதிய ஆய்வு முறையைத் தென்னிந்தியர்களுக்கு அறிமுகப்படுத்தியதோடு தமிழ்ச் சமூகத்தின் மொழி எழுச்சிக்கும் காரணகர்த்தாவாக இருந்ததை அனைவரும் அறிவர். இலக்கண ஆய்விலும் தொல்காப்பியம் நன்னூல் என்ற ஒப்பாய்வு நூல் ஒன்றை 1858இல் சாமுவேல்பிள்ளை என்பார் வெளியிட்டுள்ளார். ஐரோப்பாவில் 19ஆம் நூற்றாண்டு முழுமையும் ஒப்பிலக்கண ஆய்வே கொடிகட்டிப் பறந்தது.

20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஒரு மொழியின் இலக்கணத்தை / கட்டமைப்பை வருணிக்கும் வருணனை (Descriptive) அல்லது கட்டமைப்பு (Structural) கோட்பாட்டு மொழியியல் ஆய்வு தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டைக் கட்டமைப்பு மொழியியல் காலம் என்று கூடச் சொல்லலாம்.

இவ் மொழியியல் கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் இந்தியாவில் அறிமுகமாகியது. இதன் செல்வாக்கால் தமிழகப் பல்கலைக் கழகங்களில் மொழியியல் துறைகள் துவங்கப்பட்டன. தமிழகத்தில் முதன் முதலில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேரா.தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் 1958இல் தொடங்கி, 1963இல் அனைந்திந்திய நிலையில் உயராய்வு மையமாக மாறியதால் தமிழ் இலக்கண / மொழியியல் ஆய்வு பன்முகப்பட்டது. இலக்கண ஆய்வும் புதிய வேகம் பெற்றது. அவைகளில் ஒன்று மொழியியல் நோக்கில் அமைந்த தமிழ் இலக்கண ஆய்வு. அதனால் தமிழ் இலக்கணங்களில் புதைந்துள்ள மொழியியல் கோட்பாடுகளை வெளிக்கொணர்ந்து தமிழ் இலக்கணங்களின் குறிப்பாகத் தொல்காப்பியத்தின் பெருமை மொழியியல் நோக்கில் வெளிக்கொணரப் பட்டது. அந்த முறையில் 1972 இல் வெளிவந்த தொல்காப்பிய மொழியியல் என்னும் நூல் தொல்காப்பியக் கல்விக்குப் புதிய பாதையைக் காட்டியது.

அதன் தொடர்ச்சியாக வெளிவந்ததுதான் அந்தத் துறையைச் சார்ந்த தமிழ் மரபிலக்கணத்திலும், மொழியியலிலும் புலமை பெற்ற பேராசிரியர் முனைவர் செவை சண்முகம் 1980இல் எழுதிய **எழுத்திலக்கணக் கோட்பாடு** என்ற இந்த நூல். இதில் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய ஒன்பது இலக்கண நூல்களின் எழுத்திலக்கணக் கோட்பாடுகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இந்த நூலின் சிறப்பை முனைவர் அகத்தியலிங்கம் முதல் பதிப்புக்கு எழுதிய அணிந்துரை தெளிவுபடுத்தும்.

தொல்காப்பியம் முழுமைக்கும் அதாவது 27 இயலுக்கும் உரைவளம், யாப்பருங்கலம், நன்னூல் விருத்தி உரையின் திருந்திய பதிப்பு, கூழங்கைத் தம்பிரான் உரை முதலிய அரிய இலக்கண நூல்களை வெளியிட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல ஆண்டுகளாக மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கிடைக்காத இந்த இலக்கண ஆய்வு நூலை நிறுவனப் பதிப்புக்குழுவின் இசைவுடன் இரண்டாம் பதிப்பாக வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

இந்நிறுவன வளர்ச்சியில் ஆக்கமும் ஊக்கமும் காட்டிவரும் நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச்சர் முனைவர் முதம்பிதுரை அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திரு பி.ஏ.இராமையா, இ.ஆ.ப. அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் கூடுதல் செயலாளர் திரு தா.சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நன்றி.

இந்நூலினைக் கவினுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கு நன்றி.

இயக்குநர்

# முதல் பதிப்பின் அணிந்துரை

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்
இயக்குநர், மொழியியல் உயராய்வு மையம் & முதன்மையர்,
இந்திய மொழிப்புலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

மொழியியலும் இலக்கணமும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய துறைகள். இலக்கணக்கோட்பாடுகளும் கொள்கைகளும் எத்தனையோ நூற்றாண்டுகளாக வாழ்ந்து வளர்ந்து வருவன. கிறிஸ்து பிறப்பதற்கு ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே காலூன்றி வேர்விட்டு வளர்ந்துவந்த துறை இலக்கணத்துறை; மேலைநாட்டில் பிளேட்டோவையும் அரிஸ்டாட்டிலையும், கீழைநாட்டில், குறிப்பாக இந்திய நாட்டில் பாணினியையும், தொல்காப்பியரையும் கண்டதுறை இத்துறை. இவர்கள் கண்ட கொள்கைகளும் கோட்பாடுகளுமே இலக்கணத்துறையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கருவாகவும் உருவாகவும் வேராகவும் விதையாகவும் நின்றன. காலப்போக்கில் எத்தனையோ புதிய கருத்துக்கள், சிறந்த விளக்கங்கள் தோன்றி மெருகூட்டி இத்துறையை வளர்த்தன.

எனினும் இலக்கணத்துறையில் மொழியியலின் தாக்கத்தைச் சிறந்த ஒரு திருப்பு மையமாக கருதலாம். இத்துறை மொழியாராய்ச்சியில் புதிய ஒரு பாதையை வகுத்தது எனக் கருதலாம். இலக்கண உலகில் புதியதொரு பார்வையையும் அறிவியல் நோக்கத்தையும் புகுத்தி நிற்கிறது என்பதில் யாருக்கும் எவ்வித ஐயமும் இருக்க முடியாது. தெரியாத மொழிகளுக்கு இலக்கணம் அமைத்தல், இரு வேறு மொழிகளின் அமைப்பை உறழ் நிலையில் ஆய்தல், மொழிக் குடும்பங்களின் அங்கங்களை ஒப்புமைப்படுத்தி மூல மொழியைக் காணுதல். ஒலியியல், ஒலியனியல், சொல்லியல், தொடரியல், பொருளியல் எனப் பாகுபடுத்தி அக்குவேறு ஆணிவேறாக மொழிகளின் அமைப்பை ஆராய்தல், உலக மொழிகளில் எல்லாம் காணப்படும் ஒருமனப்போக்கை வெளிக்கொணர்தல் போன்று இன்னோரன்ன நிலைகளில் மொழியியல் செய்துவரும் பணிகள் பலப் பல.

இத்தகைய பணிகளுடன் மொழியியல் கோட்பாடுகளைப் பல வேறு மரபு இலக்கணங்களில் கண்டு அவற்றின் நிறைகுறைகளை ஆராய்தலும் குறிப்பிடத்தக்க ஒரு பணியாகும். தங்கள் நுண்மாண் நுழைபுலத்தால் எத்தனையோ உண்மைகளைக் கூறி சென்ற மரபு

இலக்கண ஆசிரியர்களின் எண்ணங்களை அறிவியல் அடிப்படையில் காரண காரியங்களுடன், மொழியியல் கண்ணோட்டத்துடன் விளக்கிச் செல்வது மரபு இலக்கணங்களையும் மொழியியல் உண்மைகளையும் ஒருசேர கற்ற அறிஞர்களுக்குக் களிபேருவகை தரும் பணியாகும். இந்நிலையில்தான் டாக்டர் செ.வை. சண்முகம் அவர்கள் தமிழ் மரபு இலக்கணங்களில் காணப்படும் எழுத்திலக்கணக் கோட்பாடுகளை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்கிறார். இந்நூலில் ஒலியியல், ஒலியனியல், சந்தி போன்ற மொழியியல் பகுப்புகளில் காணப்படும் கோட்பாடுகளை அடிப்படையாக வைத்துத் தமிழ் இலக்கண ஆசிரியர்களின் அறிவின் ஆழத்தை வெளிக்கொண்டு வருகிறார். தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களில் காணப்படும் கருத்துக்கள் பலவற்றை மொழியியல் அடிப்படையில் ஒளிவு மறைவின்றி ஆராய்ந்து செல்கிறார். தமிழ் மொழிக்கு நல்ல இலக்கணங்கள் இன்னும் வேண்டும் என்ற துடிதுடிப்பை மையமாக வைத்து, இருக்கின்ற இலக்கணங்களில் காணும் செய்திகள் பலவற்றைப் பாராட்டியும் சிலவற்றைக் (புதியதாக ஒன்றும் இல்லையே என்று) கடிந்தும் இன்றும் சிலவற்றிற்குப் புதிய விளக்கங்கள் தந்தும் இன்னும் சிலவற்றைப் புதிய கோணங்களில் நோக்கியும் செல்லும் அவர் நோக்கு தமிழ் இலக்கண ஆய்வை வாழவைக்கும் போக்காகவும் வளரவைக்கும் நோக்கமாகவும் இருத்தல் காணலாம். மொழியியலிலும் மரபு இலக்கணங்களிலும் நல்ல பயிற்சியும் சிறந்த பாண்டித்தியமும் கொண்ட அவருடைய சில விளக்கங்கள் உண்மையிலேயே நம்மால் பாராட்ட வேண்டியவைகளாக அமைந்துள்ளன.

பழைமையும் புதுமையும் ஒன்று சேரும் இடங்கள் பலவற்றை இந்நூலில் காணலாம். பழைமையான எண்ணங்கள்; ஆனால் புதுமையான விளக்கங்கள். புதியதொரு பார்வையில் தோன்றிய இந்நூல் ஆராய்ச்சியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் விருந்தளிக்கும் ஒரு புதிய முயற்சியாகும். இம்முயற்சியைப் பாராட்டுவதும் அதனால் பயன் பெறுவதும் நல்லதொரு இலக்கணப் பாரம்பரியத்தைக் கண்ட தமிழ் அறிஞர்களின் கடமையாகும். இத்தகைய நூல்கள் எத்தனையோ வரவேண்டும் என்பது என்னுடைய அடிப்படை ஆசையாகும். தொல்காப்பியரைத் தோற்றுவித்த இத்தெய்வத் திருமண்ணில் அவரிடம் காணும் இலக்கண ஒளியும், தெளிவும் இறந்துவிடக்கூடாது என எண்ணுபவன் நான். இவ்வெண்ணத்திற்கேற்ப, தோன்றிய நூல் இது. எத்தனையோ ஆண்டு ஆராய்ச்சியில் பூத்த இப்புது நூலுக்கு தமிழறிஞர் உலகம் நல்லதொரு வாழ்வை அளிக்கும் என நம்புகிறேன்.

அண்ணாமலைநகர்
19-07-1980

ச. அகத்தியலிங்கம்

# முதல் பதிப்பின் முன்னுரை

தமிழ்மொழி சிறந்ததொரு இலக்கணப் பாரம்பரியத்தை உடையது. ஆயினும் உலகத்தொடர்பால் இன்று மொழியியல் என்ற மொழி அமைப்பை விஞ்ஞானப்படுத்திப் பார்க்கும் பார்வை நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்நிலையில் நமது இலக்கண நூல்களை மொழியியல் கண்கொண்டு ஆய்வது இரண்டு விதப் பயனைத் தரும். ஒன்று: மொழியியல் மட்டும் அறிந்தவர்க்கும் நம் பாரம்பரியத்தின் சிறப்பையும் வரலாற்றுப் பார்வையையும் அளிக்கும். இரண்டு: இலக்கணம் மட்டும் அறிந்தவர்க்கு மொழியியல் விஞ்ஞானப் பார்வையும் இலக்கண மதிப்பீடும் புலனாகும்.

இந்த நூலில் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்களின் எழுத்திலக்கணக் கோட்பாடுகளை விளக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இலக்கண ஆசிரியர்களின் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ளும் முகமாக உரையாசிரியர்களின் கருத்துகளும் இன்றைய இலக்கண ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளும் விவாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நூலுக்குக் கருவாய் அமைந்தது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராய் எழுத்ததிகார வளர்ச்சி என்ற தலைப்பில் செய்த மூன்று சொற்பொழிவுகளே. அந்தச் சிறப்புச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்த தமிழியல் துறைப் பேராசிரியர் முத்துச் சண்முகனாருக்கு என் நன்றி உரியது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய இயக்குநர் பேராசிரியர் அகத்தியலிங்கம் ஒரு நந்தா விளக்கு. அவர்களே எண்ணெயாயும் தூண்டுகோலாயும் இருந்து நூல் வெளிவர உதவினார்கள். அத்தோடு உயராய்வுமையத்தில் என் சக விளக்குகளான டாக்டர் ந. குமாரசுவாமி ராஜா, டாக்டர் க. முருகையன், டாக்டர் இராம. சுந்தரம், திரு க. பாலசுப்பிரமணியம் அவர்கள் தந்த வெளிச்சமும் இந்நூலில் இரண்டறக் கலந்துள்ளன.

டாக்டர் இரா. பாலகிருஷ்ணனும், திரு புலவர் சோம. இளவரசு அவர்களும் கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்த்தும், அச்சுத்தாளைத் திருத்தியும் உதவிசெய்தார்கள்.

இவர்கள் அனைவருக்கும் என் இதயம் கலந்த நன்றி.

ஆராய்ச்சி மாணவர்களான திருவாளர்கள், சு. கிருஷ்ணமூர்த்தி, ஆ. கார்த்திகேயன், மா. ஜெயக்குமார், மா. கணேசன், செல்வி க. சுசீலாபாய் ஆகியோர் கையெழுத்துப் பிரதி தயார் செய்வதில் உதவினார்கள். அவர்களுக்கு என் வாழ்த்தும் நன்றியும் உரியன.

விரைவாகவும் செம்மையாகவும் அச்சிட்ட சிவகாமி அச்சகத்தாருக்கு என் நன்றி.

செ.வை. சண்முகம்

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

எழுத்திலக்கணக் கோட்பாடு என்ற இந்த நூலின் இரண்டாவது பதிப்பு ஓரளவு திருந்திய பதிப்பாகத் தற்போது வெளிவருகிறது. 1980-க்குப் பிறகு நடந்த ஆய்வு உண்மைகள் சில, நூலில் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முதல் பதிப்பு **நூற்றாண்டு விழாக் காணும் அமரர் அண்ணாமலையரசர்க்கு, வெள்ளிவிழா ஆண்டில் பட்டம் பெற்ற அண்ணாமலையான், பொன்விழா ஆண்டில் படைக்கும் காணிக்கையாக** வெளிவந்துள்ளது.

இரண்டாவது பதிப்பு வரவேண்டும் என்று என்னைத் தூண்டிய பேரா. பொன். கோதண்டராமன் (பொற்கோ-துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்) அவர்களுக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடாகக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்த அதன் இயக்குநர் முனைவர் இராமர் இளங்கோ அவர்களுக்கும் என் நன்றி உரியது.

**செ.வை. சண்முகம்**

# பொருளடக்கம்


அணிந்துரை

முன்னுரை

| | | |
|---|---|---|
| **1.** | **இலக்கணமும் மொழியியலும்** | **1–29** |
| 1.0 | முன்னுரை | 1 |
| 1.1 | மொழியியல் தோற்றமும் வளர்ச்சியும் | 1 |
| 1.2 | இலக்கணம் - மொழியியல் வேற்றுமைகள் | 3 |
| 1.3 | மொழியியல் நோக்கில் இலக்கண ஆய்வு | 6 |
| 1.4 | இலக்கணக் கல்வியின் நோக்கம் | 21 |
| 1.5 | மொழியியல் நோக்கில் தமிழ் இலக்கண ஆய்வு | 23 |
| **2.** | **எழுத்ததிகார அமைப்பு** | **30–46** |
| 2.0 | முன்னுரை | 30 |
| 2.1 | எழுத்ததிகாரப் பாகுபாடு | 30 |
| 2.1.1 | தொல்காப்பியம் | 30 |
| 2.1.2 | வீரசோழியமும் நேமிநாதமும் | 31 |
| 2.1.3 | உத்தி முறைகள் | 32 |
| 2.1.4 | நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம் | 34 |
| 2.1.5 | தொன்னூல் விளக்கம் | 36 |
| 2.2 | பாகுபாட்டின் விளக்கம் | 37 |
| 2.3 | வைப்பு முறை | 39 |
| 2.3.1 | பிறப்பியலின் இடம் | 39 |
| 2.3.2 | பதவியலின் இடம் | 44 |
| **3.** | **பிறப்பியல்** | **47–72** |
| 3.0 | முன்னுரை | 47 |

| | | |
|---|---|---|
| 3.1 | பேச்சுறுப்புகள் | 47 |
| 3.2 | சார்பெழுத்துகள் | 54 |
| 3.2.1 | குற்றியலுகரம் | 55 |
| 3.2.2 | குற்றியலிகரம் | 59 |
| 3.2.3 | ஆய்தம் | 60 |
| 3.2.4 | உயிரளபெடை | 63 |
| 3.2.5 | ஒற்றளபெடை | 65 |
| 3.2.6 | ஐகாரக் குறுக்கம் | 67 |
| 3.2.7 | ஔகாரக் குறுக்கம் | 70 |
| 3.2.8 | மகரக் குறுக்கம் | 71 |
| 3.2.9 | உயிர் மெய் | 72 |
| **4.** | **தொல்காப்பியரின் 'எழுத்து'** | **73-107** |
| 4.0 | முன்னுரை | 73 |
| 4.1 | தொல்காப்பியப் பாகுபாடு | 74 |
| 4.2 | எழுத்து - அல்எழுத்து வேறுபாடு | 75 |
| 4.3 | எழுத்தோரன்ன | 77 |
| 4.3.1 | குற்றியலுகரம் | 77 |
| 4.3.2 | குற்றியலிகரம் | 80 |
| 4.3.3 | ஆய்தம் | 86 |
| 4.4 | எழுத்தெனப்படுவ | 89 |
| 4.4.1 | ஙகரம் | 89 |
| 4.4.2 | ஐகாரம் | 93 |
| 4.4.3 | ஔகாரம் | 98 |
| 4.5 | அல் எழுத்துகள் | 99 |
| 4.5.1 | உயிரளபெடை | 100 |
| 4.5.2 | ஒற்றளபெடை | 106 |
| 4.5:3 | ஐகாரக் குறுக்கம் | 107 |
| 4.5.4 | மகரக் குறுக்கம் | 107 |

| | | |
|---|---|---|
| **5.** | **முதலும் சார்பும்** | **108–139** |
| 5.0 | முன்னுரை | 108 |
| 5.1 | முதல் - சார்பு வரலாறு | 109 |
| 5.2 | நேமிநாத முறை | 110 |
| 5.3 | நன்னூல்முறை | 114 |
| 5.3.1 | மயிலைநாதர் விளக்கம் | 116 |
| 5.3.2 | இலக்கணவிளக்க முறை | 117 |
| 5.3.3 | சிவஞானமுனிவர் கருத்து | 118 |
| 5.4 | முத்துவீரிய முறை | 137 |
| **6.** | **எழுத்தியலின் களன்** | **140–156** |
| 6.0 | முன்னுரை | 140 |
| 6.1 | சார்பெழுத்து | 141 |
| 6.2 | மெய்ம்மயக்கம் | 146 |
| **7.** | **எழுத்தியல்** | **157–190** |
| 7.0 | முன்னுரை | 157 |
| 7.1 | தொல்காப்பிய எழுத்தியல் | 157 |
| 7.1.1 | நூன்மரபு | 157 |
| 7.1.2 | மொழிமரபு | 163 |
| 7.3 | நன்னூலாரின் எழுத்தியல் | 190 |
| **8.** | **பதவியல்** | **190–204** |
| 8.0 | முன்னுரை | 191 |
| 8.1 | எழுத்தும் பதமும் | 191 |
| 8.2 | பதம் | 193 |
| 8.3 | பகாப்பதம் | 193 |
| 8.4 | பகுபதம் | 194 |
| 8.5 | பகுதி | 198 |
| 8.6 | பகுபத உறுப்புகளின் பெயர்கள் | 200 |
| 8.7 | பதவியலின் இடம் | 204 |

| | | |
|---|---|---|
| **9** | **புணரியல்** | **205–217** |
| 9.0 | புணர்ச்சி விளக்கம் | 205 |
| 9.1 | இலக்கண - மொழியியல் வேறுபாடு | 205 |
| 9.2 | புணர்ச்சி என்பதன் தத்துவம் | 206 |
| 9.3 | இரண்டுவகை மாற்றுருபு | 207 |
| 9.4 | புணர்ச்சியும் பிற இயலும் | 213 |
| **10.** | **அடிநிலைக் கிளவி** | **218–233** |
| 10.0 | முன்னுரை | 218 |
| 10.1 | அடிநிலைக் கிளவி தேர்ந்தெடுக்கும் பொதுமுறை | 218 |
| 10.2 | அடிநிலைக் கிளவியின் பண்பு | 219 |
| 10.3 | அடிநிலைக் கிளவித்தேர்வு: சிறப்பு முறை | 220 |
| 10.3.1 | தொல்காப்பியம் | 220 |
| 10.3.2 | வீரசோழியம் | 228 |
| 10.3.3 | நன்னூல் | 228 |
| 10.4 | மதிப்பீடு | 229 |
| **11.** | **புணரியல்களின் அமைப்பு** | **233–251** |
| 11.0 | முன்னுரை | 233 |
| 11.1 | தொல்காப்பிய முறை | 233 |
| 11.2 | வீரசோழிய - நேமிநாத முறை | 245 |
| 11.3 | நன்னூல் - இலக்கணவிளக்க முறை | 245 |
| 11.4 | தொன்னூல்விளக்க - முத்துவீரிய-சுவாமிநாத முறை | 250 |
| **12.** | **சாரியை** | **252–276** |
| 12.0 | முன்னுரை | 252 |
| 12.1 | எழுத்து | 253 |
| 12.2 | சாரியை | 255 |
| 12.3 | இடையியலில் சாரியை | 257 |
| 12.4 | சாரியையின் உருபுப் பொருள் | 261 |
| 12.5 | சாரியை பொதுக் கோட்பாடுகள் | 273 |

| | | |
|---|---|---|
| 12.6 | மதிப்பீடு | 274 |
| 12.6.1 | காட்சி நிறைவு | 274 |
| 12.6.2 | வருணனை நிறைவு | 275 |
| **13** | **போக்குகள்** | **277–289** |
| 13.0 | முன்னுரை | 277 |
| 13.1 | தொல்காப்பிய முறை | 279 |
| 13.2 | வீரசோழிய - நேமிநாத முறை | 280 |
| 13.3 | நன்னூலும் பிற நூல்களும் | 283 |
| 13.4 | தொன்னூல்விளக்க முறை | 285 |
| **14** | **உத்திகள்** | **290–303** |
| 14.0 | முன்னுரை | 290 |
| 14.1 | பொது உத்திகள் | 290 |
| 14.1.1 | விரித்துக் கூறல் | 290 |
| 14.1.2 | மற்றொன்று விரித்தல் | 293 |
| 14.1.3 | வெற்றெனத் தொடுத்தல் | 294 |
| 14.1.4 | தன்கால மொழி உணர்வு | 297 |
| 14.2 | தொல்காப்பியச் சிறப்பு உத்திகள் | 299 |
| 14.2.1 | பொதுமையை வலியுறுத்தல் | 299 |
| 14.2.2 | பொதுமை உண்டாக்கல் | 301 |
| 14.2.3 | வருணனை உத்தி | 302 |
| | **துணையன்கள்** | **303–315** |

# 1. இலக்கணமும் மொழியியலும்

## 1.0 முன்னுரை

இலக்கணம் ஒரு மொழியின் கட்டமைப்பை விவரிப்பது. மொழியியல் என்பது மொழியின் விஞ்ஞான ஆய்வு என்ற பொதுப் பொருள் படுமாயினும், அதன் முக்கிய வேலை மொழியின் கட்டமைப்பை விளக்குவதற்குரிய நெறிகளை - கோட்பாடுகளை உலகளாவிய நிலையில் தருவது. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இலக்கணம் என்றும், இருபதாம் நூற்றாண்டில் மொழியியல் என்றும் கூறினால் ஒருவகையில் பொருத்தமாக இருக்கும். இந்தக் கூற்று இரண்டுக்கும் உள்ள உறவை மட்டும் விளக்குவதற்காகச் சொல்லப்பட்டது என்று கொண்டால், இரண்டுக்கும் உள்ள வேறுபாடு புறக்கணிக்கப்பட்டது என்ற குறை தோன்றாது.

இலக்கணமும் மொழியியலும் கால வேறுபாடுமட்டும் உடையது என்பது உண்மை யில்லை. ஏனென்றால், அந்தக் கால வேறுபாடு கருத்து வேறுபாடு பலவற்றையும், மனித சமூகத்தில் உண்டாகும் அறிவு வளர்ச்சி காரணமாக ஏற்படுத்தியுள்ளது. இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சிமட்டும் அல்லாமல், மொழியியலாக மாறிய பிறகும்கூடப் புரட்சிகரமான கருத்து வளர்ச்சி தோன்றியுள்ளது.

ஒரு நோக்கில் இலக்கணம் தாய்; மொழியியல் சேய். ஆனால், 'தாய் என்ன தவம் செய்தாளோ' என்று பாரெல்லாம் போற்றும்படிச் சேய் இன்று அவையத்து முந்தி இருக்கிறது.

இன்னொரு நோக்கில் இலக்கணம் ஒரு பனைமரம் என்றால் மொழியியல் ஒரு பெரிய ஆலமரம்.

## 1.1 மொழியியல் தோற்றமும் வளர்ச்சியும்

மொழியியல், இலக்கணத்தின் வளர்ச்சி என்பது ஒரு பொது உண்மை. இது கோட்பாட்டு நிலையில் எல்லா மொழியின் மரபு இலக்கணத்துக்கும் தற்கால மொழியியல் ஒட்டிய இலக்கணத்துக்கும்

பொருந்துமாயினும், வடமொழி இலக்கணத்துக்கே இந்தப் பெருமை நேரடியாகவும் முழுமையாகவும் உரியது என்று மொழியியல் வரலாறு சுட்டுகிறது.

இந்திய இலக்கணம் (அதாவது வடமொழி இலக்கணம்) தான் ஐரோப்பியருக்கு முதலில் தெரிந்த, முழுமையும் நுண்மையும் நிறைந்த இலக்கணம். வடமொழி இலக்கணம் மொழியை நேரே அறிந்து எழுதப்பட்டது; தத்துவ அடிப்படையில் எழுந்தது அல்ல. வடமொழியை ஐரோப்பிய அறிஞர்கள் ஒப்பிலக்கணம் தோன்ற வழி வகுத்தது என்று புளூம்பீல்டு[1] கூறியுள்ளார். சட்டர்ஜி என்பாரும் மொழிக் குடும்பம் என்ற கருத்து நவீன கால அறிவு வளர்ச்சியில் ஒரு பெரிய கண்டுபிடிப்பு என்றும், அது வடமொழி படித்ததால்தான் வில்லியம்ஸ் ஜோன்சுக்கு உதித்தது என்றும் குறிப்பிடுகிறார்.[2]

வடமொழி இலக்கண அறிவு, முதன் முதலில் ஒப்பிலக்கணத் தையும் வரலாற்று இலக்கணத்தையுமே தோற்றுவித்தது. பத்தொன் பதாம் நூற்றாண்டு முழுமையும் அந்த இரண்டு மட்டுமே மொழியியல் ஆராய்ச்சியாகக் கருதப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் வருணனை மொழியியல் பிறந்தது. இதுவே வடமொழி இலக்கணத்தோடு நேரடித் தொடர்பு உடையது. அப்போதும் வடமொழி அறிவு-சிறப்பாக இலக்கண அறிவு மொழியின் வருணனைக்கு உதவியுள்ளது.

பெரும்பான்மையான சொற்களில் ஒரு இலக்கணக்கூறு, விகுதி சேர்ப்பதன் மூலம் பொருள் விளக்க (ஆங்கிலத்தில் பெயர்ச் சொல்லில்

---

1. The Indian grammar presented to the European eyes for the first time a complete accurate description of a language based not upon theory but upon observation. Moreover, the discovery of Sanskrit disclosed the possibility of a comparative study of languages.
   Bloomfield, 1933 : 11.

2. The idea of languagee family is one of the greatest discoveries in modern thought with reference to the evolution of man in all his envioronments and his accompanishments and it developed during the last century though the dawning of this idea took place in the 18th century when William Jones (1746-94) began to study Sankrit at Calcutta and felt, enthusiastic about Sanskrit.
   S.K. Chatterji, 1942 : 4.

பன்மையை s, es என்ற விகுதி சேர்ப்பதன் மூலம் உணர்த்துவது cat-cats; bag-bags; box-boxes; வேறு சில சொற்களில் sheep, deer என்ற சொற்களில் ஒருமைக்கும் பன்மைக்கும் வேறுபாடு கிடையாது) எந்தவித விகுதியும் சேர்க்காமல் எண் வேறுபாடு இருப்பதைச் சூன்ய மாற்று உருபு (Zero allomorph) உடையதாகக் கருதுவதும், வடமொழி இலக்கண அறிவால் ஏற்பட்ட தெளிவாகவே புளூம்பீல்டு கருதுகிறார்[3] ஆகவே வருணனை மொழியியலும் வட மொழி இலக்கணத்துக்குக் கடன்பட்டுள்ளது. ஆயினும், மொழியியல் இன்று இருமொழி ஒற்றுமை வேற்றுமை ஆய்வு (Contrastive linguistics), உளவியல் மொழியியல் (Psycho linguistics), சமூக மொழியியல் (Socio linguistics), வகைக்கூறுகள் (Typology), கருவி ஒலியியல் (Instrumental phonetics), சொற்கோவை புள்ளியியல் (Lexicostatistics), கிளை மொழியியல் (Dialectology) போன்ற வேறுபல துறைகளையும் முன் கூறிய ஒப்பிலக்கண - வரலாற்று மொழியியல், வருணனை மொழியியல் ஆகிய இரண்டு துறைகளையும் கொண்டு, ஆலமரம் போல் தழைத்து வளர்ந்துவிட்டது. இன்று இலக்கணம், மொழியியல் ஆய்வின் ஒரு கூறு என்று கருதும்படியும் அமைந்துள்ளது. இதனால் இலக்கணமும் - சிறப்பாக வடமொழி இலக்கணமும் மொழியியலும் ரத்த உறவு உடையன. ஏனைய மொழியிலுள்ள இலக்கணங்களும் மொழியியலும் பொருள் ஒற்றுமையால் இன உறவு உடையன என்று வேண்டுமானால் கூறலாம்.

## 1.2 இலக்கணம் - மொழியியல் வேற்றுமைகள்

இலக்கணம் ஒரு மொழியின் அமைப்பை விளக்குவது; மொழியியலோ மொழியின் இலக்கணம் எழுதத் துணை செய்யும் கோட்பாட்டைக் கூறுவது. அதுதான் மொழியியல் கோட்பாடு என்று

---

3. A single phonetic form in the mannar of homonymy represents two meanings which are usually distinguished by means of a linguistic form, as, singular and plural gvern in *the sheep* (grazes): *the shep* (graze). Here the Hindus hit upon the apparently artificial but in practical eminently serviceable device of speaking of a *zero element* : in *sheep : sheep* the plural - suffix is replaced by zero -that is by nothing at all.

   Bloomfield. L. 1933 : 209

   இந்த மேற்கோளைச் சுட்டிக் காட்டிய பேராசிரியர் P.S. சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றி.

அழைக்கப்படுவது. இதனோடு ஒவ்வொரு மொழிக்கும் அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுதப்பட்ட இலக்கணமும் உடையது. எனவே இலக்கணம் சிறப்பு; மொழியியல் பொது என்றுகூடக் கூறலாம்.

இலக்கணம் காலத்தால் பழமையானது என்பது மேலே குறிப்பிடப்பட்டது. அந்தக் காலத்தில் இலக்கியம் உடைய மொழிக்கே இலக்கணம் எழுதப்பட்டது. ஆனால், மொழியியலை ஒட்டிய இலக்கணம் நாடோடி மக்களின் மொழிக்கும், நாகரிக மற்றவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் பேசும் மொழிக்கும் கூட எழுதப்பட்டது; இன்றும் எழுதப்படுகிறது.

இலக்கணம் எழுதியவர்கள் பெரும்பாலும் தாய்மொழிக்கே இலக்கணம் எழுதினார்கள். மொழியியல் அடிப்படையில் எழுதும் இலக்கணத்தைப் பிற மொழியாளர்களும் கூட எழுத முன் வந்தார்கள். இருவருடைய நோக்கமும் மாறுபட்டது. இலக்கண ஆசிரியர்கள் இலக்கிய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டார்கள்; மொழியியலாளர்கள், பிறர் மொழியைக் கற்றுக்கொள்வதையும், மொழியின் அமைப்பை விளக்குவதையும் ஆதாரமாகக் கொள்கிறார்கள். (அரங்கன், 1975 : 56-63)

இலக்கணம் தனி மனித சாதனை, இலக்கண அறிஞர்கள் ஒரே காலத்தில் பலர் இருந்தாலும், அவர்கள் எவ்வளவு தூரம் கலந்துரையாடிக் கருத்தைப் பரிமாறிக் கொண்டார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இலக்கண ஆசிரியர்களுக்குள்ளே ஒரே கருத்துடையவர்களாக - ஒரே குழுவினராகக் காணப்பட்டாலும், ஒருவர் கருத்தை இன்னொருவர் பரிசோதித்து, அந்தக் கருத்துச் செம்மை பெற உதவினார்கள் என்று கூறமுடியாது. ஆனால், உலக அளவில் மொழியியல் என்பது ஒரு கூட்டு முயற்சி. பலபேர் ஒரே சமயத்தில் கூடி ஆராய்வது என்பதல்ல அது; ஒருவரின் கருத்தை மற்றவர் அதே மொழிக்கோ வேறு பல மொழிகளுக்கோ ஆராய்ந்து, அந்தக் கருத்தின் வன்மை - மென்மை தெரிந்து, மென்மையை நீக்கி வன்மையுறச் செய்வது; அந்த அடிப்படையில் கோட்பாட்டைப் பொதுமைப்படுத்துவது; எளிமைப்படுத்துவது மொழியியல்.

ஒரு மொழிக்குப் பல இலக்கணங்கள் இருந்தாலும், அவைகளில் ஒரு ஆய்வுத் தொடர்ச்சியைத் திட்டமிட்ட முறையில் - வளர்ச்சி முறையில் காணமுடியாது. ஏனெனில் ஒரு இலக்கண

ஆசிரியன் கருத்தை இன்னொரு ஆசிரியன் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அதனால், முன்னால் இருந்த இலக்கண ஆசிரியனின் கருத்தைப் பின்னால் வந்த ஆசிரியன் தவறாகப் புரிந்து கொண்டு விடுவதும் உண்டு. தமிழ் இலக்கண உலகில் முதலெழுத்து - சார்பெழுத்துப் பாகுபாட்டில் நேர்ந்த கருத்து வேறுபாடு இப்படிப் பட்டதே. அதனால்தான் சில விஷயங்களில் இலக்கணக் கோட்பாடு பின்னோக்கி சென்றுள்ளது போலவும் தோன்றுகிறது.

மொழியியல் ஆய்வு எப்போதும் முன்னோக்கியே நடைபெறும். முற்கால மொழியியல் கோட்பாட்டைவிட இன்றைய கோட்பாடு தெளிவு நிறைந்ததாகவும், பிரச்சனைகளைப் புதிய கண்ணோட்டத்தில் விளக்குவதாகவும் அமையும். இதைச் சர்வ தேச முறையில் செய்வதால், ஒருவர் இல்லாவிட்டால் இன்னொருவர் மொழியமைப்பை விளக்குவதிலும், கோட்பாட்டை உறுதிசெய்வதிலும், திருத்தி அமைப்பதிலும் முன்னேற்றம் காணமுடிகிறது.

இலக்கண ஆசிரியன் தன்னுடைய இலக்கணக் கோட்பாட்டை விதந்து எடுத்துச்சொல்வதில்லை; அதனால்தான் பிறர் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது. ஆனால், மொழியியலில் அப்படி இல்லை. தன்னுடைய கோட்பாட்டைத் தானே விளக்கிவிடுவதால் - பலரும் கோட்பாட்டைப் புறநிலையில் எடுத்து விளக்குவதால், ஆசிரியருடைய கருத்தைத் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. மொழியியலில் வருணனை மொழியியலிலிருந்து மாற்றிலக்கணக் கோட்பாடு தோன்றியது பெரிய உலக சாதனை. அந்தக் கோட்பாடு, தொடரியலை ஆராய நல்ல வழிகாட்டியாக அமைந்தது. அதனால் எழுத்தியலிலும் கூடப் புதிய தெளிவையும் நுட்பத்தையும் சுட்டிக்காட்ட முடிந்துள்ளது.

தமிழ் இலக்கணங்களில் தொல்காப்பியம் கூறியதில் சிறு அளவு கூட மற்ற இலக்கணங்கள் மொழியமைப்பை விளக்குவதில் வெற்றி பெறவில்லை; மொழியியல் நுட்பத்தையும் காட்டவில்லை. இதற்குத் தொல்காப்பியருக்குப் பிறகு வந்த தமிழ்ப்புலவர்கள் அறிவு குன்றிப் போய்விட்டார்கள் என்பது பொருள் அல்ல. தொல்காப்பியர் தன்னுடைய தனிப்பட்ட நுண்ணுணர்வால் கூறிய கருத்துகளை - கோட்பாடுகளை அவர்களால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும், தொல்காப்பியரும் வேறு வேறு கோட்பாடு உடையவர் போலத் தோற்றம் அளிக்கிறார். கலைச்சொல்லைக் கையாளுவதிலும், ஒரு கருத்தை விளக்குவதிலும் எங்கும் ஒரே முறையை அவர்

கடைப்பிடிக்கவில்லை. 'எழுத்து' என்பதைப் பல பொருளில் கையாண்டுள்ளார். சாரியையை விளக்குவதிலும், புணர்ச்சி மாற்றங்களை விளக்குவதிலும் பல முறைகளை மேற்கொண்டுள்ளார். எனவேதான் பிற்காலத்தார் அவரைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல் தடு மாறும்படி ஆகிவிட்டது.

எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மொழி அமைப்பு மட்டும் அல்லாமல் சில பொதுக் கோட்பாடு (மாத்திரையின் அளவு, எழுத்துகள் தோன்றும் பொது முறை, புணர்ச்சி பற்றிய பொது விளக்கம்), கருவி மொழி பற்றிய விளக்கம், சில சொல்லியல் செய்திகள் ஆகியவற்றையும் தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. இவைகளில் சிலவற்றை நீக்கியும், ஒருசிலவற்றைச் சேர்த்தும் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் எழுத்திலக்கணம் செய்துள்ளார்கள்; ஆயினும் அவர்களால் முழுத் திருத்தம் செய்ய முடியவில்லை.

## 1.3 மொழியியல் நோக்கில் இலக்கண ஆய்வு

பொதுவாக எந்த ஒரு துறையிலும் புதுமை வந்தால் அல்லது ஏற்பட்டால், அதை அந்தத் துறையில் உள்ளோர் ஏற்றுக் கொள்ளும் வகையில் மூன்று வகையினரைக் காண முடியும். 1) புதுமையைப் புறக்கணிக்கும் பிரிவினர், 2) புதுமையைப் பழமைக்கு விளக்கம் தருகிற அளவுக்கு ஏற்றுக்கொள்ளும் குழுவினர், 3) புதுமையை முழுமனதாக ஏற்றுக்கொண்டு, மேலும் புதுமை செய்ய விரும்பும் கட்சியினர். இந்த மூன்று வகையினரையும் இலக்கண ஆராய்ச்சியாளர்களிடையேயும் நாம் காணமுடிகிறது.

இலக்கண ஆய்வாளர்களில் மொழியியல் உணர்வே இல்லாமல் இருப்பவர்கள் புதுமையைப் புறக்கணிப்பவரே யாவர். ஆனால், அவர்களுள் மொழியியல் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பும் வசதியும் இல்லாதவர்களைப் பற்றி யாரும் குறை சொல்லக்கூடாது.[4] வாய்ப்பும் வசதியும் இருந்தும், மொழியியல் அறிவு ஓரளவு பெற்றிருந்தும், பழைய மரபே சிறந்தது; மொழியியல் நோக்கில் விளக்குவது ஒரு ஏமாற்று வேலை; 'படம் போட்டு மயக்கும் கண்கட்டி வித்தை'

---

4. பழமையைப் புறக்கணிப்போர் என்ற ஒரு வகையினரும் உண்டு. அவர்களிலும் புதிய மொழிகளை ஆய்வோரும் பழைய மொழிக் கோட்பாட்டை அறிந்து கொள்ள வாய்ப்பும் வசதியும் இல்லாதவரும் குறைபாடு உடையவர்கள் அல்ல. பழமையைத் தெரிந்துகொண்டு புதுமை மோகத்தால் அலட்சியப்படுத்துபவரே குறை உடையவர்கள்.

என்றெல்லாம் குறை கூறுவோர் மொழியியலைப் புறக்கணிப்பவராகவே கருதப்படவேண்டும்.[5]

புறக்கணிப்போரில் இன்னொரு வகையினர், புதிய மொழியியல் கொள்கையெல்லாம் இலக்கண நூலில் இருக்கிறது என்று சொல்வதில் என்ன பயன்? அந்த இலக்கண ஆசிரியனின் தனிக்கோட்பாடு இது என்று உலகுக்கு அறிவிப்பதில்தானே இலக்கண ஆசானின் உண்மையான புகழ் அடங்கியிருக்கிறது என்று விமர்சிப்பவர்கள். இவர்கள் புதுமையால் பெரிய நன்மை ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள்; அல்லது எதிர்பார்த்து ஓரளவு ஏமாந்தவர்கள் என்று கூடச் சொல்லலாம். ஆயினும், இங்கு இரண்டு உண்மைகள் உள்ளன. ஒன்று: புதுமையைப் பொருத்திப் பார்க்கும் முயற்சியின்

---

5. இந்தியாவில் நாட்டு வரலாற்று ஆராய்ச்சியிலும் இப்படிப்பட்ட பண்பு-புதுமையைப் புறக்கணிப்பதோடு அதைப் பின்பற்றுவோரைக் குறைகூறும் பண்பு காணப்படுவது குறிப்பிடத்தகுந்தது. வரலாற்று ஆராய்ச்சி இன்று திட்டமிட்ட கோட்பாட்டு அடிப்படையில், விஞ்ஞான ரீதியில் பலர் செய்துவருகிறார்கள். அரசியல் வரலாறு இன அல்லது ஒரு குழு வரலாறு எழுதுவோர் மேற்கொள்ளும் வெறும் நிகழ்ச்சிகளைக் காலவரிசையில் தொகுத்துக் கூறும் முறையிலிருந்து விஞ்ஞான ரீதியிலான வரலாறு மாறுபட்டது. எனவே பின்னவர்கள் முன்னவர்களைக் குறைகூற ஆரம்பித்தார்கள். அதைப்பற்றி ரோமிலா தாப்பர் குறிப்பிட்டு இரண்டு பிரிவினரைப்பற்றி விளக்குவதில் ஒற்றுமை காணப்படுகிறது.

'அரசு வெளியிட்ட பாடப் புத்தகம் பற்றியும் ஆசிரியரைப் பற்றியுமே குறைசொன்னார்கள். அப்படிக் குறை சொன்னவர்கள் வரலாற்று ஆசிரியராக இருந்தும் வரலாற்றுஅறிவு வளர்ச்சியில் பங்கு கொண்டவர்கள் அல்ல. செய்திகளைத் தேடிக் கண்டுகொள்வதிலும் திறமை உடையவர்களே தவிர ஆழ்ந்த வரலாற்று உணர்வு உடையவர்கள் என்று கூற முடியாது.

வரலாற்று ஆய்வின் புதிய போக்குகளைத் தெரிந்து கொள்ளாதவர்களே பிறரைக் குறை கூறினார்கள். ஏனெனில் வரலாறு பொழுது போக்குக்கு உரிய துறை என்று கருதுபவர்களால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்குச் சிறப்பு உத்தி உடையதாக மாறி விட்டது என்று அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

It is true that there was an attack on the writing of medieval histroy but the continuing and sustained attack - both in terms of villification of historians in the publications brought out by the so-called cultural organisatioin was very frequently on historians of ancient India.

தரத்தைப் பற்றியது; மற்றொன்று: புதுமை மூலம் பழமை தனிப் பெருமை பெற முடியுமா? என்ற ஏக்கத்தைப் பற்றியது. மொழியியல் கண்கொண்டு இலக்கணத்தை ஆய்பவர்கள் மொழியியல் கருத் தெல்லாம் இலக்கணத்தில் புதைந்து கிடக்கிறது என்று பறை சாற்றுவதில்லை. மொழியியல் அடிப்படையில் சில விளக்கம் தருவதையே மொழியியல் அறிவால் வெளிப்படுத்துகிறார்கள். உதாரணமாக, இன்றைய தொல்காப்பிய ஆராய்ச்சியால் மாற்றிலக் கணக்கோட்பாட்டு உண்மைகள் புதைந்து கிடைப்பதை அகத்தியலிங்கம் (1969, 1972, 1974) புலப்படுத்தியுள்ளார். ஆனால், அப்படிப்பட்ட விளக்கத்தை அவர் நன்னூலுக்கு ஏற்றிச் சொல்லவில்லை. வேறு யாரும் அப்படிக் கூற முன்வரவில்லையே, ஏன்? நன்னூலில் அந்தக் கருத்துக்கு இடமில்லை என்பதுதான் காரணமே தவிர, நன்னூலார் மீதுள்ள வெறுப்பு காரணம் அல்ல. புதிய கருத்துகள் தோன்றும்போது ஒரு பொருளைப் புதிய நோக்கில் விளக்குவது ஒருவகையில் உரையாசிரியர்களுடைய வேலை. ஆனால் அப்படியில்லாமல், இடம் இல்லாதபோதும் தன்னுடைய சொந்தக் கருத்தையோ புதிய கருத்தையோ ஏற்றிக் கூறுவது, உரையாசிரியர் என்ற போர்வையில், நூலாசிரியராக மாறப் பார்ப்பதாகும். தமிழ் இலக்கண உலகில் இளம்பூரணர் முதல் வகையையும், நச்சினார்க்கினியர் இரண்டாம் வகையையும் சேர்ந்தவர்கள்.

இரண்டாவது கருத்தான மொழியியல் மூலம் இலக்கணத்துக்குப் புதிய பெருமை சேர்க்க முடியுமா? என்பதைப்

---

And those who led the attack from the amongest the rank of professional historians were people who have never been associated with any great intellectual effort; they are all people who are average, competent historians who are good fact-finders, fact - gátherers but not people who have been remarkably known for any kind of analytical understanding of history those who do not really comprehend what this new histrocial trend is about in terms of the nature of the historical analysis were very often the ones that went into attacks on the others, largely because they felt that, in a sense, history was becoming too specialised and was becoming beyond the reach of the kind of soft option subject that it is always belived to be.

Romila Thapar, *The Hindu*-Outlook - State of Historical research in India. p.8. Coloum-3

பார்ப்போம். சுருங்கச் சொன்னால் முடியும் என்பதையே விடையாகத் தரமுடியும். ஆனால் அதற்குச் சில நியதிகள் உண்டு.

மொழியியல் எவ்வளவுதான் வளர்ந்திருந்தாலும், அங்கும் எத்தனையோ பிரச்சனைகளுக்குச் சரியான விடை, சரியான விளக்கம் தெரியாமலேயே இருக்கிறது. அப்படிப்பட்ட பிரச்சனைக்கு இலக்கண ஆசிரியன் முறையை - அவன் எடுத்துக் கொண்ட மொழியை விளக்கிய முறையை மேற்கொண்டு, இன்றுள்ள மொழியியல் சிக்கல் தீரும் என்று காட்ட முடியுமானால், இலக்கணம் மொழியியலுக்கு வழிகாட்ட முடியும். இதற்கு மொழியியலின் புலமையோடு தற்கால ஆராய்ச்சியில் எழுப்பப்படும் சிக்கல்களும் தெரிந்திருக்கவேண்டும்; இலக்கணத்திலும் சீரிய புலமை பெற்றிருக்கவேண்டும். மேலும், இலக்கணத்தில் கூறியுள்ள செய்திகளைப் பொதுமைப்படுத்திக் காட்டுவதோடு, பிற மொழிகளுக்கும் அந்தக் கோட்பாட்டைப் பயன்படுத்த முடியும் என்று நிரூபிக்கும் திறமை பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட தலை மாணாக்கனே இலக்கணத்துக்கும் இலக்கண ஆசிரியனுக்கும் பெருமை சேர்க்க முடியும்; தனக்கும் பெருமை தேடிக்கொள்ள முடியும்.

இந்தக் கருத்தை ஒரு உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம். எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் வருணனை மொழியியல் கொடிகட்டிப் பறந்து காலத்து, வேற்று நிலை வழக்கில் ஒலி ஒப்புமை உடைய இரண்டு ஒலிகள் இருந்தால் அவைகளைத் தனித்தனி ஒலியன்களாகக் கொள்ள வேண்டும்; துணை நிலை வழக்கில் இருந்தால் ஒரே ஒலியனாகத்தான் கொள்ளவேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டது. அந்தக் காலத்தில் ஒலி ஒப்புமை உடைய இரண்டு ஒலிகள், துணை நிலை வழக்கில் இருந்தாலும் புணர்ச்சியில் வேறுபாட்டால், புணர்ச்சி எளிமை கருதித் தனித்தனி ஒலியன்களாகக் கருதலாம்; தொல்காப்பியர் அப்படித்தான் தமிழ்மொழி அமைப்பில் விளக்கியிருக்கிறார் என்றும், அந்த முறை பிறமொழிக்கும் பொருந்தும் என்றும் கூறுவதோடு, வேறொரு மொழிக்குப் பொருத்திக் காட்டி, இதனால் இலக்கணத்தில் எளிமை ஏற்படுகிறது என்று ஒருவர் கட்டுரை எழுதியிருந்தால், தொல்காப்பியத்துக்கும் உலகப் புகழ் ஏற்பட்டிருக்கும்; அந்தக் கட்டுரையாளரும் நல்ல மொழியியல்வாணர் என்ற புகழ் பெற்றிருக்க முடியும். இன்னும் அப்படிப்பட்ட கருத்துகள் - மொழியியலில் உள்ள பிரச்சனைக்குத் தீர்வு தரும் செய்திகள் தமிழ் இலக்கணத்தில் இருக்கிறது என்று யாராவது

மெய்ப்பிப்பார்களானால், தமிழ் இலக்கணங்களைக் கற்க உலக மொழியியலாளர்கள் ஓடிவருவார்கள்; தமிழ் இலக்கணங்களுக்கும் சர்வ தேசப் புகழ் தேடிவரும். எனவே, மொழியியலைப் போற்று வதன் மூலம் நம்மிடையே தலைசிறந்த இலக்கண ஆராய்ச்சி யாளனும் இலக்கண அறிஞனும் தோன்ற முடியும். மொழியியலைப் புறக்கணித்தால், நாம் இலக்கணத்தின் சரியான பெருமையைப் புரிந்துகொள்ள முடியாது; இலக்கண உண்மைகளைச் சரியான நோக்கில் உணர்ந்து கொள்ளவும் முடியாது.

பழமைக்கு விளக்கம் தருகிற அளவுக்குப் புதுமையை ஏற்றுக் கொள்ளுவோர், மொழியியல் அறிவை இலக்கண நூல்களுக்கு விளக்கம் தருவதற்குப் பயன்படுத்தி, இலக்கணத்தின் பெருமையை உயர்த்துபவர்கள். அவர்களைப் பழமையைப் புதுமையின் அடிப்படையில் நியாயப்படுத்துபவர்கள் என்று கூறலாம்; இதன் மூலம் மறைமுகமாக எல்லாமே பழைய இலக்கணத்தில் இருக்கிறது அல்லது பழைய இலக்கணம் செம்மையாக உள்ளது என்ற கருத்தை உடையவர்கள் என்றும் சொல்லலாம். இதனால் இவர்கள், உலகின் பிற பாகங்களில் ஆராய்ச்சியால் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது என்பதை ஒத்துக்கொண்டு, அந்த அறிவு வளர்ச்சி நம்மைப் பொறுத்தவரையில் 'நம் முன்னோர்கள் ஏற்கனவே பெற்றிருந்தது' என்ற பிரமையை ஏற்படுத்துவதால், வரலாற்று உணர்வுக்கு மாறுபட்டு விடுகிறார்கள். மேலும் இவர்கள் இலக்கணத்தில் குறை இருந்தாலும் - குறை தென்பட்டாலும், அதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டும்; அதைக் கண்டு பிடிப்பது நம்முடைய கடமை என்று சமாதானம் கூறி, அதற்காகக் காத்தும் இருப்பார்கள். சில சமயத்தில் அதில் அவர்கள் வெற்றி அடைவதும் உண்டு. ஆனால் இவர்கள் புதிய இலக்கணம் எழுதவேண்டும் என்ற எண்ணம் எழும்பாது தயங்கி நிற்பார்கள். பழைய இலக்கணங்களை அப்படியே செம்மையாக அமைந்திருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளாமல், திருத்தம் செய்ய இடம் இருக்கிறது என்ற உணர்வே, இலக்கண ஆராய்ச்சியை - சிறப்பாகப் புதிதாக இலக்கணம் எழுதவேண்டும் என்ற எண்ணத்தைக் கிளரும் உணர்வு ஆகும். நியாயப்படுத்தும் உணர்வு புதிய இலக்கணம் எழுதவேண்டும் என்ற உணர்ச்சியை அமுக்கி விடும். சுருங்கச் சொன்னால் நியாயப்படுத்தும் உணர்வு உரையாசிரியர் உணர்வு ஆகும்; அது நமது சுதந்திர அறிவைக் கட்டுப்படுத்தி, நம்மை நூலாசிரியராக ஆக்காமல் செய்துவிடும்.

உரையாசிரியர்கள் மொழிக்குத் தொண்டுசெய்துள்ளார்கள் என்று எவ்வளவுதான் பாராட்டப்பட்டாலும், அந்தப் பாராட்டு நூலாசிரியனின் தொண்டுக்கு முன்னால் ஒருபடி தாழ்ந்ததுதான். நச்சினார்க்கினியர் 'உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்' என்றும், 'நச்சினார்க்கினியர் எச்சில் நறுந்தமிழ் நுகவர்வோர் வல்லோர்' என்றும் பாராட்டப்பட்டாலும், அவருடைய புகழ் நன்னூல் எழுதிய பவணந்தியின் புகழுக்குக் கொஞ்சம் மாற்றுக் குறைந்ததுதான். ஏனென்றால், நூலாசிரியராய்ப் பவணந்தி அமைந்ததால் அதிக சுதந்திரம் உடையவராகிப் பதவியல் என்ற புதிய இயலை எழுத்ததிகாரத்தில் எந்தவித சமாதானமும் தேடாமல் தைரியமாய்ப் புகுத்தியதோடு, மொழியில் ஏற்பட்ட மாற்றங்களையும் அதே முறையில் சொல்லிச் சென்றுவிட்டார். நச்சினார்க்கினியரோ விதப்புக்கிளவியையும் (மிகையாக இருக்கும் சொல்) இலக்கண உத்திகளையும் நாடியே, தான் கண்ட மொழியமைப்பு பற்றிய புதிய உண்மையைக்கூற வேண்டியதாகிவிட்டது. ஏனைய உரையாசிரியர்களைவிட நூலாசிரியரின் தன்மை மிகுந்திருந்தும், நச்சினார்க்கினியர் உரையாசிரியராக இருக்கத் துணிந்ததால், உரையாசிரியரின் நியாயப்படுத்தும் உணர்வுக்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று; அதனால்தான் சூத்திரத்தைக் கண்டவாறு சிதைத்துப் புதுப்பொருள் கூறவேண்டியதாயிற்று. நாமும் அப்படியே மொழியியல் என்ற தனித்துறை வளர்ந்த பின்பும், நியாயப்படுத்தும் உணர்ச்சி பெற்றிருந்தால், முன்னே குறிப்பிட்டது போலச் சரித்திர உணர்வுக்கு மாறுபட்டுப் புதிய இலக்கணம் எழுதவேண்டும் என்ற துடிப்பு இல்லாமல், உண்மையான இலக்கண வளர்ச்சிக்குக் குறுக்கே நின்றவர்கள் ஆகிவிடுவோம்.

எழுத்ததிகாரத்தில் நியாயப்படுத்தும் உணர்வுக்கு ஒரு உதாரணம் தர முடியும். தொல்காப்பியர் பெயர்ச் சொல்லின் அகச்சந்தியை (Internal sandhi) பெயரும் வேற்றுமை உருபும் சேரும் புணர்ச்சி மாற்றத்தை விரிவாகவும் தெளிவாகவும் கூறிச் சென்றுள்ளார். ஆனால், வினைச்சொல் காலவிகுதியோடும் வினையெச்ச விகுதியோடும் சேரும் போது ஏற்படும் புணர்ச்சி மாற்றத்தை வினைச்சொல்லின் அகச் சந்தியாகத் தொல்காப்பியர் கூறவேயில்லை. மேலும், கால விகுதியையும் வினையெச்ச விகுதிகளையும் பகுத்துக்கூடக் காட்டவில்லை. தொல்காப்பியத்தை நியாயப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறவர்கள், இதற்கு இரண்டுவித சமாதானம் கூறுகிறார்கள். ஒன்று: தனி வாக்கியம் கூட வேற்றுமை ஏற்றுவரும்; இல்லாவிட்டால்

எழுவாயும் பயனிலையும் மட்டுமே தனி வாக்கியமாக அமையும். எனவே வேற்றுமை தனிவாக்கியத்துக்கும் இன்றியமையாதது. ஆகவே, வேற்றுமை ஏற்கும் பெயரின் புணர்ச்சியை அவசியம் கூறவேண்டியதாயிற்று. மேலும் வினைச்சொல்லில் காலமும் பால்காட்டும் விகுதியும் புதைநிலை வாக்கியத்தில் அமைவதில்லை; கால வழுவும் நிறைய உண்டு, எனவேதான் வினைச்சொல்லில் அகச்சந்தியும் விகுதியும் சிறப்பானவை இல்லை; அதனால் வினைச்சொல்லின் விகுதி பற்றியும் புணர்ச்சி பற்றியும் தொல்காப்பியர் கூறவில்லை என்பார்கள். புறநிலையில் வரும் பெயரும் வினைமுற்றும் திணைபால் இயைபுக்காக அந்த விகுதிகளைத் தொல்காப்பியர் தொகுத்துத் தந்திருக்கும்போது கால விகுதியையும் தொகுத்துத் தரவேண்டியதுதானே? மேலும், கால விகுதிகள் வேறு வேறு பொருள் உணர்த்துவதால் (இறந்தகால விகுதி சில சமயத்தில் நிகழ்காலத்தையும், நிகழ்கால விகுதி இறப்பு, எதிர்காலத்தையும் உணர்த்தும்) பகுத்துக் கூறவில்லை என்று சொன்னால், ஒரு வேற்றுமை வேறு வேறு பொருளில்வரும் என்பதை வேற்றுமை மயங்கியல் என்ற தனி இயலில் கூறிவிட்டு, வேற்றுமைகளைப் பகுத்து இன்னென்ன வேற்றுமைக்கு இன்னென்ன உருபு என்று தொல்காப்பியர் கூறுவானேன்? என்ற கேள்வி எழுகிறது. நியாயப்படுத்துபவர்கள் இதற்கும் புதிய நியாயம் கூற முற்படவேண்டும். அப்படியே விவாதித்துக் கொண்டுபோனால் ஒரு வரையறை இருக்காது. இதை விட்டுவிட்டு இன்னொரு சமாதானத்தைப் பார்ப்போம். வேற்றுமை, தொடரியல் முக்கியத்துவம் வாய்ந்தது. வினை விகுதிகள் தொடரியல் நிலையில் சிறப்புப் பெறாததால்தான் வினைச்சொல்லின் அகச் சந்தி கூறப்படவில்லை. மேலும், தொல்காப்பியர் தொடரியலுக்கு முக்கியம் கொடுத்த அளவுக்குச் சொல்லியலுக்கு முக்கியம் கொடுக்கவில்லை என்பதே அவர்கள் கூறும் சமாதானம். ஆனால், வேற்றுமை தனி வாக்கியத்துக்குள் வருவது; வினையெச்சமோ எப்போதும் கூட்டு வாக்கியத்துக்குள்ளயே அமையும். எனவே, வினையெச்ச விகுதிகள் வேற்றுமையைவிடத் தொடரியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆகிறது. வினைப்பகுதி மட்டும் வந்தால் ஏவல் வாக்கியமாக - தனி வாக்கியமாக இருக்கும்.

நீ வா, நீ நட, நீ கேள்

இவை மேலும் வினையெச்ச விகுதி பெற்றால் கூட்டு வாக்கியமாய்ப் புணர்ச்சி மாற்றமும் அடைகின்றன.

நீ வரின் நான் தருவேன்
கூட்டம் நடப்பின் நான் செல்வேன்
மாடு நடப்ப அவன் சென்றான்
நீ கேட்க அவன் தரவில்லை

மேலும், தொல்காப்பியர் தொடரியலுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்றால், பெயர்ச் சொல்லின் உருபனியல் பற்றி-வேற்றுமை, சாரியை பற்றி விரிவாகப் பேசுவானேன்? என்ற கேள்வியும் எழுந்துவிடுகிறது.

பழைய இலக்கணத்தில் குறை கூறக் கூடாது, அது இலக்கண ஆசிரியனுக்கு இழுக்கு வந்து விடும் என்று நினைக்க வேண்டியதே யில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி அமைப்புப் பற்றி எத்தனை எத்தனையோ நுட்பங்களைத் தொல் காப்பியர் கூறிச் சென்றது இன்றும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறதே! எனவே உண்மையான குறையை ஒத்துக்கொண்டு, நாம் அதை நிறைவு செய்யும் துணிவு பெற்றால், என்ன குறைவு வந்துவிடும்? குறை இருக்கிறது என்று நாம் உணர்வதே நாம் அறிவில் வளர்ச்சி பெற்றிருக்கிறோம் என்பதைத் தானே காட்டுகிறது! தன்னை விடத் தன்னுடைய குழந்தை அறிவில் சிறந்திருப்பது இந்த உலகத்து எல்லா உயிர்க்கும் இனியது என்று திருவள்ளுவர் (குறள்:68) கூறிச் சென்றுள்ளாரே! இன்று தொல்காப்பியர்க்குப் பிறகு, பவணந்திக்குப் பிறகு, எவ்வளவோ தலைமுறையைத் தாண்டிய பிறகு நாம் அவர்களைவிட அறிவுபெற்றுப் பழையநூலில் குறையைக் கண்டால் எல்லோரும் மகிழத்தானே வேண்டும்! எனவே, எதையும் நியாயப் படுத்திக்கொண்டு தேங்கி நிற்காமல், புதுமையை ஏற்று முன்னேறி வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

புதுமையை முழுமனதாக ஏற்று, மேலும் புதுமை செய்ய விரும்புவோர் இலக்கண ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில், மொழியியல் அடிப்படையில் இலக்கணத்துக்கு விளக்கம் - மறுவிளக்கம் தரவேண்டும்; அந்த இலக்கணத்தைப் புதிய முறையில் வருணிக்கவேண்டும் (மறு வருணனை). இலக்கணத்திலுள்ள குறை நிறைவுகளைச் சுட்டிக்காட்டிப் புதிய இலக்கணம் (பழையகால மொழிக்கும், இன்றைய மொழி நிலையை ஒட்டித் தற்கால மொழிக்கும் தனித்தனி இலக்கணம்) படைக்க முன்வர வேண்டும். அதன் மூலம் மொழி அமைப்பில் புதிய உண்மைகளை எடுத்துக்காட்டவேண்டும்.

மொழியியல் வெளிச்சத்தில் இலக்கணத்தைப் பார்க்கக் கற்றுக் கொள்வது, குன்றில் மேலிருந்துகொண்டு யானைப் போரைப் பார்ப்பது போல ஆகும். அப்போது இலக்கணத்தை மதிப்பீடு செய்யக் கற்றுக்கொண்டு விடுவோம். இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை அனுதாபத்தோடு நோக்கி, ஒற்றுமையையும் வேற்றுமையையும் தெரிந்து கொண்டு விடுவோம். இது இலக்கண ஆராய்ச்சியில் புதிய ஆர்வத்தைத் தூண்டிவிடும். புதிய மொழியியல் கோட்பாட்டுக்கு ஏற்பப் புதிய இலக்கணம் எழுதும் ஆர்வமும், மொழி அமைப்பைப் புதிய முறையில் நோக்கும் எண்ணமும், புதிய மொழியியல் கோட்பாடு படைக்கும் திறனுமே புதுமையை ஏற்று மேலும் புதுமை செய்வதாகும்.

பழைய இலக்கணங்களை மொழியியல் நோக்கில் விளக்குவது தமிழிலும் பரவலாகக் காணப்படுகிறது. மொழியியலாரும் பழைய இலக்கணங்களைப் புதிய கோட்பாடு அடிப்படையில் எழுதும் முறையைப் பின்பற்றி, மொழியியல் மறு வருணனை (Linguistic restatement) என்று எழுதி வருகிறார்கள். இதன் மூலம் மொழியியல் மாணவன் மொழியியல் கோட்பாட்டைப் பொருத்திப் பார்த்துப் பயன்படுத்தும் அனுபவமும், பழைய இலக்கணத்தை மதிப்பீடு செய்யும் திறனும் பெறுவதாகக் கருதப்படுகிறது.

மறு வருணனை என்பது இருப்பதை அப்படியே மொழியியல் முறையில் மட்டும் கூறுவது அல்ல; பொதுமைப்படுத்தி எளிமையாகக் கூறுவதும் ஆகும். உதாரணமாக உடம்படுமெய் பற்றிய சூத்திரத்தை எடுத்துக்கொள்வோம்.

**இ ஈ ஐவழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும்; ஏமுன்இவ் விருமையும்**
**உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்** (நன்.162)

இதை மொழியியல் சமன்பாட்டில் சொல்வதனால்

$\varnothing \rightarrow$ ய / இ, ஈ, ஐ - உயிர்
$\varnothing \rightarrow$ வ / ஏனை உயிர் - உயிர்
$\varnothing \rightarrow$ வ, ய / ஏ - உயிர்

$\varnothing$ என்பது சூனியத்தைக் குறிக்கும். தோன்றல் (மிகுதல்) விகுதியை மொழியியலார் இப்படித்தான் விளக்குவார்கள். அப்படியே கூடுதல் புணர்ச்சியைச் சூனியம் ஆயிற்று என்பார்கள். நன்னூலில் சூத்திரமாகக்

கூறப்பட்டிருப்பது இங்கு மூன்று விதிகளாக மாற்றிக் கூறப்பட்டிருக்கிறது அவ்வளவுதான். இந்த மறு வருணனை அவ்வளவு சிறப்புடையது அல்ல. இதில் பொதுமை மிகுந்துள்ளது. i) உடம்படுமெய் என்பது இரண்டு உயிர்களுக்கு இடையே வருகிறது. ii) யகரம் வகரம் வருவதற்கு நிலைமொழியே காரணம் ஆகிறது. மொழியியல் கோட்பாட்டின்படி ஒன்றை அடிப்படையாகக்கொண்டு மற்றதை அதன் திரிந்த வடிவமாகக் கருதுவார்கள். அதன்படி வகரத்தை அடிப்படையாகக் கொண்டு யகரத்தைத் திரிந்த ஒலியனாகக் கூறலாம்.

Ø → வ / உயிர் - உயிர்

வ → ய / முன்னுயிர் -

இரண்டாவது விதியை ஏகாரத்தின்முன் விருப்ப விதியாகச் செயல்படும் என்று விளக்கினால், அது வகரமும் யகரமும் பெறுவதாக அமையும். இந்த மாற்றுவருணனை, முன்கூறியதைவிடக் கொஞ்சம் சிறப்பு வாய்ந்தது. மாற்றிலக்கணத்தார், சிறப்புப் பின்னற்கூறு (Distinctive features) அடிப்படையில் புணர்ச்சி விதிகளுக்குப் பல உத்திகளைக் கையாண்டு விளக்குவார்கள். இரண்டு மாற்று வடிவங்கள் இருந்தால் அதை +, - என்று சிறப்புப் பின்னற்கூறு மூலம் மாற்றத்தையும், வரும் சூழலையும் ஒன்றுபடுத்தி, α (ஆல்பா) என்ற கிரேக்க எழுத்தின்மூலம் ஒரே விதியாகக் காட்டுவார்கள். இதற்கு α (ஆல்பா) விதி என்று பெயர் (Schane, 1973:69)

உடம்படுமெய்யை விளக்குவதற்கு உயிரொலிகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். உயிரொலியின் பொதுத்தன்மையைக் குறிக்க + உயிர் என்று கூறுவார்கள். எனவே மெய்யொலிகள் - உயிர் (அதாவது உயிரல்லாதன) ஆகும். மேலும் உயிராக இருந்தும் அசையாக இருப்பதை + அசை என்றும் அசையாக அமையாததை - அசை என்றும் குறிப்பார்கள். அப்படியே உயிரொலிகளுக்குள் வேறுபாடு குறிக்க முன்னுயிர்களைப் - பின் என்றும், பின்னுயிர்களையும் நடு உயிர்களையும் குறிக்க + பின் என்றும் குறிப்பார்கள். எனவே,

[+ உயிர், + அசை, - பின்] என்றால் இ, ஈ, எ, ஏ, ஐ ஆகியவற்றையும்

[+ உயிர், + அசை, + பின்] என்றால் அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவற்றையும் குறிக்கும்

மெய்களில் ய, வ என்பன அரை உயிர் (Semi-vowel) என்பதால்

$$\begin{bmatrix} -\ \text{உயிர்} \\ \\ -\ \text{அசை} \end{bmatrix} \quad \text{என்று கூறலாம்.}$$

அதாவது, இது முழு உயிர் அல்ல; முழு மெய்யும் அல்ல என்பதைக் குறிக்கும். இதில் இரண்டையும் வேறுபடுத்த வகரத்தை [+ முன்] என்றும் யகரத்தை [-முன்] என்றும் குறிக்கலாம். இதையும் ஆல்பா முறையைக் கொண்டு உடம்படுமெய் விதியைப் பின்வருமாறு எழுதலாம்.

$$\varnothing \rightarrow \begin{bmatrix} -\ \text{உயிர்} \\ -\ \text{அசை} \\ \alpha\ \text{முன்} \end{bmatrix} \Big/ \begin{bmatrix} +\ \text{உயிர்} \\ +\ \text{அசை} \\ \alpha\ \text{பின்} \end{bmatrix} \ \text{——}\ \begin{bmatrix} +\ \text{உயிர்} \\ +\ \text{அசை} \end{bmatrix}$$

இதன்படி வகரம் (- உயிர், - அசை, + முன்) முன்னுயிர்க்குப் பிறகும், யகரம் (- உயிர், - அசை, - முன்) பின்னுயிர்க்குப் (-பின்) பிறகும் வரும். இதன்படி ஏகாரம் யகரம் மட்டுமே பெறும். வகரம் பெறுதலை வேறுவிதமாக விளக்க வேண்டும். செவ்வடி என்பது சேவடி என்று மாறும். இதை ~ குமெமெ (குறிலை அடுத்து இரண்டு மெய் வருதல்) ~ நெமெஉ (நெடிலை அடுத்து ஒரு மெய்வருதல்) என்ற விதியில் அடக்கலாம். வேறு சில இடங்களில் வ>ய, என்றோ ய>வ என்றோ விளக்க வேண்டும்.

உண்மையில் இங்கு உடம்படுமெய்யின் சிறப்புப் பண்புக்கும் (+முன், -முன்) உயிரின் சிறப்புப் பண்புக்குமே (+பின், -பின்) ஒரு உறவு இருக்கிறது. உயிர் + பின் (அ,ஆ,இ,ஈ முதலியன) ஆக இருந்தால் உடம்படு மெய் + முன் (வகரம்) ஆக இருக்கும். உயிர் -பின் (முன்னுயிர்) ஆக இருந்தால் உடம்படுமெய் - முன் (ய) ஆக இருக்கும். இங்குப் பொதுமை மிகுந்திருந்ததோடு இரண்டுக்குமுள்ள உறவும் புலப்படுகிறது. சில சமயங்களில் இரண்டு வேறுபட்ட விதிகளில் ஒற்றுமை ஏற்படுத்திப் புணர்ச்சி மாற்றத்தையும் விளக்குவது உண்டு.

நிலைமொழி இறுதியில் இடையின மெய்களில் ய,ர,ழ ஆகியவை வந்தாலும் உயிரெழுத்து வந்தாலும், வல்லெழுத்து முதலாக உடைய சொற்கள் வேற்றுமையில் புணரும்போது வல்லெழுத்து

மிகும். இதையே தொல்காப்பியர் தனித்தனிச் சூத்திரங்களில் கூறியிருக்க, நன்னூலார் ஒரு பொதுச்சூத்திரத்தில் (165) அடக்கியுள்ளார்.

$$\varnothing \rightarrow \text{வ}_1 \;/\; \left\{ \begin{array}{c} \text{ய} \\ \text{ர} \\ \text{ழ} \\ \text{உயிர்} \end{array} \right\} \left[ \begin{array}{c} \text{வல்லினம்,} \\ \text{வேற்றுமை} \end{array} \right]$$

வல்லினம் என்பதைப் பொதுமைப்படுத்தி வ என்றும், வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற வல்லெழுத்து வரும் என்பதை $\text{வ}_1 \ldots \text{வ}_1$ என்றும் குறிப்பிடுவது வழக்கம். இங்கு { } என்ற அடைப்புக்குள் இருப்பதால், ஏதாவது ஒன்றே வரும் என்பது மொழியியல் மரபு.

நிலை மொழியில் ல, ள இருந்தால் இதே சூழலில் நிலைமொழி முறையே ற, ட என்று மாறும் என்பார்கள் (தொல். 366, 396)

$$\left[ \begin{array}{c} \text{ல} \\ \text{ள} \end{array} \right] \rightarrow \left[ \begin{array}{c} \text{ற} \\ \text{ட} \end{array} \right] \;/\; \text{—} \;\; \text{வ} \; [\text{வேற்றுமை}]$$

[ ] என்ற அடைப்பைப் பயன்படுத்தினால் நேருக்கு நேர் மாற்றம் ஏற்படுகிறது என்று பொருள். அதாவது லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் மாறும் என்று கொள்ள வேண்டும். இந்த மறு வருணனையில் சில குறியீடுகளைப் பயன்படுத்தியதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை. இங்கே முதல் விதியில் வருமொழி இரட்டித்தலும், இரண்டாவது விதியில் நிலை மொழியில் திரிதல் அல்லது மெய் பிறிதாதல் என்ற மாற்றமும் நடைபெறுகின்றன. இரண்டும் வேற்றுமைப் புணர்ச்சியாக இருந்தும் இரண்டு விதமான மாற்றம் ஏன் நடைபெறுகின்றது? என்று யாராவது கேட்டால், நாம் பதில் எதுவும் சொல்ல முடியாது.

குமாரசுவாமி ராஜா (1980) செய்த மறுவருணனையைத் தழுவிய விளக்கம் கீழே கொடுக்கப்படுகிறது.

தமிழ் மொழி அமைப்பில் ய, ர, ழ என்ற மூன்று மெய்களே ஈரொற்று - உடனிலைகளாக (இரண்டு மெய்கள்

சேர்ந்துவரும் மூன்று மெய்களின் மயக்கம்) வருகின்றன. ல,ள என்ற இடையின மெய்களோ மெல்லின மெய்களோ ஈரொற்று உடனிலையாக வருவதில்லை. அது தமிழ் மொழி அமைப்பில் புற நிலையில் உள்ள இடைவெளி (Structural gap). இந்த உண்மையை மனத்தில் கொண்டு புணர்ச்சி விதிகளை அமைத்துள்ளார் குமாரசுவாமி ராஜா. உனவே, முதலில் ய, ர, ழ ஆகிய மூன்று மெய்யோடும் உயிரோடும் வருமொழி வல்லினம் புணரும்போது இரட்டிப்பது போலவே ல, ள, மெல்லினம் ஆகியன வரும்போதும் இரட்டிக்கிறது என்று பொதுமைப்படுத்திவிட்டார்.

$$\emptyset \rightarrow \text{வ}_1 \Big/ \left\{ \begin{matrix} \text{மெ} \\ \text{உ} \end{matrix} \right\} — \text{வ}_1$$

| | | | | |
|---|---|---|---|---|
| ல் | + | க் | → | ல்க்க் |
| ள் | + | க் | → | ள்க்க் |
| ர் | + | க் | → | ர்க்க் |
| ய் | + | க் | → | ய்க்க் |
| ம் | + | க் | → | ம்க்க் |
| ல் | + | க் | → | ல்க்க் |
| ள் | + | க் | → | ள்க்க் |

தமிழ் மொழி அமைப்பில் ல்க்க் போன்ற மெய்மயக்கங்கள் வராத தால் அவை மேலும் புணர்ச்சி மாற்றத்துக்கு உள்ளாகின்றன.

$$\left\{ \begin{matrix} \text{ம} \\ \text{மூ} \end{matrix} \right\} \rightarrow \text{வ}_1 \;/\text{--}\; \text{வவ}$$

ம என்பது மருங்கொலியையும் மூ என்பது மூக்கொலியையும் குறிக்கும்.

ல, ள (அதாவது மருங்கொலி), மெல்லினம் ஆகியவை இரண்டு வல்லின மெய்க்குமுன்னால் வரும்போது வல்லினமாகின்றன. அதாவது லகரம், றகரமாகவும் ளகரம் டகரமாகவும் மாறுகின்றன. இதன்படி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ல்க்க் | > | ற்க்க் | ள்க்க் | > | ட்க்க் |
| ல்த்த் | > | ற்த்த் | ள்த்த் | > | ட்த்த் |

ஆகும்.

வ₁ வ₁ → வ₁ / வ ---

அதாவது ஒரு வல்லின மெய்க்கு உடனிலை மெய்மயக்கம் இருந்தால் உடனிலை மெய்மயங்ககமான வல்லினம், தனிவல்லினமாக மாறும்.

ற்க்க் > ற்க்    ட்க்க > ட்க்
ற்த்த் > ற்த்    ட்த்த் > ட்த்

ற்த், ட்த் என்று புறநிலை அமைப்பில் வராததால்

ப → [நா / நு] / [நா / நு] ---

தகர மெய் (பல்லொலி) டகரத்தோடோ (நாமடி ஒலி) றகரத்தோடோ (நுனிநாநுனிஅண்ண ஒலி) வந்தால் வருமொழிக்கு ஏற்ப மாறும்.

ற்த் → ற்ற்
ட்த் → ட்ட்

இங்குப் புணர்ச்சியில் பொதுமை மிகுந்து காணப்படுகிறது. புணர்ச்சி மாற்றங்களுக்குரிய காரணங்களும் புலப்படுகின்றன. எல்லாப் புணர்ச்சி மாற்றத்துக்கும் மொழி அமைப்பில் உள்ள இடைவெளியைக் காரணம் காட்ட முடியாவிட்டாலும், பொதுமை மிகுந்து காணப்படும். இதைப் பார்த்த உடனே நமது இலக்கண ஆசிரியர்கள் எளிமையாகச் சொல்லிச்சென்றுவிட்டார்களே; மொழியியல் விளக்கம் தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பதுபோல் அல்லவா இருக்கிறது! என்று எண்ணக்கூடாது. மொழி அமைப்பில் விளக்கமும், புணர்ச்சி மாற்றத்தில் பொதுமையும், மாற்றத்திற்குரிய காரணமும் உணர்த்தப்படுகின்றனவே; அவைதான் மறுவருணனையின் பயன்.

சூத்திரங்களுக்கு மொழியியல் அடிப்படையில் விளக்கம் கொடுப்பதை மறுவிளக்கம் (Reinterpretation) என்று அழைக்கலாம். தொல்காப்பியர் சார்பெழுத்துகளைத் தனிமொழிச் சார்பெழுத்து, புணர்மொழிச் சார்பெழுத்து என்று இரண்டாகப் பிரித்து வேறுவேறு இயலில் கூறுவதற்கான விளக்கம் 'எழுத்தியல்' என்ற இயலில் விளக்கப்படும். அப்படியே பெயரெச்சம் ஆறுவகைச் சொல்லுக்கும் ஒத்த உரிமை உடையது என்று கூறியதைப் (தொல்.719) பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் உள்ள இலக்கண உறவை விளக்குவதாக அகத்தியலிங்கம் (1967) குறிப்பிட்டுள்ளார்.[6]

---

6. Tolkappiyar in his sutram 234 (Tol.col.) has clearly given the relation among the relative participle and the noun that follows:

படித்த பையன், படித்த பாடம் முதலிய உதாரணங்களைக் காட்டி, இவை முறையே எழுவாய் - பயனிலை உறவையும், செயப்படுபொருள்-பயனிலை உறவையும் குறித்து நிற்கிறது; இவைகளை முழு வாக்கியத்திலிருந்து வந்ததாகக் கொள்ள வேண்டும் என்பார் அவர்.

பையன் படித்தான் → படித்த பையன்

பாடத்தைப் படித்தான் → படித்த பாடம்

வாழ்ந்த வீடு என்பதில் வீடு என்று இடப்பெயராக இருப்பதால் ஏழாம் வேற்றுமை - பயனிலை என்ற உறவாகக் கொள்ளலாம். அப்படியானால் வீட்டில் வாழ்ந்தான் என்பதே வாழ்ந்த வீடு என்று மாறிவிட்டது என்று பொருள். ஆனால், வாங்கின வீடு என்னும் போது இந்த விளக்கம் முழுவதும் பொருந்தாது; ஏனெனில் வீட்டில் வாங்கினான் என்பது ஒரு முறையில் மட்டுமே பொருந்தும். வாங்கின வீடு அழகாக இருக்கிறது என்பது போன்ற வாக்கியத்தில் வரும் பெயரெச்சத் தொடரை அப்படி விளக்க முடியாது. அங்குச் செயப்படுபொருள்-பயனிலை என்ற உறவு இருப்பதாகக் கொண்டால், பொருள் விளக்கம் சரியாக அமையும். எனவே வீட்டை வாங்கினேன். அந்த வீடு அழகாக இருக்கிறது என்ற புதை வாக்கியத்திலிருந்து பிறந்ததாகக் கருதவேண்டும். எனவே, எந்தப் பெயர், பெயரெச்சத்தோடு சேருகிறது என்பதை விட, எந்த இலக்கண உறவில் சேருகிறது என்பதே முக்கியம். ஆகவே ஆறுவகைப் பெயரும் **'ஒத்த உரிமைய'** என்பதை இலக்கண உறவையே குறிப்பதாகக் கொள்ளவேண்டும் என்பதற்கு உரையாசிரியர் தரும் விளக்கமும் மாற்றிலக்கணக் கோட்பாடும் துணை செய்வதாகக் கூறியுள்ளார் அகத்தியலிங்கம்.

சொல்லதிகாரத்தில் மறுவருணனைக்கு அவருடைய வினை யெச்சம் பற்றித் தொல்காப்பியர் (அகத்தியலிங்கம், 1972) என்ற கட்டுரை நல்ல சான்று.

மொழியியல் நோக்கில் இலக்கண ஆராய்ச்சியில் அடுத்துச் செய்ய வேண்டியது இலக்கணக் கோட்பாடுகளைக் கண்டுபிடிப்பது ஆகும். இன்றுள்ள மொழியியல் கோட்பாடுகளில் எந்த ஆய்வு முறை பெரிய அளவில் ஒத்திருக்கிறது என்று காண்பதோடு, இலக்கண ஆசிரியருடைய கோட்பாடு எப்படி தனித்துவம் பெற்றிருக்கிறது? அதாவது, எப்படி வேறுபாடு உடையது? என்பதையும் வலியுறுத்த

வேண்டும். இன்றைய கோட்பாடுகளை பழைய இலக்கணத்தில் இருக்கிறது என்று காட்ட முனையாமல் இலக்கண ஆசிரியர் என்ன நினைத்து எழுதினார்? எந்த அடிப்படையில் எழுதினார்? என்பதை எல்லாம் கண்டுபிடிக்க முயலவேண்டும். அந்த முயற்சியே இந்த நூலில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

## 1.4 இலக்கணக் கல்வியின் நோக்கம்

இலக்கணக் கல்வியின் நோக்கம் 'மொழித் திறத்தின் முட்டறுத்தல்' என்று கூறுவது பழைய கருத்து. அதுவே இன்று பாமர ரஞ்சகமான குரலாக மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் துணை புரிவது என்று கூறப்படுகிறது. இப்படி இலக்கணம் அமைந்தால் விதிமுறை இலக்கணம் (Prescriptive grammar) அல்லது இயன்முறை (Normative) இலக்கணம் என்று கருதப்பட வேண்டும்.

தமிழ் இலக்கண நூல்களில், சில இடங்களில் விதிமுறை இலக்கணத்தின் சாயலைப் பார்க்க முடிகிறது (சண்முகம், 1978ஆ). என்றாலும், பெரும்பான்மையான நிலையில் அவை வருணனை இலக்கணமாகவே அமைந்துள்ளன. அதனால்தான் இவை உச்சரிப்பிலும், சொல்லெழுத்திலும், புணர்ச்சியிலும் உறழ்ச்சியை - ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களைக் குறிப்பிட்டுச் செல்கின்றன.

முறைப் பெயரில் சொல்லுக்கு முதலில் வரும் உகரம் குற்றியலுகரமாக இருக்கும் என்று குறிப்பிட்டு விட்டு, முற்றியலுகரமாக உச்சரித்தாலும் பொருள் மாறுபடாது என்று கூறியுள்ளார். (தொல்.68) இது உச்சரிப்பில் இரண்டுவகை இருந்ததை விவரிக்கிறதே தவிர இதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை.

மகர ஈற்றுச் சொற்கள் னகரமாகவும் (மரம்~மரன்; நிலம் ~ நிலன்) அமையலாம் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் (82). பிற்கால இலக்கண ஆசிரியர்கள் போலி என்று சொல்வதும் இந்த வகையில் அடங்கும். இங்கும் எது சரியானது என்று வரையறுக்க வில்லை. இதுபோல் புணர்ச்சியில் எத்தனையோ உறழ்ச்சிகள் உள்ளன.

ஆகார மரப்பெயர், புணர்ச்சியில் மெல்லெழுத்துப்பெறும் (தொல். 230) என்று முதலில் கூறிவிட்டு, அடுத்த சூத்திரத்தில் வல்லெழுத்து மிகுந்து வந்தாலும் தவறு இல்லை என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

யாஅங்கோடு~யாஅக்கோடு

தொல்காப்பியரே உறழ்ந்து வரும் என்று சுட்டிக் காட்டிய இடங்களும் பல உண்டு (தொல்.157, 216 முதலியன).

பிற்கால இலக்கண நூல்களிலும் உறழ்ச்சி பேசப்படுகிறது. நன்னூலார் பல என்ற சொல் தம்முன் தாம் வந்தால் (பல+பல) இயல்பாதலும் (பல பல), மிகுதலும் (பலப்பல), அகரங்கெட லகரம் றகரமாதலும் (பற்பல) ஆகிய மாற்றங்கள் நடைபெறும் என்று ஒரே சொல்லுக்கு மூன்று விதப்புணர்ச்சி மாற்றங்களைச் சொல்லியுள்ளார் (169). இந்த விதி, இலக்கண விளக்கத்திலும் (88), தொன்னூல்விளக்கத்திலும் (31), முத்து வீரியத்திலும் (புணரியல் 84) உள்ளது. எனவே, பிற்கால இலக்கண நூல்கள் கூட ஒன்றுக்கு மேற்பட்ட வடிவத்தைக் கூறுகின்றன என்பது புலனாகிறது. எனவே இலக்கணத்தை நல்வழி காட்டும் துணையாகும் என்பதைவிட, மொழி அமைப்பை விளக்கும் நூல் என்பதே பொருந்தும். எனவே இலக்கணக் கல்வி மூலம் முதலில் மொழி கட்டமைப்பையே தெரிந்துகொள்ள முடியும்; அடுத்து இலக்கண ஆசிரியனின் இலக்கணக் கோட்பாட்டையும், அவன் மொழிக் கோட்பாட்டையும் புரிந்து கொள்ள வேண்டும்; பிறகு இலக்கணத்தை மதிப்பீடு செய்ய வேண்டும். அதாவது மொழி அமைப்பை இன்னும் பொதுமைப்படுத்தி எளிமைப்படுத்த முடியுமா? என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டும். இன்றைய ஆராய்ச்சியில் மொழி அமைப்பில் சில புதிய செய்திகள் வெளிப்பட்டுள்ளன. உதாரணமாக, நெட்டெழுத்துக்குப் பிறகு மெல்லினமும் இடையினமும் உடனிலை மயக்கமாக வராது (பெஸ்கி, 1730. செந்தமிழ் இலக்கணம் 5.21, சண்முகம் பிள்ளை, 1964); சொல்லின் இறுதியில் - இம் என்ற எழுத்துத் தொடர் வருவதில்லை (சண்முகம், 1972 ஆ). மேலும் இலக்கணக் கல்வி மூலம் இலக்கணத்தை மதிப்பீடு செய்வதும், தாமே இலக்கணம் எழுதும் திறமை பெறுவதும் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

மொழியின் கல்வி தமிழகத்தில் விரிவாக ஏற்பட்டு விட்டால், இலக்கணக் கல்வி தொடர்ந்து நடைபெறுமா என்பது போல் சிலர் பேசிவருகிறார்கள். அதாவது இலக்கணக் கல்வியை மொழியியல் கல்வி விழுங்கி விடுமோ என்ற பயம் சிலருக்கு ஏற்பட்டிருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், இலக்கணக்கல்வி எப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்; நடைபெற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூறலாம்.

பொதுவாகச் சொன்னால், மனிதனுக்கு வரலாற்று உணர்வு இருக்கிற வரையில், தனக்கு முன் வாழ்ந்த மனிதனின் சாதனைகளையும் சோதனைகளையும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற வரலாற்றுத் துடிப்பு இருக்கிற வரையில், தமிழ் இலக்கணக் கல்வி நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.

இலக்கணக் கல்வியில் இதுவரை மொழி அமைப்பை அறிந்து கொள்வதற்கே முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறோம். இன்னும் சில புதிய கேள்விகளைக் கேட்டு விடைகாண முயன்றால், இலக்கணம் பற்றிய பல தெளிவு பிறக்கும்.

இலக்கணம் ஏன் எழுதப்பட்டது? இலக்கண ஆசிரியனின் மொழி உணர்வு; சமூக உணர்வு என்ன? இலக்கண ஆசிரியன் கையாண்ட தரவுகள் எப்படிப்பட்டவை? அவனுக்குப் பிறமொழி தெரியுமா? அவன் அந்த மொழியைப் படிக்கவேண்டிய அவசியம் என்ன? என்று சமூகவியல் நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் விஞ்ஞான ரீதியிலான கேள்விகள் கேட்கப்பட வேண்டும்.

இலக்கணப் பதிப்பு வேலைகள் விஞ்ஞான ரீதியில் இன்னும் தொடங்கவில்லை; உரையாசிரியர்களின் உரை சரியா? தவறா? என்ற கேள்விகளைக்கேட்டுப் பதில் சொல்வதில்தான் பெரும் பகுதி முதலில் செலவழிக்கப்பட்டது. ஒவ்வொரு உரையாசிரியரும் எழுப்பிய புதிய கேள்விகள் என்ன? அவர்கள் கேள்விகளிலிலும் பதில்களிலிலும் புதைந்துள்ள உணர்வுகள் என்ன? போன்ற கேள்விகள் கேட்கப்பட வேண்டும். வரலாற்று உணர்வு ஏற்பட்டதும் உரை நூல்கள் மொழி வரலாற்றை அறிந்து கொள்ளவும் உரையாசிரியர்களின் தனி இலக்கணக் கோட்பாடுகளை ஆராயவும் பயன்படுத்தப்பட்டன. உரையாசிரியர்கள் எந்த நோக்கில் ஏன் உரை எழுதியுள்ளார்கள்? அவர்களுடைய சமூக உணர்வு மொழியுணர்வு என்ன? என்றெல்லாம் உரைகள் ஆராயப்படவேண்டும். இதனால் இலக்கண உரைக்கல்வியும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கும்; இருக்கவும் வேண்டும்.

## 1.5 மொழியியல் நோக்கில் தமிழ் இலக்கண ஆய்வு

இருபதாம் நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் போக்கைப் பார்த்தால் மொழியியல் வரலாற்றை ஒட்டிய தாக்கங்களைக் காண முடிகிறது. ஒப்பியல் - வரலாற்று முறை, வருணனை மொழியியல் முறை, மாற்றிலக்கணமுறை என்ற மூன்று பெரும் மொழியியல்

வளர்ச்சியை ஒட்டி, இலக்கண ஆராய்ச்சி வளர்ச்சி பெற்றிருக்கிறது. எனவே, இலக்கண ஆராய்ச்சியின் வரலாற்றை ஆராயும்போது இலக்கண ஆய்வாளனுக்குத் தெரிந்த மொழியியல் கோட்பாடு என்ன? என்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். அப்போது தான் அந்த ஆராய்ச்சியாளனுடைய புதிய வாதங்களும் கோட்பாடும் என்ன? அவன் கொண்ட மொழியியலின் தாக்கத்தால் அமைந்தவை என்ன? அவனுடைய திறமையால் அமைந்தவை எவை? என்று இனம் பிரித்துப் பார்க்க முடியும். வேறு வழியாகக் கூறினால், ஆய்வாளனின் இரவல் குரல் (மொழியியல் அடிப்படை) எது? சொந்தக் குரல் எது? என்று இனம் கண்டுகொள்ளவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஒப்பிலக்கண வரலாற்று முறை வளர்ந்தது மேலே சுட்டிக்காட்டப்பட்டது. அதனையொட்டி அயர்லாந்திலிருந்த தமிழகத்துக்குச் சமயப் பிரச்சாரத்துக்காக வந்த கால்டுவெல் (1819-1891) தென்னிந்தியாவில் பல மொழிகளைத் - தமிழ், மலையாளம், கன்னடம், தோடா, குடகு, தெலுங்கு போன்று பல மொழிகளை ஆராய்ந்து, அவைகளைத் திராவிட மொழிகள் என்று பெயர் கொடுத்து, ஒப்பிலக்கண ஆராய்ச்சியை 1856இல் **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்ற நூல் வெளியிட்டதன் மூலம் துவக்கிவைத்தார். இதுவே வரலாற்றுப் பார்வையையும், ஒப்பிலக்கணப் பார்வையையும் தமிழர்களுக்குத் தந்தது. இதனையொட்டி சுப்பிரமணிய சாஸ்திரி (1890-1978) **தமிழ் மொழி இலக்கணம்** (1930), **தமிழ் மொழி நூல்** (1938) போன்ற நூல்களை எழுதியதோடு, இலக்கண ஆராய்ச்சியிலும் நேரடியாக ஈடுபட்டு உழைத்தார் (1934, 1937).

தெலுங்கு, கன்னட மொழிகளைக் கற்று அறிந்த வேங்கடராசுலு ரெட்டியாரும் (1893-1964) தமிழ் இலக்கண ஆராய்ச்சியில் பல கட்டுரைகளை எழுதி வந்ததோடு **எழுத்திலக்கண வாராய்ச்சி** (1944) என்ற தனி நூலையும் வெளியிட்டார். தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் (1901 - 1981) **The Tamil Sounds** என்ற ஆராய்ச்சிக் கட்டுரைக்கு 1937-ல் **M.O.L.** பட்டம் பெற்றதோடு, இலக்கண ஆராய்ச்சியில் இறங்கி உழைத்தார். வரதராசனார் (1912-74) இந்தத் துறையில் ஓரளவு ஈடுபட்டு உழைத்திருக்கிறார். தேவநேயப்பாவாணர் இலக்கண நூல்களைப் பதிப்பித்ததோடு, வரலாற்று அடிப்படையில் பல சூத்திரங்களுக்கு விளக்கம் தந்துள்ளார்.

இவர்கள் மொழியியல் அறிவால் - ஒப்பிலக்கண வரலாற்று இலக்கண அறிவால் தமிழ் இலக்கண ஆசிரியர் கூறிய வடிவங்களை மேலும் பகுக்க முடியும் என்று காட்டினார்கள்; புதிய விளக்கம் தந்தார்கள். உதாரணமாக மியா என்பதை (ம் + இயா) என்று பகுத்துக் காட்டியும், வற்று என்ற சாரியையின் உண்மையான வடிவம் அற்று என்று கூறியும், சாரியை பொருள் உடையது என்று சுட்டியும் விளக்கினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களும் தமிழ் அறிஞர்களும் நன்னூலையே பெரிதும் போற்றிக் கற்றுவந்தார்கள். இருபதாம் நூற்றாண்டில் வரலாற்று ஒப்பிலக்கண முறை தோன்றியதும் தொல்காப்பியம் ஏற்றம் பெற்றது; சில புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டன.

தொல்காப்பியரே வடமொழி இலக்கண ஆய்வுமுறையை ஒப்பிட்டுக் காட்டிச் சென்றிருக்கிறார் என்ற உண்மை அனைவரும் அறிந்ததே. எழுத்ததிகாரப் பிறப்பியல் (102. 4-7)

**அகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே:**
**அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே**

என்ற வரிகள் மூலம் ஒற்றுமை - வேற்றுமை ஆராய்ச்சிக்கு (Comparative study) வழி வகுத்துக்காட்டிச் சென்றார். பிற மொழி இலக்கணக் கொள்கைகளோடு ஒப்பிட்டு ஆராய்வதைப் புற ஒப்புமுறை (External comparision) என்று குறிப்பிடலாம். இருபதாம் நூற்றாண்டில் சுப்பிரமணியசாஸ்திரி தமிழ் இலக்கணக் கோட்பாட்டின் வரலாறும் வடமொழியிலுள்ள இலக்கண நூல்களுக்குள்ள தொடர்பும் (*History of grammatical theories in Tamil in relation to the grammatical literature in Sanskrit)* என்ற நூலை (1934) வெளியிட்டார். உண்மையில் அந்த நூலில் எல்லா இலக்கண நூல்களும் வரலாற்று நிலையில் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளதால் அகஒப்புமைமுறையும் பின்பற்றப் பட்டுள்ளது. மீனாட்சிசுந்தரனார் (பிறநாட்டு முன்மாதிரிகள் தமிழ் இலக்கணத்தில்) (1974) என்ற நூலில் (*Foreign Models in Tamil grammar*) அந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்துள்ளார். அங்கு வடமொழியையும் ஆங்கிலத்தையும் ஓரளவே சேர்த்துள்ளார். முருகையன் பிறப்பியல் பற்றி (1973) ஒரு கட்டுரை, புற ஒப்புமை முறையில் எழுதியுள்ளார். சுப்பிரமணிய சாஸ்திரியாரின் சிலகருத்துகள் - வடமொழி - தமிழ்

ஒப்புமை கடனாளலால் ஏற்பட்டிருக்கலாம் என்பது பொருந்தாது என்பதை அகத்தியலிங்கம் & பாலசுப்பிரமணியம், தங்கள் முன்னுரையில் விரிவாக (1974 : xxxii - 1) விவாதித்துள்ளார்கள். கே. மீனாட்சி (1970, 1972a, 1972b, 1973) இந்தத் துறையில் பல கட்டுரைகள் எழுதியுள்ளதோடு, தொடர்ந்து உழைத்து வருகிறார்.

மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராய்வதும் ஒரு வகையில் புற ஒப்புமை ஆய்வே ஆகும்.

இன்னொரு ஒப்புமை முறைறையும் தமிழ் இலக்கணத்தில் காண முடிகிறது. ஒரு இலக்கணத்தை மற்றொரு தமிழ் இலக்கணத்தோடு ஒப்பிட்டு ஆராயும் அக ஒப்புமை முறை அது. இது தொல்காப்பிய - நன்னூல் ஆராய்ச்சியாக முதலில் மலர்ந்தது. இந்தத் துறையில் நன்னூல் உரையாசிரியர்களே முதலாசிரியர்களாக வழிகட்டியுள்ளார்கள். மயிலைநாதர்,

> எழுத்தெனப் படுப.........என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக்கொண்டார் என்க. அஃதே அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோ வெனின், அஃதே நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படும் என்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லல் ஆவதின்மையானும் முதலெழுத்தாம் தன்மை அவற்றிற்கு இன்மையானும் சார்பில் தோன்றுதலானும் இப்பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டும் மென்பது

என்று கூறுவதில் தொல்காப்பியத்தை ஒப்புநோக்கி விளக்கம் தந்துள்ளதைக் காணலாம். இப்படி அவர் ஒப்பிட்டுக் கூறிய இடங்கள் பல. சங்கரநமச்சிவாயரும்,

> ஒன்று இரண்டு பல என்பன வடசொல் வழக்கு; ஒன்றல்லன வெல்லாம் பல என்பது தமிழ் நடையாகலின் வடநூல் வழக்குப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் ஒரெழுத்தொரு மொழி (சூத்.45) என்றார்.

என்று விளக்கியுள்ளார்.

இங்குச் சங்கரநமச்சிவாயர் அக ஒப்புமையையும் புற ஒப்புமையையும் சேர்த்தே மேற்கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத் தகுந்தது. இந்த நூற்றாண்டில் சுப்பிரமணிய சாஸ்திரி (1934) புறஒப்புமையும்

அகஒப்புமையும் கலந்தும் வேங்கடராசுலு ரெட்டியார் (1944) அக ஒப்புமை மட்டும் செய்துள்ளார்கள். வெள்ளைவாரணன் தொல்காப்பிய-எழுத்ததிகார ஒற்றுமை வேற்றுமை ஆராய்ச்சியை 1941 இலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழக இதழில் தொடர்ந்து எழுதி வந்ததே தனி நூலாக (1962) வெளிவந்ததது.[7] இரண்டு நூல்களுக்கும் உள்ள ஒற்றுமைவேற்றுமையான சூத்திரங்களையும் சுட்டிக்காட்டிச் சூத்திரப் பொருளையும் விளக்கிக் காட்டியுள்ளார் அவர். சி. சுப்பிரமணியத்தின் *A critical Study of Tolkappiyam and Nannul* (1977) என்ற நூல் அக ஒப்புமை வகையைச் சார்ந்ததாயினும், அவருடைய விளக்கங்கள் வருணனை மொழியியல் வளர்ச்சியின் தாக்கத்தையும் புலப்படுத்துகின்றன. தொல்காப்பிய - நன்னூல் ஒப்புமை ஆராய்ச்சியும், இலக்கிய உலகில் **திருக்குறள் உரைவளம்** என்ற உரைத்தொகுப்பும் (தண்டபாணி தேசிகர், 1950) வெளி வந்ததும், இலக்கணத்திலும் உரையையும் சூத்திரங்களையும் தொகுக்கும் எண்ணம் எழுந்திருக்க வேண்டும். அபிரகாம் அருளப்பன் & சுப்பிரமணியன் (1963) ஆகியோர் முதலில் **தொல்காப்பிய சொல்லதிகார உரைக்கோவை** யினை வெளியிட்டார்கள். இதில் சொல்லதிகாரம் முதல் மூன்று இயல்களே தொகுக்கப்பட்டுள்ளன. அதே ஆண்டு இளவரசு **'இலக்கண வரலாறு'** வெளியிட்டு தமிழ் இலக்கணங்களின் புரவரலாற்றைச் சுருக்கமாக விளக்கியுள்ளார். ச.வே. சுப்பிரமணியன் **இலக்கணத்தொகை** என்ற பொதுத்தலைப்பில் **எழுத்து** (1967), சொல் (1971) ஆகிய நூல்களை முழுமையாகக் கிடைக்கும் நூல்களிலுள்ள சூத்திரங்களைத் தலைப்பு வாரியாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார். பின்னர் சுவாமிநாதம் (சண்முகம், 1975 அ) போன்ற நூல்களின் சூத்திரங்களையும் முழுமையாகக் கிடைக்காத அவிநயம் போன்ற பிற நூல்களிலிருந்தும் கிடைக்கும் சூத்திரங்களையும் ஆங்காங்கே சேர்த்தால் அந்த முயற்சி முழுமை அடையும். இலக்கணத் தொகை அக ஒப்புமை ஆய்வுக்கு ஒரு ஆதார நூலாக அமைந்துள்ளது.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் ஆ.சிவலிங்கனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு **தொல்காப்பிய உரைவளம்** வெளியிட்டுள்ளது.

---

7. சாமுவேல் பிள்ளை S. என்பார் தொல்காப்பிய - நன்னூல் என்ற ஒரு நூல் 1858 இல் வெளியிட்டுள்ளதாக அகத்தியலிங்கம் & சக்திவேல் வெளியிட்ட (*A Bibliography of Dravidian Linguistics*) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள் (பக்.227. Item 2625)

இந்த ஆராய்ச்சி முறையில் ஒற்றுமை வேற்றுமைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. மேலும் தனித் தனி இலக்கண நூல்களைப் பிற நூல்களுடன் ஒப்பிட்டு, நன்னூலை அடிப்படையாகக் கொண்டு விஜயவேணுகோபால் (1968) ஒரு நூல் எழுதியுள்ளார். சுவாமிநாதம் என்ற இலக்கண நூலின் முன்னுரையில், அந்த நூல் பிற இலக்கண நூல்களோடு ஒப்பிட்டு ஆராயப்பட்டதோடு அந்த ஆராய்ச்சியில் கையாள வேண்டிய பொது முறைகளும் விவாதிக்கப்பட்டுள்ளது. (சண்முகம், 1975 அ: xvi-xxix). இவை எல்லாவற்றையும் ஒப்பிலக்கண வரலாற்று மொழியியலின் தாக்கத்தால் ஏற்பட்டவையாகக் கருதலாம்.

மொழியியலின் அடுத்த வளர்ச்சிக் கட்டம் வருணனை (Descriptive) அல்லது கட்டமைப்பியல் (Structural) மொழியியல் வளர்ச்சியாகும். வட அமெரிக்காவில் இந்த நூற்றாண்டின் முப்பது நாற்பதுகளில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகப் புளூம் பீல்டு 'மொழி' (1933) என்ற நூலை வெளியிட்டார். ஐம்பது அறுபதுகளில் ஹாரிஸ், ஹாக்கெட் ஆகியோர் இந்த முறையைச் செம்மைப்படுத்துவதில் ஈடுபட்டனர். வருணனை முறை இந்தியாவில் ஐம்பது அறுபதுகளில் கோடைகாலப் பள்ளிகள் மூலம் பரவியது. இந்த நிலையில்தான் தமிழ் இலக்கண நூல்கள் வருணனை மொழியியல் வெளிச்சத்தில் பரிசோதிக்கப்பட்டன. இந்த முறையில் பல மாணவர்களை உருவாக்கியவர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களே (1901-80). எழுத்ததிகார ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் அவரிடம் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக நச்சினார்க்கினியர் எழுத்திலக்கணக் கோட்பாடு (சண்முகம், 1967), நன்னூலின் தற்கால மதிப்பீடு (விஜயவேணுகோபால், 1969) என்ற இரண்டு நூல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. வருணனை மொழியியல் பயிற்சி பெற்ற வேறு பலர் எழுத்திலக்கணத்தை வருணனை நோக்கில் விளக்கி நூல்கள் எழுதியுள்ளார்கள். முருகரத்தினம் (1973), இன்னாசி (1975) ஆண்டியப்பன் (1976), சி.சுப்பிரமணியன் (1977), கந்தசாமி (1977) ஆகியோரின் இலக்கண ஆராய்ச்சி நூல்களும் வருணனை மொழியியல் கோட்பாட்டில் எழுத்ததிகாரம் பற்றி எழுதப்பட்டவையே. முதலெழுத்து, சார்பெழுத்து, புணர்ச்சி, சாரியையின் சரியான வடிவம் முதலியன இந்த ஆராய்ச்சியில் விளக்கப்பட்டன. ஆனால் பல ஐயங்களும் உடன் எழுப்பப்பட்டுள்ளன.

வெளி உலகில் மொழியியலைப் பொறுத்தவரையில் அறுபதுகளில் மற்றொரு பெரிய புரட்சி ஏற்பட்டது. மேலே

கூறப்பட்டது. மாற்றிலக்கண மொழியில் என்பதே அது. அந்தப் புரட்சி தமிழிலும் நுழைந்தது. தென்னிந்தியாவில் மாற்றிலக்கணக் கோட்பாட்டைப் புகுத்தித் தொடரியல் ஆராய்ச்சியைத் தொடக்கி வைத்துப் பல மாணவர்களுக்கு அந்த ஆய்வுத் துறையில் வழிகாட்டித் தாமும் தொடர்ந்து ஆய்வு நடத்தும் பெருமை அகத்தியலிங்கம் (1929-) அவர்களுக்கே உரியது. இவர் இலக்கணத்துறையில் மறுவருணனையும் மறுவிளக்கமும் செய்வதோடு, புதிய இலக்கணமும் எழுத முழு மூச்சோடு உழைத்து வருகிறார். 1966இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வு மையம் நடத்திய தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் பற்றிய கருத்தரங்கில் மாற்றிலக்கணக் கோட்பாட்டு அடிப்படையில் தமிழ் இலக்கணத்தை - சிறப்பாகத் தொல்காப்பியக் கருத்துக்களை முதன் முதலில் விளக்கியவர் அவர் (அகத்தியலிங்கம் 1967). பின்னர் பலரும் மாற்றிலக்கணக் கோட்பாட்டில் தமிழ் இலக்கணத்தை ஆராயமுற்பட்டார்கள். இந்தப் பரவலான முயற்சி 1970இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்திய தொல்காப்பியக் கருத்தரங்கில் வெளிப்பட்டது. (அகத்தியலிங்கம் & முருகையன் 1972). தொல்காப்பிய மொழியியல் என்ற அந்த நூல் இலக்கண ஆய்வு வரலாற்றில் ஒரு மைல்கல். எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் பாலசுப்பிரமணியம் (1972) அந்தக் கருத்தரங்கில் படித்த கட்டுரையே (தொல்காப்பியரின் ஒலியனியல் கோட்பாடு என்பது) தொல்காப்பிய எழுத்ததிகாரம் முழுமையும் மாற்றிலக்கணக் கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த விதிமுறை ஒலியன் கோட்பாட்டை ஒட்டியது என்பதை உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் (வருணனை மொழியியல் கோட்பாட்டிற்கும் தொல்காப்பியத்துக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியது) விவரிக்கிறது. விஜயவேணுகோபால் (1970) தொல்காப்பியரின் புணர்ச்சிக் கோட்பாடு, விதிமுறை ஒலியனியல் கோட்பாட்டோடு ஒத்துப் போவதை ஒரு கட்டுரையில் சுட்டிக் காட்டியுள்ளார். இதைத் தொடர்ந்து இப்பொழுது மாற்றிலக்கணக் கோட்பாட்டு அடிப்படையில் பல கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. (விவரத்துக்கு, சண்முகம், 1998, பார்க்கவும்)

# 2. எழுத்ததிகார அமைப்பு

## 2.0 முன்னுரை

தமிழ் இலக்கண நூல்களுள் எழுத்ததிகாரத்தைச் சிறப்பாக ஆராய்வன தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய எட்டுமே. இவைகள் காட்டும் எழுத்ததிகாரக் கோட்பாடுகளே இங்கு ஆராய எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. முதலில் அவைகள் எப்படி எழுத்ததிகாரத்தைப் பாகுபடுத்தி விளக்குகின்றன? அந்தப் பாகுபாட்டின் பொருள் என்ன? என்ற இந்த இயல் விவரிக்கிறது.

## 2.1 எழுத்ததிகாரப்பாகுபாடு

### 2.1.1 தொல்காப்பியம்

தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை ஒன்பது இயல்களாக விவரிப்பதன் மூலன் ஏனைய இலக்கணங்களிலிருந்து தனித்து நிற்கிறது. ஆயினும், சொல்லதிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் கூட ஒன்பது ஒன்பது இயல்களாகப் பிரித்துப் பேசுவதால், ஒன்பது இயலாகப் பகுத்து விளக்குவது எழுத்ததிகார ஆராய்ச்சிக்கே உரிய சிறப்பு முறை என்று கொள்ளமுடியாது. எனவே, எழுத்ததிகாரத்தை அதன் கோட்பாடுகள் வெளிப்படுமுகமாக எப்படிப் பிரிக்கலாம்? என்று நாமே சிந்திக்க வேண்டியிருக்கிறது; பின்னுள்ள இலக்கணங்கள் காட்டும் வழியை ஓரளவு ஒட்டியும், மொழியியல் அறிவை ஒட்டியும் பிரித்துப்பார்ப்போம்.

தொல்காப்பிய எழுத்ததிகாரக் கடைசி ஆறு இயல்களையும் (புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல்) புணரியல் என்று பொதுமைப்படுத்தலாம். மூன்றாவது இயலான பிறப்பியலைத் தனி இயலாகக் கொள்ளலாம். ஆகவே நூன்மரபு, மொழிமரபு என்ற முதல் இரண்டு இயலுக்கும் எழுத்தியல் என்று பிற்கால இலக்கண மரபை ஒட்டிப் பெயரிடலாம். ஆயினும், பிற்கால இலக்கண நூல்கள் - குறிப்பாக நன்னூல்

கொண்டுள்ள எழுத்தியலுக்கும், தொல்காப்பியம் கொண்டதாகக் கூறும் எழுத்தியலுக்கும் வேறுபாடு உண்டு என்பது வலியுறுத்தப்பட வேண்டும். ஏனெனில், நன்னூலாரின் எழுத்தியலில் தொல்காப்பிய நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய மூன்றும் அடங்கியுள்ள தாகவே கொள்ளப்படுகிறது (உதாரணம்: சி. சுப்பிரமணியன், 1977:15). ஆனால் இது முழுவதும் பொருந்தாது. ஏனெனில், இங்கும் சில வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக, மொழிமரபில் கூறிய செய்திகள் நன்னூல் பதவியலில் விளக்கப்பட்டுள்ளன (தொல்.45 (மொழிமரபு) - (நன்.128 பதவியல்) இப்படி நுண்ணிய வேறுபாடுகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் நூன்மரபு, மொழிமரபு என்பனவற்றை எழுத்தியல் என்று பொதுமைப்படுத்தலாம். இரண்டுக்குமுள்ள வித்தியாசங்கள் ஏற்ற இடத்தில் விளக்கப்படும். எனவே, தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்ற மூன்று பெரும் பிரிவாக அமைந்துள்ளது என்று கொள்வது அவருடைய இலக்கணக் கோட்பாட்டை விளக்குவதாக அமையும்.

### 2.1.2 வீரசோழியமும் நேமிநாதமும்

வீரசோழியம் எழுத்ததிகாரத்தைச் சந்திப்படலம் என்று ஒரே இயலாக விவரிக்கிறது. ஆனால், சொல்லதிகாரம் ஆறு படலமாகவும், ஏனைய அதிகாரங்கள் ஒவ்வொரு படலமாகவும் விளக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒரு அதிகாரத்தை உள்பிரிவு இன்றிப் பேசுவது எழுத்ததிகாரத்துக்கே உரியமுறை என்று கூற முடியாவிட்டாலும், அதில் சிறப்பு எதுவும் இல்லாததால் எழுத்ததிகாரம் ஒரே இயலாக விவரிக்கப்பட்டுள்ளது என்று சொல்லலாம். இது இலக்கணத்தைத் தொகுத்துக் கூறும் முயற்சியின் விளைவு ஆக இருக்கலாம். (தொகுத்துக்கூறுவதுபற்றி விரிவாகப் போக்குகள் என்ற பதின்மூன்றாவது இயலில் விளக்கப்படும்).

நேமிநாதமும் எழுத்ததிகாரத்தை ஒரே இயலாகவே கூறியுள்ளது. ஆயினும், சொல்லதிகாரத்தை ஒன்பது இயல்களாகப் பேசுவதால் எழுத்ததிகாரத்தை உறுப்புகள் அற்ற முழுப் பிண்டமாகக் கருதினாரா என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. வரலாற்று நிலையில் நேமிநாத எழுத்ததிகாரத்தைப் பொறுத்தவரையில் வீரசோழியத்தையே பெரிதும் பின்பற்றியுள்ளது என்ற உண்மை புலப்பட்டுள்ளதும் (சண்முகம், 1969 அ: xvi), அந்தக் கருத்தையே வலியுறுத்துகிறது. பொதுவாகப் பிற்காலத்தில் இலக்கண ஆய்வில்

எழுத்திலக்கணம் சிறந்த ஒன்றாகக் கருதப்படவில்லை என்ற பொதுக் கருத்தையும் இது புலப்படுத்துகிறது? சிவஞானமுனிவர் முதற் சூத்திர விருத்தியில் 'அவர் (சேனாவரையர்) சொல்லதிகாரம்போலப் பெரும் பயன்படாமை கருதி, எழுத்திற்கு உரை செய்யாது விடுத்தமையின்' (பக்.28) என்று கூறுவதும் இந்த உண்மையை வலியுறுத்தும்.

இரண்டு நூல்களுமே அந்தப் படலத்துக்குள் எழுத்தியல், புணரியல் என்ற வகையில் எழுத்ததிகாரச் செய்திகளைப் பேசியுள்ளதாகக் கொள்ள வேண்டும். பிறப்பியல் செய்திகள் பொதுநிலையில் கூறப்பட்டாலும், அந்தச் செய்திகள் நன்னூலில் இருப்பது போல எழுத்தியலுக்குள் அடங்கியதாக உள்ளன. அதாவது பிறப்பியல் வேறு செய்திகளுக்கு இடையே அமைந்து காணப்படுவதால், தொல்காப்பியம் கூறுவதுபோல எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்று மூன்று பிரிவாகக் கொள்ளமுடியாது.

## 2.1.3 உதிரி முறைகள்

சில இடைக்கால இலக்கண நூல்களில் எழுத்ததிகாரத்தில் விளக்க வேண்டிய செய்திகளை எண்ணிக்கை அடிப்படையில் கூறும் முயற்சியைக் காண முடிகிறது. உதாரணமாக அவிநயம் ஏழு வகையாகவும், நன்னூல் பன்னிரண்டு வகையாகவும் எழுத்ததிகாரத்தைப் பிரிந்துள்ளன. உரையாசிரியர்கள் எட்டுவகையாலும் எட்டிறந்த (எட்டுக்கு மேற்பட்ட) பலவகையாலும் எழுத்ததிகாரத்தை மட்டும் அல்லாமல் சொல்லதிகாரத்தையும் விளக்கலாம் என்று கூறி, அந்த முறையை ஓரளவு பொருத்தியும் காட்டியுள்ளார்கள். இப்படி எண்ணிக்கை அடிப்படையில் ஒரு பொருளைப் பகுத்துக் கூறுவது இந்தியத் தத்துவத்தின் ஒரு பொதுப்பண்பாகக் கருதப் படவேண்டும் (சண்முகம், 1967 : 1). ஆயினும், இலக்கணக் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள அந்த எண்ணிக்கை அடிப்படையிலான முறைகளை எப்படித் தொகுத்துக் கூறமுடியும்? என்று பார்த்தால்தான், பிற நூல்களோடு ஒப்பிட்டு ஆராய வசதியாக இருக்கும். எனவே, அந்த முறைகளையும் நாம் தொகுத்துப் பொதுவான முறையை அறிந்து கொள்ள முயலுவோம்.

அவிநயனார் எழுத்ததிகாரத்தை ஏழுவகையாகக் கூறியுள்ளார்.

**எண்பெயர் முறைபிறப்பு அளவியல் வடிவு**
**புணர்தலோடு ஏழும் பொருந்திய வழக்கே**

(நேமிநாத உரை: மேற்கோள்)

இந்த ஏழு வகையையும் எழுத்தியல், புணரியல் என்ற இரண்டு பெரும் பிரிவில்தான் தொகுக்க முடியும். பிறப்பு என்பதைத் தனியாகக் கூறி இருந்தாலும், மேலே குறிப்பிட்டபடி எழுத்தியலின் பிற செய்தியோடு சேர்த்து இடையில் கூறியுள்ளதால் - அதாவது புணரியலுக்கு முன்னால் சொல்லாததால், எழுத்தியல் என்ற பெரும் பிரிவின் ஒரு உறுப்பாகக் கருதினார்; தனிப் பெரும் பிரிவாகக் கருதவில்லை என்றே கொள்ளவேண்டும்.

உரையாசிரியர்கள் குறிப்பிடும் எட்டு முறைகள்: 1) எழுத்து இனைத்து (எண்ணிக்கை), 2) பெயர், 3) முறை, 4) அளவு, 5) பிறப்பு, 6) புணர்ச்சி, 7) வடிவு, 8) தன்மை என்பன ஆகும். இதை அப்படியே பெரும் பிரிவாகப் பிரிக்கமுடியாது. தனித்தனி உறுப்புக்கள் என்ற முறையில் உள்ளனவே தவிர, அவைகளுக்கு இடையே பயன்பாட்டுத்திறன் (Function) பற்றிய உணர்வு ஒன்றும் வெளிப்படவில்லை. நச்சினார்க்கினியர்,

> இவற்றுள் தன்மையும் வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையான் ஆசிரியர் (தொல்காப்பியர்) ஈண்டு உரைத்திலர்

என்று கூறுவதால், நூலாசிரியர்கள் யாரும் இந்த முறையைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று தெரிகிறது.

எட்டிறந்த பலவகை என்பதே ஒரு முடிவற்ற எண்ணிக்கை-வரையறுக்க முடியாத வகை என்பதனைப் புலப்படுத்துகிறது.

எழுத்தை ஆராய்ந்த பிறகு அதை வேறொரு நோக்கில் பார்க்கும் முறையில் அமைந்துள்ளதால், புணரியலுக்கு ஓரளவு முக்கியத்துவம் காணப்படுகிறது.

உரையாசிரியர்கள் கருவி செய்கை என்ற இருவகை எழுத்ததிகாரப் பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார்கள். அவைகளை முறையே எழுத்தியல், புணரியல் என்று கொள்ள முடியும். மேலும், புணரியலே முக்கியம் என்பதையும் இவை உணர்த்துகின்றன. இந்தப் பாகுபாடு மாற்றிலக்கண முறையில் எழுத்ததிகார ஆராய்ச்சியாளரால் ஒத்துக் கொள்ளப்படுகிறது என்பது சுட்டிக்காட்டத்தகுந்தது.

அடிப்படையாக எண்ணிக்கை முறையைத் தழுவி எழுத்திலக்கணம் முழுமையும் ஓரளவு செம்மையாகக் கூறிய பெருமை நன்னூலுக்கு உண்டு. அதை ஒட்டி வேறு சில இலக்கணங்களும் எழுந்துள்ளன.

## 2.1.4 நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம்

நன்னூலார் எழுத்ததிகாரத்தை மட்டும் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்துக் கூறியதோடு, அதைத் தொகுத்துக் கூறுவதற்கும் இடமளித்துள்ளார்.

**எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை**
**முதலீ றிடைநிலை போலி என்றா**
**பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே** (57)

இங்கு எண் முதல் போலி இறுதியாகத் தொகுத்து ஒன்றாக்கிப் பின்னரே 'என்றா' என்ற எண்ணிடைச் சொல் கொடுத்துள்ளதால், முதல் பத்துவகையும் ஒரு பெரும் பிரிவுக்குள் அடங்குகிறது என்று கருதலாம். அதற்கு எழுத்தியல் என்று எல்லா உரையாசிரியர்களும் பெயரிட்டுள்ளார்கள். இறுதியில் உள்ள பதம், புணர்ப்பு என்ற இரண்டையும் ஒரு பெரும் பிரிவாகக் கொண்டு நன்னூலார் எழுத்து, பதம், புணர்ச்சி என்று மூன்று பெரும்பிரிவு கொண்டதாகக் கருதலாம். ஆனால் உரையாசிரியர்கள் பதம் என்பதைப் பதவியல் என்றும், புணர்ச்சி என்பதை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்றும் எழுத்ததிகாரத்தை மொத்தம் ஐந்து பெரும் பிரிவாகக் கொண்டுள்ளார்கள்.

**மயிலைநாதர்**

> இவ்வதிகாரத்துள் எனை வகை ஓத்தினான் எழுத்திலக்கணம் உணர்த்தினானோ எனின் ஐவகை ஓத்தினான் உணர்த்தினான் என்க......இவ்வோத்து, எண், பெயர் முதலான பத்தும் உணர்த் திற்றாகலான் எழுத்தியல் என்னும் பெயர்த்து

என்று கடவுள் வணக்கத்தின் உரை விளக்கத்திலேயே குறிப்பிடுவதால், இந்த உட்பிரிவுகளை அறிய முடிகிறது. சங்கரநமச்சிவாயரும் ஐந்து வகையாகப் பிரிப்பதைப் பற்றி அடுத்த சூத்திர உரையின் பொருள் விளக்கத்தில் குறிப்பிடுகிறார். நன்னூலுள் - குறிப்பாகச் சிறப்புப் பாயிரத்துள் இதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

சொல்லதிகாரத்தையும் நன்னூலார் இப்படிப் பொருள் முறையில் தொகுத்து எண்ணிக்கையைக் குறிப்பிடவில்லை. ஆயினும் பெயர், வினை, இடை, உரி என்று சொற்களை நான்கு வகைப்படுத்துவதை ஒட்டி நான்கு இயலும், எல்லாச் சொல்லிற்குமோ, ஒன்றுக்கு மேற்பட்ட வகைக்கோ பொருந்தும் இலக்கணத்தைத் தொகுத்துக் கூறப் பொதுவியல் என்ற ஒரு இயலும் ஆக ஐந்து

இயலாகச் சொல்லதிகாரத்தை அமைத்துள்ளதால், எழுத்ததிகாரத்தை ஐந்து இயலாகப் பிரிக்கலாம் என்று நன்னூலார் கருதி அமைத்தாரா? அல்லது பிற்காலத்தில் வந்தவர்கள் அமைத்தார்களா? என்று தெரியவில்லை. எப்படியாயினும் நாம் எழுத்ததிகாரத்தைப் பொறுத்த வரையில் எழுத்தியல், பதவியல், புணரியல் என்று மூன்று பெரும் பிரிவாகப் பிரிப்பது நன்னூலார்க்கும் ஒத்த கருத்தாகவே இருக்கும்; எழுத்திலக்கணக் கோட்பாட்டு ஆய்வுக்கும் உதவும்.

இலக்கணவிளக்கம் எழுத்ததிகாரம் கூறும் முறையில், நன்னூலார் கூறிய பன்னிரண்டு முறையையும், ஐந்து இயலாகப் பிரித்த முறையையும் அப்படியே பின்பற்றியுள்ளது. சிற்சில சூத்திரங்களை இடம் மாற்றிக் கூறியுள்ளது.[1] எனினும் எழுத்ததிகார அமைப்பு முறை நன்னூலை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது என்று சொல்லிவிடலாம்.

முத்துவீரியம் எழுத்ததிகாரப் பாகுபாடு ஒன்றையும் குறிப்பிட வில்லை. ஆனால், பதிப்பாசிரியரகள் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்ற மூன்று பிரிவாக வகுத்துக் காட்டியுள்ளார்கள். சொல், யாப்பு போன்ற பிற அதிகாரங்களும் மூன்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பேசப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுக்கு நூலில் அகச்சான்று எதுவும் கிடைக்கவில்லை. இருந்தாலும், அந்த மூன்று பெரும் பிரிவுகளையும் எழுத்ததிகாரத்துக்குப் பொருத்தமானதாகக் கொள்ளலாம். மொழியியல் என்பது நன்னூலாரின் பதவியல் என்பதையே சுட்டுகிறது. பதம் என்பது பிறமொழிச் சொல்லென்று கருதி, அதை மொழி என்றுகொண்டு அந்த இயலுக்குப் பெயரிட்டிருக்கிறார்.

சுவாமிநாதம் நன்னூலைப் போலவே எழுத்ததிகாரத்தைப் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்துள்ளது. ஆயினும்,

> . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
> **செப்பெழுத்துச் சொற்பொருள்யாப்பு அலங்காரம் எனும்ஐந்**
> **தமிழ்தின் இலக்கணவிரிவை ஒவ்வொருமூன்று இயலாய்**
> **அடக்கிமொழிகுவன்** . . . . . . . . . . . . . (13)

---

1 நன்னூலார் மெய்யீற்றுப்புணரியலில் கூறியதை (204) இலக்கண விளக்கத்தார் உயிரீற்றுப் புணரியலிலும் (64), பதவியலில் கூறியதைச் (390) சொல்லதிகாரம் பெயரியலிலும் (62,63) இடம் மாற்றிக்கூறியுள்ளார். இதுபற்றிப் புணரியல்களின் அமைப்பு முறை என்ற பதினோராவது இயலில் விளக்கப்படும்.

என்று கூறியுள்ளதால், ஒவ்வொரு அதிகாரத்தையும் மூன்று பெரும் பிரிவாகப் பிரித்துப் பேசுவது ஆசிரியர் அறிந்து திட்டமிட்டுச் செய்தது என்பதை உணரலாம். அந்த மூன்று பிரிவும் எழுத்ததிகாரத்தைப் பொறுத்தமட்டில் எழுத்ததிகார மரபு, பத மரபு, புணர்ச்சி மரபு என்று சிறப்புப்பெயர் பெற்றுள்ளன. மூலம் மட்டும் உள்ள கையெழுத்துப் பிரதியிலும் இந்தப் பிரிவுகள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, நன்னூலில் நாம் கொண்டதே போல எழுத்தியல், பதவியல், புணரியல் என்று மூன்று பிரிவாகச் சுவாமிநாதத்தில் எழுத்ததிகாரம் பேசப்படுவதாகக் கொள்வதில் எந்தவிதப் பிரச்சனையும் இல்லை.

## 2.1.5 தொன்னூல் விளக்கம்

தொன்னூல்விளக்கம் முத்துவீரியத்துக்கும் சுவாமிநாதத்துக்கும் காலத்தால் முந்தியது என்பது வரலாற்றுச் செய்தி (இளவரசு, 1963:243-44). அது எழுத்ததிகாரத்தை மூன்று பெரும் பிரிவாகவே பிரிந்திருந்தாலும், அதன் முறை ஏனைய இலக்கண நூல்களிலிருந்து மாறுபட்டது.

**தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்**
**சாற்றுளித் தோன்றும் எழுத்து இயல்பே**

என்பது எழுத்ததிகாரத்தின் முதல் சூத்திரம். இதன்படித் தோற்றம், வகுப்பு, விகாரம் என்று மூன்று பிரிவாக எழுத்ததிகாரம் பிரிக்கப் படுகிறது என்பது தெளிவு. ஆனால் இந்தப் பகுப்பினுடைய சிறப்பைச் யாரும் சரியாகப் புரிந்துகொள்ளாததால், பதிப்பாசிரியர்கள் (மேலே குறிப்பிட்ட சூத்திரத்தையும் பிறப்பு பற்றிய அடுத்த சூத்திரத்தையும் எழுத்தியல் என்றும் அடுத்துவரும் 18 சூத்திரங்களை (14-20) எழுத்தின் வகுப்பு என்றும் மீதியுள்ள சூத்திரங்களை (21-40) எழுத்தின் விகாரம் என்றும் தலைப்புக் கொடுத்துள்ளார்கள். முதல் இரண்டு சூத்திரத்தையும் எழுத்தியல் என்பதுதான் பிரச்சனைக்கு உரியது. முதல் சூத்திரத்தில் 'எழுத்தின் இயல்பு' என்ற தொடர் உள்ளதால் அதைத் தக்கவைத்துக் கொண்டு இரண்டாவது சூத்திரத்துக்குத் தோற்றம் என்ற தலைப்பு இடவேண்டும். ஆகவே எழுத்து இயல் தோற்றம், வகுப்பு, விகாரம் என்ற பிரிவுகளைக் கொண்டது. 1891 ஆம் ஆண்டு வெளிவந்த இரண்டாம் பதிப்பை ஒட்டியே, ச.வே. சுப்பிரமணியன் இலக்கணத் தொகையிலும் (1967:xvi), தொன்னூல்விளக்க ஆராய்ச்சிக் கட்டுரையிலும் (1974:209), தொன்னூல் விளக்கப் பதிப்பிலும் (1978 :74,75,78) தலைப்பு கொடுத்துள்ளார். இது முழுதும் பொருந்தாது. ஆனாலும் வகுப்பு,

விகாரம் என்ற பாகுபாட்டில் கருத்து மாறுபாடு இல்லை. அப்படியானால் 'தோற்றமும் வகுப்பும்.....' (எழுத்து இலக்கணத்தின் பாகுபாடு) என்றும், அடுத்த தோற்றம் என்பது பிறப்பியல் என்றும் கொள்ளலாம்; வகுப்பு என்பது எழுத்தியல் ஆகியவற்றோடு பெரிதும் ஒற்றுமை உடையது. விகாரம் என்பது புணரியல்தான். எனவே, வீரமாமுனிவர் எழுத்ததிகாரத்தைத் தோற்றம், வகுப்பு, விகாரம் என்று மூன்றாகப் பிரித்துக் கூறினாலும், அவை முறையே பிறப்பியல், எழுத்தியல், புணரியல் என்ற பிற இலக்கண நூல்களின் தலைப்புகளோடு ஒத்ததுதான்.

எனவே, தமிழ் இலக்கணங்களில் ஐந்து வகையாக எழுத்ததிகாரம் பிரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கீழ்க்கண்டபடி தொகுத்துச் சொல்லலாம்.

| | நூல்கள் | பிரிவின் தொகை | தலைப்புகள் |
|---|---|---|---|
| I | தொல்காப்பியம் | 3: | எழுத்தியல், பிறப்பியல், புணரியல் |
| II | வீரசோழியம்<br>நேமிநாதம் | 1: | எழுத்ததிகாரம் |
| III | அவிநயம் | 2: | எழுத்தியல், புணரியல் |
| IV | நன்னூல்<br>இலக்கண விளக்கம்<br>முத்துவீரியம்<br>சுவாமிநாதம் | 3: | எழுத்தியல், பதவியல், புணரியல் |
| V | தொன்னூல் விளக்கம் | 3: | பிறப்பியல், எழுத்தியல், புணரியல் |

## 2.2 பாகுபாட்டின் விளக்கம்

எழுத்தியல் என்று தொல்காப்பியர் கருதுவதற்கும் நன்னூலார் கருதுவதற்கும் உள்ள வேறுபாடு (முன்னது பிறப்பியலை நீக்கியது; பின்னது பிறப்பியலை உள்ளடக்கியது) முன்னரே குறிப்பிடப்பட்டது. இரண்டுக்கும் மட்டும் அல்லாமல், ஏனைய இலக்கண நூல்கள் எழுத்தியல் என்று குறிப்பிடுவதும், எழுத்துக்களின் பயனிலை வகையான பாகுபாடு (முதல் எழுத்து, சார்பெழுத்து போன்றது), எழுத்துகளின் வரன்முறை (Distribution) அல்லது வருமிடம், அவற்றின் சில பண்புகள் (மாத்திரை, உருவம் போன்றவை) ஆகியவைகளும்

பேசப்படுகின்றன. தொன்னூல்விளக்கம் எழுத்தின் வகை என்று பெயரிட்டதும் அதன் தன்மையை நன்கு தெளிவுறுத்துகிறது. இது தற்கால மொழியியலின் ஒலியனியலோடு (Phonemics) ஒப்புமை உடையது.

பிறப்பியல் என்பது எழுத்துகள் உச்சரிக்கப்படும் பொது முறையையும், ஒவ்வொரு எழுத்துகளும் உச்சரிக்கப்படும் முறையையும் விளக்குவது. இதில் கருத்து வேறுபாடே இல்லை. இது மொழியியலின் ஒலியியலோடு (Phonetics) ஒற்றுமை உடையது.

பதவியல் என்பது சொல்லைப் பகுக்கும் முறையையும், பதத்திற்கு எழுத்து அடிப்படையில் இலக்கணம் கூறும் முறையையும் (குறைந்த பட்ச எழுத்துகள், அதிக பட்ச எழுத்துகள் பற்றிய கருத்து), பகாப் பதங்களில் வரும் உறுப்புகளின் தொகையையும் விரியையும் விளக்குவது. பதத்தின் அல்லது சொல்லின் எழுத்து அடிப்படையை விளக்குவது (Word phonology). மேலும், நன்னூலார் வடமொழி - தமிழ்மொழி எழுத்தில் உள்ள வேற்றுமையையும் ஒற்றுமையையும் சுட்டிக்காட்டிவிட்டு, வடமொழியிலுள்ள சிறப்பு எழுத்துகள் தமிழில் திரிந்துவரும் விதம் பற்றியும் பேசுகிறார். இது இரண்டு மொழிகளுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், ஒரு மொழி கற்போர் எப்படித் தாய்மொழிச் செல்வாக்கால், அந்த மொழி ஒலிகளை மாற்றுவார்கள் என்றும் ஆராயும் வேற்று நிலை ஆய்வின் (Contrastive study) முன்னோடியாகக் கருதத்தகுந்தது. ஆயினும், எழுத்தின் அமைப்பை விளக்கும் போது வேற்றுநிலை ஆய்வை மேற்கொள்வது சரியில்லை என்று கருதி, இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் பதவியலில் இந்தச் செய்திகளை விவரிக்கவில்லை. வேறு சரியான இடம் தெரியாததால், சுவாமிநாதம் புணர்ச்சி மரபின் இறுதியில் இரண்டு சூத்திரங்களில் பேசுவதும் பொருத்தமாக இல்லை. அந்தச் செய்திகளை இலக்கணவிளக்கம் சொல்லதிகார உரையில் மட்டுமே குறிக்கிறது.

புணரியல் என்பது சொற்கள் இன்னொரு சொல்லோடு புணரும்போது அடையும் எழுத்து மாற்றங்களை விளக்குவது. இதிலும் அடிப்படைக் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. இது உருபொலியன் இயல் (Morphophonemics) என்ற மொழியியல் பகுதியோடு ஒற்றுமை உடையது.

## 2.3 வைப்பு முறை

### 2.3.1 பிறப்பியலின் இடம்

பிறப்பியலின் இடம் பற்றிய வேறுபாடு, இலக்கணம் எழுதுவதன் நோக்கத்தின் வேறுபாடாக அமைந்திருக்கிறது. தொன்னூல்விளக்கம் மட்டுமே பிறப்பியலை முதலில் வைக்க, ஏனைய இலக்கணங்கள் எல்லாம் நடுவில் வைத்தது ஏன்? என்ற கேள்வி எழும்புகிறது.

தொன்னூல்விளக்க ஆசிரியர் வெளிநாட்டினர்; ஏனைய ஆசிரியர்கள் அனைவருமே தமிழ்நாட்டினர் என்பது பொருள் உடையது போலத் தோன்றுகிறது.

புதிதாக ஒருமொழியை ஆராயப் புகுவோர் முதலில் அந்த மொழியில் வழங்கும் ஒலிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள முற்படு வார்கள். அந்த மொழியில் வழங்கும் நூற்றுக்கணக்கான சொற்களின் உச்சரிப்பைத் தெரிந்துகொண்ட பின்னரே அந்த ஒலிகளில், சொற்களை வேறுபடுத்தி அறியப் பயன்படக் கூடிய ஒலிகளை அதாவது ஒலியன்களை அறிந்து கொள்ள முற்படுவார்கள். எனவேதான் வீரமாமுனிவர் பிறப்பியலுக்கு முதலிடம் கொடுத்துள்ளார்.

வீரமாமுனிவர் இத்தாலிய நாட்டினர் என்பது தெரிந்ததே. அவர் பிறமொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு ஒலி பற்றிய அறிவின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கவேண்டும். ஆயினும், வீரமாமுனிவர் பொதுப் பிறப்பியலை மட்டுமே சுருக்கமாகக் கூறிவிட்டுத் தமிழ் எழுத்துகளின் உச்சரிப்பை விளக்காமல் விட்டுவிட்டதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை.

வீரமாமுனிவருடைய எழுத்ததிகார அமைப்புமுறை ஒலியியல், ஒலியனியல், உருபொலினியல் என்று அமைந்துள்ளது தற்கால வருணனை மொழியியலுக்குக் கட்டியங் கூறுவது போல உள்ளது.

தொல்காப்பியர் முதலான தமிழகப் புலவர் பெருமக்களான இலக்கணப் புலவர்கள் தங்கள் தாய்மொழிக்கு இலக்கணம் எழுதிய வர்கள். எனவே, அவர்கள் எழுத்தியலுக்கு முதலிடம் கொடுத்தது, தாய்மொழியை ஆராய்வோர் கையாளும் ஆராய்ச்சி முறையை ஒத்ததே. மொழிபற்றிய அறிவு நிறைய இருப்பதால் என்னென்ன ஒலிகள் வேற்றுநிலை வழக்கில் (ஒரே சூழலில் ஒரு ஒலி மட்டும் வேறுபட்டு, ஏனைய வேறுபடாது இருத்தல். கருப்பு, பருப்பு என்ற சொற்களில் க்,ப் என்ற ஒலி நீங்கலாக உள்ள ஒலிகள் அருப்பு என்ற ஒரே ஒலிச்

சூழலைப் பெற்றுள்ளது. இப்படிச் சொல்லின் எந்தப் பகுதியிலும் வருதல்). அமைந்து ஒலியன்களாக உள்ளன என்று அறிந்து கொள்ள முன்வருவார்கள். பின்னரே அந்த ஒலியன்களின் ஒலித்தன்மையை - உச்சரிப்பு முறையைச் சுட்டிக்காட்டுவார்கள். எழுத்தியலுக்குப் பிறகு பிறப்பியல் வைத்தது தாய்மொழியை அல்லது தனக்கு முன்னரே தெரிந்த மொழியை ஆராயும் முறையை ஒத்தது எனலாம்.

பைக் என்ற மொழியியல் அறிஞர் கருத்துப்படி மொழியில் ஒலியனியல் ஆய்வு என்பது அந்த மொழிக்கு எழுத்தாக்கம் - அதாவது எழுத்துகளை அமைப்பதே ஆகும். இதுவரை ஆராயப்படாத புதிய புதிய மொழிகளை ஆய்ந்து எழுத்தாக்கம் செய்துள்ளார் அவர். எனவே **ஒலியனியல்** என்ற நூலில் (Pike, 1947), முதலில் ஒலியின் தன்மையை அறிந்து கொள்ள வழிகாட்டிவிட்டு, ஒலியனியல் ஆராய்ச்சிமுறையைப் பற்றிப் பேசியுள்ளார். ஒலியியலுக்கும் ஒலியனியலுக்கும் உள்ள தொடர்புபற்றிய அவருடைய வாக்கியம் மிகவும் புகழ் வாய்ந்தது; பலராலும் அடிக்கடி மேற்கோளாகப் பயன்படுத்தப்படுவது.

> ஒலியியல் ஆதாரச் செய்திகளை உணவுப் பொருளாகத் தொகுத்து வைப்பது; ஒலியனியல் அவைகளை உணவாகச் சமைப்பது[2]

ஒலியியல் இல்லாவிட்டால் ஒலியனியல் இல்லை. அதாவது பிறப்பியலுக்குப் பிறகே எழுத்தியல் என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். எனவே, தொன்னூல்விளக்கக் கருத்து, பைக்கின் கருத்தோடு ஒற்றுமை உடையது. பிறப்பியலை முதலில் வீரமாமுனிவர் கூறியது புதிதாக ஒரு மொழியை ஆராய்வோர் மேற்கொள்ளும் முறை எனலாம்.

கிளீசன் (1961), ஹாக்கெட் (1967) என்ற இருவரும் தற்கால மொழியியல் பற்றிப் பாடநூல் எழுதியுள்ளார்கள். அவர்கள் இருவரும் ஒலியனியல் பற்றி விளக்கிவிட்டே ஒலியியல் பற்றி விளக்குகிறார்கள். தாய்மொழி மூலம் மொழியியலைக் கற்றுக்கொள்ளத் துவங்கும் போது ஒலியனியல் பற்றி அறிந்து கொண்ட பிறகு, ஒலியியல் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்பதே அவர்கள் கருத்து. மேலும், இது தாய்மொழியை ஆராயும் மொழியியலாளனுக்கு எளிதான முறை என்றும் கூறியிருக்கிறார்கள்.

> பேச்சு மொழி ஆராய்ச்சியின் முதற்படி ஒலியன்களை வரையறுப்பதுதான். தன்னுடைய தாய்மொழியை ஆராயும்

---

2 Phonetics gathers material and phonemics cooks it! Pike, 1947 : 57

> மொழியியலாளனுக்கு இது எளிது. அவனுக்கு ஒலியன்களைப் பயன்படுத்தும் பழக்கம் இருப்பதால் ஒலி பற்றிய உணர்வு அந்த ஆய்வுக்குத் துணை செய்யும்.[3]

என்ற கிளீசனின் கூற்று குறிப்பிடத்தக்கது. ஒலியனைப் பயன்படுத்தும் பழக்கம் என்பது ஒலிவேறுபாட்டின் மூலம் சொற்களை வேறுபடுத்திக் காட்டுவதைக் குறிக்கும். எனவே, தாய்மொழியை ஆராய்பவர்கள் எழுத்தியல், பிறப்பியல் என்ற முறையில் தங்கள் வேலையைத் தொடங்கலாம். ஆகவே, இந்தமுறையை மனத்தில் கொண்டே நமது இலக்கண ஆசிரியர்கள் - பலரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் எழுத்தியலை முதலில் வைத்திருக்க வேண்டும்.

தமிழ் இலக்கண நூல்கள் தாய்மொழியாளர்க்கு எழுதப்பட்ட இலக்கணம் என்பதைத் தமிழகத்து அறிஞர்களும் வலியுறுத்தியிருக் கிறார்கள். விஜயவேணுகோபால் (1970),

> தொல்காப்பியம் தாய் மொழி பற்றிய கல்வி கற்கத் துவங்கும் பலருக்காக எழுதப்பட்டதல்ல, மேல்படிப்பு மேற்கொள்வாருக் காக எழுதப்பட்ட நூல் என்றே கருதுகிறார்.[4]

---

3 'The fist step in studying any spoken language is to dertermine the phonemes. For a linguist studying his own native speech, this is relatively easy. He is accustomed to using the phonemic system. So his feeling about the sounds will often assist materially.
Gleason, 1961 : 14

4 A close study of this grammar (i.e. Tolka:ppiyam) will reveal that it is not intented for beginners but for those who want to pursue higher studies in Tamil.
Vijayavenugopal, 1970 : 32
அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று இது முக்கியமாக வடமொழி இலக்கணத்தை ஒட்டி எழுதப்பட்ட இலக்கணத்தைக் கற்றோர்க்காகவும் வடமொழி தெரிந்தோர்க்காவும் எழுதப்பட்ட இலக்கணம் என்றும் கூறியுள்ளார்.
There is every possibility of taking this as a grammar to those who know already about Tamil language and its basic features and perhaps to those who know other descriptions of Tamil language on the model of Sanskrit grammars including those who know Sanskrit.
தொல்காப்பியக் கால மொழிச்சூழல்(Language situation), சமூகப் பண்பாட்டுச் சூழல், இலக்கணம் எழுதப்பட்டதன் அடிப்படை நோக்கம் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிக்குப் பிறகே இவர் கூறும் கருத்தை நாம் பரிசீலித்துப் பார்க்க முடியும். (பார்க்க, சண்முகம், 1980அ)

சதாசிவம் (1966 : 112) உருபனை (Morpheme). அடிப்படை யாகக் கொள்ளாமல், சொல்லை (Word) அடிப்படையாகக் கொள்வது, தாய்மொழியாளருக்காக எழுதப்படும் இலக்கணத்தின் பண்பு என்று கூறுவது, தொல்காப்பியம் போன்ற நூல்கள் தாய்மொழியாளரை மனத்தில் கொண்டு எழுதப்பட்ட இலக்கணம் என்ற உண்மையை வலியுறுத்துகிறது.

> பிறப்பியல் நடுநாயமாக அமைந்து முன்னியல்களில் கூறப்பட்ட சொற்களின் ஒலியமைப்பையும் பின்னர் வரும் இயல்களில் கூறப்படும் இலக்கண அமைப்புக்களின் ஒலி அமைப்பு, ஒலிமாற்றங்கள் ஆகியவற்றையும் விளக்க உதவுகிறது.

என்பார் பாலசுப்பிரமணியன் (1972:60). இது தொல்காப்பியத்தை நியாயப்படுத்த எழுந்த சமாதானம்; அமைப்பியல் முறையில் கூறப் பட்டுள்ளது. பிறப்பியலில் தொல்காப்பியர் தனி எழுத்துகளின் உச்சரிப்பை மட்டுமே கூறியுள்ளார். **'தத்தம் திரிபே சிறிய என்ப'** (88) என்று உச்சரிப்பில் சின்ன வேறுபாடு என்று கூறியிருப்பதற்குக் காரணம், தொல்காப்பியர் எல்லா எழுத்துகளுக்கும் தனித்தனியே உச்சரிப்புமுறை கூறாமல் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளுக்குப் பிறப்புமுறை ஒன்றாகக் கூறியிருப்பதுதான். மேலும், மொழி மரபில் உள்ள,

> **மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்**
> **எழுத்தியல் திரியா என்மனார் புலவர்** (58)

என்ற சூத்திரத்துக்குத் தனி எழுத்தும், சொல்லில் வரும் எழுத்தும் அதன் தன்மையில் திரியாது என்று இளம்பூரணர் பொருள் கொள்கிறார். எனவே, பிறப்பியலை நடுவில் வைத்ததற்கு அமைப்பு நிலையில் தனிச் சிறப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

பிறப்பியலுக்கும் புணரியலுக்கும் உள்ள தொடர்புபற்றி வேங்கடராசுலு ரெட்டியார் (1944:88) மொழிமரபை அடுத்துப் புணரியலை வைக்காதது ஏன்? என்ற வினாவை எழுப்பி, விடை அளித்துள்ளார்.

> இவ்வியலை (பிறப்பியலை) மொழிமரபினை அடுத்து வைக்க எனில் மொழிமரபில் எழுத்துக்களின் இயல்பினையே கூறினார் ஆகலானும் புணர்ச்சியில் எழுத்துக்கள் திரிதற்கும் காரணம் அவ்வெழுத்துக்களின் பிறப்பிடத்து இயல்பே ஆகலானும் எழுத்துக்கள் திரிந்து புணரும் புணர் இலக்கணம் கூறுதன்

முன்னர் எழுத்துக்களின் பிறப்பு உணர்த்தல் வேண்டற்பாலது ஆகலானும் மொழிமரபினை அடுத்துப் பிறப்பியலை நிறுத்தி னார் . என்க.

என்று கூறுவது எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்ற வைப்பு முறையின் சிறப்பு விளக்கமாக உள்ளது. சி. சுப்பிரமணியன் (1977: 109) இந்தக் கருத்தை முதலில் ஆதரித்து, இறுதியில் புணர்ச்சியில் எல்லா மாற்றமும் ஓரினமாதல் என்ற வகையில் சேராது என்று கூறியுள்ளார்.

புணர்ச்சி பலவகைப்படும். ஓரினமாதல் (Assimilation), (மரம்+ குறிது=மரங்குறிது), எழுத்து தோன்றுதல் (வாழை+பழம்=வாழைப்பழம்), சாரியை தோன்றுதல் (ஒன்று+கூட்டம் =ஒன்றன்கூட்டம்) முழுவிகாரமாக வருதல் (ஒன்பது > தொண், தொள்) மரூஉ வடிவமாக மாறுதல் (ஆதன் + தந்தை > ஆந்தை), கெடுதல் (மரம் + வேர் > மரவேர்) எனப் பலவகைப்படும். ஆனால், தமிழ் இலக்கண நூல்களில் கூறப்பட்ட புணர்ச்சி மாற்றங்களில் ஓரினமாதல் என்ற மாற்றம் மட்டும் இல்லை என்பதும் சி. சுப்பிரமணியன் கருத்து.[5] எனவே, பிறப்பியலை ஒட்டி புணர்ச்சி மாற்றங்களையும் விளக்கமுடியாது.

மேலும், தொல்காப்பியப் புணரியலின் முதல் நான்கு சூத்திரங்கள், மொழிமரபின் தொழிபு என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். ஏனெனில் தனிச் சொல்லை உயிர் முதலாக உடையன, இறுதியாக உடையன, மெய்யை முதலாக உடையன, இறுதியாக உடையன என்று வகைப்படுத்தி, அந்த எழுத்தின் வரிவடிவு நிலைபற்றிப் பேசிவிட்ட பின்பே - அதாவது தனி மொழியைப் புணர்ச்சி நோக்கில்

---

5 When two morphemes are in contact with each other in the speech measure, one or both of the morphophonemes of the two morphemes get changed phonetically due to the environmental effect. Such kinds of morphophonemic changes of the morphemes which are in contact are dealt with here. Gleason says that one of the commonest types of morphophonemic change is assimilation. For this reason Pirappiyal (phonetics) is dealt with just before Punariyal (assimilation or fusion) as the morphophonemic changes in fusion are phonetic in nature. So after studying phonetics only one can understand easily the morphophonemic changes (phonetic) of the fusion of contiguous speech sounds, என்று ஆதரவாகக் கூறிவிட்டு அடுத்து 'But it is to be noted theat all the common morphophonemic changes are not assimilation என்று சொல்லியுள்ளார்.
S. Subramonian, 1977:109.

விளக்கிய பிறகே புணரியல் மாற்றம் பெறும் என்று பொதுவாக விளக்குகிறார். எனவே, தொல்காப்பியர் பிறப்பியலை நேரடியாகப் புணர்ச்சி மாற்றத்தை விளக்கப் பயன்படுத்தவில்லை என்று கூறலாம்.

மொழியில் குறைந்தபட்ச சூக்கும (Abstract) நியைிலிருந்து அதிகபட்ச சூக்குமத்திற்குச் செல்வதாய் இருந்தால், பிறப்பியலிலிருந்து தொடரியலுக்கும் அல்லது அதிக அளவிலிருந்து குறைந்த நிலைக்கும் வருவதாய் இருந்தால், தொடரியலிருந்து பிறப்பியலுக்கும் வரவேண்டும். எனவே, பிறப்பியலை நடுவில் வைத்ததற்கு மொழி அமைப்புமுறை ஒட்டிய தனிச்சிறப்பு எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது.

## 2.3.2 பதவியலின் இடம்

நன்னூலார்தான் பதவியலை எழுத்ததிகாரத்தின் உறுப்பாக முதன்முதலில் அமைத்தார். அது வடமொழியின் செல்வாக்கு என்று சங்கரநமச்சிவாயர் கருதுகிறார்.

> வடநூன் மேற்கோளாக ஒருமொழிகளை விதந்து பகாப்பதம், பகுபதம் எனக் காரணங் கூறித் தாமே விதந்து அவற்றை நல்விருந்தென நாவலர் பயில **'எழுத்தே தனித்தும்'** என்னும் சூத்திரம் (137) ஈறாகப் பகாப்பதம், பகுபதமெனப் பலகாற் கூறுதல் தற்குறிவழக்கம் மிக எடுத்துரைத்தல் என்னும் உத்தி. (நன். 137 ஆம் உரை)

என்று கூறியுள்ளார். சிவஞான முனிவர் போன்ற உரையாசிரியர் களுக்கும் இந்தக் கருத்து உடன்பாடே. இது வரலாற்று நிலைப் பட்ட விளக்கம். ஆனால், நாம் முக்கியமாகக் கேட்கவேண்டியது எழுத்ததிகார அமைப்புக்கு இந்த இயல் தேவையானதா? அல்லது சுமை உடையதா? என்பதே. இதற்கு விடை, அவசிமானது என்று சுருக்கமாகக் கூறலாம். அது எப்படி என்று பார்ப்போம்.

தொல்காப்பியத்தில் நேரடியாக இந்த இயல் இல்லாவிட்டாலும், இதன் சில கருத்துகள் - சிறப்பாகச் சொல்லை எழுத்து எண்ணிக்கை அடிப்படையில் பகுத்துக் கூறுவது மொழிமரபில் காணப்படுகிறது. மேலும், தொல்காப்பியர் மொழிமரபில் சொல்லை அடிப்படையாகக் கொண்டே சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகள், இறுதியில் வரும் எழுத்துகள் என்று எழுத்துநோக்கில் சொல்லுக்கு வரம்பு கட்டியதன்

மூலமே சொல்லை விளக்கியுள்ளார். அதாவது இதன்மூலம் தனிச்சொல்லுக்கே - ஒரு உருபனை உடைய சொல்லுக்கே (Monomorphemic word) மொழி மரபில் மறைமுகமாக இடமளித்துள்ளார். பெயரும் வேற்றுமையும் சேர்ந்து ஒரு சொல்லாக வரும் என்று தொல்காப்பியர் உணர்ந்து பயன்படுத்தியிருந்தும், அதைப் பொதுமைப்படுத்திப் பகுக்கக் கூடிய சொல்லைப் பகுபதம் என்றும் பகுக்கமுடியாத சொற்களைப் பகாப்பதம் என்று கோட்பாட்டு நிலையில் பேசவில்லை. அதாவது சொல்லை ஒரு உருபனை உடைய சொல், ஒன்றுக்கு மேற்பட்ட உருபனை உடைய சொல் என்று பொது நிலையில் பகுக்கவில்லை. ஆனால், புணரியல்களில் அந்தக் கோட்பாட்டை மனத்தில் கொண்டு உருபியல் என்ற தனி இயலே வைத்துள்ளார். எனவே, புணரியல் என்பது தனி நிலையில் எழுத்துமாற்றத்தை விவரிப்பது இல்லை; சொல்லினுடைய எழுத்து - சொல்லெழுத்து (Spelling) கொண்டிருக்கிற எழுத்து மாற்றத்தைப் பேசுவது; அதுவும் இரண்டு தனிச்சொல்லும் (பதப்புணர்ச்சி), ஒரு தனிச்சொல்லும், உருபும் (உருபு புணர்ச்சி அல்லது விகுதிப்புணர்ச்சி) சேரும்போது ஏற்படும் மாற்றம். ஆதலால் பகுபதம், பகாப்பதம் என்று புணரியலுக்கு முன்னால் பொதுவாகப் பிரித்துக்கொள்வது அவசியமானதே. அதனால்தான் நன்னூலார் பதவியலை எழுத்ததிகாரத்தின் பகுதியாகச் சேர்த்துக்கொண்டார்.

மேலும், புணர்ச்சியை விளக்குவதற்கு ஒரு சொல்லுக்கு உரிய பல வடிவங்களைத் தொகுத்து, ஒரு பொது வடிவம் (Common form) என்று எடுத்து, அதை நிலைமொழியாகவும் வருமொழியாகவும் கொள்ளமுடியும். இது பற்றிப் பதவியல் என்ற இயலில் விளக்கப்படும். இங்கே நிலைமொழி வருமொழிகளைத் தொகுத்து, உருபன் தொகையை (Inventory of morphemes) நன்னூலார் பேசுவது புணர்ச்சி விதி கூறுவதற்கு முன்னர் அடிப்படை வடிவம் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பதை மறைமுகமாகக் கூறியுள்ளார் என்றே கொள்ளலாம். ஆகவே, புணர்ச்சி விதி கூறுவதற்கு முன் சொல்லைப் பகுத்து (பகுப்பு-Segmentation), மாற்று வடிவங்களை வகுத்து (வகுப்பு-Grouping the alternants), அடிப்படை வடிவம் (Base form) கண்டு, அவற்றைத் தொகுத்துக் (Inventory of morphemes) கூறும் வேலைகள் செய்யப்பட வேண்டும். இவைகளில் நன்னூலில் பகுப்பதும் தொகுப்பதும் மட்டுமே விளக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும், அவை, மொழி ஆராய்ச்சியில் வளர்ச்சிப் பாதையை நோக்கியவையே. ஆகவே பதவியலை எழுத்ததிகாரத்தின் உறுப்பாகக் கொண்டது ஏற்றுக் கொள்ளத்தகுந்த புதுமையே.

வடமொழி இலக்கணத்தைப் படித்ததால் பெற்ற இலக்கணத் தெளிவு-வடமொழிச்சொல் தமிழில் அடையும் எழுத்து மாற்றங்களையும் பேசும்படி நன்னூலாரைச் செய்துவிட்டது போலும். வருணனை மொழி விளக்கத்தில் இந்தச் செய்தி தொடர்பற்றது போல உள்ளது. ஒருக்கால் இலக்கணம் விதிமுறையாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பாக-மொழியின் வழக்குகளை அது தமிழ் மொழி பற்றியதாயினும் சரி; பிறமொழிச் சொற்களைப் பற்றியதாக யினும் சரி - எப்படி இருக்கவேண்டும் என்று வரையறுக்கும் கோட்பாட்டின் எதிரொலியாக அமைந்து விட்டது. அதனால்தான் தமிழாக்க விதிகளைப் பதவியலில் பவணந்தி பேசிவிட்டார். ஆயினும், அதை எழுத்ததிகாரத்தின் பகுதியாகக் கொள்ளமுடியாது. இந்த உண்மையை இலக்கணவிளக்கமும் சுவாமிநாதமும் பதவியலில் தமிழாக்க விதிகளை விவரிக்காமல் விட்டதன்மூலம் வலியுறுத்துகின்றன.

# 3. பிறப்பியல்

## 3.0 முன்னுரை

பிறப்பியல் என்பது, பேச்சு உறுப்புகளாகச் செயல்படும் உடல் உறுப்புகள் பேச்சொலி உண்டாகும்போது தொழில்படும் விதத்தை விளக்குவது. எனவே, தமிழ் இலக்கண நூல்கள் கூறும் பிறப்பியல், தமிழ் மக்களின் மானிட உடல் உறுப்பு (Anatomy) பற்றிய அறிவையும் வெளிப்படுத்துகிறது.

பிறப்பியல் இன்றைய ஒலியியலோடு (Phonetics) - அதிலும் சிறப்பாக உச்சரிப்பு ஒலியியலோடு (Articulatory phonetics) முழுத் தொடர்பு உடையது.

எல்லாத் தமிழ் இலக்கண நூல்களும் பேச்சொலி உண்டாகும் முறையைப் பற்றி ஓரளவாவது பொது நிலையில் - பொது ஒலியியலை விவரிக்கின்றன. இதனோடு சில இலக்கண நூல்களே (தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம்) தமிழ் ஒலிகளின் உச்சரிப்பையும் பேசுகின்றன.

தமிழ் இலக்கணநூல்கள் கூறும் பிறப்பியலை மொழியியல் நோக்கில் - குறிப்பாக ஒலியியல் நோக்கில் ஆராய்ந்து, முருகையன் (1972, 1974) எழுதிய கட்டுரைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவை. அவைகளைத் தழுவி இலக்கண ஆசிரியர்கள் பேச்சு உறுப்புகள் பற்றி விளக்குவதில் உள்ள மாறுபாடு பற்றிய விளக்கமும் புதிதாகச் சார்பெழுத்துகளின் ஒலிமதிப்பை வரையறுக்கும் முயற்சியும் மட்டுமே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.1 பேச்சுறுப்புகள்

எல்லா இலக்கணநூல்களும் எட்டுவகைப் பேச்சு உறுப்புகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பேசுவதோடு, காற்று தோன்றும் இடமாக ஒரு உறுப்பையும் அவை கூறியுள்ளன. ஆயினும், நுரையீரல் தவிர ஏனைய இடங்கள் பேச்சொலி உண்டாக்கப் பயன்படுவதில்லை.

காற்று தோன்றும் இடம்பற்றித் தொல்காப்பியர் 'உந்தி முதலா முந்துவளி தோன்றி' (83.1) என்று குறிப்பிடுகிறார். உந்தி என்பதைக் கொப்பூழ் என்று உரையாசிரியர்கள் விளக்கியுள்ளார்கள். ஆனால், இன்று உதரவிதானம் (Diaphragm) என்று கொள்வதே பொருத்தமாகக் கருதப்படுகிறது. அதனால் உந்தி என்பதைக் காரணப் பெயராகக்கொள்ளலாம் என்று விளக்கியுள்ளார் முருகையன் (1972:5).

> வயிற்று அறையின் மேற்பகுதியாக அமைந்து மேலும்
> கீழும் உந்துவதால் உந்தி.

உந்தி மேலும் கீழுமாக மாறிமாறி இயங்குவதால் நுரையீரல்கள் விரிந்து சுருங்கி மூச்சுக்காற்று உள்ளும் புறமும் செல்லும் தொழில் தொடர்ந்து நடைபெறுகிறது. எனவேதான் காற்றின் ஓட்டத்துக்குக் குறிப்பாகப் பேச்சொலிக்குக் காரணமாக உந்தி அமைந்துள்ளது என்று கருதப்படுகிறது.

> **உந்தியில் தோன்றும் உதான வளி**

என்று நேமிநாதமும்,

> **உயிர்உழப்பு உதானனின் நாதம்**

என்று இலக்கணவிளக்கமும் சொல்கின்றன.

பேச்சொலி உற்பத்தியில் நேரடியாகச் செயல்படும் எட்டு உறுப்புகளில் தலை (சிரம், உச்சி என்று சில நூல்கள் கூறும். அப்படி வேறு சொல்லால் கூறப்படுவது அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது), மிடறு (கண்டம்), நெஞ்சு (உரம்) என்ற மூன்றை ஒரு பிரிவாகவும், நாக்கு, அண்ணம், மூக்கு (நாசி), பல் (எயிறு), இதழ் என்ற ஐந்தை மற்றொரு பிரிவாகவும் தொல்காப்பியமும் நேமிநாதமும் பேசுகின்றன. மூக்கை முதல் பிரிவில் சேர்த்து, அதாவது முதல் பிரிவிலும் இரண்டாவது பிரிவிலும், நாலு நாலு உறுப்புகளாக மீதியுள்ள இலக்கண நூல்களும் சொல்லியுள்ளன. பேச்சு உறுப்புகளின் சரியான விளக்கமும் மூக்கை இரண்டாம் பிரிவில் கூறிய காரணமும் சிறப்பாக அறியத்தக்கவை.

உரையாசிரியர்கள் இந்த உறுப்புகள் பேச்சொலி உண்டாகும் போது எப்படிச் செயல்படுகின்றன? எப்படி உதவுகின்றன? என்று விளக்கவில்லை; என்றாலும் அவற்றை விஞ்ஞானரீதியில் இனம் கண்டு கொள்வதில் சிக்கல் அதிகம் இல்லை.

நெஞ்சு என்பது நுரையீரல்களையும், மிடறு என்பது தொண்டையிலுள்ள குரல்வளை மடல்களையும் (Vocal folds or Vocal chords) - குறிப்பாக அவற்றிற்கு இடைப்பட்ட குரல்வளையையும் (Glottis) குறிப்பதாகப் பலரும் ஒத்துக்கொள்கிறார்கள். ஏனையவற்றில் தலை தவிர மீதியுள்ள உறுப்புகள் வெளிப்படையாகத் தெரிந்தவையே. தலை என்பது எதைக் குறிக்கிறது என்பது பெரிய மயக்கமாகவே - புதிராகவே இருந்து வந்திருக்கிறது.[1] இந்த நிலையில் ஆபர் கிரோம்பி எழுதிய பொது ஒலியியல் என்ற ஆங்கில நூலில் விவரித்த முறை, தொல்காப்பியத்துக்கு விளக்கம் போல அமைந்துள்ளதை முருகையன் (1972) முதன் முதலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

ஆபர்கிரோம்பி மனித உடலில் பாதிக்குமேல் வயிற்று அடியிலிருந்து தலைவரை பேச்சொலி உண்டாக்கத் தேவைப்படுகிறது என்று கூறி, அந்த உறுப்புகளை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். அந்த மூன்று வகை உறுப்புகளும் மூன்று வகை அமைப்புகளாக அமைந்து ஒத்துழைக்கின்றன: ஒருவகை உறுப்பு வயிற்றுக்கு மேல் பாகத்தில் உள்ளது; இன்னொன்று மிடற்றில் (தொண்டை) உள்ளது; மற்றொன்று தலையில் இருக்கிறது. இவைகள் செயல்படும் முறையை உயிர்க்கும் முறை, குரல் எழுப்பும் முறை, ஒலி எழுப்பும் முறை என்று சொல்லலாம்.[2]

இங்குத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள்போலவே ஆபர்கிரோம்பி நெஞ்சு, மிடறு, தலை என்று மூன்று உறுப்புகளைக் குறித்துள்ளார். மேலும் அவர் ஒலிப்பு முறையில் மூக்கு, இதழ், வாய் அதில் உள்ள பல், நாக்கு ஆகியனவும் அடங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.[3]

---

1 The further mention of 'chest' and 'head' as resonators, however, is probably taken, over from the subjective terminology used in India, as in the west, for the description of various voice registers.
Allen, 1953:24

2 Mor than half of the human body, from the head to the abdomen is needed for the production of spoken language. There are brought into co-operation, for this purpose : one group lies in the trunk, one in the throat and one in the head and they are usually known respectively as the respiratory system, the phonatory system and the articulatory system.
Abercrombie, 1967:21.

3 The Articulatory system consists of the nose, the lips and the mouth and its contents including especially the teeth and the tongue
Ibid.

எனவே, ஆபர்கிரோம்பி தலை என்று குறிப்பிடுவது வாயறையையும் மூக்கறையையும் என்று தெளிவாகிறது. இதனையொட்டியே தமிழ் இலக்கண நூல்களில் - குறிப்பாகத் தொல்காப்பியத்தில் தலை என்று குறிப்பிடப்பட்டிருப்பது வாயறையும் மூக்கறையும்சேர்ந்த பகுதி - அதாவது தொண்டைக்கு மேலுள்ள பகுதி என்று முருகையன் (1972:15) விளக்கியுள்ளார். தொண்டைக்கு மேலுள்ள எல்லாப் பகுதியையும் தலை என்று குறிப்பிடுவது இலக்கியத்தில் காணப்படுகிறது.

**தாளை வணங்காத் தலை** (குறள் 9.2)

**தலையே நீ வணங்காய்** (அப்பர் தேவாரம் 82:1)

ஆனால், தலையை 'உச்சி' என்று நன்னூல் முதலிய இலக்கண நூல்கள் குறிப்பிடும்போது தலை என்பதன் சிறப்பு மறைந்துவிடுகிறது. தலை என்பதற்கு உச்சி என்ற பொருளும் பழமை உடையது தான் (முயல்வாருள் எல்லாம் தலை - குறள் 47.2) என்றாலும், பிறப்பியலுக்குத் தலை என்பதே பொருத்தமாக அமைந்துள்ளது.

முருகையன் ஒலியுறுப்புகள் செயல்படும் விதத்தை ஒட்டி நான்கு விதமாகப் பிரித்துக் காட்டியுள்ளார் (1972:15)

1. ஒலிகளை உண்டாக்குவதற்கு அவசியமான காற்றறைகள் (Air chambers) - நெஞ்சு, தொண்டை, வாய்.
2. மூச்சோட்டத்தில் மாற்றங்களை விளைவித்து ஒலிகளை உண்டாக்கும் காற்றறைகள் (Air cavity) - தொண்டை, வாய்.
3. முன்பே ஓரிடத்தில் உண்டான ஒலியை மாற்றியமைக்கும். காற்றறைகள் (ஒலியூக்கி = Resonators) - வாய், மூக்கறை
4. காற்றறையின் வழியே செல்லும் காற்றில் மாற்றங்களை விளைவிக்கும் ஒலியெழுப்பிகள் (Articulators) - மூக்கு, இதழ், நா.

இங்கு வாயறையும் மூக்கறையும் இரண்டு விதமாகச் செயல் படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். தொல்காப்பியர் தலை என்றது வாயறையையும் மூக்கறையையும் குறிக்கிறது என்பதும், அங்கு மூக்கறை ஒலியூக்கியாகக் கருதப்பட வேண்டும் என்பதும் உணரத்தக்கது.

---

இந்த மேற்கோளைச் சுட்டிக்காட்டிய டாக்டர் க. முருகையனுக்கு நன்றி. மேலும் அவரோடு பிறப்பியலைப் பற்றி விவாதித்தது எனக்கு நல்ல தெளிவைத் தந்தது.

தொல்காப்பியர் மூக்கை விதந்து சொல்லும்போது இதழ், நா முதலிய ஒலியெழுப்பிகளோடு சொல்லியிருப்பதால், அது ஒலியெழுப்பி என்று கருதப்படவேண்டும்.

வீரசோழியம், நன்னூல், இலக்கணவிளக்கம் முதலியன மூக்கை முதல் பிரிவில் கூறியிருப்பதால், தலை வாயறையைமட்டும் குறிப்பதாக அமைந்து விடுகிறது. அதனால் மூக்கு ஒலியெழுப்பியாகச் செயல்படுவது சுட்டப்படாமல் போய்விடுகிறது.

வீரசோழியம் அண்ணம், பல், இதழ், நாக்கு என்று நான்கு வகை ஒலியெழுப்பியையும் இரண்டாகப் பிரித்துக் கூறியுள்ளது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
**பந்த மலிகண் டமுமூக்கும் உற்றண்ணம் பல்லுடனே**
**முந்து மிதழ்நா மொழியுறுப் பாகும். . . . .**
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . (6.2-3)

இங்கு, அண்ணத்தையும் பல்லையும் ஒரு பிரிவாகவும், இதழையும் நாக்கையும் மற்றொரு பிரிவாகவும் கொள்ளவேண்டும் என்ற கருத்தால், 'உடனே' என்ற இடைச்சொல்லைப் பயன்படுத்திப் பிரித்துக் காட்டியுள்ளார். வடமொழி இலக்கண நூல்களிலும், இன்றைய ஒலியியலிலும் இப்படிப்பட்ட பிரிவு காணப்படுகிறது. வடமொழியாளர்கள் ஸ்தானம், கரணம் என்று இரண்டாகப் பிரித்து, ஸ்தானம் - இடத்தையும் (பல், அண்ணம்), கரணம் - செயல்படும் உறுப்பையும் (நாக்கு, இதழ்) குறிப்பிடுவார்கள்.4 ஒலியியலாரும் பல், அண்ணம் இரண்டையும் ஒலியெழுப்பும் இடம் (Point of articulation) என்றும், இதழ், நாக்கு இரண்டையும் இயங்கு உறுப்பு (Active articulator) அல்லது ஒலியெழுப்பி (Articulator) என்றும் விளக்குகிறார்கள். எனவே, வீரசோழியம் இரண்டாகப் பிரிப்பது வடமொழியின் செல்வாக்கு என்று கருதலாம். இந்த வேறுபாடு போற்றி ஏற்றுக்கொள்ளத்தகுந்த ஒன்றே. எனினும் பின்வந்த இலக்கண நூல்கள் பல், அண்ணம், இதழ், நாக்கு ஆகிய நான்கையும் சேர்த்தே கூறியுள்ளன. (நன். 74.3, இ.வி. 9.2, சுவாமி. 16.2 பார்க்க).

---

4 'The stha:na is that which is approached; karana that which approaches' Atharvapra:tisa:khya. இதைக் குறிப்பிட்டு ஆலன், பைக்கின் ஒலியெழுப்பும் இடம் ஒலியெழுப்பி என்ற பிரிவோடு ஒத்தது என்றும் குறிப்பிட்டுருக்கிறார்.
Allen, 1953 : 17.

பேச்சு உறுப்புகள் செயல்படும் விதத்தை விளக்குவதில் - அதாவது ஒலிகளுக்குரிய சிறப்பு உறுப்புகளைக் குறிப்பதில் இலக்கண நூல்களிடையே வித்தியாசம் காணப்படுகிறது.

தொல்காப்பியர் உயிரொலிகளை எல்லாம் '**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்**' (84.3) என்றும், இடையினத்தில் யகரத்தை மட்டும் '**மிடற்றெழு வளியிசை கண்ணுற் றடைய**' (99.2-3) என்றும் வருணித்துள்ளார். இது ஒலிப்புடைய (Voiced) ஒலியைக் குறிப்ப தாகக் கொள்ளப்படுகிறது. ஏனைய இடையின ஒலிகளும் ஒலிப் புடைய ஒலிகள் ஆதலால், எல்லா இடையினத்தையும் சேர்த்து நன்னூல் 'ஆவி இடைமை இடமிட றாகும்' (75.2) என்று குறிப் பிட்டுள்ளதும் ஏற்றுக்கொள்ளத்தகுந்ததே. இதைப் பின்வந்த இலக்கண ஆசிரியர்களும் ஏற்றுக்கொண்டுவிட்டனர். ஆயினும், தொல்காப்பியர் கூறிய முறைக்கும், ஏனையோர் கூறிய முறைக்கும் பெரிய வேறுபாடு உள்ளது. பிறர் எல்லோரும் உயிருக்கும், இடையினத்துக்கும் 'இடம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். தொல்காப்பியர் மிடற்றில் மாற்றம் அடைகிறது என்றே கூறுகிறார். இந்த வேறுபாடு, பிற ஒலிகளை விவரிக்கும் போது இன்னும் பளிச்சென்று புலப்பட்டு விடுகிறது.

தொல்காப்பியர் வல்லின ஒலி ஒன்றையும் அதன் இனமான மெல்லொலி ஒன்றையும் சேர்த்தே பிறப்பிடம் (ஒலியெழுப்பியும் ஒலியெழுப்பும் இடமும்) கூறியுள்ளார்.

**ககார ஙகாரம் முதல்நா அண்ணம்** (89)

**சகார ஞகாரம் இடைநா அண்ணம்** (90)

ஆயினும், இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை மிக நுட்பமாகத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார் (முருகையன், 1972:29)

**மெல்லெழுத் தாறும் பிறப்பின் ஆக்கம்**
**சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்**
**மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.** (10)

இங்கு மேலே சொன்ன இடத்தில் (சொல்லிய பள்ளி) பிறக்கும்; ஆனாலும், மெல்லினம் அதிகப்படியான ஒரு மாற்றம் பெறுகிறது என்று தெளிவாகக் கூறியுள்ளார். மெல்லினம் அதிகப்படியாக மூக்கறையில் பலம் பெறும் (யாப்புற) - அதாவது மூக்கு ஒரு ஒலியூக்கியாகவே இங்குச் செயல்படுகிறது; காற்றறையாகத் தொழில் படவில்லை என்பதை மறைமுகமாகப் புலப்படுத்தியுள்ளார். ஆனால்,

நன்னூல் மூக்கை இடம் என்று குறிப்பிடாவிட்டாலும், சொல்லும் முறையால் அதைப் பெறவைத்துள்ளது.

**ஆவி இடைமை இடமிட றாகும்**
**மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை** (75)

என்னும் போது மெல்லினத்துக்கு இடம் மூக்கு என்றே பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது. மயிலைநாதரும் சங்கரநமச்சிவாயரும் சிவஞானமுனிவரும் அப்படித்தான் உரையெழுதியுள்ளார்கள். இதனால் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட நுட்பம் எங்கேயோ ஓடி ஒளிந்து விட்டது; 'சாறு போய் சக்கை மிஞ்சிய கதை' ஆகிவிட்டது. தொன்னூல்விளக்கமும் முத்துவீரியமும் உச்சி (தலை) மெல்லினத்துக்கு இடம் என்னும்போது, 'சக்கையும் போய் குப்பையே மிஞ்சியது' என்று சொல்ல வேண்டும்போல் தோன்றுகிறது.

**. . . . . . . உரம் வலிஉச்சி மெலியிியை**
**முதல் இடம் . . . . . . . . . . . . . . . .** (தொ.வி.3)

**. . . . . . . . . . . . . . . உரம் வலியுச்சி**
**மெலியிட மாமென வேண்டப் படுமே** (மு.வீ.43)

என்னும்போது ஒலியியல் ஆராய்ச்சியில் வரவர நாம் பின்னோக்கி வந்திருப்பதுபோல எண்ணவேண்டியிருக்கிறது.

தொல்காப்பியம் வல்லின ஒலியைப்பற்றிச் சிறப்பாக ஒன்றும் சொல்லவில்லை. ஒவ்வொரு ஒலிக்கும் தனி இடம் கூறவேண்டும் என்று நினைக்க ஆரம்பித்ததும், வல்லினத்தை மட்டும் சும்மா விடுவானேன் என்று நன்னூலார் முதற்கொண்டு சாமிகவிராயர் வரை உரம் (நெஞ்சு) இடமாகப் பிறக்கும் என்று கூறிவிட்டார்கள். வைத்தியநாத தேசிகர் மட்டும் 'உச்சி (தலை) வன்மை' (இ.வி. 10) என்று கூறியுள்ளார்; இரண்டுமே பொருத்தமற்றவைதான்.

அப்படியே சார்பெழுத்துகள் '**தத்தம் சார்பிற் பிறப்போடு சிவணி**' (101.3) என்று பொதுப்படையாகத் தொல்காப்பியர் கூறியதை விட்டுவிட்டு, ஆய்தத்துக்கு மட்டும் ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு இடத்தைக் கூறியுள்ளன. நன்னூலும் (75.3) சுவாமிநாதமும் (18.4) இடம் தலை என்றும், இலக்கணவிளக்கம் '**நெஞ்சு ஓசையின் அங்காந்து இயலும்**' (13.1) என்றும், முத்துவீரியம் 'உந்தி' (58) என்றும் மனம்போனவாறு கூறியுள்ளன. இவையெல்லாம் தவறானவையே. தொல்காப்பியர் இப்படி ஏற்படும் என்று கருதியோ என்னமோ

பிறப்பியல் ஆராய்ச்சியில் கையாளவேண்டிய முறையையும் விதந்து எடுத்துக் கூறியுருக்கிறார்.

. . . . . . . . . எழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை . . . . . . . . . (102.6-7)

'புறத்தே புறப்பட்டு ஒலிக்கும் பொருள் தெரிவிக்கும் ஒலி' பற்றியே ஆராயவேண்டும் என்று வரையறுத்துக் காட்டியுள்ளார். பிறப்பியலில் நாம் ஒலிகளை உச்சரித்துப் பார்த்துப் பார்த்து, அதன் தன்மையை யும் பிறப்பிடத்தையும் அறியவேண்டும் என்று இதற்குப் பொருள். அதை விட்டு 'இருப்பதைப் பகுத்துச் சொல்லவேண்டும்' என்று அக நிலை ஆய்வில் - தத்துவார்த்த நோக்கில் இறங்கக் கூடாது; இறங்கினால் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் அடைந்த தோல்வியே பரிசாகக் கிடைக்கும்.

## 3.2 சார்பெழுத்துகள்

உயிரொலி வருணனையில் அதிக சிக்கல் எதுவும் இல்லை. அதையொட்டி அவைகளின் ஒலிமதிப்பையும் அறிந்துகொள்வதில் பிரச்சனை இல்லை.

மெய்யெழுத்தைப் பொறுத்தவரையில் தமிழ் இலக்கண ஆசிரியர்களின் வருணனையில் சில வித்தியாசங்கள் உண்டு. அவை உச்சரிப்பில் ஏற்பட்ட மாற்றத்தாலும் (றகரம் பற்றிய தொல்காப்பிய-நன்னூல் வேறுபாடு - சண்முகம், 1967:68), விவரிப்பதில் ஏற்பட்ட தெளிவாலும் (ல,ள ஆகிய இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் - தொல்காப்பிய - நன்னூல் விளக்கம் - விஜயவேணுகோபால், 1968 : 177), அதைத் தவறாகப் புரிந்துகொண்டதாலும் (யகரம் பற்றிய நன்னூல் வருணனை) ஏற்பட்டவையே தவிர, இலக்கணக் கோட்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. தொல்காப்பியர் விளக்கத்தை ஒட்டி முருகையன் (1972:32) ஒலி அட்டவணை போட்டுக் காட்டியுள்ளார்.

தமிழ் இலக்கண நூல்களில் சார்பெழுத்தின் பிறப்பிடம் பற்றியும், அவைகளின் ஒலித்தன்மை பற்றியும் விளக்கப்படவே இல்லை. மேலும், அவைகளின் மொத்த எண்ணிக்கையும், தனிப்பட்ட சார்பெழுத்துகளின் எண்ணிக்கையும் ஆசிரியருக்கு ஆசிரியர் மாறு படுகின்றன. எனவே, அவைகளைமட்டும் ஒவ்வொன்றாக விளக்க முயலுவோம்.

### 3.2.1 குற்றியலுகரம்

தொல்காப்பியர் தான் கூறிய மூன்று சார்பெழுத்துகளின் உச்சரிப்பைப் பற்றிப் பொதுவாக

> தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
> ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும் (101.3-4)

என்று தமக்குச் சார்பாகிய எழுத்துகளது பிறப்பிடத்தே தோன்றும் என்று ரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டார். நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியவை ஆய்தத்துக்குத் தனிப் பிறப்பிடம் கூறிவிட்டு, ஏனையவை தத்தம் முதலெழுத்தை ஒட்டிப் பிறக்கும் என்று கூறுகின்றன (நன். 87, இ.வி. 13, மு.வீ. 58). எனவே, இவற்றின் ஒலிமதிப்புபற்றி அறிய உரையாசிரியர்கள் தரும் சிறு குறிப்பைத்தவிர, தற்கால ஆராய்ச்சியே முழு உதவி செய்கிறது.

உரையாசிரியர்கள் குற்றியலுகரத்துக்குப் பற்றுக்கோடு வல்லெழுத்து என்றும், இடம் தொடர்மொழியீறும், நெட்டெழுத்து இம்பரும் என்றும் விளக்கியுள்ளார்கள். இதன்படி வல்லெழுத்து பிறக்கும் ஆறு இடங்களிலும், குற்றியலுகரம் பிறக்கிறது என்று பொருள். ஒரு ஒலி எப்படி ஆறு இடத்தில் பிறக்கமுடியும்? உயிரொலி விடுப்பு (Vowel release) ஆக இருந்தால் அது சாத்தியமாகலாம் என்பது மீனாட்சிசுந்தரனாரின் கருத்து (1965:67). மேலும், தமிழில் மட்டும் அல்லாமல் பிற மொழிகளிலும்[5] வல்லின மெய்கள் சொல்லின் இறுதியில் வராததால், அவை வரும் இடத்தில் உயிரொலி விடுப்பு அமையலாம். எனவேதான் வல்லெழுத்தே பற்றுக்கோடு என்று கருதப்படுகிறது. உயிரொலி விடுப்பு இடத்தால் ஆறு வகைப்பட்டாலும், ஒலித்தன்மையால் ஒன்றே என்று கொள்ளலாம்.[6] அது ஓரளவு உகரச் சாயல் உடையதாக இருந்திருக்கவேண்டும். அதனால் தான் குற்றியல் உகரம் என்று இலக்கண ஆசிரியர்கள் பெயர் கொடுத்திருக்கவேண்டும்.

---

5 அப்படி வல்லொலி வரும் மொழியில், ஒலிப்புநிலையில் வேறு மாற்றம் நடைபெறுகிறது. உதாரணமாக ஆங்கிலத்தில் சொல் இறுதி ஒலிப்பிலா வல்லொலி உரப்பொலி (Aspirate) ஆக உச்சரிக்கப்படுகிறது (Gimson, 1962:138).. இந்த உண்மையைச் சுட்டிக்காட்டிய டாக்டர் முருகையனுக்கு என் நன்றி.

6 இப்படியே ஒவ்வொரு வல்லினமும் ஒவ்வொரு உயிரோடு சேர்த்து வரும்போது,சிறிது உச்சரிப்பு வேறுபாடு உண்டு. அது மிக நுண்ணிய வித்தியாசம் எனக் கருதி இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடவில்லை.

உரையாசிரியர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், முற்றியலுகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படுவதால், இதழ் குவியாமல் குற்றியலுகரம் உச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இந்த வேறுபாட்டை நுந்தை என்ற சொல்லின் இரண்டு வித உச்சரிப்பைக் குறிப்பிடும் சூத்திரத்தின் (68) விளக்கத்தின் போது பேசுகிறார்கள்.

சார்பெழுத்துகளைத் தனிமொழியிலும் புணர் மொழியிலும் வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அப்படிக் குற்றியலுகரம் புணர்மொழியில் வரும் என்று கூறும் சூத்திரங்கள், குற்றியலுகரம் வருமிடம் பற்றியும், அதன் மாற்றொலி பற்றியும் விவாதத்தை எழுப்பிவிட்டன. கருத்து வேறுபாட்டுக்கு ஏற்பப் பாடவேறுபாடும் அங்குக் காணப்படுகிறது.

**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகரம் நிலையும்** (408)

என்ற சூத்திரத்தில் உள்ள இறுதிச்சொல்லாக இளம்பூரனர் **'நிறையும்'** என்று பாடம் கொண்டுள்ளார். அதன்படி புணர்ச்சியில் அது, 'வேற்றுமைப் புணர்ச்சியாக இருந்தாலும் அல்வழியாக இருந்தாலும், ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்' என்று உரையெழுதினார்.

அடுத்த சூத்திரத்தில் வன்றொடர்க் குற்றியலுகரம் வல்லெழுத்து முதலாக உடைய சொல்லொடு அல்வழியிலும் வேற்றுமையிலும் **'தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே'** - 'அதாவது முன்கூறிய இயற்கை நிற்றலும் உரித்து' என்று இளம்பூரணர் விளக்குகிறார். இங்கு நிலைமொழி வல்லெழுத்தும் வருமொழி வல்லெழுத்தும் ஒன்றாகவே - சிறப்பாகக் ககர வல்லெழுத்தே இருக்கவேண்டும். ஏனெனில், ககரம் உச்சரிக்கும்போது காற்றறை குறைந்த இடம் உடையதாக அமைகிறது. இதனால், உரையாசிரியர்கள் காட்டிய உதாரணம் இந்த உண்மையைத் தெளிவுபடுத்துவதாய் உள்ளது. எனவே, இளம்பூரணர் வன்றொடர்க் குற்றியலுகரம் வல்லெழுத்தோடு புணரும்போது குற்றியலுகரமாக உச்சரிக்கப்படும் என்றும், ஏனைய குற்றியலுகரச் சொற்கள் புணர்ச்சியில் முற்றியலுகரமாக உச்சரிக்கப் படுகிறது என்றும் கருதுகிறார் என்றே பலரும் நினைக்கிறார்கள்.

நச்சினார்க்கினியர் **'நிலையும்'** (408) என்று பாடம் கொண்டு 'இருமொழிப் புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை பெறும்' - அதாவது

முற்றியலுகரமாக அமையும் என்று ஒரு கருத்தைச் சுட்டி, எல்லா இடத்திலும் குற்றியலுகரமாகவே நிற்கும் (அதாவது அரை மாத்திரையே பெறும்) என்று கூறுகிறார். இன்று பலரும் (உதாரணம், வ.உ.சிதம்பரம் பிள்ளை, 1941:136; வேங்கடராகுலு ரெட்டியார், 1944:163) இளம்பூரணர் உரையை ஆதரிக்கிறார்கள். சுப்பிரமணிய சாஸ்திரி (1937:322) மட்டும் நச்சினார்க்கினியரை ஆதரிக்கிறார். இங்கு உரை பொருந்துமா? பொருந்தாதா? என்பதல்ல கேள்வி; குற்றியலுகரத்தின் வருமிடம் என்ன? மாற்றொலி பற்றியும் தொல்காப்பியர் கால வழக்கு என்னவாக இருந்திருக்க முடியும்? என்பதே முக்கியமான கேள்வி. இளம்பூரணரின் கருத்தைத் தொல்காப்பியர் காலக் கருத்தாகவும், அது அவர்காலம் வரைக்கும் பொருந்துவதாகவும் கொள்ளலாம். ஆனால், நச்சினார்க் கினியர் உரை, அவர்காலத்து மொழியில் ஏற்பட்ட மாற்றத்தைக் குறிக்கிறது; ஆகையால், மொழி வரலாற்று உண்மையாகக் கருதப் படுகிறது (சண்முகம், 1967:52).

இளம்பூரணர் உரைப்படிக் குற்றியலுகரச் சொல் தனிச் சொல்லாக அல்லது கிளவியின் (Utterance) இறுதியில் வரும்போது குற்றியலுகரமாக உச்சரிக்கப்படுகிறது; அதுவே நிலைமொழியில் இருந்து இன்னொரு சொல்லோடு புணர்ந்தால், முற்றியலுகரமாக மாறிவிடுகிறது. ஆனால், நிலைமொழியில் வன்றொடர்க் குற்றியலுகரம் இருந்து, வருமொழியில் வல்லெழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்து புணர்ந்தால், குற்றியலுகரமாகவே அமைகிறது. இங்கு வன்றொடரில் குகரம் மட்டுமே நிலைமொழியில் இருந்து, வருமொழியிலும் ககரம் முதன்மொழியாக அமைவதே சிறப்பு உடையது. ஏனெனில், ககர உச்சரிப்பில்தான் காற்றறை குறைந்த இடம் உடையதாக இருக்கும்; ஏனைய வல்லொலிகளுக்கு அதைவிடக் கூடுதலான இடம் இருக்கும். ஆகவே, தொல்காப்பியர் எந்த வல்லினம் என்று விதந்து கூறாவிட்டாலும், இளம்பூரணர் ககர வல்லொலியை மட்டும் உதாரணம் காட்டுவது (கொக்குக் கடிது, கொக்குக் கடினம்), தமிழ் உச்சரிப்பின் நுட்பத்தை அறிந்திருக்கிறார் என்பதைப் புலப்படுகிறது. புணர்ச்சியில் ஏனைய குற்றியலுகரம் மற்ற சொல்லோடு சேரும் போது, வன்றொடர் - சிறப்பாகக் குகர ஈற்றுக் குற்றியலுகரம், இன்னொரு வன்றொடர் - சிறப்பாக ககர முதன்மொழிச் சொல்லோடு சேரும்போது, அரை உச்சரிப்பையே (முற்றியலுகரம் குற்றியலுகரமாதல்) பெறுகிறது. அதுபோலவே தனிமொழியிலும் புணர்ச்சியிலும் குற்றியலுகரமாகவே இருந்து, வன்றொடர் ஈற்றுக் குற்றியலுகரம் வல்லெழுத்து முதலாக உடைய சொல்லோடு புணரும்போது, குற்றியலுகரத்தைவிடக் குறைந்து

ஒலிக்கிறது என்று நச்சினார்க்கினியர் கூறுவதும், சாதாரண நிலையைவிட வல்லொற்றுக் குற்றுகரம் வல்லெழுத்து முதலாக உடைய சொல்லோடு சேரும்போது குறைவான உயிரொலி விடுப்புப் பெறுகிறது என்று பொருள்படுகிறது. தொல்காப்பியர் தமிழ் ஒலிகளின் உச்சரிப்பை மிக நுண்மையாகக் கவனித்திருக்கிறார் என்பதற்கு இது நல்ல சான்று. உரையாசிரியர்களும் வல்லெழுத்தில் ககரத்திற்கு மட்டும் பொருந்தும் என்று ககர மெய்யை மட்டும் எடுத்துக்காட்டுவதும் பாராட்டப்படவேண்டிய ஒலியியல் உண்மையாகும்.

இலக்கணப்படி முற்றியலுகரமாக் கருதத்தகுந்த சொற்களைக் (கதவு, கல்லு, கண்ணு) கூட இன்று குற்றியலுகரமாக - அதாவது இதழ் குவியாமல் உயிரொலி விடுப்பாக உச்சரிக்கிறோம் (சண்முகம், 1978இ: 76). எனவே, இளம்பூரணர் காலம் வரைக்கும் குற்றியலுகரம் தொடர்மொழியில் முற்றியலுகரமாகவே இருந்துள்ளது. நச்சினார்க் கினியர் காலத்தில் குற்றியலுகரமாக மாறியதோடு இன்று வேறுபல முற்றியலுகரமும் குற்றியலுகரமாக மாறி, குற்றியலுகர உச்சரிப்புப் பெருகிவருவதுபோல் தோன்றுகிறது. ஆகவே, நச்சினார்க்கினியர் கூறுவது, அதன் உச்சரிப்பு வளர்ச்சியில் ஒரு படியைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் நுகரத்தை முதலாக உடைய சொற்கள் (நுந்தை என்று உரையாசிரியர்கள் குறிக்கிறார்கள்) குற்றியலுகரமாக உச்சரிக்கப்படுகின்றன என்றும் (தொல்.68), அது முற்றியலுகரமாக உச்சரித்தாலும் பொருள் வேறுபடாது என்றும் (69) வருணித்துள்ளார். இந்தக் குற்றியலுகரத்தை உயிரொலி விடுப்பாகக் கொள்ளமுடியாது. உரையாசிரியர்கள் இது இதழ் குவியாமல் உச்சரிக்கப்படுகிறது என்று கூறியதை முன்னரே குறிப்பிட்டோம். இதை இதழ் குவியாமல் முன்னுயிர் (Unrounded, high - back vowel) என்று கொள்ளலாம். ஆனால், வரலாற்று நிலையில் நடு உயிராகக் கருதலாம்போல் தோன்றுகிறது. முன்னிலைப் பன்மை வடிவம் **நீயிர்** என்று தொல்காப்பியர் (673) குறிப்பிட்ட போதிலும், வரலாற்று நிலையில் பார்க்கும்போது **நீம்** என்ற வடிவமே முந்தைய வடிவம் என்பதும், அதிலிருந்தே *நிம் என்று வேற்றுமை ஏற்கும் வடிவம் ஏற்பட்டு, அது தமிழில் **நும்** என்று மாறியிருக்கவேண்டும் என்றும் கருத வேண்டியிருக்கிறது (சண்முகம், 1971). அதனால், இகரமே அடுத்து வரும் மகரத்தின் சாயலால் உகரம் போல - குற்றிகரமாக - இதழ் குவியா உகரமாக (Centralised i) உச்சரிக்கப்பட்டிருக்கவேண்டும்

(மீனாட்சிசுந்தரன், *The Tamil Sounds*. p.101). இதனால் மொழி முதல் குற்றியலுகரத்தை வெறும் உயிரொலி விடுப்பாகக் கருத முடியாது.[7] உகரமாக எழுதுவதால் அதைத் தொல்காப்பியர் குற்றியலுகரமாகக் கருதி, ஒலி நிலையில் உள்ள சிறு வேறுபாட்டைப் புறக்கணித்திருக்க வேண்டும். உகரமாக எழுதுவதையொட்டி - சொல்லெழுத்து உச்சரிப்பாக (Spelling pronunciation) - சில கிளை மொழிகளில் முழு உகரமாக உச்சரிக்கப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் தொல்காப்பியர் முற்றியலுகரமாக உச்சரித்தாலும் பொருள் மாறாது என்று உறழ்ச்சி (Free variation) உச்சரிப்பாக விவரித்துள்ளார். தொல்காப்பியரது குற்றியலுகரம் ஒலிப்பண்பில் இரண்டு வகைப்பட்டாலும், அதை அவர் புறக்கணித்துவிட்டு ஒன்றாகவே வருணித்துள்ளார்.

நன்னூலார் குற்றியலுகரம் இடவகையால் முப்பத்தாறு என்று கூறுவது, குற்றியலுகரப் பற்றுக்கோடாம் வல்லினத்துக்கு முன் வரும் உயிரொலி, ஆய்தம், மெய்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்தது. குற்றியலுகர உச்சரிப்பில் அதற்கு முன் வரும் வல்லினம் தொடர்பு உடையதே தவிர, அந்த வல்லெழுத்தை அடுத்து வரும் முப்பத்தாறு வகை ஒலிகள் எந்தவித உறவையும் பெற்றிருக்கவில்லை. இதனால்தான் இலக்கண விளக்கம்(5) குற்றியலுகரம் ஒன்று என்று கூறிவிட்டது. இதைப் பின்பற்றியே முத்தவீரியம் (36) சுவாமிநாதம் (15.2) குற்றியலுகரம் ஒன்று என்றே கூறியுள்ளன.

### 3.2.2 குற்றியலிகரம்

இது தனிச் சொல்லாகிய 'மியா' என்ற உரையசைச் சொல்லில் மட்டுமே வரும்; இதையும் உயிரொலி விடுப்பாகக் கருதலாம். யகரத்தின் முன்னால் இருப்பதால் இடையண்ணச் சாயல் பெற்றிருக்கவேண்டும். அதனால்தான் தொல்காப்பியர் குற்றியலிகரம் என்ற பெயர் கொடுத்திருக்கவேண்டும். தொடர்மொழியில் குற்றிய லுகர நிலை மொழியோடு யகரத்தை முதலாக உடைய வருமொழி புணர்ந்தால், அந்தக் குற்றியலுகரம், குற்றியலிகரமாக ஒலிக்கும் என்று விளக்கப்பட்டுள்ளது. குற்றியலுகரம், உயிரொலி விடுப்பு என்ற முன்னரே கூறப்பட்டு விட்டதால், அது யகரத்தின் முன் வரும்போது

---

7 'நுன்' என்ற ஒருமை வடிவம் பிற்காலத்தில் (ஞானசம்பந்தர் தேவாரம் 2.82.10.3) ஒப்புமையாக்கத்தால் ஏற்பட்ட வடிவம். ஆகையால் அதற்கு இப்படிப் பட்ட விளக்கம் பொருந்தாது.

இகரச்சாயல் பெற்றதாகக் கருதிக் குற்றியலிகரம் என்று கூறியிருக்க வேண்டும். குற்றியலுகரமும் குற்றியலிகரமும் ஒலி நிலையில் வேறுபாடு உடையதாக இல்லை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால், தொல்காப்பியர் எழுத்தமைப்பை ஒட்டி இரண்டாகக் கருதினாரா? அல்லது உண்மையில் உயிரொலி விடுப்பில் சிறிது வேறுபாடு இருந்ததா? என்பது புரியவில்லை. எப்படியாயினும் குற்றியலிகரத்தை ஒரு ஒலியாகக் கொள்ளவேண்டுமே தவிர, நன்னூலார் கூறுவது போல முப்பத்தேழு (தொடர்மொழியில் வரும் 36 குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறிவருவதும் மியா என்ற சொல்லில் வருவதும் சேர்த்து) என்ற கொள்ள முடியாது. இலக்கணவிளக்கம் குற்றியலிகரம் ஒன்று என்றே கொண்டிருப்பது பொருத்தமானதே. சுவாமிநாதம் (15.2) இலக்கணவிளக்கத்தைப் பின்பற்றியுள்ளது.

### 3.2.3 ஆய்தம்

ஆய்தமும் மீதி இரண்டு சார்பெழுத்துகளைப் போலத் **'தத்தம் சார்பிற் பிறக்கும்'** என்று தொல்காப்பியர் கூறினும், பிற இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் தனிப் பிறப்பிடமே குறிப்பிடுகிறார்கள் என்பது மேலே குறிப்பிடப்பட்டது. உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் 'நெஞ்சு வளியிற் பிறக்கும்' என்று கூறியிருக்கின்றார். நெஞ்சில் இருக்கும் நுரையீரல்களின் அசைவால் எல்லா ஒலிகளுமே பிறப்பதால் ஆய்தத்துக்கே உரிய இடம் நெஞ்சு என்பது தவறானது.

ஆய்தம் மெய்யொலி வகையைச் சார்ந்தது என்பதை உரை யாசிரியர்கள் சுட்டிச்சென்றிருக்கிறார்கள்.

> இஃது (ஆய்தம்) உயிரன்மையின் இதற்குரிய பற்றுக்கோடு என்பதில்லை

என்பது இளம்பூரணம் (38).

> கஃறிது, முஃடீது என்பனவற்றை மெய்பிறிதாகிய புணர்ச்சி என்பதனாலும் ஈண்டு (சூத்.38) 'புள்ளி' என்றதாலும் ஆய்தமும் மெய்யாயிற்று

என்பது நச்சினார்க்கினியம் (38).

சுப்பிரமணிய சாஸ்திரி (1937:9) ஆய்தம் ஆறு வகைப்பட்டது. அதாவது ஆறு இடங்களில் உச்சரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்று உரைப்பதும் குறிப்பிடத்தகுந்தது.

> பண்டைக்காலத்தில் ஆய்தம் என்பது ஓரிடத்திற் பிறவாது ஆறு இடங்களில் பிறந்தது என்பதும் அக்காரணம் பற்றி அறு வகைப்பட்டது என்பதும் வெளிப்படை

என்று விளக்கியுள்ளார் (137:9).

இன்று எஃகு போன்ற சொற்களில் ஆய்தம் அடிநா அடி அண்ண உரசொலியாக (Velar fricative) இருப்பதால், கால்டுவெல் ஆய்தம் என்பதே அடிநா அடிஅண்ண ஒலியாகிய ஹகரம் போல ஒலிப்பது என்றும், இது செய்யுளில் மட்டும் வருவது; இலக்கண ஆசிரியனின் கண்டுபிடிப்பு என்றும் கூறிவிட்டார்.[8] சுப்பிரமணிய சாஸ்திரியாரும் (1934), கூய்ப்பரும் (1958) வடமொழி விசர்க்கத்தோடு ஒப்புமை உடையதாகவே கருதுகிறார்கள். கூய்ப்பர் ஆய்தமும் வல்லெழுத்தும் சேர்ந்த இரட்டை வல்லெழுத்தின் மாற்று உச்சரிப்பாக (1958:201) கொள்கிறார்.[9] மீனாட்சிசுந்தரன் இப்பொழுது ஆய்தத்தை அடுத்து வரும் வல்லொலிக்கு இணையான இரட்டை உரசொலி - அதாவது அறுவகைப்பட்ட இரட்டை உரசொலி (1965:69) என்று கருதுகிறார். அதற்கு ஆதாரமாகத் தொல்காப்பியம், யாப்பருங்கலம் ஆகியவற்றை மேற்கோள் காட்டியுள்ளார்.

செய்யுளில் ஆய்தம் மிகுந்து வந்தால், அதை நலிபு வண்ணம் உடையதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்** (தொல். 1419)

மேலும், யாப்பருங்கலப் பழைய உரையில் ஆய்தம் நலிபு ஓசையைக்

---

8 It professes to possess a letter, half vowel, half consonant corresponding in some respects to the Sanskrit *visarga* and called *a:ydam* (that which is subtle, minute). It is pronounced like a guttural *h*, but is only found in the poets, and is generally considered a pedantical invention of the grammarians.
Caldwell, 1856 : 130 also see p. 353

9 Under certain conditions, the combination of *h* (i.e. *a:ytam)* plus a following plosive may serve as a substitute for a geminate, *wh,* then this geminate may be the result of assimilation or of compensatory lengthening.
Kuiper, 1958 : 201.

குறிக்கும் ஒரு குறியீடு என்று தொல்காப்பியர் கருதுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

> . . . . . . . . . . . . . . . . . . . . . ஒண்டமிழ்
> **நாதராயவர் நாநலிபு ஓசையிற்கு**
> **ஏதுஎன்று எடுத்து ஓதினார்**
> (யாப்பருங்கலவிருத்தி பக்.39, சூத். 3 உரை)

என்பது அந்தச் சூத்திரம். எனவே, வல்லொலிகள் உரசொலியாக மாறுவதைக் குறிப்பதற்காக இடப்பட்ட குறியீடு ஆய்தம் என்று கொள்ளவேண்டும். இதனால், ஆய்தம் என்ற சொல்லின் பொருளையும் வரலாற்றையும் சரியாக அறிந்துகொள்ளமுடிகிறது.

ஆய்தம் என்பது ஆஸ்ரிதம் என்ற வடசொல்லின் திரிபாகக் கருதப்பட்டது (சுப்பிரமணிய சாஸ்திரி, 1934:69,70). ஆனால் வெள்ளைவாரணன் (1965:31),

> **ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
> **ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்** (தொல்.813)

என்ற சூத்திரத்தை மேற்கோள் காட்டி, ஆய்தல் என்ற உரிச் சொல்லடியாகப் பிறந்தது ஆய்தம் என்றும், அது நுணுகிய ஓசை உடைய எழுத்து என்ற பொருளில் வழங்கியிருக்கக் கூடும் என்றும் விளக்கியுள்ளார். மீனாட்சிசுந்தரனாரும் (1965:72) இந்த விளக்கத்தை ஒத்துக்கொள்கிறார்.

பாலசுப்பிரமணியன் (1974:380) ஆய்தம் என்பதை அடிநிலை ஒலியன் அல்லது ஆர்க்கி ஒலியன் (Archi segment) என்றும்,

> ஒலிக் கூறுகள் முழுமையாக வரையறுக்கப்படாமல் ஒரு பொதுக் கூற்றின் அடிப்படையில் அவை அமைக்கப்படும். இது போன்றே ஆய்தமும் அடுத்து வரும் ஆறு வல்லெழுத் துக்களின் அடிப்படையில் ஆறு வகையாக ஒலிக்கப்பெறும்.

என்றும் கூறுவார். ஆர்க்கி ஒலியன் என்பது ஒலியன் நிலையில் தரப்பட்ட விளக்கம்; ஒலியியல் விளக்கம் அல்ல. ஒலி நிலையில் அறுவகைப்பட்ட உரசொலியைக் குறிக்கும் என்றே கருத வேண்டியிருக்கிறது.[10]

---

10 திரு சங்கரன் (1951:27) ஆய்தத்தை நீ வரிசையில் அமையாத (Non-linear) ஒரு ஒலியனாகக் கருதுகிறார். அது பற்றிய விளக்கமும் விமர்சனமும் பற்றிப் பாலசுப்பிரமணியன் (1974:385) கட்டுரையைப் பார்க்க.

ஆய்தம் எட்டு என்று நன்னூலாரும் ஒன்று என்று இலக்கண விளக்கத்தாரும் கூறுகிறார்கள். ஒன்று என்பது ஒலியன் நிலையைக் குறிப்பதாகும். ஆனால், ஒலிநிலையில் ஆறு என்றே கருதுவது பொருந்தும்; எட்டு என்பது பொருந்தாது.

ஆய்தம் குறுக்கம் என்ற ஒரு சார்பெழுத்தை நன்னூலார் குறிப்பிடுகிறார் (61,97). அவர் கருத்துப்படித் தொடர்மொழியில் வருவதே ஆய்தக் குறுக்கம். தனிமொழியில் வரும் ஆய்தத்துக்கும் தொடர் மொழியில் வருவதற்கும் ஒலிவேறுபாடு இருக்கிறது என்று அவர் கருதியிருக்கவேண்டும். ஆனால், அப்படி ஒலி வேறுபாடு இருந்ததற்கு வேறு சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. பிற்கால ஆசிரியரான இலக்கணவிளக்க வைத்தியநாததேசிகர் ஒத்துக் கொள்ளாததாலும், அந்த ஐயம் உறுதிப்படுத்தப்படுகிறது.

தொல்காப்பியர் ஆய்தக் குறுக்கம் பற்றிப் பேசாமல் விட்டதோடு, ஏனைய ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகியவற்றையும் சார்பெழுத்துகளாகக் கொள்ள வில்லை. அதன் காரணம் அடுத்த இயலில் விளக்கப்படும். இவைகளின் ஒலித்தன்மையை மட்டும் இங்கே பார்ப்போம்.

### 3.2.4 உயிரளபெடை

ஒவ்வொரு ஒலிக்கும் உள்ள மாத்திரையை அதாவது அளபை இலக்கண நூல்கள் வரையறுத்துள்ளன. உயிர் எழுத்துகளில் குறிலுக்கு ஒன்று, நெடிலுக்கு இரண்டு, மெய்க்கு அரைமாத்திரை என்று குறிப்பிடு கிறார்கள், இலக்கண ஆசிரியர்கள். அந்த அளவிலிருந்து அதிகமாக ஒலிப்பதே அளபெடை. உயிரெழுத்து அளபு எடுப்பது உயிரளபெடை என்றும், மெய் (மற்றொரு பெயர் - ஒற்று) அளபெடுப்பது ஒற்றளபெடை என்றும் குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியர் முதலில்,

**மூவளபு இசைத்தல் ஓரெழுத் தின்றே** (5)

என்று (ஒரு எழுத்து மூன்று மாத்திரையோடு உச்சரிக்கப்படுவதில்லை) கூறிவிட்டு, அடுத்த சூத்திரத்திலேயே

**நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்** (6)

என்று எதிர்மறையாகச் சொல்லியுள்ளார். அதாவது, ஏதாவது காரணத்துக்காக வேறு எழுத்துகளைச் சேர்த்து உச்சரிக்கலாம் என்று நூன்மரபில் பொதுவாகக் கூறிவிட்டு மொழிமரபில்

**குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே** (41)

என்று சிறப்பாக விவரித்துள்ளார். இதன்படி ஓசை குறைந்தால் நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சேர்ந்து அதை நிரப்பும்; எனவே தொல்காப்பியர் காலத்தில் உயிரளபெடை என்பது நெடிலும் குறிலும் சேர்ந்த கூட்டு உயிர்களாகவே (Vowel clusters) இருந்தது என்று கருதப்படுகிறது (சண்முகம், 1967:24,33).

பொதுவாக எழுத்துகளின் பழையகால உச்சரிப்பைத் தெரிந்து கொள்ளச் செய்யுள் உதவும். ஏனெனில் அதில் எதுகையும் மோனையும் அசைநிலையும் எழுத்துகளின் ஒலித்தன்மையைப் புலப்படுத்தும் பண்பு உடையவை. மேலும், செய்யுளை ஆராயும் செய்யுளியல் என்ற தனித்துறையே வளர்ந்துள்ளதால், செய்யுளியல் ஆய்வும் எழுத்துகளின் உச்சரிப்பை விளக்க உறு துணையாய் இருக்கும். ஆயினும், சில சமயங்களில் சந்தத்துக்காகச் சொல்லைப் பிரித்தும், ஓசை நிரப்புவதற்காக வேறுபடுத்தியும் கையாளுவது உண்டு. எனவே, அங்கும் கொஞ்சம் விழிப்பாகவே இருக்கவேண்டும்.

தொல்காப்பியரே செய்யுளியலில் அளபெடை அசைநிலையாக (ஒரு அசையாக) வருவதும் உண்டு என்பதை,

**அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே** (1274)

என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு உரையெழுதிய பேராசிரியர்,

> அவை (அளபெடை) பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச் சீராகலின் ஈண்டு சீர் கூறியவற்றின் எய்தி நின்றனவற்றை எழுத்து நிலைமைப்படுத்து அசைநிலையும் வேண்டினமையின்

என்ற முன்னுரையோடு,

> அளபெடை மேற்கூறிய இயற்சீர் நிலைமையேயன்றி ஓரசையால் நிற்றலும் உரித்து; உம்மையால் சீர்நிலை எய்துதலே வலி யுடைத்து

என்று எழுதியுள்ளார். இதன்படி அளபெடை பெரும்பான்மையாக இரண்டு அசையாகவும், சில இடங்களில் ஓரசையாகவும் கருதப்படும் என்று ஆகிறது.

தொல்காப்பியத்திலேயே இந்த இரண்டு வகைக்கும் உதாரணம் உண்டு.

**ஆ/டூஉ மக/டூஉ ஆயிரு பெயர்க்கும்** (271.7)
**இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூ/உம்** (251)
**இ/இடை நிலை/இ ஈறுகெட ரகரம்** (326/3)

போன்ற உதாரணங்களில் (ஆடூஉ, மகடூஉ தவிர) இரண்டு அசையாக - அதாவது நெட்டெழுத்து முதல் அசையின் உறுப்பாகவும், ஒத்த குற்றெழுத்து தனி அசையாகவும் வருவதால், அங்கெல்லாம் கூட்டுயிர்களாகவே உச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியிருக்கிறது.

**மக/டூஉ** என்பதில் அளபெடை ஒரு அசையாக இருப்பதால், இவை மூன்று மாத்திரை உடைய ஒரு எழுத்தாக - தனி உயிராக (Unit sound) உச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. பேராசிரியர் கருத்துப்படி முதல்வகையே (மிகூ/உம்) - இரண்டு அசையாக வருவதே பெரும்பான்மை. ஓரெழுத்தாக வருவதே சிறுபான்மை. பிற்கால இலக்கண நூல்கள் - வீரசோழியம் நேமிநாதம், நன்னூல் ஆகியவை மூன்று மாத்திரை என்று கூறியிருப்பதும் அளபெடை ஓரெழுத்தாகக் கருதப்பட்டது என்பதைச் சுட்டுகிறது. இதனால் அளபெடை வடமொழி புலுதத்தோடு தொடர்பு உடையதாகக் கருதப்படுகிறது.

உயிரளபெடை ஏழு என்பதே பொருந்தும். ஏனெனில் நெட்டெழுத்து ஏழுமே புறநிலையில் அளபெடுத்து வரமுடியும். நன்னூலார் அளபெடை 21 என்பது அவை வருமிடத்தை ஒட்டியது. ஒலிநிலையில் 7 என்பதே பொருந்தும்.

### 3.2.5 ஒற்றளபெடை

தொல்காப்பியர் ஒற்றளபெடை நூன்மரபில் மறைமுகமாகவும், செய்யுளியலில் நேரடியாகவும் குறிப்பிடுகிறார்.

**அளபிறத் துயிர்த்தலும் ஒற்றசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்** (33)

என்ற நூன்மரபுச் சூத்திரம் 'ஒற்றிசை நீடல்' என்பதன் மூலம் ஒற்றளபெடையைச் சுட்டுகிறது.

**ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப** (1275)

என்ற செய்யுளியல் சூத்திரம் ஒற்றளபெடையை நேரடியாகக் குறிப்பிட்டு, அது செய்யுளில் சீர்நிலை பெற்றும் (தனியே ஒரு அசையாகவும்)

பெறாமலும் (அசையாக இல்லாமலும்) வரும் என்று கூறுகிறது. மலைபடுகடாஅத்தில் (352)

**கண்/ண் டண்ண் ணெனக் கண்டும் கேட்டும்**

என்ற தொடரில் முதல் ஒற்றளபெடை சீர்நிலை பெற்றது; இரண்டாவது அளபெடை சீர்நிலை பெறாதது என்று உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

பொதுவாக மெல்லினமும், இடையினத்தில் உடனிலை மெய் மயக்கமாக வராத ர, ழ என்ற இரண்டும் தவிர, ஏனையவையும் ஆய்தமும் தனிக் குறிலுக்குப் பின்னும், இரண்டு குறிலுக்குப் (குறிலிணை) பிறகும் வரும் என்று பிற்கால ஆசிரியர்கள், அதன் முழு அமைப்பையும் சரியாக எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

ஒலிநிலையில் ஒற்றளபெடை என்பது ஒற்றின் நெடிலாக - இரண்டு ஒற்று சேர்ந்து வருவதாகவே கருதப்பட வேண்டும், சீர்நிலை எய்தும் சில சமயத்தில் அவற்றை அசைமெய் (Syllabic consonant) ஆக உச்சரிப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால், அப்படிப்பட்ட உச்சரிப்பு பழங்காலத்தில் இருந்ததா? என்பதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

ஒற்றளபெடை ஆறு மெல்லினம், நான்கு இடையினம், ஒரு ஆய்தம் ஆகப் பதினொன்று என்பதே ஒலி நிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்கது. வரும் சூழலை ஒட்டி நாற்பத்து இரண்டு என்று நன்னூல் கூறியது பொருந்தாது. அதனால்தான் இலக்கண விளக்க மும் நன்னூலின் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை.

ஒற்றளபெடைக்கு இலக்கியப் பயிற்சி அதிகம் இல்லையே எப்படி எண்ணிக்கை கூறுவது? என்று ஐயம் தோன்றலாம் (கந்தசாமி, 1977:83); அதுபோலவே இலக்கண ஆசிரியர்கள் கூறிய எல்லா மெய்மயக்கங்களுக்கும் உதாரணம் கிடைப்பதில்லை; இவை ஒரு இலக்கணக் கோட்பாட்டை விளக்குகின்றன. அதாவது மொழியில் வந்துள்ள சான்றுகளுக்கு மட்டும் இலக்கணம் கூறப்படுவதில்லை. வரக்கூடிய, வருவதற்குத் தகுந்த சான்றுகளையும் மனத்தில் கொண்டு பொதுமைப்படுத்தி இலக்கணம் எழுதவேண்டும் என்று மொழியியலாளர்கள் கூறுவார்கள். இதுவே இலக்கண வருணனை நிறைவு (Descriptive adequacy) ஆகக் கருதப்படும் (Chomsky. 1964:28)[11].

---

11 ....a correct account of the linguistic intuition of the native speaker and specifies the observed data in particular in terms of significant generalisations that express underlying regularities in the language.

Chomsky, 1964 : 28

எனவே, தமிழில் வரக்கூடிய ஒற்றளபெடைகளை இலக்கண ஆசிரியர்கள் தொகுத்துக் கூறிவிட்டார்கள்; என்னென்ன ஒற்றளபெடைகள் மொழியில் உண்மையாக வழங்கின என்பதுபற்றி அவர்கள் கவலைப்படவில்லை என்று கொள்ளவேண்டும்.

### 3.2.6 ஐகாரக்குறுக்கம்

தொல்காப்பியர் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை பெறாமல் சில இடங்களில் ஒரு மாத்திரை மட்டும் பெற்று வரும் என்று கூறியுள்ளார்.

> **ஓரள பாகும் இடனுமா ருண்டே**
> **தேருங் காலை மொழிவயி னான** (57)

இங்கு, சொல்லில் வரும்போது குறுகிவரும் என்று விளக்கப்பட்டிருக்கிறரே தவிர, அதனுடைய ஒலிச் சூழல் என்ன என்று சொல்லப்படவில்லை. நேமிநாதர்,

> . . . . . . .   . . . . . . . சஞுயமுன்
> **அஐயாம் ஆதியிடை** (9.3-4)

என்று ஐகார அகர உறழ்ச்சியாகக் குறிப்பிட்டிருப்பதை ஐகாரக் குறுக்கத்தின் விளக்கமாகக் கொள்ளலாம். கால்டுவெல் ஒரு சொல்லின் நடுவில் இரண்டு ஐகாரம் வரும்போது (எனவே வைகை போன்ற உதாரணங்கள் பொருந்தாது; தலைமை போன்ற உதாரணங்களே பேசப்படுகின்றன) முதல் ஐகாரம் அகரமாகவோ எகரமாகவோ குறுகி ஒலிக்கும் என்று கூறுவதும் ஐகாரக் குறுக்கமாகக் கருதப்பட வேண்டியது.[12] பின்னார் வந்த இலக்கண ஆசிரியர்கள் ஒலிச் சூழலைப் பற்றிப் பேசாது இடச்சூழல் (சொல்லுக்கு முதல், இடை, கடை) பற்றி விளக்கியுள்ளார்கள். ஐகாரக் குறுக்கத்தின் மாத்திரை பற்றியும் கருத்து மாறுபாடு காணப்படுகிறது. மேலே குறிப்பிட்ட ஒலிச்சூழல் தொல்காப்பியர் காலத்திலேயே அமைந்து விட்டதா? பிற்கால வளர்ச்சியா? என்று திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

---

12 When *ei* is succeeded in Tamil by another *ei*, with only a single consonant between them, the first *ei*, though naturally long, is considered short by position, and is pronounced acccordingly -*e.g.*, *udeimei*, property, is regarded in prosody as *udeîmei*. In such cases, *ei* is seen to be equivalent to its original â or ê .

Caldwell, 1856 : 136.

ஐகாரக் குறுக்கத்தின் ஒலிமதிப்பு அதன் மாத்திரை மதிப்பை ஒட்டியது. எனவே, முதலில் அதன் ஒலிமதிப்பு என்ன என்று விளக்குவோம்.

தொல்காப்பியர் ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை என்று மட்டுமே கூறியது மேலே குறிப்பிடப்பட்டது. நன்னூல் (95), இலக்கண விளக்கம் (21), தொல்னூல்விளக்கம் (16), முத்துவீரியம் (37) ஆகியவை அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. நேமிநாதமும் (5.1), வீரசோழியமும் ஒன்றரை மாத்திரை என்று குறிப்பிடுகின்றன. சுவாமிநாதம் சொல்லுக்கு இடையில் மட்டும் ஒரு மாத்திரை என்றும், முதலிலும் இடையிலும் ஒன்றரை மாத்திரை என்றும் (20.2) கூறியுள்ளது.

ஒருமாத்திரை என்றால் கால்டுவெல் குறிப்பிட்டபடி அகர மாகவோ எகரமாகவோ உச்சரிக்கப்பட்டிருக்கிறது என்று கொள்ளலாம். ஆனால், முழுமையான குறிலாக அது உச்சரிக்கப்பட்டிருக்க முடியாது. இன்றைய உச்சரிப்பை வைத்துப் பார்த்தால் அகரத்தில் சிறிது இகரச் சாயல் - இடையண்ணச் சாயல் பெற்று, அதாவது நாவின் நுனி சற்று உயர்ந்து உச்சரிக்கப்படுவதைக் காணலாம். மேலும், முழு அளவில் அகரமாக இருந்தால், அகர ஐகார உறழ்ச்சியாகக் கருதிவிடமுடியும். இதனால் அதை விஜயவேணுகோபால் (1968:328) எகரத்துக்கும் அகரத்துக்கும் இடைப்பட்ட [ɛ] என்று விளக்கியுள்ளார். இதில் எகரச்சாயல் அதிகம் இருக்கிறது. வேங்கடராசுலுரெட்டியார் (1944:63) சீவகசிந்தாமணி 933 ஆம் செய்யுளை எடுத்துக்காட்டி, அதில் 'இவை, சுவை, நவை என்பனவற்றில் உள்ள வகர ஐகாரம் இரண்டாம் அடியிலுள்ள வி (கவிஞர்) போல ஒரு மாத்திரையாய் ஒலிப்பது அறிக' என்று விளக்கியுள்ளார். எனவே, ஒருமாத்திரையாக ஒலிப்பதற்கு இலக்கியச்சான்று உண்டு.

ஒன்றரை மாத்திரை பெறும் என்பதற்கு ஐ என்பதை **அய்** என்று விளக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்திருக்கலாம். வேங்கடராசுலு ரெட்டியார் (ஷி) ஔகாரக் குறுக்கத்தைச் சேர்த்து,

> மொழி முதலிலும் ஐகாரம் அய் என்பது போலக் குறுகி ஒலித் தமையாலும் ஔகாரமும் அவ் என்பது போல ஒலித்தமையாலும் நேமிநாதநூலாரும் வீரசோழியநூலாரும் ஐகார, ஔகாரங்கட்கு முறையே அகரமும் இகரமும் உகரமும் வரும் என்று கூறினர். அதனான் அவ் வைகார ஔகாரங்கள் ஒன்றரை மாத்திரை ஒலிக்கும் என்பது அறியலாகும்.

என்று விளக்கியுள்ளார்.

அய் என்று கொண்டதால் ஒன்றரை மாத்திரை என்ற காரணம் சரி. ஆனால், அதைக் குறுக்கமாகக் கருதமுடியுமா? என்பது முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய கேள்வி. ஐ என்றோ அய் என்றோ வேறுவிதமாக எழுதுவதால் உச்சரிப்பு மாறவில்லை. எனவே அய் என்று எழுதுவதால் ஒன்றரை மாத்திரை என்பது இலக்கண ஆசிரியர் எழுத்து அடிப்படையில் (அ=1, ய்=½) கற்பித்துக் கொண்டதே தவிர, உண்மையான உச்சரிப்பின் அடிப்படையில் அமைந்த குறுக்கமாகக் கருதமுடியாது.

பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கருத்துப்படி ஐகாரம் முழுமையாக உச்சரிக்கப்படுவது, தனி எழுத்தாகச் சொல்லும் போதும் அளபெடையின் போதுந்தான். இதன்படி, தனி எழுத்தாக வரும்போது உச்சரிப்பு ஒன்று, சொல்லில் வரும்போது உச்சரிப்பு வேறு என்று ஆகிவிடுகிறது. மேலே குறிப்பிட்டது போல, ஐகார உச்சரிப்பில் இடத்துக்கு இடம் மாறுபாடு இல்லை. எனவே, ஒரு மாத்திரையாக வருவதே ஐகாரக்குறுக்கம் என்பதுதான் ஒலியியல் நிலைப்படி சரியாக அமையும்.

நன்னூலார், ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை உடையது என்று கூறினாலும், அது வருமிடத்தைச் சரியாக வரையறுக்காமல், சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் என்று கூறியதைச் சிவஞானமுனிவர் இரண்டு காரணங்களால் மறுத்துள்ளார். ஒரு காரணம்: சார்பெழுத்துக்கும் முதலெழுத்துக்கும் உள்ள உறவு பற்றியதால் அது ஐந்தாவது இயலில் (5.3.3) விளக்கப்படும். அதன்படி சொல்லுக்கு முதலில் ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரையாக வராது என்று கொண்டுள்ளார். அடுத்த காரணம்: யாப்பியலை ஒட்டியது. வைகல் என்ற சொல்லின் முதலிலும் ஐகாரக் குறுக்கம் உண்டு என்றால், இரண்டு குற்றெழுத்தாகி (வகல்) ஒரு அசையாகச் செய்யுளில் சீர் கெட்டுவிடும் என்பது.

> இடையன், மடையன், தினை, பனை என்புழிக் குறுகுதல் போல் 'வைகலும் வைகல் வரக்கண்டும்' என்புழி ஐகார முதற் கட்குறுகாமை செவி கருவியாக உணரப்படுதலானும் அன் றியும் வைகலும் வைகல் என்புழிக் குறுகாமையின் வைகல் என்பதனைக் குறில் இணை ஒன்று என்று அசைத்தல் வேண்டும்; வேண்டவே வெண்டளை அசைத்தலானும்.

என்று முதற் சூத்திர விருத்தி உரையில் (பக்.33) விளக்கியுள்ளார்.

ஆகவேதான் சிவஞான முனிவர் சொல்லுக்கு முதலில் ஐகாரம் குறுகாது என்று கருதுகிறார். அப்படியே சொல்லுக்கு இறுதியிலும் ஐகாரக் குறுக்கம் வரும் என்பதும் சந்தேகத்துக்குரியதாக இருக்கிறது. உரையாசிரியர்கள் திணை, பனை என்ற சொற்களை உதாரணமாகக் காட்டியுள்ளார்கள். அங்கும் பேச்சு மொழியில்தான் ஐகாரக்குறுக்கம் அகரமாக உச்சரிக்கப்படுகிறது. பொதுவாக எழுத்து மொழியில் (படிக்கும்போது) ஐகாரக் குறுக்கமாக உச்சரிக்கப்படவில்லை. ஆனால் நாம் மேலே குறிப்பிட்ட ச, ஞ, ய ஆகிய மூன்று ஒலிக்குப் பின்னர் வரும் ஐகாரமும், சொல்லுக்கு நடுவில் இரண்டு ஐகாரம் வரும்போது முதலில் இருக்கும் ஐகாரமும் குறுக்கமாகப் பேச்சுப் மொழியிலும் எழுத்துமொழியிலும் ஒலிக்கப்படுகின்றன. எனவே நன்னூலார் ஐகாரக் குறுக்கம் என்று விளக்கும்போது, பேச்சு மொழியில் வழங்கும் உச்சரிப்பையும் எழுத்து மொழியில் வழங்கும் உச்சரிப்பையும் சேர்த்துக் கூறிவிட்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது. இப்படி வேறு எதற்கும் பேச்சுமொழியின் உச்சரிப்பைக் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

ஐகாரக்குறுக்கம் மூன்று என்று நன்னூலார் கூறியது பொருந்தாது. இலக்கண விளக்கம் கூறியது போல (5.3) ஒன்று என்பதே சரி. சுவாமிநாதம் இரண்டு வகையாக மாத்திரை கூறிவிட்டு சார்பெழுத்தை வருணிக்கும்போது ஐகாரக்குறுக்கம் ஒன்று என்றது (15.2) முரணே ஆகும்.

### 3.2.7 ஔகாரக்குறுக்கம்

தொல்காப்பியர் ஔகாரக்குறுக்கத்தைக் கூறவில்லை; ஆனால், பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கூறியது என்று பலரும் எடுத்துக் காட்டியுள்ளார்கள். தொல்காப்பியர் சொல்லாததற்குக் காரணம், அது அவர் காலத்தில் வழங்கியிருக்காது என்று கருதப்படுகிறது. (உதாரணம், முருகரத்தினம், 1973:334). ஆனால், உண்மையில் குறுக்கம் பற்றிய கோட்பாடு காரணமாகவே அவர் சொல்லவில்லை.

மேலே ஐகாரக் குறுக்கம் என்பது தொல்காப்பியர்க்கு ஒரு மாத்திரை உடையது; அதுவே ஒத்துக்கொள்ளத்தகுந்தது என்றும் ஒன்றரை மாத்திரை என்பது பொருந்தாது என்றும் விளக்கப்பட்டது. அதன்படி வீரசோழியமும் நேமிநாதமும் ஔகாரக் குறுக்கத்திற்கு ஒன்றரை மாத்திரை என்பதால், உண்மையான குறுக்கமாக ஒலி நிலையில் கொள்ளமுடியாது. நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம் ஆகியவை ஔகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை உடையது என்று கூறுவதைக் கோட்பாட்டு நிலையில்

ஒத்துக்கொள்ளலாம் என்றாலும், தமிழ் மொழியில் அப்படிக் குறுகி வந்ததற்கு உதாரணம் இதுவரை யாரும் காட்டவில்லை. சங்கரநமச்சிவாயர்,

> இடவகையான் ஐகாரக் குறுக்கம் மூன்றும் ஔகாரக் குறுக்கம் ஒன்றும் வருமாறு காண்க

என்று குறிப்பிட்டார். சிவஞான முனிவர் இதற்கு விளக்கமாக

> ஐகாரக் குறுக்கம் மொழிமுதற்கண் ஒன்றரை மாத்திரையாயும் ஏனை இடங்களில் ஒருமாத்திரையாயும், ஔகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரையாயும் குறுகும் என்று உய்த்துணர்ந்து கொள்க.

என்று கூறியுள்ளார். எனவே, நன்னூலார் ஔகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை உடையது என்பதை உரையாசிரியர்கள் மறுத்து விட்டார்கள். ஒன்றரை மாத்திரை என்பது எழுத்து மொழியை அடிப்படையாகக் கொண்டதே தவிர, உண்மையான உச்சரிப்பை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஆகவே, ஔகாரக் குறுக்கம் என்பது ஒலி நிலையில் இல்லை என்றே கூற வேண்டும். இதனால்தான் சிவஞான முனிவர் ஔகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரை பெறும் என்பது பொருந்தாது என்று நன்னூல்விருத்தி உரையிலும், 'ஔகாரக் குறுக்கம் என ஒன்று இன்மை உணர்க' என்று முதற்சூத்திர விருத்தியிலும் (பக்.34) கூறியுள்ளார். தொல்காப்பியரும் ஔகாரம் குறுகி வேறு குறிலாக வராததால்தான் குறுக்கம் பற்றிச் சொல்லவில்லை. பிற்காலத்திலும் கூட உண்மையான ஔகாரக் குறுக்கம் வரவில்லை.

ஔகாரக் குறுக்கம் பற்றிய சுவாமிநாதத்தின் கருத்திலும் (15.2, 18.2) முரண்உள்ளது. ஐகாரம் போல ஔகாரமும் குறுகும் என்று கூறியதும் (20-2) தவறு.

### 3.2.8 மகரக்குறுக்கம்

தொல்காப்பியர், 'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்று திரிந்து வரும்போது (51) மகரம் குறுகி ஒலிக்கும் (52) என்று கூறி யுள்ளார். இங்கு னகரமெய் உச்சரித்த பிறகு விடுப்பு (Release) இல்லாமல் மூச்சுக் காற்றின் துணை கொண்டே மகரம் கூறப்படு வதால், முழுமையான அளவு காற்று அழுத்தத்தோடு உச்சரிக்கப் படுவதில்லை. எனவேதான் மகரம் குறுகி ஒலிக்கப்படுகிறது என்று கருதப்படுகிறது. இப்படி உச்சரிக்கப்படுவதை ஒலியியலார் இரட்டை உச்சரிப்பு (Double articulation) என்று குறிப்பிடுவார்கள் (Abercrombie, 1967:64)

தொடர்மொழியில் மகர ஈற்றுச்சொல்முன் வகர முதன்மொழி வரும்போது குறுகும் (330) என்று தொல்காப்பியர் விவரித்துள்ளார். இங்கு மரகம் முழுமையும் உச்சரிக்கப்படாமல் முன்னுள்ள உயிர், மூக்கொலி சாயல் (Nasalisation of the vowel) பெற்றதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மகரம் ஈரிதழ் (Bilabial) ஒலி; வகரம் கீழ்இதழ் மேல் பல்லொலி. எனவே மகரம் முழுமையாக உச்சரிக்கப்படவில்லை.

தனி மொழியில் வரும் மகரக் குறுக்கமும் தொடர்மொழியில் வருவதும் ஒலித்தன்மையில் வேறுபட்டது; ஆயினும் முழுமையாக உச்சரிக்கப்படாத நிலையைக் கருதி ஒரு பெயரே குறிப்பிட்டுவிட்டார். இங்குத் தொல்காப்பியர் மகரத்துக்குரிய அரைமாத்திரையில் குறைந்து ஒலிக்கும் என்றுதான் குறிப்பிட்டாதே தவிர அதற்குச் சரியான மாததிரை யளவு குறிப்பிடவில்லை. ஆனால், நேமிநாதர் கால்மாத்திரை அளவு (5) என்று கொண்டார். அதைப் பிற்கால எல்லா இலக்கணங்களும் (சுப்பிரமணியம், 1967:69 சுவாமிநாதம் 20.3) ஏற்றுக்கொண்டுள்ளன.

இலக்கண ஆசிரியர்கள் மாத்திரை கூறுவது ஒலியை உச்சரிக்கும் உண்மையான கால அளவு என்று கொள்ள முடியாது;. ஒப்புநிலை (Relative) என்றே கொள்ளவேண்டும். இதை முழு உண்மையாக எடுத்துக்கொண்டதன் விளைவுதான் மகரக் குறுக்கத்துக்குக் கால் மாத்திரை என்று கூறியது.

பிற்கால ஆசிரியர்கள் சொல்லுக்கு இறுதியில் -ண்ம் என்ற மெய் மயக்கம் வந்தாலும் மகரக் குறுக்கம் வரும் என்று கூறியதை, மொழி வரலாற்றின் அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் என்பதைவிட, மொழி அமைப்பில் புதிதாகக் கண்டு கூறிய ஒரு சிறு உண்மை யென்றே கருதலாம்.

மகரக்குறுக்கம் வருமிடத்தை ஒட்டி (ண்,ன்,வ் ஆகிவை களுக்குப்பின்) மூன்று என்று நன்னூலார் கூறியது பொருந்தாது; மகரக்குறுக்கம் ஒலிநிலையில் ஒன்றே. இலக்கண விளக்கமும் (5.6) சுவாமிநாதமும் (15.2) ஒன்று என்றே குறிப்பிட்டுள்ளன. முத்துவீரியமும் தொன்னூல் விளக்கமும் எண்ணிக்கை குறிப்பிடவில்லை.

### 3.2.9 உயிர்மெய்

உயிர் மெய்யிலும் மாத்திரைக் குறுக்கம் இருக்கிறது (குறில் உயிர்மெய் (குறில் 1 + மெய் ½) ஒன்றரை மாத்திரைக்குப் பதில் ஒருமாத்திரையும், நெடில் உயிர் 2½ மாத்திரைக்குப் பதில் இரண்டுமாத்திரை பெற்றது) என்று கருதிச் சார்பெழுத்தாகக் கொண்டுவிட்டார் நன்னூலார். இது பொருந்தாது.

# 4. தொல்காப்பியரின் 'எழுத்து'

## 4.0 முன்னுரை

தமிழ் இலக்கண நூல்களில் சார்பெழுத்து என்று பொதுவாகக் கருதப்படுபவை பெரும்பாலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளை (உதாரணம் உயிரளபெடை ஏழு ஒலியையும், ஆய்தம் ஆறு ஒலியையும்) குறிக்கின்றன என்பது, போன இயலில் விளக்கப்பட்டது. ஆயினும், அவைகளை ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிகளாக எடுத்துக்கொள்ளாது, உயிரளபெடை ஒற்றளபெடை எனத் தனியே சார்பெழுத்து என்றே இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் என்பது முக்கியமான செய்தி. எனவே உயிரளபெடை, ஆய்தம், குற்றியலுகரம் என்று தொகுப்பாகக் குறிப்பிடுவது ஒலிநிலைத் தொகுப்பே ஆகும்.

மொழியில் உள்ள ஒலிகளை அங்குச் செயல்படும் விதத்தை ஒட்டிப் பாகுபடுத்துவது மொழி ஆராய்ச்சியில் சிறப்பான இடத்தை வகிக்கிறது. இது தமிழ் இலக்கண ஆராய்ச்சியில் முதல், சார்பு என்று கருதப்படுகிறது. இதுவே மொழியியலில் ஒலியன் பாகுபாடு என்று சொல்லப்படுகிறது. ஆயினும், இலக்கண ஆசிரியர்களிடையேயும் மொழியியலாளர்களிடையேயும் அப்படிப் பாகுபாடு செய்யும் முறையில் கருத்து ஒற்றுமை இல்லை. இலக்கண ஆசிரியர்கள் செய்த பாகுபாடுகளில் தொல்காப்பியரின் பாகுபாடு பற்றி இந்த இயலிலும், பிற இலக்கண ஆசிரியர்களின் பாகுபாடு பற்றி அடுத்த இயலிலும் விளக்கப்படும். மொழியியலாளரைப் பொறுத்தவரையில் இன்று இரண்டு பெருங் குழுக்கள் காணப்படுகின்றன (பாலசுப்பிரமணியன், 1972:52). ஒன்று: வருணனை மொழியியல் அல்லது அமைப்பியல் மொழியியலை ஒட்டியது. இவர்கள்தான் முதலில் ஒலியன் என்று பெயரிட்டுக் குறிப்பிட்டார்கள். அடுத்தது மாற்றிலக்கண மொழி யியலை ஒட்டியது. இவர்கள் இதை விதிமுறை ஒலியன் (Systematic Phoneme) என்று சிறப்பாகவும் - பல சமயங்களில் ஒலியன் என்று பொதுவாகவும் குறிப்பிடுவார்கள். இந்த இரண்டு குழுவுக்குமுள்ள கொள்கை வேறுபாட்டைப் பாலசுப்பிரமணியன் (1972) நன்கு விளக்கியுள்ளார். இராமசாமி (1977) விதிமுறை ஒலியன் பற்றி எழுதிய தனிக்கட்டுரையும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

## 4.1 தொல்காப்பியப் பாகுபாடு

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தின் முதல் சூத்திரத்திலேயே

**எழுத்தெனப் படுவ**
**அகரமுதல் னகர விறுவாய்**
**முப்பஃ தென்ப**
. . . . . . . . . . . . . . . . . . (1)

என்று **'எழுத்தெனப்படுவ'** என்ற பிரிவில் முப்பது எழுத்துகள் (உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு) அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்த சூத்திரத்தில் 'எழுத்தோரன்ன' என்று ஒரு பிரிவு கூறிக் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றும் அதில் அடங்கும் என்று கூறியுள்ளார். இந்த முப்பத்து மூன்று எழுத்துகளையும் சேர்த்துப் புணரியல் முதல் சூத்திரத்தில் 'எழுத்து' என்று பொதுப் பெயரால்,

**மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்** (103.1)

என்று **'எழுத்து'** என்று பொதுவாகக் குறிப்பிட்டிருந்தாலும், அது சிறப்புப் பொருள் உடையது என்பதைக் காட்டுவதற்காகவே 'எழுத்து' என்று மேற்கோள் குறியிட்டு இயல் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இங்கு 'எழுத்து' என்பது புணரியலில் மேலே குறிப்பிடப்பட்ட அடியிலுள்ள எழுத்தை மட்டுமே சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். ஏனைய இடங்களில் வரும் எழுத்து வேறு வேறு பொருள்களை உடையது. ஆகவே, முப்பத்து மூன்று எழுத்துகளை 'எழுத்து' என்றும், அவைகளில் முப்பதை 'எழுத்தெனப்படுவ' என்றும், மூன்றை 'எழுத்தோரன்ன' என்றும் பாகுபடுத்துவது நேரடியாகவே தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது என்று கொள்ளலாம். ஆனால், உயிரளபெடை ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆகியவற்றை எதில் அடக்குவது? மயிலைநாதர் உரைப்படிப் பார்த்தால், நன்னூலாருக்கே இந்தக் கேள்வி தோன்றி, வேறு எங்கு அடக்குவது? எனத் தெரியாமல்தான் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றோடு உயிரளபெடை முதலியவற்றையும் சேர்த்துவிட்டார் என்று கொள்ளமுடிகிறது.[1]

---

1 எழுத்தெனப்படுவ, அகர முதல்—என ஆசிரியர் தொல்காப்பியரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக்கொண்டார் என்க. அஃதே அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோ வெனின் அஃதே நன்று சொன்னாய்; ஒழிந்தது எப்பாற்படும் என்றார்க்கு மூன்றாவதோர் பகுதி சொல்லல் ஆவது இன்மையானும்...
என்பது மயிலைநாதர் உரை விளக்கம் (நன்.59)

அப்படியானால் முதல், சார்பு என இரண்டாகப் பகுப்பது தொல்காப்பியர் கருத்துக்கு ஒவ்வாதது. ஏனெனில், அவரே அந்த ஒலிகளைத் தெரிந்திருந்தும் சேர்க்காமல் விட்டதை நாம் சேர்ப்பது, அவர் கருத்தை மதிக்கவில்லை என்பதோடு, அவரை நாம் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் ஆகிவிடும். எனவே, இந்த எழுத்துகளையெல்லாம் இன்னொரு பிரிவில் அடங்குனவாக மறைமுகமாகத் தொல்காப்பியர் கருதினார் என்று கொள்ளலாம். அந்தப் பிரிவு 'எழுத்துகள் அல்லாதன' என்ற பொருளில் 'அல் எழுத்து' என்று முன்னரே (சண்முகம் 1975ஆ) குறிக்கப்பட்டிருக்கிறது. தொல்காப்பியரே அல்வழி, அஃறிணை, அல்நோக்கு (வே.ம.10) என்று கையாண்டுள்ளார். இந்தக் கருத்து அடிப்படையில் தமிழ் ஒலிகளைக் கீழ்க்கண்டவாறு தொல்காப்பியர் பகுப்பதாகக் கொள்ளலாம்.




(கு.இ = குற்றியலிகரம்; கு.உ. = குற்றியலுகரம்; ஐ.கு = ஐகாரக் குறுக்கம்; ம.கு = மகரக்குறுக்கம்; உ.அ = உயிரளபெடை; ஒ.அ = ஒற்றளபெடை) இனி இந்தப் பாகுபாட்டின் காரணத்தையும் சிறப்பையும் புரிந்துகொள்ள முயலுவோம்.

## 4.2 எழுத்து – அல் எழுத்து வேறுபாடு

தமிழ் ஒலிகளை எழுத்துகள், அல் எழுத்துகள் என்று பாகுபடுத்தியதற்குரிய காரணங்களும் அல்லது அடிப்படையும், அவை களின் வித்தியாசமுமே தொல்காப்பியரின் ஒலியன் கோட்பாட்டைப் புலப்படுத்தும்.

தொல்காப்பியர் 'எழுத்து' எனப் புணரியல் முதல் சூத்திரத் தில் குறிப்பிட்டதன் மூலம், அவை புணர்ச்சிக்கு உரியவை என்று கருதுகிறார்; அப்படியானால் அல் எழுத்துகள் புணர்ச்சிக்கு உரியவை

அல்ல என்று ஆகும். அதாவது புணர்ச்சிக்கு உரியவை என்பவை. நிலைமொழி வருமொழியாகக் கொள்ளப்படும் சொற்களில் வருபவை என்று பொதுவாகவும், புணர்ச்சிக்குரிய அடிப்படை வடிவத்தில் வரக்கூடிய ஒலிகள் அதாவது ஒலியன்கள் என்று சிறப்பாகவும் கொள்ளவேண்டும். தொல்காப்பியரின் 'எழுத்து' என்பது மாற்றிலக்கண விதிமுறை ஒலியனியல்படி 'விதிமுறை ஒலியன்' ஆகும் (பாலசுப்பிரமணியன், 1972.) இதையே மாற்றிலக்கண கோட்பாட்டின்படி 'ஒலியன்' என்று பொதுவாகவும் கூறலாம் (பாலசுப்பிரமணியன், 1974). அல்எழுத்துக்கள் குறிப்பிட்ட ஒலி சூழலில் வருபவையாகவும், புணர்ச்சி மாற்றத்துக்குப் பிறகு வருபவையாகவும் அமையும்.

விதிமுறை ஒலியன் என்பது அறுபதுகளில் ஏற்பட்ட மொழியியல் வளர்ச்சியைக் கொண்டு நாம் எடுக்கும் முடிவு இது. இதற்கு முன்னாலேயே இந்தக் கருத்தின் அடிவேராகச் சாபீர், புளூம்பீல்டு போன்ற அமெரிக்க அறிஞர்களும், பாணினியும் கூட இந்தக் கருத்துகளைக் கொண்டிருந்தார்கள் என்று இன்றைய மொழியியல் வரலாறு தெளிவுபடுத்துகிறது (Anderson, 1974:20-25,32). அவர்கள் கருத்தோடு, தொல்காப்பியர் கருத்து ஒப்புடை உடையது என்று கொள்வதே மிகவும் பொருத்தமாக இருக்கும். அவர்கள் 'எழுத்து'களை உருபொலியன் என்றே கருதினார்கள்.[2] தொல்காப்பியரும் 'எழுத்து' என்று புணரியலில் கூறியதும் அதை உருபொலியன் (Morphophoneme) என்று கருதினார் என்று கொள்ளத் தோன்றுகிறது.

இப்பொழுது இரண்டு முக்கியமான கேள்விகள் எழுகின்றன. ஒன்று: மொழியிலுள்ள ஒலிகளை விதிமுறை ஒலியன் அல்லது உருபொலியன் என்றோ, அல்லாதன என்றோ எந்த அடிப்படையில் பிரிப்பது? அதற்கான நியதிகள் என்ன? என்பது. இரண்டு : தொல்காப்பியர் கூறிய முப்பத்து மூன்று ஒலிகள் மட்டும் எப்படி உருபொலியனாக அமைந்து மற்றவை அப்படி அமையாமல் செயல்படுகின்றன? என்பது. இங்கு நாம் இரண்டாவது கேள்விக்கு விடை காண்பதன் மூலமே முதல் கேள்விக்கு விடைகூற முடியும்.

தமிழ் இலக்கண ஆராய்ச்சியில் இதுவரை அல் எழுத்துகளை எழுத்தோரன்னவாகிய எழுத்துகளோடு ஏன் சேர்த்துக் கூறவில்லை அல்லது தொல்காப்பியர் அப்படி ஏன் சொல்லவில்லை? என்ற பிரச்சனையை எழுப்பி, விடைகாண முயன்றார்கள். பாலசுப்பிரமணியன் (1972) மட்டுமே

---

2 ஆண்டர்சன் (1974:24) இதை Morphhoponemic representation என்று குறித்துள்ளார்.

எழுத்தோரன்னவாகிய எழுத்துகளை 'எழுத்து' என்று எப்படிக் கொள்வது? என்று கேள்வி கேட்டுப் பதில் சொல்ல முயன்றுள்ளார். இன்னும் அல் எழுத்துகள் ஏன் 'எழுத்து' ஆக அமையவில்லை? 'எழுத்தெனப்படுவன' எப்படி 'எழுத்து' ஆகச் செயல்படுகின்றன என்ற கேள்விகளையும் கேட்டு விடை கண்டால்தான், தொல்காப்பியரின் 'எழுத்து' பற்றிய கோட்பாட்டின் முழுப் பரிமாணமும் தெரிந்துகொள்ளமுடியும். எழுத்தும், அல்எழுத்தும் முறையே புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வரும் உருபொலியன் அல்லது விதிமுறை ஒலியன் என்றும், புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வராதன என்றும் மேலே பொதுவாகக் குறிப்பிட்டோம். இனி அவை தமிழ்மொழி அமைப்பில் எப்படி அவ்வாறு அமைந்துள்ளன? என்று பார்க்க வேண்டும். இதற்கு முதலில் 'எழுத்தோ ரன்ன'வாகியவை எப்படி விதிமுறை ஒலியன்கள் ஆகும்? என்று விளக்குவோம்.

## 4.3 எழுத்தோரன்ன

இளம்பூரணர் 'எழுத்தெனப்படுவ' 'எழுத்தோரன்ன', என்ற வேறுபாடுகளைச் சிறப்பு உடையதாகக் கருதவில்லை.

> 'எழுத்தோரன்ன' என வேண்டா கூறிய வதனான் முன் 'எனப்படுவ' என்ற சிறப்பு அம்மூன்றற்கும் கொள்ளக் கிடந்த மையின் அது விலக்குதல் பெறும் என்பது. சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகினவிடத்து அவை உயிர் ஆகற்பாலன. அவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும் நோக்கி வேறெழுத்து என்று வேண்டினார் என உணர்க.
> (2-ஆம் சூத். உரை).

இங்கு 'எழுத்தோரன்ன'வுக்கும் 'எழுத்தெனப் படுப'வுக்கும் சிறு வேறுபாட்டை ஒத்துக்கொண்டு, 'எழுத்தோரன்ன' பிரிவில் உள்ள மூன்றில் (குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்) முதல் இரண்டை 'எழுத்து' ஆகக் கருதுவதற்குக் காரணங்களையும் (புணர்ச்சி வேற்றுமை பொருள் வேற்றுமை) விளக்கியுள்ளார்.

### 4.3.1 குற்றியலுகரம்

இளம்பூரணர் 68ம் சூத்திர உரையில் 'நாகு எனவும் நகு எனவும் குறுகியும் குறுகாதும் நின்ற உகரங்கள் போல நுந்தை என்று குறுக்கமாய

வழியும் இதழ் குவித்துக் கூறாத வழியும் பொருள் வேறுபடாதவாறு அறிக' என்று கூறுவதால், நாகு என்ற குற்றியலுகர ஈற்றுச் சொல்லும் நகு என்ற முற்றியலுகர ஈற்றுச் சொல்லும் பொருள் வேறுபடுவதாகக் கருதுகிறார் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தச் சொற்கள் முதலில் உள்ள உயிரொலியால் (நெடில் - குறில்) வேறுபடுகிறதே தவிர, இறுதியில் உள்ள குற்றியலுகர - முற்றியலுகரத்தால் மட்டும் அல்ல. எனவே, இந்த உதாரணங்கள் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் பொருள் வேறுபாட்டைக் காட்ட உதவவில்லை.

நாகு + அரிது > நாகரிது
நகு + அரிது > நகுவரிது

என்று புணர்ச்சியில் அவை வேறுபடுவதாகக் காட்டலாம். இங்குப் புணர்ச்சி வேறுபாட்டைக் குறிலுக்கும் நெடிலுக்கும் ஏற்றிச் சொல்ல முடியாது.[3] இறுதியில் உள்ள முற்றியலுகரமும் குற்றியலுகரமுமே காரணமாக அமைகின்றன.

ஆனால், நச்சினார்க்கினியர் 68ஆம் சூத்திர உரையில் 'காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய் பொருள் வேறுபட்டு நின்றாற் போல................' என்று கூறுகிறார். தேவநேயப் பாவாணர் கழகப் பதிப்பில் அடிக்குறிப்பாக 'முற்றுகரமாயின் ஏவல் வினையும் குற்றுகரமாயின் தொழிற்பெயரு மாகும்' என்று அந்தப் பொருள் வேறுபாட்டை விளக்கியுள்ளார். இதன்படி குற்றியலுகரமும் முற்றியலுகரமும் பொருள் வேறுபாடு உடையதாய் அமைகிறது. இதை ஒட்டிக் கந்தசாமி (1977:64) புணர்ச்சி வேறுபாட்டையும் சுட்டிக்காட்டியுள்ளார். முருக்கு என்பது முற்றியலுகரமாயின் முருக்குவாய் என ஏவல் பொருண்மையும் குற்றியலுகரமாயின் முருங்கைப் பெயர்ப் பொருண்மையும் தரும்.

---

3. நால் + நூறு > நானூறு
நல் + நூல் > நன்னூல்

என்ற புணர்ச்சிகளில் உள்ள வித்தியாசம் (முதலில் ஒரு னகரமும் இரண்டாவதில் இரண்டு னகரமும் உள்ளது) நிலை மொழி ஈற்றிலோ வருமொழி முதலிலோ வேறுபாடு இல்லாததால், நிலை மொழியில் உள்ள நெடிலும் குறிலுமே புணர்ச்சி வேறுபாட்டுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது. முதல் இயலில் (பக்.21) குறிப்பிட்டபடி நெட்டெழுத்து முன் மெல்லினம் உடனிலை மயக்கமாக வராத காரணத்தினால் ஏற்பட்ட புணர்ச்சி வித்தியாசம் என்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது. ஆனால் நாகு, நகு என்பதில் நிலைமொழி இறுதியில் ஒலி வேறுபாடு இருப்பதால், அதுவேதான் புணர்ச்சி வேறுபாட்டுக்குக் காரணம் என்று கொள்ள வேண்டும்.

முருக்கு + அதனை > முருக்குவதனை - முற்றியலுகரம்
முருக்கு + அழகிது > முருக்கழகிது - குற்றியலுகரம்
(முருக்கு = முருங்கை).

இவை இளம்பூரணர் கருத்தைத் தெளிவுபடுத்தும் உதாரணங்கள்தான். ஆயினும், இவற்றின் வரலாறு சந்தேகத்துக்கு உரியதாக அமைந் துள்ளது. இதற்குக் காரணம் இளம்பூரணர் இப்படிப்பட்ட உதாரணங்களை ஏன் தரவில்லை என்பது. இதனால் இது நச்சினார்க் கினியர் கால மொழி வளர்ச்சியாகவே கருதப்படுகிறது (உதாரணம், சண்முகம், 1967:53). ஆயினும், இளம்பூரணர் குறிப்பிடாத ஒரு காரணத்துக்காக இந்த உதாரணங்களைப் பிற்காலத்து என்று தள்ளிவிட முடியாது என்பது உண்மைதான். மேலும், ஒலிநிலையில் கூட இந்த உதாரணங்கள் கொஞ்சம் ஐயத்துக்கு உரியவையாகவே உள்ளன. எனவே, இந்த இரண்டு பிரச்சனை குறித்துக் கொஞ்சம் விளக்குவது அவசியம். பிற்கால உரையாசிரியர் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டார் என்ற காரணத்தைவிட, அமைப்பு நிலையில் அந்த உதாரணங்கள் சந்தேகத்தைத் தோற்றுவிப்பதே இவைகளை ஏற்றுக்கொள்ளத் தடையாய் இருக்கிறது. தொல்காப்பியர் கருத்துப்படி குற்றியலுகரம் 'எழுத்தோரன்ன' ஆக இருப்பதோடு 'சார்ந்து வரும் மரபினவாகவும் அமைகிறது. இதன்படி அந்த ஒலிகள் வரும் இடங்களை வரையறுத்துக் கூறும்படி அமையும். நச்சினார்க்கினியர் கொடுத்துள்ள உதாரணப்படி குற்றியலுகரம், முற்றியலுகரம் ஆகிய இரண்டுமே ஒரே ஒலிச்சூழலில் வந்துவிடுகிறது; அப்படியானால் வருமிடம் வரையறுத்துக் கூறும்படி இல்லை என்றாகிறது. இது 'எழுத்தோரன்ன' வாகிய சார்பெழுத்தின் பண்புக்கு மாறுபட்டது. எனவேதான் தொல்காப்பியர் காலத்தில் இப்படிப்பட்ட உதாரணங்கள் இருந்திருக்க முடியாது என்று நாம் கருத வேண்டியிருக்கிறது.

அந்த உதாரணங்களின் சரியான ஒலி வேறுபாட்டைப்பற்றிப் பார்ப்போம். இன்று அப்படிப்பட்ட சொற்களை ஒலி அழுத்தத்தின் மூலமே வித்தியாசப்படுத்துகிறோம். மேலும் தொல்காப்பியரும் 'தபு' என்ற சொல் **'இருவயின் நிலையும் பொருட்டா கும்மே'** (79.2) என்னும்போது படுத்துச் சொல்ல 'நீ சா' எனத் தன்வினையாயும், எடுத்துச்சொல்ல 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாயும் வரும் என்று இளம்பூரணர் எழுதியுள்ளார். நச்சினார்க்கினியரும் இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறார். இதற்கு அடிக்குறிப்பு எழுதிய தேவநேயப் பாவாணர் 'இதனால் ஆங்கிலத்திற் போல் பண்டைத் தமிழிலும் அசையழுத்தம் (Accent) ஒரு சொல்லின் வகையையும்

பொருளையும் வேறுபடுத்திற்று என்பதை அறியலாம்' என்று குறிப்பிடுவதும், அந்தக் கருத்தை வலியுறுத்துகிறது. இப்படிப்பட்ட ஒலியழுத்த வேறுபாட்டையே நச்சினார்க்கினியர் 'இறுதியில் உள்ள உயிரொலி வேறுபாடாக, பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் உடையதாகக் காட்டுவதற்காகக் கொண்டுவிட்டாரோ என்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறது. எனவே, நச்சினார்க்கினியர் காட்டிய உதா ணங்கள் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்டு இருப்பதோடு, ஒலி லையிலும் சந்தேகத்துக்கு உரியதாக இருப்பதால்தான் பிற்கால உதார களாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, குற்றியலுகரமும் முற்றிய ரமும் தொல்காப்பியர் காலத்தில் துணைநிலை வழங்கில் இருந்திருக் வேண்டும். ஆயினும், அவை புணர்ச்சி வேறுபாடு உடைமையால் தனி எழு ாகத் தொல்காப்பியர் கொண்டிருக்க வேண்டும். பாலசுப்பிரம னின் (1972:65) கருத்து இங்குச் சுட்டிக்காட்டத்தகுந்தது.

> குற்றியலுகரம் புணர்ச்சியில் உகரத்தினின்றும் வேறுபட்டு இயல்கின்றது. குற்றியலுகரத்தை உகரத்தின் மாற்றொலியாகக் கருதி உகரமாகவே எழுதினால் குற்றியலுகரம் வேறுபட்ட புணர்ச்சி மாற்றங்களைக் காட்டுமிடங்களில் புதிய விதிகள் கூறவேண்டியிருக்கும். நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என்ற ஆறுவகைத் தொடர் உகரங்களையும் மீண்டும் மீண்டும் கூற வேண்டியிருக்கும். ஆயின் அவற்றை ஒன்றாக்கித் குற்றியலுகரம் என்ற ஒரு குறி கொடுத்தமையின் விதிகளின் எண்ணிக்கை குறைகின்றது.

இதில் புணர்ச்சி வேறுபாடு மட்டுமன்றி இலக்கணம் எளிமைப் படுவதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது கவனிக்கத்தகுந்தது. எனவே, குற்றியலுகரம் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வந்து எழுத்து ஆகச் செயல்படுகிறது. தொல்காப்பியர் புணர்ச்சி வேறுபாடு கருதியே தனி 'எழுத்தோரன்ன' எழுத்தாகக் கொண்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

## 4.3.2 குற்றியலிகரம்

உரையாசிரியர்கள் குற்றியலுகரம் முற்றியலிகரத்தோடு பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் உடையது என்று குறிப்பிட்டாலும் அதற்கான உதாரணங்களை யாரும் எடுத்துக் காட்டவில்லை. இலக்கணவிளக்கம் பதிப்பித்த கோபாலையர் (1971:139) உரை விளக்கத்தில் குற்றியலுகரத்துக்கு நச்சினார்க்கினியரை ஒட்டிப்

பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் உண்டு என்று குறிப்பிட்டு குற்றியலிகரத்துக்குப் பொருள் வேற்றுமை மட்டுமே காட்டுகிறார்.

காட்டு+யாத்தான்=காட்டியாத்தான் - 'காட்டின் கண் யாத்தான்'
குற்றியலிகரம்

காட்டி+யாத்தான்=காட்டியாத்தான் - 'காண்பித்து யாத்தான்'
முற்றியலிகரம்.

இங்கு 'முற்றியலிகரம், குற்றியலிகரங்களால் பொருள் வேறுபாடு ஏற்படுவதும் காண்க' என்று கூறினாலும் உண்மையில் குற்றியலுகரமும் (முதல் உதாரணம்) முற்றியலிகரமும் (இரண்டாம் உதாரணம்) பொருள் வேறுபடுவதாகக் கொள்ளவேண்டும். அவரே அதே நூலில் 357 ஆம் பக்கத்தில் இப்படிப்பட்ட விளக்கமே கொடுத்துள்ளார்.

> குன்றியாது என்பது முற்றியலிகரமாயின் நிலைமொழி குன்றி மணியையும் குற்றியலுகரமாயின் குன்றினையும் (அதாவது குன்று+யாது) குறிக்கும் பொருள் வேறுபாடும் காண்க.

என்று விளக்கியுள்ளார். இதன்படி புணர்ச்சி பெற்ற நிலையில் முற்றியலிகரமும் குற்றியலிகரமும் வேற்றுநிலை வழக்கில் வர, புணர்ச்சிபெறாத நிலையில் குற்றியலுகரமும் முற்றியலிகரமும் வேற்றுநிலை வழக்கில் அமைந்துள்ளன. எனவே விளக்கமுறை மொழியியல்படி குற்றியலிகரமும் முற்றியலிகரமும் ஒலியன்களாக அமைய விதிமுறை ஒலியன்படியே குற்றியலுகரமும் முற்றியலிகரமும் ஒலியன்களாகும். கந்தசாமி காட்டும் உதாரணங்களும் இதே வகையைச் சார்ந்தவை. எனவே, இவர் கருத்துப்படி குற்றியலிகரமும் முற்றியலிகரமும் பொருள்வேறுபாடு மட்டுமே உடையதாக ஆகிறது. ஆனால், கந்தசாமி (1977:63) வேறு உதாரணங்கள் கொடுத்துப் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையது எனப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> குற்றியலிகரமும் முற்றியலிகரமும் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும்:
>
> நாடி+யாது. இதனை முற்றியலிகரமாகக் கொண்டால் இயல்புப் புணர்ச்சியாகும். நிலைமொழி நாடி என்ற சொல்லிற்குத் 'தாது' என்று பொருளாகும். இதனையே குற்றியலிகரமாகக் கருதினால் நிலைமொழி நாடு+யாது → நாடியாது என அமைதலின் உகரத்திரிபாய் நின்றது. இங்குத் தேசம் என்ற பொருளில் நிலைமொழி நின்றது.

நிலைமொழியிலேயே குற்றியலிகரமும் முற்றியலிகரமும் நின்று புணர்ச்சி மாறுபாட்டால்தான் புணர்ச்சி வேறுபாடு உடையதாகக் கருதமுடியும். ஆனால், இங்கு நிலைமொழியில் குற்றியலுகரமும் முற்றியலிகரமும் இருப்பதால், இவை 'புணர்ச்சி வேறுபாடு' உடையன அல்ல. ஆகவே இங்கும் பொருள் வேறுபாடு மட்டுமே உடையதாகக் கருதவேண்டும்.

இப்படிப்பட்ட உதாரணங்களை உரையாசிரியர்கள் கூடத் தராவிட்டாலும், இவை தொல்காப்பியர் கால உதாரணங்களாக ஏற்றுக்கொள்ளத்தகுந்தவையே. **குன்று** (நற்.18-10; நெடு.12,88) **குன்றி** (புறம். 159-25; 300-4); **காடி** (கஞ்சி, ஊறுகாய் - பத்துப்பாட்டு 4.57, 310), **காடு** (பத்துப்பாட்டு 7.34) போன்ற உதாரணங்கள் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளன. எனவே, தொல்காப்பியர் காலத்திலும் இவை வழங்கியே இருக்கவேண்டும். ஆயினும், குற்றியலிகரமும் முற்றியலிகரமும் புணர்மொழியில்தான் பொருள் வேறுபடுகின்றன; தனிமொழியில் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். எனவே, மேலே குறித்தபடி புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் நிலைமொழியாக வரவில்லை (அப்படி வருவது குற்றியலுகரமே). எனவே, தொல்காப்பியர் கருத்துப்படித் தனி 'எழுத்து' ஆகக் கொள்ள முடியாது.

வருணனை மொழியியலார் **குன்றியாது** போன்ற உதாரணங்கள் குற்றியலிகரமாயும் (குண்டுமணியாது) குற்றியலுகரமாயும் (குன்று யாது) வருவதால் அவை குறைந்த பட்ச இணைச் சொற்கள் (Minimal pair) ஆயிற்றே; எனவே இரண்டும் ஒலியன் என்று கொள்வதற்கு நல்ல சான்று அல்லவா! என்று கருதக்கூடும். அப்படியானால் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் தொல்காப்பியர் கருத்துப்படித் துணைநிலை வழக்கில் வருவதால், அந்த இரண்டையும் ஒரு ஒலியனின் மாற்றொலிகளாகத்தான் கருத வேண்டும். ஆயினும், அங்கு நாம் துணை நிலை வழக்கில் வருவதைப் புறக்கணித்து விட்டு, அவை புணர்ச்சியில் மாறுபடுகின்றன என்பதற்காக வெவ்வேறு ஒலியன்களாகக் கருதினோம். அதுபோல் இங்குப் புணர்ச்சி நிலையைக் கருதினால், குற்றியலிகரமும் முற்றியலிகரமும் வேறுபடாததோடு புணர்ச்சியின் அடிப்படை வடிவத்திலும் வரவில்லை. எனவே புறநிலையில் குறைந்தபட்ச இணையாக இருந்தாலும், புதைநிலையில் குற்றியலுகரமும் முற்றியலிகரமாக இருப்பதால் குற்றியலிகரத்தைத் தனி ஒலியனாகக் கொள்ளமுடியாது; கொள்ளவேண்டியதும் இல்லை. இதுவே வருணனை மொழியியலின் ஒலியனியல் கொள்கைக்கும் மாற்றிலக்கணக் கொள்கைக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு ஆகும்.

இந்த இடத்தில் மொழியியல் கோட்பாட்டு நிலையில் ஏற்பட்ட வளர்ச்சிக் காரணத்தைத் தெரிந்து கொள்வது மேலே கூறிய கருத்தின் மென்மையைப் புரிந்து கொள்ள உதவும்.

ஆண்டர்சன் (1974:77) ஒலியனியல் ஆராய்ச்சியில் வருணனை மொழியியலார் 'வேற்றுமைநிலை வழக்கு' என்ற கொள்கைக்குக் கொடுத்த விளக்கம், சிக்கல் நிறைந்தது என்று விரிவாகக் காட்டியுள்ளார். ஒன்று: ஒலிவேறுபடாத இரண்டு வடிவம் ஒரே பொருள்படும்; அதாவது ஒருசொல் பலபொருள். மாலை - சாயங்காலம், பூமாலை; பார் - பார்த்தல், பூமி, பாறை. இன்னொன்று பலசொல் ஒரே பொருள்படும் - இது இரண்டு வகைப்படும். (அ) போலிச்சொற்கள் - பந்தல் ~ பந்தர்; நிலம் ~ நிலன். அதாவது ஒலிவேறுபட்டுப் பொருள் வேறுபடாதது. (ஆ) ஒருபொருள் பன்மொழிச் சொற்கள் - உண், தின், சாப்பிடு என்பன ஒரு பொருளையே குறிக்கின்றன; காண், பார், நோக்கு என்பனவும் ஒரு பொருளையே உடையன. இவை ஒலி முற்றிலும் வேறுபட்டும், பொருள் வேறுபாடு இல்லாதவை. எனவே, வேற்றுநிலை வழக்கு அடிப்படையில் ஒலியனாகக் கொள்ளும் கருத்து முழுவதும் ஒத்துக்கொள்ள முடியாதது என்று அவர் வாதிட்டுள்ளார். இதுபோலவே தாய் மொழியாகக் கொண்டவர்களின் உள்ளுணர்வை ஒட்டி ஒலியன் அமைக்கலாம் என்ற வருணனை மொழியியலார், செயல் முறை விளக்கமாகத் தருவதும் பொருந்தாது என்று ஆண்டர்சன் விளக்குகிறார். ஒலி வேறுபாடு இல்லாத இரண்டு சொற்களைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஒலி வேறுபாடு உடையன என்று கூறுவதையும், ஒலி வேறுபாடு உடைய சொற்களில் ஒலி வித்தியாசமே இல்லை என்று சாதிப்பதையும் எடுத்துக்காட்டி, இணைச் சொற்களின் மிகப்பெரிய தோல்வி என்று கூறியுள்ளார்.[4] எனவேதான் ஒரு மொழியின் ஒலியனை நிர்ணயிக்க ஒலிப் பண்புகளையும், வரன்முறையை - அதாவது வேற்றுநிலை வழக்கு, துணை நிலை வழக்கு ஆகியவற்றை மட்டுமே எடுத்துக்கொள்ளக் கூடாது என்று மாற்றிலக்கண மொழியியலாளர்கள் முடிவுக்கு வந்தார்கள். அப்படியே தொல்காப்பியர் 'எழுத்து'களை வரையறுக்கும்போது, ஒலிப்பண்பு வேறுபாடுகளை மட்டும் பார்க்காது புணர்ச்சி வேறுபாடு, இலக்கண எளிமை முதலியனவற்றையும் மனத்தில் கொண்டுள்ளார். குற்றியலுகரம் துணை நிலை வழக்காக இருந்தும், தனி எழுத்தாக கருதியதற்கு மேலே கூறிய காரணம் வருணனை

---

4 Maximal failure of the minimal pair என்பதே லேபாவின் கூற்று. ஒத்தது.

மொழியியலுக்கு மாறுபட்டு, மாற்றிலக்கண ஒலியியல் கோட்பாட்டுக்கு ஒத்தது. மேலும், குற்றியலிகரமும் முற்றியலிகரமும் தொடர் மொழியில் வேற்றுநிலை வழக்கில் வந்தாலும், அந்த வேற்றுநிலை வழக்கைக் குற்றியலிகரத்துக்கும் முற்றியலிகரத்துக்கும் இருப்பதாகக் கொள்ளாது, குற்றியலுகரத்துக்கும் முற்றியலிகரத்துக்கும் இருப்பதாகக் கூறி விட்டார். அதாவது புணர்மொழி குற்றியலிகரத்தைத் தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் (சூ.5) கூறியதன்மூலம் காட்டும் நுட்பம் இது. எனவே, புணர்மொழியில் குற்றியலிகரமும் முற்றியலிகரமும் வேற்று நிலை வழக்கில் வந்தாலும், முற்றியலிகரத்தைத் தனி எழுத்தாகக் கொள்ளமுடியாது.

இனி, தனிச் சொல்லில் குற்றியலிகரத்தின் எழுத்துத் தன்மை யைப் பார்ப்போம். இது **மியா** என்ற ஒரு சொல்லில் மட்டுமே வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் (34)

இந்தச் சொல்லை வரலாற்று முறையிலும் வருணனை முறையிலும் மறு வருணனை செய்கிறவர்கள், **மியா** என்பது பகாப்பதம் அல்ல; அது ஒரு பகுபதம் என்று விளக்கியுள்ளார்கள். எல்லோருமே (உதாரணமாக வேங்கடராசுலு ரெட்டியார் (1944:36), கந்தசாமி (1977:73) குற்றியலிகரம் நிலைமொழியிலும் வருமொழியிலும் அமையாது, புணர்ச்சியில் தோன்றியதாகவே கருதுகிறார்கள்.

> கேண்மியா என்பதன் உண்மை நிலையை ஆராயும் இடத்து கேண்ம் என்னும் சொல்லோடு யா என்றும் அசைச் சொல் சேர (யாவினால்) இகரந் தோன்றப்பெற்று கேண்மியா என்றாகியுளது எனத் தெரிகிறது.

என்று வேங்கடராசுலு ரெட்டியாரும் (1944:36),

> கேண்ம்+யா, சென்ம்+யா என்பன விட்டிசையின்றி இணைந்து ஒலிக்க இகரம்பெற்றன. ஈண்டும் 'யா'வின் உந்துதலாற்றான் இகரம் தோன்றுகிறது.

என்று கந்தசாமியும் (1977:73) கருதுகிறார்கள். இது சரியான விளக்கமானால், புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் குற்றியலிகரம் வரவில்லை என்று ஆகி, 'எழுத்து' ஆகக் கருதமுடியாது என்ற நிலை ஏற்படுகிறது. ஆனால், அவர்கள் இந்தக் கருத்தில் அந்த விளக்கத்தைத் தரவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் 'எழுத்தோரன்ன' ஆகியவை எப்படி 'எழுத்து' ஆகும்? என்ற கேள்வியை எழுப்பாததால், இந்த முடிவுக்கு வரவில்லை. ஆயினும் மறு வருணனைப்படி இன்று

நாம் குற்றியலிகரம் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வரவில்லை; அதனால், 'எழுத்து' ஆகக் கொள்ளமுடியாது என்று கருதலாம். ஆனால், தொல்காப்பயிர் பகாப்பதமாகக் கொண்டு கூறியதால், குற்றியலிகரத்தைத் தனியெழுத்தாகக் கருதியதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா? என்று கண்டு, அவருடைய மொழியியல் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள முயலுவோம்.

தொல்காப்பியர் தமிழ் மொழியின் தனி எழுத்து அமைப்பையும் எழுத்துத் தொடர்ச்சியின் அமைப்பையும் நன்கு உணர்ந்தவர் என்பது, பின்வரும் பிரிவாலும் (§4.4) இயலாலும் (ஏழாவது இயல் 'எழுத்தியல்' பார்க்க) புலப்படும். தமிழில் உள்ள தனிச் சொற்களின் எழுத்துத் தொடர்ச்சியைப் பார்த்தால், **இய-** என்ற தொடர் (இயம், இயல், வியம், வியன்) உள்ளதே தவிர **இயா** - என்ற தொடர் சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை கிடையாது. கலித்தொகையில் இயல் என்று விளி வேற்றுமையாக (மெல்லியல்-மெல்லியால் கலி.113.16, மெல்லியன் கலி. 70.20) வந்துள்ளது. இதனால் - இயா என்ற எழுத்துத் தொடர்ச்சி கூறப்பட்ட வடிவத்தில் வந்ததாகக் கொள்ளமுடியாது. ஆகவே **இயா -, கியா-, தியா-வியா,-** என்ற எழுத்துத் தொடர் சங்ககாலத்தில் காணப்படவில்லை.[5] இதனால் **மியா** என்ற சொல் ஒலிநிலையில் குற்றியலிகரமாக இருந்தும் அதை முற்றியலிகரத்தின் மாற்றொலியாகக் கருதினால், எழுத்துத் தொடர்ச்சியில் உள்ள அமைப்புக்குறை **(Structural gap)** ஓரிடத்தில் மட்டும் நிரப்பப்பட்டு, அமைப்பு அழகு குறைந்து விடுகிறது. ஆனால், அமைப்புக் குறையைப் பாதுகாக்கும் வண்ணம் குற்றியலிகரத்தைத் தனி எழுத்தாகக் கொண்டு புணர்ச்சியின் அடிப்படை வடிவத்திலும் வருவதாகக் கருதியதால், அவர் கொள்கைப்படி 'எழுத்து' ஆக அமைந்து விட்டது. சுருங்கச் சொன்னால் அமைப்புக் குறையைப் பாதுகாக்கும்பொருட்டுத் துணைநிலை வழக்கில் இருக்கும் குற்றியலிகரத்தைத் தனி 'எழுத்து' ஆகத் தொல்காப்பியர் அமைத்துவிட்டார்.

---

5 மணிமேகலையிலேயே இந்த இலக்கணம் மாறிவிட்டது. வியாப்பியம் 29.394, வியாபகம் 29.400 என்று பிறமொழிச் சொற்கள் வந்துள்ளன. இடைக்காலத்தில் மேலும் பல சொற்கள் வழங்கியுள்ளன. தியானி- அப்பர் தேவாரம் 2209.2; வியாத்திரன் 3033.2; வியாழம்-சம்பந்தர் தேவாரம் 2-85.1.3 முதலியன. இவையெல்லாம் பிறமொழிச் சொற்கள். தொல்காப்பியர் காலத்துக்குப் பிறகு கடனாளப்பட்டவை.

### 4.3.3 ஆய்தம்

குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற பெயர்களே அவற்றோடு ஒலி ஒப்புமை உடைய ஒலிகளை முறையே இகரம் (குற்றியல் இகரம்), உகரம் (குற்றியல் உகரம்) என்று சுட்டி நிற்கின்றன. எனவே, இலக்கண ஆசிரியர்கள் அவைகளை முற்றொலிகளின் சுருக்கமா? என்று கேள்வி கேட்டுப் பதில் சொல்லிவிட்டுப்போனார்கள். ஆனால் ஆய்தம் என்ற சொல்லில் அப்படிப்பட்ட தடயம் எதுவும் இல்லாததால், குறுக்கம் பற்றிய சிந்தனையே அவர்களுக்கு எழுவில்லை. அதற்காக அவர்களைச் சிவஞானமுனிவர் முதல் சூத்திரத்தில் நையாண்டி செய்வது போல் குறிப்பிடுகிறார்.

> இக்குற்றியலிகரக் குற்றியலுகரங்களை முற்றியலிகரவுகரங்களின் குறுக்கம் என்றவர் ஆய்தத்தினையும் அவ்வாறு ஒன்றன் குறுக்கம் எனக் கூற மறந்தார் போலும் (பக்.31).

குற்றியல் ஒலிகள் என்றதால் இணையான முற்றியல் ஒலிகளோடு ஒலிநிலையில் மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்காமல், செயல்பாட்டு நிலையிலும் - அதாவது ஒலியன்நிலை அல்லது எழுத்து நிலையிலும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே எழுத்தியலின் முக்கியமான வேலை. உரையாசிரியர்களான இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒலி நிலையில் ஒற்றுமை உடையவை (இகர உகரக் குறுக்கமே முறையே குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்றது) என்று கூறியதோடு, செயல்பாட்டிலும் (பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் உடையவை என்றது) வேறுபடுகின்றன என்று சுட்டிக்காட்டிச் சென்றார்கள். ஆனால், சிவஞான முனிவரோ ஒலிநிலையில் ஒற்றுமை உடையவை அல்ல (அதாவது குறுக்க அல்ல) என்று சாதித்ததன் மூலம் அவை தனி எழுத்தென நிறுவியுள்ளார்.

> குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் போல வேறு எழுத்தே யாவன அன்றி ஒரு மாத்திரையாய் நின்ற இகர உகரங்களை மகரக்குறுக்கம் முதலியனபோல ஒரு காரணம் பற்றி அரை மாத்திரையாய் நின்றன அல்ல என்பது தெற்றென உணர்க (பக்.30).

என்று வலியுறுத்தியுள்ளார். அதாவது சிவஞானமுனிவர் கருத்துப்படித் தனிஒலி - வேறு ஒலியோடு தொடர்பு இல்லாத ஒலி என்றால் அது தனி 'எழுத்து' ஆகக் கொள்ளவேண்டும் என்று ஆகிறது. வருணனை மொழியியலார் ஒற்றுமை ஒலிகளின் வருமிடம் (வேற்று நிலை வழக்கு, துணைநிலை வழக்கு) ஒட்டி, ஒலியின் தன்மையை (ஒலியனா இல்லையா என்பதை) நிர்ணயிப்பார்கள். அவர்கள் ஒலி ஒற்றுமை

இல்லாதவைகளை ஐயத்துக்கு இடமில்லாத ஒலிகள் (Non- suspicious segments) என்று கூறி, அவற்றை யெல்லாம் தனி ஒலியனாகக் கொள்ளலாம் என்று சொல்லுவார்கள்.[6] சிவஞான முனிவரின் வாதம் இதை ஒத்துக் காணப்படுகிறது.

வருணனை மொழியிலாரில் ஒரு சிலரும், விதிமுறை ஒலியனியலாரும் சொற்களின் மாற்றவடிவத்தில் வருகின்ற ஒலி மாற்றங்களைக்கொண்டு ஒலியன் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று கூறவார்கள். இதனால் ஒற்றுமை உடைய ஒலிகளின் செயல்பாட்டை மட்டும் கவனிக்காது, ஒரு சொல்லின் மாற்று வடிவத்தில் வரும் ஒலிமாற்றத்தின் அடிப்படையில் செயல்பாட்டைக் கவனிக்கவேண்டும் என்பார்கள் அவர்கள்.

ஆய்தத்தின் ஒலித்தன்மை, உரசொலியாக்கம் என்று பொது வாகவும் ஆய்தமும் வல்லெழுத்தும் இரட்டை உரசொலியாகக் கருதப் படவேண்டும் என்றும் போன இயலில் விளக்கப்பட்டது. இது இரட்டை வல்லெழுத்தின் உறழ்ச்சி என்று கூய்ப்பர் (1958:201)[7] குறிப்பிட்டுள்ளார். பல சொற்களில் இரட்டை வல்லொலியின் உறழ்ச்சியாக வரும் என்றும் அந்த இரட்டை வல்லினம் ல, ள, வ போன்ற ஒலிகளும் வல்லெழுத்து சேர்ந்த சேர்க்கையால் உண்டானது என்றும் குறிப்பிட்டு, இறுதியில் இரட்டை வல்லெழுத்தின் மாற்றொலி என்றும் மீனாட்சிசுந்தரன் (1965:73)[8] கொண்டுள்ளார்.

---

6 The sounds which are considerably dissimilar in type are not likely to constitute submembers of a single phoneme. Sounds thus dissimilar should not be considered to be the members of a single unit modified according to environemnt. When the investigator therefore finds two segments which are sharply different from each other he is justified in assuming tentatively that they are separate phonemes. If two segemnts differ widely in type, there is no necessity of further proof of the fact that there are significantly different in the sound system.
Pike, 1947 : 71 b.

7 If the geminate is the result of assimilation, the substitution of *h* (i.e. *a:ytam)* + plosive for the geminate can take place when the first word is a subject (eg. *Kahṯitu)* and when it is a determinas (eg. *ah-tinai, ah-_riṇai)*. This substitution is optional.
Kuiper, 1958:201

8 The *a:ytam* is the allophone of the long plosive.
Meenakshisundaran, 1965:73.

பாலசுப்பிரமணியன் (1974:382) குறிலை அடுத்து வரும் தனி வல்லெழுத்துடன் ஆய்தம் வேற்றுநிலை வழக்கில் வரும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

1. அஃடு (புறம். 319.4) / எஃகு (புறம். 26.5),

2. அட்டு (புறம். 104.3) / எக்கர் (புறம். 212.23),

3. அடு (புறம். 8.5) / எகினம் (அகம். 34.12) முதலியனவும், தொல்காப்பியத்திலிருந்து,

1. அஃகி (1129.1),

2. அக்கின் (128.2)

3. பஃகான் (199.5), பக்கம் (987.12), பகல் (1078.1) முதலியனவும் எடுத்துக்காட்டி,

> மேல்வந்த எடுத்துக்காட்டுக்கள் ஆய்தம் இரட்டித்த வல்லொலி யனின் மாற்றொலி அல்ல; அதனின்றும் வேறுபட்ட தனி ஒலியனே என்பதைப் புலப்படுத்தும்

என்று முடித்துள்ளார்.

இதன்படிப் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் ஆய்தம் அமைந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. எனவே, தொல்காப்பியர் ஆய்தத்தைத் தனி 'எழுத்து' ஆகக் கொண்டது பொருத்தமானது என்று மேலே காட்டிய உதாரணங்கள் நிரூபிக்கின்றன.

இதுவரை பார்த்ததில் 'எழுத்தோரன்ன' என்பன புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வரும் ஒலி என்று தொல்காப்பியர் கருதியதால்தான் 'எழுத்து' என்ற பெரும் பிரிவில் சேர்த்தார் என்பது தெளிவுபடுத்தப்பட்டது. அப்படியானால் 'எழுத்தெனப்படுவ' என்பவைகளுக்கும் இவைகளுக்கும் என்ன வேறுபாடு? என்று சுட்டிக் காட்ட வேண்டும். மேலும் அது சரிதானா? என்று அமைப்பு முறையை ஒட்டியும் விளக்கவேண்டும்.

'எழுத்தோரன்ன' என்பனவற்றைச் 'சார்ந்துவரல் மரபின் மூன்று' (1.4) என்றும், 'சார்ந்துவரி னல்லது தமக்கியல்பில வெனத் தேர்ந்து வெளிப்படுத்த'ப் பட்டவை (101.12) என்றும் தொல்காப்பியரே கூறியுள்ளார். இதனால்தான் இந்த மூன்று மட்டுமே தொல்காப்பியரே சார்பெழுத்தாகக் கொண்டார் என்று உரையாசிரியர்களும் இலக்கண ஆய்வாளர்களும் பேசிவருகிறார்கள் என்றாலும், சார்ந்து வருவன என்பது வரையறுக்கப்பட்ட ஒலிச்சூழல்களை உடையன என்று பொருள் கொள்ளவேண்டும். ஆகவே 'எழுத்தெனப்படுவ' வரையறுக்க

முடியாத ஒலிச்சூழலை உடையவை; அடிநிலைக் கிளவியில் எழுத்தாக அமைந்து அதே சமயத்தில் சொல்லில் எங்கு வேண்டுமானாலும் வருவன என்று நாம் கொள்ளலாம். மேலும், வரும் சூழலை வரையறுக்க முடியாவிட்டாலும், சில ஒலிக்கூறுகளையும் சில வகை ஒலித்தொடர்களையும் தனி எழுத்தாகக் கொள்ளலாமா? அல்லது கூட்டு எழுத்துகளாகக் கொள்ளலாமா? என்றும் ஆராயவேண்டும். ஆகவே 'எழுத்தெனப்படுவ' என்று கூறியவை எப்படி இந்த முறையில் செயல்படுகின்றன? என்று பார்ப்போம்.

## 4.4. எழுத்தெனப்படுவ

'எழுத்தெனப்படுவ' என்பதில் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் அடங்கும். மெய்யொலிகள் சொல்லில் உயிரோடு கூடி முதலில் வரும். சொல்லின் இடையில் பல நிலையில் வரும்; பிற மெய்யோடு சேர்ந்து வரும். சில சூழலில் வராதது மொழியின் அமைப்புக் குறைவே தவிர வேறு அல்ல. 'எழுத்தோரன்ன' போன்று இவை எளிதாக வரையறுத்துக் கூறும்படி அமைந்தவை அல்ல. மெய்யெழுத்துகளில் ஙகரத்தின் ஒலியன் நிலைபற்றி மட்டுமே தொல்காப்பியருக்கும் இன்றைய மொழியியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. எனவே, அதன் நிலையை மட்டும் இங்குப் பார்ப்போம்.

### 4.4.1 ஙகரம்

சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய பயிற்சியையும் பார்க்கும்போது ஙகரம் பற்றிய உண்மை ஒன்று புலனாகிறது. அதாவது ககரத்திற்குப் பின்னால் மட்டும் எப்போதும் ஙகரம் வருகிறது. இதன்படி அது வரையறுக்கக் கூடிய சூழலை உடையதாக அமைந்துள்ளது. மேலும், வருணனை மொழியியலை ஒட்டித் தமிழ் அமைப்பை ஆய்வோரும் ஙகரத்தை மகரத்தின் மாற்றொலியாகவே கொண்டுள்ளார்கள்.

மீனாட்சிசுந்தரன் தொல்காப்பிய மொழியைப்பற்றிக் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

> ஆறு மெல்லினங்களில் ஐந்தே வேற்று நிலை வழக்கில் வருகின்றன. சில (தொல்காப்பிய) பதிப்புகள் சில இடங்களில் மட்டும் அல்லது எல்லா இடத்திலும் 'அங்கனம்' என்பதை 'அங்ஙனம்' என்று அச்சிட்டுள்ளன. இது உண்மையிலேயே

> பிற்கால ஏடெழுதுவோரால் செய்யப்பட்ட தவறுதான். இங்கும் ஙகர மெய்யின் வருமிடம் பற்றிய சூத்திரம் காணப்படவில்லை. இன்றுள்ள நிலையில் ஙகரத்தை தனிஒலியனாகக் (=எழுத்து) கொள்ள முடியாது. ஙகரத்தை வல்லினமெய்க்குப் பின்னால் வரும் மகரத்தின் மாற்றொலியாகவே கருத வேண்டும்.[9]

இப்படியே புறநானூறு (வி.ஐ.சுப்பிரமணியம், 1962:10) போன்ற எட்டுத் தொகையையும் பத்துப்பாட்டையும் (சுந்தரம், 1964) ஆராய்ந்தவர்கள், ஙகரத்தை மகரத்தின் மாற்றொலியாகக் கொண்டுள்ளார்கள். இவையெல்லாம் சங்க இலக்கியப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டவை ஆயினும் தொல்காப்பியர் ஙகரம் பற்றி வேறு ஏதாவது கூறியிருக்கிறாரா? என்று பார்ப்போம்.

தொல்காப்பியர் உடனிலை மெய்மயக்கம் கூறும்போது,

> **மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்**
> **தம்முன் தாம்வரூஉம் ரழஅலங் கடையே** (30)

என்று கூறுகிறார். இதன்படி ங்ங் என்று மெய்மயக்கம் தமிழில் வரலாம் என்று ஆகிறது. மேலும் ய,ர,ழ ஆகிய மூன்றும் ஙகரத்தோடு சேர்ந்து மெய்மயக்கம் ய்ங், ர்ங், ழ்ங் வரலாம் என்றும்,

> **யரழ என்னும் புள்ளி முன்னர்**
> **முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்** (29)

என்றும் கூறியுள்ளார். அப்படியானால் ஙகரத்தை மாற்றொலியாகக் கொள்ள முடியாது.

---

9 Among the six nasals only five sounds have contrasts. Some texts print in a few places and uniformly *aṅṅanam* for *aṅkanam* 'like that'. This is evidently a mistake committed by the copyist of the latter age. Here again, a sutram about the distribution of the velar nasal seems to be missing. As matters at present *ṅ* cannot be considered a phoneme It may be taken as an allophone of *m* occurring before the velar plosive.
Meenakshisundaran, 1965:59.

மேலும், சங்க இலக்கிய மொழி ஆராய்ச்சியில் ஆங்கனம் என்ற சொல்லும் ஆங்ஙனம் என்ற பாடம் உடையதாகக் காணப்பட்டதில், இரண்டில் எது சரியானது? என்பது பற்றிய விவாதத்தில் சண்முகம் பிள்ளை (1964) நெட்டெழுத்துக்கு முன்னால் மெல்லின உடனிலை மயக்கம் வராத தமிழ்மொழி அமைப்பைச் சுட்டிக் காட்டி, ஆங்கனம் என்பதே சரி என்று விவாதித்திருப்பதையும் இங்கு நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

மேலே மீனாட்சிசுந்தரன் 'அங்ஙனம்' பிற்காலத்தில் ஏற்பட்ட வழக்கு என்று கூறியிருக்கிறாரே என்றால், அது ஒரு காலத்தின் உண்மையான மொழிநிலையை - காட்சி நிறைவைக் (Observational adequacy) குறித்தது; தொல்காப்பியர் கூறிய கருத்து, இலக்கணம் ஆசிரியன், தான் கொண்ட தரவை (Data) ஒட்டி இலக்கணம் அமைக்கும் முறையைப் புலப்படுத்துவது. இலக்கண ஆசிரியனின் வேலை மொழியில் உண்மையாக வரும் மெய்மயக்கங்களை மட்டும் பட்டியல் போட்டுக் காண்பிப்பது அல்ல; மொழியின் அமைப்பில் புதைந்து கிடக்கும் பொதுமையைப் புலப்படுத்தி, இலக்கணத்தை எளிமையாக விவரிப்பதுதான்; அதற்காகத் தான் எடுத்துக்கொண்ட தரவில் வராத எழுத்துத் தொடர்ச்சியைக் கூடச் சேர்த்துப் பொதுமைப்படுத்தி வருணிக்கலாம். ஆனால் அதன்மூலம் இலக்கணம் எளிமை அடைய வேண்டும். இதையே சாம்ஸ்கி, இலக்கணத்தில் வருணனை நிறைவு (Descriptive adequacy) என்று குறிப்பிடுவார் என்று முன்னரே சுட்டிக் காட்டப்பட்டது. எனவே, தொல்காப்பியர் ஙகரம் உடனிலை மெய்மயக்கமாகவும் வேற்றுநிலை மயக்கமாகவும் (ய, ர, ழ என்பதோடு) வரும் என்று கூறியதன் மூலம் வரன்முறை வரையறுக்கும்படி அமையாமல், தனி 'எழுத்து' ஆகக் கருதும்படி அமைந்து, இலக்கண எளிமை ஏற்படும் என்று கருதியிருக்க வேண்டும். இதன் வன்மை மென்மையைப் பார்ப்போம்.

முதலில் ஙகரம் தனி எழுத்தாக அமையாவிட்டால், **ங்க்** என்ற மெய்மயக்கமே கொள்ளமுடியாது; **ம்க்** என்ற மெய்மயக்கமே கொள்ளவேண்டும். ஆகவே, **ம்க், ம்ப், ஞ்ச், ந்த், ன்ற், ண்ட்** என்ற ஆறு மெய்மயக்கம் வரும். இதன்படி ம் க் தவிர்த்த ஏனைய ஐந்து மெல்லினமும் தன்னொடு இனம் ஒத்த வல்லினத்தோடு வரும்போது மகரம் மட்டும் வேறு ஒரு வல்லினத்தோடு ம் இன வல்லெழுத்தோடும் வரும் என்று கூறவேண்டும். ஆனால் ஙகரத்தைத் தனி எழுத்தாகக் கொண்டதால்,

> **ஙஞண நமன வெனும்புள்ளி முன்னர்**
> **தத்தம் இசைகள் ஒத்தன நிலையே** (25)

என்று எல்லா மெல்லினமும் தத்தம் இனமான வல்லெழுத்தோடு மட்டும் வரும் என்று பொதுமைப்படுத்திக் கூறிவிட்டார். 'தத்தமிசைகள் ஒத்தன' என்பதே அந்தப் பொதுமைப்பாடு.

இதே முறையிலும், புணர்ச்சியை விளக்கும்போது எளிமையாகக் கூறுவதற்கு ஙகரம் தனி எழுத்தாகக் கொண்டது உதவி செய்துள்ளது.

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே** (217)
**யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்**
**ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே** (229)

என்ற சூத்திரங்களில் 'மெல்லெழுத்து மிகும்' என்று பொதுவாகக் கூறிவிட்டுத் தொகைமரபு முதல் சூத்திரத்தில்,

**கசதப முதலிய மொழிமேற் றோன்றும்**
**மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்**
**ஙஞநம என்னும் ஒற்றா கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான** (143)

என்று மெல்லெழுந்து எதுஎது, எங்கெங்கு வரும்? என்று கூறிவிட்டார். ஙகரம் தனி எழுத்தாக அமையாவிட்டால் புணர்ச்சி மாற்றம் எப்படி இருக்கும்? என்றும், அதை எப்படி விளக்குவது? என்றும் பார்ப்போம்.

217 ஆம் சூத்திரப்படி விள என்ற சொல் விளங்கோடு, விளஞ் செதில், விளந்தோல், விளம்பழம் என்று அமையும். ஙகரம் தனி எழுத்தாக இல்லாவிட்டால், விளம்கோடு, விளஞ்செதில், விளந்தோல், விளம்பழம் என்று இருக்கும். எனவே, புணர்ச்சியில் வரும் மெல் லெழுத்து இனமெல்லெழுத்தாக மாறும் என்று வருணிக்க முடியாது; சகர தகரங்களை முதலாக உடைய சொற்கள் இனமெல்லெழுத்தாகத் திரியும்; பகர ககரங்களை முதலாக உடைய சொற்களில் மகரமாக இருக்கும் என்று இரண்டு விதிகள் (மொத்தம் மூன்று விதிகள் : 1) மெல்லெழுத்துத் தோன்றும். 2) ச,த முன் இன மெல்லெழுத்தாக மாறும். 3) க, ப முன் மகரமாக, இயல்பாக இருக்கும்) வேண்டும். எனவே, ஙகரத்தைத் தனி எழுத்தாகக் கொண்டது புணர்ச்சி விளக்கம் எளிமை அடைவதோடு, பொதுமையாக்கவும் பயன்படுகிறது. ஆகவே தான், ஙகரம் துணை நிலையில் இருந்தாலும் உடனிலை மயக்கமாக வரும் என்று கூறித் தனி எழுத்தாகச் செய்ததோடு, அதை வருமிடம் வரையறுத்துக் கூறும்படிச் செய்யமுடியாததாக்கி, 'எழுத்தெனப்படுவ' என்ற பெருமைக்குரியதாக ஆக்கிவிட்டார். இதனால் இலக்கண வருணனையில் (மெய்மயக்கம் கூறுவதிலும் புணர்ச்சியை விளக்குவதிலும்) எளிமையும் பொதுமையும் பெறும்படி செய்துவிட்டார். மேலும், பிற்காலத்தில் - சிறப்பாகத் திருக்குறளிலும் (எங்ஙனம் 251,2), சிலப்பதிகாரத்திலும் (இங்ஙன் 9.38, இங்ஙனம் 10.49; எங்ஙனம் 7.29-2) ஙகரம் உடனிலை மயக்கமாக வந்துள்ளது (சண்முகம், 1975ஆ : 498) தொல்காப்பியரின் தீர்க்கதரிசனம் ஓரளவு உண்மையாகி விட்டதைக் காட்டுகிறது.

## 4.4.2 ஐகாரம்

வருணனை மொழியியல் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஐகார ஔகாரங்களின் ஒலியியல் தன்மை - அதாவது அவைகளைத் தனி ஒலியனாக (Unit phoneme) கொள்ளலாமா? கூட்டொலியாக - இரண்டு உயிர்களின் சேர்க்கையாக (அஇ) - உயிரும் மெய்யும் (அய்) சேர்ந்த சேர்க்கையாக - கொள்ளலாமா? என்ற ஆராய்ச்சி பலராலும் மேற்கொள்ளப்பட்டது. இவர்களுள் உயிரும் மெய்யும் சேர்ந்த சேர்க்கையாகக் கருதலாம் என்று மீனாட்சிசுந்தரன் (1965:66), கோதண்டராமன் (1969), சண்முகம் (1972அ; 1973இ) ஆகியோரும், இரண்டு உயிரின் சேர்க்கையாகக் கொள்ளலாம் என்று ச.வே. சுப்பிரமணியனும் (1965:30n2) விளக்கியுள்ளார்கள். ஏனெனில், வருணனை மொழியியலில் ஒரு சில ஒலிகளைத் தனி ஒலியனாகக் கருதலாமா? அல்லது கூட்டொலியாகக் கருதலாமா; என்பது ஒரு பொது பிரச்சனையாகக் கருதப்படுகிறது (உதாரணம் கிளீசன், 1961:283). தமிழைப் பொறுத்த வரையில் ஐகாரத்தைக் கூட்டொலியாகக் கருத. மேலே குறிப்பிட்ட அறிஞர்கள், ஏழு காரணங்கள் இருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

1. ஐகாரம் 'அய்' என்பதோடோ, 'அஇ' என்பதோடோ வேற்றுநிலை வழக்கில் வந்து பொருள் வேறுபடவில்லை. மேலும் தமிழில் ஈயல் : இயல், கூய் : குய், சேய் : செய், போய் : பொய் என்று நெடிலுக்கும் குறிலுக்கும் முன்னால் யகரமெய் வருவதுபோல், ஆகார உயிருக்குப் பிறகு யகரம் வந்து (ஆய், தாய், பாய்), அகரத்திற்குப் பிறகு யகரம் வருவதில்லை. அதாவது அங்கு அமைப்புக் குறை (அமைப்பீனம்) இருக்கிறது. அந்த இடத்தில் எல்லாம் ஐகாரமே வருகிறது. எனவே, ஐகாரத்தை 'அய்' என்ற விளக்கினால் அந்த அமைப்பீனம் நீக்கப்பட்டுவிடுகிறது.

2. ஐகாரம் நெட்டெழுத்தாயினும் ஏனைய நெட்டெழுத்துகள் போல மெய்யெழுத்துப்பெற்று முடிவதில்லை.

ஆர், ஈர், ஊர், ஏர், ஓர் ஆனால் *ஐர் இல்லை.

பால், தேள், போல், கேள், கோள் ஆனால் *ஐள்/ல் இல்லை.

எனவே மற்றைய நெட்டெழுத்துகளிலிருந்தும் வரன்முறை வேறுபாடு உடையதால் தனி எழுத்தாகக் கொள்ளாது கூட்டொலியாகக் கருதலாம்.

3. சொல்லியல் ஆராய்ச்சியில் ஐகாரத்தை 'அய்' என்று கொள்வதால் வருணனை எளிமை ஏற்படும்.

அ விளிவேற்றுமையில் மக்கள் என்பது மக்காள் என்றும் தோழி என்பது தோழீ என்றும் மாறும். ஆனால் அன்னை, என்பது அன்னாய் என்று மாறுகிறது. இதனால் முதலிரண்டு சொல்லிலும் இறுதி உயிரெழுத்து நீளும் என்றும், மூன்றாவதில் 'ஐ' என்பது 'அய்' என்று மாறும் என்றும் இரண்டுவிதிகள் அமைக்க வேண்டும். ஆனால் 'ஐ' என்பதை 'அய்' என்று கொண்டால், ஒரே விதி மூலமே (இறுதி குறில் நெட்டெழுத்தாகும்) விளி வேற்றுமை உண்டாகும் விதத்தை விவரித்துவிடலாம்.)

ஆ வினைமுற்றில் இரண்டுவித வடிவங்கள் சங்கத்தமிழில் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| தன்மை - | ஒருமை | அனென் | - ஏன் |
| | பன்மை | அனெம் | - ஏம் |
| முன்னிலை - | ஒருமை | அனை | - ஆய் |
| | பன்மை | அனீர் | - ஈர் |
| படர்க்கை - | ஆண்பால் | அனன் | - ஆன் |
| | பெண்பால் | அனள் | - ஆள் |

இங்கு முன்னிலை ஒருமைதவிர ஏனைய இடங்களில் 'அன்' என்ற சாரியை இல்லாமல் இறுதி உயிர் நெடிலாக மாறியுள்ளது என்று விளக்கலாம். முன்னிலை ஒருமைமட்டும் 'அன்' கெட்டு 'ஐ' என்பது 'ஆய்' ஆக மாறிவிட்டது என்று விளக்க வேண்டும். ஆனால் 'ஐ' என்பதை 'அய்' என்று கொண்டால், முதல் விதியே இதற்கு பொருந்தும், எனவே தனி விதி அமைக்க வேண்டியதில்லை.

4. வேர்ச்சொல் ஆராய்ச்சிக்கும் (Etymological study) இது உதவும். பை என்ற சொல் 'பச்' என்ற மாற்று வடிவமும் கை என்பது 'கச்' என்ற மாற்று வடிவமும் உடையன. நெய் என்ற சொல்லும் 'நெச்'(நெசவு) என்று மாற்று வடிவம் பெற்றிருக்கிறது. எனவே 'அய்' என்று கொண்டால், சகரும் யகரமும் எங்கும் மாறும் என்று பொதுவாக விளக்கி விடலாம்.

5. சங்கத்தமிழில் உறைநர் (குறுந். 145.4) ~ உறையுநர் (ஐங்கு. 496.3); களைநர் (கலி. 58.9) ~ களையுநர் போன்று வரும் இரட்டை வடிவங்களை விளக்கவும் 'அய்' என்று கொள்வதே எளிதாக இருக்கும்.

ஏனைய காரணங்கள் ஆசிரியரின் வேறொரு கட்டுரையில் (சண்முகம், 19739) கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், இதில் புணர்ச்சி விதி ஒன்று புதிதாக அமைக்க வேண்டியிருக்கிறது. தலை + இல் > தலையில் என்றும், பலகை + ஐ > பலகையை என்றும் புணர்ச்சி மாற்றம் ஏற்படுவதை 'அய்' என்று கொள்ளும்போது தனிக் குறில் அல்லாமல் பிற எழுத்துத் தொடர் வந்தாலும், இறுதி மெய் இரட்டிக்கும் என்று புதிய விதி (தலய் + இல் > தலய்யில்; பலகய் + அய் > பலகய்யய்) அமைக்க வேண்டும். இப்படிப்பட்ட சொற்கள் சில இடங்களில் தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் தேவாரத்திலும் வந்துள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆகும் | + | ஏ | > | ஆகும்மே | (தொல். 76) |
| பிரித்தல் | + | ஏ | > | பிரித்தல்லே | (குறுந். 45.5) |
| துகில் | + | ஓடு | > | துகில்லொடு | (சுந்தரர் தேவா.51.4) |
| காலன் | + | உயிர் | > | காலன்னுயிர் | (ஷை 278.1) |

இவை செய்யுளில் ஓசை நிறைக்க வந்தவை என்று ஒருவர் வாதிடலாம்; என்றாலும், தமிழ் மொழி அமைப்புக்கு மாறுபட்ட விதி என்று ஒருவரும் வாதிடமுடியாது.

'அய்' என்று கொள்வதால், புதிய மெய்மயக்கங்களாகிய ய்ச் (அரைசு = அரய்சு; முரைசு = முரய்சு) ய்ஞ் (முனைஞர் = முனய்ஞர்; வினைஞர் = வினய்ஞர்) போன்றவை அமையும். எனவே, ஐகாரத்தை, 'அய்' என்று கொள்வதில் பல நன்மைகள் இருந்தும், சில குறைகளும் உள்ளன.

ச.வே. சுப்பிரமணியன் 'அஇ' என்ற கூட்டொலியாக எடுத்துக் கொண்டதற்கு, 'செய்யுளில் ஐகாரம் இரண்டு மாத்திரை உடையதால் இரண்டு குற்றெழுத்தாகக் கொள்வதே சரி; இல்லாவிட்டால் அசை நிலை கெட்டுவிடும், என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், மேலே காட்டிய புணர்ச்சி விதியில் உள்ள சிக்கலையும் மற்றொரு காரணமாகக் காட்டியுள்ளார். இதற்கு அங்கேயே விளக்கம் தரப்பட்டுவிட்டது. அசைநிலையைப் பொறுத்தவரையில் மீனாட்சிசுந்தரன் தந்துள்ள விளக்கம் (1965:66) சுப்பிரமணியத்துக்குப் பதில் சொல்வதுபோல அமைந்துள்ளது.

குற்றெழுத்து, மெய்யை அடுத்து வந்தால், இட அமைப்பால் நெடிலாகக் கருதப்படும்.[10] ஆனால், மூன்று உயிர் சேர்ந்து வருவதாகக் கொள்ளவேண்டிய நிலை இங்கு ஏற்படுகிறது.

இவையெல்லாம் மொழியியல் வளர்ச்சியால் ஏற்பட்ட தெளிவால் பிறந்த வாதங்கள், ஆனால் நாம், தொல்காப்பியத்தை அவர் கொள்கைப்படிச் சரியாகப் புரிந்துகொள்ள, அவர் ஏன் ஐகாரத்தைத் தனி எழுத்தாகக் கருதினார்? என்று சிந்திக்க வேண்டும்.

தொல்காப்பியர் ஐகாரத்தை 'அஇ' என்ற கூட்டொலியாகவும் (அகர இகரம் ஐகாரமாகும்-54), 'அய்' என்ற கூட்டொலியாகவும் (56) கூறியுள்ளார். ஆயினும், ஏன் தனி எழுத்தாகக் கருதினார்? என்பது கொஞ்சம் புதிராகவே உள்ளது. ஐகாரம் அளபெடுத்து 'ஐஇ' என்று வருவதும், மேலேகாட்டிய புணர்ச்சி விதியில் ஏற்படும் சிக்கலும் தொல்காப்பியர் ஐகாரத்தைத் தனி எழுத்தாகக் கருதக் காரணமாய் இருக்கலாமோ என்று எண்ணவேண்டியுள்ளது. மேலும், அகர ஈற்றுச் சொற்கள் இகரத்தோடு புணரும்போது 'ஐஇ' என்று மாறுவதும் தொல்காப்பியருக்குச் சாதமாக இருக்கவேண்டும்.

சங்கத் தமிழில் நிறைய சொற்கள் 'ந்த்', 'த்த்' என்ற இறந்த கால விகுதியோடு இகர விகுதியும் ஏற்று வந்துள்ளன (சண்முகம் 1971:327).

முயல் - முயன்று (நற்.366.9) முயலி (ஐங். 378.1)

கொள் - கொண்டு (தொல். 605.4) கொளீஇ(தொல்.1604.4
(ப.பத்.12.2)

நிலை - நிலைத்து (தொல்.121) நிலைஇ (தொல். 83.2)

நினை - நினைந்து (தொல். 1048.3) நினைஇ (தொல்.1048.8)

இதுபோல அகரஈற்று வினைச்சொல் இகரத்தை ஏற்றுவரும்போது 'ஐஇ' என்ற ஆகிறது.

---

10 Since a short vowel followed by a consonant is long by position, it can in the beginning of a foot stand for a long syllable.
Meenakshisundaran, 1965:66.

நட - நடந்து (புறம். 188.3) நடைஇ

நய - நயந்து (நற். 1.7) நசைஇ (அகம்.9.26)

அள - அளந்து (குறுந் 259.6) அளைஇ (குறுந்.158.2)

இங்கு அகர இகரம் சேர்ந்து ஐகாரம் ஆவதோடு, அளபெடுத்தும் வந்திருக்கிறது. எனவே, அவர் ஐகாரத்தைத் தனி எழுத்தாகக் கொண்டிருக்கலாம்; இல்லாவிட்டால் நட+இ என்பது நடயி என்று ஆவதாக விளக்கமுடியாது என்று கருதியிருக்கவேண்டும்.[11] மேலும் 'அஇ' என்று கூட்டுயிராகக் கொண்டால், 'அஇஇ' என்று மூன்று உயிர்கள் சேர்ந்து வந்ததாகக் கொள்ளவேண்டும். இதுபோல வேறு எங்கும் மூன்ற வராததால்,[12] இந்த இர சிக்கலையும்தவிர்க்க ஐகாரத்ரைத்தனி எழுத்தாகக் கொண்டிருக்கலாம்.

ஐகாரத்தைத் தனி எழுத்தாக ஏற்றுக் கொண்டதால், புதிய மெய்மயக்கங்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் இல்லாமலும், புதிய உணர்ச்சி விதியை அமைக்க வேண்டிய தேவை இல்லாமலும் ஆகிவிட்டது.

---

11 நடை என்பதையே வினையடியாகக் கொண்டால் நடய்+இ> நடயி என்று விளக்கிவிட முடியும். சங்கத் தமிழ் பல வினைச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அடிப்படை வடிவம் உடையதாக உள்ளன. நினை என்பதே நினைந்து, நினைத்து என்ற இறந்த வடிவங்களை நினை, நினைX-என்று இரண்டு வேறு அடிப்படை வடிவமாகக் கொள்வார்கள். உஉ இ (குறுந் 167.2), உடுத்து (குறுந்.265.1) என்ற இரண்டு வினையெச்சங்களும் ஒரே பொருள் உடையன. முதல் சொல்லின் அடிப்படை வடிவம் உடு என்பது; இரண்டாவது சொல்லின் அடிப்படை வடிவம் உடுX- என்பது.

நட+இ> நடவி என்று வரவேண்டும். எனவே நடய் என்று மற்றொரு வடிவம் உடையதாகக் கொள்ளவேண்டும்.

12 நச்சினார்க்கினியர் நான்கு உயிர்கள் சேர்ந்து வருதற்கும் சங்க இலக்கியத்திலிருந்து உதாரணம் காட்டியுள்ளார். (6 ஆம் சூத்திர உரை)

செறாஅஅய் வாழிய நெஞ்சு (குறள். 1200.2)
தூஉஉத் தீம்புகை (மலைபடுகடாஅம் இறுதி வெண்பா)
இலாஅஅர்க்கில்லை தமர் (நாலடியார் 283)

இங்கு ஆஅஅ, ஊஉஉ என்ற ஓரின உயிரே அளபெடுத்து வந்துள்ளன. மேலும், இவை செய்யுளில் அசை நிறைக்க வந்தன. ஆனால் நடைஇ, அளைஇ, போன்றவற்றில் அஇஇ என்ற இரண்டு வேறு உயிர்கள் சேர்ந்து வந்து, வழக்கில் இயல்பாக வந்துள்ளன. எனவேதான் செய்யுளில் வந்தது எதிர் உதாரணமாகக் கருத முடியாது.

### 4.4.3 ஔகாரம்

பிராமித் தமிழ்க் கல் வெட்டுகளில் ஔகாரம் தனி எழுத்தாக இல்லை. சங்க இலக்கியத்தில் ஔகாரம் உள்ள சொற்கள் மிகவும் குறைவு. பிற்காலத்தில் வடமொழியிலிருந்து கடனாண்டதால், அதன் எண்ணிக்கை கொஞ்சம் அதிகரித்துள்ளது. இதனால் தமிழுக்கு வேண்டாத எழுத்து என்றும், வடமொழியைத் தழுவி அமைக்கப்பட்டது என்றும் பலரும் கருதுகிறார்கள்.[13] ஆனால் தொல்காப்பியத்தை நோக்கும்போது இந்தக் கருத்து பொருந்தாது என்றே தோன்றுகிறது.

ஐகாரத்தைப்போல ஔகாரத்தையும் 'அஉ' என்ற கூட்டுயிராகத் தொல்காப்பியர் கூறினாரே தவிர (55), 'அவ்' என்ற உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டொலி என்?று கூறாதது குறிப்பிடத்தகுந்தது. ஏனெனில் 'அவ்' என்ற எழுத்துத் தொடர் சுட்டுச்சொல்லாக உள்ளது. 'அவ்' என்று சுட்டுச் சொல் உள்ளதைத் தொல்காப்பியரே குறிப்பிடுகிறார் (சுட்டுமுத லாகிய வகர இறுதி - 378.1). மேலும்,

**அவ்வே**
**இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப** (604)

என்றும் அவர் பயன்படுத்தியுள்ளார். எனவேதான் அவர் ஔகாரம் என்பரை 'அவ்' என்று கூட்டொலியாகக் குறிப்பிடவில்லை.

இடையியலில் 'ஔ' என்ற இடைச்சொல் வியப்பு இடைச் சொல்லாக வரும் என்று குறிப்பிடுகிறார் (தொல். 766). எனவே,

ஔ - வியப்பு இடைச் சொல்
அவ் - சுட்டுப்பெயர்.

என்று 'ஔ'வும் 'அவ்'வும் வேற்றுநிலை வழக்கில் வந்துள்ளன.

---

13 It (*au*) is not really part of any of the Dravidian languages and it has been placed in the alphabet solely in imitatiion of the Sanskrit.
Caldwell, 1856 : 136.

As for the dipthongs *au*, it has been taken a permanent root in Tamil. Its has come only in imitation of the Sanskrit alphabet.
Meenakshisundaran, 1965:63.

எனவே, ஔகாரத்தைத் தனி எழுத்தாகத் தொல்காப்பியர் தமிழ் மொழி அமைப்பை ஒட்டிக்கொண்டாரே தவிர, வடமொழிச் செல்வாக்கால் அல்ல என்பது புலனாகிறது. இதை 'அஉ' என்ற கூட்டு ஒலியாகக் கருதலாம் என்றால், 'ஔஉ' என்ற அளபெடை (தொல். 766) வருவதால் ஐகாரத்தைக் கூட்டுயிராகக் கருதாதற்குரிய காரணங்கள் இதற்கும் பொருந்தும்.

பிற்காலத்தில் ஔகாரம் என்ற வியப்பிடைச் சொல் ஓகாரமாக வழங்குவதாகச் சேனாவரையர் (தொல். உரை 766) குறிப்பிடுகிறார். அவ், இவ் போன்ற சொற்களும் மறைந்து விட்டன. எனவேதான் ஔகாரம் தேவையற்ற எழுத்து என்று பிற்காலத்தில் கருதும்படி அமைந்து விட்டது.

ஏனைய 'எழுத்தெனப்படுவ' என்ற ஒலிகளின் 'எழுத்து'த்தன் மையும், அவை வருமிடம் வரையறுத்துக் கூறும்படியாக இல்லாத தன்மையும் தெளிவாக அமைந்துள்ளதால், அவை பற்றிய ஆய்வு இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

இனி 'அல் எழுத்துகள்' என்ற ஒலிகள், புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் அமையாமல் வேறு ஒலிகளாக எப்படி அமைந்துள்ளன என்பதைப் பார்ப்போம்.

## 4.5 அல் எழுத்துகள்

மயிலைநாதர் 'அல் எழுத்துகள்' என்ற பிரிவை அமைத்துக் கொள்ளாமல் முதலெழுத்து, சார்பெழுத்து என்ற இரண்டு பிரிவு தான் உண்டு என்று கருதியதால், 'எழுத்தோரன்ன' ஒலிகளும் 'அல் எழுத்து' ஒலிகளும் ஒரே தன்மையன என்று கருதிவிட்டார் என்பது மேலே குறிப்பிடப்பட்டது.

சிவஞானமுனிவர் நன்னூல் விருத்திஉரையில் தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்று என்று கொண்டதற்கும், நன்னூலார் பத்து என்று கூறியதற்கும் உள்ள காரணத்தை விளக்குவது, 'எழுத்தோரன்ன' ஒலிக்கும் 'அல் எழுத்து' ஒலிக்கும் உள் வேறுபாட்டை விளக்குவதாகக் கருதலாம். (நன். 60 சூத்திர உரை விளக்கம்)

> ஆசிரியர் தொல்காப்பியனார் செய்கை ஒன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்றெனக் கருவி செய்தாராகலின் இவ்வாசிரியர் (பவணந்தி) செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்தெனக் கருவி செய்தார் என்பதும் உய்த்துணர்க

என்பதால் அல்எழுத்து, செய்யுளில் வருவதாகக் கொள்கிறார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் அது பொருந்தாது. ஒற்றளபெடை மட்டுமே செய்யுளில் வருவதாகக் கொள்ளலாம். உயிரளபெடை, ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் முதலியன செய்யுளில் மட்டும் வருவதாகக் கொள்ள முடியாது; பேச்சு வழக்கிலும் அவை வருவனவே. மேலும், தொல்காப்பியர் நூன்மரபிலும் மொழி மரபிலும் விளக்கியதும் நம் கருத்துக்கு அரண் செய்கிறது.

அல் எழுத்துகள் வருமிடம் வரையறுத்துக் கூறக் கூடியன; ஆனால் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வராதவை. வேறு வழியாகச் சொன்னால் அல் எழுத்துகள் 'எழுத்தோரன்ன' ஒலிகள் போலச் சார்ந்து வரும் மரபின. ஆனால் அவை நிலைமொழிச் சொற்களிலோ வருமொழிச் சொற்களிலோ அப்படியே வராமல் வேறு எழுத்துகளாக வருபவை என்று கூறலாம்.

### 4.5.1 உயிரளபெடை

**ஈரள பிசைக்கும் இறுதியில் உயிரே**
**ஆயியல் நிலையும் காலத் தானும்**
**அளபெடை நிலையுங் காலத் தானும்**
**அளபெடை யின்றித் தான்வருங் காலையும்**
**உளவென மொழிப் பொருள்வேறு படுதல்**
**குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்**

என்ற தொல்காப்பிய இடையியல் (33) சூத்திரத்துக்கு உரையாசிரியர்கள் ஔகாரம் பற்றி மட்டும் பேசுவதாகவும் அளபெடை பெற்றும் பெறாமலும் வந்து பொருள்வேறுபடும் நின்று கூறுவதால் 'ஔஉ' வேற்று நிலவழக்கு ஒலியனாக அமைகிறது என்று பொருள். நச்சினார்க்கினியர் மட்டுமே அதற்குரிய உதாரணங்களைக் கொடுத்துள்ளார். 'ஔஉ' என அளபெடுத்தவழிக் 'கைக்கொண்டே விடு' எனத் துணிவும், 'கௌ' என அளபெடாத வழி 'நினக்குக் கருத்தாயின் கைக்கொள்' என ஐயமும் உணர்த்தும் 'இதுவென' என்பதற்கும் ஒக்கும்'

என்பது அவரது வாசகம். அளபெடை ஆய்வில் இந்தச் சூத்திரம் கவனிக்கப்படவில்லை.

சிவஞான முனிவர் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் உயிரளபெடையைத் தனி எழுத்தாகக் கருத முடியாது என்று விளக்கியுள்ளார் (பக்.26).

அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பது ஒன்றாயினும் மொழிக் காரணமாய் வேறு பொருள் தராது இசைநிறைத்தல் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின் வேறு எழுத்தென வைத்து எண்ணப்படாததாயிற்று என்பது நுண்ணுணர்வான் உணர்ந்துகொள்க.

இங்கு நெட்டெழுத்தும் அளபெடையும் வேற்றுநிலை வழக்கில் வந்து பொருள் வேறுபடவில்லை என்று கருதுகிறார் என்பது தெளிவு. ஆனால், இவரே நன்னூல்விருத்தி உரையில் (உண்மையில் சங்கர நமச்சிவாயர் உரையில் உள்ளது. அவை அவர் மறுக்காது வேறு விளக்கம் மட்டும் தருவதால், சங்கரநமச்சிவாயர் கருத்துக்கு முனிவர் உடன்படுகிறார் என்று கொள்ளப்படுகிறது) (நன்.91 ஆம் சூத்திர உரை)

> உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
> வரனசைஇ யின்னு முளேன் (குறள் 1262)

> என அளபெழுந்து அலகு பெற்றும் பெறாதும் சொல்லிசை நிறைப்ப வருவனவும்............கொள்க.

என்று கூறியுள்ளார். நசைஇ என்பது சொல்லிசை நிறைப்ப வருவன என்பதற்கு நசை என்பது பெயர்ச் சொல் என்றும், அது 'நசைஇ' என்று அளபெடுத்து வினையெச்சமாக மாறியதால் 'சொல்லிசை யளபெடை' என்றும் விளக்கம் தரப்படுகிறது (ஆறுமுக நாவலர் காண்டிகை உரை). சிவலிங்கனாரும் (1972ஆ, 379-80).

> ஒருவகைச் சொல்லைப் பிறிதொரு சொல்லாக மாற்றவேண்டின் அளபெடுக்கச் செய்வதும் உண்டு. இது சொல்லிசை அளபெடை எனப்படும். 'உரன் நசைஇ' (குறள் 1263) இது 'நசை' (விருப்பம்) என்பது பெயர்ச் சொல், அதை வினையெச்சச் சொல்லாக மாற்ற வேண்டி 'நசைஇ' என அளபெடுக்கச் செய்தது காண்க.

என்று விவரித்துள்ளார். ஆனால், இதை மறுத்து நசை என்பதை வினைச்சொல்லாகக் கொள்ளவேண்டும்; அதுவே இறந்தகால விகுதியான இகரம் ஏற்று வினையெச்சமாக மாறியுள்ளது என்று பலர் கருதுகிறார்கள். (உதாரணம், தட்சாணமூர்த்தி, 1973:689, திண்ணப்பன், 1976 : 552). எப்படியாயினும் ஒரு இலக்கணக்கூறு மற்றொரு இலக்கணக் கூறாக மாறுகிறது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. இந்த இரண்டுமே சொல்லியல் அடிப்படையில் அமைந்த விளக்கம். ஒலியனியல்

அடிப்படையில் நோக்கினால், நசை : நசைஇ என்ற இரண்டு சொல்லும் ஒலி வேறுபாட்டோடு பொருள் வேறுபாடும் உடையதால், அவை வேற்றுநிலை வழக்கில் வந்து ஒலியனாக அமைந்திருக்கின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் ஏற்படமுடியாது. அப்படியானால் எழுத்து ஆராய்ச்சியில் அளபெடையை, நெட்டெழுத்திலிருந்து வேறுபட்ட எழுத்தாகக் கொள்ளவேண்டும் என்பதும் தெளிவாகிவிடுகிறது. எனவே சிவஞானமுனிவர் முதல் சூத்திர விருத்தியில் கூறியது பொருந்தாமல் போய்விடுகிறது. மேலும், சங்க இலக்கியங்களை நோக்கினால் ஔகாரம் ஒழிந்த நெட்டெழுத்தகள் ஒலியனாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது (சண்முகம், 1975 அ 26; 1976 அ: 598).

ஆ | ஆஅ : தாய் (அன்னை) (புறம் 4.18) : தாஅய் (தாவி) (நற்.67.4)

ஈ | ஈஇ : நீர் (நீங்கள்) (ஷை 110.6) : நீஇர் (தண்ணீர்) (புறம். 355.2)

ஊ | ஊஉ : மூய் (மூடு) (குறுந். 64.5) : மூஉய் (மூடி) (பரிபா. 10.4)

ஏ | ஏஎ : சேய் (சேய்மை) (குறுந். 64.5) : சேஎய் (முருகன்) (குறுந்.1.3)

ஓ | ஓஒ : போர் (சண்டை) (அகம் 36.16) : போஓர் (ஒருஊர்) (அகம். 186.16)

ஆயினும், சங்க இலக்கியத்திலேயே இரண்டும் (நெட்டெழுத்தும் அளபெடையும்) பொருள் மாறுபடாமல் உறழ்ச்சியாக வருவனவும் உண்டு.

கடாஅம் நற். 18.8 ~ கடாம் (மதம்) (பத்து.6.44)
ஊஉன் பத்து. 2.105 ~ ஊன் (இறைச்சி) (ஷை 6.41)

முதலியன. இவைகளை வருணனை மொழியியலார் ஒலியன் உறழ்ச்சி (Phonemic free variation) என்று குறிப்பிடுவார்கள். இவை வருணனை மொழியியலை ஒட்டி எழுத்துகள் தனிநிலையில் மட்டும் செயல் படுவதைப் பார்த்து அமைக்கப்படுகிறது. ஆனால் தொல்காப்பியர் இவைகளைப் புறநிலையில் எழுத்தாகக் கருதுவாரே தவிர, புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வரும் எழுத்தாகக் கருதுவாரா? என்பது முக்கியமாக எழுப்பப்பட வேண்டிய கேள்வி ஆகும். இதையேதான்

மாற்றிலக்கணமுறையில் ஒலியியலை ஆராயும் விதிமுறை ஒலியனியலாரும் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வந்தால்தான் 'எழுத்து' என்று கொள்ளலாம் என்று சொல்வார்கள். இந்த நிலையை அறிந்தகொள்ள அளபெடை வடிவங்களுக்குள்ள மாற்று வடிவங்கள் பெரிதும் துணைசெய்யும். அப்படிப் பார்த்ததில், புணர்ச்சி அடிப்படை வடிவத்தில், உயிரளபெடை வரவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது (சண்முகம், 1976 அ: 599-602).

1. நெட்டெழுத்தே அடிப்படை வடிவத்தில் இருந்து, செய்யுளில் ஓசை நிறைத்தற்காக நீண்டு அளபெடையாக மாறியிருக்கிறது.

$$\phi \rightarrow \text{கு}_1/\text{நெ}_1$$

நெடிலுக்குப் (நெ$_1$) பிறகு இணையான குறில் (கு$_1$) சேருகிறது. இவை வெறும் நெட்டெழுத்தாக மட்டும் சங்க இலக்கியத்தில் வந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ஊர் | (குறுந். 50.3) | ஊஉர் | குறுந். 262.1 |
| கோல் | ( " 298.6) | கோஒல் | — |
| ஏர் | ( " 377.2) | ஏஎர் | அகம். 2.11 |

2. இரண்டு குற்றெழுத்து உடைய சொற்களின் இறுதியில் உகரம் வந்தால், அது மற்றொரு உகரத்தை ஒலித்துணையாகச் சங்க காலத்திலேயே பெற்றிருக்கின்றது.

தெரு (அகம். 16.6) என்பது உகரம் பெற்றுத் தெருவு என்று மாறியுள்ளது.

தெருவு (தொறு) — (அகம். 264.8)

இங்கு உகரத்தோடு வகர உடம்படுமெய்யும் வந்துள்ளது. ஆனால் உடம்படுமெய் வருதல் கட்டாயமில்லை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார் (140)

இங்கு 'வரையார்' - நீக்கமாட்டார்கள் என்று எதிர்மறையாகக் கூறியதால், இளம்பூரணர் 'உடம்படுமெய் கோடல் ஒருதலை அன்று என்று கொள்ளப்படும்' என்று விளக்கியுள்ளார். இதை வரலாற்று நிலையில் - ஒருகாலத்தில் இரண்டு உயிர்களும் உயிர் மயக்கமாக இருந்து பின்னர் நெடிலாகவோ அளபெடையாகவோ மாறி, பிறகே உடம்படுமெய் வந்திருக்கவேண்டும். (சண்முகம், 1976:33-6) என்று

விளக்கப்படுகிறது. இதன்படி இரண்டு குறில்கள் சேர்ந்து அளபெடையாக மாறிய வடிவம் சங்கத் தமிழில் உண்டு.

துரு-(செம்மறியாடு - நற்.169.6) என்பது துரூஉ (அகம்.359) என்ற மாற்று வடிவத்தோடு காணப்படுகிறது. இதை துரு+உ என்று கொண்டு $கு_1$ + $கு_1$ > $நெ_1$ $கு_1$(அதாவது இரண்டு குறில் ($கு_1$) சேர்ந்தால் அளபெடை உண்டாகிறது என்று விளக்கலாம். எனவே, அளபெடை என்பது புறநிலையில்தான்; அது புதைநிலையில் இரண்டு குறில்களாக உள்ளது. இதைத்தான்

**நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**
**கூட்டி எழுஉதல் என்மனார் புலவர்** (6)

என்று தொல்காப்பியர் கூறினார்.

இராஅ (நற். 218) ~ இரா (குறுந். 145.5) ~ இரவு (குறுந். 90-2) ~ இரா (வரம்பாக) - (குறுந். 387.2) என்ற மாற்று வடிவங்கள் வந்துள்ளன. இவையெல்லாம் 'இர' என்ற அடிப்படையில் வடிவம் கொண்டவை. சில கிளை மொழிகளில் ஒலித்துணை அகரம் பெற்றுப் பல்வேறு புணர்ச்சி மாற்றத்தால் பல வடிவங்கள் தோன்றியிருக்கவேண்டும்.

1. இர+உ > இர+அ
2. $கு_2 \rightarrow கு_1$ / $கு_1$& –

இரண்டு வேறு குறில் உயிர் இருந்தால் வருமொழி உயிர் (*$கு_2$*) நிலைமொழி உயிராக (*$கு_1$*) மாறும். இரண்டு ஒரே உயிராக மாறிய பிறகு, மேலே குறிப்பிட்ட விதிமூலம் ($கு_1$ +$கு_1$ > $நெ_1$ $கு_1$) அளபெடை உண்டாகிறது; இராஅ (நற்.218.8) என்ற வடிவம் உண்டாகிறது. உடம்படுமெய் விதிப்படி இரவு (பதிற்று.59.1) என்ற வடிவம் வரலாம். எனவே, அளபெடை பெற்ற வடிவம் இன்னொரு உயிரோடு வரும் போது (இரா உடைத்தே - குறுந். 145.5) குறில் கெட்டுப்போய் விடுகிறது.

*$கு_1 \rightarrow \phi$ / $நெ_1$ - & உ*

(நெடிலுக்குப் பிறகு வருகிற குற்றெழுத்து மற்றொரு உயிரோடு புணரும்போது கெடும்)

இங்கு 'இராஅ' என்ற அளபெடை வடிவம், 'அஉ' என்றே புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் உள்ளது; அளபெடையாக இல்லை என்பதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

அம்பு என்ற பொருளில் ஏவு (குறுந். 72.1) ~ ஏஉ (அகம். 111.2) ~ ஏ (மான்பிணை - நற்.61.3) என்ற மூன்று வடிவங்கள் உள்ளன. இங்கு ஏவு என்பதையே அடிப்படையாகக்கொண்டு, இடையிலுள்ள வகர மெய் கெட்டு வ → ϕ / உ - உ அதாவது இரண்டு உயிருக்கு இடையில் வரும் வகரமெய் கெடும் என்ற விதிப்படி ஏ-உ என்று நிற்கும்.[14] பின்னர் மேலே குறிப்பிட்ட

$உ_2 \rightarrow உ_1 / உ_1$ & –

என்ற விதிப்படி ஏஉ என்று ஆகும். 'ஏ' என்று நிற்பது இறுதி நின்ற குறில் கெட்ட வடிவம் இங்கு அளபெடையின் அடிப்படை வடிவம் ஏவு. அதாவது உயிர்-மெய்- உயிர் என்ற எழுத்துத் தொடர்ச்சியாகும். இடையிலுள்ள மெய் பெரும்பான்மையும் இடையின யகரமோ வகரமோதான் இருக்கும். பிற மெய்கள் வந்தாலும், அவை இடையினமாக மாறிய பிறகே கெட்டுவிட்டதாகக் கருதப்படும்.

சங்க இலக்கியத்தில் ககரம் வகரமாக மாறிக் கெட்டதற்கும், சகரம் யகரமாக மாறிக் கெட்டதற்கும் சான்றுகள் உண்டு. தாகம் என்ற சொல்லின் மாற்று வடிவமாகத் தாஅம் (அகம்.241.10) வந்துள்ளது. இதை

க → வ / உயிர் -- உயிர்

என்ற விதியை முதலில் ஏற்படுத்தி, (தாகம் > *தாவம்) பின்னர் மேலே குறிப்பிட்ட வகர மெய் கெடும் என்ற விதியைப் பொருத்தினால், 'தாஅம்' என்ற வடிவம் பெறமுடியும். இந்த விதி பிறமொழிச் சொல்லுக்கும் பொருந்தும். அதாவது அந்தச் சொல் தமிழில் வந்தபிறகு, தமிழ்ச் சொல் போலவே செயல்படுகிறது என்று பொருள்.

தேசம் (மணிமேகலை 27.23) ~தேயம் (அகம். 384.4) ~ தேஅம் (நற். 224.7) என்ற மாற்று வடிவங்களைப் பின்வருமாறு குறிக்கலாம்.

1. ச → ய / உயிர் -- உயிர்
   தேசம் > தேயம்

---

14 இங்கு ஏ என்ற நெடில் உகரம் ஒலித்துணையாக வந்ததாகக் கருத முடியாது. ஏகாரம் யகரத்தை உடம்படுமெய்யாகக் கொள்வது, ஒலிநிலையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது. நன்னூலார் ஏகாரம், யகரம் வகரம் இரண்டையும் ஏற்றுவரும் என்று சொன்னாலும், அது பொருந்தாது என்பது முதல் இயலில் விளக்கப்பட்டுள்ளது.

2. ய → $\phi$ / உயிர் -- உயிர்
   தேயம் > தேஅம்

3. $உ_2 \rightarrow உ_1 / உ_1$ தேஎம்

(மூன்றாவது விதி முன்னரே அமைக்கப்பட்ட விதி)

எனவே, அளபெடை வடிவம் புறநிலையில் வருவதே தவிர, புதைநிலையில்-அதாவது புணர்ச்சிக்குரிய அடிப்டை வடிவத்தில் இரண்டு உயிராகவோ அல்லது உயிர்-மெய்-உயிர் என்ற எழுத்துத் தொடராகவோ இருக்கிறது. இவைதான் மாற்றம் அடைந்து புற நிலையில் அளபெடையாக அமைகிறது. புறநிலையில் அளபெடையும் நெடிலும் வேற்றுநிலை வழக்கில் இருந்தாலும், புதைநிலையில் அந்த வேற்றுநிலை வழக்கு வேறுவிதமாக (இரண்டு உயிர் அல்லது உயிர்-மெய்-உயிர் என்ற தொடர்) விளக்கப்படுவதால், வேற்றுநிலை வழக்கும் புறக்கணிக்கப்படுவதில்லை.

வருணனை மொழியியலை ஒட்டிய ஒலியனியலுக்கும் மாற்றிலக்கணத்தை ஒட்டிய ஒலியனியலுக்கும் உள்ள வேறுபாடு இதுதான் புறநிலையில் வேற்றுநிலையில் வந்துவிட்டால், உடனே அவை, தனி ஒலியன்களாகக் கருதப்பட வேண்டும் என்று வருணனை மொழியியலார் கருதுவார்கள். பின்னர் உருபொலியன் முறை என்ற தனி அமைப்பில் மாற்று வடிவங்களை ஆராய்ந்து, புணர்ச்சி விதிகளாக அமைத்துக் காட்டுவார்கள். ஆனால் மாற்றிலக்கண மொழியியலார், புறநிலையில் வேற்றுநிலை வழக்கில் வந்தாலும், அவற்றின் மாற்று வடிவங்களைக் கருதி, அதை ஒட்டியே விதிமுறை ஒலியன் (Systematic phoneme) அமைப்பார்கள். அளபெடை தமிழில் ஒலியன்களாக அமையவில்லை என்றால், விதிமுறை ஒலியன்களாக அமையவில்லை என்றும், புணர்ச்சிக்கு உரிய நிலைமொழி வருமொழிகளில் அளபெடை வடிவம் வரவில்லை என்றும் பொருள். எனவே தான் அளபெடை, புணர்ச்சியில் வராத அல் எழுத்தாகக் கொள்ளப்படுகிறது.

## 4.5.2 ஒற்றளபெடை

ஒற்றளபெடை புறநிலையிலும் வேற்றுநிலை வழக்கில் வர வில்லை. இது எப்போதும் ஓசை நிறைப்பதற்காகவே வருகிறது. உயிரளபெடையில் கூறிய முதல் விதி போல

$$\phi \rightarrow மெ_1 / \left\{ \begin{array}{l} (மெ)\ உ\ மெ\ உ\ - \\ (மெ)\ உ\ \quad\quad\quad - \end{array} \right\}\ மெ\ -$$

இணைக் குறிலை அடுத்துவரும் மெய்க்குப் (மெஉமெஉமெ-) பின்னும் தனிக் குறிலை அடுத்து வரும் மெய்க்குப் (மெ / உ மெ-) பின்னும் இன்னொரு மெய் வரும். எனவே இங்கும் அடிப்படை வடிவத்தில் ஒற்றளபெடை இல்லை. ஆகவே ஒற்றளபெடை 'அல் எழுத்து' ஆகக் கருதப்பட்டது.

### 4.5.3 ஐகாரக் குறுக்கம்

ஐகாரக்குறுக்கம் வருமிடம் வரையறுக்கக் கூடியது. இது அடிப்படை வடிவத்தில் ஐகாரமாகவே இருக்கும். தொல்காப்பியர் குறுக்கம் வருமிடத்தைக் கூறவில்லை. பிற்கால இலக்கணத்தை ஒட்டி

ஐ → ஐ.கு / மெஉமெ - {ய, ச, ஞ} உமெ

(மெஉமெ) ஐ & -

ய, ச, ஞ என்பனவற்றிற்கு முன்னும், சில எழுத்துத் தொடருக்குப் பின்னும் (சில எழுத்துத் தொடரும்) இருந்தால், அந்த ஐகாரம் குறுகும். ஒரு ஐகாரத்துக்குப் பிறகு மற்றொரு ஐகாரமும் குறுகும் என்று பொருள்.

ஐகாரக்குறுக்கம் அடிப்படை வடிவத்தில் இல்லாததால், 'அல் எழுத்து' என்று கொள்ளப்பட்டது.

### 4.5.4 மகரக் குறுக்கம்

மகரக் குறுக்கம் வரும் சூழல் வரையறுக்கப்பட்டு, அடிப்படை வடிவத்தில் மகரமாகவே இருந்து உச்சரிப்பில் மட்டும் குறுக்கமாக மாறுவது.

ம் → ம.கு / உ மெல் -

மெ உ மெ உமெ -& வ்உ

**போன்ம், போல்ம், போலும்** என்பதைப் **போன்** - என்ற சொல்லை அடுத்து வரும் மகரம் என்றும், புணர் மொழியில் வரும் என்பதற்கு உருபன் அடையாளம் முன்னால் போடப்பட்டும் காட்டப்படுகிறது. இங்கும் அடிப்படை வடிவத்தில் மகரக்குறுக்கம் வராது மகரமே இருக்கிறது. அதனால்தான் மகரக் குறுக்கம் அல் எழுத்தாகக் கருதப்பட்டது.

# 5. முதலும் சார்பும்

## 5.0 முன்னுரை

ஒலிகளை முதல், சார்பு என்று பாகுபடுத்துவது தமிழ் இலக்கண நூல்களின் சிறப்புப் பண்பாகக் கருதப்படுகிறது. முருகரத்தினம் (1970:258),

> தமிழ் மொழிக்குரிய எழுத்துக்களை முதல் எழுத்துக்கள் எனவும் சார்பு எழுத்துக்கள் எனவும் இருவகைப்படுத்தி ஆராயும் மரபு இலக்கண நூல்களில் காணப்படுகிறது

என்றும், கந்தசாமி (1977:12)

> மொழிக்குப் பயன்படும் எழுத்தொலிகளை முதல் என்றும் சார்பு என்றும் பழந்தமிழ் இலக்கணப் பனுவல்கள் பகுத்துரைக்கும்

என்றும் கூறுவதை உதாரணமாகக் காட்டலாம். சி. சுப்பிரமணியனும் (1977:22)[1] இந்தக் கருத்து உடையவராக இருக்கிறார். ஆனால், தொல்காப்பியம் இப்படி இரண்டு வகைப்படுத்தி எல்லா ஒலிகளையும் அடக்கவில்லை என்பது போன இயலில் விளக்கப்பட்டது. பிற்கால இலக்கண நூல்களில் முத்துவீரியமும் இந்த இரண்டு பெரும் பாகு பாட்டை ஒத்துக் கொள்ளவில்லை. எனவே முதல், சார்பு என்ற இரண்டு வகைப் பாகுபாடு எல்லா இலக்கண நூல்களுக்கும் பொதுவானது என்பது பரவலான உண்மையே தவிர முழுமையான உண்மையும் இல்லை; பொதுமையும் இல்லை. நன்னூலார்தான் இரண்டு வகைப் பாகுபாட்டில் எல்லா ஒலிகளையும் அடக்கிக் காட்டியவர். அவரைச் சிலர் நியாயப்படுத்த முயன்றுள்ளார்கள்; ஏனையோர் மறுத்துள்ளார்கள். ஆயினும், நன்னூலின் செல்வாக்காலேயே இந்தப் பாகுபாடு, தமிழ் இலக்கண நூல் பொதுமை என்று கூறும் எண்ணம் வந்திருக்கவேண்டும்.

---

1 Tolkappiyar and Pavananthi classify the phonemes on significant minimum units or elements into two, viz. primary and dependent according to the nature of the phonemes viz. standing power.

S. Subramonian, 1977:22.

ஒவ்வொரு இலக்கண நூலும் குறிப்பிடும் - நேரடியாகவோ மறைமுகமாகவோ கூறும் - பாகுபாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் அதன் அடிப்படையை அறிந்துகொள்ளவும் இங்கு முயலுவோம்.

தமிழ் இலக்கண நூல்களில் ஒலிப்பாகுபாட்டை ஒட்டிய மூன்று வகையான வித்தியாசங்கள் காணப்படுகின்றன. 1. வகுப்பு வேறுபாடு : இதில் வகுப்பு முறையும், ஒவ்வொரு பிரிவிலும் அடங்கும் ஒலிகள் பற்றிய வேறுபாடும் அடங்கும் (தொல்காப்பியம் - நன்னூல் வகுப்பு). 2. ஒரே பிரிவைக் கொண்டவர்களிடையே சார்பெழுத்தின் தொகை எண்ணிக்கை வேறுபாடு. (நன்னூல் பத்து சார்பெழுத்து, இலக்கணவிளக்கம் ஒன்பது சார்பெழுத்து). 3. சார்பெழுத்தின் விரி எண்ணிக்கை வேறுபாடு (நன்னூல், 369 - சுவாமிநாதம் 241).

## 5.1 முதல் - சார்பு வரலாறு

தொல்காப்பியர் முதல், சார்பு என்ற பாகுபாட்டை நேரடியாகக் குறிக்கவில்லை. ஆயினும், 'சார்பு எழுத்து' என்பதைக் கலைச் சொல்லாக ஆக்காமல் ஒரு தொடராகவே கருதிக் கையாண்டுள்ளார்.

> **சார்ந்து வரல் மரபின் மூன்று. . .** (1.4)

> **சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்**
> **தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்று** (101.1-2)

பேரகத்தியம் என்ற மறைந்துபோன இலக்கண நூலிலிருந்து உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்படும்

> **முதலுயிர் மெய்ஆய்தம் முப்பான் ஒன்றே** (7)

> **உயிர்மெய் அளபெடை**
> **இரண்டும் ஆய்தம் அறுகுறுக்கம் சார்பாம்** (8)

என்ற இரண்டு சூத்திரங்களைச் சிவலிங்கனார் (1972:95) எடுத்துக்காட்டி, 'முதல் - சார்பு வரையறை பவணந்தியார் காலத்துக்குச் சற்று முந்தி அமைந்ததாகும்' என்று கூறியுள்ளார். நேமிநாத உரையாசிரியரும் முதல் சூத்திர உரையில்,

> அகர முதலாக ஆய்தம் இடையா
> னகரம் ஈறா குமுதல் வைப்பு

என்று நூலின் பெயர் குறிப்பிடாமல் ஒரு சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். இங்கு 'முதல் வைப்பு' என்ற பிரிவு உள்ளது. ஆயினும், தன்னுடைய உரையில் 'இரண்டாம் வைப்பு' என்ற மற்றொரு வகையைக் குறிப்பிடுகிறார். நேமிநாதப் பதிப்பாசிரியர் குறிப்பிடப் பட்டுள்ளது போல் முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்ற பாகுபாடு முதல், சார்பு என்ற பாகுபாட்டோடு ஒத்தது.

முதல் சார்பு என்ற பாகுபாட்டைச் செம்மையாகவும் முழுமை யாகவும் குறிப்பிடுபவர் நன்னூலாரே. இவருடைய முழுக் கருத்தை யும் வேறு யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இலக்கணவிளக்கம் இவருடைய பாகுபாட்டை ஒத்துக்கொண்டாலும், சார்பெழுத்து தொகை எண்ணிக்கையையும் விரி எண்ணிக்கையையும் ஒத்துக்கொள்ளவில்லை. சுவாமிநாதம் பாகுபாட்டையும் தொகையையும் ஏற்றுக்கொண்டு, விரி எண்ணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை. தொன்னூல்விளக்கம் பாகுபாட்டைமட்டும் ஒத்துக்கொண்டு, தொகை எண்ணிக்கையையோ விரி எண்ணிக்கையையோ பேசாமலேயே விட்டுவிட்டது.

தொல்காப்பியம் தவிர்ந்த தமிழ் இலக்கண நூல்களில் மூன்று முறை: 1) நேமிநாத முறை, 2) நன்னூல் முறை, 3) முத்து வீரிய முறை காணப்படுகின்றன. நன்னூல் முறையே ஆராய்ச்சி உலகில் விவாதத்துக்கு ஆளான ஒன்று.

## 5.2 நேமிநாத முறை

மேலே அகத்தியம் முதலெழுத்து உயிர், மெய், ஆய்தம் ஆகிய மூன்றும் சேர்ந்து முப்பத்து ஒன்று என்று கொண்டதையும், நூலின் பெயர் தெரியாத சூத்திரம் உயிர், மெய், ஆய்தம் ஆகிய மூன்றும் முதல் வைப்பு என்று குறிப்பிட்டதையும் எடுத்துக் காட்டினோம். இவைகளைத் தழுவி,

> **ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை**
> **மேவுங் ககரமுதன் மெய்களாம் – மூவாறுங்**
> **கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று**
> **நண்ணுமுதல் வைப்பாகு நன்கு**

என்று நேமிநாதம் (2) குறிப்பிடுகிறது. எனவே, உயிர் 12; மெய் 18; ஆய்தம் 1 ஆகிய முப்பத்தொன்றும் முதல் எழுத்து என்பது தெளி வாகிறது. நூலாசிரியர் இரண்டாம் வைப்பைப் பற்றிப் பேசவில்லை. உரையாசிரியர்தான்,

> மூன்றாம் சூத்திரம் இரண்டாம் வைப்பாகிய உயிர்மெய் எழுத்தும் அவற்றுள் குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் வருக்கத்து ஒற்றுக்கள் ஆமாறும் ஒற்றளபெடைகள் உயிரளபெடைகள் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று

என்று விளக்கியுள்ளார். குற்றயிலுகரம். குற்றயிலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம் ஆகியவற்றை விளக்கும் நான்காவது சூத்திரத்தில் இரண்டாம் வைப்பு என்பதை அவர் குறிப்பிடவே இல்லை. எனவே, முதல் எழுத்துபற்றி மட்டுமே குணவீரபண்டிதர் தெளிவான கருத்து உடையவராகக் காணப்படுகிறார். ஏனையவற்றைப்பற்றி அவர் ஒன்றும் பேசவில்லை. உரையாசிரியரும் இரண்டாம் வைப்பு என்னென்ன என்று தொகுத்துக் கூறும் முயற்சியில் முழு மனதாக ஈடுபடவில்லை. ஆயினும், உயிர்மெய், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக்குறுக்கம் உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகியவற்றை இரண்டாம் வைப்பாகக் கருதுகிறார் என்று நாம் கொள்வது அவருக்கு உடன்பாடாகவே இருக்கும். சுப்பிரமணிய சாஸ்திரியும் (1934:13), ச.வே. சுப்பிரமணியனும் (1967:22) இந்தக் கருத்தையே கூறியுள்ளார்கள். எனவே, நேமிநாதர் தமிழ் ஒலிகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கிறார் என்று கொள்வதில் தவறு ஏற்படாது.




தொல்காப்பியர் காலத்து ஆய்தம், தனிவடிவு உடையதாகத் தெரியவில்லை.[2] 8ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் - காசக்குடிப்

2 நச்சினார்க்கினியர் 'ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப் போல மூன்று புள்ளி வடிவிற்று என்பது உணர்த்தற்கு ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என்றார். இது அவருடைய கால எழுத்து மொழியைப் பின்பற்றியது. அதாவது இன்று எழுதுவது போல நச்சினார்க்கினியர் காலத்திலும் எழுதப்பட்டது என்பதே கருத்து. நச்சினார்க்கினியரின் இந்தக் கருத்தைச் சிவஞான முனிவர் ஒத்துக்கொள்ளவில்லை. சிவஞான முனிவர் முதற் சூத்திரவிருத்தியில் (பக்.27) குற்றியலிகரம், குற்றியலுகரம்,

பட்டயத்தில் வெஃகா என்ற சொல்லில் ஆய்தம் மேலும் கீழும் புள்ளியும் இடையில் வளைந்த கோடும் உடையதாக வரையப் பட்டிருந்தது (வெள்ளைவாரணன், 1962:26). எனவே, குணவீர பண்டிதர் காலத்தில் ஆய்தம் தனி வடிவு உடையதாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, அவர் தனி வரிவடிவு உடைய எழுத்துகளை முதல் வைப்பாகக் கருதியிருக்கலாம். உயிர்மெய்க்கு வரிவடிவு இருந்தும் அவை கூட்டெழுத்தாக அமைந்ததால் சார்பெழுத்தாகக் கொண்டிருக்கலாம். எனவே, தனிவரிவடிவு உடையவைகளை முதல் வைப்பு என்றும் ஏனையவைகளை இரண்டாம் வைப்பு என்றும் கருதியிருக்க வேண்டும்.

மாத்திரை அடிப்படையிலும் முதல்-சார்பு வேறுபாட்டை விளக்கலாம். முதல் எழுத்துகளாக உள்ளவை இயல்பான மாத்திரை உடையன; சார்பு எழுத்துகளோ முதலெழுத்துகளிலிருந்து வேறுபட்டு, அதாவது குறுக்கமாகவோ (உயிர்மெய், ஒருவகைக் குறுக்கமான குற்றிய லிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக் குறுக்கம்) பெருக்கமாகவோ (உயிரளபெடை, ஒற்றளபெடை) வருவன என்று விளக்கலாம். கந்தசாமி (1977:77),

> தொல்காப்பியர் காலத்திற்குப்பின் மாத்திரைக் குறுக்கங்களையும் மாத்திரைப் பெருக்கங்களையும் சார்பெழுத்தாகக் கருதும் மனநிலை எழுந்தது

---

ஆய்தம் ஆகிய இம் மூன்றும் புள்ளி பெறுதல்பற்றிப் பொதுப் பெயராக 'முப்பாற்புள்ளி' என்பது கூறப்பட்டதாக விளக்கியுள்ளார். இந்தக் கருத்தை ஆதரித்துச் சுப்பிரமணியசாஸ்திரியும் (1937:10) சிவஞானமுனிவரை மேற்கோள் காட்டுகிறார். ஆனால், நச்சினார்க்கினியர் கருத்து தவறு என்று குறிப்பிடவில்லை. வேங்கடராகலு ரெட்டியார் நச்சினார்க்கினியருரை மறுத்து, சிவஞான முனிவர் கருத்தை ஆதரித்தாலும், ஆய்தம் புள்ளியிட்டு எழுதப்பட்டு இருக்கலாம் என்று கருதுகிறார்(1944:14). வெள்ளைவாரணனார் சிவஞானமுனிவர் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை. காசக்குடி பட்டயத்துள் இருக்கும்  என்ற வடிவத்தைச் சுட்டிக்காட்டினாலும், நச்சினார்க்கினியர் கருத்து தொல்காப்பியருக்கு உடன்பாடு என்றே சொல்கிறார். பழங்காலக் கல்வெட்டுகளில் ஆய்தம் காணப்படவில்லை. 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகளில் இல்லை. எனவே நச்சினார்க்கினியர் கருத்து தொல்காப்பியர் கால உண்மையாகக் கொள்ளமுடியாது. மேலும், அவரே இக்காலத்தார் 'நடுவு வாங்கி இட்டு எழுதுப' என்று குறிப்பிடுகிறார். இது எந்த முறையைக் குறிக்கிறது என்பது சரியாகத் தெரியவில்லை.

என்று பொதுவாகக் கூறுவதும் இந்த உண்மையை வலியுறுத்தும். இது ஒலிநிலைப்பட்ட விளக்கம். ஒலியன் நிலையிலும் உண்மை யானால்தான் முதல் வைப்பு ஒலியன்கள் என்றும், இரண்டாம் வைப்பு மாற்றொலிகள் என்றும் கொள்ளமுடியும். முதலெழுத்து களான பன்னிரண்டு உயிரையும் பதினெட்டு மெய்யையும் ஒலியனாகக் கொள்ளலாம். இங்கும் இடைக்காலத் தமிழில் - சிறப்பாக இலக்கியத் தமிழில் பயிற்சி எப்படி அமைந்துள்ளது என்பதைப் பல இலக்கிய வழக்குகளையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து முடிவுக்கு வந்த பிறகே ஒத்துக்கொள்ள வேண்டும். ஆய்தம் வருமிடம் வரையறுக்கக் கூடிய தாயின், ஒலிநிலையில் அதனொடு ஒப்புமை உடைய ஒலி இல்லாததால், ஐயத்துக்கு இடமில்லாத ஒலிகளை (Non-suspicious sounds) தனி ஒலியன் என்ற வருணனை மொழியியல் கோட்பாட்டின்படி ஒலியனாகக் கொள்ளலாம். குறுக்க ஒலிகளில் அறுவகைக் குறுக்கங்களையும் அதனதன் முதலெழுத்தின் மாற்றொலியாகக் கொள்வதில் எந்தவிதச் சிக்கலும் இல்லை. ஆனால், குற்றியலிகரத்தை வருணனை மொழியியல்படி முற்றியலிகரத்தின் மாற்றொலியாகக் கருதமுடியாது.

உயிர்மெய்யைப் பொறுத்தவரையில், அதை குறுக்கமாகக் கருதித் தனி ஒலியாகக் கொண்டால், அவை உயிரோடும் தனி மெய்யோடும் பொருள் வேற்றுமையும் (வேற்றுநிலை வழக்கிலும்) புணர்ச்சி வேற்றுமையும் உடையதாக அமைந்துள்ளன. கா- ஆ; தீ - ஈ போன்ற தனி எழுத்திலும் பால் : ஆல்; மீர்; ஈர்; போர் : ஓர்; குலை: உலை; தலை: அலை; கூர் : ஊர்; கூட்டு : ஊட்டு; தொட்டி : ஒட்டி போன்ற சொற்களிலும் உயிர்மெய்யும் தனிஉயிரும் வேற்று நிலை வழக்கில் உள்ளன. இது போலவே பல : பல்; வாழ : வாழ்; நிலா : நில்; வேலி : வேல்; காலே : கால் போன்று தனி மெய்யும் உயிர் மெய்யும் சொல்லுக்கு இறுதியில் வேற்றுநிலை வழக்கில் உள்ளன. மேலும், புணர்ச்சியில்

| | | | | |
|---|---|---|---|---|
| பல | + | அழகு | > | பலவழகு |
| பல் | + | அழகு | > | பல்லழகு |
| நிலா | + | என்று | > | நிலாவென்று (சொன்னான்) |
| நில் | + | என்று | > | நில்லென்று |
| வேலி | + | அழகு | > | வேலியழகு |
| வேல் | + | அழகு | > | வேலழகு |

என்ற வேறுபாடுகளையும் (உயிர் மெய்யும் தனிமெய்யும்) காட்டலாம். எனவே, உயிர்மெய்யை மாற்றொலியாகக் கருத முடியாது.

ஆனாலும் உயிர்மெய் தனி ஒலி அல்ல; கூட்டொலி. எனவே அவைகளைத் தனிவகையாகக் கருதுவதற்குத் தனி வரிவடிவம் அமைந்திருப்பதே காரணம். கூட்டொலிகளான ஐகாரம், ஔகாரம் அப்படிப்பட்டது அல்ல.

உயிரளபெடையும் உயிரோடு வேற்றுநிலை வழக்கில் உள்ளன என்று சங்கத்தமிழுக்குப் பொருத்திக் காட்டப்பட்டது. இடைக் காலத் தமிழில் நிறைய சொற்கள் இல்லாவிட்டாலும், வேற்றுநிலை வழக்கில் வரக்கூடியனவா? என்று பார்த்து முடிவு செய்யவேண்டும். நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் ஆகாரம் ஈகாரம் மட்டும் அளபெடுத்த வடிவங்கள் குறைவாகவே உள்ளன.

பிராஅன், நாஅன்முகன்
ஓரீஇ, செலீஇ, மரீஇ

போன்ற சொற்களே காணப்படுகின்றன. முற்கால இடைத்தமிழில் (Early Middle Tamil) ஈகாரம் மட்டுமே அளபெடுத்து வந்துள்ளது என்று அனந்தகிருஷ்ணன் (1969) காட்டியுள்ளார். வெரீஇ, செலீஇ, தழீஇ, நிறீஇ என்ற சொற்களைக் கொடுத்துள்ளார். பெரியபுராணத்தில் தழீஇ (2836.2) என்ற அளபெடை உள்ளது. எனவே, இங்கெல்லாம் பெயர்ச் சொற்களில் நெட்டெழுத்தின் நீட்டமாகக் கருதவேண்டும்; வினையெச்சத்தில் உ+இ சேர்ந்த கூட்டொலியின் நீட்டமாகவும் கருதப்படவேண்டும்; இல்லாவிட்டால், குற்றெழுத்து நீண்டு அளபெடை ஆயிற்று என்று கூறலாம். இது மாற்றிலக்கண முறையை ஒட்டியது. ஆனால், வருணனை மொழியியலை ஒட்டி உறழ்ச்சியாகக் கருதி மாற்றொலி என்றே கொள்ளமுடியும்.

எனவே, இரண்டாம் வைப்பான சார்பெழுத்துகளை மாற்றொலியன்கள் என்று கூறமுடியாது. முதல்வைப்பு, இரண்டாம் வைப்பு என்பது ஒலிநிலையில் செய்யப்பட்ட பாகுபாடே தவிர, ஒலியன் நிலையை - அதாவது ஒலிகள் மொழியில் செயல்படும் நிலையை ஒட்டிச் செய்யப்பட்ட பாகுபாடு அல்ல.

## 5.3 நன்னூல் முறை

முன்னர் சொன்னது போலத் தமிழ் ஒலிகள் எல்லாவற்றையும் முதல், சார்பு என்ற இரண்டு பிரிவுக்குள் அடக்கிக் காட்டியவர் பவணந்திதான்.

...............அணுத் திரள்ஒலி
எழுத்தது முதல்சார் பெனஇரு வகைத்தே (57)

என்று கூறிவிட்டு,

உயிரும் உடம்புமாம் முப்பது முதலே (58)

உயிர்மெய் ஆய்தம் உயிரன பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத் தாகும் (59)

உயிர்மெய் இரட்டுநூற் றெட்டுயர் ஆய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறேழ் அஃகும் இம்முப் பானேழ்
உகரம் ஆறா றைகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப (60)

என்று அதன் தொகையையும் விரியையும் கூட விளக்கியிருக்கிறார். சார்பெழுத்தின் விரிபற்றிப் பிறப்பியலில் விவாதிக்கப்பட்டது. முதலில் இவருடைய ஒலிகளுடைய பாகுபாட்டையும், அதன் அடிப்படையையும் பார்ப்போம்.




நன்னூலார் கருத்தை உரையாசிரியர்கள் எப்படி விளக்குகிறார்கள் என்று முதலில் காண்போம்.

### 5.3.1 மயிலைநாதர் விளக்கம்

மயிலைநாதர் (13 ஆம் நூற்றாண்டு) முதல்-சார்பு வேறுபாட்டைக் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளார்.

> தாமே தமித்து நிற்கையின் முதலெழுத்தென்றாயின. அவையே தம்மோடு தாம் சார்ந்தும் இடஞ்சார்ந்தும் இடமும் பற்றுக் கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலிற் சார்பெழுத்தென் றாயின எனக் கொள்க. (சூத். 60 உரைவிளக்கம். பக்.21).
>
> தம்மொடு தாம் சார்ந்து வருவன- உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை.
>
> இடம் சார்ந்து வருவன - ஆய்தம்
>
> இடனும் பற்றக்கோடும் சார்ந்து வருவன - அறுவகைக் குறுக்கங்கள்.

இவர் கருத்துப்படி முதலெழுத்து தனித்து வருவன என்றும், சார்பெழுத்துச் சார்ந்து விகாரத்தால் வருவன என்றும் கூறிவிடலாம். இதன் சரியான பொருள் என்ன? சார்பெழுத்துகள் முதலெழுத்திலிருந்து திரிந்து வருமிடம் வரையறுத்துக் கூறும்படி அமைவன என்றும், முதலெழுத்து திரியாத ஒலிகளாய் வருமிடம் வரையறுத்துக் கூறமுடியாதபடி வருவன என்றும் கொள்ளலாமோ? என்பது ஆராயத் தகுந்தது. ஆயினும் விகாரத்தால் வருவன என்பது ஆய்தத்துக்குப் பொருந்தாது. மேலும், தம்மொடு தாம் சார்ந்து வரும் உயிர்மெய்யும், அளபெடைகளும் இரண்டு முதலெழுத்துகளின் கூட்டாகி, மாத்திரைச் சுருக்கமும் (உயிர்மெய்) பெருக்கமும் (அளபெடைகள்) உடையன என்று கொள்ளலாமே தவிர, அவை வருமிடம் வரையறுக்கக் கூடியன என்று கூறமுடியாது. தம்மோடு தாம் சார்ந்து வருவன என்பது ஒலியன்நிலை விளக்கம். ஒலி நிலையில் அவை விகாரமாக இருந்து தனித்தனி எழுத்துகள் என்று கருதத் தகுந்ததாயினும், அவை மாற்றொலியாக அமையாதன என்பதே பொருள். ஆகவே, சார்பெழுத்துகளை மாற்றொலிகளாகக் கருதமுடியாது என்றே மயிலைநாதர் கருதுகிறார். உண்மையில் நன்னூலார் மாற்றொலியாகக் கொள்ளவில்லையோ என்று கூடக் கருதவேண்டியிருக்கிறது. அவர் நேமிநாதர் போல ஒலிநிலையில் வைத்துச் சொன்னார் என்று கூறமுடியாது. ஆய்தக் குறுக்கம் என்ற ஒலி உண்டா? இல்லையா? என்ற கேள்வியைக் கிளப்பாமல், ஆய்தத்தையும் ஆய்தக் குறுக்கத்தையும் சார்பெழுத்தில்

சேர்த்ததும் பிரச்சனையைச் சிக்கல் நிறைந்ததாக்கி விட்டது. சார்பெழுத்துக்குள்ளே முதலும் சார்பும் கருதும்படி அமைந்துள்ளது. அதனால்தான் நேமிநாதர் ஆய்தத்தை முதலெழுத்தில் சேர்த்துவிட்டார். முத்துவீர உபாத்தியாயரோ சார்பெழுத்து என்று உயிர்மெய்யையும் ஆய்தத்தையும் சேர்த்து ஆய்தக் குறுக்கத்தை 'அல் எழுத்து' என்பது போலக் கூறிவிட்டார். எனவே, நன்னூலார் பாகுபாடு, ஒலிநிலை விளக்கமாயினும், முதலெழுத்தின் திரிந்த ஒலிகள், சார்பெழுத்துகள் என்று கொள்ளமுடியாது. முதலெழுத்தின் திரிந்த ஒலிகளும், வருமிடம் வரையறுக்கக் கூடிய ஒலியும் (ஆய்தம்), அதன் திரிந்த ஒலியும் (ஆய்தக்குறுக்கம்) சார்பெழுத்துகள் என்று மட்டுமே கூறலாம். அதாவது நேமிநாதமும் நன்னூலும் ஒலிநிலையில் எழுத்துகளைப் பிரித்தாலும் இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது.

### 5.3.2 இலக்கணவிளக்க முறை

இலக்கணவிளக்க வைத்தியநாததேசிகர் (17ஆம் நூற்றாண்டு நன்னூலைப் பெரிதும் தழுவினாலும், எழுத்துப் பாகுபாட்டில் முதல்-சார்பு பாகுபாட்டை ஒத்துக்கொண்டு சார்பெழுத்தின் தொகை எண்ணிக்கையிலும் விரி எண்ணிக்கையிலும் வேறுபட்டுள்ளார். ஆய்தக் குறுக்கம் என்ற தனி ஒலியை அங்கீகரிக்கவில்லை. எனவே, ஒன்பது சார்பெழுத்துகளையே அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அதற்குத் தொல்காப்பியர் 'குறுகும்' என்று கூறவில்லை என்பதையே காரணம் காட்டியுள்ளார். அதைவிடத் தன் காலத்தில் தனிமொழி ஆய்தத் துக்கும் தொடர்மொழி ஆய்தத்துக்கும் (நன்னூலார் கருத்துப்படி ஆய்தக்குறுக்கம்) உச்சரிப்பு வேறுபாடு இல்லை என்று வாதித்திருந்தால், 17ஆம் நூற்றாண்டு பற்றிய ஒலி நிலை நமக்குத் தெரிந்திருக்க முடியும். மேலும், அவரும் தன்னுடைய காலமொழியோடு ஒப்பிட்டு மொழி அமைப்பு பற்றிய பல புதிய உண்மைகளை எடுத்துக்காட்டி, இலக்கண உலகில் பெரும்புகழ் தேடிக்கொண்டிருக்க முடியும்.

> நிலைமொழி ஈறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்து கஃறீது, முஃடீது எனத் தன் அரை மாத்திரையே இசைக்கும் தன்மை தோன்றும் என ஆசிரியர் தொல்காப்பியனார் அதனைப் புணர்மொழிக்கண் வரும் ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தக் குறுக்கம் ஒன்று இன்று எனவும்.......................மறுக்க (5ஆம் சூத். உரை. பக். 85)

ஆனாலும், விரிபற்றிய கருத்தை மறுத்தபொழுது அவர் அதற்குத் தகுந்த காரணம் காட்டித் தன் திறமையைப் புலப்படுத்தியுள்ளார்.

உயிர்மெய் ஒழிந்த ஏனைய எல்லாம் இடவேற்றுமையான் அன்றி எழுத்து வேற்றுமையான் அங்ஙனம் பல்காமையின் சார்பெழுத்து முந்நூறு அறுபத்து ஒன்பது என்றல் நிரம்பாது எனவும் மறுக்க (ஷ).

இதன் விளக்கம் பிறப்பியலில் விவாதிக்கப்பட்டுள்ளது. இவர் ஆய்தம் ஒன்று என்றது, ஒலியன் நிலைவிளக்கம் எனவும், ஒலிநிலையில் அதை ஆறாகக் கொள்ளவேண்டும் எனவும் அங்குக் கூறியது நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

ஆய்தக் குறுக்கம் ஏற்றுக்கொள்ளாததால் சார்பெழுத்துக்குள் இருந்த முரண்பாடு (அதற்குள்ள முதலும் திரிந்த ஒலியும் இருந்தது) நீக்கப்பட்டுவிட்டது. இவரது பாகுபாடு ஒலிநிலையில் பகுக்கப் பட்டதாகவே அமைந்துவிட்டது. ஆயினும், இவர் கருத்துப்படியும் சார்பெழுத்தை ஒலிநிலையில் முதலெழுத்தின் திரிந்த ஒலியாகவும் கொள்ளமுடியாது; மாற்றொலியாகவும் கொள்ளமுடியாது.

### 5.3.3 சிவஞானமுனிவர்

சிவஞான முனிவர் (18ஆம் நூற்றாண்டு) நன்னூல் உரைகாரராகவும், தொல்காப்பிய உரையாசிரியராகவும் உள்ளார். நன்னூல் உரையாசிரியர் என்ற முறையில் நன்னூலின் அடிப்படைக் கொள்கைகளாக எழுத்தின் வகை, சார்பெழுத்தின் வகை, விரி ஆகியவற்றைத் தன்னுடைய நன்னூல் உரையில் முழுவதும் மறுக்கவில்லியே தவிர, முழுவதும் ஒத்துக்கொள்ளவும் இல்லை. நன்னூலார் ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரையே பெறும் என்று கூறியிருப்பினும், சொல்லுக்கு முதலில் ஒன்றரை மாத்திரை பெறும் என்று நான்னூல் உரையிலேயே கூறியுள்ளார். ஆயினும், நன்னூலைப் பற்றிய உண்மையான விமரிசனம் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியிலேயே வெளிப்படுகிறது. அவர் எழுத்தின் வகை, சார்பெழுத்தின் தொகை, விரி ஆகிய மூன்றிலுமே நன்னூலார் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. சுருக்கமாகச் சொன்னால் தொல்காப்பியர் கட்சியை முழுவதும் ஆதரித்துத் தொல்காப்பிய வெளிச்சத்தில் நன்னூலைப் பார்த்து, நன்னூலார் கருத்துப் பொருந்தாது என்று சாடியுள்ளார். ஆயினும், தொல்காப்பிய முதற்சூத்திர விருத்தி உரையில் மொழியின் பொதுப்பண்புகளாக - மொழியியல் கோட்பாடாகச் சில உண்மைகளை விளக்கிய அவருடைய இலக்கண நுழைபுலம் பாராட்டுவதற்கு உரியது.

சிவஞானமுனிவர் தொல்காப்பியரின் சார்பெழுத்துகளுக்கு விளக்கம் கொடுக்கும்போதும் நன்னூலாரின் கருத்தை மறுக்கும் போதும் சார்பெழுத்தின் பொதுப்பண்புகளாகக் குறிப்பிடுவனவைகளை முதலில் பார்ப்போம்.

### 5.3.3.1 சார்பெழுத்தின் பொதுப் பண்புகள்

சார்பெழுத்தின் பொது இலக்கணமாக

> ஒரு மொழியைச் சார்ந்து வரும் இயல்பு இன்றித் தனித்து இயங்கும் இயல்பு தமக்கு இல என்றலின் அவை தம்மையே எடுத்து ஓதிக்காட்டலாகாமையின்..................(பக்.29).

என்று கூறியுள்ளார். இதற்கு விளக்கமாக வெள்ளைவாரணனார் (1962:33),

> இவற்றியல்பு தனியே வர இயலாது. ஒன்றனைச் சார்ந்து வருதல் என்பது புலனாம். எனவே தன்னியல்பின் நிற்றல் ஆற்றாதனவாய் மொழியைச் சார்ந்து வரும் இயல்புடைய எழுத்துக்களே சார்பெழுத்தாதல் தொல்லாசிரியர் துணிபென்பது தேற்றம்

எனவும், கந்தசாமி (1977:49),

> முதலெழுத்துக்களைத் தனியே ஒலித்துக் காட்டமுடியும். ஆனால் சார்பெழுத்துக்களை யாதேனும் ஒரு சொல்லில் வைத்துத்தான் ஒலித்துக்காட்ட முடியும். எனவேதான் சார் பெழுத்தின் இலக்கணத்தினை மொழிமரபில் ஆசிரியர் விரிவாகக் கூறி உள்ளார்

என்றும் விளக்கியுள்ளார்கள். ஆனால் ஒலியியல் கருத்துப்படி இந்தக் கருத்து ஒத்துக்கொள்ளத்தகுந்தது அல்ல. குற்றியலுகரம் குற்றிய லிகரம் ஆகிய இரண்டையும் உயிரொலி விடுப்பு என்ற மூன்றாவது இயலில் (பக்.59) குறிப்பிடப்பட்டது. அதைத் தனியே ஒலித்துக் காட்ட முடியும். ஆய்தத்தைத் தனியே ஒலித்துக் காட்ட முடியாது தான். ஏனெனில் அது ஒலியன் நிலை விளக்கம். ஒலி நிலையில் உரசொலி என்று கொண்டதைத் தனியே உச்சரித்துக் காட்ட முடியும். அதாவது ஆய்தமும் வல்லினமும் சேர்ந்து உரசொலியைக் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதால், தனியே உச்சரிக்க முடிய வில்லையே தவிர, அது சார்பெழுத்து என்பதால் அல்ல. அது

போலவே அளபெடை என்ற பொது ஒலியைத் தனியே ஒலிக்க முடியாது. ஆஅ, ஊஉ என்று குறிப்பிட்ட ஒலியைத் தனியே ஒலிக்க முடியும். வல்லின மெய்யைக் கூடத் தனியாக ஒலித்துக் காட்ட முடியாது என்று ஒலியியலார் கூறுவார்கள். எனவே, முருகரத்தினம் (1973:275) கூறியதுபோல,

> சார்பெழுத்துக்கள் எப்போதும் மற்ற அல்லது ஒரு சில குறிப் பிட்ட எழுத்துக்களுடன் இருந்தே வழங்குவன எனப்பொருள் படும், அதாவது அவை இன்றைய மொழியியல் கருத்துப்படி ஒரு குறிப்பிட்ட எழுத்துச் சூழலிலேயே வழங்கும்

என்ற விளக்கம் பொருத்தம் உடையதாக உள்ளது. இந்தக் கருத்தைத் தற்காலத் தமிழ் உதாரணம் மூலம் பார்க்கலாம். படிக்காதவர்கள் பேச்சில் கூட b,d,g போன்ற ஒலிகள் மாற்றொலிகளாக - அதாவது மெல்லினத்துக்குப் பிறகு வரும் சார்பெழுத்துகள் (வருணனை மொழி யியலை ஒட்டியும் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கருத்தை ஒட்டியும்) என்று கருதலாம். அவைகளைத் தனியே உச்சரிக்க முடியும் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். ஆகவே தொல்காப்பியர் கூறிய மூன்று சார்பு எழுத்துகளும் உண்மையில் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வரும் ஒலியனாக அமைந்து வருமிடம் வரையறுக்கக்கூடியவை என்பதுதானே தவிர, தனியே ஒலிக்க முடியாது என்பதல்ல.

சிவஞான முனிவர் குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகிய இரண்டும் குறுகிய அல்லது திரிந்த ஒலி அல்ல என்று நிறுவுதற்கு ஒரு நுட்பமான மொழியியல் கோட்பாட்டைப் புலப்படுத்தியுள்ளார். அவர் சொன்ன கருத்தினைப் பொதுமைப்படுத்தினால் ஒரு ஒலி திரிந்து மற்றொரு ஒலியாக - மாற்றொலியாக வருவது ஒலிச்சூழலை ஒட்டி - ஒலிச்சூழலால் ஏற்பட்டதா? அல்லது அந்த ஒலிச்சூழலில் ஏற்பட்டதா? என்ற பிரச்சனையை எழுப்பியுள்ளார் எனலாம். இதை வேறு விதமாகச் சொன்னால், ஒலிச்சூழலுக்கும் அதில் வரும் மாற்றொலிக்கும் நேரடி உறவு உண்டா? என்ற கேள்வியைக் கேட்டு, இல்லை என்று பதில் கூறியுள்ளார். இந்தக் கருத்தைத் தற்காலத் தமிழ் உதாரணத்தின் மூலம் விளக்கிவிட்டுச் சிவஞானமுனிவர் கருத்தைப் பார்த்தால்தான், அவர் புலப்படுத்திய பொதுமையும் நுட்பமும் தெளிவுபடும்.

மேலே தமிழில் ஒலிப்புடைய வல்லொலி (b, d, g) மாற்றொலியாக இருக்கிறது; சொல்லுக்கு முதலில் ஒலிப்பிலா ஒலியாக அமைகிறது என்று குறிப்பிட்டோம் அல்லவா! அந்த உண்மையை எப்படி விளக்குவது? ஒலிப்புடைய மெல்லொலிக்கு முன்னால் வரும் ஒலிச் சூழலால் ஒலிப்பிலா வல்லொலி, ஒலிப்புடைய வல்லொலியாகத் திரிந்தது

என்றால், ஒலிச்சூழலுக்கும் மாற்றொலிக்கும் நேரடித் தொடர்பு அமைந்துள்ளது என்று பொருள். உண்மையாகவே ஒலிச் சூழலுக்கும் மாற்றொலிக்கும் தொடர்பு அமைந்துள்ளதாக எல்லா மாற்றொலிகளையும் விளக்க முடியுமா? என்பதுதான் கேள்வி. தற்காலத்தமிழில் ஒலிப்பிலா வல்லொளிகள் இரண்டு உயிர்களுக்கு இடையே வரும்போது உரசொலியாக ($\beta, \delta, \chi$) வருகிறது. உயிரொலிக்கும் உரசொலிக்கும் நேரடியாக முழுத் தொடர்பு உள்ளது என்று கூறமுடியாது. எனவே, எல்லா இடத்திலும் இந்த இந்த ஒலிச் சூழலில் இந்த இந்த மாற்றொலி வருகிறது; ஒலிச் சூழலால் வரவில்லை என்று குறிப்பிடுவதே பொருத்தம்.[3] ஆகவே எல்லா இடத்திலும் ஒலிச்சூழலுக்கும் மாற்றொலிக்கும் நேரடி உறவு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. இந்தப் பொது உண்மை,

> இடனும் பற்றுக்கோடும் குற்றியலுகரம் குற்றியலிகரங்கள் சார்பாவனவே அன்றிக் குறுகி இசைத்தற்குக் காரணம் ஆகா வெனக் கொள்க.

என்று முனிவர் கூறும் வாக்கியத்தில் அமைந்திருக்கிறது. அதையே மொழியியல் வெளிச்சத்தில் பொதுமைப்படுத்திப் பார்க்கும்போது நுட்பம் பளிச்சிட்டுச் சிவஞானமுனிவரின் சிந்தனை ஆழம் வெளிப் படுகிறது. இந்த உண்மையை வலியுறுத்த அவர் பிறமொழி உதாரணத்தை எடுத்துக்காட்டி விளக்குவது மற்றொரு மொழியியல் நுண்மாண் நுழைபுலத்தையும் புலப்படுத்துகிறது. அவர் கூறும் அந்தக் கருத்தையும் பொதுமைப்படுத்தினால் இப்படிக் கூற முடியும்; இன்னொரு மொழியை நோக்கினால், ஒரு மொழியில் குறிப்பிட்ட சூழலில் ஏற்படும் ஒலித்திரிபு அல்லது மாற்றொலி மற்றொரு மொழியில் அதே சூழலில் ஏற்படுவதில்லை என்று உணரலாம். இதனால் ஒலிச்சூழலுக்கும் மாற்றொலி வருவதற்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்பதும், குறிப்பிட்ட ஒலிச் சூழலில்

---

3 ஒலிச்சூழல் காரணமாக வருவது ஒலிச்சூழலால் வருகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் மொழி முதல் ஒலிப்பிலா வல்லொலியை வெடிப்பொலி (aspiration) / pit/ [pʰit] என்றும், ஸகரத்திற்குப்பிறகு வரும் பகரம் ஒலிப்பிலா வல்லொலி /spit/ [spit] என்றும் கூறுவார்கள். [pʰ], [p] என்ற ஒலிமாற்றத்தில் ஒலிச்சூழல் காரணம் என்று கூற முடியாது. ஆனால் அவை வரும் ஒலிச்சூழலை நிர்ணயிக்க முடியும். அதை [s] என்ற சூழலில் [p], சொல்லுக்கு முதலில் [pʰ] வரும் என்று கூறலாம். இதுவே ஒலிச்சூழலில் வருகிறது என்று குறிப்பிடப்படுவது, ஒலிச்சூழலுக்கும் மாற்றொலிக்கும் தொடர்பு இல்லை என்ற ஆகிறது.

வரும் ஒலித்திரிபு அல்லது மாற்றொலி ஒரு மொழியின் சிறப்புப் பண்பு-அதாவது அந்த மொழிக்கே உரியது (Language specific) என்றும்; எல்லா மொழிக்கும் உரியது அல்ல (அதாவது உலகப் பொதுமை Language universal உடையது அல்ல) என்றும் மொழியியலாளர்கள் கூறுவார்கள். இந்தப் பொதுமையைச் சிவஞான முனிவர் வடமொழி உதாரணத்தை எடுத்துக்காட்டிப் பேசுவதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். இந்தக் கருத்தையும் நமக்குப் பழக்கமான ஆங்கில மொழி உதாரணத்தின் மூலம் அறிந்த பிறகு சிவஞான முனிவரின் கருத்தைப் பார்ப்போம்.

தமிழில் மெல்லொலிக்குப் பிறகு ஒலிப்புடைய வல்லொலி மட்டுமே வருகிறது. எனவே, ஒலிப்புடைய வல்லொலி சார்பெழுத்து ஆகிறது. அதனால் ஒலிச் சூழலுக்கும் மாற்றொலிக்கும் தொடர்பு இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால், ஆங்கிலமொழியில் thumb, camp; send, sent என்ற உதாரணங்களைப் பார்த்தால், மெல்லொலிக்குப் பிறகு ஒலிப்புடைய வல்லொலியும் ஒலிப்பிலா வல்லொலியும் வருகின்றன. எனவே, மெல்லொலி ஒலிப்புடைய ஒலியாக இருப்பதால், அதை அடுத்து ஒலிப்புடைய ஒலிதான் வரவேண்டும் என்ற நியதி ஆங்கில மொழியில் இல்லை. ஆனால், அப்படி வருவது தமிழ் மொழி அமைப்பின் பண்புகளில் ஒன்று; அவ்வளவுதான். எனவே, ஒலிச் சூழலுக்கு ஏற்ப மாற்றொலி வருவது ஒரு தனிமொழிக்கே உரிய பண்பு; உலக மொழிப் பண்பு அல்ல. அதனால்தான் இப்படித் தான் வரவேண்டும் என்ற நியதி இல்லை என்று ஆகிறது. இந்தப் பொதுமையைச் சிவஞானமுனிவர் தமிழ் மொழி அமைப்பையும் வடமொழி அமைப்பையும் ஒப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

> அவை (இடமும் பற்றுக் கோடும்) காரணமாகக் குறுகியிசைப்பின ஆயின் இங்கு ஏது, தாது என்னும் வடமொழி இறுதி உகரமும் அவ்விடமும் பற்றுக்கோடும் உடைமையின் அவை காரணமாகக் குறுகி இசைத்தல் வேண்டும். காரணம் உள்வழிக் காரியம் உண்டாதல் ஒருதலையாதலின்; அங்ஙனம் இசையாமையின் இடமும் பற்றுக் கோடும் குற்றியலிகரம் குற்றியலுகரங்கள் நிற்றற்குச் சார்பாவனவே அன்றிக் குறுகி இசைத்தற்குக் காரணமாகா எனக் கொள்க. அஃதே வடமொழியின் அறுவகையிடமும் வல்லெழுத்துப் பற்றுக்கோடும் குற்றயிலுகரத்துக்குச் சார்பு ஆகாமையின் இலக்கண வழுவாம் பிறவெனின், ஆகாது. குற்றியலுகரம் இடமும் பற்றுக்கோடும் சார்ந்து குற்றியலுகரத்துக்குச் சார்பாய் அல்லது வாராவென்றும் யாப்புறவின்மையின்; குற்றியலுகரம் தமிழ்ச் சிறப்பு எழுத்தாதலின் வடமொழியின் வாராதாயிற்று. (பக்.30).

இங்குத் தர்க்க ரீதியாக உடன்பாட்டாலும் (குற்றியலுகரம் இடமும் பற்றுக்கோடும் சார்ந்து அன்றி நில்லாது என்றது) எதிர் மறையாலும் (இடமும் பற்றுக்கோடும் குற்றியலுகரத்துக்குச் சார்பாய் அல்லது வாரா வென்றும் யாப்புறவின்மை) கூறியது உண்மையை அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாகப் புலப்படுத்துகிறது.[4]

ஆனால், இப்படிப்பட்ட நுண்ணியப் கோட்பாட்டுப் புலமையையும் கருத்தாழத்தையும் குற்றியலுகரம் குற்றியலிகரம் இயல்பான ஒலி; அவை வரும் ஒலிச்சூழலால் திரிந்தது அல்ல என்பதை வற்புறுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்திவிட்டு, ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் போன்ற பிற சார்பெழுத்துகளுக்கப் பொருந்திப் பார்க்க அவர் முற்படவில்லை. அப்படிப் பார்த்திருந்தால், ஐகாரக் குறுக்கம் என்ற பெயர் தந்திருந்தாலும், அதனால் குறிப்பிடப் படும் ஒலியும் திரிந்த ஒலி அல்ல (சார்ந்து வந்தாலும் சார்பு காரணமாகத் திரிந்தது அல்ல); இயல்பான ஒலியே. ஏனெனில் அதன் இடனும் (ச,ஞ,ய-க்குப் பின்னும் சொல்லுக்கு நடுவில் இன்னொரு ஐகாரத்துக்கு முன்னும்) பற்றுக் கோடும் (மெய்யொலிகள்) சார்பாய் அமைந்திருக்கின்றனவேயன்றிக் காரணமாய் அமைந்திருக்க வில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பார். அப்படிச் செய்யாததால் தான் அவைகளை 'ஒரு காரணம் பற்றி அரை மாத்திரையாய் நின்றன' (பக்.30) என்று விளக்கியுள்ளார். இங்கு ஒலிச்சூழலுக்கும் மற்றொரு ஒலிக்கும் தொடர்பு, சில ஒலிகளுக்கு இல்லை; வேறு சில ஒலிகளுக்கு உண்டு என்ற கோட்பாடு முரண்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? தொல்காப்பியர் ஒல்காப் புகழ் பெற்றவர் ஆயிற்றே! அவர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றை மட்டும்தானே

4. உலகப் பொதுமை இருவகைப்படும். ஒன்று: உலகில் எல்லா மொழிகளிலும் இருப்பது; மற்றொன்று: ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் இருப்பது. இரண்டாவது வகை ஒலிமாற்றம் (வரலாற்று நிலையிலும் சரி, வருணனை நிலையிலும் சரி) இயல்பானது என்பதை உணர்த்துவது. வருணனை மொழியியல் வளர்ந்த புதிதில் வரலாற்று உண்மை பற்றிய அறிவை வருணனையில் கலக்கக் கூடாது என்ற கோட்பாட்டில தீவிரமாக இருந்ததால் மாற்றொலியை விளக்குவதிலோ அல்லது புணர்ச்சி மாற்றத்தை விளக்குவதிலோ அவை இயல்பானதா? (அதை Naturalness Condition என்பார்கள் Anderson, 1974:18) இல்லையா? என்று கவலைப்படவில்லை. பின்னர் விதிமுறை ஒலியனியல் வந்ததும் அது இயல்பானதா? என்று கவனிக்கத் துவங்கினார்கள். இதை அறிந்துகொள்ள வேறு ஏதாவது ஒரு மொழியிலோ ஒன்றுக்கு மேற்பட்ட மொழியிலோ மாற்றம் உள்ளதா? என்று தேடினார்கள். இதுவும் ஒரு உலகப் பொதுமையாக (குறுகிய பொருளில்) கருதப்பட்டது.

சார்பெழுத்தெனச் சொல்லிச் சென்றிருக்கிறார்; எனவே நாமும் அப்படித் தானே வாதிட வேண்டும்; என்று கருதியே, தான் உணர்ந்த சிறந்த மொழியியல் உண்மையை முழுவதையும் பொருத்திப் பார்க்காமல் போய்விட்டார். அதாவது அவர் கொண்ட அதீதப் பழமைப்பற்று, அவருடைய நுட்ப உணர்வை நியாயப்படுத்தும் அளவுக்கு மட்டுமே பயன்படுத்த வைத்துவிட்டது. 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண்' பதற்குத் தன்னுடைய சொந்த அறிவு நுட்பத்தோடு சுதந்திர உணர்வும் தீரமும் இருக்க வேண்டும் என்பது இங்குப் புலப்படுகிறது.

குற்றியலுகரம் போல ஐகாரக் குறுக்கம் மகரக் குறுக்கமும் அமைந்துள்ளன என்று ஒத்துக்கொண்டால், தொல்காப்பியர் வேறு எந்தக் காரணம் கருதிக் குற்றியலுகரத்தை மட்டும் சார்பெழுத்தாகக் கொண்டார்? ஐகாரக் குறுக்கத்தையும் மகரக் குறுக்கத்தையும் சார் பெழுத்தாகக் கொள்ளவில்லை? என்ற சிந்தனை எழுந்து, அதற்கு விடையாக வேறு ஒரு புதிய உண்மை பிறந்திருக்கும். இப்பொழுது நாம் குறிப்பிட்டது போல முன்னவை புணர்ச்சியில்நிலை, வருமொழிகளில் வரும் எழுத்துகள்; பின்னவை அப்படிப்பட்டவை அல்ல என்ற விடை தோன்றியிருக்க முடியும். மேலும், நன்னூலார் கால மொழி நிலையையாவது, தன்னுடைய கால மொழி நிலையையாவது ஆராய்ந்து, அந்த உண்மை பொருந்துமா? என்ற கேள்வியைக் கேட்டிருப்பாரே யானால், இலக்கண ஆராய்ச்சி என்பது தொல்காப்பியரின் கருத்து விளக்கமாக மட்டும் அமையாமல், தமிழ் மொழியின் சங்ககால, பக்தி கால, காப்பியகால மொழி அமைப்பு ஆராய்ச்சியாக வளர்ந்து, இலக்கண ஆராய்ச்சி முழு வளர்ச்சியாக அமைந்திருக்கும்.

சிவஞான முனிவர் ஐகாரக்குறுக்கம் பற்றி விளக்கும்போது முதலெழுத்து - சார்பெழுத்து உறவு பற்றிய பிரச்சனையையும் கிளப்பியுள்ளது கோட்பாட்டு நிலையில் குறிப்பிடத்தக்கதாய் அமைந் துள்ளது. முனிவருடைய கருத்தைப் பொதுமைப்படுத்தினால், அது பின்வருமாறு அமையும். சொல்லில் எல்லா இடத்திலும் (முதல், இடை, கடை) ஒரு குறிப்பிட்ட ஒலி வந்தால், அதைச் சொல்லில் ஓரிடத்திலும் வராத மற்றொரு ஒலியின் மாற்றொலியாக - குறுக்கமாகக் கருதமுடியாது. இன்னும் சூக்குமமாக இன்றைய மொழியியல் பாணியில் சொன்னால், ஒன்றை ஒலியனாக அமைப்பதற்கு அது சொல்லில் ஏதாவது ஒரு இடத்தில் வரவேண்டும். எந்த ஒரு இடத்திலும் வராத ஒலியை ஒலியனாகக் கொள்ளக்கூடாது எனலாம்.

சிவஞான முனிவர் கருத்துப்படித் தொல்காப்பியரின் ஐகாரக் குறுக்கம் இந்த உண்மையை வலியுறுத்த, நன்னூலாரின் ஐகாரக் குறுக்கம் இதற்கு மாறுபட்டு அமைந்து விடுகிறது. இதற்கு ஆதாரமாக முனிவர் வேறொரு தொல்காப்பியச் சூத்திரத்தை எடுத்துக்காட்டுகிறார். துரதிர்ஷ்ட வசமாக அந்தச் சூத்திரமும் பொருள் வேறுபாட்டுக்கு உரியதாயும், அதன் சரியான விளக்கம் மாறுபாட்டுக்கு உரியதாயும் உள்ளது.

> **மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்**
> **எழுத்தியல் திரியா என்மனார் புலவர்** (53)

என்பதே அது. இதற்கு நேர்ப் பொருளாக இளம்பூரணர்,

> மொழிப்படுத்துச் சொல்லினும் தெரிந்துகொண்டு வேறு இசைப் பினும் உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் பெருக்கம், சுருக்கம் உடையன போன்று இசைப்பினும் தத்தம் மாத்திரை இயல்பில் திரியா

என்று கூறுகிறார். அதாவது மாத்திரை திரியாமல் மாற்றம் ஏற்படுகிறது என்று பொருள். வேங்கடராகுலு ரெட்டியாரும் (1944:56) நன்னூலார், சிவஞானமுனிவர் ஆகியோர் இந்தக் கருத்தையே ஆதரிப்பதாகக் கூறி ஒத்துக்கொண்டுள்ளார். சுப்பிரமணிய சாஸ்திரி (1937 : 65) 'இயல்திரியா' என்பது இளம்பூரணர் கூறியபடி மாத்திரை இயல்பில் திரியாது என்று கொள்வதை விட 'அவை பிறக்கும் இடம், அவற்றன முயற்சி, மாத்திரை முதலியன - அதாவது அதன் தன்மை திரியாது' என்று விளக்கிவிட்டு, இதனால் தமிழில் மாற்றொலிகள் - சிறப்பாக வல்லொலிகள் மெல்லொலிக்கு முன்னால் ஒலிப்புடைய வல்லினமாக மாறுவது கூடத் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பதைச் சுட்டுவதாகக் கருதுகிறார். இவர்கள் கருத்துப்படித் தொல்காப்பியர் காலத்தில் தமிழ் உயிரொலிகளிலும் மெய்யொலிகளிலும் மாற்றொலி இல்லை என்று ஆகிறது. ஆனால் இதற்.கு முன் சூத்திரம் மகரக் குறுக்கம் பற்றிப் பேசுவதால், வெள்ளைவாரணனார் (1962:91) இளம்பூரணர் கருத்தைப் பொதுப் பொருளாக மட்டும் ஒத்துக்கொண்டு, உரைவிளக்கமாக

> மேல், போலும் என்ற மொழியின் மகரம் தன் அரை மாத்திரை அளவிற் குறைவது போன்று ஏனை எழுத்துக்கள் தம்மியல்பு வேறுபடும் இயல்பினவோ என்று ஐயுறுவாரை நோக்கி மொழிப் படுத்துச் சொல்லினும் தெரிந்துகொண்டு வேறு சொல்லினும் எழுத்துக்கள் தத்தம் இயல்பில் திரியா எனக் கூறித் தெளிவித்தார்

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, அந்தச் சூத்திரம் குறிப்பிடும் பொதுவிதி மகரத்துக்குப் பொருந்தாது. அதாவது மகரம் மட்டும் மாற்றொலி உடையது. ஏனையவை மாற்றொலி பெறவில்லை என்று ஆகிறது. சிவஞான முனிவரோ முதற் சூத்திர விருத்தியில் ஐகாரக் குறுக்கத்திற்கு இதைப் பெருந்திக் காட்டி, நாம் மேலே பொதுமைப் படுத்திய உண்மையை வற்புறுத்தி, நன்னூலாருடைய ஐகாரக் குறுக்கம் பற்றிய கருத்தை மறுத்துள்ளார்.

நன்னூலார் தன்னைச் சுட்டுதற் கண்ணும் (அதாவது தெரிந்து வேறு இசைக்கும் போது) அளபெடைக் கண்ணும் தவிர, தனியே சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் (அதாவது மொழிப் படுத்து அளபெடை அல்லாமல் இசைக்கும் போது) ஐகாரக் குறுகி (95), ஒரு மாத்திரையாய் வரும் (99) என்று கூறியுள்ளார். இது மேலே தொல்காப்பியச் சூத்திரத்துக்கு மாறுபட்டது என்பது சிவஞானமுனிவரின் ஒரு கருத்து (மற்றொரு கருத்து மூன்றாவது இயலில் விளக்கப்பட்டது).

> மொழிப்படுத்து இசைப்பினும்..........புலவர்' (தொல். 53) என எல்லா எழுத்துக்கும் பொதுப்படக் கூறிய விதியோடு முரணி ஐகாரம் தெரிந்து வேறு இசைத்தற்கண் திரியாது எனவும் மொழிப்படுத்து இசைப்பின் யாண்டு வரினும் திரியும் எனவும் கூறுதல் பொருந்தாமையானும் 'ஓரளபாகும் இடனுமாருண்டே' (தொல். 57) என உம்மையான் ஓரளபு ஆகா இடனுமாருண்டு என்பது பெறப்படுதலானும் ஈண்டு இடமாவது மொழி முதல், இடை, கடையென மூன்றே அன்றி வேறு இன்மையானும் ஐகாரக் குறுக்கம் மொழி முதற்கண் குறுகாது எனவே கொள்க (முதற் சூத்திர விருத்தி பக். 33-4).

இங்குச் சிவஞானமுனிவர் உச்சரிப்பு நிலையில் ஐகாரக் குறுக்கம் சொல்லுக்கு முதலில் வரவில்லை (அதாவது சொல்லுக்கு முதலில் ஐகாரம் குறுகி உச்சரிக்கப்படவில்லை) என்று மறுக்காது, மேலே காட்டிய சூத்திரமும் தெரிந்த வேறு இசைக்கும் போது வரும் ஒலி (மொழியியல் பாணியில் ஒலியனாக வருவது - இலக்கண ஆசிரியர் கருத்துப்படி முதலெழுத்தாக வருவது) மொழிப்படுத்தி இசைக்கும் போது ஓரிடத்திலாவது வரவேண்டும், அதாவது ஓரிடத்தில் அப்படியே வந்து ஏனைய இடத்தில் குறுகி மாற்றொலியாக வரலாம் என்ற பொதுமையைக் குறிப்பதாகக கொண்டே சிவஞானமுனிவர் நன்னூலாரின் ஐகாரக் குறுக்கம் பற்றிய கருத்தை மறுக்கிறார்.

இந்தக் கோட்பாடு முதலில் சொன்ன ஒரு ஒலி, அது வரும் இடச்சூழலால் திரியாது; அந்த இடத்தில் ஒற்றுமை உடைய மாற்றொலி வரும் என்ற கோட்பாட்டுக்கு முரண்பட்டது. ஐகாரக் குறுக்கம் சொல்லுக்கு முதலில் வராது என்பதற்காகவே இந்தப் புதிய கோட்பாட்டைக் கூறுகிறார். இதைப் பொதுநிலையில் கூட மொழியியலாளர் ஒத்துக்கொள்வதில்லை. ஏனெனில் ஒலியனுக்கும் (முதலெழுத்துக்கும்) மாற்லொலிக்கும் (சார்பெழுத்து) உரிய இடச் சூழல் மட்டுமே இன்று கவனிக்கப்படுவதில்லை. மொழி அமைப்பின் எல்லாப் பண்புகளையும் (மொழி முழுவதுக்கும் பொருள் வேறுபாடு; புணர்ச்சி வேறுபாடு, அமைப்பு அழகு முதலியன) கவனித்தே ஒலியன்களை அமைக்கிறார்கள்.

நன்னூலார் முதல் - சார்பு பாகுபாட்டை மறுக்க, இந்தக் கோட்பாடுகளையெல்லாம் அவர் பயன்படுத்தவே இல்லை. தொல்காப்பியர் கூறிய சார்பெழுத்துகளாகிய மூன்றும் இயல்பான ஒலிகள், எதனுடைய திரிந்த ஒலியும் அல்ல என்று நிறுவிவிட்டு, நன்னூலார் கூறிய ஏனைய ஏழு சார்பெழுத்துகளில் உயிர்மெய்யும், ஔகாரக் குறுக்கமும் தனித்தனி ஒலிகள் இல்லை என விளக்கிக் காட்டி, மீதியுள்ள ஐந்தும் குறுக்க ஒலிகள் ஆனதால் சார்பெழுத்தாகக் கொள்வது பொருந்தாது என்றே விவாதித்து உள்ளார். அவருடைய கருத்துகளை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

### 5.3.2.2. தொல்காப்பியச் சார்பெழுத்து

தொல்காப்பியர் கூறிய சார்பெழுத்துகள் குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்று இயல்பான ஒலிகள் - அதாவது வேறு ஒலிகளின் திரிந்த ஒலிகளோ விகாரப்பட்ட ஒலிகளோ குறுகிய ஒலிகளோ அல்ல என்று கருதுகிறார். இதற்கு ஆதரவாகச் சிவஞானமுனிவர் குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பதை முறையே குற்று+இயல்+இகரம், குற்று+இயல்+உகரம் எனப் பிரித்து குற்று என்பது குறுகு 'அணுகுதல்' என்ற அடிச்சொல்லில் இருந்து பிரிந்ததாகவும், 'இயல்' என்றதால் இயற்கையான, இயல்பான ஒலி என்றும் கூறி, 'குறுகு' என்பது 'அணுகுதல்' என்ற பொருள்படும் என்பதற்குப் பல இலக்கிய மேற்கோள்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

> இவை (குற்றியலிகரம், குற்றியலுகரம்) அரை மாத்திரை பெறுதல் மகரக் குறுக்கம் போலச் செயற்கையாற் போலும் என்று உலக(ம்) மலையாமைப் பொருட்டு இவை இங்ஙனம் ஆதல் இயல்பு என்பார் குற்றிகரம், குற்றுகரம் என்று ஒழியாது குற்றியலிகரம், குற்றியலுகரம் என்றுக் குறியிட்டார்... (பக்.29).

> ...ஆறுங்குறுகார் அறிவுடையார் என்புழிப்போல குறுகுதல் 'அணுகுதல்' எனவே பொருள்படும் ஆகலானும் அவ்வாறு அன்றிக் குறைதலே பொருள் ஆயினும் குற்றுயிர், குற்றெழுத்து என்றாற் போலத் தம்மின் மிக்கு இசைக்கும் எழுத்துக்களை நோக்கிக் குறுகும் என்றார் எனவே படும், ஆகலானும், அங்ஙனம் கொள்ளாக்கால் 'எல்லா இறுதியும் உகரம் நிறையும்' (408) என்புழிப் புணர்ச்சிக்கண் முற்றுகரமாய் நிற்கும் எனப் பொருள்பட்டு இச்சூத்திரம் (1) மாறுகொளக் கூறலாய் முடியும் ஆகலானும், குற்றியலிகரம், குற்றியலுகரமும் ஆய்தம் போல வேறு எழுத்தே ஆவனவன்றி ஒருமாத்திரையாய் நின்ற இகர உகரங்களே மகரக் குறுக்க முதலியன போல ஒரு காரணம் பற்றி அரை மாத்திரையாய் நின்றன அல்ல என்பது தெற்றென உணர்க (பக்.30).

தொல்காப்பியச் சார்பெழுத்து மூன்றும் திரிந்த அல்லது குறுகிய ஒலி அல்ல; இயல்பான தனிப்பட்ட ஒலிகள் என்பதை ஆணித்தரமாய் விளக்கியது அவரது வாதத் திறமைக்கும் இலக்கியப் புலமைக்கும் சான்றாக உள்ளன. ஆனால் குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற இரண்டு தொடரிலும் வரும் 'இயல்' என்ற சொல்லுக்கு மட்டும் அதிக அழுத்தம் கொடுத்துள்ளது குறிப்பிடத்தகுந்தது. சிவஞான முனிவர் சொன்னது போலத் தொல்காப்பியர் கருதியிருப்பாரேயானால், 1) ஆய்தம் போல வேறு எந்த ஒலிப் பெயரோடும் தொடர்பு இல்லாத, முற்றிலும் புதிய பெயர்களைக் கொடுத்திருக்கலாம். ஆனால் தொல்காப்பியர் அப்படிச் செய்யவில்லையே ஏன்? 2) முழு உகரத்தை முற்றியலுகரம் (தொல்.69) என்று அழைத்ததற்கு ஒப்ப, அதனோடு ஒலி உறவு இருக்கிறது என்பதைப் புலப்படுத்தும்படி குற்றியலுகரம் என்ற பெயரை இடுவானேன்? 3) அப்படித் தொல்காப்பியர் சூட்டியதன் காரணமாக இரண்டுக்கும் (குற்றியலுகரம், முற்றியலுகரம்) ஒலி ஒற்றுமை இருக்கிறது என்பதை மறைமுகமாக வாவது புலப்படுத்த வில்லையா? என்ற மூன்ற கேள்விகள் நம் உள்ளத்தில் எழுவதைத் தடுக்க முடியாது. மேலும், குற்றியலுகரம் என்பதில் ஒரு சொல்லின் (இயல் என்பது) பொருள் விளக்கத்தைவிட முழுத்தொடரின் பொருளே ஆசிரியனின் உள்ளத்தைத் தெளிவுபடுத்தும் என்று நமக்கு எண்ணம் ஏற்படும். எனவே, சிவஞானமுனிவர் கூறிய அழுத்தம் முழுவதும் தொல்காப்பியருக்கும் உடன்பாடாக இருக்க முடியாது என்று நாம் கொள்வது பொருத்தமாகவே இருக்கும். உண்மையில் குற்றியலுகரம் முற்றியலுகரமும் (அப்படியே குற்றியலிகரமும் முற்றியலிகரமும்) ஒலி

ஒற்றுமை உடையன என்றோ தனித்துவம் உடையன என்றோ சாதிப்பதால் பயன் எதுவும் இல்லை.

போன இயலில் குறிப்பிட்டது போல வேறு ஒலியோடு ஒற்றுமை இல்லாத ஒலி என்று கொண்டு தனி 'எழுத்து' ஆகக் கருதுவது துவக்க நிலை ஆராய்ச்சியே. அப்படியில்லாமல், அவை மொழியில் எப்படிச் செயல்படுகின்றன? அதாவது இளம்பூரணர் குறிப்பிட்டது போலப் பொருள் வேற்றுமையும் புணர்ச்சி வேற்றுமையும் உடையதா? என்று ஆராய்ந்து, 'எழுத்தின்' தன்மையை நிர்ணயிப்பதே சிறப்பாகக் கருதப்படும். அந்த முக்கியத்துவத்தை முழு அளவில் உணராததால்தான் சொற்பொருள் விளக்கத்திலும், அதற்கு இலக்கிய மேற்கோள் காட்டுவதிலும், அவருடைய திறமையைச் செலவழித்துவிட்டார்.

### 5.3.2.3 நன்னூலார் கருத்து மறுப்பு

நன்னூலார் கருத்தை இரண்டுவித காரணங்களால் முனிவர் மறுத்துள்ளார். நன்னூலார் கூடுதலாகச் சார்பெழுத்து எனக் குறிப்பிட்டவற்றில் சில (உயிர்மெய், ஒளகாரக் குறுக்கம்) தனி ஒலிகள் இல்லை என்றும், ஏனையவை குறுக்கம் அல்லது திரிந்த ஒலிகள் ஆனதால் அவைகளைச் சார்பெழுத்தாகக் கொள்வது பொருந்தாது என்றும் வாதிட்டுள்ளார். உயிர் மெய்யைச் சார்பெழுத்தாகக் கொள்ள முடியாது என்பதைப் பல காரணங்களால் முனிவர் விளக்கியுள்ளார். அவைகளுள் மூன்று காரணங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவை.

> 1. ஆல் என்புழி உயிர் முன்னும் மெய் பின்னும் நின்று மயங்கினாற் போல வா என்புழியும் மெய்முன்னும் உயிர் பின்னும் மயங்கினவே அல்லது உயிரும் மெய்யுமாகிய தந்தன்மை திரிந்து வேறாகாமைக்கு '**மெய்யோடு இயையினும் உயிரியல்திரியா** (10) என்ற சூத்திரமே சான்றாகலானும்...... 2. துணங்கை என்பது மெய்ம் முதல் உயிரீறு மெய்மயக்கம் எனவும் வரகு என்பது உயிர்த்தொடர் மொழிக் குற்றியலுகரம் எனவும் கொள்வதன்றி உயிர்மெய் முதல்; உயிர்மெய் யீறு; உயிர் மெய் மயக்கம்; உயிர் மெய்த் தொடர் மொழிக் குற்றியலுகரம் எனக் கொள்ளாமையின் ஒற்றுமை நயம்பற்றி ஒன்று என்பதனால் ஒரு பயன் இன்மையானும், 3. உயிரோடு கூடிய இடத்து வரிவடிவு வேறுபடுதலின் அது பற்றிப் '**புள்ளியில்லா எல்லா மெய்யும்**'(17) என மெய்மேல் வைத்துச் சூத்திரம் செய்து வடிவெழுத்திலக்கணம் கூறினாரன்றி ஒலியெழுத்து இலக்கணம் வேறுபடக் கூறாமையானும் (பக்.33)

உயிர் மெய், சார்பெழுத்து எனக் கருதக் கூடாது என்பது முனிவர் கருத்து.

'ஔகாரக் குறுக்கம் என ஒன்று இன்மை உணர்க' என்று கூறி அதற்கு உரையாசிரியர் 'உரையான் அறிக' என்று கூறிச் சென்றுள்ளார். இதுபற்றி மூன்றாவது இயலில் விரிவாக விளக்கப் பட்டுள்ளது.

### 5.3.2.4 ஏனைய சார்பெழுத்துகள்

குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவை ஒலிக் குறுக்கங்கள் அல்ல; இயல்பான ஒலிகள் என்று சாதித்த முனிவர், ஏனைய சார் பெழுத்துகள் இயல்பான ஒலிகள் இல்லை; திரிந்த ஒலிகள் என்று நிறுவுவதில் பிடிவாதம் காட்டியுள்ளார் எனலாம். அப்படிக் கூறினாலே சார்பெழுத்துகள் இல்லை என்று ஆகிவிடும் எனக் கருதிவிட்டார் போலும். உயிரளபெடை உயிர் எழுத்துகளிலிருந்து வேறுபடவில்லை என்றால் என்ன பொருள்? அது ஒலிநிலை விளக்கமா?

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் ஒரு ஒலி மூன்று மாத்திரை உடையது ஆகாது (தொல்.5) என்று கூறியதன் மூலம் உயிரள பெடை எனத் தனி ஒலி இல்லை என்று கூறிவிட்டார். ஆனால் அவரே செய்யுளியலில் சீர்நிலை பெற்றும் வரலாம்; பெறாமலும் வரலாம் என்று கூறியதையும், அவரே சீர்நிலை இல்லாத அளபெடை பயன்படுத்தியதை எடுத்துக்காட்டி, அவர் காலத்தில் சிறுபான்மையா வது மூன்று மாத்திரை உடையதாய் அமைந்திருக்கலாம் என்றும் மூன்றாவது இயலில் (பக்.63) குறிப்பிட்டோம். நன்னூலாரோ உயிரளபெடை மூன்று மாத்திரை உடையது (99) என்று கூறியதால் ஒலிநிலையில் தனி ஒலியாகத்தானே கொள்ளவேண்டும். உயிர் எழுத்துகளில் குறில் ஒரு மாத்திரை நெடில் இரண்டு மாத்திரை என்பதால் குறிலைமட்டும் தனி எழுத்தாகக் கொள்ளாது நெடிலையும் சேர்த்துத் தானே உயிர் பன்னிரண்டு என்று குறிப்பிடுகிறோம். அதேபோல உயிரளபெடை மூன்று மாத்திரை என்றால், ஒலிநிலையில் உயிரளபெடை ஏழையும் சேர்த்துப் பத்தொன்பது என்று கூறுவது தானே நன்னூலார் கருத்துக்குப் பொருந்தும். எனவே உயிரளபெடை 'உயிரின் வேறு ஆகா' என்பது ஒலி நிலையில் ஒத்துக்கொள்ள முடியாது. அப்படியானால் ஒலியன் நிலையில் உயிரளபெடை பற்றிப் பார்ப்போம்.

> அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பது ஒன்று ஆயினும் மொழிக்காரணமாய் வேறு பொருள் தராது இசை நிறைத்தல் மாத்திரை பயத்ததாய் நிற்றலின் வேறு எழுத்தெனப்பட்டது ஆயிற்று என்பது நுண்ணுணர்வான் ஓர்ந்து உணர்க (பக்.26)

என்று சிவஞானமுனிவர் கூறியது இடைக்காலத் தமிழுக்கே பொருந்தும் என்று மேலே காட்டப்பட்டது (§ 5.2) சங்க காலத் தமிழுக்குப் பொருந்தாது என்று போன இயலில் சுட்டப்பட்டது. ஆகவே, முனிவர் ஒலியன் நிலையில் இடைக்காலத் தமிழையும், ஒலிநிலையில் சங்கத் தமிழையும் (அதுவும் பெரும்பான்மை வழக்கையும்) பின் பற்றியுள்ளார் என்று ஆகிறது. இதை எப்படி ஒத்துக்கொள்வது?

ஒற்றளபெடை நன்னூலார் கருத்துப்படி ஒலி நிலையில் வேறு ஒலிதான். ஒலியன் நிலையில் சங்ககாலத்திலும் இடைக்காலத் திலும் உறழ்ச்சியாகவே வருவதால், தனி எழுத்தாகக் கொள்ளவேண்டிய தில்லை. 'ஒற்றளபெடை ஒற்றின் வேறன்மை உணர்க' என்பது ஒலியன் நிலை விளக்கமே. ஏனைய சார்பெழுத்துகளைப் பற்றிப் பேசும் போதும் ஒலியன் நிலையில் பேசுகிறார். அதோடு அனாவசிய மாக வடநூலில் இந்த ஒலிகள் சார்பெழுத்துகள் என்று கருதப்பட வில்லை என்று வாதாடியுள்ளார். மொழியின் தனித்தன்மையை மேலே வலியுறுத்திய முனிவர் இங்கு மொழிப் பொதுமையைப் பேசிக் கொள்கை முரண்படுவதற்கு, எப்படியாவது தொல்காப்பியர் கருத்தே சரி என்று வாதிட வேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டதே காரணம்.

> ஐகாரக் குறுக்கம் முதலாயின ஒரு காரணம் பற்றிக் குறுகின வாகலிற் சிறுமரம் பெருத்துழியும் பெருமரம் சிறுத்துழியும் வேறு ஒருமரம் ஆகாதவாறு போல வேறெழுத்து எனப்படா ஆகலானும்; வடநூலாரும் வடவெழுத்துகள் உயிரெழுத்தின் இறுதிக்கண் வைத்த இரண்டும் ஒற்றெழுத்தின் இறுதிக்கண் வைத்த இரண்டும் ஆகிய நான்கு எழுத்தும் வல்லெழுத்தின் முன் மெல்லெழுத்து வந்து மயங்குழி அவ்வவ் வல்லெழுத்தோடு ஒப்ப இடையே தோன்றும் வியம எழுத்து என்னும் இவை மாத்திரையே சார் பெழுத்தென வேறுகோடல் அன்றி உயிர் மெய், உயிரளபெடை, ஐகாரக் குறுக்கம் முதலிய எழுத்துக்களைச் சிறிது திரிந்தமை பற்றி வேறு எழுத்தென யாண்டும் கொள்ளாமையினும் அது பொருந்தா என மறுக்க (பக்.33).

என்பார் முனிவர். இது ஒலிநிலை விளக்கம். ஒலிநிலையில் உயிரளபெடையும் ஒற்றளபெடையும் தனி ஒலிகளாகக் கொள்ளப்பட வேண்டும் என்று மேலேயும் மூன்றாவது இயலிலும் காட்டப்பட்டது. மிஞ்சிய ஐகாரக்குறுக்கமும் மகரக்குறுக்கமும் வேறு வேறு ஒலிகள் என்று மூன்றாவது இயலில் விளக்கப்பட்டுள்ளது. ஆய்தக் குறுக்கம் பற்றி, அது தனி ஒலியா? என்று வேண்டுமானால் ஒருவர் வாதிடலாம். அப்படியானால் உயிர்மெய், ஔகாரக்குறுக்கம் ஆகியவற்றின் வரிசையில் ஆய்தக் குறுக்கத்தைச் சேர்க்கவேண்டும்.

முனிவர் நன்னூலார் கொண்ட பத்தும் சார்பு எழுத்து எனப் பொருந்தாது என்று சொன்னால், மயிலைநாதர் எழுப்பிய கேள்விக்குப் பதில் இல்லாமல் போய் விடுகிறது.

> அவர் (தொல்காப்பியர்) மூன்றே கொண்டாராலோவெனின்
> அஃதே நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படும்?

என்ற கேள்வியை மயிலைநாதர் எழுப்பியுள்ளாரே, அதற்குச் சரியான பதில் என்ன? நன்னூலார் ஒருவகையான பதிலைத் தந்தார். அந்தப் பதில் தவறு என்று கூறினால், மயிலைநாதர் கேட்ட கேள்வி தவறு என்று ஆகிவிடாது. மொழியில் வழங்கும் பல ஒலிகளைப் பாகுபடுத்திச் சில ஒலிகளை அநாமதேயமாக விட்டுவிடுவது எப்படி முழுமையான ஆராய்ச்சியாகும்? எனவே, நன்னூலார் பாகுபாடு தவறு என்று கூறுவதே சரியான மறுப்பு ஆகும். அந்த மறுப்புகூடப் பாதி ஆராய்ச்சியே. அதை முழுமைப்படுத்த வேறுவிதமாக எப்படிப் பாகுபடுத்தலாம்? என்ற கேள்வியைக் கேட்டு விடைதேட வேண்டும். அதற்கும், செய்த இலக்கணத்தை மதிப்பிடவும், அவன் கால மொழியை அறிந்து கொள்ளவும் வேண்டும். அதாவது நன்னூல் கொள்கையை மதிப்பிட இடைக்கால இலக்கியத் தமிழைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும். இலக்கண ஆராய்ச்சியில் கடைப்பிடிக்க வேண்டிய இந்த அரிய உண்மையைத் தொல்காப்பியப் பாயிரம் தெளிவாக வெளிப்படுத்திய பின்னும் அதைப் புறக்கணிப்பது சரியில்லை.

> **வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்**
> **எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி** (பாயிரம் 4-5)

என்பது தொல்காப்பித்துக்கு மட்டும் பொருந்தக் கூடியது என்று பலர் நினைப்பதால்தான், பிற இலக்கணத்துக்குப் பொருத்திப் பார்க்க முன்வரமாட்டேன் என்கிறார்கள். அது இலக்கிய ஆராய்ச்சிக்கும் மொழியியல் ஆராய்ச்சிக்கும் பொருந்தும் உண்மை. இதுவே இலக்கண

ஆராய்ச்சியாளரின் வழிகாட்டி; இலக்கணத்தை உரைத்துப் பார்க்கப் பயன்படும் கட்டளைக்கல். எனவே, நன்னூலை மதிப்பிடத் தொல்காப்பியர் கால மொழியை அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. அவர்கால இலக்கிய வழக்கையும் பேச்சு வழக்கையும் அறிந்து கொள்ளவேண்டும்.

இடைக்காலத் தமிழ் பற்றி இன்றைய மொழியியல் ஆய்வு சரியாக மேற்கொள்ளப்படவில்லை. எனவே, நாம் கூறும் இடைக் காலத் தமிழ்மொழி அமைப்பு, திருத்தம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று உணர்ந்தே இலக்கியச் சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

உயிர் பன்னிரண்டில் அ, இ, உ, எ, ஒ என்ற குறிலையும், அதன் இணையான நெடிலையும் ஒலிநிலையிலும் ஒலியன் நிலையிலும் (வருணனை மொழியியல்படியும் மாற்றிலக்கண விதிமுறை ஒலியனி யல்படியும்) வெவ்வேறாகக் கருதமுடியும். ஐகாரமும் ஔகாரமும் ஒலிநிலையில் கூட்டுயிர்களே. ஒலியன் நிலையில் அதன் தகுதி சங்கத் தமிழைவிட விவாதத்துக்கு உரியதே. ஐகார அளபெடை குறைந்து விட்டது. தனிக் குறிலை அடுத்து வந்த மெய் மட்டுமன்றிப் பிற இடங்களில் (நெடிலையும் குறிலிணையையும் குறில் நெடிலையும் அடுத்து) வரும் மெய்யும் இரட்டித்து வருவதற்குச் சில உதாரணங்கள் இலக்கியத்தில் உள்ளன. எனவே, ஐகாரத்தைக் கூட்டொலி (அய்) என்று கொள்ளலாம். ஔகாரம் வருமிடம் எல்லாம் அவ் / அவு என்பன உறழ்ச்சியாக வருகின்றன. மேலும், ஒலிநிலையிலும் அவ் என்பதே ஔ ஆகும் என்று நன்னூல் (125) கூறிவிட்டது. ஆகவே, ஔ என்பதையும் இடைக்காலத் தமிழில் கூட்டொலி (அவ்) என்று கொண்டால், இரண்டு எழுத்துகளைக் குறைக்கலாம். நன்னூலார்க்கு இந்த உண்மை தெரிந்தால்தால் போலி என்று கூறுகிறார். ஆயினும், மரபை மீறும் தைரியம் இல்லாததால், உயிர் பன்னிரண்டையும் முதல் எழுத்து என்று கொண்டுவிட்டார்.

மெய்யெழுத்துகளில் ஙகரம் இப்பொது உடனிலை மயக்கமாக இலக்கிய மொழியில் வர ஆரம்பித்து விட்டது. நகரமும் னகரமும் வேறுபடும் இடங்கள் குறைந்து விட்டன. நன்னூலார் நகரமும் சொல்லுக்கு இறுதியில் வரும் (12) என்று கூறினாலும், அதுவும் தொல்காப்பியச் செல்வாக்கே தவிர, தன்கால மொழியை அறிந்து கூறிய உண்மை அல்ல. எனினும், சொல்லுக்கு நடுவில் இரண்டு உயிர்களுக்கு இடையே சில சொற்களிலாவது நகரமும் னகரமும் வேற்றுநிலை வழக்கில் எழுத்து மொழியில் இருந்திருக்கவேண்டும் என்று நம்பலாம். எனவே, நகரமும் னகரமும் தனி ஒலியன்கள் - எழுத்துகள் என்று கொண்டிருக்கலாம்.

உ - அ : நெருநல் (அ. தே. 621.1) : புனல் (அ.தே.45.4)
(நா. தி. பி. 1848.3)
(அ.தே. 2831.4)

கொழுநர். (நா. தி. பி. 1513.1) : முனம் (அ.தே. 1973.3)

எ - அ : அநேக (அ. தே. 423.4) : ஏனம் (அ.தே.27.4)

இங்கு இவை குறைந்தபட்ச இணையாக (Minimal pair) இல்லாவிட்டாலும், ஒரே ஒலிச்சூழலில் (உ-அ; எ-அ) வருவதால் தனித்தனி ஒலியன்களாகக் கொள்ளலாம். மெய் பதினெட்டையும் தனி எழுத்துகளாக - முதல் எழுத்துகளாக நன்னூலார் கொண்டதும் ஓரளவு ஏற்றுக்கொள்ளத்தகுந்ததே. எனவே, முதல் எழுத்து முப்பதும் மொழியியல் நோக்கில் பெரும்பான்மையும் ஏற்றுக் கொள்ளத்தகுந்ததே.

தொல்காப்பியர் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றையும் 'எழுத்துகளில்' எழுத்தோரன்னவாகிய சார்பு எழுத்து என்று கொண்டதற்கான காரணத்தைப் போன இயலில் விளக்கினோம். காலமாற்றத்தால் அவைகளின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? என்று பார்க்கவேண்டும்.

ஆய்தம் ஒலி ஒற்றுமையுடைய வேறு ஒலிகளைப் போல இல்லாததால், அதன் பயிற்சி குறைந்திருந்தாலும், எழுத்தோரன்ன தன்மை மாறவில்லை எனலாம். ஆய்தம் இடைக்கால இலக்கியத்திலும் வந்துள்ளது.

| | |
|---|---|
| வெஃகோ | (நா. தி. பி. 3459.2) |
| அஃகா | ( " 3459.3) |
| அஃதே | ( " 2424.1) |
| அஃகாமல் | ( " 2424.6) |

போன்ற இலக்கிய வழக்குகள் இதற்குச் சான்று.

குற்றியலுகரம் வருமிடத்தைப் பொறுத்தவரையில் துணைநிலை வழக்கில் இருந்தாலும், புணர்ச்சியில் வேறுபட்டு வருகிறது. நன்னூலார் குற்றியலுகர ஈறு, உயிர்முன் வரக் கெட்டு விடும் என்று கூறியதோடு, முற்றியலுகரமும் ஓரளவு அத்தன்மை உடையது (164) என்றது, முற்றியலுகரமாக இருந்து அந்தப் புணர்ச்சி பெறும் என்பதைவிட, அவை ஒலிநிலையிலும் குற்றியலுகரமாகவே மாறிவிட்டன; அதனால்தான்

புணர்ச்சியில் கெட்டுவிட்டன என்று கொள்ளலாம். குற்றியலுகரம் ஒலிநிலையில், தமிழ் இலக்கண நூல்கள் வரையறுத்துக் கூறும் இடங்களில் மட்டும் இன்றி, ஏனைய இடங்களிலும் பரவிவிட்டதையே இது சுட்டுகிறது. இதற்கு இன்னொரு சான்றும் நன்னூலில் உள்ளது.

> **தன்ஒழி மெய்ம்முன் யவ்வரின் இகரம்**
> **துன்னும் என்று துணிநரும் உளரே** (205)

என்ற சூத்திரத்தின் அடிப்படை ஆராயத்தக்கது.

| | | | | |
|---|---|---|---|---|
| உரிஞ் | + | யானை | > | உரிஞியானை |
| மண் | + | யானை | > | மண்ணியானை |
| கார் | + | யானை | > | காரியானை |

முதலியன. இவைகளை வேறுவிதமாகவும் விளக்கலாம். மெய்யீற்றுச் சொற்கள் இறுதியில் ஒலித்துணை உகரம் பெற்று உரியது. உரிஞு மண்ணு, காரு என்று மாறுகின்றன. அவையே குற்றியலுகரமாக இருப்பதால் தான் யகரத்துக்கு முன்னால் இகரமாகவே - அதுவும் குற்றியலிகரமாகவே மாறிவிடுகின்றன. இன்றைய உச்சரிப்பிலும் அவை முழு இகரமாக உச்சரிக்கப்படாததும் குற்றியலிகரம் என்று கருதத் தூண்டுகிறது.

குற்றியலுகர முற்றியலுகர வேறுபாடு, இடைக் காலத்தில் தொடர்ந்து இருந்தும் அந்த உச்சரிப்பு வேறுபாடு வேறு பலவிதமான சொற்களுக்கும் பரவிவிட்டதையே மேலே காட்டிய சூத்திரமும், **‘முற்றும் அற்று ஒரோவழி’** என்ற வரியும் காட்டுகின்றன. எனவே, குற்றியலுகரத்தை இடைக்காலத்திலும் தனி எழுத்தாக - எழுத்தோ ரன்னவாகிய சார்பு எழுத்தாகக் கருதலாம்.

குற்றியலிகரம் மேலே காட்டியபடி இடைக்காலத்தில் பல புதிய சொற்களில் வந்துள்ளன என்று கொள்ளலாம். ஆயினும், அது எப்படிச் செயல்படுகிறது? என்று பார்க்கவேண்டும். சங்ககாலத் திலேயே புணர்மொழியில் மட்டும் வேறுபட்டது. அதையும், ஒலியன் நிலையில் குற்றியலுகரம் - குற்றியலிகரம் என்ற வேறுபாடாகக் கருதலாம் என்று குறிப்பிடப்பட்டது. சங்க காலத்தில் இயா - என்ற எழுத்துத் தொடர் வரவில்லை. மணிமேகலை காலத்தில் - இடைக் காலத்தில் பெருகிவிட்டது. அப்பர் தேவார வழக்கும் போன இயலில் எடுத்துக்காட்டப்பட்டது.

நியாயம் (திருமந்திரம் 532.2)
வியாழம் ( " 772.1)

இந்தச் சொற்களில் கூட இகரத்தை முழுமையான முற்றியலிகரமாகக் கூறமுடியாது. எனினும், அவற்றை இகரமாகக் கருதுவது போல மியா என்ற சொல்லிலும் கொள்ளலாம். அப்படியானால் அது முற்றியலிகரத்தின் மாற்றொலியாக - குறுக்க ஒலியாகக் கருதப்பட்டுக் குற்றயிலிகரம் எழுத்தோரன்ன வாகிய தன்மையிலிருந்து 'அல் எழுத்து' ஆக - வெறும் சார்பு எழுத்தாக மாறிவிட்டது என்றுபொருள். இது கடனாட்சியால் ஏற்பட்ட மாற்றம். அதாவது நியாயம், வியாழம் போன்ற சொற்களைக் கடனாண்டதால் எழுத்தின் தொடர் அமைப்பு மாறி, அது குற்றியலிகரத்தின் ஒலியன் தன்மையை மாற்றிவிட்டது.

இலக்கிய மொழியில் ஆய்தமும் குற்றியலுகரமும் தொல்காப்பியர் கருத்துப்படிச் சார்பெழுத்தாகக் கொள்ளத்தகுந்தவை. குற்றியலிகரம், ஏனைய குறுக்க ஒலிகளோடு சேர்க்கும் தன்மை பெற்றுவிட்டது. உயிர்மெய் என்பது குறுக்கமாகக் கருதித் தனி ஒலியாகக் கருதப்படவேண்டியதில்லை. ஔகாரம் குறுகி வேறு ஒரு ஒலியாக உச்சரிக்கப்படவே இல்லை. ஆய்தக் குறுக்கம் ஐயத்துக்கு உரியதே. உயிரளபெடை இடைக்காலத்தில் உறழ்ச்சியாகவே வந்துள்ளது. வருணனை மொழியியல்படி உறழ்ந்து வரும் மாற்றொலியாகக் கொள்ளலாம். நெட்டெழுத்துக்குரிய ஒரு மாற்றொலி - அதுவும் உறழ்ச்சியாகவே வரும் என்று சொல்ல முடியும். விதிமுறை ஒலியன்படி - குறிப்பாக வினையெச்சமாக வரும்போது இரண்டு குறில்களின் (உ+இ) கூட்டாகக் கருதலாம். எப்படியாயினும் அளபெடை தனி எழுத்து இல்லை; எழுத்தோரன்னவாகிய சார்பெழுத்தும் இல்லை. அது ஒரு 'அல் எழுத்து' ஆகக் கருதப்பட வேண்டியதே. ஒற்றள பெடையும் உறழ்ச்சியாக வருவனவே. புணர்ச்சி நிலையில் அதைக் கூட்டு மெய்யாகக் கொள்ளாமல் தனி மெய்யாகவே கொள்ளலாம். ஐகாரக் குறுக்கமும் மகரக்குறுக்கமும் முறையே ஐகாரம், மகரம் ஆகியவற்றின் மாற்றொலி. ஐகாரத்தைத் தனி ஒலியனாக எடுக்காவிட்டால், அதை 'அய்'காரத்தின் மாற்றொலி எனலாம். எப்படியாயினும், இதைத் தனி ஒலியனாகக் கொள்ள வேண்டியதில்லை. ஆகவே, நன்னூலார் ஆய்தத்தையும் குற்றியலுகரத்தையும் ஏனையவற்றோடு ஒருங்கு சேர்த்துச் சார்பு எழுத்து எனக் கூறியது சிறப்பாக அமையவில்லை. நன்னூலார் வேறுவிதமான பாகுபாடு செய்திருக்க வேண்டும். அவர் எழுத்துகளை இரண்டு விதமாகத்தான் பாகுபாடு செய்யலாம் என்று தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவே இத்தனையும்.

## 5.4 முத்துவீரிய முறை

முத்துவீரிய உபாத்தியாயர் உயிர் (சூ6), மெய் (சூ12), உயிர்மெய் (24), ஆய்தம் (25), குற்றியலிகரம் (36), குற்றியலுகரம் (34), அளபெடை (32), ஐகார ஔகாரக் குறுக்கம் (37), மகரக்குறுக்கம் (38), ஆய்தக் குறுக்கம் (39) ஆகிய ஒலிகளை விவரித்து உள்ளார். அளபெடையை அவர் எட்டு வகைப்படும் என்று கூறினாலும், ஒலி நிலையில் உயிரளபெடை, ஒற்றளபெடை என்றே கொள்கிறார் என்று எடுத்துக் கொள்வதில் தவறு எதுவும் இருக்காது. இதன்படி நன்னூலார் கூறிய எல்லா ஒலிகளையும் இவரும் ஏற்றுக்கொள்கிறார் ஆயினும், உயிர்-பன்னிரண்டு(6) மெய்-பதினெட்டு (12) என்று எண்ணிக்கை கூறிவிட்டு, வேறு எழுத்துகளின் எண்ணிக்கை பற்றிப் பேசவில்லை.

எழுத்தியலில் முதலில் எழுத்துகளை முதல், சார்பு என்று இரண்டாகப் பிரித்து உள்ளார்.

**எழுதப் படுதலின் எழுத்தா கும்மே** (1)
**அதுமுதல் சார்பென வாமிரு பாலன** (14)
**உயிர்உடல் எனமுதல் ஓரிரு வகைய** (5)
**சார்பு உயிர்மெய் தனிநிலை இருபாலன** (22)

என்ற நூற்பாக்களில் அந்தப் பாகுபாட்டை விவரித்துள்ளார். இவை களில் உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என்ற நான்கு வகை ஒலிகள் சேர்க்கப்பட்டுள்ளனவே தவிர, நூலில் குறிப்பிட்ட ஒலிகளைத் தொகுக்கும் முயற்சி செய்யப்படவில்லை. அப்படியானால், எழுத்தியலில் விவரித்த பிற எழுத்துகளான குற்றியலிகரம், குற்றியலுகரம் போன்றவற்றை எதில் அடக்குவது? என்ற கேள்வி எழுகிறது. போன இயலில் தொல்காப்பியர் 'எழுத்து' என்பதைப் புணரியலில் கூறி, வேறு சிலவற்றை நூன்மரபினும் மொழிமரபிலும் விளக்கியதன் மூலம், அவை 'அல் எழுத்து' எனக் கொண்டார் என்று விளக்கப்பட்டது. முத்துவீரியர் அப்படிக் கூறாவிட்டாலும், தொல்காப்பியர் கூறிய பாகுபாடு, இவர் மனத்திலும் இருந்திருக்கவேண்டும். எனவேதான் இவரும் சில ஒலிகளை எந்தப் பாகுபாட்டிலும் சேர்க்காமல் சென்றுள்ளார் என்று நாம் கொள்ளலாம். எனவே, தொல்காப்பிய பாகுபாட்டு முறையை இவர் பின்பற்றியுள்ளார் என்று கருதலாம். முத்துவீரியர் கருத்துப்படித் தமிழ் ஒலிகளைக் கீழ்க்கண்டவாறு பிரிப்பது பொருத்தமாக இருக்கும்.




முதலும் சார்பும் அல்லாதவற்றை 'அல் எழுத்துகள்' என்று கொண்டால்தான் தமிழ் ஒலிகள் எல்லாம் ஏதோ ஒரு பாகுபாட்டில் சேர்ந்ததாக ஆகும். இந்தப் பாகுபாட்டின் அடிப்படையை அறிந்து கொள்ளுமுன்பு இதற்கு வரலாற்று ஆதாரம் ஏதாவது உண்டா? என்று பார்ப்போம்.

சங்கரநமச்சிவாயர் (17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) சார்பெழுத்தின் வகை கூறும் நன்னூல் சூத்திரத்துக்குத் (60) தரும் விளக்கத்தை ஒட்டியே முத்துவீரிய உபாத்தியாயர் (19 ஆம் நூற்றாண்டு) சார்பெழுத்து என்பது உயிர்மெய்யும் ஆய்தமும் என்று கொண்டிருக்க வேண்டும்.

> உயிர்மெய் உயிரும் மெய்யும் கூடிப் பிறத்தலானும், ஆய்தம் உயிர்போல
>
> அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
> பெற்றான் நெடிதுய்க்கு மாறு. (குறள்.943)
> என அலகு பெற்றும், மெய்போலத்
>
> தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று (குறள்.236)
>
> என அலகு பெறாதும் ஒருபுடையொத்து அவற்றிடையே சார்ந்து வருதலானும் ஏனைய தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தாற் பிறத்தலானும் சார்பெழுத்து ஆயினவெனக் கொள்க.

என்பது சங்கரநமசிவாய வாசகம்.

இதன்படி நன்னூலார் கூறிய பத்து சார்பெழுத்துகளில் உயிர் மெய்யும் ஆய்தமும் தவிர, ஏனையவை முதலெழுத்திலிருந்து திரிந்தவை; உயிர்மெய் கூட்டொலியாகவும், ஆய்தம் முதலெழுத்தின் ஒருவகையான மெய்போலவும் பயன்படுவதால், தனித்தன்மை உடையன என்று அமைகிறது.

இதை அப்படியே ஏற்றுக்கொண்டு உயிர்மெய்யும் ஆய்தமும் சார்பெழுத்து என்று கூறியதால், 'அல் எழுத்துகள்' என்ற வகையில் அடங்கும் ஒலிகள் முதலெழுத்தின் மாற்றொலிகள் என்று ஆகின்றன.

முத்துவீரியம் வரிவடிவம் உடைய எழுத்துகளை மட்டுமே 'எழுத்துகள்' என்று கருதியும் இருக்கலாம். ஆனால், தொல்காப்பியத்தைப் போலவே எகர ஒகரமும் புள்ளி பெறும் என்றும் (41), குற்றியலுகரமும் புள்ளி பெறும் (42) என்றும் கூறியிருப்பது இந்தக் கருத்துக்கு மாறுபாடு போலத் தோன்றலாம். இது உண்மையில் அவர்கால வழக்கை ஒட்டி அமைந்தது அல்ல; தொல்காப்பியத்தில் கூறியிருப்பதை அப்படியே பின்பற்றிக் கூறியது.

பொதுவாகச் சொன்னால் 'எழுத்துகள்' என்பது தனி வரிவடிவம் உடையதாய், வரும் இடம் கட்டுப்பாடு இல்லாமலும் விகாரம் இல்லாமலும் இருப்பது. 'அல் எழுத்து' என்பது தனி வரிவடிவம் இல்லாததாய், எழுத்தின் விகாரமாய் வருபவை. அளபெடை பிற்காலத்தில் உறழ்ச்சியாகவே அமைந்துவிட்டது. எனவே, அல் எழுத்துகளை மாற்றொலி என்று கொள்ளலாம். 'எழுத்து'களை ஒலியனாகக் கொள்ளலாம். நேமிநாதம், நன்னூல் முறைகள் வெறும் ஒலிப்பாகுபாடாக (இயல்பாக வருபவை-திரிந்து வருபவை) அமைந்திருக்க, முத்துவீரியர் முறை எழுத்து - அல் எழுத்து என்ற பாகுபாடு ஓரளவு ஒலியன் - மாற்றொலிப் பாகுபாடாக - வருணனை மொழியியலை ஒட்டிய பாகுபாடாகவே அமையும். 'எழுத்துகளில்' சார்பு எழுத்துகள் கூட்டொலியாகவும், மற்றொன்றின் விகாரம் இல்லாமல் வருமிடம் கட்டுப்பாடு உடையதாயும் இருப்பவை. முதல் எழுத்துகள் அடிப்படையான ஒலிகள்.

முத்துவீரியர் அளபெடை மூன்ற மாத்திரை உடைய தனி ஒலி (104) என்று கூறினாலும், எட்டு வகையாகப் பிரித்ததன் (32) நுட்பம் குறிப்பிடத்தக்கது. இயற்கை, செயற்கை, இன்னிசை, சொல்லிசை என்பது யாப்பு அல்லது சொல்லியல் அடிப்படையில் அமைந்தது. உண்மையில் இயற்கையளபெடை என்பது அளபெடையை அடிப்படை வடிவமாக உடையது என்று பொருள்படும். ஏனை அளபெடைகள், பிற எழுத்துகள் மாறி அளைபெடையாக வந்ததாகக் கருத வேண்டும். அடிப்படை வடிவத்தில் நெடிலாக இருந்து அளபெடையாக வந்தவை நெடில் அளபெடை என்றும், குறில் அளபெடை என்பது குறில் அடிப்படை வடிவத்தில் இருந்து அளபெடையாக மாறியவை என்றும் கொள்ளலாம். ஆயினும், அவர் இப்படி அளபெடையாகக் கொண்டு இலக்கணம் அமைக்காது 'அல் எழுத்து' என்று மற்ற எழுத்துகளோடு சேர்த்தது, மொழி அமைப்புப்பற்றிய முழு உணர்வோடு செய்ததாகக் கொள்ளமுடியாது.

# 6. எழுத்தியலின் களன்

## 6.0 முன்னுரை

களன் என்பது பொதுவாக ஆராய்ச்சிக்குரிய பரப்பின் அளவு என்று கூறப்படுகிறது. இதை மொழியியலில் Universe of discourse என்று குறிப்பிடுகிறார்கள். Universe என்பது இங்குக் களன் என்று அழைக்கப்படுகிறது.[1] களன் என்பதைக் குறைந்த பட்ச அலகு என்று கொள்ள முடியாது.

தொடரியல் ஆராய்ச்சிக்கு வாக்கியங்களும், சொல்லியல் ஆராய்ச்சிக்குச் சொல்லும் (Word) களன்களாகக் கருதப்படும். ஆனால், தொடரியலில் குறைந்த பட்ச அளவான தொடரைக் (Phrase) களன் என்று கொள்ளமுடியாது. ஏனெனில், சில தொடர் சேர்ந்தே வாக்கியம் (Sentence) ஆகும். தொடரியலில் தொடரும் வாக்கியமும் சேர்த்தே ஆராயப்படும். அப்படியே சொல்லியலில் குறைந்தபட்ச உறுப்பு உருபன் (Morpheme). அந்த உருபன்கள் ஆனால், சொல்லியலில் - சொல்லின் அமைப்பில் ஒரு சொல்லில் எத்தனை உருபன்கள், எந்த வரிசையில் சேர்ந்துவரும் என்ற ஆய்வுதான் மேற்கொள்ளப்படும். எனவே, களன் என்பது குறைந்தபட்ச உறுப்பைக் குறிப்பது அல்ல.

புணரியலில் தனிச் சொற்களுக்குள் நடைபெறும் புணர்ச்சியும், தொடர்மொழியிலும் வாக்கியத்திலும் நடைபெறும் புணர்ச்சியும் விவரிக்கப்படும். அதனால் இலக்கண ஆசிரியர்கள் தனி உருபன் மாற்றுவடிவத்தை விளக்கினாலும், தனிச்சொல்லின் மாற்று வடிவத்தை விளக்கினாலும், முறையே சொல்லையோ தொடரையே உதாரணமாகக் காட்டுகிறார்கள்.

---

1 Universe என்பதை 'அலகு' என்று குறிப்பிடுவது (சண்முகம் 1977 : 105-9) பொருந்தாது என்றதோடு, களன் என்ற சொல்லால் குறிக்கலாம் என்று கூறிய டாக்டர் ராம. சுந்தரம் அவர்களுக்கு என் நன்றி.

அத்தின் அகரம் அகரமுனை இல்லை (தொல். 125)

என்ற புணரியல் சூத்திரத்துக்கு மகம் + அத்து + கை > மகத்துக்கை என உதாரணம் கொடுத்துள்ளார்கள். அப்படியே தனிச் சொல்லின் மாற்றுவடிவத்தை விளக்கும் சூத்திரத்துக்கும் தொடரை உதாரணம் காட்டுகிறார்கள்.

தொல்காப்பியர் 'சாவ' என்ற செயவென் எச்சச் சொல்லின் இறுதி வகரம் கெட்டு விடுதலும் உண்டு என்று கூறியுள்ளார் (209). அதற்கு உரையாசிரியர்கள் 'சாக் குத்தினான்' என்ற வாக்கியத்தை உதாரணம் தருகிறார்கள். ஏனெனில், மேலே தொல்காப்பியர் 112ஆம் சூத்திரத்தில் வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்று தொடரியல் நிலையில் இரண்டு வகைப்படுத்தியுள்ளார். எனவே, புணரியலில் உருபு புணர்ச்சியில் சொல்லையும், பதப்புணர்ச்சியில் தொடரையும் உதாரணமாகத் தருவதன்மூலம், அதன் களன் சொல் அல்லது தொடர் என்று கொள்ளலாம். ஆகவே, புணரியலுக்குரிய களன் எது? என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், எழுத்தியலுக்குரிய களன் எது? என்பது பற்றி இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள், மொழியியலாளர்கள் ஆகியோரிடையே உள்ள கருத்து வேறுபாடு இலக்கணக் கோட்பாட்டின் ஒரு கூறாகக் காணப்படுவதால், அது தனி இயலாக இங்கே விவாதிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கணத்தில் சார்பெழுத்தை விளக்கும் முறையில் வெளிப்படையாகவும், மெய்மயக்கம் கூறும்போது மறைமுகமாகவும் எழுத்தியலின் களன் பற்றிய பிரச்சனை எழுந்துள்ளது.

## 6.1 சார்பெழுத்து

சார்பெழுத்தைப் பற்றி விளக்கும்போது தொல்காப்பியர் ஒரு கருத்தினராகவும், ஏனைய ஆசிரியர்கள் வேறொரு கருத்தினராகவும் உள்ளார்கள்.

நச்சினார்க்கினியர் சார்பெழுத்துகளைத் தனிமொழிச்சார்பு, புணர்மொழிச்சார்பு என்று வேறுபடுத்திப் பேசுவார். இந்த வேறுபாடு ஓரளவு தொல்காப்பியத்தை ஒட்டியது; களன் பற்றிய ஆய்விலும் இந்தப் பாகுபாடு உதவியாக இருக்கிறது.

தொல்காப்பியர் சார்பெழுத்துகள் என்று சிறப்பாகக் குறித்த மூன்று எழுத்துகளைப் பற்றி மட்டுமே அல்லாமல் மகரக் குறுக்கத்தையும் தனிமொழியில் வருவன; தொடர் மொழியில் வருவன என்று

வேறுபடுத்தி, வெவ்வேறு இயல்களில் விளக்கியுள்ளார். தனிமொழியில் வருவனவற்றை நூன்மரபிலும் மொழிமரபிலும், புணர் மொழியில் வருவனவற்றைப் புணரியல்களிலும் விவரித்துள்ளார்.

தொல்காப்பியர் தனிமொழியில் வரும் குற்றியலிகரம், குற்றிய லுகரம், ஆய்தம் ஆகிய மூன்றையும் முறையே மொழிமரபு 34, 36 38 ஆம் சூத்திரங்களில் குறிப்பிட்டுவிட்டு, அவை புணரியலில் வரும் என்ற உண்மையை மட்டும் இங்குத் தனித்தனியே சுட்டிக்காட்டி, புணரியல்களில் அவைகளை ஏற்ற இடங்களில் விளக்கிச் சென்றுள்ளார்.

குற்றியலிகரத்தைப் பற்றிப் பேசும் போது,

**புணிரியல் நிலையிடை குறுகலும் உரித்தே**
**உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்** (35)

என்று பொதுப்படப் பேசிவிட்டு, குற்றியலுகரப் புணரியலில் தான்

**யகரம் வருவழி இகரம் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது** (410)

என்று குற்றியலுகர ஈற்றுச்சொல் யகர முதன்மொழிச் சொல்லோடு சேரும்போது, அந்தக் குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும் என்று விளக்கியிருக்கிறார். அப்படியே குற்றியலுகரம்பற்றித் தனி மொழியில் வருவனவற்றை மொழிமரபில் 36ஆம் சூத்திரத்தில் விவரித்து விட்டுப் புணர்மொழியில் வருவனபற்றிக் குற்றியலுகரப் புணரியல் 408, 409 ஆம் சூத்திரங்களில் பேசியுள்ளார். இது போலவே புணர்மொழி ஆய்தம்பற்றிப் புள்ளிமயங்கியல் 363, 379, 399 ஆகிய சூத்திரங்களில் வருணிக்கிறார்.

மகரக்குறுக்கம்பற்றித் தொல்காப்பியர் நூன்மரபில் அதன் மாத்திரையையும் (13), மொழிமரபில் தனிச்சொல்லில் அது வருமிடம் பற்றியும் (51, 52), புள்ளிமயங்கியலில் புணர்மொழியில் அது வருமிடம் பற்றியும் (330) விவரிக்கிறார்.

இப்படித் தனிமொழி, புணர்மொழி என்று பிரித்துத் தனிமொழியில் வருவனவற்றை நூன்மரபிலும் மொழிமரபிலும் - அதாவது எழுத்தியல் பகுதியிலும், புணர்மொழியில் வருவனவற்றைப் புணரியல்களிலும் தொல்காப்பியர் விவரிப்பதால், அவருக்கு எழுத்தியல் என்பது தனிமொழியில் வரும் எழுத்துகளைப்பற்றிய ஆய்வு என்று

நன்கு புலப்படுகிறது. இதையே, தொல்காப்பியர் எழுத்தியலுக்குக் களனாகத் தனிமொழியைக் கொண்டார் என்று நாம் விளக்கலாம். ஆனால், பிற்கால இலக்கண நூல்களில் இந்த முறை - தனிமொழியில் வருவன, புணர்மொழியில் வருவன என்ற வேறுபாடு கடைப்பிடிக்கப் படவில்லை.

இடைக்காலத்தில் தொடர்மொழிக் குற்றியலுகரம் பற்றி முத்துவீரியம் மட்டுமே (230) பேசுகிறது. அது தொல்காப்பியத்தை அப்படியே தழுவியதே தவிர, அவருடைய கால மொழியமைப்பைப் பிரதிபலிப்பதல்ல. ஏனெனில் வேறு எந்த இலக்கணமும் புணர் மொழியில் வரும் குற்றியலுகரம்பற்றிப் பேசவில்லை. ஆயினும் குற்றியலிகரம், மகரக்குறுக்கம் பேசும் பிற்கால நூல்கள் - குறிப்பாக நன்னூலுக்குப் பிறகு எழுந்த நூல்கள் எழுத்தியலிலேயே விளக்கியுள்ளன.

குற்றியலிகரத்தை வருணிக்கும்போது நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியன அக்குற்றியலிகரம் அசைச்சொல் மியாவிலும் (அதாவது தனிமொழி), குற்றியலுகரமும் யகரமும் புணரும்போதும் (தொடர்மொழி) வரும் என்று ஒரு சூத்திரத்தில், அதுவும் எழுத்தியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**யகர வரக்குறள் உத்திரி இகரமும்**
**அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய** (நன்.93)

**யகரம் வரக்குறள் உத்தப வரூஉம்**
**இகரமும் மியாவின் இகரமும் குறிய** (இ.வி.15)

**யம்முதல் இய்யாம் இருகுறள் உக்கெடில்**
**அஃகும் அற்றாம் அசைச்சொல் மியாவே** (தொ.வி.14)

**யகரம் வருவழி யிகரங் குறுகும்**[2] (மு.வீ.34)

**அசைச்சொன் மியாவி னிகரமு மற்றே** (மு.வீ.35)

**............குறள் உவின் கீழ்யவரிற்**
**சொன்மியா வினிற்இகரம் குறுகும்...** (சுவாமி.18.1-2)

---

2 இந்தச் சூத்திரம் புணரியலிலும் (232) வந்துள்ளது. எனவே இவருக்குத் தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதா? நன்னூலைப் பின்பற்றுவதா? என்று குழப்பம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

மகரக் குறுக்கம்பற்றிப் பேசும் இந்த நூல்கள் ஒரே இடத்தில் தணி மொழியிலும் புணர் மொழியிலும் சேர்ந்தே வருணித்துள்ளன.

**ணனமுன்னும் வஃகான் மிசையுமக் குறுகும்** (நன்.96)

**ளளமெய் திரிந்த ணனமுனும் வருமொழி**
**வகாரம் மிசையும் மகாரம் குறுகும்** (இ.வி.22)

**மகரம் ளளக்கீழ்**
**வம்மேற் குறுகும்** (தொ.வி. 17)

**மகரம் ணனக்கீழ் வம்மேற் குறுகும்** (மு.வீ.எழு. 38)

**. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . ளளத்**
**திரிந்த ணணப்பின் வம்மென் மக்குறுகும்..** (சுவாமி.18.5,6)

உண்ம், தின்ம் - தனிமொழி
வரும் வளவன் - தொடர்மொழி

எனவே, இவையெல்லாம் புணர்மொழியில் - அதாவது தொடர் மொழியில் வரும் எழுத்து அமைப்பை எழுத்தியலில் விளக்க வேண்டும் என்ற கோட்பாட்டை உடையன என்று கருதலாம். அதாவது இந்த இலக்கண நூல்களுக்கு எழுத்தியலின் களன் புணர் மொழி அல்லது கிளவி (Utterance) என்றே கொள்ள வேண்டும்.

இனி, வீரசோழியம் நேமிநாதமும் கடைப்பிடிக்கும் முறையைப் பார்ப்போம். அவை இரண்டும் எழுத்ததிகாரத்தை ஒரே இயலாகக் கூறினாலும், புணரியலைப் பிற்பகுதியிலும், எழுத்தியல் கருத்தை முற்பகுதியிலும் விளக்குவதால், சார்பெழுத்துகளின் வருணனையில் இடவேறுபாடு இருக்கிறதா? என்று பார்க்கவேண்டும். இரண்டுமே தனிமொழிக் குற்றியலுகரத்தையும் மகரக்குறுக்கத்தையும் விளக்க வில்லை; புணர்மொழியில் வருவதை மட்டும் விவரித்துள்ளன. ஆனால், இரண்டையும் ஒரு பகுதியில் விளக்கவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. இரண்டு நூலும் குற்றியலிகரத்தை அதாவது தொடர்மொழிக் குற்றியலிகரத்தை முற்பகுதியிலும் மகரக் குறுக்கத்தைப் பிற்பகுதியிலும் விளக்கியுள்ளன.

**இகரங் குறுகி வருங்குற் றுகரம்பின் யவ்வரினே**
(வீர. 3.4)

. . . . . . . . . . . . . . . . . . . . . யப்பின்
படைய வருமிகர. . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . குன்றும் . . . . (நேமி.4.1-3)

இது எழுத்தியலின் முற்பகுதியில் அடங்கும். ஆனால் அவை மகரக்குறுக்கத்தைப் பிற்பகுதியில் வருணித்துள்ளன.

. . . . . . . . பத்தா முடல் . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . .
முன்வயிற் கால்வவ் வரின் . . . . . . . . . (வீர. 19.1, 3)

(பத்தாம் மெய் - மகரம்)

மகரந்தான் . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . .
வகரம்வந் தாற்குறுகும். . . . . . . . . . . (நேமி. 18.1,3)

இதனால், இந்த இரண்டு நூலுக்கும் ஒரு திட்டமிட்ட இலக்கணக் கோட்பாடு உடையது இல்லை என்றே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், இந்த இரண்டு இலக்கண நூல்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், தொல்காப்பியர் முறை, நன்னூலார் முறை என்ற இரண்டு வகை இருப்பது தெளிவாகப் புலப்படும். இது சார்பெழுத்தின் வருணனையில் மட்டும் காணப்படும் வேறுபாடாகக் கொள்ளலாமல், எழுத்தியல் களன் பற்றிய கோட்பாட்டு வேறுபாடாகவும் கொள்வதே பொருந்தும். மொழியியலாளரிடையேயும் இந்தக் கருத்து வேற்றுமை இருக்கிறது.

மொழியியலாளரிடையே பைக் **(1947:89)** ஒலியனியல் ஆராய்ச்சிக்குக் கிளவியையே (அதாவது புணர்மொழியையும்) களனாக எடுத்துக்கொண்டுள்ளார். கிளவி (Utterance) என்பது தனி மொழியாகவும் புணர்மொழியாகவும் இருக்கலாம். ஆரம்பத்திலும் முடிவிலும் நிசப்தம் (Pause) இருக்க வேண்டும் என்பதே முக்கியம்.[3] ஆயினும், எல்லா வருணனை மொழியியலாளரும் கிளவியைக் களனாக எடுத்துக்கொள்ளவில்லை. கிளீசனும் (1961:18) ஹாக்கெட்டும் (1958:19) தனி மொழியையே ஒலியனியல் ஆய்வுக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளார்கள்.

---

3 Immediately following a pause or preceding one of them, phonemes may have sub-members which do not occur elsewhere. An uterance is a unit of speech which happens to begin and end with a pause.
Pike, 1947 : 89

மாற்றிலக்கண முறைப்படி ஒலியனியலை ஆராய்வோர் வாக்கிய அமைப்பிலிருந்து தனி உருபனுக்கு வந்தாலும், தொடர் மொழியில் எல்லா இலக்கணக் கூறுகளையும் ஒலியனியல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கொள்வார்கள். ஆயினும், உருபன் நிலையிலிருந்து ஒலியன் நிலைக்கு மாற்றுவதற்கு தனிமொழியின் ஒலியன் அமைப்பையே எடுத்துக்கொண்டு, உருபன் அமைப்புவிதி (Morpheme-Structure rules) - அதாவது உருபனின் ஒலியன் அமைப்பு விதி அமைப்பார்கள். எனவே, ஒரு நிலையில் அவர்கள் தனி மொழியை ஒலியன் ஆராய்ச்சிக்குக் களனாகக் கொள்கிறார்கள் என்று கருதலாம்.[4]

எப்படியாயினும் தமிழ் இலக்கண நூல்களில் தெளிவான கோட்பாட்டு வேறுபாடு சார்பெழுத்து வருணனையில் அமைந்துள்ளது. ஆனால், மெய்மயக்கத்தைப் பொறுத்தவரையில் உரையாசிரியர் களிடையேயும் ஆராய்ச்சியாளர்களிடையேயும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. உண்மையில் அதைக் களன் பற்றிய பிரச்சனை யாகவே கருதலாம்.

## 6.2 மெய்மயக்கம்

மெய்மயக்கத்தைப் பொறுத்த வரையில் மீதியுள்ள நூல்களில் இல்லாத ஒருமுறை, தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. தொல் காப்பியர் இரண்டு மெய்கள் சேர்ந்து வருவதை நூன்மரபிலும், மூன்று மெய்கள் சேர்ந்து வருவதை மொழிமரபிலும் விளக்கியுள்ளார். அதன் காரணம் தெளிவாய்ப் புலப்படாததால், தொல்காப்பிய ஆராய்ச்சியில் அது விவாதத்துக்குரியதாய் உள்ளது. மேலும், மெய்மயக்கம் என்பது தனிமொழியில் மட்டும் வருவதைக் கொள்வதா? புணர்மொழியிலும் வருவதைக் கொள்வதா? என்ற பிரச்சனையை உரையாசிரியர்களும் இலக்கண ஆராய்ச்சியாளர்களும் எழுப்பியுள்ளார்கள். அதற்கு முக்கிய காரணம் இலக்கணத்தில் - சிறப்பாகத் தொல்காப்பியத்தில் கூறப்பட்ட எல்லா மெய்மயக்கங்களுக்கு உரிய தனிமொழி உதாரணங்கள் கிடைக்கவில்லை என்பதுதான். உண்மையில் இங்கு இரண்டுவித சிக்கல்கள் உள்ளன. ஒன்று மெய்மயக்கம் தனிமொழிக்குரியதா? புணர் மொழிக்கும் உரியதா? என்பது. மற்றொன்று இலக்கண ஆசிரியனின் இலக்கணத்துக்குரிய

---

4 These rules are phonological redundancy rules or morpheme - structure rules. The phonological redundancy rules apply strictly within a single lexical item. Botha, 1971 : 65.

தரவு (Data) எப்பேர்ப்பட்டது? என்பது. இதனோடு தொடர்புள்ள மற்றொரு பிரச்சனை இலக்கண ஆசிரியனின் இலக்கண உத்தி பற்றியது.

உரையாசிரியர்கள் கருத்தை விவாதிப்பதன் மூலம் மேலே சுட்டிய பிரச்சனைகள் விளக்கப்படும். ஏனெனில், அது தமிழ் இலக்கண ஆய்வின் வளர்ச்சியைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இரண்டு மெய்களின் மயக்கம் நூன்மரபிலும் மூன்று மெய்களின் மயக்கம் மொழிமரபிலும் தொல்காப்பியர் கூறுவது எழுத்தியலைப் பாகுபடுத்திப் பார்க்கும் கொள்கை பற்றியது ஆதலால், அது அடுத்த இயலில் விளக்கப்படும். மெய்ம்மயக்கம் தனிமொழிக்கு உரியதா? புணர்மொழிக்கும் உரியதா? என்பதுதான் எழுத்தியலின் களன் பற்றிய பிரச்சனை ஆகையால், அதுமட்டும் இங்கு விவாதிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட சார்பெழுத்தை வருணிக்கும் முறையை நோக்கினால், தொல்காப்பியர் தனிமொழியில் வரும் மெய்ம்மயக் கங்களையே கொள்வார் என்றும், ஏனைய இலக்கண ஆசிரியர்கள் புணர்மொழியில் வரும் மெய்ம்மயக்கங்களையும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் நாம் கருதலாம். உரையாசிரியர்களோ இலக்கண ஆசிரியர்களோ இந்த முறையில் பார்த்து முடிவு செய்யவில்லை. எனவே, அவர்கள் நோக்கில் எப்படி விவாதிக்கிறார்கள்? என்று முதலில் புரிந்து கொண்டு, அதன்பின்னர் மொழியியல் நோக்கில் விடைகாண முயலுவோம்.

இளம்பூரணர் மெய்ம்மயக்கம் ஒருமொழி (அதாவது தனிமொழி) யிலும் தொடர்மொழியிலும் கொள்ளலாம் என்று கருதுகிறார்.

"மெய்ம்மயக்கம் தனிமொழிக்கும் புணர்மொழிக்கும் பொது" என்று 23ஆம் சூத்திர உரையில் திட்டவட்டமாகக் கூறினாலும், அங்கு மெய்ம்மயக்கம் பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்களைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

> இம்மெய்ம்மயக்கம் கூறுகின்ற சூத்திரங்கள் எல்லாம் பலபடியால் மயக்கம் கொள்ளச் சொல்நோக்கு உடைய.

என்று தொல்காப்பியத்தைக் குற்றம் சாட்டி விட்டு, வாசகரைப் பார்த்து 'எனினும் வழக்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்று அன்றி மயங்காது என்பது கொள்க' என்று சமாதானம் கூறிவிட்டு, அவர்களையும் கொஞ்சம் மட்டந் தட்டுவது போல,

> மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்கி ஒருவாற்றால் கூறியவாறு ஆயிற்று (இவையெல்லாம் 23ஆம் சூத்திர உரை விளக்கத்தில் உள்ளது)

என்று கூறி, அவர்கள் வாயையும் அடைத்துவிட்டார். ஆயினும், இளம்பூரணர் தொல்காப்பியத்தைப் புரிந்துகொள்ள உதவியவர் என்பதால், இடைக்கால அறிஞர்களும் தற்கால அறிஞர்களும் தங்களைப் பற்றிய குற்றச்சாட்டை மட்டும் அல்லாமல், தொல்காப்பியர் பற்றிய குற்றச்சாட்டையும் பொருட்படுத்தவே இல்லை. தொல்காப்பியம் பற்றிய குற்றச்சாட்டை மறுக்க அறிஞர்கள் முன்வராதது குறையுடையது தான். இடைக்கால அறிஞர்களின் மவுனத்துக்கு மெய் மயக்கம் பற்றிய தொல்காப்பியச் சூத்திரங்களை இவர்களும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது போனதுதான் காரணம். மொழியியல் வெளிச்சத்தில் தொல்காப்பியத்தைச் - சிறப்பாக மெய்மயக்கம் பற்றிய சூத்திரங்களைப் பார்க்கும்போது இளம்பூரணர் கூறியது போல 'பல படியாக மயக்கங் கொள்ளும் சொல்நோக்கு உடைய' அல்ல என்பது புலனாகி, அவருடைய குற்றச்சாட்டு தவறானது என்று அறிய முடிகிறது. இதற்கு முன்னால் நச்சினார்க்கினியர் கருத்தையும் பிற ஆசிரியர்கள் கருத்தையும் அறிந்து கொள்வோம்.

நச்சினார்க்கினியர் தன்னுடைய கருத்தாக மெய்மயக்கம் ஒரு மொழிக்கே உரியது என்று வற்புறுத்திவிட்டுப் புணர்மொழிக்கும் உரியது என்றால், 'நூலில் கூறியது கூறல்' என்ற குற்றம் ஏற்படும் என்று சுட்டிக்காட்டிவிட்டுத் தன்னுடைய கோட்பாட்டால் வரும் சிக்கலுக்கு இரண்டுவிதச் சமாதானமும் கூறிவிட்டுப் போயுள்ளார்.

> உரையாசிரியர், உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது என இரு மொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டினரால் எனின்

என்று குறிப்பிட்டு விட்டே தன்னுடைய கோட்பாட்டையும் அதற்குரிய மறுப்பையும் விளக்கியுள்ளார்.

> ஆசிரியர் ஒருமொழி ஆமாறு ஈண்டுக்கூறி இருமொழி புணர்த்தற்குப் புணரியல் என்று வேறோர் இயலும் கூறி அதன்கண் **'மெய்யிறு சொன்முன் மெய்வருவழியும்'** (எழு. 107) என்று கூறினார். கூறிய வழி பின்னும் **'உகரமொடு புணரும் புள்ளியிறுதி'** (எழு. 163) என்றும் பிறாண்டும் ஈறுகள் தோறும் எடுத்தோதிப் புணர்ப்பர். ஆதலின் ஈண்டு

> இருமொழிப் புணர்ச்சி காட்டிற் கூறியது கூறல் என்னும் குற்றமாம். அதனால், அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க (27ஆம் சூத். உரை).

என்று உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்கியதோடு, மெய்மயக்கச் சூத்திரங்களில் உள்ள உண்மையான பிரச்சனையையும் சுட்டிக்காட்டிச் சமாதானம் சொல்லியுள்ளார். இங்குள்ள உண்மை யான சிக்கல், தொல்காப்பியர் கூறிய மெய்மயக்கங்கள் எல்லா வற்றுக்கும் தனிமொழியில் உதாரணம் கிடைக்காததுதான். அதை நேரடியாகக் குறிப்பிடாமல் இருபத்து மூன்றாம் சூத்திர உரையில் 'கட்சிறார், கற்சிறார் என்பன இருமொழிப்புணர்ச்சி யாகலின் ஈண்டைக்கு ஆகா' என்று மறுத்து விட்டு, அடுத்த சூத்திர உரையில் தான் இரண்டு வித சமாதானத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

> இவற்றுட் கொல்யானை என வினைத்தொகையும் வெள்யாறு எனப் பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி செய்வதற்கு இயையாமையின் 1) **'மருவின் பாத்திய'** (எழு. 482.10) என்று கூறுவார் ஆகலின் இவ்வாசிரியர் இவற்றை ஒருமொழியாகக் கொள்வார் என்று உணர்க. இக் கருத்தானே மேலும் வினைத்தொகையும் பண்புத்தொகையும் ஒரு மொழியாகக் கொண்டு உதாரணம் காட்டுதும்; 2) அன்றி இவ்வாசிரியர் நூல்செய்கின்ற காலத்து வினைத்தொகைக்கண்ணும் பண்புத்தொகைக் கண்ணும் அன்றி ஒருமொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணம் கூறினார். அவை பின்னர் இறந்தனவென்று ஒழித்து உதா ரணம் இல்லனவற்றிற்கு உதாரணம் காட்டாமற் போதலே நன்று என்று கூறலும் ஒன்று (24ஆம் சூத். உரை).

இங்கு அவர் வேறுவழி இல்லாமல்தான் இந்தச் சமாதானத்தைக் கூறியுள்ளார் என்பதை அவருடைய சொற்கள் புலப்படுத்துகின்றன. ஆனால், பிற்கால ஆராய்ச்சி உலகில் நச்சினார்க்கினியர் கருத்து ஏற்றுக்கொள்ளப்படாததோடு, அவருடைய சமாதானமும் நையாண்டிக்கும் மறுப்புக்கும் ஆளாகிவிட்டது. முதல் கருத்தை, நன்னூலுக்கு உரை எழுதிய சங்கரநமச்சிவாயர்,

> வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை என்னும் அல்வழிப் புணர்ச்சியவாய தொகைநிலைத் தொடர் மொழிகளை ஒரு மொழி என்பாரும் உளர். அவர் கூற்றுத் 'தாய்மலடி' என்றாற் போலும்

என்று கடிந்துள்ளார். ஆயினும், இவர்க்குப்பின் வந்த ஆய்வாளர்கள் பலர் நச்சினார்க்கினியர் கருத்தை ஒத்துக்கொள்ளாவிட்டாலும், அவரைக் குறை கூறியதை ஒத்துக்கொள்ளவில்லை.

வேங்கடராசுலு ரெட்டியார் (1944:25) இளம்பூரணர் கருத்தை ஒத்துக்கொண்ட போதிலும், சங்கரமநச்சிவாயர் நச்சினார்க்கினியரைக் குற்றஞ்சாட்டியதைக் கண்டித்துள்ளார்.

> உரையாசிரியர் முதலியோர் கொள்கை அமைவுடையது ஆதலும், அதனைச் சங்கரநமச்சிவாயர் மறுத்து இழித்துக் கூறினது தக்கது அன்று ஆதலும் அறியப்படும்

என்று கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியர் கூறியது பொருத்தமான கருத்து என்று ஏற்றுக்கொள்ளப்படாததால், இளம்பூரணர் கருத்தை ஆதரிப்போர் இன்னும் நச்சினார்க்கினியரைக் குறைகூறியே வருகிறார்கள். உதாரணமாக முருகரத்தினம் (1973:36, அடிக்குறிப்பு 15),

> உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் மெய்ம்மயக்கம் பற்றிய மொழியியல் உண்மைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பது மட்டும் அல்லாமல், புரிந்து கொண்ட இளம்பூர ணரையும் இகழ்கிறார்

என்று கூறியுள்ளார். ஒரு உண்மை பற்றி இரண்டு வித கருத்து இருக்கும்போது தாம் ஏற்றுக்கொண்ட கருத்து உடையவர், பிறரை எவ்வளவுதான் குறை கூறினாலும் அதைப் புறக்கணித்துவிட்டு, மாற்றுக் கருத்து உடையாரைக் குறைகூறத் தலைப்பட்டுள்ளார்கள்.

நச்சினார்க்கினியர் கூறிய இரண்டாவது சமாதானம் வரலாற்று அடிப்படையில் அமைந்துள்ளது. அதனால் வேங்கடராசுலு ரெட்டி யார் நச்சினார்க்கினியர் குறிப்பிட்ட வரலாற்றுக்கு முற்பட்டுப் போயும், வேறு நிலையிலும் கூடப் பொருந்தாது என்று காட்டி, அதனால் புணர் மொழியிலும் மெய்ம்மயக்கம் எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்துவிடுகிறார்.

> ஆசிரியர் காலத்து வழங்கின என்றும் பிற்காலத்தில் வீழ்ந்தன என்றும் கொள்ளல் ஆகாதே எனின்?

என்று வேங்கடராசுலு ரெட்டியார் (1944:24) கேள்வியை எழுப்பி இரண்டு காரணங்களைக் காட்டி மறுத்து, இளம்பூரணர் கருத்தே சரியென்று முடிக்கிறார்.

1) நூலுள் யாண்டேனும் ஒரு சொல்லாதல் அவ்வாறு வந்தி லதாதனானும்,

2) தொன்மையவாகிய வழக்குகள் பயின்றுவரும் பழங்கன்னடத் திலும் இம்முறையின் அமைந்த சொற்கள் காணப்படாமையாலும், அங்ஙனம் கோடற்கு இடன் அன்று, மெய்மயக்கத்தை ஒரு மொழிக்கண்ணே கொள்ளுதல் வேண்டும் என்று கருதியதனானே நச்சினார்க்கினியர்க்கு இவ்வாறு கூறவேண்டுவதாயிற்று

என்று விளக்கியுள்ளார் அவர்.

உண்மையில் வரலாற்று நோக்கில் (நச்சினார்க்கினியர் மொழி வரலாற்று நோக்கிலும், வேங்கடராசுலு ரெட்டியார் தன் காலச் சூழலை ஒட்டி ஒப்பிலக்கண முறையிலும்) பார்ப்பது ஒருமுறை அதில் வெற்றி பெறாவிட்டால் இலக்கணத்துக்கும் இலக்கியத்துக்கும் (அதாவது ஆசிரியருடைய தரவுக்கும்) உள்ள உறவு நிலையை ஆராய முற்படவேண்டும். பழங்காலத்தில், அப்போது இருந்த இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டே இலக்கணம் எழுதப்பட்டது என்ற கொள்கையைக் கொண்டதாலும், பாயிரம் **'வழக்கு செய்யுளும் ஆயிரு முதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி'** (வரிகள் 4,3) என்று கூறப்பட்டிருப்பதை முழு உண்மையாக எடுத்துக் கொண்டதாலுமே இருவரும் (நச்சினார்க்கினியரும் வேங்கடராசுலு ரெட்டியாரும்) இலக்கண உண்மைக்கு இலக்கியச் சான்று தேடிச் சான்றுகள் இல்லாமையால் இரண்டு விதமான முடிவை மேற்கொண்டார்கள். அதாவது, தொல்காப்பியர் இடைச்சங்க காலத்தவர், சங்க இலக்கியமோ கடைச்சங்க காலத்து என்பது நச்சினார்க்கினியர் கருத்து ஆனதால், மொழி மாற்றம் இயல்பானது என்று கருதி, அவர் வழக்கு ஒழிந்து விட்டது என்றார்; வேங்கடராசுலு ரெட்டியார் தமிழ் மட்டுமின்றிப் பிற திராவிட மொழியிலும் வராததால், தனிமொழியில் மெய்மயக்கம் கொள்ளும் கெள்கையே தவறு என்று கருதிவிட்டார். வரலாற்று முறை சரியான விடையைத் தராததால் இரண்டாவது முறையைக் கடைபிடிக்கலாம். ஆனால், நாம் மொழியியல் வெளிச்சத்தில் பார்த்துத் தனக்குக் கிடைத்த தரவுகளைக் (அதாவது இலக்கிய பயிற்சிகளை) கொண்டு இலக்கணம் எழுத முற்படும்போது, தரவுகளில் உள்ளவற்றைக் கொண்டு அப்படி அப்படியே இலக்கணம் எழுதாமல், பொதுமைப்படுத்தி எளிமையாகக் கூறத் தரவுகளில் காணப்படாதவற்றையும் சேர்த்துக் கொள்வது உலகில் பல இலக்கண ஆசிரியர்கள் கடைபிடிக்கும் முறையே என்பதை அறியலாம். போன

இயலில் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றில்கூட 'ஙங்' என்ற மெய்மயக்கம் வரவில்லையாயினும், தொல்காப்பியர் அந்த மெய் மயக்கம் வரலாம் என்று இலக்கணம் எழுதியதால் இலக்கணத்தில் பொதுமையும் எளிமையும் ஏற்பட்டது என்று காட்டப்பட்டது. அப்படியே ஒற்றளபெடை வரலாம் என்று தொல்காப்பியர் கூறினாலும், சங்க இலக்கியத்தில் ஒன்றிரண்டு மெய்களே ஒற்றளபெடையாக வந்துள்ளன. எல்லாவற்றுக்கும் இலக்கிய உதாரணம் கிடைக்கவில்லை என்பதையும் பலர் சுட்டிக்காட்டியுள்ளார்கள் (உதாரணம், கந்தசாமி, 1977:83). எனவே, இலக்கண ஆசிரியர்கள் கூறிய எல்லாவற்றிற்கும் இலக்கியச் சான்று தேடிக் கிடைக்கவில்லை என்பதற்காகதத் தவறு என்றோ வழக்கு மறைந்துவிட்டன என்றோ கருதாது, இலக்கண ஆசிரியன் பொதுமைக்காகவும் எளிமைக்காவும் சிலவற்றைச் சேர்த்திருக்கலாம் என்று அமைதி அடைய வேண்டும். அப்படியானால் வேங்கடராசுலு ரெட்டியார் கருதியதுபோல, இளம்பூரணர் கோட்பாட்டை ஒத்துக்கொள்ளாது, நச்சினார்க்கினியர் கொள்கையை ஒத்துக்கொண்டு, தொல்காப்பியர் விளக்க நிறைவுக்காக (போன இரண்டு இயல்களிலும் விளக்கப்பட்டது) இலக்கியத்தில் வராத புதிய மெய்மயக்கக்கங்களைக் கூறியுள்ளார் என்று கொள்ளலாம். மேலும், சார்பெழுத்து வருணனையில் தனிமொழி பற்றியே எழுத்தியலில் விளக்கியதையும், அதே இயலில் கூறும் மெய்மயக்கமும் தனி மொழியில் மட்டுமே கொள்ளவேண்டும் என்பதையும் மறைமுகமாக வற்புறுத்துவதாகக் கருதலாம்.[5] இந்த விளக்கம் எவ்வளவு தூரம் தொல்காப்பிய இலக்கணத்துக்குப் பொருந்துவதாயும், தமிழ் மொழி வரலாற்றில் உண்மையாயும் அமைந்துள்ளது என்பதையும் உறைத்துப் பார்க்கவேண்டும்.

---

5 தொல்காப்பியர் நூன்மரபிலும் மொழிமரபிலும் தனிமொழியின் இலக்கணமே பேசுகிறார் என்பது வேறொரு வகையிலும் உறுதியாகிறது. புணரியல்கள் தொடர்மொழி பற்றி விவாதிக்கின்றன என்று மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும், தொல்காப்பியரின் புணரியல் முதல் நான்கு சூத்திரங்கள் (103-106) தனி மொழியைப்பற்றிப் புணர்ச்சி நோக்கில் விளக்கி, அடுத்த சூத்திரமே (107) சொற்கள் புணருவது பற்றிப் பேசுகிறது. எனவே புணரியலுக்கு முன் தனிமொழியின் இலக்கணமே பேசப்பட்டது என்பது வலியுறுகிறது. இளம்பூரணரும் 'இத்துணையும் ஒருமொழி இலக்கணம் கூறலின் மொழிமரபின் ஒழிதரவாயிற்று' என்றும், நச்சினார்க்கினியரும் 106ஆம் சூத்திர உரையில் 'இத்துணையும் மொழிமரபின் ஒழிபு கூறிற்று' என்று விளக்குவதும் இந்தக் கருத்துக்கு ஆதரவாக உள்ளது.

அதற்கு முன்னால் உரையாசிரியர்கள் தனிமொழி உதாரணம் தருவதில் பெற்ற வெற்றியை அனுமானிப்போம்.

தொல்காப்பியத்திலும் பிற இலக்கண நூல்களிலும் 86 மெய் மயக்கங்கள் வரும் என்று கூறப்பட்டிருக்கிறது. இவற்றில் இளம்பூரணர் 26 மெய்மயக்கங்களுக்கும் நச்சினார்க்கினியர் 58 மெய் மயக்கங்களுக்கும் தனிமொழி உதாரணங்கள் கொடுத்துள்ளார்கள். அங்கும், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் சொல் என்ற முறையிலேயே உதாரணங்கள் தந்துள்ளனரே தவிர, பகாப்பதம் என்ற நிலையில் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவைகளில் 'ங்ங்' உம் ஒன்று. அது சங்கம் மருவிய இலக்கியத்தில்தான் பயின்றுள்ளது என்பது முன்னரே சுட்டப்பட்டது.

வராத மெய்மயக்கங்களில் பெரும்பாலானவை (28இல் 21) இடையண்ண ஒலிகளான, ச, ஞ, ய ஆகிய மூன்றையுமே இரண்டாவது மெய்யாகக் கொண்டவை. அவைகளில் இரண்டாவது மெய்யாக யகரம் வருவது மட்டும் 10; சகர மெய் வருவது 6; ஞகர மெய் 5; ஏனைய மெய்களில் இரண்டாவதாக வகரம் வருவது 3; ஙகரம் வருவது - 3; ந்ந் - 1. இனிச் சூத்திர வருணனையைப் பார்ப்போம்.

ட, ற, ல, ள என்னும் மெய்யோடு க, ச, ப என்ற மூன்று மெய்யும் மயங்கும் (12 மெய்மயக்கம்) என்று கூறியதில் (தொல்.23), 'ள்ச்' என்ற ஒரு மெய்மயக்கமே தனிமொழியில் வருவதில்லை. ட,ற,ல,ள என்ற நான்கும் ஒலி ஒற்றுமை உடையன. வேற்றுநிலை மயக்கத்தில் இரண்டாவது மெய்யாக வருகின்ற க,ச,ப என்பனவற்றை ஒருசேரக் கூறினார். அப்படிக் கூறும்போது ஒரு மெய் மயக்கம் தனிமொழியில் வராததுபற்றிக் கவலைப்படவில்லை. எனவே, 'ள்ச்' என்ற மயக்கத்தைச் சேர்த்தது வருணனை எளிமைக்காகத் தற்காலிக விடுப்பாகக் கருதியிருக்கலாம்.

மேல் சூத்திரத்தில் வல்லினமெய்களில் இரண்டாவதாக வரும் மெய்யைக் கூறிய தொல்காப்பியர், அடுத்து இரண்டாவது மெய்யாக இடையினத்தில் வரும் ய, வ, என்ற இரண்டு எழுத்துகளை எடுத்துக் கொண்டார். அவை வேற்றுநிலை மயக்கமாக இடையின மெய்களான ல, ள ஆகியவற்றோடும் வரலாம் என்று கூறியுள்ளார் (தொல்.24). ஆனால், அவற்றிலும் ல்வ், ள்வ் என்று வகரம் மட்டுமே வருகிறது. இடையினம் என்ற பொதுக்கருத்தில் யகரத்தையும் சேர்த்து விட்டார் போலும். ஆனால், யகர மெய் எந்தச் சொல்லோடும் வராத போது,

ஏன் அதைச் சேர்த்துச் சொன்னார்? என்பது புரியவில்லை. மேலே குறிப்பிட்டபடி இடையண்ண ஒலிகள் இரண்டாவதாக வரலாம் என்பதில் தொல்காப்பியர் ஏன் பெருவிருப்புக்கொண்டார் என்ற புதிருக்கு விடை கண்டால்தான், இந்தச் சூத்திரத்துக்கு ஏதாவது சமாதானம் சொல்ல முடியும். அப்படியே 26ஆம் சூத்திரத்தில் (ண, ன) மெல்லின மெய்கள் முதலாவதாக இருக்கும்போது இரண்டாவது மெய்யாக வரக்கூடியவற்றில் - ஏழு மெய் (க, ச, ஞ, ய, ப, ம, வ) வரும் என்று கூறியதில் ச, ஞ, ய, வ ஆகியன ஒரு மெல்லினத்தோடும் சேர்ந்து வருவதே இல்லை. அப்படி இருந்தும் மூன்று இடையண்ண ஒலிகளையும் வகரத்தையும் ஏன் சேர்த்துக் கூறினார் என்பது தெரியவில்லை.

29 ஆம் சூத்திரத்தில் ய, ர, ழ என்ற மெய்கள் சொல்லுக்கு முதலில் வரும் மெய்யெழுத்துகளோடு மயங்கும் என்றே கூறியுள்ளார். அங்கு ய, ர, ழ மூன்றும் ச, ஞ, ய ஆகியவற்றோடு வராவிட்டாலும், மொழிக்கு முதலில் வரும் எழுத்து என்று பொதுமைப்படுத்துவதற்காகச் சேர்த்துள்ளார் என்று ஒரு வகையில் அமைதி அடையலாம். ஆனால், அங்கு அனாவசியமாக ஙகரமெய்யையும் சேர்த்துக் கூறியிருக்கிறார். அப்படி ஒரு சொல்கூடத் தனிமொழியில் இல்லை; அதை ஏன் சேர்த்தார்? என்பதற்கும் விடை எதுவும் தோன்றவில்லை.

உடனிலை மெய்மயக்கமாக ர, ழ நீங்கிய பதினாறு மெய்யையும் கூறியுள்ளார். முன்னரே ஙகர உடனிலை பற்றிப் பேசப்பட்டது. நகர உடனிலை மயக்கமும் தனிமொழியில் வரவில்லை. முந்நீர் (கடல்) என்பது ஒருசொல் என்பது ஐயத்துக்கு உரியது. அங்ஙனம், இங்ஙனம் என்பதை ஒரு சொல்லாகக் கொண்டதுபோல, அந்நாள் என்பதையும் ஒரு சொல்லாகக் கொண்டு விளக்க வேண்டுமா? என்பதும் புரியவில்லை. ஆனால், புணர்ச்சி விதிமூலம் அவரே அதை விளக்கியுள்ளார். இதை வேண்டுமானால் மொழி அமைப்பில் ஏற்பட்ட தற்காலிக விடுப்பு (Accidental gap) என்று கூறலாம்.

இடையண்ண ஒலியன்களுக்கு எந்தவிதச் சமாதானமும் கூற முடியவில்லை. ள்ச், ங்ங், ந்ந் ஆகிய மூன்று, ய, ர, ழ ஆகிய மூன்றும் ச, ஞ, ய ஆகியவற்றோடு சேர்ந்து எட்டு (ய்ய் என்ற உடனிலை மயக்கமும் சேர்ந்தால் 9 ஆகும்) ஆகப் பதினொரு மெய்மயக்கத்துக்கு மட்டுமே ஓரளவு இலக்கணப் பொதுமையும் எளிமையும் கருதிக் கூறியிருக்கிறார் என்று சமாதானம் அடைய முடிகிறது.

மொழியியலார் இப்படி வராத மெய்மயக்கத்துக்கும் சேர்த்து இலக்கணம் கூறிச் சென்றால், பிற்காலத்தில் அவை மொழியில்

வந்து வழங்க வேண்டும்; அப்போதுதான் அவற்றைக் குறிப்பிட்ட காலமொழியில் வரும் தற்காலிக விடுப்பாகக் கருதலாம் என்று ஒரு நியதி கூறுவார்கள். எனவே, அந்த முறையில் தொல்காப்பியர் கூறிய மெய்மயக்கங்கள் பிற்காலத்தில் வந்துள்ளனவா? என்று பார்ப்போம். அங்கு இடைக்கால இலக்கிய மொழிக்கும் கல்வெட்டு மொழிக்கும் வேறுபாடு காணப்படுகிறது. 'ங்ங்' மட்டுமே புதிய மெய் மயக்கமாகத் தனி மொழியாயினும், பகுபதச் சொல்லில் வந்துள்ளது. தொல்காப்பியர் கூறிய மெய்மயக்கங்களில் 'ல்ய்' என்பது நாலடியாரிலும் 'ண்ய்' என்பது நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும் உள்ளன.[6]

கல்யாணம் (நாலடியார்9.6)

புண்ய கீர்த்தி - (திருமங்கையாழ்வார் திருச்சந்த விருத்தம் 67.3)

அப்பர் தேவாரத்திலும் நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும் தொல்காப்பியர் குறிப்பிடாத புதிய மெய்மயக்கங்கள் வந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| க்த் | - | பக்தர் | (அ.தே.208.2 1834.3) |
| க்ர் | - | சக்ரபாணி | (திருச்சந்த விருத்தம் 14.4) |
| ட்ண் | - | வைட்ணவன் | |

கல்வெட்டுத் தமிழில் உள்ள பிறமொழிச் சொற்களில் சில மெய்மயக்கங்கள் காணப்படுகின்றன.

---

6 'புண்ய' போன்றவை வடமொழிச் சொல்லாயிற்றே; தமிழ் இலக்கணத்தில், அதில் வரும் மெய்மயக்கத்தை எப்படிச் சேர்ப்பது என்ற ஐயம் பலருக்கு எழலாம். பொதுவாக மொழியில் வழங்கும் எல்லாச் சொற்களின் அமைப்பை ஒட்டியே இலக்கணம் எழுதப்படும். தமிழ் இலக்கண ஆசிரியர்களும் அந்த முறையையே பின்பற்றியுள்ளார்கள் (சண்முகம், 1978இ : 105). யவனர், யுகம், யூகம், யோகம் என்பன பிறமொழிச் சொற்களாக இருந்தும், நன்னூலார் அவைகளையும் சேர்த்தே யகரமெய் அ,(ஆ), உ, ஊ, ஓ ஆகிய ஆறு உயிருடன் சொல்லுக்கு முதலில் வரும் என்று கூறியுள்ளார் (104). அப்படியே தொல்காப்பியர் வடமொழிச் சொற்களான திங்கள் பெயர், நாட்பெயர் ஆகியவற்றிற்கும் புணர்ச்சி இலக்கணம் விவரித்துள்ளார். எனவே மொழியில் வழங்கும் எல்லாச் சொற்களுக்கும் சேர்த்து இலக்கணம் எழுதவேண்டும் தவிர, அந்த மொழியின் சொந்த சொற்களுக்கு மட்டுமல்ல என்பது தெளிவாகும்.

ண்ய் - இரண்ய கசி, புண்யம்
ன்ய் - அங்காணச்சயன்யை
ம்வ - மலையஞ்சிக்குமர கரம்வித்தன் (ஆட்பெயர்)
ர்ய் - ஆசார்யன்
ல்ய் - காமாசால்யன் (விரும்புகிறவன்)
துல்யம் (13ம் நூற். கல்வெட்டு)
வ்ய் - வாஸ்தவ்யாய

அங்கும் தொல்காப்பியத்தில் குறிப்பிடாத புதிய மெய்மயக்கங்கள் வந்துள்ளன.

ர்ண - பூர்ணை
ர்ம் - தர்மம்

இதற்கு (புதிய மெய்மயக்கம் வராததற்கு) இரண்டு காரணங்கள் இருக்கலாமா? என்று நினைக்க வேண்டியிருக்கிறது. ஒன்று : தமிழில் புதிய சொற்கள் தனிச்சொல்லாக அதிகமாக ஆக்கப்படுவதில்லை. தொகைச்சொல்லாகவே (Compounding) ஆக்கப்படுகின்றன என்பது. மற்றொன்று : பிற மொழிச்சொற்களைக் கடனாண்டபோதிலும், தொல்காப்பியர் குறிப்பிட்ட பல மெய்மயக்கங்களை ஏற்றுக் கொள்ளாமல், இடையே ஒரு உயிரைச் சேர்த்து மெய்மயக்கத்தை நீக்கிவிட்டார்கள் என்பது. இந்தப் பணியை (மெய்மயக்கத்தை நீக்குவது) இலக்கிய ஆசிரியர்கள் மேற்கொண்டிருக்கவேண்டும். இடைக்கால இலக்கண ஆசிரியர்களும் தமிழாக்க விதிகள் என்று அமைத்து உதவி செய்திருக்கவேண்டும். இப்படி ஏன் தொல்காப்பிய விதி புறக்கணிக்கப்பட்டது? என்பதை அறிய இடைக்கால மொழி உணர்வு பற்றி ஆராயவேண்டும்.

எழுத்தியல் களன் பற்றிய பிரச்சனையில் வேறு பல பிரச்சனைகள் தொடர்பு உடையனவாய் இருக்கின்றன. மொழியிய லாளரும்கூட இன்னும் முடிந்த முடிபாக எழுத்தியல் களன் பற்றி வரையறுத்துக் கூறவில்லை என்பதையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

# 7. எழுத்தியல்

## 7.0 முன்னுரை

வீரசோழியம், நேமிநாதம் தவிர ஏனைய இலக்கணங்களில் எழுத்தியல் என்ற பிரிவு இருப்பதாகக் கொள்ளலாம் என்று இரண்டாவது இயலில் விளக்கிக் காட்டப்பட்டது. ஆனால், அங்கு விவரிக்கும் செய்திகளிலும், கூறும் முறைகளிலும் தொல்காப்பியம் தனித்து நிற்கிறது. வீரசோழியமும் நேமிநாதமும் நன்னூல் போல எழுத்தியல் செய்திகளை விவரித்தாலும், முழுமையான உணர்வுடன் பேசியிருக்கின்றன என்று கொள்ள முடியாது. எனவே, அவைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால், இங்கு இரண்டு முறைகள் இருப்பதாகக் கொள்ளலாம். ஒன்று : தொல்காப்பிய முறை, மற்றொன்று : நன்னூல் முறை. ஏனைய இலக்கணங்கள் நன்னூல் முறையைப் பெரிதும் தழுவிச் சிறு வேறுபாட்டுடன் மட்டுமே விளக்கியுள்ளது.

## 7.1 தொல்காப்பிய எழுத்தியல்

தொல்காப்பியர் நூன்மரபு, மொழிமரபு ஆகிய இரண்டு இயல்களிலும் எழுத்தியல் பற்றிக் கூறியுள்ளார் என்பதைப் பலரும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். அந்த இரண்டு இயல்களிலும் விவரிக்கப் பட்டுள்ள செய்திகள் பற்றிக் கருத்து வித்தியாசம் அறிஞர்களிடையே இல்லை; ஆனால், இயலின் தலைப்புப் பொருத்தம் பற்றியும், இயலில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பற்றியும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. எனவே, ஒவ்வொரு இயலிலும் கூறப்பட்ட கருத்துகள் எவை? அவை எப்படி எழுத்தியலை விளக்குகின்றன? என்பதைப் பார்ப்போம்.

### 7.1.1 நூன்மரபு

நூன்மரபு என்ற இயலின் பெயருக்கும், அங்கு விவரிக்கப்படும் செய்திக்கும் உள்ள பொருத்தம் பற்றி, இலக்கண உலகில் ஒரு தீராத வாதமே உள்ளது. இன்றைய நிலையில் நம்மால் பொருத்தம் பற்றி விளக்கம் தரமுடியாது. இதுவரை அறிஞர்கள் கூறிய கருத்துகளை இன்னாசி (1975:75-7) தொகுத்துக் கொடுத்துள்ளார். எனவே, நாம்

தலைப்புப் பொருத்தம் பற்றிய ஆய்வில் ஈடுபடாமல், அந்த இயலில் விவரிக்கப்பட்டுள்ள பொருள் பற்றிய விளக்கத்தையும், அதன் பொதுமைத் தன்மையையும் கவனிப்போம்.

நூன்மரபில் கூறப்பட்டுள்ள விஷயங்களை இளம்பூரணரே பொதுமைப்படுத்திச் சொல்லியுள்ளார்.

> இதனுட் கூறுகின்ற இலக்கணம் மொழியிடை எழுத்துக்கு அன்றித் தனிநின்ற எழுத்திற்கு என உணர்க (முதல் சூத்திர முன்னுரை)

இங்கு நூன்மரபில் உள்ள செய்திகள் இந்தப் பொதுமைக்கு அடங்குமா? என்பதையும், தனிநின்ற எழுத்தின் இலக்கணத்தை எப்படிக் கூறியிருக்கிறார்? என்பதையும் பார்க்க வேண்டும்.

நூன்மரபில் முதல் இருபத்தொரு சூத்திரங்களும், கடைசி சூத்திரமும் (33) சந்தேகத்துக்கு இடமில்லாமல் தனிநின்ற எழுத்தின் இலக்கணத்தையே விவரிக்கின்றன. இருபத்திரண்டு முதல் முப்பது வரையுள்ள ஒன்பது சூத்திரங்கள் மெய்மயக்கம் பேசுவதும், அடுத்த இரண்டு சூத்திரங்கள் (31,32) சொல்லிலக்கணம் பேசுவதும் சர்ச்சைக்கு உரியதாய் உள்ளன.

மெய்மயக்கம், எழுத்துகள் சேர்ந்து வருவது பற்றிய விளக்க மாதலால், தனிநின்ற எழுத்தின் இலக்கணம் எப்படி ஆகும்? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. மொழிமயக்கம் தனிமொழிக்கு உரியதா? புணர்மொழிக்கு உரியதா? என்ற வாதம் பெரிதாகப் போனதாலும், அந்தச் சூத்திரங்கள் 'பலபடியாய் மயக்கம் கொள்ளச் சொல்நோக்கு உடைய' என்று கருதியதாலும், இளம்பூரணர் மெய் மயக்கம் எப்படி தனி எழுத்தின் இலக்கணம் ஆகும்? என்ற பிரச்சனையைக் கிளப்பாமலேயே போய்விட்டார்.

நச்சினார்க்கினியர் நூன்மரபில் 'எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் அளவும் குறைவும் கூட்டமும் இனமும் மயக்கமும்' விளக்கப்பட்டுள்ளன என்று பட்டியல் போட்டு பார்த்ததால், அவருக்கு இங்கு மெய்மயக்கம் கூறியது பிரச்சனையாகவே தோன்ற வில்லை என்றாலும், இருபத்து இரண்டாம் சூத்திர உரை விளக்கத்தில்,

> இச் சூத்திரம் முதலாக 'மெய்ந்நிலை சுட்டின்' (எழு.30) ஈறாக மேற்கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றது என்று உணர்க; எழுத்துக்கள் தம்மிற் கூடிப் புணருமாறு கூறுகின்றது ஆதலின்.

என்று கூறும்போது முரண் இருப்பதை உணர்ந்திருக்கிறார் என்று தெரிகின்றது. ஆயினும், அதை விடுவிக்க முயலவில்லை. சிவஞான முனிவரே முதற்சூத்திர விருத்தியில்,

> இவ்வெழுத்துக்கு இவ்வெழுத்து நட்பு; அல்லன பகை என்னும் துணையானே கருவி செய்தலின் இவை ஈண்டே (நூன்மரபில்) வைக்கப்பட்டன (பக். 61).

என்று கூறுவது நச்சினார்க்கினியர் கிளப்பிய 'மெய்மயக்கம் மொழி மரபிற்கு உரியது' என்ற ஐயத்துக்குப் பதிலாக அமைந்துள்ளது. பொதுவாக எழுத்துகள் எல்லாம் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவதில்லை; சில எழுத்துகள் குறிப்பிட்ட வேறு எழுத்துகளோடு சேர்ந்து வருவது இயல்பு என்று பலமொழிகளை ஆராயும்போது உணரமுடியும். இது ஒலிப்பண்பைப் பொறுத்தது. உதாரணமாக *ட்த், *ல்ள் போன்ற மெய்மயக்கங்கள் வேறுபலமொழிகளில் வருவதில்லை. எனவே, மெய்மயக்கத்தைத் தனி மெய்களின் ஒலிப் பண்பை ஒட்டி அமைவதாகச் சிவஞானமுனிவர் விளக்கியுள்ளது ஏற்றுகொள்ளத்தக்கதே.

முருகையன் (1972) 'ஒலிகள் தமிழில் அசையாக அமையும் முறையை ஒட்டி மெய்மயக்கம் நூன்மரபில் கூறியது பொருத்தம்' என்று விளக்கியுள்ளார். நூன்மரபில் இரு மெய்களின் மயக்கமும், மொழிமரபில் கூறும் ஈரொற்று உடனிலை என்ற மூன்று மெய்களின் மயக்கமும் இரண்டு அசைகளாக அமைந்துள்ளன.

வந்/து என்பதில் உள்ள ந்த் என்ற மெய்மயக்கத்தில் ந் என்பது முதல் அசையின் இறுதி ஒலியாகவும், த் என்பது இரண்டாம் அசையின் முதலாகவும் அமைந்துள்ளன; பார்க்/க என்ற ஈரொற்று உடனிலையில் ர்க் என்ற மெய்மயக்கம் முதல் அசையின் இறுதி யாகவும், க் என்பது இரண்டாம் அசையின் முதலாகவும் உள்ளன; ஆயினும், இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது.[1] இரண்டு மெய்களின் மயக்கத்தை அபெட்டிங் (Abutting) என்றும் ஈரொற்று உடனிலையை

---

1 The intensity is gradually decreasing in the sequence of consonant clusters and becomes minimum in the sequence of abutting consonants. Therefore, the consonant sequences within the syllable behave differently from the sequences which extend over two syllables and they are called as clusters and abutting respectively.
Murugaiyan, 1972 : 485

க்ளஸ்டரிங் (Clustering) - மயக்கம் என்றும் அழைக்கிறார்கள்.[2] அசையாகப் பிரியும் போது அவை ஈரொற்று உடனிலையில்தான் சேர்ந்து வருகின்றன என்பதால்தான், மெய்மயக்கத்துக்குரிய பொதுச் சொல்லை (அதாவது க்ளஸ்டரிங்) ஈரொற்று உடனிலைக்கு இட்டுள் ளார்கள். இதனால் இரண்டு மெய்களின் மயக்கம் அசைநிலை நோக்கில் உண்மையான மெய்மயக்கமாக அமையவில்லை. எனவே தான், நூன்மரபில் மெய்மயக்கம் பேசப்படுகிறது என்று முருகையன் விளக்குகிறார். மேலும், மூன்று மெய்களின் மயக்கத்தை ஈரொற்று உடனிலை அதாவது இரண்டு மெய்கள் உடனாக வருவது என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது - அசைநிலையை ஒட்டி இரண்டு மெய்களின் மயக்கத்தை உண்மையான மெய்மயக்கமாகக் கருதாதது தொல்காப்பியருக்கும் உடன்பாடாக இருந்திருக்க வேண்டும் என்று புலப்படுவதாக முருகையன் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, தொல்காப்பியர் மறைமுகமாகவும், மொழியியலார் நேரடியாகவும் அசைநிலையை ஒட்டி, இரு மெய்களின் மயக்கத்தை உண்மையான மெய்மயக்கமாகக் கருதுவதில்லை. அதனால்தான் தனி எழுத்துகளின் இலக்கணம் கூறும் நூன்மரபில் அதை விளக்கினார் என்று கொள்ளலாம்.

அடுத்த பிரச்சனை, சுட்டுப் பெயரையும் வினாப் பெயரையும் இங்கு ஏன் கூறினார்? என்பது. அதற்குச் சரியான விடையைத் தனி எழுத்துகளின் இலக்கணத்தை எப்படிக் கூறினார்? என்ற கேள்விக்கு விடை காண்பதன் மூலமே அறிந்து கொள்ளமுடியும். மேலும், இந்த ஆய்வு தொல்காப்பிய முறைக்கும் நன்னூல் முறைக்கும் உள்ள வேறுபாட்டை வெளிப்படுத்தும் நிலையிலும் உள்ளது. ஆகையால், முதலில் பின்னைய கேள்விக்கு விடைகாண முயலுவோம்.

நன்னூலார் எழுத்தியலைப் பத்துப் பிரிவாகப் பிரித்துக் கூறியிருப்பது, இரண்டாவதாக விளக்கப்பட்டது. அதாவது எழுத்தின் பண்புகளை நன்னூலார் தொகுத்துக் கூறியுள்ளார். இதை அவயவிக் கொள்கை (Organic theory) என்று கூறுவார்கள். தொல்காப்பியச் செய்யுளியல் முதல் சூத்திர உரையில் பேராசிரியர் தரும் விளக்கம் அவயவிக் கொள்கையின் விளக்கமாக அமைந்துள்ளது என்பதைக் கைலாசபதி (1967 : 67) எடுத்துக் காட்டியுள்ளார். பேராசிரியர்,

---

2 Consonant clusters occur only when there is a sequence of three consononts. *Loc. cit* : 483.

உறுப்பு என்பன உறுப்புடைய, பொருளின் வேறு எனப்படா; பொருள் எனப்படுவன உறுப்பே, அவற்று ஈட்டத்தினை முதல் என வழங்குப ஆகலான் உறுப்பினையே சொல்லி ஒழிந்தார். முதற் பொருளது இலக்கணம் என உறுப்பிலக் கணத்தினையே வேறுபடுத்திக் கூறலாவது இன்மையானும் உறுப்பு உரைப்பவே அவ்வுறுப்புடைய பொருள் வழக்கியலாற் பெறலாம் ஆகலானும். செய்யுளியல் முதல் சூத்திர உரை.

என்று கருத்து தெரிவித்துள்ளார்.

நன்னூலார் அவயவிக் கொள்கையை உடையவர் என்பதைப் பெயரையும் எண்ணையும் மாத்திரை போன்றவற்றையும் தனித்தனி உறுப்பாகக் கருதி, அவற்றைத் தனித்தனிச் சூத்திரங்களில் தொகுத்துக் கூறியதால் அறியலாம். மேலும், எழுத்தின் பாகுபாடுகளான முதல் - சார்பு; உயிர் - மெய் முதலியனவற்றையும், 'பெயர்' என்ற உறுப்பாகக் கருதிச் சொல்லப்பட்டிருப்பதும் இங்குக் குறிப்பிடத்தகுந்தது. நூன்மரபுச் செய்திகள் நன்னூலில் உள்ள எண், பெயர், முறை, உருவம், மாத்திரை என்ற ஐந்திலும் அடங்கும்.

தொல்காப்பியரோ முதல் இரண்டு சூத்திரங்களில் எழுத்தின் எண்ணிக்கையைப் பேசினாலும், பாகுபாட்டுக்கு - அதுவும் ஒலிகள் மொழியில் செயல்படும் விதத்தை ஒட்டிய பாகுபாட்டுக்கு முக்கியத் துவம் கொடுத்துள்ளார் என்பது நான்காவது இயலில் விளக்கப் பட்டுள்ளது. மூன்றாவது நான்காவது சூத்திரங்கள் உயிர் எழுத்து களின் உட்பாகுபாடு பற்றிப் பேசுகின்றன. அங்கும்கூடக் குறிலும் நெடிலும் மாத்திரை வேறுபாடு உடையன என்று கூறாமல், மாத்திரை வேறுபாடே குறில்-நெடில் என்ற உட்பிரிவுக்குக் காரணம் என்பது போல விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**அவற்றுள்**
**அஇஉ எஒ என்னும்**
**அப்பால் ஐந்தும்**
**ஓரளபு இசைக்கும் குற்றெழுத் தென்ப**

என்ற நூற்பாவில் இவை குற்றெழுத்துகள்; அவை ஒரு மாத்திரை உடையன என்று விவரிக்காமல், இவை ஒரு மாத்திரை பெற்று ஒலிக்கும் குற்றெழுத்துகள் என்று கூறியுள்ளது, அவற்றின் பண்புக்குச் சிறப்பிடம் கொடுக்காமல் - அதாவது அதை உறுப்பாகப் பேசாமல், பாகுபாட்டிற்கு - அதாவது ஒலிகளின் தொழில் நிலைக்கு உதவுவதாகக் கூறியுள்ளதாகும்.

உயிர், மெய் பாகுபாடுகூடப் பெயர் என்ற முறையில் அமையாமல், தொழில் நிலை அடிப்படையில் அமைந்ததாகக் கொள்ளலாம். மெய்க்கு வரிவடிவம் கூறியதை அந்தப் பாகுபாட்டை வலியுறுத்தும் பண்பாகக் கொள்ளலாம்; எழுத்துகளின் வரிவடிவம் என்றும் கொள்ளலாம். ஆனால், அதை அடுத்துச் சில குறில்களுக்கு வரிவடிவம் பற்றிப் பேசுகிறார். இது முன்னதற்குத் தொடர்புடைய செய்தியாய் இருப்பதால் தான் இங்கு விவரித்துவிட்டார் என்று சமாதானம் அடையலாம்.

வல்லினம், மெல்லினம், இடையினம் என்பதையும் ஒரு வகையில் தொழில்நிலைப்பட்ட பாகுபாடாகக் கொள்ளலாம். இளம்பூரணர், சொல்லுக்கு முதலில் நான்கு வல்லின எழுத்தும் மூன்று மெல்லின எழுத்தும் உடையன என்று கூறியதை ஒட்டி நச்சினார்க்கினியர்,

> வல்லினத்துக்குக் க, ச, த, ப என்னும் நான்கும் மெல்லினத் துக்கு ஞ, ந, ம என்னும் மூன்றும் இடையினத்துக்கு ய, வ என்னும் இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கி இம்முறையே வைத்தார்.

என்று வைப்பு முறைக்குக் கொடுத்த விளக்கம், சொல்லாகச் செயல்படும் வேறுபாட்டைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

மெய்ம்மயக்கம் எழுத்தின் அசைநிலை ஒட்டிய பண்பாக விளக்கப்பட்டது. ஆகவே, நூன்மரபில் எழுத்துகளின் தொழில்நிலைப் (Function) பாகுபாடு பற்றி விளக்குகிறார் என்று கருதலாம். ஆனால், நன்னூலார் உறுப்பு நிலைப் பாகுபாட்டின்மூலம் எழுத்தியலை விளக்கியுள்ளார் என்று கொள்ளவேண்டும்.[3]

இந்த நோக்கில் பார்க்கும்போது, சுட்டுப் பெயராக அ, இ, உ என்ற மூன்று எழுத்தையும் (தொல். 31), வினா எழுத்தாக ஆ, ஏ, ஓ என்ற மூன்று எழுத்தையும் (தொல். 32) குறிப்பிடுவது ஒருவகைப் பாகுபாடு போல் அமைந்திருக்கிறது. ஆனால், இது சொல்லியலை ஒட்டிய பாகுபாடு. எழுத்துகள் சொல்லில் எப்படிப் பயன்படுகிறது. என்பதே நூன்மரபில் மேற்கொள்ளும் பாகுபாடு. எழுத்துகள் சொல்லாக எப்படி? எந்தப் பொருளில்? செயல்படுகின்றன

---

3 தொல்காப்பியர் செய்யுளியலைப் பொறுத்த வரையில் அவயவிக் கோட்பாடு உடையவராகக் காணப்படுகிறார்.

கைலாசபதி, 1976 : 67.

என்று விளக்கவேண்டியதில்லை. மேலும், அவற்றைப் பின்னால், புணர்ச்சியில் சுருக்கமாகக் குறிப்பிடவே அமைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது என்றும் வாதிட முடியாது. ஏனெனில், சுட்டுப் பெயர்களாவது புணர்ச்சியில் சில பொதுப் பண்புகளைப் (வல்லெழுத்துக்கும் மெல்லெழுத்துக்கும் முன் அந்த மெய்யெழுத்து இரட்டித்து வருதல்; உயிருக்கும் இடையினத்துக்கும் முன் வகர மெய் தோன்றுதல்) பொதுவாகவுடையன என்றால் அது ஒத்துக் கொள்ளத்தகுந்தது; ஆனால், வினாவெழுத்துகள் புணர்ச்சியில் தமக்கு எனச் சிறப்பான பொதுமை எதுவும் பெற்றிருக்க[illegible]ல்லை. சொல்லியல் படி மெய்களையும் ஏதாவது உட்பாகுபாடு [illegible]யலாமே! த, ட, ற ஆகியவை இறந்த கால இடைநிலை எழுத்துகள் என்று கூறலாம். மேலே காட்டியபடி எழுத்துகள் சொல்லில் எப்படிப் பயன்படுகின்றன? என்று ஆராயும் இயலில் அவை எப்படிச் சொல்லாகப் பயன்படு கின்றன? என்று கூறுவது அடிப்படை முரணாகும். எனவே, எழுத்தியலுக்குப் பொதுவாகவும், நூன்மரபுக்குச் சிறப்பாகவும் இந்தப் பாகுபாடு பொருந்தாது. இதை உணர்ந்து, நேமிநாதம் எங்கும் பேசாமல் விட்டுவிட்டதும், தொன்னூல்விளக்கம் சொல்லதிகாரத்தில் (சுட்டு 100.1 ; வினா 102) மட்டும் விவரிப்பதும் பாராட்டுவதற்குரியது. ஏனைய இலக்கணங்கள் மரபுவழியைப் பின்பற்றி எழுத்துகளின் பெயராக எழுத்தியலின் முன்பகுதியில் பேசியுள்ளன (இலக்கணத்தொகை பக். 44-46 பார்க்க).

## 7.1.2 மொழிமரபு

மொழிமரபு, எழுத்ததிகாரத்தில் மொழி அமைப்பை விளக்கும் முறையிலும் எழுத்தியல் கோட்பாட்டு நிலையிலும், சிறந்து விளங்கும் இயலாகும். இங்கு மொழி என்பது சொல் என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது.

மொழிமரபு விவரிக்கும் பொருளின் பொதுமைப்பற்றி அதிக மாறுபட்ட கருத்துகள் காணப்படவில்லை. எனினும், உரையாசிரியர்கள் தரும் விளக்கம் மொழிமரபின் முழுப்பெருமையையும் காட்டும்படி அமையவில்லை.

### 7.1.2.1 மொழி

இளம்பூரணர் 'இதனுள் கூறுகின்றது தனி நின்ற எழுத்துக்கு அன்றி மொழியிடை எழுத்துக்கு என உணர்க, என்றும், 'மொழிகளுக்கு எழுத்தான் வரும் மரபு உணர்த்தினமையின் மொழிமரபு' என்று

பெயர்க் காரணம் கூறுவதால், வேறு ஒரு உண்மையயையும் புலப்படுத்துகிறது. அதாவது மொழி அல்லது சொல் என்பது முக்கிய - ஆதார (Basic) உறுப்பாய் அமைந்து, அதை விளக்கவே எழுத்துகள் அமைந்துள்ளன என்ற உண்மை மறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது. அப்படியானால் தொல்காப்பியருக்குச் சொல் என்ற அலகு எப்படிக் கிடைத்தது? சொல்லுக்கும் எழுத்துக்கும் உள்ள உறவு என்ன? என்ற கேள்விகள் எழுகின்றன.

சொல், பொருள் உடையது என்ற உண்மைகூடச் சொல்லதி காரத்தில்தான் விளக்கப்பட்டுள்ளது. எனவே, சொல் என்பது ஏதோ இயற்கையாக உள்ளது என்ற கருத்தே மொழிமரபில் காணப்படுகிறது. இதற்கேற்பவே சொல்லின் எழுத்திலக்கணம் கூறும்போது, எழுத்தால் சொல் ஆக்கப்படுகிறது என்று கூறாமல், ஒரு சொல் எத்தனை எழுத்தைக் கொண்டிருக்கலாம் என்ற முறையில் பேசியுள்ளார்.

மொழியியலாளர் சொல்லுக்கும் எழுத்துக்கும் இரண்டுவகை உறவுகள் இருப்பதாகக் கொண்டு அவைகளில் ஒன்றே சிறந்தது என்று கூறுவார்கள் (Hockett, 1961). ஒன்று: சொற்கள் எழுத்து களாக ஆக்கப்பட்டது என்று கருதுவது. நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் இந்தக் கொள்கை உடையனவே. மற்றொன்று: சொற்கள் இத்தனை எழுத்துகள் உடையன அல்லது கொண்டிருக் கின்றன என்பது. தொல்காப்பியர் இந்தக் கோட்பாடு உடையவர் போலத் தோன்றுகிறார். இந்தக் கொள்கை உடையவர்களுக்குச் சொல்லே முக்கியமான அடிப்படை உறுப்பு. எழுத்து, சொல்லின் உறுப்பாக வருகிற பெருமை உடையதே தவிர, தனிப்பெருமை உடையதல்ல (சொல் என்பது இயல்பாக இருப்பது; ஆராய்ச்சியால் நிறுவப்பட வேண்டியதொன்று அல்ல). இதனால்தான், தொல்காப்பியர் பகுபத ஆய்வில் அதிகம் அக்கரை காட்டவில்லை என்று தோன்றுகிறது.

### 7.1.2.2 ஓரெழுத்தொருமொழி

தொல்காப்பியர் எழுத்து அடிப்படையில் சொற்களை வகுத்துக் காட்டும்போது 'எழுத்து' என்பதை வேறு ஒரு பொருளில் கையாண்டி ருக்கிறார் என்றே கருதுவதற்கு இடம் இருக்கிறது. மேலும் ஓரெழுத் தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, தொடரெழுத்தொருமொழி என்று மூவகையாக வகுத்த காரணமும் விவாதத்துக்கு உரியதாக அமைந்து விட்டது. மேலும், மொழி என்பது எதைக் குறிக்கிறது? என்பதும் ஆராய்ச்சிக்கு உரியதாக உள்ளது. இங்கு 43, 44, 45 ஆகிய மூன்று

சூத்திரங்களே பிரச்சனைக்கு உரியவை. எனவே, முதலில் ஓரெழுத் தொருமொழி பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

ஓரெழுத்தொருமொழியைப் பற்றி இரண்டு சூத்திரங்கள் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஒன்று: 'நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமெழி' (43) என்பது, ஏழு நெட்டெழுத்துகள் உள்ளன என்று முன்னரே அவர் குறிப்பிட்டுள்ளதால், ஏழு நெட்டெழுத்துகளும் ஓரெழுத்தொருமொழியாக வரும் என்பது பொருள். அதாவது இங்குத் தொல்காப்பியர் ஓரெழுத்தொருமொழியாக எத்தனை சொற்கள்? என்று கூறாமல், எத்தனை எழுத்துகள் அப்படி வரும்? என்று கூறியுள்ளார். எனவே, உரையாசிரியர்கள் இருவரும் இது 'உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது' என்று விளக்கியுள்ளார்கள். இதன்படித் தா, போ என்பனவும் ஓரெழுத் தொருமொழிகள் என்று ஆகிறது. இது வேறு இரண்டு உண்மைகளையும் உள்ளடக்கியிருக்கிறது. ஒன்று: எழுத்து என்பது உயிரையும் உயிர்மெய்யையும் குறிக்கிறது - அதாவது இங்கு எழுத்துத் தனி ஒலியைக் குறிக்காமல் அதற்கு மேற்பட்ட ஒரு அலகைக் குறிக்கிறது. குற்றியலுகரப் பாகுபாட்டில் ஆடு, நாடு போன்றவைகளை ஈரெழுத்தொருமொழி (409-11) என்று குறிப்பிடுவதும் இதற்கு ஆதாரமாக உள்ளது. இரண்டு : மொழி என்பது வெறும் உருபனைக் குறிக்காமல், கிளவியாக வரும் சொல்லையே சுட்டுகிறது. இதை ஒரு உருபன் உடைய சொல் (Monomorphemic word) என்று வேண்டுமானால் குறிப்பிடலாம். விஜயவேணுகோபால் (1974: 14-15) உரையாசிரியர்களின் கருத்தை மறுத்துள்ளார்.

> இவர் (இளம்பூரணர்) உயிரையும் உயிர்மெய்யையும் ஓரெழுத்து எனக் கொள்வதினாலே எழுத்து என்ற சொல்லிற்கு ஒலி (sound - phone) எற் பொருளைக் கொள்ளாது, வரிவடிவம் (written symbol) என்ற பொருளைக் கொள்கிறார் என்பதும் இதனால் தெளிவாகிறது.... இங்கு இளம்பூரணர் 'எழுத்து' என்பதற்கு உயிரையும் உயிர்மெய்யையும் கொண்டு, ஏன் மெய்யெழுத்தினை விட்டார் என்ற கேள்வி எழுகிறது. ஒருவேளை எழுத்து என்பதற்கு அசை என்ற பொருளை இளம்பூரணர் கொள்கின்றாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.... ஓரெழுத்தொருமொழிகளை ஓரசைச் சொற்கள் (Monosyllabic words) எனவும், ஈரெழுத்தொருமொழிகளை ஈரசைச் சொற்கள் (Disyllabic words) எனவும் இரண்டிறந்து இசைக்கும் தொடர் மொழிகளை பல அசைச் சொற்கள் (Polysyllabic words) எனவும் மொழியியலாளர் கொள்கைவழிக்

> கொள்ளுதல் வேண்டும். இந்நிலையில் 'எழுத்து' என்பதற்கு 'அசை' (syllable) என்ற பொருளும் தோன்றத் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளாரா? என ஆய்தல் நலம்.

என்று குறிப்பிட்டுவிட்டு (பக்கம் 15-16),

> 'அசை' என்ற கருத்தைத் தம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய பகுதிகளில் அவர் கூறவில்லை என்பதைக் காண்கிறோம். 'அசை' என்ற கருத்துச் செய்யுளியலிலேயே வருகிறது. ஆனால், அங்குச் சுட்டப் பெறும் அசைப் பாகுபாடு ஒலி (ஓசை) அடிப் படையில் அமைகின்றது. எனவே, செய்யுள் அசை (Poetic syllable) என்ற ஒரு கருத்தை அங்குக் காண்கிறோம். ....தொல்காப்பியர் கருத்துப்படி எழுத்தன் அடிப்படையினால் அமைகின்ற சொற்கள், உயிர், மெய் ஆகிய இரண்டினையுமே அடிப்படையாகக் கொள்வன எனக் கூறுதலே பொருத்தம். எடுத்துக் காட்டாகக் தம் குற்றியலுகரப் புணரியலுள் 'ஈரொற்றுத் தொடர்மொழி' என அவர் குறிப்பிடுவரைக் காட்டலாம். ஈர்க்கு என்பது அதற்கு எடுத்துக்காட்டு. இளம்பூரணர் கூறுவது போல உயிரையும், உயிர்மெய்யையும் கணக்கிற் கொண்டால் இதனை ஈரெழுத்தொருமொழி என்றல்லவோ சொல்லவேண்டும்! மாறாக இளம்பூரணரே இதனைத் தொடர் மொழிக்கு எடுத்துக்காட்டாகத் தருகின்றமையின் மெய்யெழுத்தும் எழுத்தாகக் கணக்கிடப் பெறுதல் அவர்க்கும் உடன் பாடானதே.

என்று முடிக்கிறார். இங்கு 'எழுத்து' என்பதன் விளக்கமும், உயிரையும் உயிர்மெய்யையும் கொண்டு மெய்யெழுத்தை ஏன் விட்டார்? என்ற கேள்வியும் சரியானவையே. ஆனால், இந்தக் கேள்விக்கு நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்தொருமொழி என்ற சூத்திரப் பொருளை ஒட்டிச் சமாதானம் கூறாமல், 45ஆம் சூத்திரத்துக்கும் பொருந்தும் என்று தவறாகக் கொண்டால்தான் இளம்பூரணர் கருத்துக்கு மாறாக 'அசை' என்று பொருள் கொண்டு, அந்தக் கருத்து தொல்காப்பியருக்கு உடன்பாடு இல்லை என்றும், இளம்பூரணர் உரையில் முரண் இருக்கிறது என்றும் விஜயவேணுகோபால் கூறவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. ஏனெனில், இளம்பூரணர் 'உயிருக்கும் உயிர்மெய்க்கும் பொது' என்று 43ஆம் சூத்திரத்தில் மட்டுமே குறித்துள்ளார். அந்தச் சூத்திரத்துக்கு அந்தக் கருத்துப் பொருந்துவதே. எப்படியென்றால்,

தமிழ்மொழி அமைப்பில் ஓரெழுத்தொரு மொழியாக - அதுவும் கிளவியாக (Monomorphemic word) தனி மெய் வருவதில்லை. அதை ஒட்டியே அப்படிப்பட்ட விளக்கத்தைச் சேர்த்தார். இதனால் தனி மெய்யெழுத்தை எங்கும் இளம்பூரணர் கொள்ளவில்லை என்று நாம் கருதக்கூடாது. அப்படிக் கருதுவதற்கு 45ஆம் சூத்திரத்தில் என்ன உதாரணம் கொடுத்திருக்கிறார் என்று பார்க்க வேண்டும். அங்கு அவர் 'கொற்றன்' என்ற சொல்லை இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழிக்கும் உதாரணமாகத் தந்துள்ளார். எனவே, இளம்பூரணர் ஓரெழுத்தொரு மொழியில் மட்டுமே தனி மெய்யெழுத்து 'எழுத்து' ஆக அமையாது என்றும், ஏனைய வகைகளில் மெய்யெழுத்தும் 'எழுத்து' ஆக அமையலாம் என்றும் கருதுகிறார் என்பது புலனாகிறது. ஆகவே, 'எழுத்து' என்றதன் சரியான பொருளை நிர்ணயிக்க 43, 44, 45 ஆகிய மூன்று சூத்திரங்களையும் பார்க்க வேண்டும். ஓரெழுத்தொருமொழியில் பார்த்தால் (43, 44ஆம் சூத்திரத்தில்) அங்கு வரிவடிவம் அசையும் ஒத்திருக்கிறது. மூன்று வகை மொழியையும் பேசும் இடத்தில் 'எழுத்து' என்பது அசையைக் குறிக்கிறதா? அல்லது வரிவடிவத்தைக் குறிக்கிறதா? என்று முடிவு கட்டலாம். இளம்பூரணரைப் பொறுத்த வரையில் 'எழுத்து' என்பது அந்த மூன்று சூத்திரத்தாலும் வரிவடிவையே குறிக்கிறது. ஆகவே, அவர் 'ஈர்க்கு' என்பதைக் குற்றியலுகரப் புணரியலில் தொடர்மொழிக்கு உதாரணமாகக் காட்டியது முரண் ஆகாது.

தொல்காப்பியர் 'குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே' என்று 44ஆம் சூத்திரத்தில் குறில் எழுத்து ஐந்தும் ஒருமொழியாக வராது என்று கூறியுள்ளார். இது எதிர்மறையில் அமைந்து சூத்திரம். இந்தச் சூத்திரம் மொழி என்பது தனி உருபன் அல்ல; சொல்லாக வரும் தனி உருபனே என்பதை வலியுறுத்துகிறது. ஏனெனில், குறில் தனி உருபனாகத் தமிழில் வரும். தொல்காப்பியரும் 'அ இ உ அம் மூன்றும் சுட்டு' (31) என்று கூறியுள்ளார். இதையே இளம்பூரணர்

> ஒகரம் ஒழிந்த நான்கும் சுட்டாயும் வினாவாயும் மொழி நிறைக்கும் அன்றோ எனின், அவை இடைச்சொல் ஆதலின், அவற்றிற்குக் கருவி செய்யார் என்க. (44ஆம் சூத்திர உரை)

என்று விளக்கியுள்ளார். இடைச்சொல் கட்டுண்ட உருபன்கள் (Bound morphemes) என்பதாலேயே தனிச் சொல்லாக வருவதில்லை. ஆயினும், உரையாசிரியர்கள் இருவரும் து, நொ என்ற இரண்டு வினைச் சொற்களும் தனிச்சொல்லாக வருவதைக் கவனித்திருக்கிறார்கள்.

எனவே, 'ஐந்தும்' என்பதன் உம்மை எச்சப்பட நின்றது. இதுவும் உயிர்க்கும் உயிர்மெய்க்கும் பொது என்று இளம்பூரணர் விளக்கி யுள்ளார். அதாவது, ஐந்தும் என்பதிலுள்ள உம்மை எச்ச உம்மை என்று கொண்டு ஐந்தும் மொழியாய் வராது என்றதால் சில வரும் என்று பொருள் கொண்டார்கள். உண்மையில் உரையாசிரியர்கள் தாங்கள் கவனித்த மொழி அமைப்பின் இயல்புக்கு ஏற்ப நூலாசிரியர்கள் கருத்தையே திரித்து, அதற்கேற்ப உரை எழுதிவிட்டார்கள். இதை நன்னூலாரும் இன்றைய அறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள் (உதாரணம். சி. சுப்பிரமணியன் 1977:94). ஆனால், சுப்பிரமணிய சாஸ்திரி (1937:53) 'து, நொ என்பது உயிர் மெய்யேயன்றிக் குற்றெழுத்தாகாமையின் அது பொருந்தாது எனக' என்று கூறியுள்ளார். அவைகளைக் குற்றெழுத்து இல்லை என்று வாதிடுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இல்லை. மேலும், சூத்திரத்துக்குப் பொருள் கூறுவதிலும் சிறிது வேறுபாடுகிறார். 'ஐந்தும்' என்று சூத்திரத்தில் வரும் உம்மையை உரையாசிரியர்கள் எச்ச உம்மையாக கொண்டார்கள். சுப்பிரமணிய சாஸ்திரியார் து, நொ என்ற இரண்டு சொல்லும் பொருந்தாது என்று கூறிவிட்டதால், 'அவ்வாறு கொள்ளின் உம்மையை முற்றும்மையாகக் கொள்ளலாகும்' என்று எழுதியுள்ளார். ஆனால், அந்த இரண்டு சொற்கள் 'பொருந்தாது' என்று எப்படித் தள்ளுவது?. அந்தச் சொற்களின் அடிப்படை வடிவம் வேறு என்று வாதிடலாமே தவிர, அவை குற்றெழுத்துகள் இல்லை என்பது தொல்காப்பியத்தை நியாயப்படுத்துவதற்காக மொழியின் அமைப்பை அலட்சியப்படுத்துவதாகும்.

மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை யுரிய. . . . . . . . . . . . . . . . (171.3-4)

என்று தொல்காப்பியர் உண்மையாயுள்ள வழக்குகளைப் பார்த்து ஒத்துக்கொள்ளச் சொன்ன கோட்பாட்டுக்கு மாறுபட்டு விடுகிறது. முன்னரும் இலக்கிய வழக்கைப் பார்த்தே இலக்கண ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. சுப்பிரமணிய சாஸ்திரி முகவுரையில், 'உதாரணங்கள் முடிந்தவரை இந்நூலிலிருந்தும் (தொல்காப்பியம்) சங்கச் செய்யுளிலிலிருந்துங் காட்டுதலும்' என்று கூறியிருந்தாலும், அதை முழுமையாக மேற்கொள்ளாதது இலக்கண ஆராய்ச்சியின் தேக்க நிலையைக் காட்டுகிறது. உரையாசிரியர்கள் தங்கள் உரைமூலம் மறைமுகமாகத் தொல்காப்பியரின் கருத்தை மறுபரிசீலனை செய்யச் சொன்னார்கள். சூத்திரம் தெளிவாகவும் எளிதாகவும் இருப்பதால் அதை மறுபரிசீலனை செய்யாமல், நாம் அவர்கள் தந்த உதாரணங்களை மறுபரிசீலனை செய்யவேண்டி வந்துவிடுகிறது.

இந்த இரண்டு உதாரணங்களும் தொல்காப்பியருக்கு உடன் பாடு இல்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் அல்லது சங்ககாலத்தில் எப்படி வழங்கியது? என்று ஆராய்ந்தால், தொல்காப்பியர் இவைகைளத் தனிச் சொல்லாக ஏன் கருதவில்லை என்பது புரிந்துவிடும்.

நொ என்பது 'துன்பப்படு' என்ற பொருளையும் **து** என்பது 'உண்' என்ற பொருளையும் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

தொல்காப்பியர் நொ என்பதைத் தனிச் சொல்லாகப் பயன் படுத்தவில்லை. எனவே, சங்க இலக்கியப் பயிற்சி எப்படி இருக்கிறது? என்று பார்க்கவேண்டும்.

நொாப்பறை வாவல் - நொய்யதாகப் பறக்கும் வவ்வால்
(குறுந். 172)

இது நொய்வு என்ற சொல்லோடு தொடர்பு உடையது. எனவே, அடிப்படை வடிவம் 'நொய்' என்பதுதான் 'நொ' அல்ல.

நொய்து - மெல்லிய (புறம். 75.10)
நொய்ந்நூல் - நுண்ணிய நூல் (பரிபா. 10.10)
நோவல் - துன்பப்படாதே (அகம்.25.16)

போன்ற சொற்களை ஆராய்ந்தால், அங்கு 'நோ' என்பது பகுதி. நொவ்-/நொ- என்பன மாற்று வடிவங்கள். எனவே 'நொ' என்பதைப் பகுதியாகக் கொள்ளக்கூடாது; தொல்காப்பியரும் அப்படிக் கருதவில்லை. இடைக்காலத்தில் யாப்பருங்கலக் காரிகையில்

**அஉ அறியா அறிவில் இடைமகனே**
**நொ அலையல் நின்னாட்டை நீ** (உறுப்பியல் 5. உரை)

என்ற உதாரணம் பாடலில் 'நொ' என்பதே பகுதியாக வந்திருப்பதால், உரையாசிரியர்கள் அதைக் குற்றெழுத்து ஓரெழுத்தொரு மொழியாகக் கருதியிருக்கலாம். முதலில் தொல்காப்பியர் காலத்திலோ சங்க காலத்திலோ அச்சொல் குற்றெழுத்தாக வழங்கியதாகக் கருதமுடியாது என்று நாம் உரையாசிரியர்கள் கருத்தை மறுக்கலாம்.

இடைக்காலத்தில் ஒருசொல் இலக்கிய வழக்கில் பயின்று வந்திருந்தாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமா? என்பதையும் ஆராயவேண்டும். செய்யுளியலில் இலக்கண ஆசிரியர்கள்

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் என்ற பல தரப்பட்ட விகாரங்களை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே, 'நொ' என்பதை அப்படியே ஏற்றுக்கொண்டு இலக்கணம் எழுதக்கூடாது. மேலும் நோ, நோவு, நோய் போன்ற வடிவங்களும் இடைக்காலத்தில் வழங்கியிருக்கின்றன.

| | | | |
|---|---|---|---|
| நொந்தார் | - துன்பப்பட்டவர் | (அப்பர் தேவா. | 2173.3) |
| நோவ | - துன்புற | ( " | 1411.1) |
| நோவது | - துன்பம் | ( " | 459.3) |

எனவே, ஓரிடத்தில் குற்றெழுத்துப் பயின்று வந்திருக்கிறது என்பதற்காகத் தனிக் குற்றெழுத்து ஓரெழுத்தொருமொழியாக வரும் என்று சொல்வதைச் சிறப்பானதாகக் கருத முடியாது. இதன் அடிப்படை வடிவம் நோ என்ற நெட்டெழுத்தே. அது புறநிலை ஆய்வாக அமையும். அப்படியானால் வந்தார், தந்தார் என்பதிலும் வ, த ஆகியவைகளிலும் குற்றெழுத்து பகுதியாக இருப்பதாகக் கருதவேண்டும். மொழியின் முழுப் பரப்பையும் சொல்லின் அடிப்படை வடிவத்தையும் மனதில் கொண்டு பொதுமையை விளக்கும் ஆய்வாகக் கொள்ளமுடியாது.

து என்பது உண் என்று கொள்ளப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| துய்த்து | - நுகர்ந்து | (அகம். | 145.16) |
| துப்பு | - உணவு | ( " | 108.9) |
| துய்த்த | - தின்ற | ( " | 15.14) |
| துப்பு | - உண்ண | (அப்பர் தேவா. | 2707.2) |
| | - நுகர்வுப்பொருள் | ( " | 2358.1) |
| துய்ப்பன | - அனுபவிப்பன | ( " | 3015.3) |

இங்கெல்லாம் துய் என்பதே அடிப்படை வடிவமாக வந்துள்ளது; து என்பதல்ல. அப்படியானால், துய்ப்பு என்பதே துப்பு என்று மாறியதாகக் கொள்ளவேண்டும். ஆனால், எட்டு என்பதைத் தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் (பொதுமொழியாகவும் வரும்) என்று இலக்கண ஆசிரியர்கள் உதாரணம் காட்டியுள்ளார்கள். அதன்படி எட்டு என்பது (எள் + து) 'எள்ளைத் தின்' என்று பொருள்படும் என்பது அவர்கள் கருத்து. அந்தப் பொருளில் அந்தத் தொடர் பேச்சு மொழியில் - இயல்பான பேச்சில் வழங்குவது இல்லை. புலவர்கள் தங்கள் திறமையைக் காட்டப் படைக்கப்பட்ட சொல் அது. இப்படிப்பட்ட

தொடர்களுக்கு இலக்கணம் எழுதுவது தமிழில் எப்படிப்பட்ட சொற்கள் அப்படிப் பிரிக்கப்படுகிறது என்பதைக் காட்டும் ஆராய்ச்சியே தவிர, தமிழ் மொழி அமைப்பைப் பொது நிலையில் விளக்கும் ஆராய்ச்சி ஆகாது.[4]

### 7.1.2.3 மூன்று வகை மொழிகள்

> ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
> இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
> மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே (45)

என்ற சூத்திரம், இலக்கண உலகில் விவாதத்துக்கு உரியதாக இருந்து வருகிறது. இங்கு (1) 'எழுத்து' என்றால் என்ன பொருள்? (2) ஏன் மூன்று வகையாகப் பிரித்தார்? என்ற இரண்டு கேள்விகளை எழுப்பிப் பலவிதமான பதில்கள் கூறப்பட்டு வந்துள்ளன.

இளம்பூரணரைப் பொறுத்த வரையில் இந்தச் சூத்திரம் எளிமையானதாகவே பட்டிருக்கிறது. ஆயினும், எழுத்து என்பதற்கு உயிர், உயிர்மெய், மெய் ஆகிய மூன்றும் கொள்ளலாம் என்பது அவர் கொடுத்துள்ள உதாரணத்தின் மூலம் புலப்படுகிறது. எனவே, 'இளம்பூரணருக்குத் தனி வரிவடிவம் உடையவை எல்லாம் எழுத்து' என்று எடுத்துக்கொள்ளலாம். இரண்டாவது கேள்வியை அவர் எழுப்பவில்லை.

நச்சினார்க்கினியர் தன்னுடைய உரை விளக்கத்திலிருந்தும் உயிரையும் உயிர்மெய்யையும் மட்டுமே எழுத்தாகக் கருதுகிறார் என்பது தெளிவாகிறது. இவர் கருத்துப்படி எழுத்து 'அசை' (Syllable) ஆக அமைகிறது (சண்முகம், 1967:64). இவர் இளம்பூரணர் கூறியபடிப் பொருள் கொள்ளக்கூடாது என்பதற்கு மூன்று காரணங்களைச் சுட்டியுள்ளார்.

---

4 இது எல்லாக் காலத்திலும் புலவர்கள் தங்களின் மொழித் திறமையைக் காட்ட மேற்கொள்வதுதான். தேசிய எழுச்சியையும் சமூக மாற்றத்தையும் ஆதரித்த சுப்பிரமணிய பாரதியார் தன்னைக் காத்துக் கொள்ளப் பாரதி என்ற சொல்லைப் பார் + அதி (சின்னப்பயல்) எனப் பிரித்துப் பாடியது நினைவுக்கு வரலாம். இந்த முறை இன்று நகைச்சுவைக்காக மேடைகளில் சிலரால் கையாளப்படுகிறது (சண்முகம், 1978ஆ : 146 பார்க்க). இங்குப் பார் + அதி என்பதால் வினையடியும் பெயரடையும் சேர்ந்து தொகையாக வந்திருக்கிறது என்று இலக்கணம் சொன்னால் கேலியாகவே கருதப்படும்.

1. தொல்காப்பியரே செய்யுளியலில் ஒற்றும் குற்றுகரமும் 'எழுத்து' எண்ணவும் அலகிடவும் பெறா என்று விலக்குவார். ஆதலின் அவற்றால் ஈண்டு ஈரெழுத்தொருமொழியும் மூவெழுத் தொரு மொழியும் கொள்ளின் மாறுகொளக் கூறல் என்னும் குற்றம் தங்கும்.

2. தொல்காப்பியரின் 43, 44 ஆம் சூத்திரங்களால் மெய்க்கு குறுமை, நெடுமை இன்மையான் உயிரும் உயிர் மெய்யுமாகிய நெடிலும் குறிலுமே மொழியாகும் என்று கூறி மீட்டும் அதனையே இச்சூத்திரத்தான் ஓரெழுத்தொருமொழி என்று எடுத்து அதனோடே ஈரெழுத்தையும் இரண்டிறந்ததனையும் கூட்டி மொழியாகக் கோடலின் ஒற்றினைக் கூட்டி எழுத்தாகக் கோடல் ஆசிரியர்க்கு கருத்து அல்ல.

3. ஈண்டு 'எழுத்து' மொழியாம் தன்மை என்பது.

நச்சினார்க்கினியர் கருத்துப் பின் வந்தோரால் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. பிற்கால இலக்கண ஆசிரியரும், தன்னுடைய நூலுக்குத் தானே உரை எழுதிய இலக்கணவிளக்க வைத்தியநாத தேசிகர் (17ஆம் நூற்றாண்டு), சுப்பிரமணிய சாஸ்திரி (1937), வேங்கடராகுலு ரெட்டியார் (1947), வெள்ளைவாரணனார் (1962), விஜயவேணுகோபால் (1974) ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். வைத்தியநாததேசிகரின் விளக்கம், நச்சினார்க்கினியரின் முதல் தடைக்கு விடையாக உள்ளது. ஆனால், நச்சினார்க்கினியரின் பெயரைக் குறிப்பிடாமலேயே கருத்தை மட்டும் எடுத்துக்காட்டியுள்ளார்.

> ஒற்றும் குற்றுகரமும் எழுத்து எண்ணப்படா எனச் செய்யுளியலில் கூறினமைப்பற்றிக் கால், மால், கல், வில், நாகு, தெற்கு, எஃகு, கொக்கு, கோங்கு என்பனவற்றை ஓரெழுத்தொருமொழி என்றும் சாத்தன், கொற்றன், வரகு, குரங்கு என்பனவற்றை ஈரெழுத்தொரு மொழி என்றும் கூறின், ஆகாது; என்னை? செய்யுட்கண் இசைபற்றி அவை எண்ணப்படா எனவும் மொழி ஆக்கத்தின்கண் பொருள் பற்றி எண்ணப்படும் எனவும் கருதி,

என்று கூறித் தொல்காப்பியர் 43, 44, 45 ஆகிய சூத்திரங்களை எடுத்துக்காட்டியுள்ளார் (இலக்கண விளக்கம் 38ஆம் சூத்திர உரை). எனவே, இந்த விளக்கம் நச்சினார்க்கினியரின் முதல் தடைக்குப் பதில் கூறும் வகையில் அமைந்துள்ளது என்பது தெளிவு.

சுப்பிரமணிய சாஸ்திரி (1937:54), நச்சினார்க்கினியர் குற்றிய லுகரப்புணர்ச்சியில் சூத்திரங்களின் உரையில் 45ஆம்) நூற்பாவில் தன்னுடைய கருத்துக்கு மாறாக உதாரணம் தந்துள்ளதைச் சுட்டிக் காட்டி, முரண் இருப்பதால் அவர் கருத்துப் பொருந்தாது என்றும், இளம்பூரணர் கூறிய உதாரணமே சிறக்கும் என்றும் முடித்து விட்டார்.

> 'வரகு' என்றதை ஈண்டு ஈரெழுத்தொருமொழியாகக் கொண்டு அவ்வாறு கோடற்கு "உயிரிலெழுத்து மெண்ணப்படா," "குறிலே நெடிலே குறிலிணை" என்ற செய்யுளியற் சூத்திரங்கள் சான்றாகுமென்ற நச்சினார்க்கினியர், குற்றியலுகரப் புணரியலுள் 'வரகு' என்றதை முதற்சூத்திரத்திலுள்ள உயிர்த் தொடர்மொழிக்கும், 'யாடு' என்றதை ஆறாஞ் சூத்திரத்துள்ள ஈரெழுத்தொருமொழிக்கும், "நாகு" என்றதை முதற்சூத்திரத்துள்ள ஈரெழுத்தொருமொழிக்கும் உதாரணங்களாகக் கூறுதல் எவ்வாறு பொருந்தும்? ஆகலின் இளம்பூரணர் கூறிய உதாரணமே சிறக்கும்.

என்பதே சாஸ்திரியின் கருத்து.

வேங்கடராகலு ரெட்டியார் (1944:47) ஐந்து காரணங்களால் நச்சினார்க்கினியர் கருத்தை மறுத்துள்ளார். நச்சினார்க்கினியர் எழுத்ததிகார மொழிமரபுக்கும் பொருளதிகாரச் செய்யுளியலுக்கும் முரண் ஏற்பட்டு விடுமே என்று கூறியதற்கு எதிர்வாதமாக, எழுத் ததிகாரத்திலேயே மொழிமரபுக்கும் குற்றியலுகரப் புணரியலுக்கும் முரண் ஏற்பட்டுவிடும் என்றும், நச்சினார்க்கினியர் உரையிலேயே மொழிமரபுக் கருத்துக்கும் தொகை மரபில் காட்டப்படும் உதாரணத் துக்கும் கூட வேறுபாடு இருக்கிறது என்றும், வடமொழியிலும் இப்படிக் கொள்வதில்லை என்றும், நச்சினார்க்கினியரைப் பின்பற்றும் இலக்கணவிளக்க வைத்தியநாத தேசிகரும் ஒத்துக்கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டு, அவர் மறுப்பையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவைகளில் மூன்று காரணங்கள் அவருடைய சொந்தக் கருத்து.

1. இஃது (நச்சினார்க்கினியர் கருத்து) ஆசிரியர் (தொல்காப்பியர்) கருத்தொடு மாறுபடுவதாகும். ஆசிரியர் ஒற்றினையும் குற்றுகரத்தையும் எழுத்தாக எண்ணியிருப்பது "ஈரெழுத்தொருமொழி, உயிர்தொடர்..." (145) என்ற சூத்திரத்தினால் விளங்கும்.

2. நச்சினார்க்கினியர்தாமும் "அவற்றுள் மெல்லெழுத் தியற்கை" என்னும் சூத்திரத்தின் உரையில் (145) கதிர் என்னும் சொல்லைத்

தொடர்மொழியாகக் கொண்டு கதிர்ஞெரி, கதிர்ஞ்ஞெரி என உதாரணம் காட்டினார். பின்னும் 'ஈரெழுத்தொருமொழியுள்ளும் சில உறழ்ச்சி பெற்று முடிதல் கொள்க' என்று எழுதி, 'காய்ஞெரி, காய்ஞ்ஞெரி.. என வரும்' என்றும் கூறினார். இவற்றால் இவர் கொள்கை (ஆசிரியர் கருத்தொடு மாறு பாடுதலேயன்றி) முன்பின் முரணாக இருத்தல் காண்க.

3. வடநூலார், செய்யுட்களில் ஒற்றுக்களை எண்ணாமையும் தனிச்சொற்களில் எண்ணுதலும் ஈண்டு அறிதற்பாலன.

வெள்ளைவாரணன் (1962:83), சுப்பிரமணிய சாஸ்திரி குறிப்பிட்ட முரண்பாட்டை மட்டும் எடுத்துக்காட்டியுள்ளார். விஜயவேணுகோபால் (1974) நச்சினார்க்கினியர் உரையில் காணப்படும் வாசகங்களில் சில தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்டது என்றும், வேறு ஒரு அடிப்படையான மறுப்பையும் சுட்டிக்காட்டி, சூத்திரக் கருத்தைப் பொறுத்தவரையில் மூன்று முரண் இருப்பதாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அந்த மூன்று முரண்களும் சாஸ்திரியாராலும் ரெட்டியாராலும் சுட்டிக்காட்டப்பட்டவையே.

1. குற்றியலுகரத்தையும் ஒற்றினையும் நச்சினார்க்கினியர் 'எழுத்து' என்று கூறியது தவறு : (பக்கம் 18)

> இதில் ஒருபாதி மட்டுமே உண்மை. தொல்காப்பியர் ஒற்றினை மட்டுமே எழுத்தென்று கொண்டனரன்றிக் குற்றுகரத்தையும் எழுத்தென்று கொள்ளவில்லை. இதனைச் சார்பிற் தோற்றத்து மூன்றனுள் ஒன்றாக விளக்கி 'எழுத்தோரன்ன? என்பார். எனவே, குற்றுகரம் அடிப்படை அலகாக அமையும் எழுத்தன்று.

இதை உண்மையான குற்றச்சாட்டாகக் கொள்ளமுடியாது. ஏனெனில் புணரியல் முதல் சூத்திரத்திலேயே குற்றியலுகரத்தையும் மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்து' (103.1) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மேலும், குற்றியலுகரப் புணரியல் என்று தனி இயல் அமைத்ததும் தனி எழுத்தாகக் கருதினார் என்பதையே வலியுறுத்தும்.

2. நச்சினார்க்கினியர் ஈரெழுத்தொருமொழி, மூவெழுத்தொரு மொழி என்ற பிரிவுகளைக் குறிப்பிட்டதைப் பற்றிய மறுப்பு:

> தொல்காப்பியர் கருத்துப்படி இரண்டிறந்திசைக்கும் மொழியைத் தொடர்மொழி என்றே சொல்லவேண்டியிருக்க மூவெழுத் தொருமொழி என விளக்குதல் எங்ஙனம் பொருந்தும் எனத் தெரியவில்லை. (பக்.19).

என்ற கருத்து ஒத்துக்கொள்ளத்தகுந்தது. தொல்காப்பியத்தில் எங்கும் மூவெழுத்தொருமொழி பற்றிய குறிப்பு இல்லாததால், நச்சினார்க்கினியர் கூறியது தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்டது. வேறு எந்த இலக்கண ஆசிரியரும் கூறாதது. மேலும், தமிழ் இலக்கண உலகில் பொதுவாகவே இப்படிப்பட்ட பிரிவு யாருக்கும் உடன்பாடு இல்லை. இன்று வருணனை மொழியியலை ஒட்டித் தமிழ் மொழி அமைப்பை விளக்கும்போது ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, மூவெழுத்தொருமொழி, நாலெழுத்தொருமொழி என்றெல்லாம் விளக்கியுள்ளார்கள் என்றால் அது தமிழில் அதிகபட்ச எழுத்துகள் எவ்வளவு? என்று கண்டுபிடிக்கும் முயற்சியே தவிர, அந்தப் பாகுபாட்டுக்கு வேறு எந்தவிதச் சிறப்பும் இல்லை. எனவே நச்சினார்க்கினியர் தொல்காப்பியர் கருத்துக்கு மாறான கருத்தை உடையவரே.

3. தொல்காப்பியத்துள் 'அசை' (syllable) பற்றிய கருத்தே இல்லாதபோது, செய்யுளசை (poetic syllable) பற்றிய கருத்தை இணைத்துக் குழப்புதல் தேவையற்ற ஒன்று. (பக்.20)

என்ற கருத்தில் முதல் பகுதி விவாதத்துக்கு உரியது. ஏனெனில், இரண்டு மெய்களின் மயக்கத்தைத் தனி எழுத்துகளின் இலக்கணம் கூறும் நூன்மரபிலும், மூன்று மெய்களின் மயக்கத்தை ஈரொற்று உடனிலை என்று மொழிமரபிலும் கூறியது, 'அசை' என்ற குறிப்பு தொல்காப்பியத்துள் இலை மறை காயாக இருப்பதையே காட்டுகிறது என்று முன்னரே சுட்டப்பட்டது. மேலும், தொல்காப்பியர் எழுத்துத் தொடர்ச்சி (Sequence restriction) பற்றியும் பேசுவதால், எழுத்துத் தொடர்ச்சியில் 'அசை' ஒரு உறுப்பாகக் கருதப்படுவது பற்றிப் பேச வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அவர் அதைத் தனியாக, தெளிவாக விளக்கவில்லை.

விஜயவேணுகோபால் இந்த மூன்று முரண்களையும் சுட்டிக் காட்டி விட்டு இறுதியில் (பக்.21),

> இவ்வெடுத்துக்காட்டுகளை நச்சினார்க்கினியர் தந்திருப்பதன் மூலம் எழுத்தன் அடிப்படையில் மொழி வகுத்துக் கொள்ளல் இவர்க்கும் உடன்பாடே என்பது தெரிகிறது.

என்று கூறுவது மேலே குறிப்பிட்ட அறிஞர்களின் கருத்தின் பிரதி பலிப்புத்தான். இதைப் பொதுமைப்படுத்தினால், ஒரு ஆசிரியர் பிறருடைய கருத்துக்கு மாற்றுக் கருத்தை எடுத்துச்சொல்லியிருந்தும், அதில் சில முரண் இருந்தால் பிறர் கருத்தையே அந்த ஆசிரியர் உடையவர்

என்ற முடிவுக்கு வருவதாகும்; அது பொருந்தாது. ஏனெனில், மாற்றுக் கருத்தில் தெளிவு இல்லை என்றோ உண்மை இல்லை என்றோ பொருள்படுமே தவிர, பிறர் கருத்தை ஏற்றுக் கொள்கிறார் என்று பொருள் அல்ல. மேலும், அவருடைய கருத்தில் எப்படி முரண் ஏற்பட்டது? என்பதை ஆராய்ந்து, அதற்குரிய காரணத்தைக் கண்டு, அவருடைய உண்மையான கருத்தை அறிந்து கொள்ள முயலவேண்டுமே தவிர, 'முரண் இருக்கிறது; அதனால், பொதுவாகப் பிறர் கூறும் கருத்தும் அவருக்கு உடன்பாடே' என்று முடிப்பது நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதுதான் சாக்கு என்பது போல் அல்லவா ஆகிவிடுகிறது. இன்னொரு உண்மையும் இங்குக் கவனிக்க வேண்டும். அதாவது : உரையாசிரியர்கள் நூல் முழுமையும் மனதில் கொண்டே உரை எழுதுபவர்கள். இந்தப் பண்பு நச்சினார்க்கினியரிடத்தில் சிறப்பாகவே காணப்படுகிறது. அப்படி இருக்கும்போது எழுத்ததிகாரத்தில் இரண்டு இயலுக்குள்ளும் எப்படி முரண் ஏற்பட்டது? என்று நாம் சிந்திக்க வேண்டாமா? உரையாசிரியர்களை வானளாவப் புகழ்வதற்கெல்லாம் பொருளே கிடையாதா? அவை யாவும் வெற்றுச் சொற்கள்தானா? பொருள் இருக்கிறது என்றால், அந்த முரண் வேறு எதையோ காட்டும்படி அமைந்திருக்கவேண்டும்; கருத்திலே குழப்பத்தைக் காட்டும்படி அமையவில்லை என்று நினைக்க வேண்டாமா? இங்குப் பொதுவாக உரையைப்பற்றி ஆராயாமல் நச்சினார்க்கினியர் உரையைப்பற்றி மட்டுமே பார்ப்போம்.

நச்சினார்க்கினியரின் எழுத்ததிகார உரையை இளம்பூரணர் உரையோடு ஒப்பிட்டு ஆராய்ந்தபோது, நச்சினார்க்கினியர் புதிய உரையை எழுதாமல் இளம்பூரணர் உரையை அடிப்படையாகக் கொண்டு வேண்டிய இடங்களில் திருத்தியும் மாற்றியும் அமைத்துக் கொண்டுள்ளார் என்பது புலப்படும் (சண்முகம், 1967 : vii)[5]. இந்த முறை பின்னும் தொடர்ந்து வந்திருக்கிறது என்பதற்கு, நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயர் உரையும் அதைத் திருத்திய சிவஞானமுனிவர் உரையும் நல்ல சான்று. அப்படிப்பட்ட திருத்திய உரைகளாக அமைந்தவற்றில் உள்ள முரண், மூல உரையின் தாக்கத்தால் ஏற்பட்டிருக்கலாமா? என்றும், இரண்டு நூலுக்கும் உள்ள உறவுநிலை தெரிந்த வாசகர் செய்த தவற்றால் ஏற்பட்ட இடைச் செருகலா? (சண்முகம், 1962) என்றும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

---

5 This commentary (Naccinarkkiniyar's), as it stands today seems to be an extended version of Ilampuranar, the first commentator.

Shanmugam, 1967 : vii

நச்சினார்க்கினியரிடம் காணப்படும் மற்றொரு பண்பும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. அவர் தன்னுடைய உரையை இரண்டாம் முறை திருத்தி அமைக்கும் பழக்கம் உடையவர் என்று சாமிநாதையர் (1949:35) கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது.

> இவர் (நச்சினார்க்கினியர்) இந்நூலுக்கு (சீவகசிந்தாமணிக்கு) முதன்முறை ஓர் உரை எழுதி அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த சைன வித்துவான்கள் சிலருக்குக் காட்ட மற்றைப் பகுதிகள் போலத் தங்கள் சமயக் கொள்கை முறையே அறிந்து எழுதப்படவில்லை என்று கூறி அவர்கள் அவ்வுரையை அங்கீகரிக்கவில்லை என்றும், அப்பால் இவர் ஆருகத நூல்கள் பலவற்றையும் அறிந்தோரிடம் முறையே கற்றறிந்து நலமுற ஆராய்ந்து இரண்டாம் முறை இவ்வுரையை எழுதி அவர்களுக்குக் காட்ட அவர்கள் உற்றுநோக்கி மகிழ்ந்து பாராட்டி இதனை அங்கீகரித்தார்கள் என்றும் சைனர்களுள்ளும் ஏனையோருள்ளும் கர்ணபரம்பரையில் ஒரு வரலாறு வழங்குகின்றது.

என்று கூறித் தானும் சில ஆதாரங்களை எடுத்துக்காட்டி,

> முதற்பகுதி இவர் தொல்காப்பியத்திற்கு உரை இயற்றுமுன் சிந்தாமணிக்கு முதன்முறை உயை இயற்றியதையும் இரண்டாவது பகுதி இவர் அந்நூலுக்கு உரை இயற்றிய பின் அதற்கு இரண்டாம் முறை உரையியற்றியதையும் ஒருவகையாகப் புலப்படுத்தி மேற்கூறிய வரலாற்றை வலியுறுத்தி நிற்றல் காண்க.

என்று எழுதியிருப்பதால் அறியலாம். இந்த நோக்கில் பார்க்கும் போது எழுத்ததிகாரத்திலும் சில சூத்திரங்களுக்குத் திருத்தி உரை எழுதியிருக்கலாமா? என்று ஐயுற வேண்டியிருக்கிறது. இந்த ஐயம் அவர் உரைக்குள் காணப்படும் முரணைப் பற்றிய காரணத்தை ஓரளவு ஊகிக்க வாய்ப்பு அளிக்கிறது. மேலே சொன்ன காரணம், அதை இன்னும் கொஞ்சம் உறுதிப்படுத்துகிறது. எனவே, அவருடைய உரைக்குள் இருக்கும் முரண், உரையின் தன்மையால் நேர்ந்தது என்று கொள்ளலாமா? என்று நினைக்கத் தோன்றுகிறது.

நச்சினார்க்கினியர் உரை, நூலாசிரியர் கருத்தோடும் முரண் உள்ளது என்று மேலே காட்டியதன் காரணத்தையும் ஆராய வேண்டும். இங்குதான் நச்சினார்க்கினியர் உரையாசிரியராக இல்லாமல்

சுதந்திர சிந்தனை உடையவராக - மொழி அமைப்பை விளக்கும் புதிய நோக்கு உடையவராகத் தோற்றம் அளிக்கிறார். ஆயினும், உரையாசிரியர் கடமையாகிய நூலாசிரியனின் கருத்தை விளக்கும் பண்புக்கும், தாமே சுயமாகச் சிந்திக்கும் பண்புக்கும் இடையே தடுமாற்றம் ஏற்படுகிறது. அந்த ஊடாட்டமே முரணாக வெளிப் பட்டுள்ளது.

தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலைப் பொறுத்தவரையில் எழுத்து என்பது வரிவடிவம் என்ற கருத்துடையவர் என்பதை வேங்கடராசுலு ரெட்டியார் நிரூபித்துள்ளார். பிற ஆராய்ச்சியாளர்க்கும் இந்தக் கருத்து உடன்பாடே. இது எழுத்ததிகார முதல் சூத்திரத்தில் 'எழுத்தெனப்படுப' என்ற கருத்துக்கும், புணரியலில் 'மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்து' என்ற கருத்துக்கும் மாறுபட்ட கருத்து என்பது குறிப்பிடத்தகுந்தது. மொழிமரபில் காணப்படும் 43, 44, 45 ஆகிய மூன்று சூத்திரங்களும் வரிவடிவையே குறிப்பதாக இளம்பூரணரும், இன்றைய இலக்கண ஆசிரியர்களும் கொண்டுள்ளார்கள் என்பது மேலே காட்டப்பட்டது. அதைச் சிறப்பான பொருளாகக் கருதமுடியாது. ஏனெனில் மொழி அமைப்பில் வரிவடிவு ஒரு கூறாக அமையாது. ஆனால், நச்சினார்க்கினியர் கொண்ட பொருள்படி அமைகிற 'அசை' (Syllable) என்பது எழுத்ததிகார ஆராய்ச்சியில் ஒரு கூறாகக் கருதப்படுகிறது (Anderson, 1974:252).[6] தமிழ்மொழி, எந்தவித வரிவடிவ அமைப்பு உடையது - அதாவது ஒலியன் நிலையா? அசைநிலையா? என்ற கருத்து வேறுபாடும், ஒலியன் நிலையில் ஒருவகையாகக் கருதலாம் என்ற உண்மையும், ஆசிரியனின் இன்னொரு நூலில் (சண்முகம், 1978இ: 17-19) விளக்கப்பட்டுள்ளது. எழுத்திலக்கண ஆய்வில் தனி எழுத்து ஆய்வுக்குப் பிறகு எழுத்துத் தொடர்ச்சியைப் பற்றிய ஆய்வில் 'அசை' என்பதே முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஒருதரம் மூச்சை இழுத்து வெளிவிடும் நேரத்தில் உச்சரிக்கப்படும் எழுத்துகளைக் குறிப்பதே அசை எனப்படும். ஆகவே, 'அசை' என்பது எழுத்து ஆராய்ச்சியில் விளக்கவேண்டிய ஒரு கூறாகவே கருதப்படுகிறது.

---

6 The first phonological relevant unit other than the segment for which an argument can be given is the syllable.... There is clearly a sense in which syllables are articulatory units, however, as shown by a host of observations over a long period. Recent psycholinguistic evidence confirms this in suggesting the importance of the syllable as a unit in perception and production.

Anderson, 1974 : 252.

தொல்காப்பியருக்கும் அசைபற்றிய உணர்வு ஓரளவு இருந் திருக்கவேண்டும் என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. நச்சினார்க் கினியருக்கும் அசை பற்றிய உணர்வு இருந்தது என்பதையே 45ஆம் சூத்திர உரை காட்டுகிறது. ஆனால், அது பற்றிய முழுத் தெளிவு இல்லை என்பதையும் அதே உரை சுட்டுகிறது. மேலும், நச்சினார்க் கினியர் உரையாசிரியரானதால், நூலாசிரியரும் அந்தக கருத்து உடையவர் என்று காட்ட வேண்டிய கடப்பாடும் அமைந்துவிட்ட தால், அசைபற்றிய குறிப்புத் தொல்காப்பியத்தில் எங்காவது இருக்கிறதா? என்று தேடிப்பிடிக்க வேண்டியதாயிற்று. அந்த நிலையில் உடனே செய்யுளியலில் கூறிய அசை நினைவுக்கு வந்துவிட்டது. அதனால் அதைப் பக்கபலமாகப் பிடித்துக்கொண்டார். ஆனால், விஜயவேணுகோபால் குறிப்பிட்டுள்ளது போலச் செய்யுளசை வேறு வகைப்பட்டது. ஏனெனில் அங்கு நேர், நிரை என்று இரண்டு வகை உண்டு. நேரசை எழுத்ததிகார அசையோடு ஒத்துப் போகும். பல, பலா, பலன், சிறார் போன்று வரும் நிரையசைகள், எழுத்ததிகார அசையோடு முற்றிலும் மாறுபட்டவை. இன்னொரு வேறுபாடும் இருக்கிறது. சில சமயங்களில் செய்யுளில் குற்றியலுகரத்தை அசையாகக் கொள்ளமுடியாது. ஆனால், குற்றியலுகரம் உயிரொலியானதால் எழுத்ததிகாரத்தில எப்போதும் அசையாகவே கொள்ளவேண்டும். இந்த இரண்டு வேறுபாடுகளையும் புறக்கணித்துவிட்டுத் தம்முடைய சொந்தக் கருத்தை நூலாசிரியரும் கொண்டிருக்கிறார் என்று காட்டுவதற்காகச் செய்யுளியல் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டினார்; அத்தோடு பிறர் கருத்துக்கு மறுப்பாக இரண்டு விளக்கங்களும் (நச்சினார்க்கினியருடைய மறுப்புகளில் இரண்டாவதும் மூன்றாவதும்), வேறொரு சூத்திரத்துக்கு (தொல். 54) நலிந்தும் வலிந்தும் புதிய உரை கூறியுள்ளார். இப்படியெல்லாம் செய்யவேண்டிவந்தது அவர் உரையாசிரியராக இருந்து புதிய கருத்தைக் கூற முற்பட்டதால்தான். அப்படியில்லாமல் நேமிநாதர், பவணந்தியார் போன்று நூலாசிரியராக இருக்கத் துணிந்து புதிய இலக்கணம் எழுதி 'அசை' பற்றிய குறிப்பைச் சேர்த்திருப்பாரேயானால், பிறரால் குற்றம் சாட்டப்பட்டிருக்க முடியாது; மாறாகப் புகழப்பட்டிருக்கப்படவேண்டியவர் ஆகிவிடுவார். எப்படியாயினும் அவர் கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று: எல்லோருமே தொல்காப்பியர் கருத்து தெளிவாக இருப்பதாகக் கருதி, அது பொருந்துமா? சிறப்பானதா? என்று கவலைப்படாமல் விட்டுவிட்டது. இரண்டு: புதிதாகவும் சுயமாகவும் சிந்தித்துப் பார்த்து மொழி அமைப்பை விளக்கும் புதிய கூறை - அலகை எடுத்துச் சொல்லிய

நச்சினார்க்கினியர் உரையில் முரண்பாடு இருந்தது. ஆனால், அந்த இரண்டு காரணங்களும் உண்மையான இலக்கண ஆராய்ச்சியின் வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்திருக்கின்றன.

தொல்காப்பியரின் கருத்து மேலே விளக்கப்பட்டது. நச்சினார்க்கினியர் உரையில் மொழிமரபுக்கும் குற்றியலுகரப் புணரியலுக்கு முள்ள முரண்பாடு இரண்டு காரணங்களால் எழுந்திருக்கலாம்.

1. மேலே குறிப்பிட்டபடி நச்சினார்க்கினியர் 45ஆம் சூத்திர உரையைத் திருத்திவிட்டு அதற்கேற்ப மற்ற சூத்திர உரையையும் மாற்றாமல் விட்டிருக்கலாம் (சண்முகம், 1967 : 66 அடிக்குறிப்பு 3).

2. குற்றியலுகரப் புணரியலில் தொல்காப்பியர் தெளிவாக வரி வடிவத்தையே எழுத்தாகக் குறிப்பதால், அங்கு 'எழுத்து' வரிவடிவம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதித் தானும் அதற்கேற்ப உதாரணத்தைக் காட்டியிருக்கவேண்டும். மொழிமரபில் மட்டும் எழுத்ததிகார ஆராய்ச்சிக்கு வேண்டிய ஒரு கூறைப் பொதுவாக விளக்க வேண்டியதால், இங்குக் கூறப்பட்ட 'எழுத்து' என்பதை அசை என்ற பொருளில் கருதியிருக்கவேண்டும். அப்படியானால் 'எழுத்து' என்பது வேறு வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதாக அமையும். இதற்குத் தொல்காப்பியத்தில் வேறு உதாரணங்களும் உண்டு (திண்ணப்பன், 1972).

இங்கு வேறொரு அடிப்படையான பிரச்சனையும் அடங்கியிருக்கிறது. அது பொதுவாக ஒரு நூலை - சிறப்பாக இலக்கண நூலைப் படிக்கும் நோக்கம் பற்றியது. அந்த நோக்கம் இரண்டு வகையில் அமையலாம். 1) நூலாசிரியனின் கருத்தை - அதாவது அவன் காட்டும் மொழி அமைப்பை அவன் கூறியபடி ஏற்றுக்கொள்வது. 2) நூலுக்கும் கொஞ்சம் மேலே சென்று மொழி அமைப்பின் உண்மையைப் புரிந்துகொள்ள முயலுவது. இந்த இரண்டு வழியும் அந்த நூல் பற்றிய நம்முடைய நோக்கை நிர்ணயிக்கின்றன.

முதல்வழி அந்த நூலே முழு முதற்பொருள்; அது கூறுவது முடிந்த முடிபு (Ends) என்பது. இரண்டாவது வழி அந்த நூல் ஒரு கருவியே (Means) என்பது. நூல் கூறும் பொருளை, அந்த நூல் காட்டும் வழி கொண்டு அறிந்து கொள்ளமுயலுவது. இதனால் முதல்வழி, நூலுக்கும் நூலாசிரியனுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது என்றும், இரண்டாவது வழி நூல் கூறும் பொருளுக்குச் சிறப்பிடம் கொடுப்பது என்றும் ஆகும்.

தொல்காப்பியர்,

> மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
> ஒத்தவையுரிய . . . . . . (171. 2-3)

> கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்
> கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே (602)

என்று கூறுவதால் அவர் இரண்டாவது வழியே சிறந்தது என்று சுட்டுகிறார் எனலாம். உரையாசிரியர்கள் வலிந்தும் நலிந்தும் பொருள் கொள்வதற்கு, நூல் கூறும் பொருளுக்கு மேலே சென்று பல உண்மைகளைக் காட்டவேண்டும் என்ற துடிப்பே காரணம். அதனால்தான் நச்சினார்க்கினியர் எழுத்ததிகார அமைப்பில், தான் உணர்ந்த பெரிய உண்மையைத் தன்னுடைய உரைமூலம் காட்ட முற்பட்டார். ஆனால், பிற்கால இலக்கண ஆசிரியர்களும் ஆய் வாளர்களும் அந்த உரையினுடைய முழுச் சிறப்பைப் புரிந்து கொள்ளாமல், 'நூலாசிரியர்க்கு இது கருத்தன்று, உரையில் முரண் இருக்கிறது' என்று கூறியதன்மூலம் முதல் வழியை மேற்கொண்டு, நச்சினார்க்கினியருக்கு எழுத்து என்பது வரிவடிவு என்ற கருத்து உடன்பாடே என்று முடிவுகட்டுவது எவ்வளவு தவறான காரியம். அதே சமயத்தில் மேலே குறிப்பிட்டபடி நச்சினார்க்கினியரும் தவறு செய்திருக்கிறார். ஒன்று: உரையாசிரியராக இருந்து தன்னுடைய கருத்தை நியாயப்படுத்தப் பொருந்தாத சூத்திரத்தை (இங்குச் செய்யுளியல் சூத்திரம்) எடுத்துக்கொண்டதும், இன்னொரு சூத்திரத்துக்கு (54) வலிந்து பொருள் எழுதியதும் ஆகும். மற்றொன்று: 'அசை' (Syllable) என்று கொண்டபிறகு, குற்றியலுகரத்தை நீக்கியது. இதற்கும் தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திரத்தைத் தவறாக எடுத்துக்கொண்டதுதான் காரணம்.

எப்படியாயினும், தொல்காப்பியத்தில் இலைமறைகாயாக இருந்த கருத்தைப் புலப்படுத்தி, எழுத்ததிகார ஆராய்ச்சிக்குப் புதிய அலகைச் சுட்டி, இலக்கண ஆராய்ச்சியை வளர்த்த காரணத்துக்காக நச்சினார்க்கினியருடைய குறைகள் மன்னிக்கப்படக் கூடியவையே.

இனித் தொல்காப்பியர் ஓரெழுத்தொருமொழி, ஈரெழுதொரு மொழி, தொடரெழுத்தொருமொழி என்று ஏன் மூன்றாகப் பிரித்தார்? என்ற இரண்டாவது கேள்வியை எழுப்பிப் பதிலும் சொன்னவர் நச்சினார்க்கினியர். அவருக்கு அந்தக் கேள்வி எழுவதற்குக் காரணம்

ஒன்று, பல என்ற எண் (Number) என்ற இலக்கணக்கூறு அடிப்படையில் உள்ள வேறுபாடு ஒட்டிச் செய்யாததுதான்.

> ஓரெழுத்தொருமொழியும் தொடர்மொழியும் என்னாது ஈரெழுத் தொரு மொழியும் ஓதினார் சில, பல என்னும் தமிழ்வழக்கு நோக்கி

என்று கூறும்போது அவருடைய நோக்கும் பொருள்நிலையில் (Semantic level) அவர் கண்ட சமாதானமும் புலப்படுகின்றன. இது பொருந்தாது என்பதற்கு விஜயவேணுகோபால் (1974:25),

'சில என்பதற்கு இருமை என்ற பொருள் யாண்டும் யாரும் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக நச்சினார்க்கினியரே 'சில' என்ற சொல்லுக்குப் 'பன்மை' என்னும் பொருளையே கொண்டு விளக்கியுள்ளமையைத் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 174, 213, 214, 220 ஆகிய நூற்பாக்களின் உரையில் காண்கிறோம் ..... ..... தொல்காப்பியர் கோட்பாட்டிற்கு ஏதோ அமைதி காண வேண்டும் என்ற முயற்சியாகவே தோன்றுகிறது' என்று காரணம் காட்டிக் கூறியுள்ளார்.

உண்மையில் நச்சினார்க்கினியர் பன்மையில் பொருள் வித்தி யாசத்தைக் காட்டவே சில, பல என்ற பொருள் வேறுபாட்டைச் சுட்டினாரே தவிர, நேரடிப் பொருளைக் குறிப்பதற்கு அல்ல. மேலும் இந்தப் பொருள் வேறுபாடு தமிழ் மொழிக்கே உரியது என்பதும் பொருந்தாது என்று வாதிடுவது சிறப்புடையது. ஏனெனில், இந்தப் பொருள் வேறுபாடு உலகில் வேறுபல மொழிகளிலும் காணப்படுவதுதான்.

| மொழி | சில | பல |
|---|---|---|
| ஹிந்தி | குச் (Kuch) | அநேக் (anek) |
| ஆங்கிலம் | சம் (Some) | மெனி (many) |
| பாஷா இந்தோனிஷியா | செடிகித் (Sedikit) | பன்யாக் (Banyak) |

முதலியனவும் இத்தன்மையில் அடங்கும். மேலும், இந்தச் சில, பல என்ற பொருள் வேறுபாடு தனிநிலையில் (Absolute) கொள்ளத் தகுந்ததல்ல; உறவுநிலையில் (Relative) கொள்ளக்கூடியது. ஆனால், இரண்டு அல்லன பல என்பது தனிநிலையில் கொள்ளப்படுவது என்ற மற்றொரு வித்தியாசமும் உடையது.

மொழியாராய்ச்சியில் பொருள் அடிப்படையில் இலக்கணக் கூறுகளை அமைப்பது சிறப்பாகக் கருதப்படமாட்டாது; ஏனெனில் மொழி அமைப்புக்குள் அந்த வேறுபாடு அமைந்திருப்பதே இலக்கணக் கூறாகக் கருதப்பட வேண்டும். பொருள்நிலை என்று சொன்னால் வரம்பு இல்லாமல் போகும்; மொழியின் அமைப்பும் புலப்படாமல் போகும்.

இலக்கணநிலைகூட எல்லா இடத்திலும் ஒரேமாதிரியாக இருக்காது. உதாரணமாக உயர்திணை ஒருமையில் ஆண், பெண் பால் வேறுபாடு செய்கிறோம். பன்மையில் அப்படிப் பால் வேறுபாடு செய்து இல்லை. இந்த வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளாததால் தான் தமிழில் ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாடே எங்கும் இருக்கவேண்டுமென்று கருதிய சங்கரநமச்சிவாயர்.

> ஒன்றல்லன வெல்லாம் பல என்பது தமிழ் நடையாகலின் வடநூல் வழக்குப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழி எனக் கூறினார்

என்று விளக்கியுள்ளார். இதற்கு மறுப்பாக வெள்ளைவாரணனார் (1962:81)

> இம்மொழி வகைகளைத் தாமே வகுத்துக் கூறுவதாகக் கூறாது "அவை தோன்றிய நெறியே" என ஆசிரியர் கூறுதலால் மொழித் தோற்றம் பற்றிப் பண்டையோர் வகுத்த வழக்கு அஃதென்பது புலப்படுத்தலானும்...... ஈரெழுத்தொரு மொழியினையும் தொடர் மொழி எனக் கோடல் பண்டைத்தமிழ் நூலார் கருத்தன்று என்பது தெளிய விளங்கும்

என்று கூறுவது சங்கரநமச்சிவாயர் கருத்துக்கு எதிர்வாதமாகவே உள்ளது. அதாவது வடமொழியைப் பின்பற்றியது என்று சங்கர நமச்சிவாயர் கூற வெள்ளைவாரணனார் பண்டையோர் வகுத்த நெறி என்று நிறுவ முற்பட்டுள்ளார். அதனோடு அவர் இலக்கண வருணனை நிலையில் தகுந்த காரணமும் கூறித் தொல்காப்பியத்தை நியாயப்படுத்தியுள்ளார். அது பின்னால் காட்டப்படும்.

மூன்றுவகைப் பாகுபாட்டை ஆதரிக்கும் அறிஞர்கள் இலக்கண வருணகைக்கு உரிய உத்தியாக (Descriptive technique) காரணம் கூறியுள்ளார்கள்.

சுப்பிரமணியசாஸ்திரி (1937:46), சங்கரநமச்சிவாயர் கருத்து பொருந்தாது என்று மட்டும் கூறி, இது வருணனைக்குரிய பாகுபாட்டு உத்தி என்று கூறுகிறார்.

> குற்றியலுகரம் குற்றெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழியில் தோன்றாது எனவும் நெட்டெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொருமொழியில் தோன்றும் எனவும் தொடர் மொழியில் எங்கும் வல்லெழுத்தைச் சார்ந்து ஈற்றில் தோன்றும் எனவும் கூறுவதற்காகவே மொழியை மூவகையாக வகுத்தனரே யன்றி வட மொழியைப் பின்பற்றி அவ்வாறு வகுத்தனரல்லர், வடமொழியில் அவ்வாறு வகுக்கப் படாமையின்.

இங்கு அந்த மூவகைப் பிரிவு இலக்கணவிளக்கத்துக்காக அமைத்துக் கொண்டது என்ற கருத்து பெறப்படுகிறது. அதாவது, இலக்கணத்துக்குரிய இலக்கணம், இதையே ஆங்கிலத்தில் மெட்டா லாங்குவேஜ் (Metalanguage) என்றும் தமிழில் கருவிமொழி (காமாட்சி நாதன், 1974) என்றும் அழைப்பார்கள். தமிழ் இலக்கண நூல்களில் மொழிக்கு மட்டும் இலக்கணம் எழுதாமல் கருவி மொழிக்கும் இலக்கணம் எழுதியுள்ளதைக் காணமுடிகிறது.

> முதலா ஏன தம்பெயர் முதலும் (66)

என்பது வெளிப்படையாகவே மொழிக்கு முதலாகாத எழுத்துகள் தம் பெயர் கூறும்போது வரும் என்றது இலக்கண நூலில் கையாளப் படும் மொழிக்கு உரிய இலக்கணம்; வழக்கு மொழிக்குள்ள இலக்கணம் அல்ல.

> எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே (77)

என்ற சூத்திரமும் உரையாசிரியர்களால் அப்படியே சொல்லின் இறுதியில் எழுத்து இலக்கணமாக விளக்கப்படுகிறது.

> தம்பெயர் மொழியின் முதலும் மயக்கமும்
> இம்முறை மாறியும் இயலு மென்ப (121)

என்ற நன்னூல் சூத்திரமும் தொல்காப்பிய கருத்தைப் பிரதிபலிக்கும் கருவி மொழிச் சூத்திரமே. ஆகவே, இலக்கணத்தை விளக்குதற்கு மொழி மூன்று வகை பாகுபாடு செய்யப்பட்டது; அது மொழி அமைப்பு பற்றிய விளக்கம் என்பது அல்ல.

விஜயவேணுகோபாலும் (1974:27) ஈரெழுத்தொருமொழி என்ற தனிப்பிரிவு கொடுத்ததற்கான காரணத்தை மட்டும் அழுத்தமாக விளக்கியுள்ளார்.

> குற்றியலுகரத்துக்குள் ஒருசார் பாகுபாட்டினை விளக்கவே இவ்வாறு ஈரெழுத்தொருமொழி என்ற பாகுபாட்டினைத் தொல்காப்பியர் கொண்டார் எனக் கொள்ளுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது.... எப்போதும் ஈரெழுத்தாகவே வரும் நெடிலடுத்த குற்றுகரமொழியை உயிர்த்தொடர்க் குற்றுகர மொழியினின்றும் வேறுபடுத்தித் தனியே ஒரு மொழியாகப் பாகுபாடு செய்தார் தொல்காப்பியர் என்பதே சரியானதாம்

என்பதே அவருடைய விளக்கம்.

இந்த விளக்கம் இன்னொரு கேள்வியை எழுப்புகிறது. தொல்காப்பியத்தில் குற்றியலுகரத்தை ஏன் ஆறு வகையாகப் பிரித்தார்? என்பதே அது. இந்தக் கேள்வியை எழுப்பி விஜயவேணுகோபால் பதில் சொல்லியுள்ளார் (பக். 27).

> பொதுவாகத் தொல்காப்பியர் கொள்ளும் அறுவகைக் குற்றுகரப் பாகுபாட்டைக் குறித்து ஒரு கேள்வி எழலாம். உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திலேயே நெடில் தொடர் குற்றுகரத்தையும் அடக்கலாமே? ஏன் தனி ஒரு வகையாகக் கூற வேண்டும்? என்பதே அந்த வினா. தொல்காப்பியர் எழுதப் பெறும் எழுத்து அடிப்படையில் பாகுபாடு செய்வதால் நெட்டெழுத்திம்பர் வரும் குற்றுகரமொழியை - இஃது எப்போதும் இரண்டெழுத்துக்கள் கொண்ட மொழியாகவே வருகின்றமையின் - உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துள் அடங்குமேனும் இப்பண்பு நோக்கித் தனியாக ஒருமொழியாகக் கொண்டார் எனலாம்.

இந்தப் பதில் சுற்றி வளைத்து வருவது போல் இருக்கிறது. சொல்லை ஏன் மூன்றுவகையாகப் பிரித்தார் என்றால், குற்றியலுகர ஒருசார் பாகுபாட்டை விளக்குவதற்கு அந்தப் பிரிவு என்று கூறி; அப்படி ஏன் குற்றியலுகரத்தைப் பிரித்தார் என்றால் எழுத்து அடிப்படை என்பது 'கல்யாணம் ஆனால் பைத்தியம் தெளியும் பைத்தியம் தெளிந்தால் கல்யாணம் ஆகும்' என்ற பழமொழியை ஒத்து இருக்கிறது. இதற்குச் சரியான விடை காண்பதற்குக் குற்றியலுகரப் புணரியல் சூத்திரங்களையே பார்க்கவேண்டும்.

வல்லொற்றுத் தொடரும் மெல்லொற்றுத் தொடரும் புணர்ச்சியில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் செயல்படுகின்றன (414, 416). எனவே, இரண்டையும் வேறுபடுத்திக் காட்டவேண்டியிருக்கிறது. ஆய்தத் தொடரும் இடையொற்றுத் தொடரும் ஒருவிதமான புணர்ச்சியைப் பெறுகின்றன (413). அப்படியே ஈரெழுத்து மொழியும், உயிர்த்தொடர்மொழியும் புணர்ச்சி மாற்றத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் உடையன (411, 412); வேறு சில இடங்களில் ஈரெழுத்தொருமொழியும் வல்லொற்றுத் தொடர்மொழியுமே ஒரே விதமாகப் புணர்ச்சி மாற்றம் பெறுகின்றன (417, 418). எனவே, ஈரெழுத்தொருமொழியும் உயிர்த்தொடர் மொழியும் புணர்ச்சியில் வேறுபடுவதால், இரண்டாகப் பிரித்தார் என்பது மொழி அமைப்பு முறையில் (Structural difference) புணர்ச்சி வேறுபாட்டை ஒட்டிய பாகுபாடாக அமையும். எனவே, குற்றியலுகரத்தை அறுவகையாகப் பிரித்தது மொழி அமைப்பைப் பொதுவாகவும் புணர்ச்சி வேறுபாட்டைச் சிறப்பாகவும் கொண்ட அமைப்பியல் காரணம் (Structural reason) ஆகிறது. எழுத்துகளை ஒட்டி ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி என்று மூவகையாகப் பிரித்தது, அமைப்பியல் அடிப்படையில் குற்றியலுகர வகைகளை விவரிப்பதற்காக அமைந்த இலக்கண உத்தியை (Descriptive technique) ஒட்டியது. அதாவது கருவி மொழிக்குரிய இலக்கணம் என்று ஆகிறது.

வேங்கடராகலு ரெட்டியார் (1944:48) தொல்காப்பியத்தில் ஈரெழுத்தொருமொழியைத் 'தொடரல் இறுதி' (தொல்.214) என்ற பயிற்சியைச் சுட்டிக்காட்டி,

> இரண்டற்கு மேற்பட்ட பல பொருள்கள் ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லுதலைத் தொடர்ந்து செல்கின்றன; தொடர்ச்சியாகச் செல்கின்றன என்பதன்றி ஒரு பொருளின் பின் ஒருபொருள் செல்லுதலைத் தொடர்ச்சியாகச் செல்கின்றது என்றல் இன்றும் வழக்கில் இல்லை.

என்பது தொடர்ச்சி என்ற சொல்லின் பொருள் விளக்கமாக அமைகிறது.

வெள்ளைவாரணனும் (1962:82) கிட்டத்தட்ட இதே முறையில் தான் விளக்கம் தந்துள்ளார்.

அடுத்து மொழிமரபில் கூறும் இலக்கணம் மொழியிடை நின்ற எழுத்துக்கன்றி தனிநின்ற எழுத்துக்கு அல்ல என்றால், அந்த இலக்கணம் எப்படி உணர்த்தப்படுகிறது? என்ற கேள்வி எழும்புகிறது.

மொழியியலாளர்கள் மொழியின் உறுப்புகளை இரண்டு விதமாக விளக்கலாம் என்று குறிப்பிடுகிறார்கள்: 1) தனி உறுப்புகள் (Segments) அதாவது தனி உறுப்புகளின் அமைப்பு (Segment structure); அவை வேற்றுநிலை வழக்கில் வருவனவற்றையே கொள்ளப்படும். அதுதான் அடுக்குநிலை உறவு (Paradigmatic relation) என்பது; 2) உறுப்புகளின் தொடர்நிலை அமைப்பு (Sequence structure); இதுவே தொடர்நிலை உறவு (Syntagmatic relation) என்றும் அழைக்கப்படும்.

தொல்காப்பியர் தனி உறுப்புப்பற்றி அதாவது தனிநின்ற எழுத்துப்பற்றி நூன்மரபில் விளக்கியதாகப் பார்த்தோம். இங்குச் சொல்லுக்கும் - ஓரளவு எழுத்துத் தொடர்ச்சிக்கும் முக்கியம் கொடுத்துள்ளதாக மேலே விளக்கப்பட்டது. எழுத்துகளின் வரன் முறையில் (Distribution) மெய்மயக்கம் தொடர்நிலை அமைப்பை விளக்குவதே. சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகளும் இறுதியில் வரும் எழுத்துகளும் கூடச் சொல்லாக அமையும் முறையை விளக்குவதாகக் கொண்டால், அவையும் தொடர்நிலைபற்றிப் பேசுவதாக அமையும். சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துப்பற்றி விவரிக்கும்போது எல்லா உயிரெழுத்துகளும் சொல்லுக்கு முதலில் வரும் (59) என்று கூறிவிட்டு

**உயிர்மெய் அல்லன மொழிமு தலாகா** (60)

என்று சூத்திரம் அமைத்துள்ளார். இதற்கு உரையாசிரியர்கள் இருவரும் 'உயிரொடு கூடிய மெய் அல்லாதனவாகிய தனிமெய்கள் முதலாக' என்று விளக்கியுள்ளனர். அதாவது உயிரும் மெய்யும் சேர்ந்த (*VC*) தொடர்ச்சிதான் சாத்தியமே தவிர, மெய்யும் மெய்யும் சேர்ந்த தொடர்ச்சி (*CC*) சாத்தியமில்லை என்று அதற்கு நாம் விளக்கம் தரலாம். சுப்பிரமணிய சாஸ்திரியும் (1937:70) இந்த முறையில் விளக்கித் தெளிவாக உரையெழுதியுள்ளார்.

> உயிரான் தொடரப்பட்ட மெய்களல்லாதனவாகிய மெய்யான் தொடரப்பட்ட மெய்கள் மொழி முதலாகாவாம்.

என்பதால் இது எழுத்துத் தொடர்ச்சியைப்பற்றி - எழுத்தின் தொடர் நிலையைப்பற்றி எதிர்மறையாகப் பேசுகிறார் என்பது தெளிவாகிறது.

எழுத்துத் தொடர்நிலையைச் சிறப்பாக ஈரொற்றுடனிலையைப் பற்றி பேசும்போது

**அவற்றுள்**
ரகார ழகாரங் குற்றொற் றாகா (49)

என்ற சூத்திரம் உள்ளது. இதற்கு உரையாசிரியர்களும் சுப்பிரமணிய சாஸ்திரியும் ஒரே விதமான விளக்கம் தந்துள்ளார்கள்.

கார், வீழ் என நெடிற் கீழ் ஒற்றாய் வந்தன. கரு, மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் நின்றன. அதாவது யகரமானது ஈயம், இயம், பேய், பெய் என்று நெடிலுக்கும் குறிலுக்கும் பின்னால் வருவது போல ரகரம், ழகரம் வராது என்று அவர்கள் விளக்குவது ஒருவகையான எழுத்தின் தொடர்நிலை உறவு பற்றியதுதான். ஆயினும், வேங்கடராகவுலுரெட்டியார் (1944:51) ஈரொற்றுடனிலையிலும், ர, ழ வைப் பொறுத்தவரையில் அமைப்புக் குறை இருப்பதைக் குறிப்பதாகக் கொண்டுள்ளது, போன சூத்திரத்தோடு தொடர்புடையதாக அமைகிறது.

> கர்ங்குல், மர்ந்து, அர்ம்பு, மழ்ங்குய், கழ்ந்து, என்பன போல மெய்யெழுத்துக்களாய் வாரா என்பதாம்.

என்பது அவருடைய கருத்து.

| | |
|---|---|
| துய்த்தல் | தேய்த்தல் |
| மொய்ம்பு | மேய்ப்பான் |

என்ற குற்றெழுத்துக்கும் நெட்டெழுத்துக்கும் பிறகு யகரம் ஈரொற்றுடனிலை வருவதுபோல; ரகர ழகர மெய்கள் வராது என்பதும் தமிழ்மொழி அமைப்பின் ஒரு உண்மை. எனவே, இங்கும் தொடர் நிலை உறவே பேசப்படுகிறது.

மொழிமரபில் பிரச்சனைக்கு உரியதான சூத்திரங்கள் சார்பெழுத்துப் பற்றிய சூத்திரங்களும் (34-40) அளபெடை பற்றிய சூத்திரங்களும் (41, 42) ஆகிய முதல் ஒன்பது சூத்திரங்கள்தான். உரையாசிரியர்கள் இருவரும் 'இத்துணையும் நூன்மரபின் ஒழிபு' என்று 42ஆம் சூத்திர உரையில் குறித்துள்ளார்கள். அந்தக் குறிப்பு, இந்தச் சூத்திரங்கள் தனி எழுத்தினை விவரிப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் என்பதைச் சுட்டுகிறது.

சிவஞானமுனிவர் சார்பெழுத்துகளின் இலக்கணமாக அவை, 'மொழியிடை இன்றித் தனித்துவரா' என்று கூறிய கருத்து, போன இயலில் சுட்டிக்காட்டப்பட்டது. அதை ஒட்டிப் பலரும் 'மொழிகளைச் சார்ந்து வருமேயன்றித் தனித்து வாரா; அதனால்தான் மொழிமரபில் கூறப்பட்டது' என்று விளக்கியுள்ளார்கள். ஆனால், போன இயலிலேயே சார்பெழுத்துகள் தனித்து உச்சரிக்க முடியாது என்பது பொருந்தாது என்று விளக்கப்பட்டதால், இந்தக் காரணம் வலிவு இழந்துபோய் விடுகிறது.

தொல்காப்பியர் சார்பெழுத்துகள் வருமிடம் வரையறுத்துக் கூறக்கூடியவை என்று நினைப்பதும், அவை அப்படி அமைந்திருப் பதும் போன இயல்களில் விளக்கப்பட்டன. எனவே, சார்பெழுத்து பற்றிய சூத்திரங்கள், அவைகள் சொல்லில் எங்கு வருகின்றன என்று காட்டிச் சொல்லின் எழுத்து அமைப்பினுடைய தொடர்நிலை உறவு நிலையைப் புலப்படுத்துகின்றன என்று கொள்ள வேண்டும். அதனால்தான் இன்று வருணனை மொழியியலாளர்கள் விளக்கும் முறையில் இந்த ஒலி இந்த இடத்தில் வரும் என்று சொல்லாமல், சொல்லை எடுத்துக்கொண்டு, அதில் எங்கு வரும்? என்று தொடர் நிலை முறையில் பேசுகிறார் தொல்காப்பியர்,

**குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
**ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே** (34)

**நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றும்**
**குற்றிய லகரம் வல்லா றூர்ந்தே** (36)

என்ற சூத்திரங்களில் சொல்நிலையில் பேசுவது வெளிப்படையாக உள்ளது. ஆய்தத்தை விவரிக்கும்போது வெறும் எழுத்துத் தொடர்ச்சியே குறிப்பிடப்பட்டாலும், சொல்லில் முதன் பகுதியும் (குறியதன் முன் இறுதி - அஃது என்ற உதாரணத்தில் இறுதி) அல்லது நடுப்பகுதியும் (வெஃகாமை என்ற உதாரணத்தில் இடைப்பகுதி - உயிரொடு புணர்ந்த வல்லாறு) உணர்த்தப்படுவதால், ஆய்தம் பற்றிய தொல்காப்பிய வருணனையில் சொல்பற்றிய உணர்வு ஏற்பட்டுவிடுகிறது.

அளபெடையைப் பொறுத்தவரையில், 'குன்றிசை மொழிவயின்' என்று, சொல் வெளிப்படையாகவே கூறப்பட்டுவிட்டது. ஆகவே, இங்கெல்லாம் சொல்லில் வரும் எழுத்துகளின் தொடர்நிலை உறவு பேசுவதால்தான், மொழிமரபில் வைத்தது பொருத்தமாக அமைகிறது. மேலும், வரன்முறை கட்டுப்பாடு உடையதால், அவற்றை முதலில் விவரித்துவிட்டுக் கட்டுப்பாடற்ற எழுத்துகளின் தொடர்நிலை அமைப்புகளைப் பிற் பகுதியில் விளக்குகிறார் என்று கூறலாம்.

மொழிமரபின் இறுதிச் சூத்திரம் பிற்காலத்தில் 'போலி' என்று குறிப்பிடப்படும் வகையைப் பற்றி வருணிக்கிறது. அங்கும் 'மகரத் தொடர்மொழி னகரத் தொடர்மொழி' என்று கூறுவதால் எழுத்தின் தொடர்நிலை உறவே வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, மொழி மரபு முழுமையும் சொல்லில் வரும் எழுத்துகளின் தொடர் நிலை உறவு விவரிக்கப்படுவதாகக் கொள்ள வேண்டும்.

## 7.3 நன்னூலாரின் எழுத்தியல்

நன்னூலார் எழுத்திலக்கணத்தைப் பத்துப் பிரிவாகப் பேசுவதும் அது அவயவி முறையை ஒட்டியது என்பதும் மேலே விளக்கப்பட்டன. தொல்காப்பிய நோக்கில் பார்க்கும்போது, 1. நன்னூலில் தனி நின்ற எழுத்தின் இலக்கணம், மொழியிடை நின்ற இலக்கணம் என்று பிரித்துப் பேசப்படவில்லை. 2. சொல்லை எழுத்து அடிப்படையில் பகுக்கும் முறையும் விவரிக்கப்படவில்லை - என்பவை புலனாகின்றன. ஆயினும் தொல்காப்பியச் செல்வாக்கு - மொழி மரபின் தாக்கம் நன்னூலின் எழுத்தியலில் இரண்டு வகையாக உள்ளன.

அ) எழுத்தியலில் சொல்லைப்பற்றி விதந்து பேசாமலேயே சார்பெழுத்துகளை வருணிக்கும்போது சொல்லைக் குறிப்பிடுதல்.

அளபெடை : 'இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை' (91.1)

கு. இகரம் : 'அசைச் சொல் மியா' (93.2)
கு. உகரம் : 'தொடர் மொழி இறுதி' (94.2)

ஆ) மெய்மயக்கத்தை - இரண்டு மெய்களின் மயக்கத்தையும் மூன்று மெய்களின் மயக்கத்தையும் பேசுவதன் மூலம் எழுத்துத் தொடர்ச்சி - தொடர்நிலை உறவு கூறுவது.

நன்னூலார், சொல் ஆக்கப்பாட்டு உறவு (Composed of relation) உடையது; அந்த எழுத்துச் சேர்க்கை பொருள் உடையதாக இருந்ததால் சொல் என்று கருதி எழுத்தியலில் சொல்லைப்பற்றி விளக்காமல், பதவியல் என்று தனிஇயல் அமைத்துவிட்டார். முன்னரே விளக்கியது போலத் தொல்காப்பியர் சொல் இயற்கையானது என்று கருதியால்தான், சொல் என்பது என்ன வென்றும், சொல் பொருளை உடையது என்றும் விளக்காமலே மொழிமரபில் எழுத்து அடிப்படையில் சொல்லைப் பாகுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்; அதனாலேயே பதவியல் என்பது தேவையற்ற ஒன்றாகவும் அவருக்கு ஆகிவிட்டது. நன்னூலார் பதவியல் என்ற தனி இயல் அமைத்துச் சொல்லில் வரும் எழுத்து எண்ணிக்கை பற்றி அங்குக் கூறியதால், எழுத்துத் தொடர்ச்சி பற்றிய முழு உணர்வு அவருக்கு ஏற்படாமல் போய்விட்டது போலும்.

# 8. பதவியல்

## 8.0 முன்னுரை

பவணந்தியே பதவியல் என்ற தனி இயலை அமைத்தவர் என்பதும், அந்த இயலில் விவரிக்கும் செய்திகளின் தொகுப்பும் முதல் இயலில் வருணிக்கப்பட்டன. இதற்குரிய ஆதாரங்கள் தொல்காப்பிய மொழிமரபிலும் வீரசோழியச் சொல்லதிகாரத் தாது படலம், தத்திபடலம் ஆக இரண்டிலும் இருந்தாலும், அதைத் தனி இயலாக்கிச் சொல்லியல் ஆய்வுக்கு சிறப்பாகச் சொற்களைப் பகுக்கும் ஆய்வுக்கு (Segmentation)வித்திட்டு, மொழியியல் கோட்பாட்டு அளவில் தனிப்பெருமை தேடிக்கொண்டார் பவணந்தியார்.

## 8.1 எழுத்தும் பதமும்

நன்னூலார் எழுத்தியலில் தனிநின்ற எழுத்தின் இலக்கணத்தையே அவயவி முறையில் விவரித்துள்ளார். அதனால், பவணந்தியாருக்கு, எழுத்தின் சேர்க்கையால் பொருளைப் பதம் என்பதும், பதம் எழுத்தால் ஆக்கப்பட்டு ஆக்கப்பாட்டு உறவு (Composed of relations) உடையது என்பதும் போன இயலில் சுட்டிக் காட்டப்பட்டன.

பதவியல் எழுத்ததிகாரத்தின் நேரடிப் பொருளான எழுத்தியலுக்கும் சொல்லியலின் பகுதியாகப் புணரியலுக்கும் பாலமாக அமைந்துள்ளது. அதாவது, எழுத்தியலின் தொடர்பாக எழுத்து அடிப்படையில் ஓரெழுத்தொருமொழி, தொடரெழுத்தொருமொழி என்று பிரித்து அவைகளை வடிவம், பொருள் ஆகியவற்றின் ஒப்புமை கொண்டு, பகுபதம், பகாப்பதம் என்று பிரித்துப் பகுபதத்தின் பல்வேறு உறுப்புகளின் தொகுதியைக் கூறியுள்ளதால், அவைகளின் மாற்று வடிவங்களைப் புணரியல்களில் கூறப் பதவியலில் தளம் அமைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பதத்தை ஓரெழுத்தொருமொழி, தொடரெழுத்தொருமொழி என்று பிரிப்பதை ஆதரித்தும் எதிர்த்தும் கருத்துகள் தெரிவிக்கப் பட்டுள்ளன. தொல்காப்பியர் மூன்று வகையாகப் பிரித்ததே அந்த

எதிர்ப்புக்குக் காரணமே தவிர, கோட்பாடு அடிப்படையில் எது சிறந்தது என்று யாரும் சீர்தூக்கிப் பார்க்கவில்லை. ஆயினும், தொல்காப்பியரின் பாகுபாடு குற்றியலுகரப் பாகுபாட்டின் அடிப்படையில் - அதாவது மொழி அமைப்பியலை விவரிப்பதற்காக அமைக்கப்பட்டது என்ற கருத்தும் போன இயலில் விளக்கப்பட்டது. தொல்காப்பியரின் மூன்று வகைப் பாகுபாட்டின் கோட்பாட்டு நிலையிலான விளக்கம், இந்த நூற்றாண்டிலேயே தெளிவுபெற்றது. அதற்கு முன்னால் அந்தப் பாகுபாடு எப்படி ஏற்பட்டது? என்பதை விளக்கினார்களே தவிர, ஏன் ஏற்படுத்தப்பட்டது? என்ற கேள்வியைக் கேட்கவே இல்லை.

நன்னூலைப் பொறுத்த வரையில் குற்றியலுகரப் பாகுபாடு மேற்கொள்ளப்படவில்லை. ஆனால், அந்தப் பாகுபாடு நூலுக்குள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்**
**மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை** (182)

என்ற சூத்திரத்திலும் அடுத்த சூத்திரத்திலும் குற்றியலுகரப் பாகு பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாகுபாடு ஏன் செய்யவேண்டும்? என்ற கேள்வியை எழுப்பாதது ஒரு குறையே. ஏனெனில், எந்தப் பாகுபாடும் மொழி அமைப்பில் உள்ள வேறுபாட்டை விளக்கு வதற்காகவோ அல்லது இலக்கணத்தில் வருணனைக்கு உதவுவதாக வோதான் அமைய வேண்டும். நன்னூலார் இந்தப் பாகுபாடு இயல்பானது என்று கருதினார் என்றால், விஜயவேணுகோபால் கேட்ட கேள்வியான உயிர்த் தொடர்க் குற்றியலுகரம், நெடில் குற்றியலுகரம் என்ற பாகுபாடு ஏன்? என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது போய்விடும். ஆனால், குற்றியலுகரப் பாகுபாட்டை நேரடியாக நன்னூலார் செய்யாதது ஒரு குற்றம். மேலும், எழுத்து அடிப்படையில் சொல்லை இரண்டாகப் பிரித்ததற்கும் தனிச் சிறப்பு இல்லாமல் ஆகிவிடுகிறது. நன்னூலைப் பொறுத்தவரையில் பதவியலுக்கும் புணரியலுக்கும் உள்ள சிறு தொடர்பு சரியாக விவரிக்கப்படாமலும் போய்விட்டது.

பகாப்பதம் ஏழு எழுத்தும் பகுபதம் ஒன்பது எழுத்தும் உடையது என்று கூறியது தமிழ்மொழி எழுத்து அமைப்புப்பற்றிய ஒரு உண்மை. காட்சி நிறைவு (Observationsal adequicy) மட்டுமே உடையது. ஆயினும், அதன் உண்மைத் தன்மையைச் சோதித்து

யாரும் மதிப்பிடவில்லை. சங்கரநமச்சிவாயர் உரையில் எழுந்திருக் கின்றார், நடத்துவிப்பிக்கிறார் போன்ற சொற்களை எடுத்துக்காட்டி,

> பகுதி முதலிய உறுப்பு வேறுபாட்டு வருவனவற்றிற்கு இவ்வரை யறை இல்லை என்க.

என்று சமாதானம் கூறியிருப்பது நியாயப்படுத்தும் முறையே ஆகும். ஆயினும், நன்னூலார் கூறிய எண்ணிக்கைக்கு மேற்பட்ட எழுத்து கள் இருப்பதை எடுத்துக்காட்டிய பெருமை அவருக்கு உண்டு. ஒவ்வொரு காலத்திலும் பகுபதச்சொல்லிலும் பகாப்பதச் சொல்லிலும் அதிகபட்சம் எத்தனை எழுத்துகள் வரலாம் என்பதைத் தனித் தனியே ஆராய வேண்டும்; மொழி அமைப்புப்பறிய உண்மையில் அதுவும் ஒரு கூறாகக் கருதப்படவேண்டும்.

## 8.2 பதம்

**எழுத்து தனித்தும் தொடர்ந்தும் வந்து பொருள்தரின் பதம்** என்றது உருபனை (Morpheme) - அதாவது குறைந்தபட்ச வடிவமும் பொருளும் உடையனவற்றைக் குறிக்காது, தனி உருபனான சொல்லை (Word) - அதாவது தனித்து இயங்கக் கூடிய கட்டிலா உருபனைத் தான் (Free morpheme) குறிக்கிறது என்று கொள்ளவேண்டும். ஆயினும், பகுபதம், பகாப்பதம் என்று பிரிப்பதால் பொதுவாகப் பகுக்கக்கூடிய சொல், பகுக்கக்கூடாத சொல் என்ற இரண்டு வகை தன்னுள் இருக்கவேண்டும். எனவே, பதம் என்பது தனிச் சொல்லாக வரும் ஒரு உருபனை மட்டும் குறிக்காது தனிச் சொல்லாக வரும் ஒன்றுக்கு மேற்பட்ட உருபனையும் குறிக்கிறது என்று கொள்ளவேண்டும்.

## 8.3 பகாப்பதம்

நன்னூலார் பகாப்பதத்திற்குக் கொடுத்த விளக்கமும் அதற்கு உரையாசிரியர்கள் தந்த விளக்கமும் சிறப்பாக அமைந்துள்ளன.

> **பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி**
> **முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற**
> **பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம்** (131)

இங்குப் பகுத்தால் பயன் ஒன்றும் இல்லாமலும், சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு இல்லாமலும் (அதாவது இடுகுறியாகி) போகும் என்பதால், சங்கரநமச்சிவாயர் சொல் நிலையில் பகுபதம், பொருள் நிலையில் பகாப்பதம் என்று வேறுபடுத்திக் காட்டுவதன்

மூலம், பகுபதத்திற்கு வடிவமும் பொருளும் இருக்க வேண்டும் என்ற பொது உண்மை வலியுறுத்தப்படுவதாகக் கொள்ளலாம்.[1]

சங்கரநமச்சிவாயர் 'செம்மை சிறுமை...........பண்பின் பகாநிலைப் பதமே' (135) என்ற சூத்திர உரையில்

> இங்ஙனம் கூறிய வாய்பாடு எல்லாம் சொல் நிலையில் பகுபதமாயினும் மை விகுதிக்குப் பகுதிப் பொருள் இன்றி வேறு பொருள் இன்மையால் பொருள் நிலையால் பகுக்கப்படாது என்பார் **'பண்பிற் பகா'** என்றும்.....கூறினார்.

என்று விளக்கியுள்ளார். செம்மை என்ற சொல்லைப் பண்புப் பெயராகக் கருதுவது வேறு, பண்புப் பெயரின் பகுதியாகக் கருதுவது வேறு. நன்னூலார் இங்கு இரண்டாவது முறையைப் பின்பற்றி இருக்கிறார். இலக்கண ஆராய்ச்சியில் நாம் சாதாரணமாக நினைப் பதற்கு மாறாக இலக்கண ஆசிரியர் விளக்கம் அமைந்துவிடும்; ஆனால், அதற்கு ஏதாவது உட்காரணங்கள் இருக்கும். (தொல்காப்பியத்தில் இது மாதிரி உதாரணங்கள் உண்டு; சண்முகம் 1978ஆ பார்க்க) நன்னூலார் பகுதி என்பதைத் தனித்து இயங்கக் கூடிய வடிவமாக இருக்கவேண்டும் என்று கருதி இருக்கலாம். ஏனெனில் வினைப் பகுதி ஏவலாக வருகிறது. அப்படியே பண்புப் பெயர் பகுதியும் தனித்து இயங்கும் என்று காட்டவேண்டும் என்பதற்கு சொல்நிலையில் பகுக்க வாய்ப்பு இருந்தும் பகுக்காமல் விட்டிருக்கலாம்.

நன்னூலார் பகாப்பதம் பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு வகைப்படும் என்பதை இன்று பலரும் ஒத்துக்கொள்ளவில்லை. சால என்ற உரிச்சொல்லைக் குறிப்புப் பெயரெச்சமாகவும் கருதலாம் என்று மீனாட்சிசுந்தரன் (1974:127) விளக்கியுள்ளார். பெயர், வினை, இடை, உரி என்ற சொல்பாகுபாடு பொருந்தாது என்பதையும், அவர் விளக்கியுள்ளார். உறு, தவ போன்ற உரிச்சொற்களும் மற்றை, தஞ்சம், கொல் போன்ற இடைச்சொற்களும் காணப்படுவதால் நாலுவகை சொற்பாகுபாடு ஒத்துக்கொள்ளப்படுகிறது. (சண்முகம், 1986:163; 1992:278) பகாப்பதம் என்பது உருபனைக் குறிப்பதாகக் கொண்டால்,

---

1 பகுக்கும்போது ஒவ்வொரு பதத்துக்கும் வடிவும் பொருளும் இருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியின் ஆரம்ப கட்டமே. மொழி முழுவதையும் ஆராயும் போது வடிவம் மட்டும் இருந்து பொருள் இல்லாது இருப்பதையும் (அதுவே உருபு புணர்ச்சியில் வரும் சாரியை அல்லது வெற்றுருபு-Empty morph), பொருள் மட்டும் இருந்து வடிவம் இல்லாது இருப்பதையும் (சூனியஉருபு-Zero allomorph) காண முடியும்.

இடைச்சொல் என்பது கட்டுண்ட உருபனை - அதாவது விகுதியாகவும், இடைநிலையாகவும் வரும் உருபன்களையும் ஒருநிலைக்கிளவிகளாயும் (particle) குறிக்கும். உரிச்சொல் அடையாக வந்து எந்த விகுதியையும் ஏற்காத உருபன்களைக் குறிக்கும். இதற்கேற்பத் தனிச் சொல்லாக வரும் பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றை, அடிச்சொல் (Root) என்ற பொதுப்பெயரால் குறிக்கவேண்டும். ஆகவே, பகாப் பதம் நான்கு வகைப்படும் என்றது, அவர் தமிழ் அடிச் சொற்களின் பாகுபாடாகக் கருதியதை ஒட்டியது.

## 8.4 பகுபதம்

நன்னூலார் வினையும் பெயரும் பகுபதமாக வரும் என்று கூறியுள்ளார் (132). மேலே காட்டியபடி இடைச்சொல்லும் பகுபதமாக வருகிறது.

'சாலவும் நன்று' என்ற தொடரில் கால உரிச்சொல்லும் இன்னொரு விகுதியை ஏற்றிருக்கிறது. விகுதி ஏற்று வந்திருப்பதால் அதை இடைச்சொல்லாகக் கருத வேண்டும். அப்படியே மற்று என்ற இடைச்சொல் மற்ற நூல் என்ற தொடரில் பகுபதமாக உள்ளது. எனவே, பெயரும் வினையும் மட்டும் பகுபதமாக வரும் என்பது பொருந்தாது; இடைச்சொல்லும் பகுபதமாக வரும் (சண்முகம், 1992:280)

### 8.4.1 பகுபத உறுப்புகள்

**பகுதி விகுதி இடைநிலை சாரியை**
**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**
**முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்** (133)

இவைகளைச் சங்கரநமச்சிவாயர் பகுபத உறுப்புகள் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால், இது விவாதத்துக்கு உரியது. மொழி யியலாளர்கள் எல்லோரும் இந்த ஆறையும் உறுப்பாகக் கொள்ள முடியாது என்று திட்ட வட்டமாகக் கூறியுள்ளார்கள். ஆயினும் பொருளும் வடிவும் உடைய உறுப்புகள் எத்தனை என்பதில் சில வேறுபாடு காணப்படுகிறது. சதாசிவம் (1966:14) பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய மூன்றுந்தான் மொழி அமைப்புக் கூறுகள் (Structural units) - அதாவது குறைந்தபட்சப் பொருள் உடைய உறுப்புகள் அல்லது உருபன்கள் என்றும், சாரியையும் சந்தியும் குறைந்தபட்சப் பகுப்பு உறுப்புகள் (Segmental units) என்றும், ஆனால் குறைந்த பட்ச

அமைப்பு உறுப்புகள் அல்ல[2] என்றும் விளக்கியுள்ளார். அதாவது பகுப்பு ஆராய்ச்சியில், வேறு ஒரு சொல்லோடு பொருளும் வடிவும் ஒத்து இருப்பதை முதலில் பகுப்பார்கள். அவற்றையெல்லாம் பகுப்பு உறுப்புகள் (Segmental units) என்று அழைக்கலாம். அப்படித் தனித்தனியே சொற்களைப் பகுத்தபின், ஒத்த பொருளும் வடிவமும் உடையவற்றைத் தொகுத்து, உருபன்களாக வகுப்பார்கள். அந்தப் பகுப்பு உறுப்புகள் எல்லாம் பகுபத உறுப்புகளாக ஆகாது.

1. செய்தான் செய் / த் / ஆன்
2. வாழ்ந்தான் வாழ் / ந் / த் / ஆன்
3. படித்தனன் படி / த் / த் / அன் / அன்
4. செய்தனன் செய் / த் / அன் / அன்

என்ற சொற்களை ஒப்பிடும்போது முதல் இரண்டு சொற்கள் வினைமுற்று என்பதால் - ஆன் என்பதை முதலில் பகுக்கலாம். ஏனெனில் அந்த இரண்டு சொல்லிலும் -ஆன் மறித்து வந்துள்ளது. இறந்த கால விகுதியாக /த்/ என்பதே எல்லாச் சொற்களிலும் ஒத்துவருவதால், அதை இறந்த காலப் பகுப்பு உறுப்பாகக் கருதலாம். படித்தனன் என்பதில் உள்ள முதல் தகரமெய் சந்தியாய் வந்தது - அதாவது பகுதியும் இடைநிலையும் சேர்ந்ததால் மிகுதல் அல்லது தோன்றல் என்ற புணர்ச்சியில் வந்தது. அதே தகரமெய் வாழ்ந்தான் என்பதில் நகரமாக வந்ததால் விகாரம் என்று கருதப்படுகிறது. இவை மரபுவழி விளக்கம்.

செய்வன், வருவன் போன்ற சொற்களை ஒப்பிட்டால், செய்தனன், படித்தனன் என்பவற்றில் இறுதி -அன் என்பதைச் சாரியையாகவும் கருதலாம்; எனவே பகுதி, சந்தி, இடைநிலை, விகுதி, சாரியை என்பனவே பகுப்பு உறுப்புகள். பகுதி, இடைநிலை, விகுதி ஆகிய மூன்றும் மொழி அமைப்பு உறுப்புகள்.

---

2 Pavananti describes only three classes of morphemes that constitute the structure of words. These are (1) the root morphemes *(pakuti)* (2) the infix morpheme *(itainilai)* and (3) the suffix morpheme *(vikuti)* All these three structural units are minimal meaningful units, it., morphemes. The increment - *ca:riyai* and Sandhi elements-*canti* are minimal units and not minimal meaningful units.

Sadasivam, 1966 : 14.

சி. சுப்பிரமணியன் (1977 : 166) பகுதி, இடைநிலை, சாரியை விகுதி ஆகிய நான்கையும் பொருள் உடைய உருபனாகக் கருதுகிறார்.[3] இங்குச் சாரியையையும் உருபன் என்று கொள்வது வரலாற்று ஒப்பிலக்கண ஆராய்ச்சியின் தாக்கத்தின் பிரதிபலிப்பு. அதுபற்றிப் பன்னிரண்டாவது இயலில் (சாரியை) விளக்கப்படும். எப்படியாயினும் ஆறையும் உருபனாக -அமைப்பு உறுப்பாக (Structural units) கருத முடியாது; சந்தியையும் விகாரத்தையும் பகுப்பு உறுப்பாகக் கூட எடுத்துக்கொள்ளமுடியாது. சந்தி விகாரம் தவிர ஏனையவற்றை மட்டுமே பகுப்பு உறுப்பாகக் கொள்ளமுடியும். சந்தி என்பது மிகுதல் புணர்ச்சி, விகாரம் என்பது திரிதல் புணர்ச்சி.

அடுத்துத் தமிழில் உள்ள பகுபதங்களில் பகுதி, விகுதி, சாரியை இடைநிலை ஆகிய நான்கு அமைப்பு உறுப்புகள் மட்டும் உள்ளன என்பதின் உண்மையைக் காண முற்படலாம். சங்கரநமச்சிவாயர் நடத்துவிப்பிக்கின்றார் என்ற உதாரணத்தை எழுத்து வரையறைக்குக் காட்டி, அமைதி கூற முயன்றது இதற்கு எதிர் உதாரணமாக அமையும். இங்கு நட / த்து / வி / ப்பி / க்கின்ற் / ஆர் என்று ஆறு உருபன்கள் உள்ளன. சி. சுப்பிரமணியனும் அதிகபட்சம் ஐந்து உருபன் வரலாம் என்று எடுத்துக்காட்டியுள்ளார். (1977 : 160)

பகுதி+ஆக்க விகுதி+இடைநிலை+எதிர்மறை+விகுதி

நடத்துகின்றிலன் -நட/த்து/கின்ற்/இல்/அன் என்று உதாரணமும் காட்டியுள்ளார். இதுவும் நன்னூலார் பகுபதத்தில் கூறும் உறுப்பு களின் எண்ணிக்கையோடு பொருந்துவதாக இல்லை என்பதைப் புலப்படுத்துகிறது. அவர் கூறுவது தனிநிலை (Simple) வினைமுற்றுக்கு மட்டுமே பொருந்தும் - செய்தான் -செய் /த்/ஆன். எனவே எல்லா விதப் பகுபதச் சொல்லையும் எடுத்துக்கொண்டு அவர் பகுபத உறுப்புகளை வரையறுக்கவில்லை என்பது தெளிவாகிறது.

---

3 The last one *(vika:ram)*, anyhow is not to be considered as a division, as it is only a transformation and not a morpheme. The assimilated one also is not considered as a division as it is not a morpheme, but a phoneme and that too is formed only is assimilation. Taking into account all the facts stated above, it is better to consider the remaining four as the divisions of a word; for they are morphemes which only form words of as the constituents of a word.
S.Subrahmanyan, 1977:166.
(Here the assimilated one is *canti* and the remainig four are *pakuti, vikuti, itainilai* and *ca:riyai*).

அதிகபட்ச உறுப்பை நிர்ணயித்துப் பெயரிட்டது, உருபன்கள் சொல்லில் வரும் ஸ்தானத்தை (Position) ஒட்டியது. அதாவது முதல், இடை, கடை என்று தனி வினைமுற்றின் மூன்று ஸ்தானத்தையே அவர் ஆதாரமாகக் கொண்டார். இதனால் ஒரு நன்மை மட்டும் ஏற்பட்டாலும், மேலே குறிப்பிட்டபடி ஒரு பகுபதத்தில் வரும் அதிகபட்ச உருபன்களை வரையறுப்பதில் தவறு நேரக் காரணமாகிவிட்டது.

ஸ்தானத்தின் அடிப்படையில் கூறியதால் உருபன்கள் வருமிடத்தைத் தனியே குறிப்பிடவேண்டிய அவசியம் இல்லாது போய்விட்டது. கால விகுதியை இடைநிலை என்றதால் அது பகுதிக்கும் விகுதிக்கும் இடையே வரும் என்று அமைந்து, ஏனையவை (பகுதி, விகுதி) முதனிலை, இறுதிநிலை உறுப்புகள் என்று ஆகிவிட்டன.

சொல்லியல் ஆராய்ச்சியில் உருபன்களைக் கண்டுபிடிப்பதோடு, அவை வருமிடம் குறிப்பிடுவதும் முக்கியமாகக் கருதப்படும்.4 நன்னூலார் ஸ்தான அடிப்படையில் பகுபத உறுப்புகளுக்குப் பெயர் கொடுத்ததால் வருமிடம் பற்றித் தனியே குறிப்பிட வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது.

வினைமுற்றுப் பகுபதங்களை மட்டும் பகுப்பு ஆய்வு செய்துவிட்டுப் பெயர்ப் பகுபதங்களை விளக்காமலே நன்னூலார் சென்றுவிட்டார். உருபு புணரியலில் ஓரளவு சாரியையை ஆராய்ந்த ;லும், அங்கு வேற்றுமை விகுதிகளுக்கு 'உருபு' என்று பெயர் கொடுத்துத் தன்னுடைய பகுப்பு ஆய்வை அவரே முழுமையாகப் பின்பற்றாமல் தள்ளிவிட்டார். இப்படிப் பெயர்ப் பகுபதங்களையும் வினைப் பகுபதங்களையும் ஒரே அடிப்படையில் ஆராயததால் தமிழில் அகநிலைச் சந்தி சிறப்பாக வளராமல் நின்றுவிட்டது.

## 8.5 பகுதி

நன்னூலார் பகுப்பு உறுப்புகள் ஆறு என்று கூறினாலும், பகுதிக்கு மட்டுமே பொது விளக்கம் தந்துள்ளார்; ஏனைய உறுப்பு களுக்கு அவைகளைப் பட்டியல் போட்டுத் தொகுத்துக் கூறியுள்ளார். இது இலக்கணத்தில் ஒரு சிறு குறைபாடே; ஆயினும் உரையாசிரி யர்கள் ஓரளவு பொதுமைப்படுத்திச் சிறப்பாக விளக்கியுள்ளார்கள்.

---

4 The grammar, or grammatical system, of a language is (1) *The morphemes used in the language* and (2) *the arrangements in which these morphemes occur relative to each other in utterances.*

Hockett. 1958 : 129

சங்கரநமச்சிவாயர்,

> பகுபத உறுப்பாம் முதனிலை, இறுதிநிலை, இடைநிலைகளாய பகாப்பதங்கள் (134 ஆம் சூத்திர உரை).

என்று பகுதியை முதனிலை என்றும் விகுதியை இறுதிநிலை என்றும் விளக்கியுள்ளதால், அவற்றின் ஸ்தான அடிப்படையில் பொது விளக்கம் தந்துவிட்டார் என்று கொள்ளலாம். இந்த உணர்வு நன்னூலார் பகுதிக்குக் கொடுத்த இலக்கணத்தில் உள்ள குறையை நிறைவு செய்வதற்குப் பயன்பட்டுவிட்டது.

> **தத்தம்**
> **பகாப்ப தங்களே பகுதி ஆகும்** (134)

என்ற விளக்கம் மேலே குறிப்பிட்ட பெயர், வினை, இடை, உரி என்ற நான்கும் பகாப்பதமாம் என்ற இலக்கணத்துக்கு (8ஆம்சூத்) மாறுபட்டுள்ளது. ஏனெனில் நான்கு சொல்லுமே பகாப்பதமாக வருமே தவிர இடைநிலை போன்றவை பகுதியாக வரமுடியாது. எனவே மயிலைநாதர்.

> பெயர்ப் பகுபதங்கட்கு அப்பொருள் ஆதியான (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்) பகாப்பதங்களே பகுதியாம்.

என்று பொது விளக்கத்தை ஒருவகைப் பகுபதத்துக்கே பொருந்து வதாகக் கருதியதால், நன்னூல் சூத்திரம் மிகைப்படுத்துதல் என்ற குற்றம் உடையதாக அமைந்துவிடுகிறது. ஆனால் சங்கரநமச்சிவாயர் 'பகாப்பதத்துக்கும் பகுதிக்கும்' உள்ள முரண்பாட்டை உணர்ந்ததால்,

> பகுபதத்துட் பகுதி, விகுதி முதலிய உறுப்பெல்லாம் பகாப்பதமாயினும் விகுதி முதலியனவற்றை மேலே விதந்து கூறலின் ஈண்டுத் தத்தம் பகாப்பதங்கள் என்றது முதனிலைகளே என்பது பாரிசேடத்தால் (ஒழிந்து நின்றதனால் உணரப்படுவது) பெற்றாம்.

என்று விளக்கி, நன்னூல் பொதுவிளக்கத்தில் இருந்த குறையை நீக்கி, நிறைவு செய்துவிட்டார்.[5] இந்த விளக்கம் நூலாசிரியரை

---

5 இலக்கணவிளக்கத்தில் பகுதியின் பொது இலக்கணத்துக்குத் தனிச் சூத்திரம் இல்லை. பகுபத உறுப்புகளுள் பகுதி என்ற சொல்லைக் கையாண்டதாலும் வினைப்பகுதியையும் பெயர்ப்பகுதியையும் விளக்கும்போது முதனிலை (43.5,45.2) என்று கையாண்டதாலும் பொது விளக்கம் தேவையில்லை என்று கருதி விட்டிருக்க வேண்டும்.

நேரடியாகக் குறைகூறாத உரையாசிரியரின் பெருந்தன்மையைப் புலப்படுத்துவதோடு, நூலுக்குள் இருக்கிற முரண்பாட்டைப் புரிந்து கொண்டதாலும், அவர் இட்ட பெயர்களின் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து கொண்டதாலுமே சங்கரநமச்சிவாயரால் சரியான விளக்கம் கொடுக்க முடிந்தது என்பதையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மொழியில் வேர்ச்சொல் முதலிலும் அதை அடுத்தே பலவேறு விகுதிகளும் வருவதால், சொல்லியல் அமைப்பில் தமிழ் மொழி பின்னொட்டு மொழி (Suffixing agglutinative language) என்று குறிப்பிடப்படும். ஆகவேதான் பகுதி முதனிலையாக வருகிறது. எனவே நன்னூலார் பகுதிக்குக் கொடுத்த விளக்கம் பின்னொட்டு மொழிகளுக்கு மட்டுமே பொருந்துவது. முன்னொட்டு மொழிகளுக்கோ வேறுவித சொல்லமைப்பு உடைய மொழிகளுக்கோ பொருந்தாது. அதாவது நன்னூலாரின் பகுதிபற்றிய விளக்கம் தமிழ் மொழிக்கு மட்டுமே பொருந்தக்கூடியது.

விகுதி, இடைநிலை பற்றிய் பொதுவிளக்கம் நன்னூலில் தரப்படவில்லை என்பது முன்னரே சுட்டிக்காட்டப்பட்டது. அப்படியே பகுதியின் வருணனைக்கும் விகுதி, இடைநிலை ஆகியவற்றின் வருணனைக்கும் வேறொரு வித்தியாசம் அமைந்துள்ளது. பகுதியின் தொகைகளை விளக்கும்போது (நட,வா.....) ஒரு அடிப்படை வடிவத்தையும், விகுதி-இடைநிலைகளின் தொகைகளைக் கூறும்போது எல்லா மாற்றுவடிவங்களைத் தொகுத்தும் சொல்லியுள்ளார். இது சொல்லியல் ஆய்வில் முழுத் தெளிவு ஏற்படாததையே காட்டுகிறது.

## 8.6 பகுபத உறுப்புகளின் பெயர்கள்

பகுபத உறுப்புகளில் பகாப்பதமாக வரும் ஒவ்வொரு உறுப்புக்கும் தனித்தனிப் பெயர் கொடுத்து, உருபன்கள் வருமிடத்தைத் தனியே கூற வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் செய்துவிட்டதை மேலே குறிப்பிட்டோம். அதாவது அது இலக்கணத்தை எளிமைப் படுத்திவிட்டது என்று பொருள். அத்தோடு வேறு ஏதாவது நன்மை இருக்கிறதா? என்றும் ஆராய வேண்டும். நன்னூலாரின் உருபு புணரியலைப் பார்த்தால், அவர் மொழி அமைப்பு ஆராய்ச்சிக்கும் உதவுவதாகக் கருதி இருக்கிறார் என்பதும், அங்கும் முழுத் தெளிவு இல்லாமல் குறிப்பாக மட்டுமே கூறியுள்ளார் என்பதும் புலப்படும். நன்னூலார்,

**பதமுன் விகுதியும் பதமும் உருபும்**
**புணர்வழி** : . . .   . . . . .   . . . . . (243)

என்று புணர்ச்சியை

பதம் + பதம் - பதப்புணர்ச்சி
பதம் + விகுதி - விகுதிப்புணர்ச்சி
பதம் + உருபு - உருபு புணர்ச்சி

மூன்று வகைப்படுத்தியுள்ளார் என்பது தெளிவாகிறது. அவை எப்படிப் புணர்ச்சியில் வேறுபடுகின்றன என்பது உதாரணங்கள் மூலமாகவோ புணர்ச்சி விதிகளின் மூலமாகவோ இதுவரை விளக்கப்படவில்லை.

மொழியியலில் பதப்புணர்ச்சியைப் புறநிலைச்சந்தி என்றும் உருபு புணர்ச்சியையும் விகுதிப்புணர்ச்சியையும் அகநிலைச் சந்தி என்று பொதுப் பெயராலும் அழைத்து, புறநிலைச் சந்தியைத் தொடரியலிலும் அகநிலைச் சந்தியைச் சொல்லியலிலும் விளக்குகிறார்கள். சில இலக்கண ஆராய்ச்சியாளர்கள் இந்த வேறுபாட்டைச் சுட்டிக்காட்டித் தமிழில் இப்படிப்பட்ட வேறுபாடு இல்லை என்று வாதிட்டுள்ளார்கள். சுப்பிரமணிய சாஸ்திரியார் (1934:103) வடமொழிக்கும் தமிழுக்கும் புணர்ச்சியிலுள்ள வேறுபாடுகளைத் தொகுத்துக் கூறும்போது வடமொழியில் அகநிலைச் சந்தியும் புறநிலைச் சந்தியும் பலவகையில் வேறுபடுகின்றன; ஆனால் தமிழில் இரண்டு சந்தியிலும் எந்தவித வேறுபாடும் செய்வதில்லை[6] என்று குறிப்பிட்டுள்ளார். சி. சுப்பிரமணியனும் (1977:109) இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, இரண்டில் ஏதாவது ஒன்றுக்கு விதி அமைத்தால் போதும் என்று கூறியுள்ளார்.[7]

தொல்காப்பியர் உருபியல் என்று பெயர்ப் பகுபதத்தில் வரும் சாரியை பற்றிக் குறிப்பிட்டு, ஏனைய இயல்களில்

---

6 ......in several respects the internal sandhi differs from the extenal sandhi in Sanskrit, while in Tamil no difference is generally made in the treatment of sounds in both these varieties of sandhi.
Subrahmanya Sasteri, 1934 : 103

7 சி. சுப்பிரமணியன் மேற்குறிப்பிட்ட மேற்கோளை எடுத்துக் காட்டி, 'So, it is enough to frame rules for one of the sandhies' என்று குறிப்பிடுகிறார். (1977:109)

**நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்** (253)
**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்** (263)
**உயர்திணை யாயின் உருபியல் நிலையும்** (325)

என்று பல இடங்களில் இரண்டும் ஒரே சாரியை பெறும் என்று கூறியதைக் கருதி, சி. சுப்பிரமணியன் இரண்டுவிதச் சந்திகளுக்கும் வேறுபாடு இல்லை என்று கொண்டிருக்கலாம். ஆனால், தமிழ மொழி அமைப்பு முழுவதையும் பார்த்தால் இரண்டுக்கும் வேறுபாடு இருப்பதை உணரமுடியும்.

சங்கத் தமிழில் அகநிலைச் சந்தியில் தனிக்குறிலுக்கும் முன்மெய்யெழுத்துகள் இரட்டித்து வருவது குறைவாகவே உள்ளன; புறநிலைச் சந்தியில் அவை கண்டிப்பாக இரட்டித்தே வருகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பதப்புணர்ச்சி | கல் | + | இல்லை | > | கல்லில்லை |
| | மண் | + | அழகு | > | மண்ணழகு |
| விகுதிப்புணர்ச்சி | செய் | + | அ | > | செய |
| | செய் | + | இன் | > | செயின் |
| | நும் | + | அது | > | நுமது |

உயிரும் உயிரும் சேரும்போது உடம்படும்மெய் வருவது பதப் புணர்ச்சியில் உண்டு; ஆனால் விகுதிப் புணர்ச்சியில் நிலைமொழி உயிர் கெடும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விகுதிப்புணர்ச்சி | நடு | + | அ | > | நட |
| | புகு | + | அ | > | புக |
| பதப்புணர்ச்சி | கிளி | + | அழகு | > | கிளியழகு |
| | நடக்க | + | இருந்த | > | நடக்கவிருந்த |

பெயர்ச் சொற்களில் பதப்புணர்ச்சி ஏற்படும்போது சாரியை வருவது சிறுபான்மை; அப்படி வரும் சொற்களையும் சாரியை இல்லாமல் தொகையாகவும் கூறமுடியும். ஆனால், வேற்றுமை உருபு ஏற்கும்போது சங்கத் தமிழில் மூன்றாம் வேற்றுமை உருபான ஒடு என்பது தவிர, ஏனைய உருபு வரும்போது சாரியை சேர்ந்தே வரும். எனவே, தமிழில் அகநிலைச்சந்தி புறநிலைச்சந்தி இரண்டும் வேறுபடவில்லை என்பது பொருந்தாது.

தொல்காப்பியர் இந்தப் பிரிவுகளை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், புணரியலின் பிற்பகுதியிலும் உருபியலிலும் பெயர்ச் சொல்லின் அகநிலைச் சந்தியையே விளக்கியுள்ளார் என்றும் பலரும் ஒத்துக்கொள்கிறார்கள் (உதாரணம், சண்முகம், 1967 : 104; குமாரசுவாமி ராஜா, 1970). ஏனெனில், புணரியலின் பிற்பகுதியில் சாரியையின் மாற்று வடிவங்களும், உருபியலில் சாரியையின் வருமிடங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. நன்னூலாரும் உருபு புணரியல் என்ற தனி இயலில் வகுத்ததன்மூலம் பதப்புணர்ச்சியும் உருபு புணர்ச்சியும் வேறுபடுகின்றன என்று கருதியிருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஆனால், அவர்கள் இருவரும் அகநிலைச் சந்தியை முழுவதும் விளக்கவில்லை; அதாவது தொல்காப்பியர் உருபு புணர்ச்சியை விவரித்துவிட்டு விகுதிப்புணர்ச்சியைப் புறக்கணித்துவிட்டார். நன்னூலார் விகுதிப்புணர்ச்சி என்று கொள்கை அளவில் வேறுபடுத்தினாலும், தொல்காப்பியர் செல்வாக்கால் தனியே விகுதிப் புணர்ச்சியை வருணிக்கவில்லை, மேலும், நன்னூலில் காணப்படும் ஒரு செய்தி கொஞ்சம் அதிர்ச்சி தருவதாகவும் இருக்கிறது. அவர், விகுதிப்புணர்ச்சியும் உருபு புணர்ச்சியும் விவரிக்க முடியாதபடி விரிந்துள்ளன என்று கூறுவது ஆய்வுக்குச் சவாலாக உள்ளது.

> **இதற்கிது சாரியை எனின்அள வின்மையின்**........... (253:1)
>
> **இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்**
> **விதிப்பளவு இன்மையின்**........ (257.1-2)

என்று கூறும்போது நன்னூலார் தமிழ் அமைப்பிலுள்ள சில சிக்கல் களைக் கண்டு பயந்துவிட்டாரோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஆனால், நன்னூலாரை மறுத்துத் தமிழில் உருபு புணர்ச்சியும் விகுதிப் புணர்ச்சியும் வருணிக்கும் முயற்சியில் யாரும் ஈடுபடாதது இலக்கண ஆராய்ச்சி உலகில் இருக்கிற மந்தத்தையும் தேக்கத்தையும் புலப்படுத்துகிறது. இலக்கண நூலை அப்படியே படித்து வந்திருக்கிறார் களே தவிர, அதில் கூறப்பட்ட செய்திகளை - உண்மைகளை உணர்ந்து இலக்கண ஆராய்ச்சியை வளர்க்கவில்லை; வளர்க்க வேண்டும் என்ற உணர்வு கூட இல்லை என்பதே வருந்தத்தகுந்தது.

மொழியியலில் அகநிலைச் சந்தி என்று பொதுவாகப் பிரித்திருக்க நன்னூலில் உருபு புணர்ச்சி, விகுதிப்புணர்ச்சி என்று இரண்டாகப் பிரித்ததற்குப் புணர்ச்சி வேறுபாடுகள் இருக்கின்றன என்று காட்டி, நியாயப்படுத்த முடியுமா? அல்லது பெயர், வினை

என்ற பாகுபாட்டை மட்டும் ஒட்டி மிகைபடக் கூறுவதாக அமைந்துள்ளதா? என்பதும் ஆராய்வதற்கு உரியது.

## 8.7 பதவியலின் இடம்

தொல்காப்பியர் பதவியல் என்ற தனி இயலே வகுக்கவில்லை; அதற்குக் காரணம் போன இயலில் சுட்டிக்காட்டப்பட்டது. பதவியலை ஏற்றுக்கொண்ட இலக்கண நூல்களுள் நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகியவை எழுத்ததிகாரத்தின் ஒரு பகுதியாகவும், தொன்னூல்விளக்கம் சொல்லதிகாரத்தின் ஒரு பகுதியாகவும் - அதுவும் துவக்கப் பகுதியாகவும் விவரித்திருப்பது முதல் இயலில் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இங்கு நன்னூலுக்கும் தொன்னூல்விளக்கத்துக்குமுள்ள இயல் வேறுபாடு மட்டுமே விளக்கப்படும். மொழியியல் அமைப்பை விளக்கும்போது ஒலியனியல் அல்லது எழுத்தியல் (Phonology), உருபொலியனியல் (Morphophonemics) அல்லது புணரியல், இலக்கணம் (Grammar) என்று பொதுவாகவும், சொல்லியல் (Morphology), தொடரியல் (Syntax) என்று சிறப்பாகவும் பிரித்து விளக்குவார்கள் (ஹாக்கெட் 1958). ஆனால் மொழியை ஆராயும்போது எழுத்தியலை ஆராய்ந்த பிறகே சொல்லியலை எடுத்துக்கொண்டு சொல்லைப் பகுக்கும் முறை, மாற்று வடிவங்களைத் தொகுத்து அடிப்படை வடிவம் (அடிநிலைக் கிளவி) காணும் முறை முதலியவற்றை விளக்குவார்கள்; பின்னரே புணர்ச்சியை விளக்குவார்கள். அதாவது மொழியமைப்பை விளக்கும் முறைக்கும், மொழியமைப்பை அறிவதற்கு ஆராய்ச்சி செய்யும் முறைக்கும் சிறிது வேறுபாடு இருக்கிறது. மொழியமைப்பை விளக்கும்போது எழுத்தியல், உருபொலியனியல், சொல்லியல் என்று கூறினாலும் ஆராயும்போது எழுத்தியல், சொல்லியல், உருபொலியனியல் (புணரியல்) என்ற முறையையே மேற்கொள்வார்கள்.

இந்த வெளிச்சத்தில் பார்க்கும் போது நன்னூலார் பதவியலை எழுத்ததிகாரத்தின் பகுதியாக கருதியது மொழி அமைப்பை ஆராயும் முறையோடும், தொன்னூல்விளக்கம் சொல்லதிகாரத்தில் கூறியது மொழியமைப்பை விளக்கும் முறையோடும் ஒற்றுமை உடையதாய் இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

# 9. புணரியல்

## 9.0 புணர்ச்சி விளக்கம்

புணர்ச்சி என்றாலே இரண்டு பொருள்களின் சேர்க்கை என்று பொருள். அது எழுத்ததிகாரத்தைப் பொறுத்தவரையில் இரண்டு எழுத்துகளின் சேர்க்கையைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அந்த இரண்டு எழுத்தும் நிலைமொழி ஈற்றெழுத்து, வருமொழி முதலெழுத்து ஆகிய இரண்டின் சேர்க்கையைக் குறிக்கிறதே தவிர ஒரு சொல்லுக்குள் வரும் இரண்டு எழுத்துகளின் சேர்க்கையைக் குறிப்பிடவில்லை. இதைத் தொல்காப்பியர்,

**நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்**

..............................................................................

**மூன்றே திரிபிடன்ஒன் றே இயல்பென** (108.2-8)

என்று கூறித் தெளிவுபடுத்தியுள்ளார்.

பொதுவாக எழுத்து மாற்றங்களை - அதுவும் ஒரு சொல்லுக்குரிய எழுத்து வேறுபாடுகளை விளக்குவதே புணரியல் என்று கூறலாம். மொழியியலாளர் உருபொலியன் அதாவது, உருபனுடைய ஒலியன் பற்றிய ஆய்வு என்று குறிப்பிடுவது இதன் தன்மையை நன்கு புலப்படுத்தும். புணரியல்களில் கூறிய மாற்றங்களை நிலைமொழி இறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் சேர்வதால் மட்டும் ஏற்படும் மாற்றங்கள் விளக்கப்படவில்லை. i ஒரு சொல்லே அதன் இலக்கண உறவுக்கு ஏற்பப் புணர்ச்சி மாற்றம் பெறும் (9-4). ii நிலைமொழியின் இடையெழுத்தும் (பத்து>பன்ன் - இரண்டுக்கு முன்னால்) முதலெழுத்தும் (ஒன்று > ஓர்; இரண்டு > ஈர்) மாறும்.

## 9.1 இலக்கண - மொழியியல் வேறுபாடு

இங்குத் தமிழ் இலக்கண நூல்களுக்கும் பொதுவாக இந்திய இலக்கண நூல்களுக்கும் மொழியியலுக்கும் இடையே இரண்டு

வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று: இலக்கண நூல்கள் சொற்களின் சேர்க்கையால் (புணர்ச்சி) மாற்றம் ஏற்படுகிறது என்று கொள்ள, மொழியியல் தனிச் சொல்லின் எழுத்து மாற்றமே உருபொலியன் அல்லது சந்தி என்று கொள்கிறது. மொழியியலார் சந்தி என்று கூறினாலும், அதற்குச் சேர்க்கை என்ற இலக்கியப் பொருள் கொள்ளக் கூடாது. இரண்டு : சொல்லின் மாற்று வடிவத்தை விளக்குவதற்குச் செய்யும் வித்தியாசம்; மொழியியலில் ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றம் (Phonologically conditioned alternant), சொல் கட்டுப்பாடு உடைய மாற்றம் (Morphologically conditioned alternant) என்று இருவகையாகப் பிரித்து, முன்னதை மட்டும் புணரியலில் வருணிப்பது. இந்த முறை வருணனை மொழியியலுக்கே சிறப்பாக உரியது. மாற்றிலக்கண மொழியியலை ஒட்டிய, விதி முறை ஒலியனியலார் கொள்ளும் கோட்பாடு வேறுபட்டது. தமிழ் இலக்கண நூல்களில் இரண்டு முறையும் கலந்தே காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட இரண்டு வித்தியாசத்தை விளக்கும் வகையில் தமிழ் இலக்கண நூல்களின் புணரியல் பொதுக் கோட்பாடுகளை அறிந்துகொள்ள முயலுவோம்.

## 9.2 புணர்ச்சி என்பதன் தத்துவம்

தமிழ் இலக்கண நூல்களை இதுவரைப் பார்த்ததில் (எழுத்தியலிலும் பதவியலிலும்) தனிச்சொற்களின் இலக்கணமே விவரிக்கப் பட்டுள்ளன என்பது விளங்கும். அப்படிப்பட்ட தனிச்சொற்கள் இரண்டு சேருவதே புணர்ச்சி என்றால், அந்தச் சொற்கள் தனித்து இயங்கக் கூடியவையாக இருக்க வேண்டும் என்று ஏற்பட்டு விடுகிறது; அதாவது புணர்ச்சிக்கு அடிப்படை வடிவங்களாகத் தேர்ந்தெக்கப் படுபவை தனித்து இயங்கும் கட்டிலா வடிவம் (Free form) ஆக இருக்க வேண்டும். அவை மொழியின் சொல்லமைப்புக்கு ஏற்ப (அதாவது எந்தச் சொல்லும் மெய்யெழுத்தில் துவங்கக்கூடாது என்பது போன்றது) இருக்க வேண்டும் என்ற நியதிகள் ஏற்பட்டுவிடுகின்றன. இதன் வன்மை - மென்மை அடுத்த இயலில் விளக்கப்படும்.

மொழியியலில் தனிச் சொல்லின் அல்லது உருபனின் மாற்று வடிவமாக அடிப்படை வடிவத்தைக் கொள்வதால், அது மாற்று வடிவங்களை எளிய முறையில் விளக்குவதற்குப் பயன்படக்கூடியதாக இருக்க வேண்டும்; எனவே அப்படிப்பட்ட வடிவம் கற்பித வடிவமாக - அதாவது ஓரிடத்திலும் வராத வடிவமாகவும், மொழி எழுத்தமைப்புக்கு

மாறுபட்டும் கூட இருக்கலாம் என்றும் கொள்வார்கள்[1] (ஹாக்கெட், 1958 : 282)

## 9.3 இரண்டுவகை மாற்றுருபு

சொல்லின் மாற்று வடிவங்களை ஒலிக் கட்டுப்பாடு உடைய மாற்றறுருபு, சொல்கட்டுப்பாடு உடைய மாற்றுருபு என்று இரண்டாக மொழியியலார் பிரிப்பார்கள் (ஹாக்கெட், 1958:281) என்று மேலே குறிப்பிடப்பட்டது.

இறந்தகால இடைநிலைகளை எடுத்துக் கொண்டால் த், ட், ற் ஆகிய மூன்றும் ஒலிக் கட்டுப்பாடுடையவையே. எனவே அவைகளைத் தகர இடைநிலையாகக் கருதலாம்.

**செய்தான், உண்டான், தின்றான்**

இங்கு ட், ற் என்ற இரண்டையும் தகரத்தின் மாற்று வடிவங்களாகக் கருதலாம்.

| | | |
|---|---|---|
| பெய்தது | : | பெய் + த் + அது |
| தேய்ந்தது | : | தேய் + ந்த் + அது |

என்ற சொற்களில் வினைச்சொல் இரண்டும் யகர மெய்யில் முடிந்தாலும், இரண்டு வேறு இறந்தகால விகுதிகள் இருப்பதால், த், ந்த் ஆகிய இரண்டும் சொல்கட்டுப்பாடு உடைய மாற்று உருபுகள்.

| | | |
|---|---|---|
| கொன்றது | : | கொல் + ன்ற் + அது |
| நீண்டது | : | நீள் + ண்ட் + அது |
| வாழ்ந்தது | : | வாழ் + ந்த் + அது |

இங்கு ன்ற், ண்ட், ந்த் என்ற மாற்று வடிவங்களை ஒலிக்கட்டுப்பாடு உடையதாகக் கருதலாம்.

| | | |
|---|---|---|
| மருண்டான் | : | மருள் + ண்ட் + ஆன் |
| அருளினான் | : | அருள் + இன் + ஆன் |

---

1 தொல்காப்பியரும் கற்பித அடிநிலைக் கிளவி கொண்டிருந்தாலும் அவர் வேறு காரணங்களால் அப்படிக் கொண்டுள்ளார் என்பது அடுத்த இயலில் விளக்கப்படும்.

என்ற சொற்களில் வரும் இரண்டு இறந்தகால விகுதிகளும் சொல் கட்டுப்பாடு உடைய மாற்றுருபுகள். இப்படித் தமிழில் இறந்தகால விகுதிகள் 1) ∞ த ~ ட ~ ற 2) ∞ ந்த் ~ ன்ற் ~ ண்ட் 3) ∞ இன் ~ இ என்று மூன்று சொல்கட்டுப்பாடு உடைய உருபுகளையும், அவை ஒவ்வொன்றும் சில ஒலிக் கட்டுப்பாடு உடைய மாற்று உருபுகளையும் கொண்டு அமைந்துள்ளன.

ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்றுருபுகளையே புணரியலில் விளக்குவார்கள்; சொல் கட்டுப்பாடு உடைய உருபுகளை வருணனை மொழியியலார் சொல்லியலில் விளக்குவார்கள்.

தமிழ் இலக்கண நூல்களில் இப்படிப்பட்ட வேறுபாடு நேரடியாகக் கூறப்படவில்லை. தொல்காப்பியர் வேற்றுமை உருபுகளின் மாற்று வடிவங்களை வருணிக்கும்போது அந்த உணர்வு காணப்படுகிறது (சண்முகம், 1972ஆ). ஆனால், அவர் பிற இடங்களில் அப்படிப்பட்ட வேறுபாட்டைப் போற்றவில்லை

நான்காம் வேற்றுமைக்கு -கு, -க்கு, -க, -க்க ஆகிய நான்கு மாற்று உருபுகளும், ஏழாம் வேற்றுமைக்கு -கண், -க்கண், மேல், கீழ், இடை போன்ற பல மாற்றுருபுகளும் உள்ளன. இவைகளில் -கு, -க்கு, -க்கண், -கண் ஆகியவற்றை எழுத்ததிகாரத்தில்

**வல்லெழுத்து முதலிய வேற்றமை யுருபிற்கு**
**ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.** (114)

என்று விளக்கியுள்ளார். ஆனால் -க்க, -க என்பன உறழ்ச்சியாக - அதுவும் செய்யுளில் வருவதால் அதைச் சொல்லதிகாரத்தில் விவரிக்கிறார். அதோடு,

**கு ஐ ஆன் என வரூஉம் இறுதி**
**அவ்வொடுஞ் சிவணும் செய்யு ளுள்ளே.** (592)

என்று பிற வேற்றுமை உருபுகளின் உறழ்ச்சியாக வரும் மாற்று வடிவத்தையும் சேர்த்துக் கூறியுள்ளார். ஆனால், எழுத்ததிகாரத்திலேயே சொல்கட்டுபாடுடைய வடிவங்களையும் உறழ்ச்சியான வடிவங்களையும் கூறியுள்ளார்.

**ழகார இறுதி ரகார இயற்றே.** (383)

என்று கூறிவிட்டுத் தாழ் என்ற சொல் கோல் என்ற சொல் முன்னர் அக்குச் சாரியை பெறும் என்று கூறுவது (384) சொல் கட்டுப்பாடு உடைய மாற்று வடிவத்தை விளக்குவதே ஆகும். அப்படியே உறழ்ச்சியாக வருவதையும் எழுத்ததிகாரத்தில் விவரித்தற்குப் பல உதாரணங்கள் கிடைக்கின்றன.

**பாழ்என் கிளவி மெல்லெழுத்து உறழ்வே.** (387)

உ.ம் பாழ்க்கிணறு ~ பாழ்ங்கிணறு

**பூஎன் ஒருபெயர் ஆயியல் பின்றே**
**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.** (268)

உ.ம் பூக்கொடி ~ பூங்கொடி

**ஊவென் ஒருபெயர் ஆவொடு சிவணும்.** (269)

உ.ம் ஊன்குறை

**அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே**
**தக்கவழி அறிதல் வழக்கத் தான.** (270)

உ.ம் ஊனக்குறை

ஆகவே, மொழியியலாளர்போலத் தொல்காப்பியர் ஒலிக்கட்டுப்பாடு உடைய மாற்று வடிவத்தை புணரியலிலும், சொல்கட்டுப்பாடு உடைய மாற்று வடிவத்தைச் சொல்லியலிலும் விளக்குகிறார் என்று கூற முடியாது. ஆயினும், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் மாற்று வடிவத்தை விளக்கும் முறைக்கும், வீரசோழியம், நன்னூல் போன்ற நூல்கள் விவரிக்கும் முறைக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறிய எல்லா மாற்று வடிவங்களையும், அவை முழுவதும் மாறிவரும் மாற்று வடிவங்களாக (Suppletive form) இருந்தால் கூட, அவைகளையும் எழுத்து மாற்றம் அடைவதாகவே விளக்கியுள்ளார். உதாரணமாக ஒன்பது என்ற பெயர் பத்து என்ற நிலை மொழியோடு சேர்ந்தால் நிலை மொழி தொண் என்றும், வருமொழி ஊறு என்றும் மாறுவதை ஒலி மாற்றமாகவே விளக்குகிறார்.

**ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
**ஒற்றிய தகரம் றகர மாகும்** (445)

ஒன்பது + பத்து
ஒன் + பஃது (438 ஆம் சூத்திரப்படி)

1) ஒகரம் தகரம் மெய்பெறும் - தொன்

2) னகரம் ணகரமாக மாறும் - தொண்

பஃது என்பது

1) ஆய்தம் கெடும் - பது

2) பகரம் கெடும் - து

3) ஊகாரம் வரும் - ஊது

4) தகர மெய் றகர மெய்யாய் மாறும் - ஊறு
தொண் + ஊறு > தொண்ணூறு

இப்படியேதான், ஒன்பது + நூறு என்ற வடிவத்தையும் தனித்தனி ஒலிமாற்றமாக விளக்குகிறார் (463). இன்னும் நும் என்ற வடிவமே நீயிர் என அல்வழிப் புணர்ச்சியில் வரும் என்பதையும்

1) உகரம் கெட்டு ஈகாரம் வரும் - நும் > நீம்

2) இகரம் இடையில் வரும் - நீஇம் > நீயிம்

3) இறுதிமெய் ரகரமாகும் - நீயிர்

என்று விளக்குகிறார் (326).

இப்படி எல்லா மாற்று வடிவங்களையும் எழுத்து மாற்றமாகவே கருதி, எழுத்திகாரத்தில் வருணித்துள்ளார். சொல்லதிகாரத்தில் மாற்று வடிவங்களைத் தொகுத்து மட்டுமே கூறியுள்ளார்.[2] ஆகவே எழுத்ததிகாரத்தில் சொல்லின் மாற்று வடிவங்களை எழுத்து மாற்றமாகப் புணர்ச்சி விதி மூலமும், சொல்லதிகாரத்தில் மாற்றுருபுகளை (ஒரு அடிப்படை வடிவத்திலிருந்து புணர்ச்சியால் மாறுபட்டதாகக் கருதாது) அப்படியே தொகுத்தும் கூறுகிறார். எனவே, இரண்டையும் தொல்காப்பியர் ஏதோ ஒருவகையில் வித்தியாசப்படுத்தி உள்ளார். ஆனால் அதை இன்றைய மொழியியல் வெளிச்சத்தில்

---

2 தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் மூன்று இடத்தில் மாற்று வடிவத்தை எழுத்து மாற்றமாக விளக்கியுள்ளார்.

ஆ ஓ ஆகும் பெயருமாருளவே (680)
பால்அறி மரபின் அம்மூ வீற்றும்
ஆஓ வாகும் செய்யு ளுள்ளே. (696)
ஆய்என் கிளவியும் அவற்றொடு கொள்ளும் (697)

ஆனால், அவை உறழ்ச்சியாக வருவன என்று ஒருவகைச் சமாதானம் கூறலாம். பொதுவாக வினை விகுதிகளையும் இடைச்சொல்லின் மாற்று வடிவங்களை (உம் ~ உந்து) சிலவற்றையும் சொல்லதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

பார்க்கும்போது எழுத்ததிகாரத்தில் கூறிய சில மாற்று வடிவங்களைச் (ஒன்பது-தொள்; பத்து-நூறு; நூறு-ஆயிரம்; நும்-நீயிர்) சொல்லதி காரத்திலும், சொல்லதிகாரத்தில் கூறிய சில மாற்றுருபுகளை (தன்மை விகுதி - தும், டும், றும் என்பனவற்றுள் தும் என்பதை அடி நிலைக் கிளவியாகக் கொணடு, டும், றும் என்பனவற்றை) எழுத்ததி காரத்தில் புணர்ச்சி மூலமும் விளக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ் இலக்கண உலகில் வேற்றுமை உருபுகளும் சாரியைகளும் வினைவிகுதிகளும் தனித்தனியே (முன்னது எழுத்ததி காரத்திலும் பின்னது சொல்லதிகாரத்திலும்) விளக்கப்படுவது இன்று வரை நீடித்து வருகிறது. அதனால்தான் அகநிலைச் சந்தி முழு நிலையில் வளரவில்லை. மொழியியல் அறிவு வளர்ந்த பிறகும் அதைப் புறக்கணித்து, அதற்கு நியாயம் தேடிக்கொண்டு திருப்தியோடு பலர் இருக்கிறார்கள்.

தொல்காப்பிய முறையைப் பின்பற்றி நேமிநாதமும் சுவாமிநாத மு:ம எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி விதிகளை எழுத்து மாற்றமாகவும், சொல்லதிகாரத்தில் மாற்றுருபுகளையும் தொகுத்து விவரித்துள்ளன.

வீரசோழியம் எழுத்ததிகாரத்திலேயே மாற்று வடிவங்களைத் தொகுத்துக் கூறியுள்ளது.

**ஒன்றுக் கொருவோர்; இருவீர் இரண்டுக்கு** (23.1)

என்று மாற்று வடிவங்களைப் புணர்ச்சி மூலம் விளக்காமல் தொகுத்துக் கொடுத்துள்ளது. இந்த முறை நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் ஆகியவற்றிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

**. . . . . . . . . . . . . . . . . .யான்யாம்**
**நீநீர் என்னெம் நின்நும் ஆம்பிற** (நன்.247:1-2)

**ஷை** (இ.வி. 154:1-2)

**நீயெனும் ஒருபெயர் நின்னெனத் திரியும்** (முத்து.வீ.213)

**யாம்எம் ஆகும் ஆயுங் காலே** (முத்து.வீ.223)

என ஒரு சொல்லின் மாற்றுருபுகளை அப்படியே எழுத்திலக்கணத்தில் கூறியுள்ளன. இதுபோலச் சொல்லதிகாரத்திலும் வினை விகுதியின் மாற்று வடிவங்களை அப்படியே தொகுத்துக் கூறியுள்ளன; அதாவது வீரசோழியம், நன்னூல், இலக்கண விளக்கம், முத்துவீரியம் முதலியன

எழுத்ததிகாரத்தில் மாற்று உருபுகளைக் கூறும் முறைக்கும் சொல்லதிகாரத்தில் கூறும் முறைகும் வித்தியாசம் எதுவும் இல்லை.

தொன்னூல்விளக்கம் ஏனைய மரபு இலக்கணத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. அவர் கருத்துப்படி எழுத்ததிகாரத்தில்,

**ணநமன லனதவும் நண்ணும் திரிபுஅலது**
**ஏனை திரியாது இயல்பாம்** (40.4,5)

என்ற ஒலிகளின் திரிபு மட்டும் அல்லாமல், அந்த ஒலிகளை இறுதியில் உடைய சொற்களின் மாற்று வடிவத்தையும் ய, ர, ழ ஆகியவற்றின் புணர்ச்சி மாறுபாட்டையும் (30) உயிரீற்றுச் சொற்களின் மாற்று வடிவங்களையும் (31, 32) தனிச்சொல்லின் மாற்று வடிவங்களையும் (34, 29) கூட எழுத்ததிகாரத்தில் விவரித்துள்ளனார். ஆனால், மூவிடப்பெயர் (68), எண்ணுப் பெயர் (94-97), அளவுப் பெயர் (98), திசைப்பெயர் (99), சுட்டுப்பெயர் (100-1) ஆகியவற்றின் மாற்று வடிவங்களும், அன்றி, இன்றி என்ற வினையெச்சங்களின் மாற்று வடிவங்களும் (126), ஆ, மா என்ற சொற்களின் மாற்று வடிவங்களும் சொல்லதிகாரத்தில் வருணிக்கப்பட்டுள்ளன. இவைகளில் சிலவற்றின் மாற்றுவடிவங்களைத் தொகுத்துக் கூறாமல், எழுத்து மாற்றங்களாகவே கூறியுள்ளார்.

**தொடர்அி உச்சுட் டெழுத்து என்ப**
**அவைவந்து அணைய அனைத்து மெய்இரட்டும்**
**உயிர்வரின் இருவவ் இடைவரல் உரித்தாம்**
**எகர வினாவும் இந்நடை உரித்தே** (101)

என்னும்போது சொல்லதிகாரத்தில் எழுத்து மாற்றமாகவே மாற்றுருபுகள் விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

எனவே, அந்த அடிப்படையில் வீரமாமுனிவர் சொல்லின் மாற்று வடிவங்களை எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் பிரித்துக் கூறியுள்ளார் என்பது ஆராய்ச்சிக்கு உரியதாக உள்ளது. சொல்லதிகாரத்தில் கூறிய மாற்று வடிவங்களில் பெரும்பான்மையும் சொற்களின் பொருள் அடிப்படையில் (எண்ணுப்பெயர், மூவிடப் பெயர், திசைப்பெயர்) தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. எனவே, இன்றைய வருணனை மொழியியலார் மேற்கொள்கிற ஒலியின் மாற்றமாக வராமல், ஒரு பொருட்

குடும்பத்தைச் சேர்ந்த சொற்களின் மாற்றுருபுகளை மட்டும் சொல்லதிகாரத்தில் கூற முற்பட்டுள்ளாரோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. ஆனால், அவர் அதை முழுமையாகச் செய்யவில்லை. ஏனெனில் ஆ, மா என்ற தனிச் சொற்களின் மாற்று வடிவங்கள்கூடச் சொல்லதிகாரத்தில் காணப்படுகின்றன. எப்படியாயினும் ஏனைய மரபு இலக்கணங்களின் முறையிலிருந்து சிறிது மாறுபட்ட முறையையே மேற்கொண்டிருப்பதும், அது வருணனை மொழியியல் முறையோடு ஒத்திருப்பதும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது.

## 9.4 புணர்ச்சியும் பிற இயலும்

எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி மாற்றத்தை எழுத்து அல்லது ஒலி மாற்றமாக விளக்கினாலும், அம்மாற்றத்தை விளக்குவதற்கு மொழி அமைப்பு பற்றிய முழு அறிவும் தேவைப்படும். புணரியல் எழுத்ததிகாரத்தில் கூறாக இருந்தாலும், நிலைமொழி - வருமொழிகளின் எழுத்தமைப்பு மட்டுமல்லாமல், அவைகளின் சொல்லிலக்கணம், அவைகளுக்குள்ள இலக்கண உறவு - அதாவது தொடரியல் உறவு முதலியனவற்றையும் அறிந்துகொண்ட பின்னரே புணர்ச்சியை விளக்க முடியும். இந்த முறையில் எல்லாத் தமிழ் இலக்கண நூல்களும் புணர்ச்சியைச் சொல்லியல், தொடரியல் ஆகியவற்றின் அடிப்படையில் விவரித்திருப்பது தனிச் சிறப்பு உடையது. ஏனெனில் மொழியியலில் வருணனை மொழியியலாளர் எழுத்ததிகார ஆராய்ச்சியில் பிற இலக்கணச் செய்திகளைப் புகுத்தக்கூடாது என்று வன்மையாக இருந்தனர்; மாற்றிலக்கண மொழியியல் வளர்ந்த பிறகே புணர்ச்சிக்கு மட்டுமின்றி, எழுத்தமைப்புக்கும் மொழியின் எல்லா அமைப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று விதந்து சொன்னார்கள். அதைத் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து கூறியதற்கு முக்கிய காரணம் சொல்லின் மாற்றுருபுகள். சேர்க்கையினால் - அதாவது புணர்ச்சியினால் வேறுபடுகின்றன என்று கொண்டதுதான். தொல்காப்பியர்,

> **உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
> **உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்**
> **மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
> **மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும்** (107. 1-4)

என்ற வரிகளில் மாற்றுருபுகள் 1) ஒலிக்கட்டுப்பாடு உடையனவாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும்,

பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும் (108.4-7)

என்ற வரிகளின் மூலம் நிலை - வருமொழிகளின் 2) சொல்வகையும் புணர்ச்சி மாற்றத்தை நிர்ணயிக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும் (112.1-2)

என்ற வரிகளில் நிலை மொழிக்கும் வருமொழிக்குமுள்ள 3) தொடரியல் உறவு - வேற்றுமைத் தொடர், அல்வழித்தொடர் என்று இரண வகையில் அமைந்து, புணர்ச்சி வேறுபாட்டிற்குக் காரணம் ஆகலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாடு | + | கன்று | - | உம்மைத்தொகை | - | மாடுகன்று |
| மாடு | + | கன்று | - | வேற்றுமைத்தொகை | - | மாட்டுக்கன்று |
| வீடு | + | வாசல் | - | உம்மைத்தொகை | - | வீடுவாசல் |
| வீடு | + | வாசல் | - | வேற்றுமைத்தொகை | - | வீட்டுவாசல் |
| அவன் | + | கண்டான் | - | எழுவாய் வேற்றுமை | - | அவன்கண்டான் |
| அவன் | + | கண்டான் | - | இரண்டாம் வேற்றுமை | - | அவற்கண்டான் |

தொல்காப்பியப் புணரியலைப் புரட்டினால், அவர் சொல்லின் எழுத்தமைப்பு, சொல்லின் பொருள் வேறுபாடு ஆகியனவற்றைக் கூடப் புணர்ச்சி மாறுபாட்டை விளக்க உதவுவதாகக் கொண்டுள்ளார் என்பது புலப்படுகிறது. இனி எல்லாவற்றிற்கும் உரிய உதாரணங்களைப் பார்ப்போம்.

கல் + ஐ > கல்லை
கால் + ஐ > காலை

இவைகளில் 4) சொல்லினுடைய எழுத்து அமைப்பு - முதல் சொல்லில் தனிக்குறிலை அடுத்த மெய்யும், (மெ கு மெ) இரண்டாவது சொல்லில் நெடிலை அடுத்த மெய்யும் (மெநெமெ) புணர்ச்சி வேறுபாட்டிற்குக் காரணமாகிறது. இங்கு நிலைமொழி ஈறும் வருமொழியும் ஒத்திருந்தும் புணர்ச்சி விதி மாறுபடுவதற்கு நிலைமொழியின் எழுத்தமைப்பு வேறுபாடே காரணம்.

கல் + நன்று > கன்னன்று
கால் + நன்று > கானன்று

என்ற உதாரணங்களும் எழுத்தமைப்புக்கு ஏற்பப் புணர்ச்சி வேறுபடும் என்பதைப் புலப்படுத்துகிறது. இதைத்தான் தொல்காப்பியர்,

**நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்**
**குறியதன் முன்னர் தன்னுரு இரட்டலும்**
**அறியத் தோன்றிய நெறியியல் என்ப** (160)

என்று விவரித்துள்ளார்.

5) சொல்லின் இலக்கணக்கூறும் புணர்ச்சியில் வித்தியாசத்தை ஏற்படுத்தும்.[3]

பெயர் + உருபு : ஆடு + ஐ > ஆட்டை
வினை + வினையெச்ச விகுதி : ஆடு + அ > ஆட

நிலைமொழியில் பெயரும் வினையும் இருப்பதற்கு ஏற்பப் புணர்ச்சியிலும் மாறுபட்டுவிட்டது.

இடைச்சொல் + உருபு : நடு + இல் > நடுவில்
வினை+வினையெச்ச விகுதி : நடு + இன் > நடின்

இதுவும் மேற்குறிப்பிட்ட சொல்லின் வேறுபட்ட இலக்கணக் கூறால் ஏற்பட்ட புணர்ச்சி மாறுபாடு ஆகும். அப்படியே இரண்டு சொற்களின் தொடர்நிலை உறவாலும் புணர்ச்சி வித்தியாசப்படுவது முன்னர் விளக்கப்பட்டது.

6) சொல்லின் பொருள் வேறுபாட்டிற்கு ஒப்பவும் புணர்ச்சி வேறுபடுவது உண்டு.

எகின் + கோடு - மரப்பெயர் - எகினங்கோடு
எகின் + கால் - பறவையின்பெயர் - எகினக்கால்

இதைத் தொல்காப்பியர்,

**எகின்மர மாயின் ஆண்மர இயற்றே.** (336)

---

3 சொல்லியல், தொடரியல் உறவு உதாரணங்கள் கோதண்டராமன் (1972: 64 - 66) கொடுத்தவை.

**ஏனை எகினே அகரம் வருமே**
**வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.** (337)

என்றும்,

**புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.** (244)

**ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.** (245)

புளி + கோடு - மரப்பெயர் - புளியங் கோடு
புளி + கூழ் - சுவைப்பெயர் - புளிங் கூழ்

என்றும் கூறுவதன் மூலம் அறியலாம்.

வீரசோழியம் தவிர ஏனைய இலக்கண நூல்கள் எல்லாம் தொல்காப்பியத்தை ஒட்டியே கூறியுள்ளன. நேமிநாதம் தொடர் நிலை உறவு பற்றி மட்டும் பேசவில்லை; புணர்ச்சியை விளக்கும் போது குறிப்பிடவும் இல்லை.

**மெய்யீ றுயிரீ றுயிர்முதன் மெய்ம்முதலா**
**எய்தும் பெயர்வினையும் இவ்வகையே-செய்தமைத்தாற்**
**றோன்றல் திரிதல் கெடுதலெனத் தூமொழியாய்**
**மூன்றென்ப சந்தி முடிபு** (12)

நன்னூலார் தொல்காப்பியத்தை ஒட்டி, எல்லா வித உறவும் புணர்ச்சிக்கும் உதவுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**மெய்யுயிர் முதலீ றாம்இரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளின் புணர்ந்துழி......... ..............** (151.1-3)

மேலும், சொல்லின் எழுத்தமைப்பை ஒட்டியும் சொற்பொருளை ஒட்டியும் மாறுபடுகின்றன புணர்ச்சியையும் விவரித்துள்ளார்.

**தனிக்குறின் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும்.** (205)
**சுவைப்புளி முன்னின் மென்மையும் தோன்றும்.** (175)

என்ற சூத்திரங்கள் அந்த உண்மையைக் காட்டும். இலக்கண விளக்கம் நன்னூல் பொதுச் சூத்திரத்தைத் திருத்தத்துடன் ஏற்றுக் கொண்டாலும் (இ.வி.53) அதே முறையைப் பின்பற்றியுள்ளது.

முத்துவீரியம் சொல்லின் இலக்கணக்கூறு பற்றிப் பேசாமல் தொடரியல் உறவு பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளது. தொன்னூல் விளக்கத்தில் புணர்ச்சியின் பொது இலக்கணம் விளக்கப்படாமல், தொடர்நிலை உறவு மட்டுமே விளக்கப்பட்டுள்ளது. சுவாமிநாதம் தொடர்நிலை உறவைக் கூறவில்லை. இது நேமிநாதத்தை ஒத்துள்ளது.

ஆகவே, வீரசோழியம் தவிர ஏனைய இலக்கணங்கள் புணர்ச்சிக்கு நிலைமொழி வருமொழிகளின் எழுத்துச் சேர்க்கை மட்டும் அல்லாமல் எழுத்தமைப்பு, சொல்லிலக்கணம், தொடரியல் உறவு, சொற்பொருள் ஆகிய எல்லாமோ அல்லது ஒரு சிலவோ தேவைப்படும் என்பதை ஒப்புக்கொண்டுள்ளன. எனவே, புணரியலை விவரிக்க மொழி அமைப்பின் முழு அறிவும் வேண்டும் என்பதே அந்த நூல்களின் கோட்பாடு என்று கொள்ளலாம். இது இன்றைய மாற்றிலக்கண மொழியியலை ஒட்டிய எழுத்திலக்கண ஆய்வின் போக்கை ஒட்டியது.

வீரசோழியம் மட்டும் நிலைமொழி - வருமொழி எழுத்துச் சேர்க்கை மட்டுமே புணரியலை விளக்கப் போதுமானது என்று விவரித்துள்ளது. மேலும்,

> **நின்றசொல்லீறும் வருஞ்சொன் முதலும் நிரவித்தம்முன்**
> **ஒன்றிடும் போதும் ...... ....... ........ ........ ........**
> **மும்மை விகாரம்வந் தெய்திடும்............ ............** (9.1-3)

என்று கூறுவதால், புணரியல் எழுத்திலக்கணத்தின் கூறானதால், அதை எழுத்திலக்கணத்தை ஒட்டி மட்டுமே வருணிக்க வேண்டும் என்ற கருதியிருக்கலாம். சூத்திரங்களை கவனமாகப் பார்க்கும்போது அசைநிலை, இலக்கணக்கூறு ஆகிய இரண்டும் புணர்ச்சி மாற்றத்தை விளக்க வீரசோழியம் பயன்படுத்தியதைக் காணமுடிகிறது.

அசைநிலை : **தனி நெடிற்பின் பண்ணியவொற்றுப் பின்** (16.2)
இலக்கணக் கூறு : **கூறிய சுட்டின்பின் ஆய்தமும் கூடும்** (26.1)

# 10. அடிநிலைக் கிளவி

## 10.0 முன்னுரை

பதவியலில் சொற்களைப் பகுக்கும் முறை ஓரளவு சுட்டிக் காட்டப்பட்டது. போன இயலில் அப்படிப் பகுக்கப்பட்ட உறுப்புகளைப் பொருள் ஒற்றுமையும், வடிவத்தில் ஒற்றுமையும் வேற்றுமையும் இருப்பனவற்றை ஒரு சொல்லின் மாற்றுருபுகளாகத் தொகுத்துக் கூறும் (அதாவது தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் காணப்படுவது) முறையும்; ஒரு சொல்லின் பல மாற்றுருபுகளை ஒரு அடிப்படை வடிவத்தின் மாற்று வடிவங்களாகப் புணர்ச்சி விதி மூலம் கூறும் முறையும் (எழுத்ததிகாரத்தில் காணப்படுவது) ஆக இரண்டு முறையில் விளக்கம் என்று கூறப்பட்டது. இந்த இரண்டாவது முறையில் விளக்கம் ஒரு சொல்லின் பல மாற்று வடிவங்களை விளக்குவதற்குத் தேர்ந்தெடுக்கும் ஒரு பொது வடிவமே அடிநிலைக் கிளவி (Base form) என்று இங்குக் குறிக்கப்படுகிறது. தமிழ் இலக்கண நூல்கள் அடிநிலைக் கிளவி பற்றி நேரடியாக விவாதிக்காவிட்டாலும், அவை-நிலைமொழி, வருமொழி என்று அமைத்துக்கொண்ட முறையிலிருந்து அடிநிலைக் கிளவியை அமைக்கும் முறை பற்றியும், ஒரு குறிப்பிட்ட வடிவத்தை அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றியும் அறிந்து கொள்ளமுடிகிறது. மேலும், புணர்ச்சியை விளக்கும் முறையிலிருந்தும் அடிநிலைக் கிளவியின் தன்மை பற்றியும் நாம் உய்த்துணர்ந்து கொள்ளமுடிகிறது. எனவே, இந்த இயலில் (1) அடிநிலைக் கிளவியின் பண்பு, (2) அவைகளைத் தேர்ந்தெடுக்கும் பொது முறை, (3) குறிப்பிட்ட வடிவங்களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள கோட்பாடுகள் ஆகியவை விளக்கப்படும்.

## 10.1 அடிநிலைக் கிளவி – தேர்ந்தெடுக்கும் பொதுமுறை

தொல்காப்பியத்தில் இரண்டு முறையில் அடிநிலைக் கிளவி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. (1) ஒரு சொல்லின் பல மாற்று வடிவங்களில் ஒன்றை அடிநிலைக் கிளவியாகக் கொள்ளுதல். மரம், மரஞ்-, மரந்-, மரங்-, மர-, மரக்-, மரப்-, மரச்-, மரத்- போன்ற பல

மாற்றுருபுகளில் மரம் என்ற ஒன்றைத் தேர்ந்தெடுத்தல். -கு, -க்கு, -க்க, -க என்ற நான்காம் வேற்றுமை விகுதியின் மாற்றுருபுகளில் -கு என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொள்ளுதல் ஆகியவை இந்த முறையில் அடங்கும். (2) ஒரு வடிவம் இருந்தாலோ பல மாற்று வடிவங்கள் இருந்தாலோ அவைகளில் ஒன்றையும் அடிநிலைக் கிளவியாகக் கொள்ளாமல், கற்பிதமாக ஒன்றை-வேறொரு புதிய வடிவத்தைக் கொள்வது. இதை மொழியியலாளர் Theoretical base form என்றும் (Hockett, 1958 : 282) Hypothetical base form (Anderson, 1944:25) என்றும் குறிப்பிடுகிறார்கள். தமிழில் இதைக் கற்பித அடிநிலைக் கிளவி என்று அழைக்கலாம். தொல்காப்பியர் -க்கு என்ற ஒரு வடிவம் ஆடிக்கு (ஆடி+க்கு) உடையதை -இக்கு என்பதன் மாற்று வடிவமாகக் கருதுவது (தொல்காப்பியம், 126, 127) கற்பித அடிநிலைக் கிளவியாகக் கருதப்படும். அப்படியே **அக்-** என்ற வடிவத்தை குன்று+குடி > குன்றக்குடி குன்று+அக்+குடி > (குன்று+அக்கு+குடி) **அக்கு** என்பதன் மாற்று வடிமாகக் கொண்டு புணர்ச்சி விதி கூறுவதும் (தொல் 128) கற்பித வடிவமே யாகும்.

தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியத்தில் மிகுதியாகவும் நன்னூலில் குறைவாகவும் கற்பித அடிநிலைக் கிளவி அமைக்கப் பட்டிருக்கின்றன. நன்னூலார் செம்மை, சிறுமை போன்றவற்றைப் பண்பு பகாப்பதங்களாகக் குறிப்பிடுவது (135) கற்பித அடிப்படை வடிவமாகவே கருதப்படவேண்டும். ஏனெனில் செம்-, சிறு- என்ற மாற்று வடிவங்களே மொழியில் வழங்குகின்றன. செம்மை என்பது எங்கும் பண்படிச் சொல்லாக வழங்கவில்லை. ஏனைய இலக்கண நூல்களில் முதல் முறை (மாற்று வடிவங்களில் ஒன்றை அடிநிலைக் கிளவியாகக் கொள்ளும் முறை) மட்டுமே கையாளப்பட்டுள்ளது.

## 10.2 அடிநிலைக் கிளவியின் பண்பு

அடிநிலைக் கிளவி சூக்கும வடிவமாகக் (Abstract form) கருதப்படுவது; பரு வடிவமாகக் (Concrete form) கொள்ளப்படுவ தில்லை. ஏனெனில், அடிநிலைக் கிளவி என்பது இலக்கண ஆசிரியன் ஒரு சொல்லின் மாற்று வடிவங்களை விளக்குவதற்காகப் படைத்துக் கொள்ளும் ஒரு வடிவந்தான். தமிழ் இலக்கண ஆசிரியர்களும் அடிநிலைக் கிளவியைச் சூக்கும வடிவமாகக் கருதியிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு சான்று இருக்கிறது. அவர்களில் பெரும்பாலனவர்கள் புணர்ச்சி மாற்றத்தைத் திரிபு-இயல்பு (தொல். 109:8), விகாரம்-இயல்பு

(வீ.சோ. 9:2-3; நன் 154; இ.வி. 53:4; மு.வி. 4:1) என்று குறிப்பிடுகிறார்கள். இயல்பு என்பதை ஒரு புணர்ச்சி என்றால், அடிநிலைக் கிளவி மாற்றம் இல்லாமல் இருப்பதையே குறிக்கிறது. ஏனெனில், அடிநிலைக் கிளவி சூக்கும வடிவமாக இருப்பதால், பருவடிவமாக மாறியே பேச்சு வழக்கில் பயன்படவேண்டும். அதனால்தான் இயல்பு புணர்ச்சி (மாறாமல் இருப்பது) என்று ஒரு வகையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதனுடைய ஒரு பயன்; மாற்று வடிவங்களில் ஒன்றை அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுக்கும்போது, அந்த அடிநிலைக் கிளவியும் மாற்று வடிவங்களில் ஒன்றாக இருக்கும். உதாரணமாக, மரம், மரஞ்-, மர-, மர- போன்ற மாற்று வடிவங்களுக்கு மரம் என்பதை அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுத்தால், அதுவும் ஒரு மாற்று வடிவமாக இருக்கக் காணலாம். உருபனைக் குறிக்க { } என்ற அடைப்புக் குறியும், மாற்று வடிவத்தைக் குறிக்க / / என்ற அடைப்புக் குறியும் மொழியியலில் பயன்படுத்துவார்கள்.

{மரம்} /மரம்-/, /மரஞ்-/, /மரங்-/, /மர-/.

ஏனெனில், {மரம்} என்பது சூக்கும வடிவம்; பரு வடிவத்தில் எல்லா வடிவங்களையும் குறிக்க வேண்டுமாதலால், அந்த வடிவமும் ஒரு மாற்று வடிவம் ஆகிறது. கற்பித அடிநிலைக் கிளவியில் இந்தப் பிரச்சனை இல்லை. ஏனெனில் சூக்கும வடிவமாகக் கொள்ளப் படுவது அப்படியே மொழியில் வழங்காது.

## 10.3 அடிநிலைக் கிளவித் தேர்வு : சிறப்பு முறை

மாற்று வடிவங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தாலும், கற்பித வடிவத்தைத் தேர்ந்தெடுத்தாலும் ஒரு பொதுக் கோட்பாட்டு அடிப் படையையே பின்பற்ற வேண்டும். அப்படி நமது இலக்கண ஆசிரியர்கள் பின்பற்றிய கோட்பாடுகளைப் பார்ப்போம்.

### 10.3.1 தொல்காப்பியம்

மேலே குறிப்பிட்டபடித் தொல்காப்பியர் மாற்று வடிவங்களில் ஒன்றையும், கற்பித வடிவத்தையும் அடிநிலைக்கிளவியாகக் கொண் டுள்ளார். அங்கு அவர் ஐந்து கோட்பாடுகளை மனதில் கொண்டிருக் கலாம் என்று கருதவேண்டியிருக்கிறது. அவைகளில் கட்டிலா வடி வமாக வரும் பெயர்-வினைச் சொற்களைப் பொறுத்தவரையில் சில கொள்கைகளையும், கட்டுண்ட வடிவமாக வரும் வேற்றுமை உருபு, சாரியை போன்றவற்றில் வேறு சில கோட்பாடுகளையும் கொண்டுள்ளார்.

1) கட்டிலா வடிவமாக வரும் பெயர் - வினைப் பகுதிகளில் சுயேச்சையாக வருவதை அல்லது தனிச் சொல்லாக வருவதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டது. இதுவே பெரும்பான்மையான இடங்களில் பின்பற்றப்பட்டிருக்கிறது. மேலே காட்டிய மரம், மரஞ்-, மரந்-, மர- போன்ற மாற்று வடிவங்களில் மரம் என்பது சுயேச்சையான வடிவமாகவும், தனிக் கிளவியாக வரும்போது பயன்படும் வடிவமாகவும் இருப்பதால், அதுவே அடிநிலைக் கிளவியாக அமைத்துக்கொள்ளப்பட்டது.

எண்ணுப்பெயர்களில் ஒன்று போன்றவை ஒரு, ஓர், ஒவ் எனப் பல மாற்று வடிவங்களைப் பெற்றிருந்தும், சுயேச்சையாகவும் தனிக் கிளவியாகவும் வருகிற ஒன்று என்பதே அடிநிலைக்கிளவியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பசுவைக் குறிக்கும் ஆ, ஆன் என்ற இரண்டு மாற்று வடிவங்களில் ஆன் என்பது பிற சொற்களோடு வரும்போது மட்டுமே வருகிறது.

| | |
|---|---|
| ஆனியற் பார்ப்பன மாக்கள் | (புறம். 9.1) |
| ஆனினம் | (புறம். 138.1) |
| ஆன் நிரை | (புறம். 260.18) |
| ஆன் முலை | (புறம். 34.1) |

ஆனால், தனிச் சொல்லாக வரும்போது ஆ என்ற வடிவமே உள்ளதால், அதுவே அடிநிலைக் கிளவியாக கருதப்படுகிறது.

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன**
**அகரம் வல்லெழுத்து அவைஅவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்** (231)

என்று னகர மெய் பெறுதல் புணர்ச்சி மாற்றமாக விளக்கப்பட்டுள்ளது.

இதே காரணத்தினால்தான் நாடுரி என்ற சொல்லில் வரும் நாட்- என்பதை நாழி (+உரி) என்ற சுயேச்சை வடிவத்திலிருந்தும் (240), உள்- என்ற கட்டுண்ட மாற்று வடிவத்தை உண்டு என்ற கட்டிலா முழுச்சொல்லிருந்தும் (430) தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

2) ஒரு சொல்லுக்கு வரலாற்று மாற்றம் காரணமாக இரண்டு சுயேச்சை வடிவங்கள் அமைந்திருந்தால் பயிற்சி அதிகம் இருக்கிற

அல்லது தன்னுடைய காலத்தில் அதிகமாக வழங்குகிற வடிவத்தையே அடிநிலைக்கிளவியாகக் கொள்வது.

ஒன்பது என்ற எண்ணுப்பெயருக்குத் தொண்டு என்ற மற்றொரு கட்டிலா வடிவமும் உண்டு. தொல்காப்பியரும் அந்தச் சொல்லை ஒருமுறை பயன்படுத்தியுள்ளார். ('தொண்டு தலையிட்ட' தொல். 1358.3). சங்க இலக்கியத்திலும் இரண்டு தடவை (மலைபடு. 21; பரிபா. 3:79) வந்துள்ளது. ஆனால் ஒன்பது என்ற வடிவமே தொல்காப்பியர் காலத்திலும் சங்க இலக்கியத்திலும் வழக்குப் பயிற்சி உடையதாக உள்ளது (சண்முகம், 1966:732). பாண்டிச்சேரி பிரஞ்சுக் கழகம் வெளியிட்டுள்ள சங்க இலக்கியச் சொற்களஞ்சியத்தில் ஒன்பது என்பது பதினாறு தடவைக்கு மேல் வந்துள்ளதைக் காணலாம். இதுவும், ஒன்பது என்ற வடிவமே அக்காலத்தில் அதிகமாக வழங்கியிருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. ஆகவேதான், தொல்காப்பியர் தொண்ணூறு, தொள்ளாயிரம் போன்ற வடிவங்களைத் தொள் - என்ற நிலை மொழியின் அடிநிலைக் கிளவியாகக் கொண்டு எளிதாக விளக்க முற்படாமல், ஒன்பது என்ற வடிவத்திலிருந்து மிகவும் சிரமப்பட்டு விளக்கியுள்ளார். அடிநிலைக் கிளவி என்பது அன்றைய மக்கள் சுயேச்சையாகப் பயன்படுத்தும் வடிவத்திலிருந்து, அதன் பிற மாற்று வடிவங்களை விளக்கவேண்டும் என்ற கருத்தில்தான் தொல்காப்பியர் ஒன்பதை அடி நிலைக் கிளவியாகக் கொண்டிருக்கவேண்டும். இது மொழியின் அமைப்பை வருணிக்கும்போது வரலாற்று உணர்வுக்கு இடம் கொடுக்காமல், 'பொதுமக்கள் பெரும்பான்மையாக வழங்கும் வடிவத்தையே அடிநிலைக் கிளவியாகக் கொள்ளவேண்டும்; மக்களுக்கு இலக்கணம் புதிராக இருக்கக்கூடாது' என்று தொல்காப்பியர் கருதியிருக்க வேண்டும் என்பதையே வெளிப்படுத்துகிறது.[1]

3) இன்னொரு சொல்லில், வரலாற்றுப் பழமை இல்லாவிட்டாலும், பயிற்சி அதிகம் இல்லாததாகவும் (Token frequencey என்று சொல்லப்படுவது) கருதப்படும் சுயேச்சை (கட்டில்லாத) வடிவத்தை விட்டுவிட்டுப் பயிற்சி அதிகம் உடைய கட்டுண்ட வடிவமே அடிநிலைக் கிளவியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

---

1 'The occurrence of *tontu* is so rare in Old Tamil and that explains why Tolkappiyar did not care to take this as the base for the numberal nine', என்று குமாரசுவாமி ராஜாவும் (1970:173) குறிப்பிட்டுள்ளார்.

இங்கு சுயேச்சை வடிவமா? கட்டுண்ட வடிவமா? என்று பார்க்காமல் பயிற்சி அதிகமாக இருக்கும் கட்டுண்ட வடிவமே அடிநிலைக்கிளவி என்ற கோட்பாட்டைப் பின்பற்றி அடிப்படை வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னிலைப் பன்மை வடிவங்களாக நீயிர், நும் என்ற இரண்டும் உள்ளன; அவற்றில் நீயிர் என்பதே சுயேச்சையாக, தனிக் கிளவியாக வரும் வடிவம்; நும் என்பது கட்டுண்ட வடிவம்; வேற்றுமை உருபுகளோடும் (நும்மை, நுமக்கு), பிற பெயர்களோடும் (நுங்கை, நும் பெயர்) பிற விகுதிகளோடும் (நுமள், நுமண், நுமர்) சேர்ந்து வருவது. இங்குத் தொல்காப்பியர் நும் என்பதையே அடிநிலைக் கிளவியாகக் கொண்டுள்ளார் என்பதைக் கீழ்க்கண்ட சூத்திரங்களால் அறிந்து கொள்ளலாம்.

**நும்என் ஒருபெயர் மெல்லெழுத்து மிகுமே.** (325)

**அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வயின் ஈவர**
**இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்.** (326)

அவர் காலத்தில் பேச்சு வழக்கில் நீயிர் என்ற வடிவத்தை அதிகமாக உபயோகப்படுத்தியிருக்கமாட்டார்கள் என்றே கருத வேண்டியிருக்கிறது. சங்க இலக்கியம் உரையாடல் முறையில் - நாடகப் பாணியில் (Dramatic monologue) அமைந்தது என்பார் மீனாட்சிசுந்தரன் (1965 இ:22). அவ்வாறு படைக்கப்பட்டிருந்தும் இலக்கிய வழக்கில் நீயிர் என்பது குறைவாகவும் நும் என்பது அதிகமாகவும் வந்துள்ளன. பாண்டிச்சேரி சங்க இலக்கியச் சொற்களஞ்சியத்தின்படி நீயிர் என்பது பன்னிரண்டு தடவையும் நும் என்பது மட்டும் (அதாவது வேற்றுமை ஏற்காமல் வருகிற வடிவம்) நூற்று இருப்பத்தாறு முறையும் வந்துள்ளன. இது அந்தகாலப் பேச்சு மொழியின் பயிற்சியைக் காட்டுவதாகக் கொள்ளலாம். ஆகவேதான், தொல்காப்பியர் நும் என்பதே பயிற்சி அதிகம் உடையது என்பதற்காக, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதை அடிநிலைக் கிளவியாகக்கொண்டு, சுயேச்சையாக வரும் வடிவத்தைப் புணர்ச்சி மூலம் பெறப்படுவதாக விளக்கிவிட்டார். இங்குச் சுயேச்சையாக வரும் வடிவம், பயிற்சி அதிகம் உடைய வடிவம் என்ற இரண்டு

கோட்பாடுகளில் பயிற்சி அதிகம் உடைய வடிவமே அடிநிலைக் கிளவி என்ற கோட்பாடே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது.

வேணவா என்ற தொடருக்கு வேட்கை என்பதையே நிலை மொழியின் அடிநிலைக் கிளவியாகக் கொண்டு புணர்ச்சி மாற்றம் விளக்கப்பட்டுள்ளது.

**செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**
**ஐஎன் இறுதி அவாமுன் வரினே**
**மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்**
**டகாரம் ணகார மாதல் வேண்டும்** (288)

இங்குச் செய்யுளில் வேணவா என்று வழங்குவதாகக் குறிப்பிடுவதால், அது முற்காலத்தில் பெயரடை + பெயர் என்ற முறை அதிகமாகப் பயிலப்பட்டுத் தன்னுடைய காலத்தில் அந்தத் தொடர் மட்டுமே பயின்று வந்திருக்கவேண்டும. எனவேதான் தன்னுடைய காலத்தின் மொழி வழக்கை ஒட்டித் தொல்காப்பியர் வேட்கை என்ற கட்டிலா வடிவத்தை அடிநிலைக் கிளவியாகக் கருதியிருக்கவேண்டும். இதனால், தான் காலத்தில் அதிகமாகப் பயின்று வருகிற வடிவங்களையே அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுத்துள்ளார் எனக் கொள்ளலாம்.[2]

இதுவரையிலும் கட்டில்லாமல் வழங்கும் பெயர் வினைகளில் அடிநிலைக் கிளவி அமைக்கும் முறையைப் பார்த்தோம். இனி, கட்டுண்ட வடிவமாகவே வரும் சாரியை, வேற்றுமை உருபு முதலிய வற்றில் அடிநிலைக்கிளவியை எப்படி அமைத்துள்ளார்? என்பதைக் காணவேண்டும். இங்கு உருபனே கட்டுண்ட வடிவமாக இருப்பதால், சுயேச்சையாக வருவதே அடிநிலைக் கிளவி என்ற கோட்பாட்டிற்கே இடம் இல்லை.

4) கட்டுண்ட உருபனைக் பொறுத்தவரையில் அடிநிலைக் கிளவி, சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்து இலக்கண

---

2 இன்று செந்தாமரை, செங்கல் என்ற சொற்களில் மட்டுமே செம்-என்ற பெயரடை வடிவத்தில் கையாளுகிறோம். ஏனைய இடங்களில் சிவப்பு, சிவந்த என்ற முழுச்சொல்லையே அடையாகப் பயன்படுத்துகிறோம். அதுபோல வேணவா என்பது அருகிய வழக்காக-மரபு வழக்காக (Archaic usage) அவர் காலத்தில் பயின்றிருக்கவேண்டும்.

அமைப்புக்கு ஒத்ததாக இருக்கவேண்டும் என்ற கோட்பாடு (குமாரசுவாமி ராஜா, 1972:343)[3] கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நான்காம் வேற்றுமைக்கு -க்கு, -கு என்ற ஒலிக் கட்டுப்பாடு உடைய வடிவமும், ஏழாம் வேற்றுமைக்கு -கண், -க்கண் என்ற ஒலிக் கட்டுப்பாடு உடைய வடிவமும் இருக்கின்றன. அவைகளில் முறையே -கு, -கண் என்ற வடிவங்களையே அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் -க்கு, -க்கண் ஆகியவற்றில் சொல்லுக்கு முதலில் தனிமெய் வருவதே ஆகும்.[4] அப்படியே அத்து (377), -த்து (125) என்ற மாற்று வடிவங்களை உடைய சாரியைக்கு அத்து என்பதே அடிநிலைக் கிளவியாகக் கொள்ளப்பட்டதற்கு, அது (-த்து) தமிழ்மொழி எழுத்திலக்கண அமைப்புக்கு மாறுபட்டு இருக்கக் கூடாது என்பதுதான் காரணம்.

5) அடிநிலைக்கிளவி மொழியின் எழுத்தமைப்புக்கு மாறுபட்டு இருக்கக் கூடாது என்பதோடு, அவை ஒவ்வொன்றும் தனித்துவம் கொண்டதாக இருக்கவேண்டும் என்ற கருத்தே, கட்டுண்ட உருபன்கள், சாரியைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், கற்பித அடிநிலைக் கிளவி அமைக்கத் தூண்டியிருக்கவேண்டும் என்று நினைக்கத் தோன்றுகிறது. அதாவது, சாரியைகள் வேற்றுமை உருபோடு வடிவம் ஒத்திருக்கக்கூடாது என்பதற்காகவே கற்பித வடிவத்தைத் தொல்காப்பியர் அமைத்துக் கொண்டுள்ளார்; தனித்துவக் கோட்பாட்டில் இருந்த பிடிப்பாலேயே, இலக்கண விதி அதிகமாகப் போனாலும் பரவாயில்லை என்று தொல்காப்பியர் நினைத்திருக்க வேண்டும்.

தொல்காப்பியர் கூறிய இக்குச் சாரியை எங்கும் இகரம் கெட்டு, -க்கு என்றே வந்திருக்கிறது. அதானால்தான் தொல்காப்பியர்,

---

3 It should be remembered here that Tolkappiyar never posit a case ending or an increment which goes against the laws of phonotactics.
Kumaraswami Raja, 1972 : 343

4 சொல்லதிகாரத்தில் 'னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்' (தொல். 488) என்று விவரிக்கும்போது இந்த முறை மாறியுள்ளது. ஒருகால் -அன், -ஆன் என்று வினையியலில் கூறுவதைப் பொதுமைப்படுத்திக் கூறியதாயிருக்கலாம்; னகரம் மட்டுமே அங்கு ஆண்பாலினைக் குறிக்கவில்லை என்றும் கருதியிருக்கவேண்டும்.

**திங்கள் முன்வரின் இக்கே சாரியை** (248)
**திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன.** (286)

என்ற சூத்திரங்களில் இகர, ஐகார ஈற்றுத் திங்கட் பெயர் இக்குச் சாரியை பெற்று வரும் என்று விதித்து,

**இக்கின் இகரம் இகரமுனை அற்றே.** (126)
**ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.** (127)

என்ற சூத்திரங்களால் இகரம் கெடுவதற்கு விதியும் அமைத்துள்ளார்.

உ-ம். ஆடிக்குக் கொண்டான்
சித்திரைக்குக் கொண்டான்

இங்கு -கு என்ற உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை என்பார் இஸ்ரேல் (1973:128).[5] இது சாரியைக்கும் பொருள் உண்டு என்ற கருத்து அடிப்படையில் எழுந்தது. அதுபற்றிப் பன்னிரண்டாவது இயலில் விளக்கப்படும். இங்கு ஏன் இக்கு என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டார்? என்ற கேள்விக்கு மட்டும் விடைகாண முயலுவோம். இக்கு என்பது பிழைபடப் பிரித்தலால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று இஸ்ரேல் (ஷை) கருதுகிறார்.[6] அப்படியானால் தொல்காப்பியர் இகரம் கெடுவதற்கு விதி அமைத்திருக்கமாட்டார். ஆகவே, வேறு காரணமே கண்டுபிடிக்க முயலவேண்டும்.

அ) ஒவ்வொரு அடிநிலைக் கிளவியும் தனித்துவம் உடையதாக இருக்கவேண்டும்.[7]

---

5 None can deny the fact that in the above instance of its occurence -*ku* gives the locative signification.
Israel, 1973 : 128

6 From this it can be inferred that the ancient grammarians might have wrongly segmented the final phoneme -*i* of the base as part of *ca:riyai*.
Israel, 1973 : 128

7 One must determine the underlying form of each morphemes and the rules needed to derive all of that morpheme's variant from its *unique underlying representations*.
Schane, 1973 : 75
என்ற மொழியியலாளரின் கருத்து இங்குச் சுட்டிக்காட்டத்தகுந்தது.

ஆ) நான்காம் வேற்றுமை உருபாகக் கருதி மயங்கக்கூடாது என்ற இரண்டு காரணங்களால்தான் தொல்காப்பியர் கற்பித அடிநிலைக்கிளவி படைத்திருக்க வேண்டும்.

தொல்காப்பியர் எல்லாக் கற்பித அடிநிலைக் கிளவிகளையும் சாரியைக்கு மட்டுமே கொண்டுள்ளார். ஏனெனில், சாரியையைப் பொருள் உடைய வேறு சொல்லிலிருந்தோ உருபிலிருந்தோ வேறு படுத்திக் காட்டவேண்டும் என்ற எண்ணமே அதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அக்குச் சாரியை ஏன் அமைக்க வேண்டும்? என்ற கேள்வியும் ஆய்வுலகில் எழும்பியுள்ளது (இஸ்ரேல் (1973 : 127). இதை அகரமாகக் கொள்ளலாம் என்றும், தொல்காப்பியர் ஏன் அக்கு என்று கொண்டார்? என்பது தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.[8] அதே சமயத்தில் அக்கு என்ற சாரியையை அ? (? -glottal stop அல்லது விட்டிசைக் குறி) என்று கொள்ள வேண்டும் என்றும், வல்லெழுத்து சொல்லுக்கு இறுதியில் வராததால் அக்கு என்று கொண்டார் என்றும் குமாரசுவாமிராஜா விளக்கி விட்டு (1972:348), வேறு சில சொற்களில் அக்கு என்ற சாரியை ஏன் அமைக்கவில்லை? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.[9] இதுபற்றி அடுத்த இயலில் விளக்கப்படும். அக்கு என்று கொண்டது, அடிநிலைக் கிளவி தனித்துவம் உடையதாக இருக்கவேண்டும், என்ற கொள்கையை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம்.

வற்றுச் சாரியையும் ஆராய்ச்சி உலகில் விவாதத்திற்கு உரிய தாகவே உள்ளது. அதன் உண்மையான வடிவம் அற்று என்று பலரும்

---

8 Thus according to his the real form of the *ca:riyai* in its actual occurrences is *-a-* and not *-akku-*. Elsewhere Tolka:ppiyana:r describes *-a-* as a flexioanl incremaent. It is not known why he takes *-akku-* as a form of *ca:riyai,* occurring in some instances.
Israel, 1973:127

9 It is better to asume that Tholkappiyar's *akku* was merely the vowel a followed by ? (a glottol stop). The glottal stop in this case will stand for the corresponding plosive when another plosive follows and will be realised as nothing when a non-plosive follows. Since no plosive can end an expression in Tamil and since ? is a plosive, we would assume that Tolkappiyar added an *u* to the sequence *a?.
Kumaraswami Raja, 1972 : 143.

(ராமஸ்வாமி ஐயர் 1937:38, 100; மீனாட்சிசுந்தரன், 1959 : 128; இஸ்ரேல் 1973 : 122; கந்தசாமி 1977 : 120) கொண்டுள்ளார்கள். தமிழில் அத்தன்மைத்து என்ற பொருளில் அற்று என்ற சொல் வழங்குகிறது; தொல்காப்பியரும் அதைப் பயன்படுத்தியுள்ளார்.

**எகர ஒகரத் தியற்கையும் அற்றே.** (16)

என்ற சூத்திரம் இதற்குச் சான்று. எனவே பொருளுடைய அந்தச் சொல்லிலிருந்து பிரித்துக்காட்ட வற்று என்ற கற்பித வடிவத்தை அமைத்திருக்கலாம்.

### 10.3.2 வீரசோழியம்

வீரசோழியம், நேமிநாதம் ஆகியவை சுயேச்சையாக வரும் வடிவங்களையே அடிநிலைக் கிளவியாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு நூலில் பல சான்றுகள் உள்ளன (23). ஆனால், வீரசோழியம் சொல்லதிகாரத்தில் உன், என், தம் ஆகியன வேற்றுமை விகுதி சேரும்போது (அவர் கருத்துப்படி எழுவாய் வேற்றுமைக்கு சு என்ற விகுதி (33) உண்டு) முதல் வேற்றுமைக்குரிய விகுதி சேர்ந்தால் முறையே நீ, நான், தான் என்று திரிகிறது.

**உன்னுமென் னுந்தன்னும் யாவுமவ் வும்மிவ்வு முவ்வுமெவ்வு**
**மென் மிவற்றின்முன் னீநான்றான் சுவ்வரில்** (37:1-2)

அதாவது கட்டுண்ட வடிவங்களை அதிகப் பயிற்சி உடையதாகக் கருதி, அவைகைள அடிநிலைக்கிளவியாகக் கொண்டாரோ என்று எண்ணவேண்டியிருக்கிறது.

### 10.3.3 நன்னூல்

நன்னூலார் கற்பித அடிநிலைக் கிளவியும் கொண்டுள்ளார் என்றது முன்னரே விளக்கப்பட்டது. இதற்கு அடிநிலைக்கிளவி சுயேச்சையாக வரும் வடிவமாக இருக்கவேண்டும் என்ற எண்ணமே காரணமாக இருக்கலாம்.

தனிக் கிளவியாக வரும் வடிவங்களே அடிநிலைக் கிளவியாகக் கொள்ளப்பட்டதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு.

பல, சில என்பவற்றை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு பல்-, சில்-; பன்-, சின்- போன்ற மாற்று வடிவங்களை விளக்குவது (170).

நாழி என்ற சொல்லின் மாற்று வடிவமாக நாட்- என்பதைக் கொள்ளுதல் (177).

அகம் என்பதை அடிநிலைக் கிளவியாக கொண்டு அம்- என்பதை விளக்குதல் (222) முதலியனவற்றைக் காட்டலாம்.

நன்னூலார் சாரியையைப் பொறுத்தவரையில் பல புதிய வடிவங்களை அடிநிலைக் கிளவியாகக் கொண்டுள்ளார் என்பதைப் பலரும் எடுத்துக் காட்டியுள்ளார்கள் (உதாரணம் கந்தசாமி, 1977:124).

தொல்காப்பியர் கூறிய அக்கு, இக்கு, வற்று முதலியவற்றை நன்னூலார் முறையே அ, கு, அற்று என்று கொண்டுள்ளார் (244). இது அடிநிலைக் கிளவி தனித்துவம் உடைய சொல்லாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை நன்னூலார் கடைபிடிக்கவில்லை என்பதையே புலப்படுத்துகிறது.

தொல்காப்பியர் சிலவற்றைப் புணர்ச்சியில் மிக்கு வருவனவாகக் கொண்டார். உதாரணமாக, ஆ, மா முதலிய சொற்கள் புணர்ச்சியால் னகர மெய் பெறும் என்று கூறியுள்ளார் (231). நன்னூலார் னகரச் சாரியை கொண்டுள்ளதோடு (244)

**ஆ மா கோனவ் வணையவும் பெறுமே** (243)

என்று உருபு புணரியலில் விளக்குவதால், னகரத்தைச் சாரியையாகக் கொண்டுள்ளார் என்பது தெளிவு. ஆகவே, அடிநிலைக் கிளவி தமிழ்மொழி அமைப்புக்கு ஒத்திருக்கவேண்டும் என்ற கடப்பாடும் நன்னூலார்க்கு இல்லை.

இலக்கண விளக்கம் நன்னூலையே பின்பற்றியுள்ளது. சில சூத்திரங்களை இடம் மாற்றிக் கூறுவது தவிர (அதன் காரணம் அடுத்த இயலில் விளக்கப்படும்), கோட்பாட்டு நிலையில் வேறு ஒரு மாற்றமும் காணப்படவில்லை.

ஏனைய இலக்கண நூல்களில் புணர்ச்சி விரிவாகவும் முறையாகவும் விளக்கப்படவில்லை.

## 10.4 மதிப்பீடு

இலக்கண ஆசிரியர்கள் கொண்ட அடிநிலைக் கிளவிக் கோட்பாட்டைப் பொதுவாகவும், மொழியியல் நோக்கில் சிறப்பாகவும்

மதிப்பீடு செய்யவேண்டும். இதுவரைத் தமிழ் இலக்கணங்கள் மறுவிளக்கம் செய்யப்பட்டு வந்துள்ளனவே தவிர, அவற்றின் கோட்பாடுகள் இன்று எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது பற்றி யாரும் விளக்கவில்லை. எனவே, இலக்கண ஆசிரியர்களின் கோட் பாடுகளை ஒவ்வொன்றாக எடுத்து மொழியியல் கோட்பாட்டுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதே, ஆராய்ச்சியில் ஏற்பட்ட வளர்ச்சியையும் தெளிவையும் புலப்படுத்தும்.

மொழியியலாரும் மாற்று வடிவங்களில் ஒன்றையும், கற்பித வடிவத்தையும் அடிநிலைக் கிளவியாகக் கொள்கிறார்கள். இந்த முறையில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் வேறுபாடு இல்லை. இந்த இரண்டு நிலையிலும் மொழியியலாளர்கள் எந்த வடிவம் மாற்று வடிவங்களை எளிதாக விளக்கும்படி அமைத்துள்ளதோ அதையே அடிநிலைக் கிளவியாகத் தேர்ந்தெடுப்பார்கள்.[10] மேலும் கற்பித வடிவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்த காரணம் இருக்கவேண்டும்; அதாவது புணர்ச்சி விதிகளை எளிதாக விளக்கும்படியும் பொதுமையைப் போற்றும்படியும் அமையவேண்டும் என்பதே மொழியியலாளர் கருத்து.[11] எனவே, சுயேச்சையாக வரும் வடிவமாகவோ பயிற்சி அதிகம் உடைய வடிவமாகவோ இருக்கவேண்டுமென்று வற்புறுத்தமாட்டார்கள். எண்ணுப்பெயர்களை பொறுத்தவரையில் சுயேச்சையாக வரும் வடிவமே ஏற்றுக்கொள்ளத்தகுந்த அடிநிலைக் கிளவி. ஏனெனில் அவற்றுள் சிலவற்றின் இறுதியில் -கு, -து ஆகியவை அசையாக (Formative) வந்துள்ளன; மற்றும் சிலவற்றில் அசை இல்லை (ஆறு, ஏழ்). மாற்று வடிவம் வரும்போது ஓரளவே ஒற்றுமை காணப்படுகிறது. ஒன்று என்பதில் இறுதி உயிர்மெய் கெட்டு னகரமெய் ரகர மெய்யாக மாறுகிறது. ஆனால், இரண்டு என்பதில் இறுதி மெய்யோடு

---

10 The problem under consideration is the selection of the base form in such a way as to permit the simplest descriptions.
Gleason, 1961 : 86.

11 We require justification for every deviation between phonetic and phonemic (ie. morphophonemic) form in order to justify a rule that will establish such a difference between representations of the forms, we must show that the cost of the rule is outweighed by the savings it results in terms of predication of generalities of the phonological structure of the language.
Anderson, 1974 : 47f.

ணகர மெய்யும் கெட்டு, ரகர உயிர் மெய்யில் உயிரும் கெட்டுவிடுகிறது. எனவே, சுயேச்சை வடிவத்தை அடிநிலைக் கிளவியாகக் கொள்வது இலக்கண விளக்கத்தை எளிமைப்படுத்துவதற்காக அமைந்துள்ளது. ஆனால், வேண் என்பதை வேட்கை என்ற சொல்லின் மாற்று வடிவமாக விளக்கியதைச் சிறப்புடையதாகக் கருதமுடியாது. அப்படியே பயிற்சி அதிகம் உடையது என்பதற்காக நும் என்பதிலிருந்து நீயிர் என்பதைப் புணர்ச்சி மாற்றமாகக் கருதியதும் சிறப்பானதாகக் கொள்ளமுடியாது.

ஆ, மா ஆகிய சொற்களில் னகரம் புணர்ச்சியில் வருவது என்பதும் சிறப்பானதாகக் கொள்ள முடியாது. ஆன் என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு னகரம் கெட்டதாகக் கொள்வதே எளிமையானது; இயல்பானதும் கூட.

ஒன்பது, தொண்டு ஆகிய இரண்டில் ஒன்பது என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொள்வது இலக்கணம் தெரிந்த வடிவத்திலிருந்து மாற்று வடிவங்களை விளக்கும் முறையில் அமைத்து, சாதாரண மக்களுக்குப் புரிந்த ஒன்றிலிருந்து சிக்கலான முறைக்குப் போவதாகும். ஆனால், மாற்று வடிவங்களை எழுத்து மாற்றங்களாக விளக்காது, தொகுத்துக் கூறியிருக்கலாம்.

சுயேச்சையாக வரும் வடிவங்களை அடிநிலைக்கிளவியாகக் கொள்ளவேண்டும் எப்பொழுதும் பொருந்தாது.

கட்டுண்ட உருபன்கள் மொழியின் எழுத்தமைப்புக்கு ஒத்ததாக இருக்கவேண்டும் என்பதால் நான்காம் வேற்றுமை உருபாகிய -கு என்பதே அடிநிலைக் கிளவியாக அமைக்கப்பட்டது என்று முன்னமே விளக்கப்பட்டது. ஆனால் இந்தக் கோட்பாட்டைப் புறக்கணித்து, -க்கு என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொள்வதே சிறப்பு என்ற கருதப்படுகிறது. (உதாரணம் : குமாரசுவாமி ராஜா, 1972 : 343). குகரம் வரும் வடிவங்களிலும் -க்கு என்ற வடிவமே புதைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| முள் | - | முட்கு |
| நாள் | - | நாட்கு |
| வேல் | - | வேற்கு |
| நாடு | - | நாட்டிற்கு |

போன்ற சொற்களில் -கு வந்தாலும், அதை வெறும் குகரமாகக் கருதக்கூடாது. ஏனெனில், முள்+கு என்று சேர்த்தால் முள்கு என்று ஆகலாம்; காரணம் தமிழில் 'ள்க்' என்ற மெய்மயக்கம் வரலாம். எனவே, முட்கு என்பதைக்கூட முள்+க்கு என்று கொள்ளவேண்டும் என்று கருதுகிறார் குமாரசுவாமி ராஜா. ஆகவே, -க்கு என்பதையே நான்காம் வேற்றுமை உருபின் அடிநிலைக் கிளவியாகக் கருத வேண்டும் என்பது மொழியியலாளரின் கருத்து. இதனால், மொழியின் எழுத்தமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் புணர்ச்சி விதியை எளிதாகவும் முரண் இல்லாமலும் விளக்குவதற்கு வேண்டிய வடிவத்தையே அடிநிலைக் கிளவியாகக் கொள்ளவேண்டும் என்று மொழியியலாளர்கள் கருதுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இது ஆராய்ச்சியின் வளர்ச்சியால் பெற்ற தெளிவைக் காட்டுகிறதே தவிர, இலக்கண ஆசிரியர்களின் கோட்பாடு குற்றம் உடையது என்பதைக் காட்டவில்லை.

# 11. புணரியல்களின் அமைப்பு

## 11.0 முன்னுரை

புணரியல்களை விவரிக்கும் முறையில், தமிழ் இலக்கண நூல்களில் நான்கு விதம் காணப்படுகிறது. (1) தொல்காப்பியம் ஆறு இயல்களில் விரிவாகவும் விளக்கமாகவும் வருணிக்கிறது. (2) வீரசோழியரும் நேமிநாதமும் புணர்ச்சியை எழுத்தியலின் ஒரு உட் பகுதியாக்கித் தனி இயல் அமைக்காமல் பேசுகின்றன. (3) நன்னூல், இலக்கணம் விளக்கம் ஆகிய இரண்டும் மூன்று இயல்களில் புணர்ச் சியை விவரிக்கின்றன. (4) தொன்னூல்விளக்கம், முத்துவீரியம் சுவாமிநாதம் ஆகிய மூன்று ஒரேஒரு இயலில் புணர்ச்சியை வருணிக் கின்றன. இப்படித் தமிழ் இலக்கண நூல்கள் புணர்ச்சியை விவரிக்கும் இயல்களின் எண்ணிக்கையில் மட்டும் அல்லாமல் வருணனை முறையிலும் வேறுபட்டுள்ளன.

## 11.1 தொல்காப்பிய முறை

தொல்காப்பியர் புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஆறு இயல்களில் புணர்ச்சி மாற்றங்களை விவரிக்கிறார்.

புணரியலில் புணர்ச்சியின் பொதுக்கோட்பாடு, சாரியைகளின் தொகை, அவைகளின் மாற்று வடிவங்கள் ஆகியனவும்; தொகை மரபில் சொற்களைப் பல வகையாகத் தொகுக்க ஏற்படும் புணர்ச்சி மாற்றமும்; உருபியலில் சாரியைகளின் வருமிடங்களும், சில பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது அடையும் மாற்றங்களும்; உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய மூன்றிலும் முறையே உயிர், மெய், குற்றியலுகரம் ஆகியவற்றில் முடியும் சொற்கள் அடையும் புணர்ச்சி மாற்றங்களும் விளக்கப்பட்டுள்ளன. புணரியலும் உருபியலும் அகச் சந்தியை விளக்குவனவாகவும், ஏனையவை புறச் சந்தியை விளக்குவனவாகவும் கொள்ளலாம்.

## 11.1.1 தொகுத்துக் கூறுதல்

புணர்ச்சியை விளக்கும்போது பல ஈறுகளுக்குப் பொருந்தக் கூடிய பொது விதிகளை முதலில் கூறிப் பிறகே தனிச் சொல்லுக் குரிய புணர்ச்சி மாற்றத்தை விவரிப்பது, இலக்கண ஆசிரியர்களும் மொழியியலாளரும் கடைபிடிக்கும் முறைதான். தொல்காப்பியர் தொகைமரபு என்ற தனியியலையே அமைத்துப் பல்வேறு வழியில் தொகுத்துப் புணர்ச்சியை கூறியிருப்பது பாராட்டுவதற்குரியது. இந்த உண்மையை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உணர்ந்து விளக்கிச் சென்றுள்ளார்கள்.

இளம்பூரணர் 145ஆம் சூத்திரஉரையில்,

> இஃது இருபத்துநான்கு ஈற்றிற்கும், (அதாவது சொல்லுக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை மொழி மரபில் விளக்கியதை ஒட்டியது) அல்வழியினும், வேற்றுமையினும் அகத்தோத்தினுள் நாற்பெத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்தாயிற்று. மேலும் இவ்வாறே தொகுத்து முடிக்கின்றவாறு அறிக.

என்று கூறிப் பிற சூத்திரங்கள் எப்படித் தொகுக்கப்பட்டுள்ளன? என்பதை நம்மைத் தெரிந்துகொள்ளும்படிக் கூறிவிட்டார். இந்தத் தொகுப்பு, எழுத்துகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது. இந்தக் குறிப்பைக் கொண்டு நச்சினார்க்கினியர் சூத்திரம் 155, 156 ஆகிய இரண்டும் எப்படித் தொகுத்துக் கூறப்பட்டது? என்று விளக்கிச் சென்றுள்ளார்.

> ஆண்டு நாற்பத்தெட்டுச் சூத்திரங்கள்தான் முடிவதனை ஈண்டுத் தொகுத்தார். (155.ஆம் சூத்திரஉரை)

> இவை நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றைத் தொகுத்தார். (156ஆம் சூத்திரஉரை).

என இரண்டு இடத்திலும் எழுத்து அடிப்படையில் தொகுக்கப் பட்டவையே என்று சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், தொகை மரபினுள் இலக்கணக் கூறுகள், தொடரியல் உறவு, சொற்பொருள் ஆகியவற்றிலும் தொகுத்துக் கூறியதைக் காணமுடிகிறது (சண்முகம், 1967:115)

நச்சினார்க்கினியர் விளக்கிய 155, 156 ஆகிய இரண்டு சூத்திரங்களும் எழுத்து அடிப்படையில் தொகுக்கப்பட்டன என்பதைவிட, அவை முறையே சொல்லிலக்கண அடிப்படையிலும், தொடரியல் உறவு அடிப்படையிலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்று கொள்வதே சிறப்பாக அமையும்.

தனி எழுத்துகளுக்கு, ஒன்றுக்கு மேற்பட்டவற்றைத் தொகுத்துச் சில சூத்திரங்கள் அமைத்துள்ளார். 146, 147, 148 ஆகிய சூத்திரங்களில் ண, ன ஆகிய இரண்டு எழுத்துகள் அடையும் புணர்ச்சி மாற்றம் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது.

முன்னரே குறிப்பிட்டபடி 160ஆம் சூத்திரம் அசைநிலையை ஒட்டித் (நெடியதன் முன் ஒற்று, குறியதன் முன்னர் மெய்) தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. நெடியதன் முன்னர் ஒற்றுக் கெடுவன ண, ன, ம, ல, ள ஆகிய ஈற்றுச் சொற்கள். அதுபோலக் குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டுவன ஞ, ழ, ர ஆகிய எழுத்துகளை ஈற்றில் உடைய சொற்கள் என்று நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார். 145ஆம் சூத்திரமும் ஒருவகையில் அசைநிலையை ஒட்டித் தொகுத்துக் கூறப்பட்டதேயாகும்.

151ஆம் சூத்திரம் முன்னிலை (அதாவது ஏவல்) நிலைமொழி யாக இருந்து பெறும் புணர்ச்சி மாற்றம் பற்றியும், 153ஆம் நூற்பா எல்லா ஈற்றிலும் வரும் உயர்திணைப் பெயர்களின் புணர்ச்சி மாற்றம் பற்றியும் தொகுத்துக் கூறுகின்றன.

சொற்களைப் பொருள் அடிப்படையில் அளவுப்பெயர், எண்ணுப்பெயர் என்று தொகுத்து, அவற்றின் புணர்ச்சி விகாரங்களை 164 முதல் 170 வரையுள்ள சூத்திரங்கள் விளக்குகின்றன.

தொடரியல் உறவு அடிப்படையில் இரண்டாம் வேற்றுமைத் தொகை (157), மூன்றாம் வேற்றுமைத் தொகை (156) என்று தொகுக்கப்பட்ட சூத்திரங்களும் உண்டு.

ஆயினும் தொல்காப்பியர் தொகுத்துக் கூறவேண்டிய எல்லா வற்றையும் தொகைமரபில் கூறவில்லை என்பதை நன்னூலையும் இலக்கணவிளக்கத்தையும் பார்த்தாலே அறிந்துகொள்ள முடியும். அது பின்னால் (11.2.3) விளக்கப்படும். எனவே, தொல்காப்பியர் தொகைமரபு என்ற இயல் அமைத்திருந்தும் தொகுத்துக் கூறக்கூடிய எல்லா விதிகளையும் அந்த இயலில் முழுமையாகத் தொகுத்துக் கூறவில்லை என்பது அறியத் தகுந்தது.

உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களில் புறச் சந்தி - அதாவது பதப்புணர்ச்சி எழுத்து வாரியாக வவரிக்கப்பட்டிருந்தாலும், அங்கும் பலவிதமான பொதுமைகள் காணப்படுகின்றன.

## 11.1.2 பொதுமைப்படுத்துதல்

பொதுவாக ஒரே ஈறு உடைய சொற்களைத் தொகுத்துக் கூறும் போது வருமொழியின் எழுத்து வகையையொட்டிச் சூத்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் வருமொழி வல்லெழுத்து முதலாக உடைய சொற்களோடு புணர்ந்தால் மிகும் என்று உயிர் மயங்கியல் முதல் சூத்திரத்தில் கூறினார். எனவே, அடுத்த நூற்பாவில் அகர ஈற்று வேறு இலக்கணக் கூறுகள் (வினையெச்சம், உவமக் கிளவி, சுட்டு முதலியன) அதே புணர்ச்சியைப் பெறும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், அடுத்த நான்கு சூத்திரங்களில் சுட்டுப் பெயர் மெல்லினம் (205), இடையினம் (206), உயிர் (207, 208) ஆகிய வருமொழிச் சொற்களோடு புணரும்போது ஏற்படும் மாற்றத்தைத் தனித்தனியே விளக்கியுள்ளார்.

இன்னொரு முறை: பொதுவிதியும் விலக்கு விதியும்: ஒரு எழுத்தை ஈறாக உடைய சொற்கள் அடையும் புணர்ச்சி மாற்றத்தை முதலில் தொகுத்துக் கூறிவிட்டுப் பின்னர் அதே ஈற்றில் சில சொற்கள் அந்த விதி பெறாது என்று விலக்குவது. ஆகார ஈற்றுச் சொற்களில் குறியதன் முன் வரும் ஆகாரமும் ஈரெழுத்தொருமொழியும் அகரம் பெறும் என்ற பொது விதியை முதலில் (226) கூறிவிட்டு, இரா என்ற சொல் மட்டும் அகரம் பெறாது என்றும் (227), நிலா என்ற சொல் அத்துச்சாரியை பெறும் என்றும் (228) சிறப்பு விதிகளைக் கடைசியில் கொடுப்பது. இது ஒரு ஈற்றுச் சொற்களிடையே பொதுமை காணப்படாவிட்டாலும் பொதுமை ஏற்படுத்தி, அதற்கு மாறாக வருவதை விலக்கு விதிகளாகக் கருதி விளக்கும் முறை எனலாம். இது பாராட்டுவதற்கு உரியதே.

மற்றொரு முறை: ஒரே ஈற்றுச் சொற்கள் அல்லது ஒரே சொல் இரண்டு விதமாகப் புணர்ச்சியில் மாறினால், அவைகளைத் தனித்தனிப் புணர்ச்சி விதி பெறுவதாகக் கூறாமல், அவை சில பொது விதிகளையும் சில சிறப்பு விதிகளையும் பெறுவதாக விளக்குவது.

எரு என்ற சொல் எருவம் என்ற மாற்று வடிவத்தையும் (எரு வங்குழி), செரு என்ற சொல் செருவக்- (செருவக்களம்), செருவச்- (செருவச்சேனை) போன்ற மாற்று வடிவங்களையும் உடையன. ஆனால் இரண்டு சொற்களின் மாற்று வடிவங்களையும் வேறு வேறு புணர்ச்சி விதிகள் மூலம் விளக்காது, இவைகளுக்கு ஒரு பொதுவிதியும், தனித்தனிச் சிறப்பு விதியும் உடையதாக வருணிப்பது.

**எருவும் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிட னுடைய தெரியுங் காலை**
**அம்மின் மகரம் செருவயின் கெடுமே**
**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை** (260)

இங்கு எரு, செரு என்ற இரண்டு சொற்களும் அம் என்ற சாரியையைப் பெறுதல் பொதுவிதி. எரு என்ற சொல் 129 ஆம் சூத்திரப்படி வருமொழிக் கேற்ற இனமெல்லெழுத்தாகும். இது எரு வுக்குரிய சிறப்புவிதி. செரு என்ற சொல் அம்மில் உள்ள மகரம் கெட்டு, வருமொழி வல்லெழுத்து பெற்று வரும். இது செரு வுக்குரிய சிறப்பு விதி.

அம், அக்கு என்று இரண்டு சாரியை பெறுவதாக விளக்க வேண்டியதை அம் சாரியையும் சிறப்பு விதியும் பெறுவதாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த முறை வேறு பல சொற்களிலும் காணப்படுகிறது. புள்ளி மயங்கியலில் பொருந்- என்ற நகர ஈற்றுச் சொல் பொருநு, பொருந என்ற மாற்று வடிவங்களை உடையது. இங்கு உகரம் பெறுவதையும் அகரம் பெறுவதையும் தனித்தனியே வருணிக்காமல், உகரம் பெறுவதை முதலில் கூறிவிட்டு (298), அந்த உகரமே அகரமாக மாறுகிறது (299) என்று விவரித்துள்ளார்.

**நகர இறுதியும் அதனோ ரற்றே** (298)

என்று கூறி அகரம் பெறுவதை

**வேற்றுமைக்கு உக்கெட அகரம் நிலையும்** (299)

என்று கூறுவது, இரண்டு மாற்று வடிவங்களைத் தனித்தனிப் புணர்ச்சி விதி மூலம் கூறாமல், ஒரு மாற்று வடிவத்திலிருந்து மற்றொரு மாற்று வடிவம் திரிந்ததாகக் கூறிப் புணர்ச்சியில் கூடிய வரையில் ஒற்றுமை ஏற்படுத்திப் பின்னர் வேற்றுமை உடையது என்று விளக்குவதாகும்.

புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்திக் கூறுவதன் மூலம் புதிய விதிகள் அமைக்கவேண்டிய அவசியம் இல்லாமல் போகலாம்.

தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் எண்ணுப் பெயர்களின் புணர்ச்சியை வருணித்த விதம் பாராட்டுதலுக்கு உரியதாக உள்ளது (குமாரசாமி ராஜா 1970:172). தமிழில் ஏழ், ஆயிரம் என்ற இரண்டு எண்ணுப்பெயர் தவிர, ஒன்று முதல் ஆறு, எட்டு முதல் பத்து, நூறு ஆகியவை குற்றியலுகர ஈற்றில் முடிவன. எனவே, அவைகளைக் குற்றியலுகரப் புணரியலிலேயே வருணிக்கிறார்.

பத்து என்ற எண்ணுப்பெயர் பஃது, பது, பதின்- பன்- ஆகிய மாற்று வடிவங்களை உடையது. ஒன்று முதல் ஒன்பது வரை வருமாழியாகப் புணரும்போது அவைகளுள் பதின்-, பன்- என்ற இரண்டு மாற்று வடிவங்களைப் பெறுகின்றன. அந்த இரண்டையும் தனித்தனியே வருணிக்காமல் ஒற்றுமையும் வேற்றுமையும் உடைய முறையில் விவரித்திருப்பது ஒற்றுமை இல்லாதபோதும் கூடிய வரையில் பொதுமைப்படுத்திக் கூற வேண்டும் என்ற அவரது கொள்கையைப் புலப்படுத்துகிறது.

முதலில் வருமொழி ஒன்று முதல் எட்டாக இருந்தால், (1) இறுதி உயிர்மெய் (குற்றியலுகரமும் தகர மெய்யும்) கெடும். இரண்டு தவிர ஏனைய எண்ணுப்பெயர்களின்முன் -இன்- என்ற சாரியை வரும் என்று வருணிக்கிறார்.

**ஒன்று முதலாக எட்டன் இறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரிற்**
**குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே.** (433)

இங்குக் குற்றியலுகரமும் அதன் முன்னுள்ள மெய்யும் கெட்டும் இன் வரும். அடுத்து இரண்டு என்ற எண்ணுப்பெயர்முன் தகரமெய் (பத்து என்பதில் துகரம் கெட்டு நிற்கும் தகரம் மெய்) னகர மெய்யாக மாறும் என்று விளக்குகிறார்.

**பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்**
**ஒத்த தென்ப இரண்டுவரு காலை.** (434)

அதாவது பதின்-, பன்ன்- என்ற இரண்டு மாற்று வடிவத்திலும் ஒலி ஒற்றுமை அதிகம் இல்லாவிட்டாலும் புணர்ச்சி விதி கூறும் முறையில் ஓரளவு ஒற்றுமையும் (இறுதி உயிர்மெய் கெடல்) வேற்றுமையும்

(இரண்டுக்கு முன்னால் தகர மெய் கெட்டு ணகர மெய் இரட்டித்தல், ஏனைய எண்ணுப்பெயர்முன் -இன்- வருதல்) வரும்படி அமைத்துள்ளார்.

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப்பெயர் நிலைமொழியாய் இருக்கப் பத்து வருமொழியாய் புணரும்போது ஏற்படும் மாற்றத்தை விளக்குவதிலும் தொல்காப்பியர் பொதுமையைப் போற்றியுள்ளார். இங்கு முழுப் பெயர்கள் பெயரடைகளாக மாறுகின்றன.

பத்து என்ற வருமொழி பஃது என்று மாறுகிறது. இந்த மாற்றங்களில் முதலில் எல்லாச் சொல்லுக்கும் பொருந்தும் பொது மாற்றங்களை ஒரு சூத்திரத்தில் வருணித்துவிட்டுச் சிறப்பு மாற்றங்களைத் தனித்தனிச் சூத்திரங்களில் விவரிக்கிறார். முதலில் வருமொழி பத்து என்பது இடையிலுள்ள தகரம் கெட்டு ஆய்தம் பெறும் என்றும், நிலைமொழியில் ஆறு என்ற சொல் தவிர ஏனையவற்றில் இறுதி குற்றியலுகரம் மெய்யும் கெடும் என்றும் கூறுகிறார். அதாவது பத்து என்பது பஃது ஆகியது. நிலைமொழி எண்ணுப் பெயர்கள்

ஒன்று → ஒன்
இரண்டு → இரண்
மூன்று → மூன்
நான்கு → நால்
ஐந்து → ஐந்
எட்டு → எண்
ஒன்பது → ஒன்ப

என்று இறுதி உயிர்மெய் கெட்டு நிற்கின்றன. இந்த மாற்றங்களை இரண்டு விதிகள் மூலமே விளக்கியுள்ளார் (437). ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப்பெயர்களின் முன்னால் பத்து வந்தால்

1) பத்து என்பதிலுள்ள தகரமெய் கெட்டு ஆய்தம் வரும்.

2) ஆறு தவிர ஏனைய எண்ணுப் பெயர்களில் உள்ள குற்றிய லுகரமும் மெய்யும் கெடும்.

இதைக்கூட மேலே கூறிய (அதாவது பத்து நிலைமொழியாய் இருக்கும்போது குற்றியலுகரம் மெய்யோடும் கெடும் தன்மையைக் குறிப்பிட்டு) குற்றியலுகரத் தன்மையைப் பெறும் என்று மட்டுமே கூறியுள்ளார்.

அடுத்து முதல் இரண்டு எண்களின் புணர்ச்சி மாற்றத்தை (ஒன்-ஒரு, இரண்-இரு) விவரிக்கும்போது கூடப் பொது விதியும் சிறப்பு விதியும் அமைத்த முறை விந்தையானது; ஆனால் சிறப்பானது.

438ஆம் சூத்திரப்படி முதல் இரண்டு எண்ணில் உள்ள மெய் ரகரமாகி உகரம் பெறும். அதாவது ஒன்(று) ஒரு ஆகவும், இரண்டு- என்பது இரரு- ஆகவும் நிற்கும். 439ஆம் சூத்திரம் இரண்டு என்ற எண்ணுப்பெயரில் உள்ள (அதாவது இரரு) இடைநின்ற ரகரம் கெட்டு இரு ஆகும் என்று கூறுகிறது. இந்த விதிகள் குழப்பம் உடையன போலக் காணப்பட்டாலும், புணர்ச்சி மாற்றத்தில் பொதுமையும் மாறுவதற்குக் காரணமும் உடையனவாக அமைந்துள்ளன. அதாவது ஒன்-, இரண்- என்ற வடிவங்களின் இறுதி மெய் ரகரமாகி உகரமாதல் பொதுவிதி. இரரு என்பதில் ரகர மெய் கெடுதல், ஒற்றுமை உடைய அல்லது ஒரே ஒலித் தன்மை உடைய இரண்டு அசைகள் வரும்போது ஒன்று கெடும் என்ற பொது நியதிப்படி அசை கெடுதல் (Haplology என்று வரலாற்று மொழியியலாளர் விளக்குவார்கள்) அமையும். எனவே, தொல்காப்பியர் புணர்ச்சி விதிகளை அமைக்கும் போது ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனியாகப் புணர்ச்சி இலக்கணம் கூறாது கூடியவரையில் பொதுமைப்படுத்தி, மாற்றத்திற்கு இயல்பான காரணம் இருக்கும்படிச் செய்த திறமை வியப்புக்கு உரியது; நுண்மை நிறைந்தது.

சில சொற்கள் பொதுப் புணர்ச்சி விதியை ஏற்காமல் மாறுபட்டு விதிவிலக்காக வரும்போதும்கூடப் பொதுமையை ஏற்படுத்த முயன்ற திறமும் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது.

இடப்பெயர்கள் வேற்றுமை உருபோடு புணரும்போது சில மாற்றங்களைப் பெறுகின்றன.

யான் → என்
யாம் → எம்
நாம் → நம்
நீ → நின்
நீயிர் → நும்
தான் → தன்
தாம் → தம்

இந்த மாற்றங்களை உருபு புணரியலில் எழுத்து மாற்றமாக விளக்கியதும், முன்னிலைப் பன்மையைப் பொறுத்த வரையில் நும் என்பதையே அடிநிலைக்கிளவியாகக் கொண்டதும் முன்னரே விளக்கப்பட்டது. அவை வேற்றுமை உருபு ஏற்கும்போது - சிறப்பாக நான்காம் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் வரும்போது பொதுவிதி மீறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | ஐ | > | என்னை |
| என் | + | ஆல் | > | என்னால் |
| என் | + | ஒடு | > | என்னொடு |
| என் | + | இன் | > | என்னின் |

என்று அமைவதற்குப் பதிலாக, நான்காம்-ஆறாம் வேற்றுமை உருபோடு வரும்போது.

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | கு | > | எனக்கு |
| என் | + | அது | > | எனது |

என்று மாறுகின்றது. அதாவது ஆறாம் வேற்றுமை உருபு வரும்போது நிலைமொழி மெய் இரட்டிக்கவில்லை. நான்காம் வேற்றுமை சேரும்போது அகரம் வருவதோடு ககர மெய்யும் தோன்றுகிறது. இவைகளைத் தனித்தனியே விளக்காமல் பொதுவும் சிறப்புமாக புணர்ச்சி விதிகளைக் கொண்டு அமைத்த திறம் பாராட்டுவதற்குரியது.

இடப் பெயர்கள் என்பதை 'நெடுமுதற் குறுகும்மொழி' என்று குறிப்பிட்டு, ஆறு-நான்கு வேற்றுமை உருபுகள் வரும்போது இரண்டு பொது விதிகள் பெறுவதாகக் கூறுகிறார் (161).

1) ஈற்றுமெய் அகரம் பெறும்

| | | | | |
|---|---|---|---|---|
| என் | + | அ | + | கு |
| என் | + | அ | + | அது |

2) நிலைமொழி ஒற்று இரட்டாது.

| | | |
|---|---|---|
| என | + | கு |
| என | + | அது |

3) சிறப்பு விதி: அகரத்தின் முன்வரும் ஆறாம் வேற்றுமையின் அகரம் கெடும்

என + அது > என + து > எனது

நான்காம் வேற்றுமை ஒற்று இரட்டித்து வருவதற்கு 114ஆம் சூத்திரத்தில் விதி செய்துள்ளார். அதன்படி என+கு என்பது எனக்கு ஆகும். ஆகவே இலக்கணம் என்பது மொழி அமைப்பைக் கண்டுபிடிக்கும் அல்லது மொழி அமைப்பைப் புரிந்துகொள்ளும் முயற்சி மட்டுமல்ல; அதை விளக்கும்போது பல உத்திகளை மேற்கொண்டு பொதுமையும் எளிமையும் தோன்ற விளக்குவதும் ஆகும்.

## 11.1.3 விரித்துக்கூறுதல்

தொல்காப்பியர் தொகைமரபு என்று தனி இயல் வகுத்ததும் ஏனைய இயல்களில் ஒரே ஈற்று உடைய பல சொற்களில் ஏற்படும் புணர்ச்சி மாற்றத்தைப் பொதுமைப்படுத்துவதற்காகத் தொகுத்து ஒற்றுமையும் வேற்றுமையும் அமையும்படிக் கூறியதும், அதே நேரத்தில் ஒவ்வொரு சொல்லுக்கும் தனித்தனிப் புணர்ச்சி விதி கூறி விவரித்துரைக்கும் பண்பும் சிறப்பாக நோக்கத்தகுந்தவை. உதாரணமாக மரப்பெயர்கள் பெறும் புணர்ச்சி மாற்றத்தைத் தொகுத்துக் கூறாது ஒவ்வொரு ஈற்றிலும் புணர்ச்சி மாற்றத்தை அதுவும் மாட்டேற்று முறையில் (அதாவது முன் கூறிய சொல்லோடு தொடர்புபடுத்தி) கூறியிருக்கிறார்.

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே** (243)
**புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.** (244)

என்று இகர ஈற்று மரப்பெயர்கள் பெறும் புணர்ச்சி மாற்றத்தை முதலில் கூறிவிட்டு,

**ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே.** (262)

என்று கூறுவதே மாட்டேறு ஆகும். இதையும் மாட்டெறிந்து,

**சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே.** (278)

என்றும் இப்படியே,

**விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
**அவைமுப் பெயரும் சேமர இயல.** (282)

என்று மாட்டெறிந்ததோடு, அந்த முறையைப் புள்ளியீற்று மரப் பெயர்களுக்கும் நீட்டிக்கிறார்.[1] ஆனால் இவைகளைத் தொகுத்து ஒரே சூத்திரமாக ஏன் சொல்லவில்லை? என்று கேள்வி எழுகிறது.

இன்னும் பருவப் பெயர்களை மாட்டெறிந்து கூறும்போது முரண் அழகு (மாறுபட்ட இரண்டு சொற்களை ஒரு சேர வைத்துக் கூறல்) அமைந்திருப்பது சிலரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது. (உ.ம். கந்தசாமி, 1977:151).

> **பனியென வருஉம் காலவேற் றுமைகசு**
> **அத்தும் இன்னும் சாரியை யாகும்.** (241)
>
> **வளியென வருஉம் பூதக் கிளவிக்கு**
> **அவ்வயில் நிலையல் செவ்வி தென்ப.** (242)
>
> **மழையென் கிளவி வளியியல் நிலையும்.** (287)
>
> **வெயிலென் கிளவி மழையியல் நிலையும்.** (377)
>
> **இருளென் கிளவி வெயிலியல் நிலையும்.** (402)

என்ற சூத்திரங்கள் மாட்டேற்றுக்கும் முரண் அழகுக்கும் நல்ல உதாரணங்களாகும். கந்தசாமி (1977:144) இதுபற்றிக் கூறுவது இங்குக் குறிப்பிடத்தகுந்தது.

> இலக்கணத்தைச் சுமையாகக் கூறாமல் சுவையாகச் சொல்லு வதற்குத் தொல்காப்பியர் கையாண்ட உத்திகள் பல. அவற்றுள் ஒன்றுதான் மாட்டு எனப்படும் நூற்பா அமைப்பு.

எனப் பொதுவாகவும் மேலே குறிப்பிட்ட சூத்திரங்களை எடுத்துக் காட்டி

---

1 இப்படித் தனித்தனியே கூறியவிடத்து மரப் பெயர்களிடையே புணர்ச்சியில் ஒற்றுமை இருக்கிறதா? என்பதை வலியுறுத்துவதற்கு மகர மெல்லெழுத்தில் முடியும் மரப்பெயரிலும் (இல்லம்) மெல்லெழுத்து மிகுந்து வரும் என்று

> இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே. (313)

எனச் சூத்திரித்துள்ளார். இல்லம்+கோடு>இல்லங்கோடு என்று விளக்கலாம். ஆனால் மரப்பெயர்க்குப் புணர்ச்சியில் பொதுமை வேண்டும் என எண்ணி மாட்டேற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

> இருள் வெயிலாகும், வெயில் மழை போலாகும், மழை வளி போலாகும்; என ஆகாததை ஆகுமாறு அமைத்து முரண் அழகு (Oxymorn) விளங்க மொழிந்த திறம் வியக்கற்பாலது. இதனாற்றான் இலக்கணம் சுவைநலம் பயப்பதாய் அமைகிறது. (பக்.151)

என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு இரண்டு உண்மைகளை எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. இலக்கணம் என்பது விஞ்ஞான நோக்கு, இலக்கியம் போல கலைநோக்கு உடையதல்ல. எனவே, இலக்கணத்தில் சுருங்கச் சொல்லல் என்ற உத்திக்கே சிறப்பிடம் கொடுக்கவேண்டும். வடமொழி இலக்கண ஆசிரியர்கள் அரை மாத்திரை அளவு சுருக்கமாகக கூற முடிந்தால்கூட ஆண்மகன் பெற்றதுபோல மகிழ்ச்சி அடைவார்கள் என்ற கருத்தை எடுத்துக்காட்டி உயிர் மயங்கியலிலும் புள்ளி மயங்கியலிலும் அகர வரிசைப்படிப் புணர்ச்சி மாற்றத்தை விளக்க முற்பட்டதால், திரும்பக் கூறதல் என்ற குறை ஏற்பட்டது என்று குமாரசுவாமி ராஜா (1970:171-172)[2] கூறுவது இங்குச் சுட்டிக் காட்டத்தகுந்தது.

இன்னொரு காரணம் மாட்டேறு இலக்கியச் சுவை கருதியல்ல; இலக்கணம் அமைந்த முறையைப் புலப்படுத்துவது. பழைய காலத்தில் இலக்கியமும் இலக்கணமும் பெரும்பான்மையும் வாய்மொழியாகக் கற்கப்பட்டது. மனப்பாடம் செய்வதுதான் இலக்கிய-இலக்கணக் கல்வியின் முதல் வேலை. எனவே இந்த மாட்டேறு நினைவு வைத்துக்கொள்வதற்குரிய கருவியாகவே -துணையாகவே அமைந்திருக்க வேண்டும்; இலக்கியச் சுவை கருதியதாக இருக்கமுடியாது. ஞாபகப் படுத்திக் கொள்ளக்கூடிய கருவியே மாட்டேறு என்பது; இலக்கணம் தோன்றிய வரலாற்றையும் புலப்படுத்தும் பாங்கு உடையது.[3]

---

2 It (*Corunkaccollal*) is one of the most important and powerful principles of linguistic analysis and description. This principle is obviously excludes repetition at any stage. In *Tolka:ppiyam - Eluttarika:ram* we come across charpters containing sutras which indicate repetitions.. These formal repetitions might have been avoided if the *uyir-mayank-iyal* and *pulli - mayank-iytal* chapters were not arranged alphabetically.
Kumaraswami Raja, 1970:170-172

3 ஞாபகப்படுத்திக்கொள்ள உதவி செய்வது மாட்டேறு என்ற கருத்தை கூறிய டாக்டர் ராம. சுந்தரம் அவர்களுக்கு நன்றி.

விரித்துக் கூறுவதும் மாட்டெறிந்து கூறுவதும் மிகப் பழங்கால வாய்மொழி (Oral) மபின் எச்ச சொச்சங்களாகும். தொகுத்துக் கூறுவது இலக்கணத்தை விளக்கும் முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு அறிவு வளர்ச்சியைக் காட்டுவது; அதாவது தமிழ்ச் சமூகம் தொல் காப்பியர் காலத்தில் வாய்மொழி மரபிலிருந்து எழுத்து மரபுக்கு வளர்ச்சி அடைந்து, மிகவும் முன்னேறிய நிலையை அடைந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

## 11.2 வீரசோழிய - நேமிநாத முறை

இரண்டு நூலும் புணர்ச்சி விதிகளை ஒரு நெறியில் தொகுத்துக் கூறவில்லை. வீரசோழியத்தில் 13ஆம் சூத்திரம் உயிர்முன் உயிர் வரும்போது உள்ள புணர்ச்சி மாற்றமும், 14ஆம் சூத்திரம் ணகர மெய்யீறு, தனிக் குறில் முன் ஒற்று, ய,ர,ழ ஒற்றீறு ஆகியவற்றின் புணர்ச்சி மாற்றமும், 15ஆம் சூத்திரம் இ,ஈ,ஐ ஆகிய ஈற்றின் புணர்ச்சியும் ழகர ளகர ஈற்றுப் புணர்ச்சியும் விவரித்துள்ளன. இப்படி உயிரீற்றுப் புணர்ச்சியும் (21,23,24,26) புள்ளியீற்றுப் புணர்ச்சியும் (16முதல் 20 வரை, 22, 25) மாறி மாறிக் காணப்படுகின்றன.

நேமிநாதமும் இந்த முறையில் அதாவது ஒழுங்கற்ற முறையில் தான் புணர்ச்சியை வருணித்துள்ளது.

உடம்படுமெய்யின் இலக்கணம்(134), குற்றியலுகர ஈறு (14, 20, 21), மெய்யீறு (15, 17, 18), சில உயிரீறு (16, 19) என்று மாறி மாறிப் புணர்ச்சி மாற்றங்களைக் கூறியுள்ளது. ஆகவே, இரண்டு நூல்களிலும் சிறப்பான உத்தி எதுவும் கையாளப்படவில்லை.

## 11.3 நன்னூல் - இலக்கண விளக்க முறை

நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய இரண்டு நூல்களும் புணர்ச்சியை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று மூன்று இயல்களில் விவரித்துள்ளன. அவைகளில் தொகுத்துக் கூறல் என்ற உத்தி அதிக அளவில் பின்பற்றப்பட்டுளளன. உருபு புணரியலில் அகச்சந்தியும், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் ஆகிய இரண்டு இயல்களில் புறச்சந்தியும் விளக்கப் பட்டுள்ளன என்று கொள்ளலாம் ஆனால் இங்கும் உருபு புணரியலில் காணப்படும் இரண்டு சூத்திரங்கள் (255, 255) பதப் புணர்ச்சியைப் பேசுகின்றன. இந்த இரண்டு இயல்களிலும் அகர வரிசைப்படிப் புணர்ச்சிவிதி கூறப்பட்டிருந்தாலும், தொல்காப்பியத் தொகை மரபின்

செல்வாக்கால் உயிரீற்றுப் புணரியல் முதல் பகுதியில் மெய்யீற்றுப் புணர்ச்சியும் விளக்கப்பட்டுள்ளது. இதில் நன்னூலைவிட இலக்கண விளக்கத்தில்தான் தொல்காப்பியத்தின் தாக்கம் அதிகம் காணப்படுகிறது.

நன்னூலார் உயிரீற்றுப் புணரியலில், புணரியலின் பொதுக் கோட்பாடும் (151-55) தொகை மரபின் சாயலாகச் சில பொதுப் புணர்ச்சிகளும் (156, 164) கூறியுள்ளார். இவைகளில் உயிரீறும் மெய்யீறும் அடங்கியுள்ளன. 158, 159, 161 ஆகிய மூன்று சூத்திரங்களும் தொகைமரபின் செல்வாக்கால் உண்டானவை. ஏனெனில் எல்லா ஈற்றுச் சொற்களின் முன்னால், மெல்லினமும் இடையினமும் வரும்போது ஏற்படும் மாற்றம் பற்றித் தெரிவிப்பது தொல்காப்பிய 144ஆம் சூத்திரத்தின் தழுவல். 159ஆம் சூத்திரம் தொல்காப்பியத் தொகை மரபின் 153, 154, 156, 159 ஆகிய சூத்திரங்களின் தழுவலே. இங்கும் உயிரீற்றுப் புணர்ச்சியும் மெய்யீற்றுப் புணர்ச்சியும் சேர்ந்தே விளக்கப் பட்டுள்ளன. முன்னிலை வினைச்சொற்களின் புணர்ச்சியும் (அதுவும் உயிரீறும் மெய்யீறும் உடையவை) நன்னூலில் உயிரீற்றுப் புணரியலிலேயே கூறப்பட்டுள்ளது. இதுவும் தொல்காப்பியத் தொகை மரபு 151, 152 ஆகிய சூத்திரங்களையும் 265 ஆம் சூத்திரத்தையும் தழுவியதே.

தொல்காப்பியர் புணரியலில் கூறிய புணர்ச்சி விதிகளையும் உயிரீற்றுப் புணர்ச்சி என்ற சிறப்பு பற்றி இங்குக் கூறியுள்ளார். உடம்படுமெய் பற்றிய சூத்திரமே இது. உயிர் மயங்கியலில் பல சூத்திரங்களில் (தொல்.204 முதல் 208, 238, 255) கூறியதை ஒரே சூத்திரமாகக் கூறியதும், மரப் பெயர்களின் புணர்ச்சி மாற்றத்தை (தொல். 229, 231, 243, 244, 262, 278, 282, 283) ஒரே சூத்திரத்தில் விவரித்ததும் தொகுத்துப் பொதுமைப்படுத்திக் கூறியதற்கு நல்ல உதாரணங்கள் ஆகும். ஆகவே உயிரீற்றுப் புணரியலில் மெய்யீற்றுப் புணர்ச்சியும் காணப்படுவதற்குக் காரணம் தொல்காப்பியத் தொகை மரபின் செல்வாக்கே. மேலும், தொகுத்துக் கூறும் முறை நன்னூலில் சிறப்பாகக் கையாளப்பட்டிருக்கிறது.

நன்னூல் உருபு புணரியலில் தொல்காப்பியத்தின் புணரியலும் உருபியலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளஃது. ஆயினும், தொகை மரபு - உயிர் மயங்கியல் சூத்திரங்களைத் தழுவிய சூத்திரங்களும் காணப்படுகின்றன. நன்னூலார் சாரியையின் வடிவங்கள் தமிழ் மொழியின் எழுத்தமைப்புக்கு ஏற்ப இருக்கவேண்டும் என்று கொள் ளாததால், தொல்காப்பியர் புணர்ச்சியில் தோன்றல் புணர்ச்சியாகக் கூறியதைச் சாரியையாக உருபு புணரியலில் கூறியுள்ளார்.

மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும் (231)

எனத் தொல்காப்பியர் னகரம் வருவதை மிகுதிப் புணர்ச்சியாகக் கூறியுள்ளார். இத்தோடு கோ என்ற சொல்லைச் சேர்த்து நன்னூலார்

ஆமா கோனவ் வணையவும் பெறுமே (247)

என்று னகரச் சாரியை பெறும் என்று உருபனியலில் கூறிவிட்டார். உருபு புணரியல் என்பதால் தொல்காப்பியர் இரண்டாம் மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சி பற்றித் தொகைமரபில் கூறியதையும் நன்னூலார் அதே இயலில் விளக்கியுள்ளார். பொதுவாகத் தொல்காப்பியத்தைவிட நன்னூலில் சூத்திர வைப்பு முறை ஓரளவு செம்மை உடையது போல் தோன்றுகிறது. ஆனால், வேறு எந்த உத்திச் சிறப்பும் காணப்படவில்லை.

இலக்கணவிளக்கம் நன்னூலைத் தழுவியே புணரியலை அமைத்திருந்தாலும், தொல்காப்பியத்தின் செல்வாக்கும் நன்னூலை விட அதிகமாக உள்ளது. குட்டித் தொல்காப்பியம் என்று அழைக்கப் படுவதற்கு ஏற்பத் தொல்காப்பியத்தை இலக்கணவிளக்கத்தார் மறைமுகமாகவும் நேரடியாகவும் அதிக அளவில் தழுவியுள்ளார்.

தொல்காப்பியத் தொகைமரபுத் தத்துவத்தைப் புரிந்துகொண்டு, நன்னூலார் மெய்யீற்றுப் புணரியலில் கூறிய சூத்திரங்களை இலக்கண விளக்கத்தார் உயிரீற்றுப் புணரியலில் அமைத்துள்ளார்.

| நன்னூல் மெய்யீற்றுப் புணரியல் | இ.விளக்கம் உயிரீற்றுப் புணரியல் | |
|---|---|---|
| 204 | 64 | தொல்காப்பியர் வாசகம் |
| 205 | 66 | நன்னூல் வாசகம் |
| 207, 208 | 81 | --------- |
| 206 | 67 | நன்னூல் வாசகம் |
| 237 | 70 | தொல் வரிசைப்படி நன்னூல்வாசகம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. |

இந்த இடமாற்றத்துக்குக் காரணம் ஒன்றுக்கு மேற்பட்ட ஈறுகளின் விதியை - அதிகபட்சப் பொது விதியை முதலில் கூறிய பின்னரே தனி ஈற்றுக்கும் தனிச் சொல்லுக்கும் உரிய சிறப்பு விதிகளை விளக்கவேண்டும் என்ற கொள்கையே ஆகும். அதாவது புணரியல்களை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் என்று அகர வரிசையில் அமைத்தாலும், பொதுவிதி - சிறப்பு விதி என்று வரும்போது அகரவரிசை முக்கியத்துவம் இழந்து விடுகிறது. இலக்கணக் கோட்பாட்டிற்கு வெறும் வரிசை முறையால் சிறப்பு இல்லை; விதிகள் அமைக்கும் முறையில் பொது - சிறப்பு என்பதே முக்கியம். ஏனெனில், புணர்ச்சி விதிகளைச் சரியான முறையில் வரிசைப்படுத்துவதன் மூலம் சில விதிகளைக் குறைக்க முடியும். எனவே, பொது விதி, சிறப்பு விதி என்பனவே அகர வரிசையை விட முக்கியத்துவம் உடையதாகிறது. ஆயினும், அதே சமயத்தில் பழைய இலக்கண நூல்களின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதைக் காணும்போது, வைத்தியநாத தேசிகர் தொகுத்துக் கூறுதலை அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லையோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

நன்னூலார் உருபு புணரியலைப் பெரும்பான்மையும் அகச் சந்தியாகக் கொண்டார். அதனால், தொல்காப்பியர் புணரியலில் கூறிய வேற்றுமை உருபு வருமிடம், சாரியைகளின் தொகை, அவைகளின் மாற்று வடிவம் ஆகியவற்றையும், உருபியல் கூறிய சாரியை வருமிடத்தையும் சுருக்கி உருபு புணரியல் என்ற தனி ஒரு இயல் அமைத்துக்கொண்டார். இலக்கணவிளக்கத்தார், நன்னூல் இயல் வைப்பு முறையைப் பின்பற்றினாலும் தொல்காப்பியர் செல்வாக்கால் சூத்திர வைப்பு முறையில் சில மாற்றத்தைச் செய்தது பாராட்டுவதற்கு உரியதாய் அமைந்தது மேலே குறிப்பிடப்பட்டது. ஆனால், தொல்காப்பியத்தைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றிப் புணரியல், தொகை மரபு, உயிர் மயங்கியல் என்ற தொல்காப்பிய இயல் வைப்பு முறையை ஒட்டி, உருபு புணரியலில் கூற வேண்டிய சூத்திரங்களையும் உயிரீற்றுப் புணரியலில் கூறியதன் மூலம் அகச்சந்தி, புறச்சந்தி என்ற வேறுபாடுகளைக் கடைபிடிக்காமல் போய்விட்டார்.

புணர்ச்சியை விளக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களின் புணர்ச்சியை ஒன்று சேர்த்து அவைகளிடையே காணப்படும் பொதுமையை விளக்கியும் சில சமயங்களில் பொதுமையை உண்டாக்கியும் விளக்கிய பிறகே அவைகளிடையே உள்ள சிறப்பு விதிகளைத் தொல்காப்பியர் கூறுவார். ஆனால் நன்னூலார் எண்ணுப்பெயரில் இந்த முறையைப் பின்பற்றி மூவிடப்பெயர் புணர்ச்சியை விளக்கும்போது பின்பற்றவில்லை.

இலக்கணவிளக்க உயிரீற்றுப் புணரியலின் முதல் சூத்திரம் (53) புணர்ச்சியின் பொது இலக்கணத்தையும், அடுத்தது (54) புணரும் சொற்களின் தொடரியல் உறவுபற்றியும் பேசுகிறது. உடனே வேற்றுமை, பெயருக்குப் பின்வரும் என்று சூத்திரம் அமைந்துள்ளது. இது நன்னூலில் உருபியலில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், தொல்காப்பியர் புணரியலில் கூறியதால் வைத்தியநாததேசிகரும் உயிரீற்றுப் புணரியலில் வைத்துவிட்டார். அடுத்த மூன்று சூத்திரங்களும் (56 முதல் 58 வரை) புணர்ச்சி மாற்றங்களைப் பொதுநிலையில் விளக்குகின்றன. 59ஆம் சூத்திரம் சாரியைகளின் தொகையையும், 60ஆம் சூத்திரம் அதன் மாற்று வடிவங்களையும் 61ஆம் சூத்திரம் அதன் வருமிடம் பற்றிப் பொதுவாகவும் கூறுகின்றன. முன்னர்க் குறிப்பிட்டதுபோல, நன்னூலார் இந்த மூன்று சூத்திரங்களையும் உருபு புணரியலில் கூறியுள்ளார். இலக்கண விளக்கம், 53 முதல் 58 வரையுள்ள சூத்திரங்களைத் தொல்காப்பியப் புணரியலை ஒட்டி, உயிரீற்றுப் புணரியலில் கூறியதால், 59, 60, 61ஆம் சூத்திரங்களையும் அதே இயலிலேயே சேர்த்துவிட்டார். இதனால், இன்னொரு சூத்திரத்தையும் இங்கேயே சேர்க்கும்படி ஆகிவிட்டது. சில தொடர்களை ஓசை வேற்றுமையால் ஒன்றுக்கு மேற்பட்ட விதமாகப் பிரிக்கலாம் என்பதைத் தொல்காப்பியர் புணரியலில் (141, 142) விளக்கியுள்ளார். அது சொல்லைப் பகுக்கும் முறை பற்றிய விளக்கம் ஆதலால் நன்னூலார் சொல்லதிகாரத்தில் (391) கூறியுள்ளார். ஆனால், இலக்கணவிளக்கத்தார் உயிரீற்றுப் புணரியலிலேயே (62, 63) கூறியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்தில் ஏழ் என்ற எண்ணுப்பெயர் மெய்யீறாகவே இருந்ததால் மெய்யீற்றுப் புணரியலில், அதன் புணர்ச்சி மாற்றங்களை விளக்கினார். நன்னூலார் காலத்துக்கு முன்பே அது ஏழு என்ற வடிவம் உடையதாகிவிட்டதால், அவர் உயிரீற்றுப் புணரியலில், அதன் புணர்ச்சி மாற்றங்களை விவரித்துள்ளார். ஆனால் இலக்கண விளக்கத்தார் மீண்டும் ஏழ் என்று கொண்டு மெய்யீற்றுப் புணரியலில் விவரிப்பது, தமிழ் இலக்கண நூல்கள் மொழி வளர்ச்சியையும், அதனால் ஏற்பட்ட மொழி வரலாற்றையும் புறக்கணித்ததோடு, பேச்சு மொழியையும் அவர் கால இலக்கிய மொழியையும் அலட்சியப்படுத்தியுள்ளன என்பதற்கு உதாரணமாக அமைந்துள்ளது. இலக்கணம் இன்று தங்கள் கால மக்களுக்கும் அறிஞர்களுக்கும் வழிகாட்டும் பண்பை இழந்துவிட்டது; இலக்க ஆராய்ச்சியோ பழமையின் பிரதிபலிப்பாய், நடைமுறை உலகத்தோடு தொடர்பு இல்லாமல் அறிஞர்களின் பொழுதுபோக்கு ஆராய்ச்சியாய் அமைந்துவிட்டது.

## 11.4 தொன்னூல் விளக்க – முத்து வீரிய – சுவாமிநாத முறை

தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய மூன்று நூல்களும் புணரியலை ஒரே இயலில் விவரித்துள்ளன.

தொன்னூல்விளக்க ஆசிரியர் உடம்படுமெய் சூத்திரத்தை எழுத்தின் வகுப்பு என்ற பிரிவில் - அதாவது எழுத்தியலில் கூறியுள்ளார். மேலும், அவர் எழுத்தின் பல்வேறு பிரிவுகளில் ஒன்றாகப் 'புணர்பு' என்ற ஒன்றைக் குறிப்பிட்டு, அதன் விளக்கமாகவே உயிரும் உயிரும் சேரும்போது யகரமும் வகரமும் புணர்வதாகக் கூறியுள்ளார். அதன் மூலம் அவர் யகரமும் வகரமும் அரை உயிர் (Semi vowels). என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறாரா? என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. மற்றபடிப் புணரியலில் அவர் சிறப்பான முறை எதையும் பின்பற்றவில்லை. முதலில் மெல்லினமும் (23, 25) அடுத்து இடையினமும் (26) பேசிவிட்டுப் போலி (27), குற்றியலுகர ஈறு ஆகியவை பற்றியும் விளக்கி, மீண்டும் இடையினம் பற்றி விவரித்துள்ளார். அடுத்து மூன்று சூத்திரங்களில் உயிரீற்றுப் புணர்ச்சியும் (31-33) தமிழ் என்ற சொல்லின் புணர்ச்சியும் பேசுகிறார். இப்படி அகர வரிசையைக் கூடச் சரியாகப் பின்பற்றாமல் விரும்பியபடி விவரித்துள்ளதற்கு எந்தவிதச் சிறப்பும் இல்லை.

முத்துவீரிய உபாத்தியாயரின் புணரியல் அமைப்பு தொல் காப்பியத்தை ஒத்துள்ளது. புணரியல் பொதுக்கோட்பாடு (160-166), வேற்றுமை உருபுகள் (67) -அவைகளின் மாற்று வடிவங்கள் (168-,9) வேற்றுமை உருபு வருமிடம் (170), திணைப் பாகுபாடு (171-2), சாரியை - சாரியை வருமிடம் (175)[4] - அவற்றின் மாற்று வடிவங்கள், உடம்படுமெய் (183) ஆகியவை தொல்காப்பியரின் புணரியலை ஒட்டி

---

4 முத்துவீரியம் பதிப்பாசிரியர் மாள் என்ற சாரியையைக் கூறியிருப்பதாக உரை எழுதியதோடு, இவர் புதிதாகக் கூறியிருப்பது மான் என்பதாகும் என்று விளக்க உரையிலும குறிப்பிட்டுள்ளார். ஆனால், நூலில் எங்கும் மான் சாரியை பற்றிக் குறிப்பிடப்படவில்லை. பதிலாக ஆன் என்பது ஒன்பது என்ற எண்ணுப் பெயரோடு வரும் என்று 23ஆம் சூத்திரத்தில் குறிப்பிடுகிறார். அதுவே சாரியையாகக் கருதத்தகுந்தது. எனவே

அத்தம் மானக் கின்னன் னொன்னின்
கற்றுத் தம்நம் நும்மு மாம்பிற (174)

என்ற சூத்திரத்தில், அத்து, அம், ஆன், அக்கு, இன், அன், ஒன்., இக்கு, அற்று, தம், நம், நும் ஆகிய பிறவும் சாரியை என்றே பொருள் கொள்ள வேண்டும்.

அமைக்கப்பட்டவை என்றாலும், அவைகளுள் ஆ, மா, கோ என்ற சொற்கள் இன் சாரியை பெறும் (175) என்பதை இடையே ஏன் கூறினார்? என்பது விளங்கவில்லை.

184 முதல் 204 வரையுள்ள இருபத்தியொரு சூத்திரங்கள் தொகைமரபு சூத்திரங்களின் தழுவலே.

205 முதல் 233 வரையுள்ள சூத்திரங்கள் உருபியலை ஒட்டிச் சாரியை வருமிடங்களைக் கூறுகின்றன. 234 முதல் 576 வரையில் அகர வரிசையில் உயிரீற்றுப் புணரியலும், 387 இல் புள்ளியீற்றுப் புணரியலும், கடைசி 387 முதல் 457 வரையுள்ள சூத்திரங்களில் குற்றியலுகர ஈற்றுப் புணரியலும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆகவே ஒரு இயலாக வைத்தாலும் சூத்திர வைப்பு முறையில் தொல்காப்பிய இயல் வைப்பு முறையைப் பின்பற்றியுள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆயினும் முத்துவீரிய உபாத்தியாயர் தொகுத்துச் சொல்லியோ வேறு எந்த உத்தியைக் கையாண்டோ விவரிக்கவில்லை.

சாமிநாதம் மொத்தம் இருபத்துமூன்று புணர்ச்சி மாற்றங்களை உயிரீறும் மெய்யீறும் கலந்ததே சொல்லியுள்ளது. வருமொழி பற்றியோ எழுத்தமைப்பு பற்றியோ ஒன்றும் பேசவில்லை. புணர்ச்சி மரபில்தான் வடமொழி எழுத்துகள் தமிழில் அடையும் மாற்றத்தையும் விவரித்துள்ளது.

ஆகவே, பிற்கால இலக்கண நூல்களில் புணர்ச்சி சிறந்த முறையில் வருணிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

# 12. சாரியை

## 12.0 முன்னுரை

சாரியை தமிழ் இலக்கண நூல்களில் காணப்படும் ஒரு பொது இலக்கணக் கருத்து (Grammatical concept). பதினெட்டாம் நூற்றாட்டில் எழுந்த தொன்னூல் விளக்கம் தவிர ஏனைய தமிழ் இலக்கண நூல்கள் எல்லாம் சாரியைகளை எழுத்ததிகாரத்தில்தான் வருணிக்கின்றன; ஆனால் வீரசோழியம் தவிர மற்ற எல்லா நூல்களும் (தொன்னூல்விளக்கம் உட்பட) சொல்லதிகாரத்தில், இடைச் சொல்லின் ஒரு வகையாகவும் சாரியைகளைக் குறிப்பிடுகின்றன (இலக்கணத்தொகை சொல். பக். 284-86; சுவாமி. 54.1 ஆகியவை பார்க்க). தொன்னூல்விளக்கம் மட்டும் தான் சொல்லதிகார முதற் சூத்திரத்திலேயே

> **ஆகுபெயர் இருதிணை ஐம்பால் மூவிடம்**
> **சாரியை எனப்பொதுத் தகுதி ஈராறே.** (42.5-6)

என்று குறிப்பிட்டு, அதே இயலான சொற்பொதுவியலில் சாரியையின் தொகையையும், வேற்றுமையில் சில சாரியைகளின் வருமிடத்தையும் (65-68) விவரிக்கிறது.[1] எனவே தொவியில் முரண்பாடு எதுவும் இல்லை. ஆனால் நேமிநாதம், நன்னூல், இவி, முவீ, சுவாமி ஆகியவை இடைச் சொல்லின் ஒருவகையாகக் குறிப்பிட்டுவிட்டு அதை எழுத்ததிகாரத்தில் கூறுவது முரணாக அமைந்துவிடுகிறது. தொல்காப்பியர் சாரியை பற்றி இடையியலில் நேரடியாகக் குறிப்பிடவில்லை. உரையாசிரியர்கள்தான், **'புணரியல் நிலையிடைப் பொருநிலைக்கு உதவும்'** (735.2) என்ற அடி சாரியையைக் குறிப்பதாகக் கொண்டுள்ளார்கள். அதுபற்றிய ஆய்வு பிற்பகுதியில் (123) மேற்கொள்ளப்படும். இந்த இடவேறுபாடு அல்லது அதிகார வேறுபாடு பின்னால் (12.3) விளக்கப்படும்.

---

1 ஆயினும் தொன்னூல்விளக்க எழுத்ததிகாரத்தில், "தமிழ் வேற்றுமைக்கு அச்சாரவும் பெறுமே"(34) என்ற சூத்திர உரையில் அகரச் சாரியை பெறும் என்று எழுதியிருப்பது (1891ஆம் பதிப்பு & சுப்பிரமணியன் சா.வே. 1078:81) நூலாசிரியர் கருத்துக்கு மாறுபட்டது. அப்படியே 52ஆம் சூத்திரத்தில் எகரச் சாரியை (அ,எ,உ.....) என்று இருப்பது (சுப்பிரமணியன், சா.வே. 1978:86) /ஏ/ என்று இருக்கவேண்டும்.

சாரியை பற்றிய ஆய்வைத் தொல்காப்பியரே விரிவாகவும் விளக்கமாகவும், அதேசமயத்தில் நுணுக்கமாகவும் நுட்பமாகவும் செய்திருக்கிறார். அடுத்து நன்னூலாரே அதைப்பற்றிச் சுருக்கமாக - ஆனால் மற்ற இலக்கணங்களைவிடக் கொஞ்சம் விரிவாகப் பேசியிருக்கிறார்; ஆயினும், முன்னர்க் குறிப்பிட்டபடி நன்னூலார்,

**இதற்கிது சாரியை எனின்அள வின்மையின்** (253.1)

என்று கருதிவிட்டதால், சாரியையின் வருமிடம் பற்றி விரிவாகப் பேசவில்லை. சாரியையின் தொகை பற்றிய சூத்திரத்தில் (244) தொல்காப்பியரை நோக்கச் சாரியைகளைப் புதிய வடிவம் உடையனவாக அவர் விவரித்துள்ளார் என்று பத்தாவது இயலில் (அடிநிலைக் கிளவி, பக்.223-25) சுட்டிக்காட்டப்பட்டு, அதற்குரிய காரணமும் விளக்கப்பட்டது. எனவே, இங்குத் தொல்காப்பியர் கூறிய சாரியையே விரிவாக விளக்கப்படுகிறது.

## 12.1 எழுத்து

தொல்காப்பியர் புணரியலில் வேற்றுமை, அல்வழி என்ற இரண்டுவகைத் தொடர்நிலை உறவுகளைப் பற்றிக் குறிப்பிட்டு, அந்தப் புணர்ச்சியில் எழுத்தும் சாரியையும் வரும் என்ற கூறுகிறார்.

**வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்**
**வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்**
**எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணருங் காலை.** (112)

என்று எழுத்து, சாரியை என்ற இரண்டும் புணர்ச்சியில் வரும் என்று சொல்கிறார். இப்படி வேறு எந்த இலக்கண நூலும் இரண்டு வகையாகப் பிரித்துப் பேசவில்லை (இஸ்ரேல், (1973 : 104; கந்தசாமி 1977 : 23). ஆயினும், தொல்காப்பியர் ‘எழுத்து’ என்று எதைக் கருதினார்? என்று அறிந்துகொள்ள வேண்டும். எழுத்து என்பது தோன்றற் புணர்ச்சியில் வரும் வல்லெழுத்து மெல்லெழுத்து என்றும், சாரியை என்பது பிற என்றும் ஒரு வேறுபாடு சுட்டப் பட்டிருக்கிறது (சண்முகம், 1967 : 110). எழுத்து என்பது ஒரு எழுத்து உடையது. சாரியை ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தினையும் உடையது என்று கருதலாம் என்பார் இஸ்ரேல் (1973 : 114). ஆனால் தொல்காப்பியத்திலேயே ‘ஏ’ என்ற ஒரு எழுத்து சாரியையாகக்

குறிக்கப்பட்டிருப்பது இதற்கு விலக்கு விதியாகக் கருதப்பட வேண்டும் என்றும் அவரே (இஸ்ரேல் ஷி அடிக்குறிப்பு) சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, இந்த இரண்டு விளக்கமும் பொருந்துவதாய் இல்லை. தொல்காப்பியர் னகர மெய் பெறுவதையும் எழுத்துப் பேறாகக் கருதுகிறார். எனவே முதல் விளக்கம் குறை உடையது. தொல்காப்பியரே 'ஏ' என்ற ஒரு எழுத்தைச் சாரியையாகக் கொள்வதால் நூலுக்குள்ளேயே முரண் ஏற்பட்டு இரண்டாவது விளக்கமும் பொருத்தமாய் இல்லை.

பதவியலில் சாரியை பகுப்பு உறுப்பாகக் கருதப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. (பக். 197) ஆனால், தொல்காப்பியத்தின் கொள்கைக்கும் நன்னூலார் கொள்கைக்கும் இதில் வேறுபாடு இருக்கிறது. நன்னூலார் ஆ, மா போன்ற சொற்கள் னகரச் சாரியை பெறும் (248) என்று கூறியிருக்கிறார். அதற்கு,

| | | |
|---|---|---|
| ஆ | : ஆனை | : ஆவை |
| மா | : மானை | : மாவை |

என்று உரையாசிரியர்கள் உதாரணம் தருகிறார்கள். இங்கு ஆ/ன்/ஐ என்றும், ஆ/ஐ என்றும் முதல் வரிசையைப் பகுக்கலாம். இதன்படி ஆனை என்பதில் னகரம் சாரியை ஆகிறது. ஆனால், தொல்காப்பியர் ஆ, மா போன்ற சொற்கள் னகரம் பெறுவதை உயிர் மயங்கியலில் விவரித்துள்ளார் (தொல். 231). அதனால் உரையாசிரியர்கள் ஆன்கோடு, மான்கோடு என்று உதாரணம் தந்துள்ளார்கள். இதன்படி 'ஆன்' என்பது 'ஆ' என்பதன் மாற்று வடிவம் (Stem alternant) ஆகிறது. எனவே, சாரியை என்பதை வேற்றுமை உருபு ஏற்பதற்காக - பெயருக்கு வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும் (Stem formatives) கருதலாம். அப்படியானால், மாற்றுவடிவமாக வரும்போது தோன்றல் புணர்ச்சியாக வருவதெல்லாம் எழுத்து என்றும், வேற்றுமை உருபு ஏற்பதற்காகப் பதப் புணர்ச்சியில் வரும் ஒரு எழுத்தையோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தையோ அல்வழியில் நிலைமொழி, வருமொழி ஆகியவைகளின் மாற்றுவடிவமாகக் கருத முடியாத கூறையே சாரியை என்றும் அழைக்கலாம். 'ஏ' என்பது அளவுப் பெயரில், நாழியே ஆழாக்கு (164), தெற்கே வடக்கு (461) என்று வரும்போது, நாழியே என்பதை நாழி என்பதன் மாற்றுவடிவமாகவோ, தெற்கே என்பதைத் தெற்கு என்பதன் மாற்று வடிவமாகவோ கொள்ளமுடியாது. எனவே, தனி எழுத்து ஆயினும் சாரியை எனக் கருதப்பட்டது; இதனால், மாற்றருபாகக் கருதமுடியாத பகுப்பு உறுப்பாக இருந்தால் சாரியை என்றும், மாற்று வடிவமாகக் கருதக்கூடியது - எழுத்து பகுப்பு

உறுப்பாகக் கொள்ளாதது 'எழுத்து' என்றும் கொள்ளலாம். நன்னூலார் இப்படிப்பட்ட நுண்ணிய வேறுபாட்டை மேற்கொள்ளவில்லை. புணர்ச்சியில் மிகுந்து வரும் எழுத்து வெறும் தோன்றல் (மிகுதல்) விகாரமாகவும் கருதப்படவேண்டும்.

## 12.2 சாரியை

சாரியை ஆய்வில் சாரியையின் எண்ணிக்கை, சாரியையின் வடிவம், சாரியைக்குப் பொருள், சில சாரியைகளின் அவசியம் முதலியனவை பிரச்சனை ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை இன்னும் பல கேள்விகளை உள்ளடக்கியிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தகுந்தது. அந்தப் பிரச்சனைகளையும் அவற்றிற்கரிய விடையையும் காண்பதற்குச் சாரியையின் பொது விளக்கத்தை இந்தப் பிரிவில் பார்ப்போம்.

**வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே** (116)

என்று முதலில் கூறி, அடுத்து அந்தப் பெயர்கள் உயர்திணை, அஃறிணை என்று இரண்டு வகைப்படும் என்று விளக்கி (117),

**அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே** (118)

என்று கூறுவதால், பெயர்ச் சொற்கள் உருபு ஏற்பதற்கு முன்னால் வருவதே சாரியை என்று வரையறுக்கிறார் என்று கொள்ளலாம். ஆயினும் கந்தசாமி (1977 : 123),

> சாரியை பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ள புணர்ச்சி விதிகளை ஒப்புநோக்கின், அவை பெரும்பாலும் அஃறிணைப் பெயர்கட்கே வருவன என்பதும், சில சாரியைகள் உயர்திணைக்கு அறவே வராது என்பதும் (அத்து, வற்று, இக்கு, அக்கு முதலியன) அல்வழிப் புணர்ச்சிக்கு அருகியும் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் பெருகியும் சாரியைகள் வழங்கும் என்பதும் தெள்ளிதின் புலனாகும்.

என்று கூறிய பொதுப்பண்பு ஏற்றுக்கொள்ளத்தகுந்ததே. இங்கு அல்வழியிலும் சாரியை வரும் என்றது வேற்றுமை உருபுக்கு முன்னால் வரும் என்ற குறிப்பிட்ட சூத்திரக் கருத்துக்கு மாறுபட்டிருப்பினும் ஆயிரம் என்பது அத்துப் பெறும் (371) என்பது ஆயிரத்து ஒன்று என உம்மைத்தொகையாக வரும் உதாரணங்களை உள்ளடக்குவதற்காகக் கூறப்பட்டது. எனவே, கந்தசாமி கூறிய பொதுமை ஏற்றுக்கொள்ளத் தகுந்தது.

பொதுவாகச் சாரியை தனிச்சொல்லில் வேற்றுமை உருபிற்கு முன்னால் வருவதை உருபு புணர்ச்சி என்றும், மற்றொரு சொல்லுக்கு முன்னால் வருவது பொருட் புணர்ச்சி என்றும் நச்சினார்க்கினியர் பிரித்துக் காட்டுவார். நன்னூலார் இவற்றையே உருபு புணர்ச்சி, பதப்புணர்ச்சி என்று குறிப்பிடுவதாக முன்னர்ச் சுட்டிக்காட்டப்பட்டது. இங்குப் பதப் புணர்ச்சியில் மட்டுமே அல்வழிப் புணர்ச்சி அடங்குகிறது. உம்மைத்தொகையாக வரும் வேறு சில உதாரணங்களையும் (தெற்கே வடக்கு - உம்மைத்தொகை என்பார் நச்சினார்க்கினியர்) தவிர ஏனையவை வேற்றுமைப் புணர்ச்சியில், அதுவும் உருபோடு தொடர்புடையதாகவே அமைந்துள்ளன.

தொல்காப்பியர் சாரியையின் தொகை கூறும் சூத்திரத்துள் (119) இன், வற்று, அத்து, அம், ஏன், ஆன், அக்கு, இக்கு, அன் ஆகிய சொல்லோடும் அத்தகைய பிறவும் சாரியை என்று கூறியுள்ளார். இளம்பூரணர் பிறவும் என்ற விதப்புக் கிளவியால் 'தாம், நம், நும், எம், கெழு, ஏ, ஐ, ஞான்று என்பனவும் கொள்க' என்று கூறினார். நச்சினார்க்கினியர் 'உம்' என்பதையும் சேர்த்ததோடு 'இவற்றுள் ஞான்று ஒழிந்தன எடுத்தோதுவர் ஆசிரியர்' என்று தொல்காப்பியத் திலேயே வழக்குப் பயிற்சி இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். உரையாசிரியர்களின் இந்தக் கருத்துச் சாரியை எண்ணிக்கை, சாரியைகளாகக் கொள்ளக்கூடியவை ஆகிய இரண்டு பிரச்சனைகளோடு தொல்காப்பிய மூலம் பற்றிய பிரச்சனையையும் எழுப்பியுள்ளது.

உம், கெழு போன்றவற்றை உருபனாகக் கருதவேண்டியவை என்று இஸ்ரேல் (1973:130) குறிப்பிடுகிறார். சாரியை பொருள் உடையது என்று நிலவும் பொதுக்கருத்தின் அடிப்படையில் கந்தசாமி (1973:25),

> சாரியைகளில் வேற்றுமைப் பொருள் பயப்பனவுடன் கெழு வேறாகவும் கொள்ளதக்கது என ஒருபடி மேற்சொன்றுரைத்த உரையாசிரியர்களின் நுட்பத்தினை என் என்பேன்.

என்று வியந்தாலும், வேறொரு கட்டுரையில் (1977:123) அதைப் பற்றிக் குறிப்பிடாமல் 'உம், கெழு இவ்விரண்ட சாரியைகளுக்கும் அதிகாரப் புறனடையில் (481) தொல்காப்பியர் விதி அமைத்தார்' என்று கூறி உதாரணம் மட்டுமே சுட்டிச் சென்றுள்ளார். இதனால் அவற்றைப் பொருளுடைய சாரியைகளாகக் கொள்வதில் அவருக்கே

ஐயம் ஏற்பட்டுள்ளது என்று அறியலாம். இஸ்ரேல் குறிப்பிட்டபடி அவைகளைச் சாரியைகளாகக் கொள்வது பொருந்தாது. உரையாசிரியர்களை ஒட்டி வேங்கடராகலு ரெட்டியார் (1944:189) சாரியைகளின் பட்டியலில் சேர்த்துள்ளார். இந்தச் சூத்திரமே ஐயத்திற்கு உரியது. புள்ளியீற்றுச் சொல்லில் வருவதாக உம், கெழு பற்றிக் (சாரியை என்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை) குற்றியலுகரப் புணரியலில் இறுதி அதிகாரப் புறனடைக்குகு முன் வைத்தது இரண்டு விதச் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளளது (சண்முகம், 1967:173).[2] ஒன்று: சூத்திரம் இடம் மாறிவிட்டதா? என்பது. மற்றொன்று: பிற்சேர்க்கையா? அதாவது இடைச் செருகலா? என்பது. எப்படியாயினும், அவைகளைச் சாரியைகளாகக் கருதுவது பொருந்தாது. எனவே உம், கெழு போன்றவைகளையும் சாரியைகளாக கருதியதால், தொல்காப்பியர் வருணித்த முறையில் உள்ள நுட்பத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாமல் செய்துவிட்டது. ஏனைய சாரியைகளில் 'அம்' என்பது சில சொற்களில் வரும் என்று தொல்காப்பியர் கூறியது பொருந்தாது என்று இஸ்ரேல் (1973:205) கருதுவது தொல்காப்பியரின் இலக்கணக் கோட்பாட்டைப் புரிந்துகொள்ளாமல் கூறியது ஆகும் என்று பின்னால் (12.4) விளக்கப்படும். 'ஒன்' என்பதைச் சாரியையாகக் கருதியதும் சிறப்பாகக் கருதமுடியாது (12.6 பார்க்க).

சாரியை பற்றிய அடுத்த பிரச்சனை சாரியை பொருள் உடையதா? என்பது. அதற்கு அடிப்படையாகச் சாரியையை ஏதாவது சொல்வகையைச் சார்ந்ததாகக் கருத வேண்டுமா? என்பதைப் பொறுத்தே அந்தக் கேள்விக்கு விடை தரமுடியும். இதுவே சாரியையை வருணிக்க வேண்டிய இடம்பற்றியும் நிர்ணயிக்க உதவுகிறது. எனவே, சாரியையின் சொல் தன்மையைப்பற்றி அடுத்துப் பார்க்கவேண்டும்.

## 12.3 இடையியலில் சாரியை

தொல்காப்பியர் இடைச்சொல்லின் வகைகளைத் தொகுத்துக் கூறும்போது.

---

2 This Sutra (487) is evidently misplaced in this chapter (Kurriyalukarappunariyal). Since it deals with augments not listed by Tolka:ppiyar, it can be argued that it is a later addition. -Shanmugam, 1967: 173.

இங்கு augments (சாரியை) என்பதும் பொருந்தாது. ஏனெனில் சூத்திரத்தில் சாரியை என்பது பயன்படுத்தப்படவில்லை.

புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும் (735.2)

என்ற ஒரு வகையைக் குறிப்பிடுகிறார். இது சாரியையைச் சுட்டுவதாக உரையாசிரியர்களில் சேனாவரையர் முதலானவர்கள் கொள்கிறார்கள். உதாரணம் சேனாவரையர் உரை விளக்கம்:

> பொருணிலைக்குதவுதலாவது எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பதுபட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச்சாரியை அப்பொருள் தன்மைப் பன்மை என்பதுபட வருதலுமாம். அல்லனவும் தாஞ் சார்ந்து வரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையதாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால் சாரியை மொழியாகா.

இங்கு அவரே பொருளை அறிய உதவுவதாகவும் அதனால் தான் சாரியை சொல் ஆவதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, சொல்லாகக் கருதப்படுவதற்குப் பொருள் உபகாரம் உடைமையே காரணம் ஆகிறது. தெய்வச்சிலையார், சாரியை வேற்றுமைக்குரியன; அல்வழிக்கு உரியன என்று பாகுபடுத்தலாம் என்றும், சாரியை இடைச்சொல் என்ற குறி பெறும் என்றும் கூறுகிறார்.

> பொருள் நிலைக்கு உதவலாவது அல்வழிப் பொருட்கு உரியன இவை, வேற்றுமைப்பொருட்கு உரியன இவையென வருதல். அவையாவன இன்னே, வற்றே என்பன முதலாயின. அவை சாரியை யன்றோ எனின், அவை இடைச்சொல் எனவும் ஒரு குறி பெறும் என்றவாறு.

இங்குச் சாரியை இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் என்பது பொருந்தாது. ஏனெனில் சில (அத்து போன்றவை) அல்வழியிலும் (ஆயிரத்து ஒன்று) வேற்றுமையிலும் (வெயிலத்துக் கொண்டான்) வரும். சில (ஏ என்ற சாரியை) அல்வழியில் மட்டும் வரும். மேலும் அவர் சாரியை பொருள் உடையது என்றே கருதுகிறார் என்பது, இடைச்சொல் என்று குறிப்பதால் பெறப்படுகிறது. தொல்காப்பிய உரைக் கருத்துகளை ஒட்டியே நன்னூல் '**வேற்றுமை, வினை, சாரியை, ஒப்புருபுகள்** (425.1) என்று இடையியல் முதல் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொன்னூல்விளக்கம் இந்தக் கருத்துகளை ஒட்டியே சாரியைச் சொல் என்று கருதி சொல்லதிகாரத்தில் வைத்திருக்க வேண்டும்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் மட்டும் சாரியைகளை வருணித்துள்ளார் என்று கொண்டால் சொற்களில் பகுக்கும்போது சாரியை ஒரு சொல்லாக - உருபாக (morph) அமைந்து தொகுக்கும்போது சாரியை உருபனாக அமையாமல் புணர்ச்சியில் தோன்றுவனவாக அமைகிறது என்று ஆகும். சாரியை உருபன் நிலையில் புதை நிலையில் அமையாததால் சொல்லதிகாரத்தில் அவைகளுக்கு இடம் இல்லை என்று தொல்காப்பியர் கருதுகிறார்.

நன்னூலார் எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் சாரியை பற்றிப் பேசுவது புறநிலை, புதைநிலை என்று வேறுபாடு சொய்யவில்லை என்று பொருள்.

தொன்னூல்விளக்கம் சாரியைகளைத் சொல்லதிகாரத்தில் மட்டும் விளக்கியது அவை புணர்ச்சியில் வருவதாகக் கருதுவது சிறப்பாக இருக்காது என்று கருதி வருணனை மொழியியலார் போலச் சொல்லியல் நோக்கில் வெற்றுருபு (Empty morph) என்று கருதவைக்கிறது.

தொல்காப்பியருக்குச் சாரியை இடைச்சொல் என்ற கருத்தோ சாரியை பொருள் உடையது என்ற கருத்தோ உடன்பாடாக இருக்கமுடியாது என்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது. இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

1. எல்லாச் சாரியையும் வற்று, நம் என்பனபோலப் பொருள் உடையதல்ல. ஆனால், இங்கு இன் போன்ற சாரியைகள் உருபுப் பொருள் உடையன என்று கால்டுவெல்லும் அவருக்குப் பின்னால் வந்தோரும் கருதுகிறார்கள். அது தவறான கருத்து என்று அடுத்த பிரிவில் விளக்கப்படும் (12.4).

2. வற்று, நம் ஆகிய இரண்டும் 'எல்லாம்' என்ற சொல் உயர்திணையா? அஃறிணையா? என்று வேறுபடுத்தி அறிய உதவுகிறது என்றால், அது கேட்போன் நோக்கில் மட்டுமே உண்மை. பேசுவோன் 'எல்லாம்' என்பதின் பொருளை முன்னரே தெரிந்துகொண்டுதான், அதற்கேற்ற சாரியையைப் பயன்படுத்துவான். அப்படித் தெரியாமல் தவறான சாரியையைப் பயன்படுத்தினாலும் கேட்போன் அந்தச் சொல் வரும் பிற சூழலால் அதனுடைய சரியான திணையைத்

தெரிந்துகொள்வான். அப்போது (பேசுவோன் தவறாக உபயோகப் படுத்தியபோது) கேட்போன், பேசுவோனுடைய மொழி தவறு உடையது என்றோ அல்லது அவன் மொழியைச் சரியாகக் கற்றுக்கொள்ளவில்லை என்றோ கருதுவானே தவிர, தவறான பொருள்கொள்ளமாட்டான்.

3. புணர்ச்சியில் சொல்லின் பொருளோ தொடரின் பொருளோ மாறாது. ஏனெனில் மேலே கூறியபடிச் சரியான புணர்ச்சி மாற்றமே அந்தச் சொற்களின் பொருளின் அடிப்படையிலோ அல்லது தொடர் நிலை உறவின் அடிப்படையிலோ ஏற்படுகிறது என்பது புணரியல் ஒன்பதாவது இயலில் (பக். 211-13) விளக்கப்பட்டது.

(i) சாரியையைப் புணர்ச்சியில் வருவதாகக் கொண்டதும், (ii) எழுத்ததிகாரத்தில் கூறியதும் (iii) சில தொடர்களில் சாரியை, உருபினுடைய பொருள் உடையது (ஆடிக்குக் கொண்டான்) போல அமைந்திருப்பதைக் கற்பித வடிவம் படைத்து உருபு இல்லை என்று கருதும்படி அமைத்திருப்பதும் சாரியைக்குப் பொருள் இல்லை என்று தொல்காப்பியர் கருதுகிறார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. எனவே, 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதந' என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் பொருந்தாது; வேறு பொருள் கொடுக்க முயலவேண்டும். இப்பொழுது அந்த அடி மேனிலை ஒலியன்கள் (Supra segmental phonemes) மேனிலை உருபன்களாகச் செயல்படுவதைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது (சண்முகம், 1992 : 105-16). அதன் வன்மை மென்மை விவாதிக்கப்படவேண்டும்.

நச்சினார்க்கினியர் 128சூ. உரையில் இக்குச் சாரியை (ஆடிக்குக் கொண்டான்) இடப்பொருட்டு என்று விளக்குவதால் சாரியை பொருள் உடையது என்றாகிறது. ஆனால் அவர் 248சூ உரையில் அதே உதாரணத்தைக் காட்டி 'இதற்குக் கண்ணெனன் உருபு விரிக்க' என்று கூறும்போது சாரியைக்குப் பொருள் இல்லை என்று ஆகிறது.

ஆயினும், சாரியையைப் பகுப்பு உறுப்பாகவும் பொருள் அற்றதாகவும் கருதி, வருணனை மொழியியலாளர் வெற்று உருபு (Empty morph) எனக் கொண்டு சொல்லதிகாரத்தின் பகுதியாகவே விளக்குகிறார்கள். தமிழிலும் வருணனை மொழியியலை ஒட்டி எழுதப்பட்ட சில இலக்கண நூல்களில் (உதாரணம் : சுப்பிரமணியன், ச.சே. 1965:63; அகத்தியலிங்கம் & சண்முகம், 1970:117-21) சொல்லியலில் அதாவது பெயர்ச்சொல்லில் வரும் இலக்கணக் கூறாகக் கருதிச் சாரியை வருணிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தகுந்தது. எனவே,

தொன்னூல்விளக்கம், உரையாசிரியர்கள் கருத்தை ஒட்டிச் சொல்லதிகாரத்தில் கூறுவதாலும், பதவியல் சொல்லதிகாரத்தின் பகுதியாகக் கருதப்படுவதாலும், அது வருணனை மொழியியலின் முன்னோடியாகப் பல வழியில் அமைந்திருப்பதாலும், வீரமாமுனிவர் சொல்லியல் நோக்கிலேயே சொல்லதிகாரத்தில் விவரித்துள்ளார் என்று கருதலாம்.

## 12.4 சாரியையின் உருபுப் பொருள்

மேலே குறிப்பிட்ட சாரியைக்குப் பொருள் இல்லை என்ற கருத்துக்கு மாறாகப் பொருள் உடையது என்ற கருத்து மொழியியலாளர்களிடையே காணப்படுகிறது. அதன் வன்மை மென்மைகளைப் பார்ப்போம். சாரியைக்கும் உருபுப் பொருள் உண்டு என்று கால்டுவெல் (1856:259) பின் வரும் கருத்தில் விளக்கியுள்ளார்.

"சாரியை ஏற்கும் பெயர் ஏழாம் வேற்றுமையாகவும், சில சமயங்களில் ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளில் வரும் பெயராகவும் அல்லது பெயரடையாகவும் பயன்படும் ஆற்றல் பெற்றிருக்கிறது. தமிழ் இலக்கண நூல்கள் சாரியை வேற்றுமை உருபு அல்ல என்ற கருத்தை உடையன; ஆயினும் ஏழாம் வேற்றுமை உருபும் ஆறாம் வேற்றுமை உருபும் பயன்படும் எல்லா இடங்களிலும் சாரியையை மட்டும் ஏற்கும் சொற்களைப் பயன்படுத்தலாம். அவை பெயரடையாகக் கையாளப்படுவதைத் தமிழ் இலக்கணங்கள் ஒத்துக் கொள்கின்றன. ஆனால் அவை பெயரடையாக உபயோகப்படுவது எனக்கு இரண்டாம் பட்சமாகவே தோன்றுகிறது பெயரடைக்குரிய வேறு விகுதிகள் பல மொழிகளில் ஆறாம் வேற்றுமை உருபாகவோ அமைவதால் சாரியையும் ஏழாம் வேற்றுமை உருபாகவோ அல்லது ஆறாம் வேற்றுமை உருபாகவோ முதலில் இருந்திருக்க வேண்டும்".[3]

---

3 This inflected form of the noun is frequently used by itself without the addition of any case termination and when so used it has sometimes a locative, sometimes a possessive or adjectival force... Tamil grammarians hold that the inflection is not a case sign though they cannot but admit that for almost every purpose for which the possessive or locative case signs are used, the oblique case, or inflected form of the noun may be used instead. They admit that it is used adjectivally but it appears to me, and that it was originally like, many other adjective formatives in various languages a sign of the possessive or locative.

Caldwell, 1856 : 259.

ஆகவேதான் பின்னால் வந்த அறிஞர்கள், இலக்கண ஆசிரியர்கள் சிறப்பாகத் தொல்காப்பியர் கூறிய சாரியை உருபுப் பொருள் என்று விளக்கத் துவங்கினார்கள். மீனாட்சிசுந்தரன் (1959), இஸ்ரேல் (1973:113-30), கந்தசாமி (1977) ஆகியோருள் இஸ்ரேல் மட்டுமே ஒவ்வொரு சாரியையும் என்னென்ன பொருளில் வருகிறது என்பதை விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

சாரியை உருபு புணர்ச்சியிலும் பதப் புணர்ச்சியிலும் வரும் என்பது மேலே சுட்டப்பட்டது. உருபு புணர்ச்சியில் வரும் சாரியை வருணனை மொழியியல் வெற்றுருபோடு ஒத்தது என்பதை ராதா கிருஷ்ணன் (1964) முதலில் சுட்டிக்காட்டினார். அதுபற்றிய முழு கோட்பாட்டு விளக்கம் குமாரசுவாமிராஜா (1970அ) எழுதியுள்ள கட்டுரையில் காணப்படுகிறது.

பதப் புணர்ச்சியில் வரும் சாரியை உருபுப் பொருள் உடையது என்பதே விவாதத்துக்கு உரியது. உருபு புணர்ச்சியில் வரும் சாரியை மட்டுமே வெற்றுருபு என்று மொழியியலாளர் கருதுகின்றனர். இதை இஸ்ரேல் (1973 : 115) தெளிவுபடுத்தியுள்ளார்.[4] எனவே, பதப்புணர்ச்சியில் வரும் சாரியைகளே விரிவாக ஆராயப் படவேண்டும்.

பதப் புணர்ச்சியில் வரும் சாரியைகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1. உருபு புணர்ச்சியிலும் பதப் புணர்ச்சியிலும் வரும் இன், வற்று, அத்து, ஒன், ஆன், அன் ஆகிய சாரியைகள் இந்தப் பிரிவில் அடங்கும். தொல்காப்பியரின் கருத்துப்படி ஆன் என்பது இரண்டு இடத்திலும் வந்தாலும், அது பதப் புணர்ச்சியில் மட்டுமே வருவதாகக் கொள்ளப்படவேண்டும் என்று பின்னால் விளக்கப்படும்.

2. பதப் புணர்ச்சியில் மட்டும் வருவது இக்கு, அக்கு அம் என்ற மூன்று சாரியைகளே. இங்கு அக்குச் சாரியை உருபுப் பொருளில் வருவதாக இஸ்ரேல் (1973:127) விளக்கவில்லை. அதை அகரமாகக் கொண்டிருக்கலாமோ? என்பது இஸ்ரேல் எழுப்பும் வினா. அதற்கு குமாரசுவாமிராஜா (1972) பதில் கூறியுள்ளார். அது

---

4 Thus it may be concluded that the *ca:riyai* occurring in inflexions are empty morphs and those occurring in word combinations mostly have the force of case signification.

Israel, 1973 : 115

அடிநிலைக் கிளவி என்ற பத்தாவது இயலில் (பக்.225) விளக்கப் பட்டுள்ளது. அம் சாரியை ஆறாம் வேற்றுமைப் பொருள் உடைய தாயினும் சாரியை இல்லாமலும் அந்தப் பொருள் உணர்த்தலாம் என்று கொண்டு, அது பொருள் அற்றது என்று இஸ்ரேல் (1973 : 124) குறிப்பிடுகிறார்.[5] ஆயினும், அதுவும் சில பிரச்சனையைத் தோற்றுவித்துள்ளது. அது பின்னால் விளக்கப்படுகிறது.

ஒன் சாரியை பற்றிய விமர்சனம் அடுத்த பிரிவில் விளக்கப் படும். எனவே, அதையும் நீக்கினால் உருபு புணர்ச்சியிலும் பதப் புணர்ச்சியிலும் இன், வற்று, அத்து, அன் ஆகியவையே வருவதாக அமையும். இந்தச் சாரியைகள் ஐந்தாம், ஆறாம், ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருகின்றன என்ற இஸ்ரேல், சூத்திர உரை மேற்கோளிலிருந்து உதாரணம் காட்டியுள்ளார்.

**ஆறாம் வேற்றுமை**

| | | | |
|---|---|---|---|
| இன் : | ஆடூஉவின்கை | ஆடு+இன்+கை | (தொல்.271) |
| | மகடூஉவின்கை | மகடூஉ+இன்+கை | (271) |
| | சேவின்கோடு | சே+இன்+கோடு | (279) |
| | வண்டுவின்கால் | வண்டு+இன்+கால் | (420) |
| இன்~அத்து : | மகவின்கை~ | மக+இன்+கை | (420) |
| | மகத்துக்கை | மக+அத்து+கை | (219) |
| இன்~அன் : | பெண்டின்கை~ | பெண்டு+இன்+கை | (420) |
| | பெண்டன்கை | பெண்டு+அன்+கை | (421) |
| வற்று : | பலவற்றுக்கோடு | பல+வற்று+கோடு | (227) |
| | அவையற்றுக்கோடு | அவை+வற்று+கோடு | (281) |
| | எல்லாவற்றுக்கோடு | எல்லாம்+வற்று+கோடு | (322) |
| | அவற்றுக்கோடு | அவ்+வற்று+கோடு | (378) |
| அன் : | அதன்கோடு | அது+அன்+கோடு | (263) |
| | யாதன்கோடு | யாது+அன்+கோடு | (422) |

5 The adjacent nouns, between which *-am-* intervenes are of genitival relationship. The presence and absence of *-am-* in between the nouns combined are in free variation and thus *-am-* makes no difference in meaning.

Israel, 1973 : 124.

ஐந்தாம் வேற்றுமை

| | | | |
|---|---|---|---|
| அத்து : | கலத்துக்குறை | கலம்+அத்து+குறை | (168) |
| இன் : | பனையின்குறை | பனை+இன்+குறை | (169) |
| | காவின்குறை | கா+இன்+குறை | (169) |

ஏழாம் வேற்றுமை

அத்து :

| | | |
|---|---|---|
| நிலாவத்துக்கொண்டான் | நிலா+அத்து+கொண்டான் | (228) |
| பனியத்துக்கொண்டான் | பனி+அத்து+கொண்டான் | (241) |
| வளியத்துக்கொண்டான் | வளி+அத்து+கொண்டான் | (242) |
| மழையத்துக்கொண்டான் | மழை+அத்து+கொண்டான் | (287) |
| விண்ணத்துக்கொண்டான் | விண்+அத்து+கொண்டான் | (402) |
| வெயிலத்துக்கொண்டான் | வெயில்+அத்து+கொண்டான் | (377) |
| இருளத்துக்கொண்டான் | இருள்+அத்து+கொண்டான் | (402) |

இன் :

பனி(241), வளி(242), மழை(287), வெயில்(377), இருள்(402) ஆகியன இன் சாரியை பெறும். எனவே அத்துச்சாரியை உறழ்ந்துவரும்.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி அன் சாரியைக்கு மூன்றாம் வேற்றுமைப் பொருளும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒன்றன்காயம் ஒன்று+அன்+காயம்
'ஒன்றனாற் கொண்ட காயம்' என விரியும் (419 உரை)

அல்வழி (உம்மைப்பொருள்) : அத்து. ஆயிரத்தொன்று (317)

இந்த உதாரணங்கள் அந்தந்த உருபுப் பொருளில் அமைந்துள்ளன என்ற உண்மையை யாருமே மறுக்கமுடியாது. இதில் யாருக்கும் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், இங்குள்ள பிரச்சனை, இவைகளை மட்டும் வைத்து இலக்கணம் எழுதவேண்டுமா? அல்லது தமிழில் உள்ள பிற தொடர்களையும் - சிறப்பாக உருபு புணர்ச்சியாக வரும் தொடர்களையும் - வேறுவிதமாக வரும் வேற்றுமைத் தொடர்களையும் கவனிக்கவேண்டுமா? வேண்டாமா? என்பதே.

தொல்காப்பியர் இந்தக் கேள்விக்கும், பின்னால் கூறிய முறையை ஒட்டியே (அதாவது மொழியின் முழு பயிற்சியை எடுத்துக் கொண்டு) பதில் இறுப்பார்; அந்த முறையைத் தானும் பின்பற்றி யுள்ளார் என்பதே உண்மை. ஏனெனில் மேலே காட்டிய உதாரணங் கள் உருபுப் பொருள் உடையன என்று கொண்டால், அவைகளைச் (இன், அத்து போன்றவைகளை) சாரியை என்ற பெயரால் அழைத்தது பெருங்குற்றம் ஆகிவிடும். தொல்காப்பியர்,

**மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை.** (218)

**பனியென வரூஉம் காலவேற் றுமைக்கு**
**அத்தும் இன்னும் சாரியை ஆகும்.** (241)

என்று சில இடங்களில் சாரியை என்றே பயன்படுத்தியுள்ளார். எனவே உருபுப் பொருள் உடையன, என்றால் சாரியை என்ற சொல் பிரயோகம் தவறு. அவை உருபு என்று அழைக்கப்பட வேண்டும். மேலும்,

**பலவற் றிறுதி உருபியல் நிலையும்.** **(220)**

**சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்.** **(263.1;7 281)**

**உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.** **(324)**

**எண்ணுப்பெயர்க் கிளவி உருபியல் நிலையும்.** **(419)**

என்று அவை உருபு புணரியலில் வந்ததுபோலச் சாரியையாகவும் வரும் என்று மாட்டெறிந்து கூறியதும் தவறாகக் கருதப்படவேண்டும். ஏனெனில் உருபு புணரியலில்தான் அவை சாரியை; பதப்புணர்ச்சியில் அவை உருபுகள். 'ஒருவழி ஒப்புமை' என்று கூறி ஒருவேளை தப்பிக்கலாம். அது தொல்காப்பியரின் இலக்கணக் கோட்பாட்டுக்கு மாறுபட்டது.

பொதுவாகத் தமிழ் அமைப்பில்

1. உருபு புணர்ச்சியில் சாரியை வரும். இங்கு எல்லா வேற்றுமை உருபோடும் சாரியை வரும்.[6]

---

6 உருபு புணர்ச்சியில் சாரியை பெற்றும் பெறாமலும் இருக்கிற தன்மை மூன்றாம் வேற்றுமை உருபான 'ஒடு' மட்டுமே உடையது. இதை உணர்ந்தே தொல்காப்பியர்,

.............. ................ **சாரியை யியற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவையும் ஒக்கும்** (132)

என்று கூறியுள்ளார்.

2. பதப் புணர்ச்சியில் சாரியை இல்லாமல் உருபு மட்டும் வரும்.

| | | |
|---|---|---|
| ஆறாம் வேற்றுமை : | இன்மையது இழிவு | (தொல்.987.9) |
| | வேந்தனது தொழில் | (ஐங்குறு. 451) |
| ஏழாம் வேற்றுமை : | ஈற்றில் நின்று | (தொல். 493) |
| | வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத்து மிகுதல் | (தொல். 295) |
| | போக்கும் வரவும் மனைவிக்கண் தோன்றும் | (தொல். 1171) |

3. சாரியையும் உருபும் இல்லாமல் வேற்றுமைப் பொருள்பட நிற்றல்

மரக்கோடு - ஆறாம் வேற்றுமை
குளவாம்பல் - ஏழாம் வேற்றுமை

4. ஒன்றுக்கு மேற்பட்ட சாரியை உருபு புணர்ச்சியில் வருதல்.

மரத்தினான் < மரம்+அத்து+இன்+ஆன் (தொல்.1026.4)
புலத்திற்கு < புலம்+அத்து+இன்+கு (கலி. 78.19)

இவைகளை மனதில் கொண்டு இலக்கணம் எழுதினால் எப்படி இருக்கும்? மறு வருணனை செய்து பார்ப்போம். சாரியை பொருள் உடையது என்று கொண்டால், தமிழ்மொழி அமைப்பில் பல நிலைகள் இருக்கின்றன என்று புலப்படும். முதலில் ஆறாம் வேற்றுமையை எடுத்துக்கொள்வோம்.

1. இனது, வற்றது, அத்தது போன்று சாரியையும் உருபும் சேர்ந்து ஆறாம் வேற்றுமையாய் வரும்.
2. உருபு மட்டும் வரும். 'அது' மட்டும் ஆறாம் வேற்றுமை.
3. சாரியை மட்டும் வரும். இன், அத்து என்பன மட்டும் ஆறாம் வேற்றுமை

இங்குச் சாரியை எல்லா உருபோடும் வரும் என்பதால், அது பல நிலைகளை உடையதாக ஆகிறது.

1) இன், வற்று, அத்து என்பவை பிற உருபுகளோடும் சிறப்பாக ஆறாம் வேற்றுமை உருபோடும் சேர்ந்து (அ) பொருள் இல்லாமல் அமையும். அப்போது தனியே வந்தால் (ஆ) ஆறாம் வேற்றுமைப்

பொருள் உடையது என்பது எப்படிப் பொருந்தும்? வேறுவிதமாகச் சொன்னால், சாரியை ஆறாம் வேற்றுமை உருபுப் பொருள் உடையது என்றும், உருபு புணர்ச்சி எல்லாம் ஆறாம் வேற்றுமை உருபும் (அதாவது சாரியையும்) பிற வேற்றுமை உருபும் சேர்ந்து, பிற உருபின் பொருள் படுகிறது என்றும் அமையும். உதாரணமாக வண்டினை என்பது ஆறாம் வேற்றுமை 'இன்'னும் இரண்டாம் வேற்றுமை 'ஐ' உருபும் சேர்ந்து பின்னால் வரும் இரண்டாம் வேற்றுமை பொருள்படுகிறது என்று ஆகும்.

2) சாரியை இரண்டு தன்மை பெறுகிறது. உருபு புணர்ச்சியில் வெற்றுருபு; பதப் புணர்ச்சியில் வேற்றுமை உருபு. அப்படியானால் இரண்டையும் ஒரே பெயராக அழைக்கும் முரண்பாட்டைப் பற்றிக் கவலைப்படாமல், ஆறாம் வேற்றுமை உருபுகளாக இன், வற்று, அத்து ஆகியவற்றையும் சேர்த்து உருபின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டும்; அப்படியே ஏழாம் வேற்றுமையும் ஆகும். இதனால் ஒரே வடிவம், வெற்றுருபு, ஆறாம் வேற்றுமை உருபு, ஏழாம் வேற்றுமை உருபு என்று பல நிலையில் பயன்பட்டு, இலக்கணத்தில் குழப்பம் மிகும்.

இப்படிச் செய்யாமல் பதப் புணர்ச்சியிலும் வெற்றுருபு என்று கொண்டால் வேற்றுமைத் தொகையில் உருபு கெட்டு, சூனிய மாற்றுருபாக வருவதுபோல இங்கும் அமைந்து, எங்கும் ஒரே தன்மை உடையதாக ஆகும். இதனால் இலக்கணத்தில் எளிமை ஏற்படுவதாலும், குழப்பம் தவிர்க்கப்படுவதாலுமே தொல்காப்பியர் பதப் புணர்ச்சியிலும் வெற்றுருபு என்று கொண்டு, சாரியை என்ற பொதுக் கலைச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

ஏழாம் வேற்றுமையைப் பொறுத்த வரையில் அந்தப் பெயர்களே காலப்பெயர்கள். அதனால் அவை அந்தப் பொருளை உணர்த்துகின்றனவே தவிர, பெயர்ச்சொல்லோடு வரும் விகுதி அல்ல. இப்படியே பதப்புணர்ச்சியில் வருவனவற்றையும் வெற்றுருபாக எடுத் திருக்கிறார் என்பது பின்னால் புலப்படுத்தப்படும். எனவே இங்கு வந்துள்ள வடிவங்களை வெற்றுருபாகக் கருதிச் சாரியை என்று கொள்வதே சிறப்பு.

உருபு புணர்ச்சியிலும் பதப் புணர்ச்சியிலும் வருவதாகத் தொல்காப்பியரால் குறிக்கப்பட்ட ஆன், உருபு புணர்ச்சியில் தவறான பகுப்பாலேயே வருகிறது என்ற இஸ்ரேல் (1973:128)

கருதுகிறார்.[7] இதற்கு முக்கியக் காரணம் வெங்கடராசுலு ரெட்டியார் (1943:186) அதைச் சாரியையாகக் கருதியுள்ளதுதான். ஆனால், தொல்காப்பியர் உருபியலில் சாரியைகளின் வருமிடம் மட்டும் கூறவில்லை, சில பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது பெறும் மாற்று வடிவங்களையும் விவரித்துள்ளார். உதாரணமாக நீ என்பது நின் என்றும் (179) தாம், நாம் முதலியன முறையே தம், நம் என்றும் மாறுவதையும் வருணித்துள்ளார். ஆகவே 199ஆம் சூத்திரம் ஆன் சாரியையைக் கூறுவதாக எடுத்துக்கொள்ளாது, ஒருபஃது, இருபஃது என்பதை முறையே ஒருபான், இருபான் என்ற மாற்று வடிவங்களை உடையதாக ஆகிறது என்று விளக்குவதாகக் கொள்ளலாம். இந்த மாற்று வடிவம் வேற்றுமை உருபு ஏற்கும் போது உறழ்ச்சியாக வரும் என்றே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்; மேலும் ஒன்பதற்குறிய மாற்றுவடிவமாக ஒன்பான் என்பதைப் பெயராகவே தொல்காப்பியர் (470) பயன்படுத்தியிருப்பதும் (இந்த உண்மையை இஸ்ரேல் எடுத்துக் காட்டியுள்ளார்) இந்த உண்மையை வலியுறுத்தும். எனவே, 199ஆம் சூத்திர ஆன் சாரியை எண்ணுப் பெயரின் மாற்று வடிவம் பற்றியது என்று கருத வேண்டும்.

ஆன் சாரியை ஏழாம் வேற்றுமைப் பொருள் உடையதாகவே கருதப்படுகிறது (இஸ்ரேல், 1973 : 126). இவை இகர (247) ஐகார (286) மகர (337) ஈற்று நாட்பெயரை (நட்சத்திரப் பெயர்) அடுத்து வருவதாகவே தொல்காப்பியர் வருணித்துள்ளார். இந்தப் பெயர்கள் ஏழாம் வேற்றுமைப் பொருளான காலப்பொருளை உடையன. எனவே அந்தக் காலப்பொருளின் பின்வரும் வடிவம் காலப்பொருளை உணர்த்துகிறது என்று கருத வேண்டியதில்லை. இப்படிக் கருதியே இங்கு வரும் வடிவத்தைச் சாரியை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

பதப் புணர்ச்சியில் மட்டும் வரும் சாரியைகளில் இக்கு என்பதும் ஒன்று. இந்தச் சாரியைக்கு ஆடிக்குக் கொண்டான், சித்திரைக்குக் கொண்டான் என்றே உரையாசிரியர்களும் இலக்கண

---

7 The ca:riyai -a:n occurs both in inflections and in word combinations. But an analytical study will glean the fact that it does not occur in inflection. The only instance of its occurance explicated by Tolka:ppiyar (ie. S.199) is arrived at by wrongly segmenting the words.

Israel, 1973 : 126

ஆய்வாளர்களும் உதாரணம் கொடுக்கிறார்கள். இது முன்னர்க் குறிப்பிட்டபடி இகர (248) ஐகார (236) ஈற்றுத் திங்கள் (மாதம்) பெயருக்குப் பின்னால் வருவதாகவே தொல்காப்பியரால் கூறப் பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் 126ஆம் சூத்திர உரையில் இஃது 'இடப்பொருட்டு' எனவும், 248ஆம் சூத்திர உரையில் அதே உதாரணங்களைக் கொடுத்து 'இதற்குக் கண் உருபு விரிக்க' என்றும் எழுதுகிறார். உண்மையில் இந்த உரை விளக்கங்களுக்கு இடையே வேறுபாடு உண்டு. பின்னால் உள்ள விளக்கப்படி (248ஆம் சூத்திரம்) அந்தத் தொடர்கள் ஏழாம் வேற்றுமைத் தொகையாகவே அமையும். எனவே, உருபை விரித்து அந்தப் பொருளைப் பெறவேண்டும் என்பதே அதற்குப் பொருள். அப்படியானால் அந்தத் தொடர்களே ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளைத் தரவில்லை என்று ஆகிவிடுகிறது. ஆனால் 126சூ. உரைவிளக்கம் அந்தத் தொடர் தொகையா? விரியா? என்று தெளிவுப்படுத்தவில்லை. எனினும், இன்று பலரும் அந்தத் தொடர் ஏழாம் வேற்றுமைப் பொருளையே தருவதாக எடுத்துக் கொண்டு விளக்கு கிறார்கள். (உ-ம். இஸ்ரேல், 1973 128; கந்தசாமி, 1973 : 24). இஸ்ரேல் தொல்காப்பியத்தில் உள்ள

காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்
.................. .................... .................. ....................
.................. .................... நான்கன் உருபின்
தொன்னெறி மரபின் தோன்ற லாறே (594. 6,8,9)

என்ற சூத்திரத்தை எடுத்துக்காட்டி, இக்கு என்பதை -கு என்ற வடிவமாகக்கொண்டு அது ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளதாகக் கருதலாம் என்று விளக்கியுள்ளார்.[8] அப்படியானால் தொல்காப்பியத்தில் முரண் இருப்பதாக ஆகிறது. மேலும், சொல்லதிகாரத்தில் கூறிய கருத்தை மறந்து, எழுத்ததிகாரத்தில் இக்கு (உண்மையில் எழுத்ததிகாரத்தில் சாரியை என்று கூறியதை மறந்து சொல்லதிகாரத்தில் பொருள் உடையது என்று முரணாகக் கூறியது) என்ற புதிய வடிவம் கொண்டு, அதில் இகரம் கெடுவதற்கு (தொல். 126, 127) இரண்டு புணர்ச்சி விதியும் அனாவசியமாகச் சொல்லியுள்ளார் என்றும்

8 It is of interest to note that the fourth case marker *-ku-* according to *Tolka:ppiyam* may occur in the place of seventh case marker denoting time. (Tol.Col. 110). Thus one may be tempted to consider this *-ku- (-ikku)* as the fourth case marker used in seventh case meaning.
Israel, 1973 : 128

ஆகிவிடும். தொல்காப்பியத்தில் முரண் இருக்கிறது என்பதில் தவறில்லை; ஆனாலும், அவருடைய கருத்துக்கு மாறுபாடாக நாம் விளக்கம் கொடுக்கக்கூடாது அல்லவா? நாம் வேண்டுமானால் அவருடைய வருணனை முறை தவறு உடையது என்று கூறலாமே தவிர, அவரை அப்படி விவரிக்கக் கூடாது என்று தடுக்கும் உரிமை நமக்குக் கிடையாது. எனவே, நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமைப் பொருளில் வரும் என்பதைத் தொல்காப்பியர் உணர்ந்திருந்தும், ஆடிக்குக்கொண்டான் போன்ற உதாரணங்களில் அப்படி நான்காம் வேற்றுமை வடிவமான -கு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருவதாகக் கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்துவதற் காகத்தானே இக்கு என்ற கற்பித வடிவத்தைப் படைத்து, மிகைபடக் கூறல் என்ற குற்றம் நேர்ந்தாலும் பரவாயில்லை என்று; இகரம் கெடுவதற்கு இரண்டு சூத்திரம் வகுத்திருக்கிறார். எனவே, அந்தக் கருத்தில் (பொருள் இல்லை - பொருள் இருப்பதாகக் கொள்ளக் கூடாது என்பதில்) அவர் எவ்வளவு தூரம் பிடிவாதமாக இருக்கிறார் என்பது புலப்பட்டுவிடுகிறது. எனவே, அவர் ஏன் அவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார்? என்பதை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். இக்குச் சாரியை திங்கள் பெயரோடு மட்டுமே வருகிறது என்பது மேலே குறிப்பிடப்பட்டது. ஆகவே, ஏழாம் வேற்றுமையின் ஒரு பொருளான இடப் பொருளை உணர்த்துவதற்கு வேறு உருபு தேவையில்லை என்றும் அவர் கருதியிருக்க வேண்டும். மேலும் திங்கள் பெயர் உருபு இல்லாமலும் இடப்பொருளை உணர்த்தும் இலக்கியப் பயிற்சியையும் நினைத்திருக்கலாம்.

**தைஇத் திங்கள் ..............தரினும்** (குறுந். 196.4)

(தை மாதத்தில் தந்தாலும்) போன்ற பயிற்சிகளையும் மனதில் கொண்டே தொல்காப்பியர் திங்கள் பெயரோடு வரும் -கு (நான்காம் வேற்றுமை உருபு) ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளில் வருவதாகக் கொள்ளக்கூடாது என்று கருதியிருக்கவேண்டும். பெயர்ச்சொல்லே அந்தப் பொருளைப் பெற்றிருந்தால் உருபு வேண்டியதில்லை. வேறு உருபு இருந்தால் அது சாரியையாகக் கருதப்படவேண்டும் என்று தொல்காப்பியர் பொதுவான எண்ணம் உடையவராக இருந்திருக்க வேண்டும். மேலும், ஆடிக்குக் கொண்டான் என்ற தொடர் பொருட்டுப் பொருளில் வந்தாலும் (ஆடி மாதத்துக்காகக் கொண்டான்), அதையும் (ஆடி மாதத்தில் பயன்படுத்துவதற்காகக் கொண்டான்)

ஏழாம் வேற்றுமையைப் புதைநிலையில் உடைய வாக்கியத்திலிருந்து உண்டானதாகவும் விளக்கலாம். (சண்முகம், 1978 ஆ : 99 அ.கு.5). எனவேதான் தொல்காப்பியர் -கு என்பது பொருள் அற்றது - சாரியை என்று கருதி, இக்கு என்ற கற்பித வடிவம் படைத்திருக்க வேண்டும்.

பதப் புணர்ச்சியில் வரும் அம் சாரியை பற்றி இரண்டு பிரச்சனைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஒரு இடத்தில் (சூ.260) அதற்கு அக்கு என்ற மாற்று வடிவம் (செருவக்களம்) கூறப்பட்டிருக்கிறது என்பது (இஸ்ரேல், 1973 : 124). இதற்கான விளக்கம் புணரியல்களின் அமைப்பில் முன்னரும் (பக்.238), சொல்லியல் நோக்கில் இன்னொரு கட்டுரையிலும் (சண்முகம், 1978 ஆ : 89) தரப்பட்டுள்ளது. (2) இன்னொரு பிரச்சனை அம் என்ற சாரியை சாத்தங்கொற்றன் (தொல். 350 சூத்திரப்படி) போன்ற சொற்களில் இல்லையே; அங்கு அனாவசியமாகத் தொல்காப்பியர் அம் சாரியை வருகிறது என்று கூறவேண்டிய தேவை இல்லை என்பது (இஸ்ரேல்.ஷை) இதற்குரிய விடையைக் கீழே பார்ப்போம்.

350ஆம் சூத்திரப்படித் தந்தை மகன் உறவுடைய சொற்கள் நிலைமொழிகளில் னகர ஈறு உடையதாக இருந்தால், நிலைமொழி ஈறு (அன்) கெட்டு அம் சாரியை (சாத்தன் + கொற்றன் > சாத்தங்கொற்றன்) பெறும்.

> **அப்பெயர் மெய்யொழித்து அன்கெடு வழியும்**
> **நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை**
> **மக்கள் முறை தொகூஉம் மருங்கி னான.** (350).

என்பதே அந்தச் சூத்திரம், இங்கு இஸ்ரேல் விவரித்துள்ளதன் படிச் சாத்தன் + கொற்றன் என்ற தொடரில் வருமொழிக்கு ஏற்ப நிலைமொழி னகரம் இன மெல்லெழுத்துக்காக மாறிவிடுகிறது என்று தொல்காப்பியர் வருணித்திருக்கலாம். ஏன் இந்த முறையை அவர் பின்பற்றவில்லை? என்ற கேள்வியை நாம் எழுப்ப வேண்டும். இதற்குரிய விடை இலக்கணம் பற்றிய ஒரு கோட்பாட்டைப் புலப் படுத்துவதாக அமைந்துள்ளது.

இலக்கணம் மொழியின் அமைப்பில் காணப்படும் ஒழுங்கைக் கண்டுபிடித்துக் கூறுவது மட்டுமல்ல; அந்த ஒழுங்கில் சில குறை இருந்தாலும், அதை நீக்கும் வழியில் உத்திகளைக் கையாண்டு ஒழுங்காக இருக்கிறது என்று காட்டுவது; அல்லது அந்த ஒழுங்கைப்

பாதுகாக்கும்படி விதிவிலக்குகளைச் சற்று மாறுபட்ட முறையில் வருணிப்பது. தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தில் தமிழ் மொழி அமைப்பில் காணப்படும் பொதுமையை வற்புறுத்தி, விதிவிலக்காக வருவதைப் பொது விதிக்குள் அமைத்துக் காட்டும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

தமிழில் னகர மெய் வல்லெழுத்தோடு புணர்ந்தால் றகரமாக மாறும் அல்லது இயல்பாக இருக்கும்; மகர ஈறுதான் வருமொழிக் கேற்ற இன மெல்லெழுத்தகாவோ அல்லது மகரம் கெட்டு வருமொழி வல்லெழுத்து இரட்டித்தோ வரும்.

| | | | |
|---|---|---|---|
| பொன்+குடம் | - | பொற்குடம் | (332) |
| அவ்வயின்+கொண்டான் | - | அவ்வயிற் கொண்டான் | (334) |
| குயின்+குழாம் | - | குயின்குழாம் | (336) |
| எயின்+குடி | - | எயின்குடி | (338) |
| மரம்+கோடு | - | மரக்கோடு | (310) |
| குளம்+கரை | - | குளக்கரை ~ குளங்கரை | (312) |
| மரம்+குறிது | - | மரங்குறிது | (314) |

ஆனால், னகர ஈற்றில் முடியும் இயற்பெயர் (சாத்தன்) மகன் பெயரை உடைய வல்லெழுத்தோடு (கொற்றன்) புணரும் போது நிலைமொழி னகர ஈறு வருமொழி வல்லெழுத்தின் இன மெல்லெழுத்தாக மாறுகிறது. இப்படி வருமொழிக்கேற்ற இனமெல் லெழுத்தாக மாறுவது மகர ஈறு ஒன்றுதான் என்பது தமிழ்மொழி அமைப்பில் காணப்படும் பொதுமை. ஆகவே னகர ஈறு, மகர ஈறு ஆகிய இரண்டின் புணர்ச்சியில் காணப்படும் பொதுமையைப் பாதுக்காக்கவே இயற்பெயரில் உள்ள அன் விகுதியைக் கெடுத்து அம் சாரியை வருவதாக விவரித்துவிட்டார். மகர ஈறு இங்கு இயல்பாக வரும் ஈறு அல்ல; இலக்கண விதியால் வந்த ஈறு (இதுவே விதி ஈறு என்ற இலக்கண நூல்கள் கூறும்). மகர ஈறானபின் வருமொழிக்கேற்ற இன மெல்லெழுத்தாகத் திரிந்து சாத்தங் கொற்றன் என்று மாறிவிட்டது.

உண்மையில் ஈற்று னகரம் சில கிளைமொழிகளில் மகரமாக (நிலன் ~ நிலம்) ஒலிக்கப்பட்டதன் விளைவாகவும் இருக்கலாம்.

தொல்காப்பியர் தகுமொழி வழக்கு அடிப்படையில் ணகரமாகக் கொண்டு இப்படி விவரித்துவிட்டார்.

## 12.5 சாரியை பொதுக் கோட்பாடுகள்

இதுவரை சாரியை பற்றித் தந்த விளக்கத்தினால் தொல்காப்பியரின் சாரியை கோட்பாடுகளைக் கீழ்க்கண்டவாறு பொதுமைப்படுத்தலாம்.

1. சில பெயர்களில் பெயருக்கும் உருபுக்கும் இடையில் ஏதாவது தனி எழுத்தோ தொடர் எழுத்துகளோ வந்து, அவற்றை நிலை மொழி, வருமொழி ஆகிய இரண்டின் மாற்று வடிவமாகக் கருத முடியாவிட்டால், அதைச் சாரியை எனக் கொள்வது. இதுவே வெற்றுருபு (Empty morph). இங்கு அது புறநிலையில் தெளிவாகத் தெரியும்.

2. உருபு புணர்ச்சியில் வரும் சாரியை வடிவம் (இன் - வண்டினை) பதப் புணர்ச்சியில் உருபு இல்லாமல் வந்து (வண்டின் கால்) உருபுப்பொருள் (ஆறாம் வேற்றுமை) உடையதுபோலத் தோன்றினாலும், இலக்கண வருணனையை எளிமைப்படுத்துவதற்காக அந்த வடிவத்தையும் சாரியை என்றே கொள்வது. அது ஒரு வருணனை உத்தி என்று கொள்ளலாம்.

3. பதப் புணர்ச்சியில் மட்டும் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே வரும் வடிவங்கள் பொருள் உடையது போலத் தோன்றி னாலும், அந்தப் பொருள் நிலைமொழிச் சொல்லால் பெறப்பட்டால், இடையே வரும் வடிவத்தைச் சாரியை என இரண்டு வழியில் மேற்கொள்ளுதல்.

அ. இடையே வந்த வடிவம் வேற்றுமை உருபு வடிவத்தோடு ஒத்துவந்தால் இரண்டையும் வேறுபடுத்த கற்பித அடிநிலைக் கிளவி படைத்தல்.

ஆ. இடையே உள்ள வடிவம் வேற்றுமை உருபாக அமையா விட்டால், அதையே சாரியை என்று கூறிவிடுதல்.

4. புறநிலையில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே மிகையான வடிவம் இல்லாவிட்டாலும், புணர்ச்சி மாற்றத்தில் விதி விலக்கு காணப்பட்டால், இயல்பாக உள்ள விதிகள் பொதுமையைப் பாதுகாப்பதற்குப் புணர்ச்சியில் மிகையான வடிவம் படைத்து அதையே சாரியையாக விளக்குதல்.

## 12.6 மதிப்பீடு

இதுவரை தொல்காப்பியர் வருணனையிலிருந்து அவர் கூறிய சாரியை எண்ணிக்கை, சாரியை அமைத்த விதம் ஆகியவைபற்றி விளக்கி, அவைகளில் பெறப்பட்ட பொதுக் கோட்பாடுகளை அவர் கருத்தை ஒட்டி அறிந்துகொள்ள முயன்றோம். இனி, அவர் தமிழ் மொழி அமைப்பில் சாரியையைப் பொறுத்தவரையில் சரியாக விவரித்துள்ளாரா? அதாவது எண்ணிக்கை, வருணித்த விதம் ஆகிய இரண்டிலும் எவ்வளவு தூரம் நிறைவு காணப்படுகிறது என்று மதிப்பிடலாம், எண்ணிக்கை பற்றியதைக் காட்சி நிறைவு என்றும், வருணித்த முறை பற்றியதை வருணனை நிறைவு என்றும் குறிப் பிடலாம்.

### 12.6.1 காட்சி நிறைவு

இளம்பூரணர் 'பிறவும்' என்ற மிகைச் சொல்லால் குறிப்பிட்ட சில சாரியைகளில் கெழு, உம் ஆகியவற்றைச் சாரியையாகக் கருதக் கூடாது என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. தம், நம், நும் என்பனவற்றையும் சாரியையாகக் கருதமுடியாது என்று இஸ்ரேல் (1973:130) குறிப்பிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இப்படி விதப்புக் கிளவியாகக் கொள்ளப்பட்டவற்றில் ஏ என்பதைச் சாரியை என்றே அவர் குறிப்பிட்டுள்ளார்.

**ஒத்த தென்ப ஏயென் சாரியை** (164.6)

என்று அவர் பயன்படுத்தியிருந்தும், சாரியையின் தொகை கூறும் போது அது ஏன் சேர்க்கப்படவில்லை? என்ற கேள்வி எழுகிறது. தொகையில் கூறியதெல்லாம் (சூத். 119) ஈரெழுத்தொருமொழி; ஏ என்பது ஓரெழுத்தொருமொழி; அதனால் விட்டுவிட்டார் என்றால் எப்படிப் பொருந்தும்?

இதனால் தொல்காப்பிய மூலத்தின் பண்பு பற்றி இது ஏதாவது சுட்டுகிறதா? அல்லது தொல்காப்பியர் தவறுதலாக விட்டு விட்டாரா? என்று முடிவு செய்யவேண்டும்.

அவர் சொன்ன சாரியைகளில் ஒன் என்பதை ஏன் சாரியை யாகக் கொண்டார்? என்று கேட்கவும் தோன்றுகிறது.

ஆ, மா, ஊ போன்ற சொற்கள் னகரம் பெறுவதை நிலைமொழிச் சொல்லின் மாற்று வடிவமாக விளக்கிவிட்டு, கோ என்பது ஒன் பெறுவதை மட்டும் ஏன் மாற்று வடிவமாகக் கருதாது சாரியை என்று கொண்டார்?

பொதுவாக நெடில் ஈற்றுச் சொற்கள் குறிலை அடுத்து வந்தாலும், ஓரெழுத்தொருமொழியாக வந்தாலும், அதனுடைய இனக் குறிலைப் பெறுவதாக ஆகார ஈற்றிற்கும் (229), ஊகார ஈற்றிற்கும் (267), ஏகார ஈற்றிற்கும் (அங்கு ஓரெழுத்தொரு மொழி மட்டுக்குமே உரியது) கூறியுள்ளார். எனவே கோ என்ற சொல்லும் ஒகரம் பெறுதலையும் னகரம் பெறுதலையும் மாற்று வடிவமாக விளக்கி யிருக்கலாம். அப்படியானால் ஒன் என்பதைத் தனிச் சாரியையாகக் கொண்டிருக்க வேண்டாம்; புணர்ச்சி மாற்றம் மூலம் விளக்கியிருக்க முடியும். இதற்கு ஏதாவது சிறப்புக் காரணம் இருக்கிறதா? என்று ஆராய்ந்து கண்டுபிடிக்க முயலவேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஒன் என்பதைச் சாரியையாகக் கொண்டது பொருந்தாது என்ற முடிவுக்கு வரவேண்டும்.

### 12.6.2 வருணனை நிறைவு

னகர ஈற்று முறைப் பெயரில் ஏற்படும் விலக்கு விதியாகச் சாரியையைப் படைத்துப் பொதுமையைப் பாதுகாத்தது பாராட்டுவதற்கு உரியது. ஆனால் தேன் என்ற சொல்லும் விதிவிலக்காகக் சில புணர்ச்சி மாற்றங்களைப் பெற்றுள்ளது. அதுவும் வல்லெழுத்து உறழ்ந்து தேன்குடம் ~ தேற்குடம் என வரும். அதனோடு தேக்குடம், எனவும் புணர்ச்சி மாற்றம் பெறுவதாகக் கூறியுள்ளார். தேக்குடம் என்பதை னகரம் கெட்டு வல்லெழுத்து மிகுந்து வருதல் என்று 340ஆம் சூத்திரத்தில் விளக்கியுள்ளார். இது தேங்குடம் என்றும் மாறும். அதை **'மெல்லெழுத்து மிகினும் மானமில்லை'** (341) என்று னகர ஈற்றின் மாற்றமாகவே வருணித்துள்ளார். இங்கு அவை மகர ஈற்றிற்குரிய புணர்ச்சி மாற்றத்தை (வல்லெழுத்து பெறுதல் - தேக்குடம், மெல்லெழுத்து திரிதல் - தேங்குடம்) பெறுவதற்கு எந்தவிதச் சமாதானமும் கொடுக்காமல், அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டார். உண்மையில் தேன் என்பது தேம் என்ற மற்றொரு வடிவம் ஒரு கிளைமொழியில் பெற்றிருக்க வேண்டும் என்பது வேறொரு உதாரணத்தாலும் தெளிவுபடுகிறது.

தேனிறால் என்று இயல்பாகவும் தேத்திறால் என்று திரிந்தும் மாறுகிறது. தேனிறால் என்பதை இயல்புப் புணர்ச்சி என ஒரு சூத்திரத்தாலும் (343), தேத்திறால் என்பதை

ஒற்றுமிகத் தகரமொடு நிற்றலும் உரித்து. (344)

என்று னகரத்தின் திரிபாக விவரிக்கிறார். தேத்திறால் என்பதை தேம்+அத்து+இறால் என்று விளக்கியிருக்கலாம். இங்கெல்லாம் அம் சாரியை பெற்று வரும் என்று கூறாமல் னகர ஈறே திரிந்து அப்படி மாறுவதாக ஏன் விவரிக்கிறார்? என்று புரியவில்லை. இங்கு னகர ஈற்றுப் புணர்ச்சியின் பொதுப் பண்பை ஏன் புறக்கணித்தார்? இதனால் வருணனை நிறைவு உடையதாகக் கருதமுடியாது.

ஆகவே, சாரியையை மறு வருணனை செய்தே தொல்காப்பியர் கால மொழி அமைப்பையும் சங்ககால மொழி அமைப்பையும் சரியாகத் தெரிந்துகொள்ள முடியும். தொல்காப்பியர் கூறியதை அப்படியே எடுத்துக்கொள்ள முடியாது. அதே சமயத்தில் சாரியை பற்றிய விளக்கத்தில் பலவித வருணனை உத்திகள் புதைந்து கிடக்கின்றன. அவை மொழியில் கோட்பாட்டு நோக்கில் சிறப்பானவை; பாராட்டுவதற்கு உரியவை.

# 13. போக்குகள்

## 13.0 முன்னுரை

ஒரு துறையைச் சேர்ந்த பல நூல்களை ஆராயும்போது, அவைகளை இரண்டு வகையில் நோக்கலாம். ஒவ்வொரு நூலையும் தனித்தனியே எடுத்துக்கொண்டு, அதில் காணப்படும் தனித்தன்மை, சிறப்பு, புதுமை ஆகியவற்றை அறிந்துகொள்ள முற்படுவது ஒருமுறை. இதை வேற்றுமை ஆய்வு அல்லது சிறப்பு ஆய்வு என்று அழைக்கலாம். மற்றொரு முறை, அந்த நூல்களுக்கு இடையே காணப்படும் பொதுப் பண்பு, ஒற்றுமைக் கூறுகள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள முற்படுவது. இதை ஒற்றுமை ஆய்வு அல்லது பொதுமை ஆய்வு என்று அழைக்கலாம். நாம் இதுவரையில் செய்தது இலக்கணக் கோட்பாட்டு நிலையில் பொதுமை ஆராய்ச்சியே. அதைப் போக்குகள் என்று விரிவாக இந்த இயல் விளக்கும்.

தமிழ் இலக்கண நூல்கள் பெரும்பாலானவற்றின் எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகாரங்களையும் சுப்பிரமணிய சாஸ்திரி (1934) ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். அவர் முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இரண்டையும் சேர்க்கவில்லை; அதே நேரத்தில் சொல்லதி காரத்தை மட்டும் சிறப்பாக விளக்கும் இலக்கணக்கொத்து பிரயோக விவேகம் ஆகிய இரண்டையும் சேர்த்துக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது. அவர் (1934:iii), இரண்டு வித மாறுபட்ட கோட்பாடுகள் காணப்படுவதாயும், இரண்டின் செல்வாக்கால் இலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சி நேர்க்கோட்டில் செல்லாமல் கண்டபடி வளைந்து சென்றுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் ஒரு குழுவுக்குத் தலைவர்; வீரசோழிய ஆசிரியர் மற்றொரு குழுவின் தலைவர். பின் வந்த நேமிநாதமும் நன்னூலும் தொல்காப்பியத்தைப் பின்பற்ற இவற்றிற்குப் பின் எழுந்த பிரயோக விவேகம் வீரசோழியத்தைத் தழுவியுள்ளது. பிரயோக விவேகத்துக்குப்

பின் வந்த இலக்கண நூல்கள் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளன[1] என்றும் விளக்கிக்காட்டியுள்ளார்.

எழுத்ததிகாரத்தைப் பொறுத்தவரையில் தொல்காப்பியம், வீசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய எட்டு நூல்களில் மட்டும் காணப்படும் கோட்பாடுகளே முன்னுள்ள இயல்களில் (முதல் இயல் பொதுவானதாக அமைந்துள்ளதால் அதைத் தவிர்த்து) விவரிக்கப்பட்டன. அங்குச் சுப்பிரமணிய சாஸ்திரி குறிப்பிட்டது போல வளைந்துபட்ட போக்கு (zigzag course) காணப்படுவது உண்மை என்று உணரலாம்.

வீரசோழியம் நேமிநாதமும் எழுத்ததிகாரம் முழுவதையும் ஒரே இயலாக விவரித்துள்ளன. ஆனால், இரண்டு நூலுக்கும் பிறகு வந்த நன்னூல் பெரிதும் தொல்காப்பியத்தைப் பின்பற்றியுள்ளது. நன்னூலுக்குப் பின் வந்த இலக்கணவிளக்கம் நன்னூலைப் புற நிலையில் தழுவினாலும், அகநிலையில் தொல்காப்பியத்தைப் பின்பற்றுவதைப் புணரியலின் அமைப்புமுறை என்ற இயலில் சுட்டிக் காட்டப்பட்டது (பக்.246-5). தொன்னூல்விளக்கம் நன்னூலை ஓரளவு தழுவினாலும், சூத்திரங்களையும் எழுத்ததிகார உட்பிரிவுகளையும் தனிமுறையில் விவரித்துள்ளது என்று இரண்டாவது இயலில் (பக்.34) புலப்படுத்தப்பட்டது. ஆனால் தொன்னூல்விளக்கத்துக்குப் பிறகு வந்த முத்துவீரியமும் சுவாமிநாதமும் மூன்று மூன்று இயல்களாகக் கூறுவதால் தொன்னூல்விளக்கத்தை, அவை புறநிலையில் ஏற்றுக்கொண்டாலும், அகநிலையில் நன்னூலையே பின்பற்றியுள்ளன.

---

1 ....there appear to have been two schools of thought of an entirely different nature which have, by their influence, dragged the progress of grammatical theories along a zigzag course. Tolka:ppiyana:r belonged to one of them and the author of *Vi:raco:liyam* represented the other And among the later grammarians there is observable an interesting rhythmic oscillation of views between these two opposite schools. *Ne:mina:tam* and *Nannu:l* which succeeded by *Vi:raco:liyam* switched back to Tolkappiyana:r's view-point, while *Pirayo:kavive:kam* which forms the next important contribution reverted to *Vi:raco:liyam* school. The more recent grammatical works tend to converge towards Tolka:ppiyanar's school.

Subrahmanyaa Sastri, 1934:iii.

இன்னொரு பொதுப்பண்பும் இங்குச் சுட்டிக்காட்டத்தகுந்தது. அதாவது : ஒரு நூல், இரண்டு ஆசிரியர் முறையை - ஒரு சில கோட்பாட்டில் ஒரு ஆசிரியர் கருத்தையும் வேறு சில கோட்பாட்டில் இன்னொரு ஆசிரியர் கருத்தையும் தழுவியுள்ளது. அதாவது: தனக்கு முன்னால் எழுந்த ஒரு நூலை மட்டும் பின்பற்றாமல், ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களின் முறையைத் தழுவியுள்ளது. உதாரணமாக, நேமிநாதம் சிலவகையில் தொல்காப்பியத்தையும் (பேச்சு உறுப்புகள் எட்டையும் மூன்று, ஐந்து என்று பிரித்துப் பேசுவது), வேறு சில வகையில் வீரசோழியத்தையும் (பொதுப் பிறப்பு மட்டும் பேசுவதிலும் மெய்மயக்கத்தை விவரிக்காமல் விடுவதிலும்) பின்பற்றியுள்ளது. அப்படி ஒவ்வொரு நூலின் கோட்பாடுகள் முழுவதும் ஒரு நூலோடு ஒத்துப்போகாமல் இரண்டு நூலின் கோட்பாட்டோடு ஒற்றுமை இருப்பதையும் காணலாம். ஆனாலும் எழுத்திலக்கணப் போக்குகள் என்று பார்த்தால், மூன்றுவிதப் போக்குகளும் அவைகளில் ஒன்று இரண்டு உட்பிரிவும் காணப்படுவதை அறியலாம் (சண்முகம், 1974ஆ).

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | | | தொல்காப்பியம் | - பிரிநிலை முறை. |
| 2. | | அ) | வீரசோழியம் | - தொகுநிலை முறை. |
| | | ஆ) | நேமிநாதம் | |
| 3. | I | அ) | நன்னூல் | - பாகுபாட்டுமுறை -மரபுவழி |
| | | ஆ) | இலக்கண விளக்கம் | |
| | | இ) | முத்துவீரியம் | |
| | | ஈ) | சுவாமிநாதம் | |
| | II | | தொன்னூல் விளக்கம் | - ஷை - புதுவழி. |

## 13.1 தொல்காப்பிய முறை

பிற்கால நூல்கள் பல்வேறு வகையில் தொல்காப்பியத்தைத் தழுவினாலும், கோட்பாட்டு நிலையில் தொல்காப்பியம் தனித்தன்மை பெற்றே இருக்கிறது. பலவகையில் தொல்காப்பியம் மாற்றிலக்கண மொழியியல் கருத்தை ஒட்டிய விதிமுறை ஒலியனியல் கருத்தைப் புலப்படுத்துகிறது. தமிழ் இலக்கண நூல்களுக்குள் கோட்பாட்டு நிலையில் சிறந்து விளங்குவது தொல்காப்பியமே. அதனுடைய மற்றொரு சிறப்பு: நுணுகி ஆராயும் முறையாலும், எழுத்ததிகாரத்தைப் பிரித்துக் கூறிய முறையாலும் பிரிநிலை முறையைப் (Analytic method) பின்பற்றுவதாகும்.

பிரிநிலை முறைக்குச் சான்றாக எழுத்தியலை நூன்மரபு, மொழிமரபு என்று இரண்டாகவும், புணரியலை ஆறு இயலாகவும் பிரித்துக் கூறியதைக் காட்டலாம். இவற்றால் தொல்காப்பியருக்கு அதிகச் சிறப்பு இல்லைதான்; ஆனால் சார்ந்து வருகின்ற எல்லா ஒலிகளையும் சார்பெழுத்து என்று கூறாது, முப்பத்துமூன்றை மட்டும் சிறப்பாகப் பிரித்துக் கூறியதன் நுட்பம் நான்காவது இயலில் (பக். 73-74) விளக்கப்பட்டது. அப்படியே சார்பெழுத்துகளைத் தனி மொழிச் சார்பு, புணர்மொழிச் சார்பு என்று கூறியதன் கோட்பாட்டு நுட்பம் ஆறாவது இயலில் (பக். 157-190) புலப்படுத்தப்பட்டது. மெய்மயக்கத்தை நூன்மரபிலும் மொழி மரபிலும் பிரித்துக் கூறியதன் சிறப்பும் ஏழாவது இயலில் (பக். 161-187) விளக்கப்பட்டது. புணரியல்களில் ஈறுவாரியாகப் பிரித்துக் கூறினாலும், அதன் அமைப்பு முறையிலும் சில நுட்பங்கள் இருப்பது பதினோராவது இயலில் (பக். 230-40) குறிப்பிடப்பட்டது.

பொதுவாகத் தொல்காப்பியத்தில் ஒருபொருள் தொடர்பான செய்திகள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும் அங்கும் மொழியியல் நுட்பம் இருப்பதே தொல்காப்பியத்தின் சிறப்பு.

## 13.2 வீரசோழிய - நேமிநாத முறை

வீரசோழியமும் நேமிநாதமும் எழுத்ததிகாரத்தை ஒரே இயலாகக் கூறியதே தொகுநிலை முறை என்பதைக் காட்டிவிடுகிறது. அதனால் தொடர்பு இல்லாமலும் பொருத்தம் இல்லாமலும் தொகுத்துச் சொன்ன முறையில் இந்த இரண்டு நூல்களும் ஒற்றுமை உடையன வாகக் காணப்படுகின்றன. மேலும், தொல்காப்பியத்தை நோக்கத் தொகுநிலை முறை அதிகம் போற்றப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் மாத்திரை பற்றி ஏழு சூத்திரங்களில் (3முதல் 6 வரையும், 11 முதல் 15 வரையும்) கூறியதை வீரசோழியமும் (5ஆம்சூத்.) நேமிநாதமும் (6ஆம் சூத்.) ஒரே சூத்திரத்தில் கூறுகின்றன. அப்படியே புணர்ச்சி பற்றிய பொது இலக்கணத்தைத் தொல்காப்பியர் ஆறு சூத்திரங்களில் (103 முதல் 110 வரை) வருணிக்க வீரசோழியமும் (சூத். 12) நேமிநாதமும் (சூத். 12) ஒரே சூத்திரத்தில் கூறுகின்றன.

தொடர்பும் பொருத்தமும் இல்லாது தொகுத்துக் கூறியதற்கு இரண்டு நூலிலும் சான்றுகள் உள்ளன. மாத்திரையைச் சுருக்கிக்

கூறும் சூத்திரத்தில் வீரசோழியம் உயிர் ஈறும் மெய் முதலும் புணரும் புணர்ச்சியை விவரிக்கிறது. அகரம் யகரத்தோடும் வகரத்தோடும் இயைந்தால், முறையே ஐ, ஔ ஆகும்; ஆ, ஏ, ஓ ஆகியன இறுதியில் வந்தால் வினா; எகரமும் ஒகரமும் மெய்யும் புள்ளி பெறும்; அ, இ, உ ஆகிய மூன்று சுட்டு; குற்றுகரத்தின் பின் யகரம் வந்தால் குற்றியலிகரமாகும் என்பன எல்லாம் ஒரு சூத்திரத்தில் (3) கூறப்பட்டிருப்பதால் போலி, இறுதி வினா, வரி வடிவம், சுட்டு, குற்றியலிகரம் ஆகியவை அந்தச் சூத்திரத்தில் தொடர்பற்றுத் தொகுக்கப்பட்டதாகக் கருதலாம்.

புணர்ச்சி கூறும் சூத்திரங்களிலும் அகர வரிசையை வீரசோழியம் கடைபிடிக்கவில்லை என்று பதினோராவது இயலில் (பக். 245) சுட்டிக்காட்டப்பட்டது.

நேமிநாதத்திலும் தொடர்பற்ற முறையில் சூத்திரங்கள் அமைந் துள்ளன. குற்றியலிகரம், குற்றியலுகரம் கூறும் சூத்திரத்தில் (4) உயிர் ஈறும் மெய் முதலும் பெறும் புணர்ச்சி வருணிக்கப்படுகிறது. உடம்படுமெய் விவரிக்கும் சூத்திரத்திலேயே (13) மகர ஈற்றுச் சொற்கள் உயிர் முதன் மொழியோடு புணரும் புணர்ச்சி மாற்றம் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. புணர்ச்சி பற்றிய பிற சூத்திரங்களும் அகரவரிசைப் படுத்தப்படவில்லை.

இந்த இரண்டு நூலிலும் தொகுத்துக்கூறும் முறை மிகுந்து, வகுத்துக் கூறும் முறை (பாகுபாட்டு முறை) குறைந்து காணப்படுகிறது.

நேமிநாத எழுத்ததிகாரம் வீரசோழியத்தைப் பின்பற்றியது என்பது வியப்புக்குரிய செய்தி; ஏனெனில் இது தொல்காப்பியக் கடலைக் கடக்க உதவும் படகு போன்றது.

> **தொல்காப் பியக்கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்**
> **பல்காற்கொண் டோடும் படகென்ப....**

என்பது சொல்லதிகாரச் சிறப்புப் பாயிரம் என்று நூலில் பதிக்கப் பட்டுள்ளது. அந்தப் பொது உண்மை சொல்லதிகாரத்துக்குக்கே பெரிதும் பொருந்துகிறது என்பதையே புலப்படுத்துகிறது. நேமிநாத எழுத்ததிகாரம் வீரசோழியத்தையே தழுவியது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. சுப்பிரமணிய சாஸ்திரியார் (1934:97) நேமிநாதப் புணர்ச்சி நூற்பாக்கள் பதினைந்தில் பத்து வீரசோழியத்தைத் தழுவியது

என்று சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், எழுத்துகளை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிக்கும் முறை வீரசோழியத்தில் காணப்படுவதுதான்.

நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல் (15.1)

என்று இகர ஈகார ஐகார உயிர் வீரசோழியத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

**என்ணிரண் டாமொற்று வன்மைவந் தாற்.....** (16.1)

என்று பதினாறாம் மெய் என்று ளகர ஈறு வீரசோழியத்தில் சுட்டப்பட்டுள்ளது. இந்த முறையை ஒட்டி நேமிநாதத்தில்,

**மூன்றுநான் கொன்பான் உயிர்ப்பின்னும்......** (13.1)

என்று இகர ஈகார ஐகார உயிர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**உரிவரி னாழியி னீற்றுயிர்மெய் ஐந்தாம்.....** (19.1)

என்றது நாழி என்ற சொல்லில் ழி என்பது டகர மெய்யாத் திரியும் என்று பொருள். இங்கு மெய்யெழுத்து வரிசை எண்ணால் குறிக்கப்பட்டுள்ளது.

எழுத்தியல் உண்மைகளை - அதாவது மொழி அமைப்பு பற்றிய உண்மைகளை விவரித்திருப்பதிலும் வீரசோழியத்தின் செல்வாக்கு நேமிநாதத்தில் காணப்படுகிறது. வேற்றுமைக்காகத் தொல்காப்பியக் கருத்தும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொல்காப்பியர் ஐகாரக் குறுக்கத்துக்கு ஒரு மாத்திரை கூறியிருக்க வீரசோழியம் 1½ மாத்திரை (5) என்று குறிப்பிட்டுள்ளது. நேமிநாதமும் 'ஐ ஔ அளபு ஒன்றரை' (5.4) என்கிறது. இது ஐகார ஔகாரக் குறுக்கமாகவே உரையாசிரியராலும் விளக்கப்படுகிறது. ஏனெனில், மேலே நெடிலுக்கு இரண்டு மாத்திரை என்பதில் ஐகாரம் குறுகாமல் இரண்டு மாத்திரை உடையதென்பது பெறப்பட்டது.

ஔகாரக் குறுக்கம் கூறி அதற்கு ஒன்றரை மாத்திரை என்று முதலில் கூறியது வீரசோழியமே.

**.....ஒன் றரையாகு மையௌ.........** (5.1)

அதனையொட்டி நேமிநாதமும் ஔகாரக் குறுக்கமும் அதே மாத்திரை அளவும் கூறிவிட்டது.

ஐஔ அளவொன் றரை........ (5.4)

தொல்காப்பியர் ஒரு எழுத்து மூன்று மாத்திரை பெறாது (5) என்று திட்டவட்டமாகக் கூறிச் சென்றார். ஆனால் பெருந்தேவனார் 'மூன்று அளபு' (5.2) என்று அளபெடைக்கு மூன்று மாத்திரை என்று கூறியதைப் பின்பற்றிக் குணவீரபண்டிதர் 'மூன்று அளவு'(5.1) என்று விவரித்துள்ளார்.

மெல்லெழுத்தில் 'ஞணநமன' ஆகிய ஐந்தும் தொல்காப்பி யத்தில் (78) இறுதியில் வரும் என்று வருணிக்கப்பட்டுள்ளது. 'ஈறும் மகர ணகரங்கள் தாமும்...... ஈற்றெழுத்து' (8.1,4) என்று ன, ம, ண ஆகிய மூன்று மட்டுமே இறுதியில் வரும் என்ற வீரசோழியக் கருத்தை ஒட்டியே 'மென்மையின் மூன்று' (8.1) ஈற்றெழுத்து என்று நேமிநாதம் விவரித்துள்ளது.

வடமொழிப் பெயரில் எதிர்மறைப் பொருள் எப்படி உணர்த்தப்படுகிறது? என்பதும், வடமொழிச் சந்தியும் வீரசோழிய எழுத்ததிகாரத்தில் இரண்டு சூத்திரங்களில் (11, 12) விளக்கப்படுகின்றன. அந்தக் கருத்துகள் நேமிநாத எழுத்ததிகாரத்திலும் இரண்டு சூத்திரங்களில் (10, 11). குறிப்பிடப்பட்டுள்ளன.

எதிர்மறைவகையாலும் இரண்டுக்கும் ஒற்றுமை உண்டு. இரண்டு நூலுமே மெய்மயக்கம் வரும் என்று கூறி, இன்னின்ன மெய்கள் மயங்கி வரும் என்ற செய்தியைக் குறிப்பிடவில்லை. அப்படியே எழுத்துகளின் பொதுப்பிறவி கூறிவிட்டுத் தமிழ் எழுத்துகள் எப்படி உச்சரிக்கப்படுகின்றன? என்பதை இரண்டு நூலும் பேசாமல் சென்றுள்ளன. ஆகவே, வீரசோழியம் பெரும் அளவில் நேமிநாத எழுத்ததிகாரத்தை ஆதிக்கம் செய்கிறது என்பது தெளிவு. (வீரசோழியம் பற்றிய முழு பரிசீலனைக்குச் சண்முகம் 1969 ஆ. நேமிநாதம் பற்றிய ஆய்வுக்குச் சண்முகம் 1969 அ, 1980 பார்க்க).

## 13.3 நன்னூலும் பிற நூல்களும்

நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகியவை பகுப்பு முறையைக் கொண்டிருக்கின்றன என்பது இரண்டாவது இயலில் (பக்.34-36) விளக்கப்பட்டது. நன்னூலும் இலக்கணவிளக்கமும் எழுத்ததிகாரத்தைப் பன்னிரண்டாகப் பிரித்ததும் ஏனையவை மூன்று பிரிவாகப் பிரித்ததும்

அங்கே சுட்டிக்காட்டப்பட்டது. இவையெல்லாம் அவயவி முறையைப் பின்பற்றியுள்ளன. அதாவது உறுப்புகளைக் கூறினால் முதலை விளக்கியதாகிவிடும் என்பதே அந்த நூல்களின் கருத்து. ஒவ்வொரு செய்தியையும் தொகுத்தும் வகுத்தும் சொல்லியிருப்பதால், இவைகள் பாகுபாட்டு முறையையே சிறப்பாகக் கையாண்டுள்ளனவாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், தொன்னூல்விளக்கம் வைப்பு முறையாலும் பிறவற்றாலும் வேறுபட்டுள்ளது என்பது பின்னால் (13.4) விளக்கப்படும்.

தொல்காப்பியத்தை நோக்க நன்னூல் முதலியவற்றில் ஒரு பொருள் பற்றிய செய்திகள் ஒரே இடத்தில் தொகுத்தும் வகுத்தும் கூறப்பட்டுள்ளன. ஆனால், தொல்காப்பியத்தில் காணப்படும் நுட்பம் எங்கேயோ ஓடி ஒளிந்து விட்டது. சார்பெழுத்துகளைத் தொல்காப்பியர் பல இயல்களில் (மொழிமரபு, புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல்) கூறியதை நன்னூல் எழுத்தியல் 89 முதல் 97 வரையுள்ள சூத்திரங்களிலும், இலக்கணவிளக்கம் 10 முதல் 22 வரையுள்ள சூத்திரங்களிலும் தொன்னூல்விளக்கம் 13 முதல் 18 வரையுள்ள சூத்திரங்களிலும், முத்துவீரியம் 23 முதல் 39 வரையுள்ள சூத்திரங்களிலும் (இடையே சுட்டு, வினை பற்றியும் விவரித்துள்ளது), சுவாமிநாதம் எழுத்தாக்க மரபு 6, 7 ஆம் சூத்திரங்களிலும் பேசுகின்றன. எழுத்து-மாத்திரை பற்றி முத்துவீரியம் தவிர ஏனைய நூல்களில் ஒரே சூத்திரத்தில் மட்டுமே விளக்கப்பட்டுள்ளது (நன்.99, இலக்கண விளக்கம் 24, தொன்னூல் விளக்கம் 19, சுவாமிநாதம் 20).

நன்னூல் ஒரு மொழி பயிற்சி இலக்கணம் (Pedagogical grammar) என்ற நினைக்கத் தோன்றுகிறது. புணர்ச்சிவிதிகளைக் கூறியமுறை, சாரியை வடிவம் அமைந்த முறை இந்த உண்மையை வலியுறுத்தும்.

நன்னூல் முறை பாகுபாட்டு முறை ஆயினும், அதை மரபுவழி என்று கூறியதற்கு, அந்தப் பாகுபாட்டுப் பழைய நூல்களில் ஆதாரம் இருப்பதுதான் காரணம். அவிநயனார் எழுத்ததிகாரத்தை வகுத்துக் கூறலாம் என்பதை ஒட்டியே பவணந்தி பன்னிரண்டு பிரிவாக்கிக் கூறினார்.

முத்துவீரியத்தில் பொதுவாகத் தனித்தனிச் சூத்திரங்களாக விவரித்துக் கூறும் முறை காணப்பட்டாலும், (மாத்திரை பற்றி 99 முதல் 105 வரை) ஒரு பொருள் பற்றிய செய்திகள் வகுத்தே கூறப்பட்டுள்ளன.

## 13.4 தொன்னூல் விளக்க முறை

தொன்னூல்விளக்கத்தின் பாகுபாடும், சூத்திர வைப்பும், அதிகார வேறுபாடும் இலக்கணத்தின் அடிப்படைக் கோட்பாட்டு மாற்றத்தை புலப்படுத்துவதாக இரண்டாவது இயலில் கூறப்பட்டன. மேலும் ஒவ்வொரு இயலிலும் சில வித்தியாசங்களும் சுட்டிக்காட்டப்பட்டன.

தொன்னூல்விளக்கத்தில் உள்ள மூன்று வகையான பாகுபாட்டுக்குப் பழைய ஆதாரம் இல்லை. எழுத்ததிகார வைப்பு முறைக்கும் (பிறப்பு எழுத்து, புணர்ச்சி), சூத்திரங்களின் வைப்பு முறைக்கும் முன்னோடி எதுவும் கிடையாது. எனவே, அந்தப் பாகுபாடு புதுவழி என்று அழைக்கப்படுகிறது. தொன்னூல்விளக்கமே ஒரு முன்னோடியாக அமைந்துவிட்டது. மூன்றாகப் பிரிக்கும் முறைக்கும் முத்துவீரியமும் சுவாமிநாதமும் தொன்னூல் விளக்கத்தைப் பின்பற்றியிருக்கவேண்டும். இலக்கண ஆய்வாளர்கள் தொன்னூல்விளக்கத்தில் சில புதுமைகள் இருக்கிறதென அங்கீகரித்தாலும், அவர்கள் அதை ஒரு மரபுவழி நூலாகவே கருதியுள்ளார்கள். உதாரணமாக ச.வே. சுப்பிரமணியன் (1978:24) தரும் விளக்கமும் அந்தக் கருத்தை நன்கு வெளிப் படுத்துகிறது.[2]

---

2 தொன்னூல் விளக்கம் என்ற தலைப்பே கொஞ்சம் மயக்கம் தருவதுதான். ஆனால், நூலின் தலைப்பு பல சமயங்களில் அதில் விளக்கப்படும் எல்லாச் செய்திகளைப் பற்றிய விவரத்தையும் கொடுக்காமல் ஒரு செய்தியை மட்டும் சுட்டிக்காட்டுவது உண்டு. இன்று கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவரும் பல நூல்களின் தலைப்புகளும் மயக்கம் தருவதாக இருப்பதைப் பலரும் கவனித்திருக்கலாம். இந்த முறை மொழியியல் நூல்களிலும் காணப்படுகிறது. கிருஷ்ணமூர்த்தி (Krishnamurthi, 1961) தந்த நூலின் தலைப்பு (Telugu Verbal Bases) குன்றக் கூறலாய் நூலின் பயனை முழுவதும் வெளிப்படுத்தும் தன்மையில் அமையவில்லை என்று அதை மதிப்புரை செய்த ஸோபர்க் (Sjoberg, 1966 : 846) கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. '.....These facts coupled with the narrowness of the title may mean that the book will not be used as a reference book on the Dravidian language as a whole to the extent that it should be' என்ற அவரது வாசகம் சுட்டிக் காட்டத்தக்கது. அப்படியே தலைப்பு மிகைபடக் கூறலாய் அமைந்ததற்குப் பிரபோதசந்திரன் நாயர் (Prabodhachandran Nair, 1973) நல்ல உதாரணம். ஏனெனில் அந்த நூல் ஒரு இலக்கியத்தின் மொழி அமைப்பை மட்டுமே விளக்குகிறது,

> தொன்னூல்களை (இலக்கியங்களை) விளக்குவதற்குரிய விளக்குப் போன்றும், தொன்னூல்களாகிய இலக்கண நூல்களைப் புரிந்துகொள்வதற்கு துணையாக நிற்கின்ற விளக்குப் போன்றும் அமையவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் படைத்து 'தொன்னூல்விளக்கம்' எனக் காரணம் பெயரினைச் சூட்டினர் என நவிலலாம்...
>
> மரபுவழியைப் பின்பற்றி நூலமைத்திருப்பதால், பழைய இலக்கண நூல்களைப் பெரும் அளவு பயன்படுத்தியுள்ளார்.
>
> எழுத்தும் சொல்லும் 141 நூற்பாக்களில் 36 நூற்பாக்கள் நன்னூலிலிருந்து அப்படியே முழுமையாக எடுத்தாளப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

என்று பொதுவாகவும் சிறப்பாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒப்பிலக்கண உணர்வில் எழுந்த ஆய்வு நோக்கமும், நூலின் பெயரைக் காரணப் பெயராகக் கருதியதும், பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் ஆகியவற்றில் காணப்படும் சில கருத்துகளின் சரியான விளக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் செய்துவிட்டன. அப்படியே தொன்னூல்விளக்க எழுத்ததிகார முதல் சூத்திரத்தின் பொருளையும் யாரும் சரியாக விளங்கிகொள்ளவில்லை என்பதும் இரண்டாவது இயலில் குறிப்பிடப்பட்டது.

பொதுப்பாயிரம் நூலாசிரியரின் மாணவரால் எழுதப்பட்டதாகவே கருதப்படுகிறது (ச.வே. சுப்பிரமணியன், 1978:74).

> **பிறநூல் முடிந்தது பெயர்த்து உடன்படுத்தியும்**
> **புறநூல் முடிந்தது பொருந்தியும் தான்ஒரு**
> **வழிநூல் முடித்தனன்..............** (பொதுப்பாயிரம் 17.19)

என்பதில் 'புறநூல் முடிந்தது பொருந்தியும்' என்ற தொடர் சிறப்பு மிகுந்தது. பொதுப்பாயிர உரையிலும்,

> பிறநூலாகிய வடநூலிற் சொல்லப்பட்டவைகளை இத்தோடு உடன்படுத்தியும் தாம் வழிநூல் முடித்துரைத்தார். செந்தமிழ் உணர்ந்தோர் வழியேயன்றிப் பிறனடையாகச் சில விகற்பம் பிற நூல் வழியே சென்று காட்டுதும். ஆகையால் முன்னோர் நடையினும் விகற்ப நடையினும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐந்து இலக்கணம் கூறுதும்

என்று உரை எழுதும்போது அவர் கருத்து கொஞ்சம் விளக்கம் பெறுகிறது. சிறப்புப் பாயிர உரையில் இருக்கும் கீழ்க்காணும் வரிகள்.

> நான் ஒரு புதுநூலாயினும் தொன்னூலிற்கு ஒரு புது வழியாயி னும் காட்டுவது உணராது உயர்ந்த முன்னோர் தந்த நூலை.....

என்பது ஆசிரியரின் நோக்கத்தை - புதுவழியில் இலக்கணம் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் புலப்படுத்துகிறது. அதாவது தொன்னூல்விளக்கம் மரபு வழியில் அமைக்கப்படவில்லை; மரபு வழியில் அமைத்ததாகப் பொதுப் பாயிரமோ சிறப்புப் பாயிரமோ கருதவில்லை. ஆயினும், மரபுவழிச் சூத்திரங்களையே கொண்டு புதிய பாணியில் - புதுவழியில் அமைக்கப் பட்டது என்று கொள்வது பொருத்தம். எனவே, இதுவரை தொன்னூல் விளக்கத்தை ஆராய்ந்தவர்கள் நூலின் தன்மையை முடிவு செய்து விட்டார்கள். அதனுடைய அமைப்பு உறவை (Structural relation) - அது அமைக்கப்பட்ட விதத்தைப் பார்க்கத் தவறிவிட்டார்கள்.

இரண்டாவது இயலில் (பக்.35-36) தோற்றம் (பிறப்பியல்), வகுப்பு (எழுத்தியல்), விகாரம் (புணரியல்) என்று மூன்றாக வகுத்துக் கூறியதன் நோக்கமும் விளக்கப்பட்டதோடு அது வருணனை மொழியியலின் முன்னோடியாக அமைந்திருக்கிறது என்றும் குறிப் பிடப்பட்டது. இந்தக் கருத்து வேறுபல இயல்களிலும் அதனதன் பொருளை ஒட்டி விளக்கும்போது வற்புறுத்தப்பட்டது. ஆயினும், அவைகளை ஒருசேர இங்கு எடுத்துக்காட்டி, வீரமாமுனிவர் எழுத்திலக்கண ஆராய்ச்சியில் வருணனை மொழியியல் முறை துவங்கப் போவதற்குக் கட்டியம் கூறியதாக அமைந்ததை விளக்குவோம்.

எழுத்தியலில் சுட்டுப்பெயரையும் வினாப் பெயரையும் எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரை விளக்கியிருக்கத் (இலக்கணத் தொகை:எழுத்து 44-47, சுவாமிநாதம் 14.3 பார்க்க) தொன்னூல்விளக்கம் சொல்லதிகாரத்தில் பெயர் என்ற இரண்டாம் ஓத்தில் நான்காவது இயலில் 'சுட்டு-வினா' என்று தனியே அமைத்து விளக்குகிறது.[3]

---

3 ச.வே. சுப்பிரமணியன் ஏனைய இலக்கண நூல்களின் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்டிருப்பது தொன்னூல் விளக்கச் சொல்லதிகாரத்தில் கூறப் பட்டிருப்பதாக நான்கு செய்திகளை ஒரு கட்டுரையிலும் (1974:212:213) தன்னுடைய பதிப்பில் (1978) வேறு சில செய்திகளையும் கூறியுள்ளார். 2.4, 2.5 ஆகியவற்றில் சூத்திரங்கள் அதிகார மாற்றம் செய்யப்பட்டிருப்பதைக்

இதன் சிறப்பு, எழுத்ததிகாரத்தில் சொல்லியல் செய்திகளைப் பேசக்கூடாது என்பதுதான். அதனாலேயே தொல்காப்பியர் மொழி மரபிலும் நன்னூல் பதவியலிலும் (அதையொட்டி ஏனைய இலக்கண நூல்களும்) கூறியதைத் (இலக்கணத் தொகை : எழுத்து பக். 102-104; இலக்கணத்தொகை: சொல் 21-22 (தொன்னூல் விளக்கத்துக்கு) சுவாமிநாதம் 23ஆம் சூத்.) தொன்னூல்விளக்கம் சொல்லதிகார முதல் ஓத்தான சொற்பொதுவியலில் பேசுகிறது. இதற்கும் எட்டாம் இயலில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இதுவும் வருணனை மொழியில் ஒலியனியல், உருபொலியனியல், சொல்லியல் என்ற வைப்பு முறையை ஒட்டியது. இப்படி இன்று மொழியியல் வளருவதற்கு முன்னாலேயே பழைய மரபுவழி இலக்கணச் சூத்திரங்களைக் கொண்டு இடம் மாற்றி (அதாவது அதிகார மாற்றம் செய்து) அமைத்ததன் மூலம் புதிய சிந்தனையைத் தொடங்கிவைத்தார் வீரமாமுனிவர் எனக் கொள்ளலாம்.

பன்னிரண்டாவது இயலில் சாரியையை வீரமாமுனிவர் சொல்லதிகாரத்தில் கூறியது வருணனை மொழியியலை ஒட்டியதுதான் என்றும், இன்று வருணனை மொழியியல் நோக்கில் எழுதப்பட்ட இலக்கணங்களோடு ஒத்துக்காணப்படுவதையும் சுட்டிக்காட்டியது இதே உண்மையை வலியுறுத்தும்.

---

குறிப்பிட்டு (பக்.30இல்) 2. 22, 2. 24, 2. 25 ஆகியவற்றில் அதிகார மாற்றம் பற்றி ஒன்றும் பேசாமல் விட்டு விட்டார். மேலும் இந்த மாற்றத்தின் சிறப்பு பற்றியோ, எழுத்ததிகார முதற் சூத்திரத்தின் தனிச்சிறப்பு பற்றியோ அவர் விளக்கவில்லை. அவருடைய இலக்கணத் தொகையிலும் தொன்னூல் விளக்கக் கருத்துகளை **இலக்கணத் தொகை : சொல்லில்** தான் கொடுத்துள்ளார். அதனால் **இலக்கணத்தொகை : எழுத்து** என்ற நூலைப் பயன்படுத்துவோர் ஏனைய இலக்கண நூல்கள் விவரித்த பல உண்மைகள் 'தொன்னூல் விளக்கத்தில் கூறப்படவில்லை' என்ற தவறான முடிவுக்கு வருவதற்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. உதாரணமாக இலக்கணத் தொகை: எழுத்து 621க்குப் பிறகு தொ.வி. 98ஆம் சூத்திரப் பிற்பகுதி சேர்க்கப்பட வேண்டும்; 128-க்குப் பிறகு தொ.வி.101:1-உம் 133க்குப் பிறகு தொ.வி. 102-உம் சேர்க்கப்பட வேண்டும். அதாவது இலக்கணத்தொகை வெளிவந்த பிறகும் நாம் தனி இலக்கண நூல்களை நாடிப் போக வேண்டிய நிலை நீடித்துள்ளது. எனவே, எழுத்ததிகாரம் பற்றிய எல்லாக் கருத்துகளும் தொன்னூல் விளக்கம் போன்ற நூல்கள் சொல்லதிகாரத்தில் கூறியனவும் இலக்கணத் தொகை எழுத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதாவது இலக்கணத்தொகை ஆய்வும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

பதினோராவது இயலான புணரியலை அமைக்கும் முறையில் எண்ணுப்பெயர் மாற்று வடிவங்களையும் திசைப்பெயர் மாற்று வடிவங்களையும் தனிச்சொல்லின் மாற்று வடிவங்களாகவும் (நாழி+உரி> நாடுரி. தொல். எழுத்து. 240; தொ.வி.சொல்.98.2.3) இடமாற்றம் - உண்மையில் அதிகார மாற்றம் செய்துள்ளது விளக்கப்பட்டுள்ளது.

இவற்றால் தொன்னூல்விளக்க எழுத்திலக்கணக் கோட்பாடு புதிய வழி ஒன்றைச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளதாகக் கொள்ள வேண்டும். இன்று நாம் மொழியியல் வெளிச்சத்தில் பார்க்கும்போது தொன்னூல்விளக்கம் வருணனை மொழியியலின் முன்னோடி என்பது தெற்றெனப் புலப்பட்டுவிடுகிறது. அதனால் கோட்பாட்டு நிலையில் வீரமாமுனிவர் புரட்சி செய்திருப்பதாகவே கொள்ள வேண்டும்.

# 14. உத்திகள்

## 14.0 முன்னுரை

பண்டைத் தமிழ் அறிஞர்கள் மொழி அமைப்பையும், இலக்கிய வடிவையும் அதன் உள்ளடக்கத்தையும் ஆராய்ந்ததோடு, நூல் எழுதும் முறை, மதிப்பிடும் முறை ஆகியவற்றையும் ஆராய்ந்திருக்கிறார்கள் என்பது தொல்காப்பிய மரபியல் சூத்திரங்களாலும் (1590–1610) நன்னூல் பாயிர சூத்திரங்களாலும் அறியமுடிகிறது. நூலை எழுதும் முறையில் இலக்கண ஆசிரியர்கள் கூறிய உத்திகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

தொல்காப்பியர் கூறிய உத்திகளை நூலை அமைக்கும் முறை (அதிகாரமுறை), வழிநூல் எழுதும் முறை (இறந்தது விலக்கல், எதிரது போற்றல், தொகுத்துக் கூறல்), நூலுக்குள் கருத்தை விவரிக்கும் முறை (மொழிவாம் என்றல்; கூறிற்று என்றல், ஆணைக்கூறல் என்று பலவகைப்படுத்தலாம். ஆயினும், இலக்கணத்தை வருணிக்கும் முறையில் கையாண்டிருக்கும் தொழில் நுட்ப முறையே உத்தி என்று இங்குக் குறிப்பிடப்படுகிறது.

பெரும்பாலான நூல்களில் காணப்படும் பொது உத்திகள் முதலிலும், தொல்காப்பியத்தில் மட்டும் அமைந்துள்ள உத்திகள் கடைசியிலும் இந்த இயலில் விளக்கப்படும்.

## 14.1 பொது உத்திகள்

இலக்கண நூல்களில் பொதுமைப்படுத்துதல், சுருங்கச் சொல்லுதல் ஆகிய இரண்டும் முக்கியப் பண்புகளாகக் கருதப்படு கின்றன இவற்றைப் பல்வேறு வகையில் இலக்கண ஆசிரியர்கள் கடைபிடித்துள்ளார்கள்.

### 14.1.1 விரித்துக் கூறல்

குறிப்பிட்ட ஒரு சிலவற்றிற்குப் பொருந்தும் ஒரு உண்மையை, அவை உள்ளடக்கிய இனம் முழுமைக்கும் பொருந்துவதாகக் கூறுவதே விரித்துக்கூறல் எனப்படும். அது ஒரு வகையில் குற்றமே ஆயினும்,

இதன் மூலம் பொதுமைப்படுத்திச் சுருங்கச் சொல்ல முடிந்தால், அதைக் குற்றமாகக் கருதாமல் குணமாக ஏற்றுக்கொள்ளலாம்.

தமிழில் சொல்லுக்கு முதலில் க, ச, த, ப என்ற நான்கு வல்லின மெய்களே வரும். எனவே, அவை புணர்ச்சி நிலையில் வருமொழியிலும் வரும் எல்லா இலக்கண ஆசிரியர்களும் அந்த நான்கு வல்லின மெய்களையும் வல்லினம் என்ற பொதுப் பெயரால் குறிப்பிட்டுள்ளார்கள். முன்னரே தமிழ் மொழியின் எழுத்தமைப்பு விளக்கப்பட்டுவிட்டதால், வல்லினம் என்ற பொதுச் சொல் க, ச, த, ப என்ற நான்கு மெய்களையே குறிப்பதாகக் கொள்ள வேண்டும். இங்கு வல்லினம் என்ற பொதுமையே சுருங்கச் சொல்லுதலுக்கு வழி வகுத்துள்ளது. இந்த உத்தி எல்லாத் தமிழ் இலக்கணங்களிலும் காணப்படுகிறது.

**வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி**
**மேற்கூ றியற்கை ஆவயி னான.** (தொல்.148)

**எண்ணிரண் டாமொற்று வன்மைவந் தாற்பின் பியைந்த..**
(வீர. 16.1)

**ஐம்மூன்ற தாமுடல் வன்மையின் வந்திடில்....** (ஷ18.1)

**........ ........... .......... ............ யரழக்கள்**
**நிற்கப்பின் வல்லெழுத்து நேருமேல்....** (நேமி.15.1,2)

**மகரந்தான் வன்மைவரின் வர்க்கத்தொற் றாகும்** (ஷ18,1)

**பொதுப்பெய ருயர்திணைப் பெயர்கள் ஈற்றுமெய்**
**வலிவரின் இயல்பாம்...... ........ ..........** (நன்.1591,2)

**ஏவல்முன் வல்லினம் இயல்பொடு விகற்பே** (ஷ161.2)

**இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்**
**வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே** (இ.வி.82)

**வலிவரின் முன்னிலை வினையுறழ் தலும்விதி** (மு.வீ.187)

**வுலிவரின் மரப்பெயர் மெலிமிகு மென்ப** (ஷ246)

**வலிவரின் மஃகான் வருக்கம் ஆகும்** (தொ.வி.231)

தேன்எனும் மொழிமெய் சேர்இரு வழியும்
தான்இயல்பாம் மெலிவரின் தன்ஈற்று அழிவும்
வலிவரின் ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் (ஷ 29.43)

.................. ...................... ................... உயிரின்
இடம்வன்மை வரினதுவே......... (சுவாமி. 29.1,2)

என்ற மேற்கோள்களில் எல்லாம் 'வல்லெழுத்து', 'வன்மை', 'வலி' என்பன க, ச, த, ப என்ற நான்கு மெய்களையே குறித்து நிற்கின்றன.

இதுபோலவே புணரியல் சூத்திரங்களில் மெல்லெழுத்து என்று ஞ, ந, ம ஆகிய மெய்களை மட்டுமே குறிப்பதற்காகக் கையாளப்பட்டுள்ளது.

தமிழில் உள்ள பதினெட்டு மெய்யெழுத்துகளில் சொல்லுக்கு இறுதியில் வருவன ய, ர, ல. வ, ழ, ள, ஞ, ண, ந, ம, ன ஆகிய பதினொரு மெய்யெழுத்துகளே. அவற்றிலும் தனிக்குறிலை அடுத்து வருவன (அதாவது தனிக்குறிலை அடுத்து மெய்வரும் ஓரசைச் சொற்கள்) ய, ல, வ, ள, ண, ன, ம ஆகிய ஏழு மெய்களே. ஆயினும், புணரியல் எல்லா இலக்கண ஆசிரியர்களும் பொதுவாகத் தனிக்குறிலை அடுத்துவரும் மெய், உயிரை முதலாக உடைய சொல்லோடு வரும்போது இரட்டிக்கும் என்று கூறியுள்ளார்கள். இங்கு 'மெய்' என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் மொழி அமைப்பை ஒட்டி மேலே குறிப்பிட்ட ஏழு மெய்யை மட்டுமே சுட்டுவதாக் கொள்ள வேண்டும்.

குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும் (தொல். 160.2)

.......... ................குறில் பின்புமெய்கள்
ஏறா வுயிர்பின் வரவிரண் டாகும்.... (வீர. 14.2,3)

குற்றொற் றிரட்டுமுயிர் வந்தால் (நேமி. 15.1)

தனிக்குறின் முன்ஒற் றுயிர்வரின் இரட்டும் (நன். 205)

தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும் (இ.வி. 66)

தனிக்குறில் மெய்உயிர் சார்புளி மிகும்..... (தொ.வி. 36.1)

குற்றொற்று (உ)யிர்கண் டிரட் டல்..... (சுவாமி.29.1)

எனப் பொதுமைப்படுத்தியது ஏழு மெய்க்கு மட்டுமே பொருந்துவதாக உள்ளது. பதினெட்டு மெய்க்கும் பொருந்துவதுபோல விரித்துக் கூறப்பட்டிருந்தாலும், தமிழின் எழுத்தமைப்பு தெரிந்தவர்களுக்கு இதன் உண்மை தெரியும் என்றே இலக்கண ஆசிரியர்கள் இப்படிச் சொல்லியுள்ளார்கள்.

### 14.1.2 மற்றொன்று விரித்தல்

ஒரு கருத்தைக் கூறும்போது தொடர்பான மற்றொன்யையும் சேர்த்துச் சொல்லுவதே மற்றொன்று விரித்தல் ஆகும். இதுவும் ஒரு வகையில் குற்றம் ஆகும். ஆயினும் பொதுமை ஏற்படுத்துவதற்காகப் பயன்பட்டால் இதனையும் குணமாக ஒத்துக் கொள்ளலாம்.

தமிழ் இலக்கண நூல்களில் மற்றொன்று விரித்தல் மெய் மயக்க வருணனையில் காணப்படுகிறது. மெய்மயக்கம், உடனிலை மெய் மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம் என்று இரண்டாகப் பிரித்து விளக்கப்படுகிறது. தொல்காப்பியம் வேற்றுநிலை மயக்கத்தை முதலிலும் உடனிலை மெய்மயக்கத்தை அடுத்து வருணித்துள்ளது. ஆயினும் வேற்றுநிலை மெய்மயக்கத்தை விவரிக்கும்போது ஒரு உடனிலை மெய்மயக்கத்தையும் சேர்த்தே கூறியுள்ளது. அந்த உடனிலை மெய்மயக்கம் பின்னரும் விளக்கப்பட்டுள்ளது. வேற்றுநிலை மயக்க வருணனையில் உடனிலை மெய்மயக்கத்தைச் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன என்று பார்ப்போம்.

வேற்றுமை மயக்கத்தில் தொல்காப்பியர் கருத்துப்படி ர, ழ என்ற மெய்கள் க, ச, த, ப, ஞ, ந, ம, ய, ங ஆகிய மெய்களோடு சேர்ந்து வரும். இரண்டாவது வரும் மெய்களை 'சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகளும், ஙகரமும்' என்று பொதுமைப்படுத்திக் கூறமுடியும்.

யகர மெய் க, ச, த, ப, ங, ஞ, ந, ம ஆகியவற்றோடு இரண்டாவது மெய்யாகச் சேர்ந்து வேற்றுநிலை மெய்மயக்கமாக வரும். இங்குச் சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துகளும் ஙகர மெய்யும் இரண்டாவது மெய்யாக வருகிறது என்று பொதுமைப் படுத்த முடியாது. ஏனெனில் சொல்லுக்கு முதலில் வரும் யகரம் இங்குச் சேர்ந்தால் உடனிலை மெய்மயக்கம் ஆகிவிடும். இந்நிலையில் மற்றொன்று விரித்தலாகத் தொல்காப்பியர் யகர உடனிலை

மெய்மயக்கத்தையும் சேர்த்ததன் மூலம் 'முதலாகெழுத்து' (29) என்று பொதுமைப்படுத்துதலுக்கு முக்கியம் கொடுத்து மற்றொன்று விரித்தல் என்ற குற்றம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்று கருதிவிட்டார்.

ய ர ழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும் (29)

என்று மூன்று மெய் எழுத்துகளின் வேற்றுநிலை மயக்கத்தைச் சேர்த்து வருணனைச் சுருக்கமும் பொதுமையும் தோன்றக் கூறியுள்ளார் தொல்காப்பியர். யகர மெய்யின் உடனிலை மயக்கத்தைப் பின்வரும் வேறு உடனிலை மெய்மயக்கத்தோடு சேர்த்துச் சூத்திரித்துள்ளார். இந்த முறை நன்னூல், இலக்கணவிளக்கம், முத்துவீரியம் ஆகியவற்றிலும் காணப்படுகிறது.

ய ர ழ முன்னர் மொழிமுதல் மெய்வரும் (நன்.116)

ர ழ அல்லன தம்முன் தாம்உடன் நிலையும் (ஷை 118)

........................................... ய ர ழ முன்
மொழிமுதல் மெய்யும்.........................
.................... ......................மயங்கும் (இ.வி.32.4.7)

. . உடனிலை ரழஒழித்து ஈரெட்டு
ஆகும் ..................... (ஷை31.2.3)

ய ர ழ முன்னர் மொழிமுதன் மெய்வரும் (மு.வீ.73)

ர ழ வல் லனஉட னிலையென மொழிப (ஷை78)

### 14.1.3 வெற்றெனத் தொடுத்தல்

புணர்ச்சியில் இயல்பாக இருப்பதைக்கூடத் திரிபு புணர்ச்சி யாகக் கூறியதை 'வெற்றெனத் தொடுத்தல்' என்று கூறலாம். இங்கும் இலக்கண ஆசிரியரின் நோக்கம் பொதுமைப்படுத்திச் சுருங்கச் சொல்லுதலே.

மகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் வல்லெழுத்தின் முதன் மொழியோடு புணரும்போது க, ச, த ஆகிய மூன்று வல்லின மெய்களுக்கு முன்னரே நிலைமொழி மெல்லினம் இன மெல்லெழுத்தாகத் திரியும்

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | குறிது | > | மரங்குறிது |
| மரம் | + | சிறிது | > | மரஞ்சிறிது |
| மரம் | + | தீது | > | மரந்தீது |

பகர முதன்மொழியின் முன்னால் இயல்பாக இருக்கும்

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | + | பெரிது | > | மரம்பெரிது. |

இந்தப் புணர்ச்சி மாற்றத்தை விளக்க வருமொழியின் க, ச, த முன் மகர ஈறு அல்வழியில் இன மெல்லெழுத்தாக மாறும்; பகரத்தின் முன் இயல்பாக இருக்கும், என்று சூத்திரிக்க வேண்டும். ஆனால், புணர்ச்சி பெற்ற வடிவங்களைப் பார்த்தால் நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் இன எழுத்தாக இருப்பது புலனாகும். எனவே தொல்காப்பியர் பகர முதன் மொழியைச் சேர்த்து.

அல்வழி யெல்லாம் மெல்லெழுத் தாகும் (314)

என்று பொதுமைப்படுத்தி விட்டார். இங்கு வருமொழி பகர மெய்க்கு ஏற்ப நிலைமொழி மெல்லினம் திரியும் என்றது வெற்றெனத் தொடுத்தல், 'மெல்லெழுத்து ஆகும்' என்று பொதுமைப்படுத்த முடிந்ததால் இங்கு அதைப்பற்றித் தொல்காப்பியர் கவலைப்பட வில்லை.

நச்சினார்க்கினியர், 'மரம் பெரிது என்புழித் திரிபின்றென்பது ஆணை கூறல் என்னும் உத்தி' என்று விளக்கியுள்ளார், இதைவிட நாம் மேலே கூறிய சமாதானம் இலக்கண ஆசிரியரின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

இதே முறையில் பிற இலக்கண ஆசிரியர்களும் மகரஈற்றின் புணர்ச்சி மாற்றத்தை வருணித்துள்ளார்கள். (இலக்கணத் தொகை: எழுத்து, பக். 250-261 பார்க்க)

எண்ணுப் பெயர்களின் புணர்ச்சியை விளக்கும்போதும் வெற்றெனத் தொடுத்தல் காணப்படுகிறது. இங்குத் தொல்காப்பியர் மூன்று, ஐந்து ஆகிய இரண்டு எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி மாற்றத்தைச் சேர்த்துக் கூறுவதால் பொதுமைப்படுத்திச் சுருங்கச் சொல்லுதலுக்கு வெற்றெனத் தொடுத்தல் உதவியாக இருக்கிறது.

மூன்று என்ற எண்ணுப் பெயர் இறுதி மெய் கெடுவதையும் (தொல். 437) நெடுமுதல் குறுகுவதையும் (தொல்.440) விளக்கிவிட்டு,

எஞ்சிய னகர மெய்யையும், ஐந்து என்பதன் இறுதி மெய் கெடுவதையும் முன்னரே விளக்கி விட்டு, எஞ்சிய நகர மெய்யையும் அளவுப் பெயர் வருமொழியாக அமையும்போது ஏற்படும் மாற்றத் தையும் விளக்க முற்படுகிறார்.

மூன்று என்பதிலுள்ள னகர மெய் வருமொழி மெல்லினத்துக்கு ஏற்பத் திரியும்.

| | | | |
|---|---|---|---|
| மூன்று | + | நாழி | > முந்நாழி |
| மூன்று | + | மண்டை | > மும்மண்டை |

அப்படியே ஐந்து என்ற எண்ணுப் பெயரின் நகரமெய் மகர முதன் மொழியோடு சேரும்போது இன மெல்லெழுத்தாகத் திரிகிறது; நகர முதன் மொழியோடு சேரும்போது இயல்பாக இருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| ஐந்து | + | மண்டை | > ஐம்மண்டை |
| ஐந்து | + | நாழி | > ஐந்நாழி |

இரண்டு எண்ணுப் பெயர்களின் புணர்ச்சியைச் சேர்த்துக் கூறிப் பொதுமைப்படுத்த நாழி என்ற சொல்லின் முன்னரும் நிலைமொழி வருமொழிக்கேற்பவும் மாறுகிறது என்று கூறிவிட்டார்.

**ஐந்தும் மூன்றும் ந, மவரு காலை**
**வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே** (451)

என்பதே அந்தச் சூத்திரம். இங்கு '**வந்தது ஒக்கும்**' என்று பொதுமையும் சுருக்கமும் வேண்டியே வெற்றெனத் தொடுத்தார் என்று கொள்ளலாம்.

நன்னூலும், இலக்கணவிளக்கமும் முத்துவீரியமும் இந்த முறையைப் பின்பற்றியுள்ளன. நன்னூலார் ஐந்து என்ற எண்ணுப் பெயர் அடையும் மாற்றங்களைத் தொகுத்துக் கூறும்போது வருமொழிக்கு ஏற்ப மாறும் என்ற விதி படைத்துள்ளார். அது நகர முதன் மொழியை உள்ளடக்கியதாகவே உரையாசிரியர்கள் உதாரணம் தந்துள்ளார்கள்,

| | | | |
|---|---|---|---|
| ஐந்து | + | மஞ்சாடி | > ஐம்மஞ்சாடி |
| ஐந்து | + | மூன்று | > ஐம்மூன்று |
| ஐந்து | + | நூறு | > ஐந்நூறு |

இந்த மாற்றங்களை,

**ஐந்தனொற் றடைவதும் இனமுங் கேடும்.** (நன்.192)

என்று கூறும் போது 'ஒற்று அடைவது' என்றால், ஒற்றாகி வருவது என்றே விளக்கப்பட்டுள்ளது. எனவே, நகர முதன் மொழியைப் பொறுத்த வரையில் வெற்றெனத் தொடுத்தலாக இருந்தாலும், அது 'ஒற்று அடைவது' என்ற பொதுமையும் எளிமையும் சூத்திரத்தில் ஏற்படக் காரணமாக அமைந்துவிட்டது.

இந்த நன்னூல் சூத்திரத்தை அப்படியே எடுத்துக் கொண்டதன் மூலம் வைத்தியநாத தேசிகரும் (இ.வி.110) இந்த முறையைப் பின்பற்றியுள்ளார் என்று கருதலாம்.

முத்துவீரியம் பெரும்பாலும் தொல்காப்பியத்தைப் பின்பற்றி யுள்ளது.

**ஐந்தும் மூன்றும் நமவரு காலை**
**ஒற்றிய னிலைகெட வந்தது மாகும்.** (432)

இங்குத் தொல்காப்பியச் செல்வாக்கு அப்பட்டமாகத் தெரிகிறது.

### 14.1.4 தன்கால மொழி உணர்வு

மொழி அமைப்பை விளக்கும்போது வரலாற்று உணர்வுக்கு இடம் கொடுக்காமல் தன்னுடைய கால மக்களின் மொழி உணர்வுக்கு ஏற்ப இலக்கணம் அமைத்தல் வேண்டும். இந்த உண்மை அடிநிலைக் கிளவி தேர்ந்தெடுக்கும்போது எளிதாக வெளிப்படுகிறது. பத்தாவது இயலில் தொல்காப்பியம் தொள்ளாயிரம், தொண்ணூறு போன்ற எண்ணுப் பெயர் வடிவங்களை விளக்குவதற்குத் தொண்டு என்ற வடிவத்தைக் கையாண்டிருந்தும் அதை நிலைமொழியின் அடிநிலைக் கிளவியாகக் கொள்ளாது தன் காலத்தில் பெரும்பான்மையாக வழங்கிய ஒன்பது என்பதையே அடிநிலைக் கிளவியாகக் கொண்டார் (பக்.223) என்று விளக்கப்பட்டது. இது இலக்கண வருணனையில் கடைபிடிக்க வேண்டிய ஒரு உத்தி. இதன் மூலம் இலக்கணத்தைத் தன்கால மொழி அமைப்பையும் அக்கால வழக்கையும் ஒட்டி அமைக்கவேண்டும் என்ற உண்மை வற்புறுத்தப்படுவதாகக் கொள்ளலாம்.

இந்த முறையை ஓரளவுக்குப் பிற்கால இலக்கண நூல்களும் பின்பற்றியிருக்கின்றன. ஆனால் அவை முழுமையாகத் தன்கால மொழி உணர்வு உடையன எனக் கூற முடியாது.

நன்னூலார் இறந்தது விலக்கலாகத் தொல்காப்பியர் கூறிய பலவற்றை ஒதுக்கிவிட்டு இலக்கணம் கூறியுள்ளார். பல, சில என்பன பலாஅம், சிலாஅம் போன்ற மாற்று வடிவங்கள் பெறுவதை நன்னூலார் குறிப்பிடவில்லை. ஆகார ஈற்றுப் பெயர் அகரம் பெறுவதை நன்னூலார் கூறவில்லை. (விஜயவேணுகோபால், 1968 இதுபற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார்). ஆயினும், சில இடங்களில் தன்னுடைய கால வழக்கில் இல்லாமல் இருந்தும், தொல்காப்பியத்தைப் பின்பற்றி இலக்கணங் கூறியதும் நன்னூலில் காணப்படுகிறது. சான்றாகப் பொருந் என்ற சொல்லுக்குப் புணர்ச்சி விதி கூறியதைக் கூறலாம் (விஜயவேணுகோபால், 1968:282).[1] நேமிநாதம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், தொன்னூல்விளக்கம், சுவாமிநாதம் ஆகிய நூல்களிலும் தன்கால மொழியை மறந்து கண்ணை மூடிக்கொண்டு பழமையைப் பின்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள் பலவற்றைக் காணமுடிகிறது.

இலக்கண விளக்கம் எண்ணுப்பெயரை விளக்கும்போது 'ஏழ்' என்ற வடிவத்தையே ஏற்றுக்கொண்டது.

**ஏழ்என் கிளவி ஆறுஇயல் நிலையும்**
**உகரம் வருதல் ஆவயி னான** (136)

இது தொல்காப்பியத்தை ஒட்டியது. ஏழ் என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டதில் தவறு இல்லை; இலக்கண எளிமைக்காக அப்படிக் கொண்டார் என்று ஒருவர் வாதிட முடியும். அப்படியானால் ஏழு என்ற வடிவத்தையும் ஒரு புணர்ச்சிவிதி மூலம் விளக்கியிருக்க வேண்டும். அப்போதுதான் வைத்தியநாத தேசிகர் வரலாற்று உணர்வுக்கு ஆட்படவில்லை என்று கொள்ளமுடியும்.

இதுபோலப் பிற இலக்கண நூல்களிலும் பல உதாரணங்கள் உள்ளன.

---

1 But it is curious that sutras 299 and 300 of *Tolkappiyam* referring to *porun* are summarised in *Nann:l* 153. It must also have become of antiquarian interest by the time of *Nannu:l*. This shows that *Nannu:l* is inot uniform in rejecting words which have ceased to be current.
Vijayavenugopal, 1968 : 282.

இதுவரைப் பார்த்த பல உத்திகள் தொல்காப்பியத்தில் இயல்பாக அமைந்து, பிற இலக்கண நூல்களில் தழுவப்பட்டதாகவே கருதப்படவேண்டும். ஏனெனில், உத்திகளின் முழுச்சிறப்புப் பிற்கால நூல்களில் விளங்கவில்லை. அவை தொகுத்துக் கூறல் என்ற உத்தியை மட்டுமே பெரும்பாலும் கடைபிடித்திருக்கின்றன. அதிலும் முத்துவீரியம் அடங்காது. ஏனெனில் அது சூத்திரங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதோடு ஒருபொருட் பன்மொழி போல வழங்கும் பல பெயர்களைக் கூடத் தொகுத்துச் சூத்திரித்துள்ளது.

இனித் தொல்காப்பியர் சிறப்பாகக் கையாண்ட சில உத்திகளைப் பார்ப்போம்.

## 14.2 தொல்காப்பியச் சிறப்பு உத்திகள்

மொழி வருணனையில் பொதுமையை ஏற்படுத்துவதற்கு இலக்கண ஆசிரியர்கள் சில உத்திகளைக் கையாண்டது இதுவரைக் குறிப்பிடப்பட்டது. தொல்காப்பியர் மொழி அமைப்பில் பொதுமையே இல்லாதபோது பொதுமை ஏற்படும்படி வருணித்துள்ள முறைகள் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவை.

### 14.2.1 பொதுமையை வலியுறுத்தல்

தொல்காப்பியர், மொழி அமைப்பில் காணப்படும் பொதுமையை வலியுறுத்துவதற்கு இரண்டு முறைகளைக் கையாண்டுள்ளார். ஒன்று வெற்றெனத் தொடுத்தல் அல்லது வேண்டாக் கூறல், இரண்டு: சாரியை படைத்து விளக்குதல்.

தமிழில் மரப்பெயர்கள் புணர்ச்சியில் மெல்லெழுத்துப் பெறுவது மொழி அமைப்பில் காணப்படும் ஒரு பொதுப்பண்பு (சண்முகம், 1967 : 136). ஆனால் மரப்பெயரே மெல்லெழுத்தில் சிறப்பாக மகரத்தில் முடிந்தால் இன்னொரு மெல்லெழுத்துப் பெறத் தேவையில்லை. அந்த நிலையிலும் தொல்காப்பியர் மரப்பெயர்கள் புணர்ச்சியில் மெல்லெழுத்துப் பெறுகிற பொதுமையை வலியுறுத்துவதற்காக மகர ஈற்று மரப்பெயரும் மெல்லெழுத்துப் பெறும் என்று விதி அமைத்து விட்டார்.

மரப் பெயரின் புணர்ச்சியில் பொதுமையைக் குறிப்பிடத் தொல்காப்பியர் மாட்டேறு என்ற உத்தியைக் கையாண்டுள்ளார்.

முதலில் உதி என்ற மரப்பெயர் புணர்ச்சியில் மெல்லெழுத்துப் பெறும் என்று கூறிப் பிற ஈற்று மரப்பெயர்களின் புணர்ச்சி மாற்றங்களை வரிசையாக மாட்டெறிந்து விளக்கியுள்ளார்.

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே** (243)

**ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே** (262)

**சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே** (278)

**விசை மரக் கிளவியும்................**
**.......... ............ சேமர இயல** (282)

இதே முறையில் இல்லம் என்ற மகர ஈற்றுப்பெயரையும் மெல்லெழுத் துப் பெறும் என்று மாட்டெறிந்துள்ளார்.

**இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே.** (313)

இங்கு இந்தச் சூத்திரத் வெற்றெனத் தொடுத்தலாக அமைந்தாலும் மரப்பெயர்கள் புணர்ச்சியில் மெல்லெழுத்துப் பெறும் என்று மொழி அமைப்புப் பொதுமை வற்புறுத்தப்பட்டுவிட்டது.

உரையாசிரியர்கள் இந்தச் சூத்திரத்தை இந்த முறையில் நோக்காது 'இல்லம்' என்பதிலுள்ள ஈற்று மகர மெய் முன்னரே கெட்டு விட்டதாகக் கொண்டு விளக்கியுள்ளார்கள்.

இளம்பூரணர் அடுத்த சூத்திரத்தில் (314) வரும் ஒருவிதப்புக் கிளவியால் (அதாவது மிகையாக வரும் சொல்) மகரம் கெட்டு இந்தச் சூத்திரத்தால் மெல்லெழுத்துத் தோன்றுகிறது என்று விளக்குகிறார்.

> இதன் கண் மகரக்கோடு முன்னர் "எல்லாம்" (சூத்.314) என்ப தனாற் கொள்க.

என்பது இளம்பூரணர் விளக்கம்.

நச்சினார்க்கினியரோ முதல் சூத்திரத்திலுள்ள மிகைச்சொல் மூலம் மகரம் கெட்டது என்கிறார்.

> மேலச் சூத்திரத்து (312) 'வழக்கத்தான' என்றதனான் மகரக் கேடு கொள்க.

என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். உரையாசிரியர்களின் விளக்கத்தால் நூலாசிரியனின் நோக்கம் வலியுறுத்தப்படவில்லை. மொழி அமைப்பில் காணப்படும் பொதுமையை வலியுறுத்துவதற்காக வெற்றெனத் தொடுத்திருக்கிறார் என்று நாம் கூறுவதால், இலக்கண ஆசிரியனின் நோக்கம் பாராட்டத்தகுந்ததாய் அமைந்துவிடுகிறது.

னகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி மாற்றத்தில் காணப்படும் பொதுமையைப் போற்றுவதற்காகச் சாரியை படைத்துக் கூறிய திறம் பன்னிரண்டாவது இயலில் (பக்.271) விளக்கப்பட்டது. இலக்கண ஆசிரியனின் வேலை 'மொழி அமைப்பை விளக்குவது மட்டுமின்றி, மொழி அமைப்பில் காணப்படும் பொதுமையை வலியுறுத்தி இலக்கணம் எழுதுவதும் ஆகும்' என்ற கருத்து உடையவராகத் தொல்காப்பியர் காணப்படுகிறார்.

## 14.2.2 பொதுமை உண்டாக்கல்

ஒரே எழுத்தமைப்பு (ஒரே வித அசையும் ஈற்றெழுத்துகளும்) உடைய சொற்களின் இலக்கணமும் ஒரே பொருள் குடும்பத்தைச் சேர்ந்த சொற்களின் (திசைப்பெயர், எண்ணுப்பெயர், இயற்பெயர் போன்றவை) இலக்கணமும் வேறுபடும்போது அவைகளுக்கு இடையே கூடியவரை பொதுமை உண்டாக்குகிற முயற்சியையும் தொல்காப்பியத்தில் சந்திக்க முடிகிறது.

எரு, செரு என்ற சொற்கள் புணர்ச்சியில் எருவங்(குழு), செருவக்(களம்) போன்று வேறு விதமான மாற்று வடிவங்கள் பெறுவதையும், சில பொது விதியும் சிறப்பு விதியும் உடையதாக அமைத்த திறமும் (பக்.237), தன், நுன் போன்ற சொற்கள் நான்காம் வேற்றுமை ஏற்கும்போது தோன்றும் இரண்டு விதப் புணர்ச்சி மாற்றத்தைப் பொதுமையும் சிறப்பும் உடையதாக அமைத்த சீர்மையும் பதினோராவது இயலில் (பக்.241) விவரிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டும் ஒரே எழுத்தமைப்பு உடையன.

இதுபோலவே ஒன்று, இரண்டு என்ற எண்ணுப் பெயர்ச் சொற்களையும் ஒரு, இரு என்ற மாற்று வடிவங்களையும் விளக்கும் போது பொதுமையும் சிறப்பும் உடையதாக அமைத்த முறையும் பதினோராவது இயலில் விளக்கப்பட்டுள்ளது. (பக்.239)

### 14.2.3 வருணனை உத்தி

மொழி அமைப்பில் வேறுபாட்டை விளக்குவதற்காக ஒருவிதப் பாகுபாட்டை அமைத்து, அந்தப் பாகுபாட்டை வருணிப்பதற்காக மற்றொரு பாகுபாட்டைச் செய்தலே வருணனை உத்தி என்று குறிப்பிடப்படுகிறது. இரண்டு வகையான பாகுபாட்டில் ஒருவகைப் பாகுபாடு இலக்கண மொழிக்காக - வருணனை எளிமைப்படுத்து வதற்காகச் செய்யப்படுவது.

தொல்காப்பியர் குற்றியலுகரப் பாகுபாட்டை நெடில் எழுத்துக் குற்றியலுகரம், உயிர்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றிய லுகரம் என்று ஆறுவகையாகப் பிரித்தது புணர்ச்சியில் அவை மாறுபடுவதை ஒட்டி (ப. 183) இந்த ஆறுவகைப் பாகுபாட்டை விளக்குவதற்காக, எழுத்துகளின் அடிப்படையில் ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடரெழுத்தொருமொழி என்று மூன்று வகையாகப் பிரித்தார். எனவே, மூன்றாவது வகைப் பாகுபாடு மொழி பாகுபாட்டை ஒட்டிச் செய்யப்பட்டதல்ல; குற்றியலுகர ஆறுவகைப் பாகுபாட்டை விளக்குவதற்காக அமைக்கப்பட்டது (பக். 75-78). ஆகவே எழுத்து எண்ணிக்கையை ஒட்டிய பாகுபாடு வருணனை உத்தியை அடிப்படையாகக் கொண்டது.

இதுபோலவே சொல்லதிகாரத்திலும் ஒரு உதாரணம் காணப்படுகிறது. சொல்லதிகார முதற் சூத்திரத்தில் (484) சொற்களை உயர்திணை, அஃறிணை என்று இரண்டு திணையாகப் பிரிக்கலாம் என்று கூறிவிட்டுப் பெயரியலிலும் வினையியயிலும் உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை (**'ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்'** 645.4 : 686.4) என்று மூன்று வகையாகக் குறிப்பிடுவது வருணனை உத்தியாகக் கருதப்படவேண்டும். சில வகைச் சொற்களை உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டு திணைகளிலும் சேர்ப்பதற்குப் பதிலாக அப்படிப்பட்ட சொற்களை வேறு ஒரு திணையாக வருணித்து, அவை 'இரண்டு திணைக்கு ஒத்த உரிமைய' என்று சுருக்கமாகக் கூறுவதற்குத்தான் விரவுத்திணை அமைத்தார்.

இவற்றால் இலக்கணம் கூறும் எல்லா உண்மைகளும் நேரடியாக மொழி அமைப்பை விளக்குவன அல்ல; சில கருவி மொழியின் இலக்கணம் பேசுவன; அதாவது இலக்கண ஆராய்ச்சிப் போக்கையும் இலக்கண மொழி அமைப்பையும் வெளிப்படுத்துவன என்று ஆகிறது.

இலக்கணம் மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் உதவுவது என்பது ஆரம்ப நிலையைக் குறிப்பது: தமிழ் இலக்கணங்கள் அந்த நிலையைத் தாண்டி மொழியியல் கோட்பாட்டில் பல வகையில் சிறந்து விளங்கி, விஞ்ஞான நோக்கும் ஆழ்ந்த அறிவுப்பார்வையும் உடையனவாக உள்ளன. பொதுவாக மொழி அமைப்பின் நுட்பங்களைப் புரிந்துகொள்ளவும், மொழியைப் பயன்படுத்தும் மனிதனின் மனித மூளையின் திறனை உணர்ந்து கொள்ளவும் மொழியைப் பல்வேறு கோணத்தில் பார்ப்பதற்கு மொழி ஆராய்ச்சி மொழியியல் ஆராய்ச்சியாய் இன்று உலக அளவில் தழைத்து தனி விஞ்ஞானத்துரையாய் மலர்ந்து வீறு நடைபோட்டு வருகிறது. இலக்கண ஆராய்ச்சி பழைய இலக்கண நூல்களோடு முடிந்துபோவதில்லை. அது இன்றும் நாளையும் என்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஒரு அறிவுத்துறை.

# துணையன்கள்

அகத்தியலிங்கம், ச.

1969. 'Tolka:ppiar's treatment of Syntax' ஆராய்ச்சி 1, பக். 238-48.

1972. 'வினையெச்சம் பற்றித் தொல்காப்பியம்' தொல்காப்பிய மொழியியல், பக். 207-321, அண்ணாமலைநகர்.

1974. 'இது செயல் வேண்டும்' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்- 1. பக். 331-56, அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச & சக்திவேல், சு.

1973. *A Bibliography of Dravidian Linguistics,* அண்ணாமலை நகர்.

அகத்தியலிங்கம், ச & சண்முகம், செ. வை.

1970. *The Language of Tamil inscriptions 1250-1350 A.D* அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச. & சுந்தரம், இராம.

1969. 'தொல்காப்பிய முதற்சூத்திரம்' செந்தமிழ் 65. பக்.1-8

அகத்தியலிங்கம், ச. & பாலசுப்பிரமணியம், கா. (பதிப்பர்)

1974. இலக்கணக் கட்டுரைகள் - 1, அண்ணாமலைநகர்.

அகத்தியலிங்கம், ச & முருகையன், க. (பதிப்பர்)

1972. தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைநகர்.

அரங்கன், கி.

1973. மாற்றிலக்கண மொழியியல்-மாற்றிலக்கணமும் அதன் கோட்பாடுகளும், சென்னை.

அனந்தகிருஷ்ணபிள்ளை

1969. *Descriptive grammar of Early Middle Tamil,* (Unpublished Ph.D thesis), Poona.

ஆண்டியப்பன், தே.

1976. காப்பியநெறி: எழுத்தியல், மதுரை.

ஆபிரகாம் அருளப்பன் & சுப்பிரமணியம், வி. ஐ.

1963. சொல்லதிகார உரைக்கோவை, பாளையங்கோட்டை.

இராமசாமி, என்.

1977. 'பிறப்பொலியனியல்' புலமை 3.4, பக்.273-300

இளவரசு, சோம.

1963. இலக்கண வரலாறு, சிதம்பரம்.

இன்னாசி, சூ.

1975. எழுத்தியல் (2ம் பதிப்பு), நாகர்கோயில்.

இஸ்ரேல், எம்.

1975. *The treatment of morphology in Tolka:ppiyam*, Madurai.

கந்தசாமி, சோ. ந.

1973. 'எழுத்துப்பேறும் சாரியையும்' இலக்கணச் சிந்தனைகள் (தமிழ்த்துறை ஆசிரியர்கள்) பக். 18-37, அண்ணாமலை நகர்.

1977. தொல்காப்பியத் தெளிவு, அண்ணாமலைநகர்.

காமாட்சிநாதன், அ.

1974. 'கருமொழியும் கருவி மொழியும்' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் - 1, பக். 177-92. அண்ணாமலைநகர்.

குமாரசுவாமிராஜா, ந.

1970அ. 'Tolka:ppiar's Morphophonemics' *Journal of the Annamalai University-Humanities. 27*, Pp.169-77.

1970ஆ. 'The So called empty units in Linguistic analysis', *Indian Linguistics 31*, Pp. 41-8.

1972. 'The increment akku' நான்காவது கருத்தரங்கு மலர், பக். 342-6, திருவனந்தபுரம்.

1973. 'A: ytam and vowel length, ஆய்வுக்கோவை 5, பக். 525-9, சென்னை.

1980. 'Three consonant clusters in Tamil' பேராசிரியர் சண்முகம்பிள்ளை மணிவிழா மலர், மதுரை.

கைலாசபதி, க.

1976.இலக்கியமும் திறனாய்வும் (2ம் பதிப்பு), சென்னை.

கோதண்டராமன், பொன்.

1969. 'தமிழில் ஐகார ஔகாரங்கள்' பைரன் 2.2, பக்.9-22 மற்றும் இலக்கண உலகில் புதியபார்வை, பக்.34-46, சென்னை.

1972. *Studies in Tamil Linguistics,* Annamalainagar.

கோபாலையர், கி.வே. (பதிப்பர்)

1971. இலக்கண விளக்கம் : எழுத்ததிகாரம், தஞ்சாவூர்.

சதாசிவம், ஆ.

1963. 'தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைகள்' கலைப்பூங்கா 1, பக்.19-28, கொழும்பு.

1966. 'The concept of morphology in medieval Tamil grammars, (சைக்கிளோஸ்டைல் செய்யப்பட்டது) *Seminar on Grammatical theories in Tamil,* Annamalainagar.

சண்முகம், செ.வை.

1962. 'இடைச்செருகல்' செந்தமிழ்ச்செல்வி. 36. 249-52.

1963. 'எழுத்ததிகார ஆராய்ச்சியும் மொழியியலும்' *Journal of Annamalai University.* Vol. 24. Pp. 17-37.

1966. 'Tamil Numerals' *Proceedings of the first International Conference of Tamil Studies.* Kuala Lumpur, Vol. II. Pp. 729-34.

1967. *Naccinarkkiniyar's conception of Phonology,* Annamalainagar.

1969அ. 'இடைக்கால இலக்கணங்கள்: நேமிநாதம்' தமிழ்ப் பொழில் 42.6. பக். 131-48.

1969ஆ. 'A modern evaluation of Vi:raco:liyam', *Journal of the Annamalai University.* 26. pp. 65-78.

1970. 'பழந்தமிழ் ஒலியனியல்' தமிழ் அணங்கு 9.6.14 முதல்

1971ஆ. 'Some problems of Old Tamil phonology' *Indo-Iraniyan Journal* 13. Pp.31-43. -

1971ஆ. 'சங்க இலக்கிய மொழி அமைப்பு' ஆராய்ச்சி 2. 326-34

1972இ. *Dravidian Nouns (a comparative study),* Annamalainagar.

1972அ. 'பழந்தமிழில் ஐகார ஔகாரங்கள்' நான்காவது கருத்தரங்கு மலர், 268-73. திருவனந்தபுரம்.

1972ஆ. 'வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்' தொல்காப்பிய மொழியியல் 267-308, அண்ணாமலைநகர்.

1972இ. 'Dental and alveolar nasals in Dravidian' *Bulletin of School of Oriental and African Studies,* Vol. 35. 74-84.

1973அ. 'தொல்காப்பியரின் சில இலக்கண உத்திகள்' ஆய்வுக் கோவை. 5 பக். 541-7, சென்னை.

1973ஆ. 'இலக்கணம்' சிதம்பரம் ஆர். கனகசபைபிள்ளை மணி விழா மலர், பக். 355-8.

1973அ. 'Diphthongs in Old Tamil' *Indian Linguistics* 34. pp. 155-62

1974அ. 'தொல்காப்பியச் சாரியை' ஆய்வுக்கோவை 6, பக்.758-63. பாண்டிச்சேரி.

1974ஆ. 'எழுத்திலக்கணப் போக்குகள்' திரு பெ. திருஞான சம்பந்தம் பிள்ளை மணி விழா மலர், பக். 193-8. சிதம்பரம்..

1975அ. சுவாமிநாதம் (உரையும் பதிப்பும்), அண்ணாமலைநகர்.

1975ஆ. 'தொல்காப்பியரின் எழுத்து' ஆய்வுக்கோவை 7, பக்.495-500 நாகர்கோயில்.

1976அ. 'அளபெடை' ஆய்வுக்கோவை 8, பக்.597-602 மைசூர்.

1976ஆ. சுவாமிநாதம் மூலமும் விருத்தி உரையும் (பதிப்பு), அண்ணாமலைநகர்.

1977. 'எழுத்தியலின் அலகு' ஆய்வுக்கோவை 9.2 பக். 108-9. மைசூர்.

1978அ. 'தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு' மொழியியல் 2.1. பக். 785-100

1978ஆ. 'வழு அமைதி' ஆய்வுக்கோவை 10.2. பக்.127-32. மதுரை

1978இ. எழுத்துச் சீர்திருத்தம். அண்ணாமலைநகர்.

1979. 'தொல்காப்பிய எழுத்தியல்' ஆய்வுக்கோவை 11.2. பக். 104-8. ஹைதராபாத்.

1980 'வீரசோழியம் : ஒரு மொழியியல் ஆய்வு' மொழியியல் 4.4

1986 சொல்லிலக்கணக்கோட்பாடு-2, அண்ணாமலைநகர்

1992 சொல்லிலக்கணக்கோட்பாடு - 3, சென்னை

சண்முகம்பிள்ளை, மு.

1964. 'Reconstruction of a:nkanam in Early Tamil' *Indian Linguistics 25*. pp. 27-9 also in *Collected papers*. I, pp. 45-9 Madurai.

சாமிநாத ஐயர், உ.வே.

1944. சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் 5-ம் பதிப்பு, சென்னை.

சிங்காரவேலன், சி.

1967. *A Critical study of Appar Te:va:ram (hymns)*- (Unpublished Ph.D thesis), Annamalai University.

சிதம்பரப்பிள்ளை, வ.உ. (பதிப்பர்)

1941. தொல்காப்பியம் - இளம்பூரணம், எழுத்ததிகாரம், தூத்துக்குடி.

சிவஞானமுனிவர்

தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி, ஆறுமுகநாவலர் பதிப்பு, 1952.

இலக்கண விளக்கச் சூறாவளி, ஆறுமுகநாவலர் பதிப்பு, 1952.

சிவலிங்கனார்

1972அ. 'சார்பு எழுத்துகள்' தொல்காப்பிய மொழியியல், பக். 93-106.

1972ஆ. 'தொல்காப்பியக்கால அளபெடை', நான்காவது கருத்தரங்கு மலர், பக். 379-84, திருவனந்தபுரம்.

சுந்தரம், ராம.

1964. *Grammatical study of Pattup pa:ttu* (unpublished thesis). Trivandrum.

சுபபிரமணியம், வி.ஐ.

1962. *Index of purana:nu:ru,* Trivandrum

சுப்பிரமணியன், ச.வே.

1965. *Descriptive grammar of Cilappatika:ram,* Madras.

1967. இலக்கணத்தொகை : எழுத்து, நாகர்கோவில்.

1971. இலக்கணத்தொகை : சொல், நாகர்கோயில்.

1974. 'தொன்னூல் விளக்கம் நூன்மதிப்பீடு' இலக்கண ஆய்வு கட்டுரைகள் - I. பக். 209-18, அண்ணாமலைநகர்.

1978. தொன்னூல் விளக்கம் - திறனாய்வு மூலம், விளக்கம் (பதிப்பு), சென்னை.

சுப்பிரமணியன், சி.

1977. *Phonology (eluttu) pt I Vol. I, of a critical study of Tolka:ppiyam (eluttu & col) and Nannu:l,* Nagercoil.

சுப்பிரமணியசாஸ்திரி, பி.சா.

1930. தமிழ் மொழி இலக்கணம், சென்னை

1934. *History of grammatical theories in Tamil in relation to the grammatical literature in Sanskrit,* Madras.

1937. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் குறிப்புரையுடன், திருச்சிராப்பள்ளி.

1938. தமிழ் மொழி நூல், திருச்சிராப்பள்ளி

தட்சிணாமூர்த்தி, அ.

1973. 'சொல்லிசையளபெடை' ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, 688-93. சென்னை

தண்டபாணிதேசிகர், ச.

1950. திருக்குறள் உரைவளம்; அறத்துப்பால், தருமபுரம்

திண்ணப்பன், சுப.

1972. 'தொல்காப்பியத்தில் இலக்கணக் குறியீட்டுச்சொற்கள்' தொல்காப்பிய மொழியியல், பக். 363-84 அண்ணாமலை நகர்.

1976. 'Alapetai in Tamil' *Dravidian Linguistics* V (eds.) Agesthialingom, S, & Subrahmanyam, P.S. Pp.539-60 Annamalainagar

பாலசுப்பிரமணியன், கா.

1972. 'தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை' தொல் காப்பிய மொழியியல், பக். 51- 62, அண்ணாமலைநகர்.

1974. 'தொல்காப்பியரின் ஆய்தக் கொள்கை' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் -1 பக். 375-88, அண்ணாமலைநகர்

1976. 'Historical development of A:ytam' *Dravidian Linguistics V.* Pp.561 - 82. Annamalainagar.

பொன்னையா, மோசசு.

1968. நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை - எழுத்து, மதுரை

மீனாட்சி, கே.

1971. 'Treatment of cases in Asta:dhya:yi and Tolka:ppiyam', ஆய்வுக்கோவை-3, பக்.255-8, அண்ணாமலைநகர்.

1972அ. *'Treatment of Nouns in Asta:dhya:yi and Tolka:ppiyam'.* (manuscript) - (post - Doctoral discertation), Dept. of Linguistics, Annamalai University.

1972ஆ. 'Treatment of compound in Astadhyayi and Tolka:ppiyam' நான்காவது கருத்தரங்கு மலர், பக்.469-74. திருவனந்தபுரம்.

1972இ. 'Treatment of finite verb in Astadhyayi and Tolka:ppiyam' ஆய்வுக்கோவை-5, பக்.746-51. Madras.

மீனாட்சிசுந்தரன், தெ.பொ.

1937 *The Tamil sounds* (unpublished Thesis), Madras University.

1959. 'The so-called inflectional increments in Tamil' *Indian Linguistics,* R. Turner Felieitation Volume-II Pp.125-30

1964. 'The initial monosyllable in Tamil' *Indian Linguistics'* - 25, Pp. 93-104

1965அ. *A History of Tamil Language,* Poona.

1965ஆ. *Prof. T.P. Meenakshi Sundaram sixily fifth commemoration Volume,* Annamalainagar.

1965இ. *A History of Tamil literature,* Annamalainagar.

1974அ. *Foreign models in Tamil grammar,* Trivandrum.

1965ஆ. 'உரிச்சொல்', **இலக்கண ஆய்வுக் கட்டுடரைகள்-I** பக்.121-38, அண்ணாமலைநகர்.

முருகரத்தினம், தி.

1973. **தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும்,** மதுரை.

முருகையன், க.

1972அ. 'தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை' தொல்காப்பிய **மொழியியல்,** பக்.1-50, அண்ணாமலைநகர்.

1972ஆ. 'Cluster and abutting consonants in Tamil' **நான்காவது கருத்தரங்கு மலர்,** பக். 481-6, திருவனந்தபுரம்.

1973. 'Did Tolka:ppiyar translate Paninisiksa' **ஆய்வுக் கோவை** - 5, பக்.599-606, சென்னை.

1974. 'தமிழ் இலக்கண அறிஞர்கள் விளக்கும் ஒலிபிறப்பு முறை' **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1,** பக்.259-82. அண்ணாமலைநகர்.

விஜயவேணுகோபால், கோ.

1968. *A Modern evaluation of Nannu:l,* Annamalainagar.

1970. 'Tolka:ppiyar's theory of description' in **பரிதிமாற் கலைஞர் நூற்றாண்டு விழா மலர்** (பதிப்பர், த. சுப்பிரமணியம்) பக். 128-37, மதுரை

1971. 'தொல்காப்பியரின் ஒரெழுத்தொருமொழி முதல் பாகு பாடுகள்' **வையை மலர் ஒன்று** பக்.12-29. மதுரை.

வெள்ளைவாரணன், க.

1962. தொல்காப்பியம் - நன்னூல் - எழுத்ததிகாரம், அண்ணாமலைநகர்.

வேங்கடராசுலு ரெட்டியார், வே.

1944. எழுத்ததிகார ஆராய்ச்சி, சென்னை

திருக்குறள், கழகப்பதிப்பு.

தொல்காப்பியம் மூலம், கழகப் பதிப்பு, சென்னை. 1967

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் - தேவநேய பாவாணர் அடிக்குறிப்பும் (கழகப்பதிப்பு) சென்னை,1950

தொல்காப்பியம்-சொல்லதிகாரம், சேனாவரையர் உரை கழகப் பதிப்பு. சென்னை.

தொல்காப்பியம் - பொருளதிகாரம் பின்னான்கியல், பேராசிரியர் உரை கழக பதிப்பு, சென்னை, 1975

நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாயர் உரையும் - உ.வே. சாமிநாதையர் பதிப்பு - சென்னை.

நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும் - உ.வே. சாநாததையர் பதிப்பு, சென்னை, 1946

நன்னூல் விருத்தியுரை, சிவஞானமுனிவர், கழக வெளியீடு, சென்னை.

நேமிநாதம் - நேமிநாதர், கழகப்பதிப்பு, சென்னை, 1945.

முத்துவீரியம் - முத்துவீரிய உபாத்தியாயர் கழக வெளியீடு சென்னை, 1972.

யாப்பருங்கலம் (பழைய விருத்தி உரையுடன்) கழக வெளியீடு 1973.

வீரசோழியம் - பெருந்தேவனார் உரையுடன், கழக வெளியீடு, சென்னை, 1970

Abercrombie, D.

1967. *Elements of General Phonetics*, Edinburgh.

Allen, W.S.

1953. *Phonetics in Ancient India*, London.

Anderson, S.A.

1974. *The Organisation of phonology,* New York.

Bloomfield, L.

1933. *Longuage,* London.

Botha, K.P.

1971. *Methodological aspects of Transformational generative Phonology,* The Hague, Paris.

Caldwell, Robert

1856. *A comparative Grammar of the Dravidian or South Indian family of languages,* London, Rev. ed. 1875

Chatterji, S.K.

1942. *Indo-Aryan and Hindi,* Allahabad.

Gimson, A.C.

1962. *An introduction to the pronunciation of English,* London.

Gleason, H.A.

1961. *An introduction to descriptive Linguistics,* Rev. edition, New York.

Hockett, G.F.

1958. *A course in Modern Linguistics,* New York.

1961. 'Linguistic elements and their relations' *Language, 37,* Pp.29-53.

Krishnamurti, Bh.

1961 *Telugu Verbal Bases : a comparative and descriptive study,* Berkeley

Kuiper, F.B.J.

1958. 'Two problems in Old Tamil phonology' *Indo-Iranian Journal* Vol.2. No.3

Pike, K.L.

1946. *Phonemics*, Ann Arbor.

Prabodhachandran Nair, V.R.

1973. *Malayalam : A Lingustics description*, Trivandrum.

Radhakrishnan, R.

1964. 'Empty morph and ca:riyai' *Journal of the Annamalai University*, 25.A Pp.115-20

Ramaswami Aiyar, L.V.

1937-38. 'Dravidic Sandhi-augments' *QJMS*, Pp.96-110 .

Schane, S.A.

1973. *Generative phonology*, New Jersy.

Sjoberg, A.F.

1966. 'Review of *Telugu verbal bases*' *Language 42*. pp. 838-46

*The Hindu*. 'Out look - State of Historical research in India' dated 29th Oct. 1979.

*Index des mot de la literature tamuole anciene*, Pondicherry 1967.

* * *

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| Indian Epistemology | 125.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| பயிலரங்கக் கவிதைகள் | 18.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-2 | 64.00 |
| சங்க கால மன்னர்களின் காலநிலை தொகுதி-1 | 56.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3 | 110.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2 | 110.00 |
| எட்டையபுரப் பள்ளு | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் தொகுதி-2 | 65.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| தமிழர் கொடிகள் | 30.00 |
| தமிழர் சமூகவியல் | 35.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| தமிழ் கற்பித்தலில் உன்னதம் | 20.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |

**Pub.No. 404** **எழுத்திலக்கணக் கோட்பாடு** **70.00**